சிலம்பொலியார்

அணிந்துரைகள்

(தொகுதி – 4)

அணிந்துரையாளர்

முனைவர் **சிலம்பொலி சு. செல்லப்பன்**

தொகுப்பாசிரியர்

முனைவர் **மணிமேகலை புஷ்பராஜ்**

பழனியப்பா பிரதர்ஸ்

'கோனார் மாளிகை'

25, பீட்டர்ஸ் சாலை, சென்னை – 600 014.

கிளைகள்

திருச்சி – 620 002 சேலம் – 636 001

கோயமுத்தூர் – 641 001 மதுரை – 625 001

ஈரோடு – 638 001.

ISBN : 81-8379-366-5

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	சிலம்பொலியார் அணிந்துரைகள் (தொகுதி – 4)
அணிந்துரையாளர்	முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்
தொகுப்பாசிரியர்	முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்
பொருள்	இலக்கியத் திறனாய்வு
பதிப்பாளர்	பழனியப்பா பிரதர்ஸ் சென்னை – 600 014.
அச்சகம்	ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை – 600 014.
அச்சுப்புள்ளி	10 pt
தாள்	70 ஜி. எஸ். எம். மேப்லித்தோ
நூலின் அளவு	21 x 13.5 செ.மீ. (டெம்மி 1 x 8)
பக்கம்	XXXII + 288 (320 பக்கங்கள்)
முதற்பதிப்பு	ஜூன், 2006
விலை	ரூ. 120–00

© பதிப்புரிமை ஆசிரியர்க்கு

இந்நூற்றாண்டின் இலக்கியமேரு

சிலம்பொலியார்

— பேராசிரியர் க.ப. அறவாணன்

ஐயா சிலம்பொலி செல்லப்பனார், 21ஆம் நூற்றாண்டில் வாழும் முத்த தமிழ்ச் சான்றோருள் ஒருவர் ஆவார். இவர்தம் இயல்புகள், நடை, உடை, பாவனைகள், கனிவாகப் பேசும் குணம், ஆழ்ந்த இலக்கியப் புலமை, மென்மையான சிறந்த ஆட்சித்திறன் முதலாய அனைத்து மேதகைமைகளும் இவரைச் சங்ககாலச் சான்றோரை நமக்கு நினைவுபடுத்தும். அரசர்களைச் சார்ந்தும், அதே சமயத்தில் அரசியலைச் சாராது அறிஞர்களால் தமிழ்நாட்டில் இந்த நூற்றாண்டிலும் வாழ முடியும் என்பதற்கு இவர் ஒரு சான்றாதாரம். இவரை அனைத்து மதத்தாரும் போற்று கின்றனர் அனைத்து இனத்தாரும் போற்றுகின்றனர். அனைத்துக் கட்சியாரும் போற்றுகின்றனர். சீறாப்புராணத் திலும், இவருக்குப் புலமை உண்டு. சிலப்பதிகாரத்திலும் இவருக்குப் புலமை உண்டு. புலவர் குழந்தையின் இராவண காவியத்திலும் இவருக்குப் புலமை உண்டு. வியப்பான அறிவுக் கலவை பெற்ற ஒரே ஒருவராய் நம்மில் இவர் நிமிர்ந்து நிற்கிறார். ஒரே சமயத்தில் ஆத்திகவாதிகளாலும், நாத்திகவாதிகளாலும் மதிக்கப்படும் சான்றோராக இவர் ஒருவரே இருப்பார்; இருக்கிறார்.

நம் காலத்துத் தமிழ்ச் சமுதாயச் சூழலில் 'நல்லோர்க்குக் காலமில்லை' என்ற பழமொழிக்கும் இவரே எடுத்துக்காட்டு. இவர்தம் பண்பு, அறிவு, ஆட்சித் திறமை ஆகியன ஐரோப்பிய மண்ணிலோ, அமெரிக்க மண்ணிலோ, ஜப்பானிய மண்ணிலோ நிகழ்ந்திருந்தால் எங்கோ இவர் எடுத்துச் செல்லப்பெற்றிருப்பார். தமிழ்நாடு என்பதால் அத்தகு நிகழ்வு இங்கே நிகழவில்லை.

இலக்கியத்தில் இவர் தொடாத துறைகள் இல்லை. பொதுவாக, பழைய இலக்கியத்தில் வல்லமை பெற்றவர்கள் இக்காலக் கவிதைப் படைப்புகளில் கவனம் இல்லாது இருப்பர். ஐயா சிலம்பொலியார் இந்நிலைக்கு முற்றும் விதிவிலக்காக இலங்குபவர். இவர் நினைப்பிலும் இவர்தம் நூலகத் தொகுப்பிலும் இடம்பெறாத புதுக்கவிஞரே இல்லை எனலாம். இன்னொரு சிறப்பு இவர் சொற்பொழிவு ஆற்றும்பொழுது நாட்டுப்புறக் கவிதைகள் அப்படியே அடிபிறழாமல் இவர்தம் நாவின்வழி மேடையில் நடமாடும். பழைய இலக்கியங்கள், அனைத்துச் சமய இலக்கியங்கள், புதுக்கவிதைகள், நாட்டுப்புற இலக்கியங்கள் என அனைத்துத் துறைகளிலும் துறைபோன ஒருவராக இவர் ஒருவர்தாம் இருப்பார்; இருக்கிறார்.

நூலையும், மலர்களையும் மிக அழகுறப் பதிப்பதில் வல்லமை வாய்ந்தவர், இவர். தமிழ்நாட்டில் நடந்து முடிந்த உலகத் தமிழ்மாநாட்டு மலர்களை அழகு துலங்கவும், வண்ண ஓவியங்கள் நிரம்பவும் வடித்தமைத்தவர், இவர்தாம். இவர்தம் நூல்களில் பதிப்பழகை நாம் கண்டு கண்டு மகிழலாம். அது ஒரு தனிக்கலை. வெள்ளைத்தாள்களில் கருப்பு மையால் அச்சடித்து விடுவதன்று நூற்கலை. அதிலும் அழகிருக்கிறது. முகப்பழகு, பக்க அழகு, பிழையற்ற மெய்ப்பழகு, அடடை அழகு, அழகிய நூல் கட்டழகு எனப் பல. இவை அனைத்தும் இவர்தம் கைவழியும், கருத்து வழியும் வெற்றி பெற்றுள்ளன என்பதை வெளிவந்த நூல்கள் காட்டும்.

சொற்பொழிவில் இவர் மிக வல்லார் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. சிலப்பதிகாரம் மட்டுமன்றி, வேறு எந்தத் தலைப்பிலும் கைவயம் குறிப்பு எதுவுமின்றி மணிக்கணக்காகக் கேட்போர் வேட்பப் பொழிவாற்றுவதில் இவருக்கு நிகரானவர் இவர் ஒருவரே. இவர்தம் பொழிவில் இலக்கிய மேற்கோள்கள் அப்படியே அட்சரம் பிசகாமல் ஓடோடிவந்து ஒலித்துச் சுவையேற்றும். இவர் உரையைச் செவி மடுப்பவர் ஒரு நூலகம் சென்று வந்த நிறைவை உறுதியாக எய்துவர்.

எழுத்திலும், பேச்சிலும் மட்டுமன்றித் தனித்த உரையாடலிலும் சிந்தை கவர்பவர். இவர்தம் உரையாடல்

நமக்குச் சாக்ரடீஸ் உரையாடலை நினைவுபடுத்தும். 'ங்க...' எனக் கொங்கு தமிழில் அனைவர்க்கும் மதிப்பளித்து, இவர் மென்மையாக உரையாடும்போது வன்நெஞ்சரும் மனம் குழைந்து மௌனம் ஆகிவிடுவர். உரையாடும்போது நிறையச் செய்திகளை வாரிக்கொடுப்பதில் வள்ளல், இவர்.

தமிழ் வளர்ச்சித்துறையில் பலவேறு அதிகார நிலையிலும், இயக்குநர் பொறுப்பிலும் இவர் இருந்த காலை, இவரைச் சந்தித்தோர்க்கு இவர்தம் மென்மையான நிர்வாக அணுகுமுறை உறுதியாய்த் தெரிந்திருக்கும். கைத்தாராளமும் தெரிந்திருக்கும். பையிலிருந்து காசு எடுத்துக் கொடுத்துத் தொண்டர்வழி தேநீரோ, காபியோ வாங்கிவந்து விருந்தோம்பி, பருகாமல் யாரையும் இவர் விட்டதில்லை. இந்த அன்பு உள்ளத்தால் இயக்குநர் நாற்காலியில் இருந்த காலத்தில் இவர்தம் அறை சங்ககால வள்ளலின் அரண்மனையைப்போல் வருவோரும் போவோருமாய்க் கூட்டம் 'ஜே ஜே' என்றிருக்கும். இப்படி நண்பர்களைச் சந்தித்து மகிழ்வூட்டும் இவருக்கு நூல்களைப் படிக்க நேரம் எப்போது கிடைத்தது என்பது வியப்புதான். எளிதாக விடையிறுக்க முடியாத வினா. சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், பெருங்கதை, சீறாப்புராணம், பாவேந்தர், புதுக்கவிதை என்பனவற்றை ஓயாது கற்றுக் கொண்டிருந்த இவரை நோக்கி வந்த அணிந்துரை வேட்பாளர்கள் நூற்றுக்கணக்கில்.

தன்னை நாடிவரும் அன்பர் எழுதிய நூல்களுக்கு அணிந்துரை நல்கும்போது அப்பணியை வெற்றுச் சடங்காக இவர் கருதியதே இல்லை. எதிர்வரும் பொதுத்தேர்வுக்காகப் பாடப்புத்தகத்தைப் பயிலும் பத்தாம் வகுப்பு மாணாக் கனைப்போல உரிய நூலை வரிவிடாமல் ஓதும் பழக்கம் உடையவர். ஓதும்போதே உரிய குறிப்புகளை ஆராய்ச்சி யாளன்போல் தெரிவு செய்து அக்குறிப்புகளைக் கொண்டு நீண்ட ஆழமான அணிந்துரை எழுதுவது இவர்தம் தனித்தன்மை. பொதுவாக இவர்தவிர இன்னொருவர் இதுபோன்று அணிந்துரைக்காக அக்கறை காட்டியோர் இருப்பரா என்பது ஐயமே; இல்லை என்பதே சரியான விடையாக இருக்கும். சிலம்பொலியார் அணிந்துரை வழங்கியிருக்கிறாரா. அங்ஙனமென்றால் அஃது அணிந்துரை

யன்று. அது `ஓர் ஆராய்ச்சி உரையாகத்தான் இருக்கும் என்று அனைவரும் கருதும்படி இவர்தம் அணிந்துரைகள் அமைந்திருக்கும். இருபது இருபத்தியோராம் நூற்றாண்டுத் தமிழ் வரலாற்றில் இவர்தம் அணிந்துரைகள் அணி செய்கின்றன. எனவேதான், இவர் வழங்கிய அணிந்துரைகள் பல தொகுதிகளாய் நம் கைகளில் தவழுகின்றன.

இவர்தம் அணிந்துரை பெரும்பாலும் மூன்று அடிப்படை கொண்டதாக விளங்கும். அணிந்துரையின் முகப்பு, ஒரு பொது முகப்புடன் தொடங்கும். அம்முகப்பில் ஆசிரியரைப் பற்றியும், தாம் அணிந்துரை வழங்கியிருக்கும் நூலைப் பற்றியும் ஒரு பொது அறிமுகம் அடங்கி இருக்கும். அதனைத் தொடர்ந்து நூல் முற்றுமாக வாசிக்கப்பெற்று அந்நூலின் அடிப்படைச் செய்திகள் தலைப்புவாரியாக நிரல்பட இரத்தினச்சுருக்கமாக வழங்கப்பெற்றிருக்கும். சில சமயங்களில் ஒன்று இரண்டு, மூன்று என எண்ணிட்டுக்கூட வழங்கப்பட்டிருக்கும். இப்பகுதி ஒரு பிளச்.டி., ஆய்வேடு போன்று மேற்கோளுடனும், அடிக்குறிப்புடனும் அமைந்திருக்கும். அணிந்துரையின் முடிப்புப் பகுதி நடுவில் சொல்லப்பட்ட செய்திகளைச் சுருக்கமாக ஓரிரு தொடர்களில் முடித்து நூலாசிரியரையும், நூலையும் பாராட்டி மங்கல மொழியுடன் நிறைவு செய்யப் பெற்றிருக்கும்.

நூலை வாசிப்பதற்காக வாங்கிய வாசகர்க்கு வரவேற்புக்கூறி, அவருக்கு உள்ளே உள்ளதைச் சொல்லும் முகமாகவும், நூலை பரிந்துரைக்கும் முகமாகவும் இவர்தம் அணிந்துரைகள் அமைந்திருக்கும். நூலைப்பற்றிய கடுமையான விமர்சனமோ, தன்னை முன்னிருத்தும் ஆணவமோ, நூலாசிரியரைத் தூக்கி அடித்துப் பந்தாடும் கடும் சொல் வீச்சுகளோ இவர்தம் அணிந்துரையில் இரா. நல்ல மகனுக்கு நல்ல தந்தை வாழ்த்து வழங்குதல் போலவும், நெருங்கிய நண்பர் நெருங்கிய நண்பருக்குப் பாராட்டுத் தெரிவித்தல் போலவும் இவர்தம் அணிந்துரைகள் அமைந்திருப்பதே இயல்பு. பச்சைப்பசேலென்ற செடிகளும், கொடிகளும், மணம்வீசும் பூக்களும் நிரம்பிய அழகிய பூங்காவில் தென்றல் வீசும் நேரத்தில் உள் நுழைந்தால் ஏற்படும் இனிமை இவர்தம் அணிந்துரையை

வாசிக்கும்போது ஏற்படும். அணிந்துரையை வாசித்தோர் அனைவரும் பூங்காவில் சென்று அமர விரும்புதலைப் போல நூலின் உள்ளே சென்று பயில விரும்புவது திண்ணம். திருமண வாசலில் குடிலர்க்கு வேலை இருக்க முடியாதல்லவா? மணமக்கள் கோலம்போல் வனப்பு எய்திய மாதவி மங்கையர்தாமே வரவேற்பு வாயிலில் நிற்க வேண்டும். சிலம்பொலியார்தம் அணிந்துரைகள் திருமண வாயிலில் சிரித்த முகத்துடன் நிற்கும் மாதவி மங்கையரை நினைவுபடுத்தும் மாண்புடையன.

இவர்தம் மொழிநடை பிசிறு இல்லாதது; எளிமையானது; எளிய சொற்களால் அழகூட்டப்பட்டது;. நீண்ட தொடரைத் தவிர்ப்பது; தெளிவானது; தைத்திங்களில் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாக ஓடிவரும் கோடைகாலத்துக் காவிரி ஆற்றைப் போன்றது. முடிந்தால் நம் முகத்தையே பார்க்கலாம்; விரும்பினால் எடுத்துப் பருகலாம்.

ஒரு சான்று

கவிஞர் மேத்தா,

> தூங்காது எழுதியுள்ள எழுத்துகள், தூங்கிக் கிடக்கும் தமிழினத்தைத் தட்டி எழுப்பிப் புதியதோர் உலகு காணப் புறப்படச் செய்யும். சொற்கள் கவிஞரை ஆட்சி செய்யவில்லை. கவிஞர் சொற்களை ஆட்சி செய்கிறார் (பக். 182).

என்பன கவிஞர் மேத்தாவின் புதுக்கவிதை எனும் நூலை அலங்கரிக்கும் அணிந்துரைத் தொடர்கள்.

அணிந்துரை வழங்கும்போது நூலை ஊன்றிப் படித்துப் பொருத்தமான மேற்கோளைத் தம் அணிந்துரையில் எடுத்துக்காட்டுவதே சிலம்பொலியார்தம் வழக்கம். அவ் எடுத்துக்காட்டு, அவரையும் புலப்படுத்தும்; நூலையும் புலப்படுத்தும்; நூலாசிரியரையும் புலப்படுத்தும்.

ஒரு சான்று

கவிஞர் நாரா. நாச்சியப்பனின்,

> பாடல்களுக்கு அணிந்துரை நல்கும்போது அருமையான அடிகளை எடுத்துக் காட்டுகிறார்.

கல்லடுக்கிக் கட்டிவைத்த கோயி லுள்ள
கடவுளையும் விடவில்லை கஜினி மன்னன்

என்னும் அடிகள் கஜினியின் பிடிவாதத்தை நன்கு வெளிப்படுத்துகின்றன.

கோயில் கொள்ளையடிக்கப்படுவதைக் கண்டபோதும் மார்க்கண்டேயனைக் காப்பதற்காக எமதர்மனையே உதைத்துத் தோன்றிய சிவ பெருமானின் கையாலாகாத்தனத்தை,

வாட்டமுற்ற பக்தர்எல்லாம் அழுதி ருந்தும்
வரவில்லை சிவபெருமான்

என்னும் அடிகள்வாயிலாய் ஆசிரியர் விளக்கிக் காட்டும் பகுதி சிந்தனையைத் தூண்டி நிற்கிறது (பக். 89).

ஒவ்வோர் அணிந்துரையின் நிறைவுப்பகுதியிலும், நூலாசிரியரை உற்சாகப்படுத்த மங்கலச்சொல் பொழிந்து பாராட்டுவது சிலம்பொலியார்தம் வழக்கம். அப்பகுதி கனகச்சிதமாக அமைந்திருக்கும். நூலாசிரியர் மனத்திலும், நூலை வாசிக்கத் தொடங்கியிருப்பார் மனத்திலும் உற்சாகத்தை ஊட்டுவதாக அமைந்திருக்கும்.

ஒரு சான்று

கவிஞர் வா.சி. தனபாலன் படைத்தளித்த மங்கலங்கிழார் பிள்ளைத்தமிழ் எனும் மரபிலக்கிய நூலுக்குச் சிலம்பொலியார் அணிந்துரை மிக அழகான தாகவும் ஆழமானதாகவும் அமைந்துள்ளது. அணிந்துரையில் பிரபந்த இலக்கணம், எண்ணிக்கை, பிள்ளைத்தமிழ்க் கூறுகள், பிள்ளைத்தமிழ் வித்து, பிள்ளைத்தமிழ் வளர்ச்சி, பருவ விளக்கம் ஆகியன சிலம்பொலியாராலேயே மிக விரிவாக நல்கப் பெற்றுள்ளன. தொடர்ந்து நூலின் அழகை நிரல்படப் பாராட்டிவிட்டு, முத்தாரம் எனும் தலைப்பில் அவர் வழங்கும் முடிப்புரை நம் கவனத்திற்கு உரியது. அது

வருமாறு

தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழாரை முழுதும் உணரும்வண்ணம் ஆசிரியர் இந்நூலில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். எளிமையும், இனிமையும், கற்பனையும், உணர்ச்சியும் ஓசை நயமும், கருத்துச் செறிவும் மிடைந்த தமிழ் மாலையாய் இந்நூல்

அமைந்துள்ளது. இதனை உள்ளத்துச் சூட்டிக் கொள்வார் உயரின்பம் காண்பர் என்பது உறுதி. தமிழ்த் தாய்க்கு முத்தாரம் சூட்டியுள்ள கவிஞர் அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன். அவர்தம் தமிழ்த் தொண்டு சிறக்க வாழ்த்தி மகிழ்கிறேன்.

ஆக, சிலம்பொலியார்தம் அணிந்துரை முறைமை தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்தன்மை வாய்ந்தது. தமிழில் உள்ள இம்முறைமைக்குத் தோற்றுவாய், பாயிரம் எனப் பண்டைத்தமிழ் மரபில் உள்ளது. தொல்காப்பியத் திற்குப் பனம்பாரனார் வழங்கியுள்ள பாயிரமே கிடைத்த வற்றுள் மிகத் தொன்மையானது. நூலையும், நூலாசி ரியரையும் சில சொற்களில் சில அடிகளில் மட்டுமே அறிமுகப்படுத்தும் பழைய மரபு அது. அம் மரபே பிற் காலத்தில் சிறப்புப் பாயிரம் எனவும், தற்சிறப்புப் பாயிரம் எனவும், பதிகம் எனவும் பலவாறாக விரிவடைந்தது. 1850 வாக்கில் அச்சுத்தமிழ் தோன்றிய பிறகு, நூலுக்கு முகப்புரை எழுதும் போக்கு விரிவாக இடம்பெறலாயிற்று. பழைய தமிழ்மரபைத் தொடர்ந்து இம் முகப்புரைகள் இருபதாம் நூற்றாண்டுத் தொடக்ககாலத்தில் செய்யுள் வடிவிலேயே அமைந்திருந்தன. காலப்போக்கில் உரைநடை வடிவம் அறிமுகமாகித் தனி இடம் பெறலாயிற்று. இவ் உரைநடை முகப்புகளைச் சுருக்கமானவை, நடுத்தரமானவை, விரிவானவை என்று நாம் வகைப்படுத்தலாம். அறிஞர் மு.வ. எழுதிய திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் எனும் நூலுக்குத் தமிழ்த்தென்றல் திரு.வி.க. வழங்கிய அணிந்துரை சற்றே விரிவானது. இவ்விரிவினும் விரிவாகச் சிலம்பொலி யாரின் அணிந்துரையை நாம் குறிப்பிடுவது பொருத்த மானது. சிலம்பொலியார் தம் கருத்துகளை இவ் அணிந்துரை களில் முனைப்பாகப் புலப்படுத்துவது இல்லை. நூலாசிரியரையும், நூலையும் முன்னிலைப் படுத்துவதே நோக்கம் என்ற கருத்தில் இவர்தம் அணிந்துரைகள் அமைந்துள்ளன. இத்தகு அமைப்பே நூலாசிரியருக்கும் தேவை. நூலுக்கும் தேவை. இப்பார்வையில் திரு.வி.க.வின் அணிந்துரையைவிடத் தனி இயல்பு வாய்ந்ததாகச் சிலம்பொலியாரின் அணிந்துரையை நாம் குறிப்பிட்டுக் காட்டமுடியும்.

ஐரோப்பிய-அமெரிக்கப் படைப்புலகில் இத்தகு முகப்புரைகள் உள்ளன. புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் பெர்னாட்ஷா தம் படைப்புகளுக்கு வழங்கிய முகப்புரைகள் மிக இலக்கியத்தரம் வாய்ந்தவை. எனவே, அவர்தம் முகப்புரைகளே தனிப்பெரும் தொகுதியாக ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. அகராதிகளையும், கலைக்களஞ்சியங்களையும் உருவாக்கியோர் அவை உருவான நெறிமுறைபற்றி விரிவான முகப்புரைகள் எழுதுவது வழக்கம். சமகால நூலாசிரியர்தம் படைப்புக்குச் சமகால அறிஞர்கள் விரிவான அணிந்துரை வழங்குதல் புதுமையானதே. இப்பார்வையில் சிலம்பொலியாரின் அணிந்துரைகள் தனி இடம் பெறுகின்றன. இவற்றைப் படிப்பதன் மூலம் வாசகன் நூலை அறிந்துகொள்ளுகிறான். நூலாசிரியரை அறிந்துகொள்ளுகிறான். அனைத்தினும் மேலாகச் சிலம்பொலியார்தம் மெய்த்தகைமையை அறிந்துகொள்ளுகிறான். அறிந்துகொள்ளுவான்.

தொகுப்பாளரின் உரை

— முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்

இதுவரை தமிழில் பல்வேறு துறைகளிலும் வெளிவந்துள்ள ஏறத்தாழ அறுநூற்றுக்கு மேற்பட்ட நூல்களுக்கு என் தந்தையார் திரு. சிலம்பொலி சு. செல்லப்பனார் ஆராய்ச்சி முன்னுரைகள், மதிப்புரைகள், அணிந்துரைகள் அளித்துள்ளார் என்கின்ற செய்தி தமிழ்கூறும் நல்லுலகில் உள்ள பலரைப் போன்றே எனக்கும் மலைப்பையும் வியப்பையும் ஏற்படுத்திய ஒன்றாகும்.

என் தந்தையாரைக் காணவரும் தமிழறிஞர்களிடம் உரையாடுகின்ற வாய்ப்பு எனக்கு அடிக்கடி கிடைத்தது; கிடைத்தும் வருகிறது. சென்னையில் நடைபெறும் இலக்கிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அவருடன் செல்லும்போது அவருக்கு நெருங்கிய நண்பர்களாயுள்ள தமிழ்ச்சான்றோர் பலரையும் சந்தித்துப் பேசுகின்ற வாய்ப்புக் கிட்டியது; கிட்டிக்கொண்டுமிருக்கிறது. அவர்களுடன் உரையாடும் வேளைகளில், என் தந்தையார் அளித்துள்ள அணிந்துரைகள்பற்றிப் பேச்சு எழுவதுண்டு; அணிந்துரைகள் மிகவும் சிறப்பாய் உள்ளன என்றும், அவற்றையெல்லாம் யாராவது தொகுத்து வெளியிட்டால் தமிழிலக்கிய உலகிற்கும், வரும் தமிழ்த் தலைமுறையினர்க்கும் பயனுள்ளதாய் அமையுமென்றும் அவர்கள் சொல்லக் கேட்டபோது, நாமே அவற்றைத் தொகுக்கலாமே என்ற எண்ணமும் ஆவலும் என்னுள் எழுந்தன.

என் எண்ணத்தை என் தந்தையாரிடம் வெளிப் படுத்தியபோது இசைவளித்தார் முதற்கட்டமாய்த் தந்தையார் அணிந்துரைகள் அளித்துள்ள நூல்களைத் தேடி, அணிந்துரைகளின் படியினை எடுக்கும் பணியைத்

தொடங்கினேன். என் தந்தையாரின் நூலகத்திலேயே சில நூல்கள் கிடைத்தன. என் தந்தையாரின் நூலகம்பற்றி இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாய் இருக்குமென்று கருதுகிறேன். தமிழ்நாட்டில் தனிப்பட்டவர்கள் வைத்திருக்கும் நூலகங்களுள் மிகச்சிறப்பானவையாயும் பெரியனவாயும் உள்ள மிகச்சில நூலகங்களுள் என் தந்தையார் தம் வீட்டில் வைத்திருக்கும் நூலகமும் ஒன்றாகும் எனில் அது மிகையன்று. அவர் நூலகத்தில் இலக்கியங்கள், இலக்கணங்கள், அகராதிகள், நிகண்டுகள், கலைக்களஞ்சியங்கள் என வகைவகையான அரிய நூல்கள் பத்தாயிரத்திற்கும்மேல் உள்ளன. தந்தையாரின் நூலகத்தில் மாக்கவி பாரதிக்குப்பின் தமிழில் வெளிவந்த மரபுக் கவிதை நூல்கள் மட்டும் ஈராயிரத்துக்கும் மேல் உள்ளன. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி எழுந்துள்ள புதுக்கவிதை நூல்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டு உள்ளன. இன்னும் கூடுதலாகவே இருந்தன. எல்லா நூல்களையும் சேர்த்து வைக்க வீட்டில் போதிய இடமில்லையாதலின் ஆயிரக் கணக்கான நூல்களை நன்கொடையாய் அளித்துவிட்டார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும், நண்பர்களுக்கும், வெளிநாடுகளிலிருந்து வரும் தமிழார்வலர்களுக்கும் ஏராளமான நூல்களைத் தந்துவிட்டார். அதனால் அவர் அணிந்துரை எழுதிய நூல்கள் பல அவரிடம் இல்லாமல் போயின. எனவே, வெளி நூலகங்களில் தேடி எடுக்க வேண்டியதாயிற்று.

என் கணவர் திரு. புஷ்பராஜ் அவர்கள் சென்னையில் கன்னிமாரா நூலகம், தேவநேயப் பாவாணர் நூலகம், மறைமலையடிகள் நூலகம் போன்ற பெரிய நூலகங்களிலும் இன்னும் பல்வேறு சிறிய நூலகங்களிலும் நூல்களைப் பெற்று, என் தந்தையாரின் அணிந்துரைகளைப் படியெடுத்து வந்தார். சென்னையில் அவர் சென்று தேடாத நூலகமே இல்லை எனலாம். நூலகங்களிலும் இருபது முப்பது ஆண்டுகட்கு முற்பட்டு வெளிவந்த நூல்கள் கிடைக்க வில்லை; கிடைத்தவரை படியெடுத்துக் கொணர்ந்தார்.

ஓரளவுக்கு அணிந்துரைகள் சேகரிக்கப்பட்டதும், அவற்றைப் பதிப்பித்து வெளியிடுவதுபற்றி எண்ணிக் கொண்டிருந்த வேளையில், பழனியப்பா பிரதர்ஸ் திரு. சுப்பு அவர்கள், என் தந்தையாரின் அணிந்துரைகளைச் 'சிலம்பொலியார் அணிந்துரைகள்' என வெளிக் கொணரலாம் எனச் சொன்னபோது அளவிடற்கரிய மகிழ்ச்சி அடைந்தேன்.

என் தந்தையார் சிலம்பொலி செல்லப்பனார் நாடறிந்த நாவலர்; முதல்நிலை இலக்கியப் பொழிஞர்; தமிழ் இலக்கிய மேடைப் பேச்சுக் கலையில் மிகவும் வல்லவர்; கேடபோர் பயனடையும்வண்ணம் வியத்தகு வகையில், கையில் எந்தவொரு குறிப்புமில்லாமல் தமிழை அருவியாய்க் கொடடும் ஆற்றல் பெற்றவர் இவரின் நினைவாற்றலும், ஆழ்ந்த தமிழறிவும், பேச்சுமுறையும் பாராட்டத்தக்கவை. மேடைப் பேச்சின்மூலமும் இடையறா இலக்கியச் சொற்பொழிவுகள் வாயிலாயும் தமிழின் பெருமையினையும் இலக்கிய வளத்தையும் பட்டி தொட்டிமுதல் பன்னாட்டுத் தமிழ் மன்றங்கள்வரை பரப்பித் தமிழன்னைக்குப் பெரும் தொண்டாற்றி வருபவர். "சாவில் தமிழ் படித்துச் சாகவேண்டும் எந்தன், சாம்பலது தமிழ்மணந்து வேகவேண்டும்" எனும் யாழ்ப்பாணத்துக் கவிஞர் சச்சிதானந்தனின் பாடலடிகளை மேடைதோறும் முழங்கி மக்கள் மனத்தில் தமிழ் உணர்வை விதைத்தவர்.

தமிழ் கூறும் நல்லுலகில் இவர் ஆற்றிவரும் தொடர் சொற்பொழிவுகள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. பொதுவாக இராமாயணம், மகாபாரதம் போன்றவையே தொடர் சொற்பொழிவுகளாய்ச் செய்யப்பெறும். ஆனால், என் தந்தையார் மற்றவர்கள் பெரும்பாலும் எடுத்துரைக்காத இலக்கியங்கள் குறித்துத் தொடர்சொற்பொழிவு ஆற்றியுள்ளார். சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சிற்றிலக்கியங்கள், பாரதிதாசன் கவிதைகள், இராவண காவியம் ஆகிய இலக்கியங்களைப்பற்றிப் பல கிழமைகள் தொடர்ந்து

பேசியிருக்கிறார் இசுலாமியக் காப்பியங்களான சீறாப்புராணம், இராஜநாயகம் ஆகியவற்றை மிக விரிவாய்த் தொடர் சொற்பொழிவு செய்துள்ளார். இவர் அவற்றை எடுத்துரைத்த சிறப்பினை இசுலாமியப் பெருமக்கள் வியந்து போற்றியதோடு, 'சீறாச் செல்வர்' எனும் சிறப்புப் பட்டத்தையும் வழங்கினர் இந்த அளவு பல்வேறு இலக்கியங்களைக் குறித்துப் பல கிழமைகள் தொடர்ந்து சொற்பொழிவாற்றியவர்கள் இவரையன்றி வேறு எவரும் இலர் என்றே சொல்லலாம்.

"தமிழகமெங்கும் சுற்றிச் சுழன்று சிலப்பதிகாரத்தின் மாண்பினையும் செந்தமிழின் மேன்மையினையும் திறம்படப் பல மேடைகளில் முழங்கிச் சீரிய செயல் புரிபவர், நண்பர் சிலம்பொலி செல்லப்பன்" என முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும்,

"அன்பிலும் பண்பிலும் சிறந்து விளங்கும் சிலம்பொலி செல்லப்பன் தாம் பெற்றுள்ள பட்டத்திற்கேற்பத் தேசியச் சொத்தான சிலம்பைப் பட்டிதொட்டிதோறும் ஒலித்து வருகிறார்" எனச் சிலம்புச்செல்வர் ம.பொ.சி. அவர்களும்,

"நமக்கினிய அன்பர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் ஆங்கிலத்துடன் அருந்தமிழ் கற்ற அறிஞர்; தமிழ் ஆர்வலர்; தமிழ்த்தொண்டர்; தமிழ் தழீஇய பண்பாளர்" எனத் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் என் தந்தையாரைப் பாராட்டியுள்ளனர்.

பேரறிஞர் அண்ணா, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகிய மூன்று முதல்வர்களும் இவர் தமிழ்ப்பணியைப் போற்றிப் பாராட்டியுள்ளனர்.

தமிழ்ப்பணியே தமது தலையாய பணி எனக் கடமையாற்றி வரும் இவருக்குத் தமிழே பேச்சு, தமிழே மூச்சு, தமிழே உயிர்.

இவர்போல் நூல்களுக்கு அரிய விரிவான ஆராய்ச்சி அணிந்துரைகள் வழங்கியவர் எவருமிலர் என்று சொன்னால் அது மிகையன்று. இத்தகைய அணிந்துரைகளைத் தொகுக்கும் பணியை மேற்கொண்டது வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பேறுகளுள் ஒன்று என்று கருதுகிறேன்.

இந்நூல், சில தொகுதிகளாய் வெளிவருகின்றது. ஒவ்வொரு தொகுதிக்கும் சிறந்த தமிழறிஞர் ஒருவர் அணிந்துரை வழங்கியுள்ளார். அணிந்துரை வழங்கியுள்ள பேராசிரியப் பெருமக்கட்கு என் பணிவான வணக்கத்தை உரித்தாக்குகின்றேன். அணிந்துரைகள் அடங்கியுள்ள நூல்களுக்கு அணிந்துரை எழுதியுள்ள அறிஞர்கள் அவற்றை மிகச்சிறந்த திறனாய்வுரைகளாகவே விரிவாய், வளமாய், இலக்கிய முத்துகளாய் வழங்கியிருக்கின்றனர். இவ் அணிந்துரைகள் அப்பெருமக்களின் அயரா உழைப்பையும், அரிய தமிழ்ப்புலமையையும், திறனாய்வுத் திறனையும் மற்றும் என் தந்தையார்மீது அவர்கள் கொண்டுள்ள அன்பினையும் வெளிப்படுத்துகின்றன. குறுகிய காலத்தில் மிகச்சிறப்பான அணிந்துரைகளை வழங்கியுள்ள இப் பெருமக்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிப்புலகில் பழனியப்பா பிரதர்ஸ் பெருமைக்குரிய மூத்த நிறுவனம்; தரமான நூல்களைமட்டுமே வெளியிடுவதைக் குறிக்கோளாய்க் கொண்டது. இந்நூலை மிக அழகாயும் அருமையாயும் வெளியிட்டிருக்கும் இப்பதிப்பகத்தார்க்கு குறிப்பாய் அமரர் பழனியப்பச் செட்டியார், அவர் இளவல் திரு. மெ. செல்லப்பன், மகன் திரு. ப. செல்லப்பன், மருகர் திரு. இராம. சுப்பு ஆகியோர்க்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலை உருவாக்குவதில் துணைநின்ற ஏசியன் அச்சக மேலாளர் வெற்றியூர் திரு. சுப. திருஞானம், செம்மையாய்

மெய்ப்புத் திருத்தம் செய்து நூற்பதிப்பில் பெருந்துணைநின்ற திரு. பெ. நடராசன் (தேனி திருமாவளவன்) அவர்களுக்கும், கணினி ஒளிஅச்சு அமைத்துத்தந்த திருமதி லோகாம்பிகை ஜெய்கிருஷ்ணன் அவர்களுக்கும் என் நன்றி.

என் முயற்சிகளுக்கு ஊக்கம் தந்து, என்றும் துணைநிற்கும் என் அன்புத் தந்தையார்க்கும், கணவர் திரு. நா. புஷ்பராஜ் அவர்களுக்கும், மகன் பு. கிருபாவுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றி.

அணிந்துரையாளரின்
முன்னுரை

– சிலம்பொலி சு. செல்லப்பன்

அணிந்துரை பண்டு பாயிரம் என வழங்கப்பட்டது. நூலின் தொடக்கத்தில் நூலாசிரியரோ மற்றவரோ அந்நூல்பற்றி எழுதிய பாயிரம் இருக்கவேண்டும். எத்துணைச் சிறப்புடையதாயினும் பாயிரம் இல்லாத நூல் ஒன்றனை நூல் என்றே கருத இயலாது என்கிறது, நன்னூல் இலக்கண நூற்பா[1]. எந்நூல் உரைப்பினும் அந்நூலுக்குப் 'பாயிரம் உரைத்து உரைக்க' என்பது மரபு என்கிறார், உரையாசிரியர் இளம்பூரணர்.

பாயிரம் என்பது நூலைப்பற்றிய சிறுகுறிப்பு. அதற்கு வரலாறு என்றும் பொருள் கூறுவர். ஒரு நூலைப் பயில விரும்புவோர் அதுபற்றிய வரலாற்றினை அறிய அவாவுதல் முறைமை (கடமை)யாதலின் பாயிரம் நூலுக்கு இன்றியமை யாததோர் உறுப்பாகிறது[2].

முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என்னும் பெயர்களாலும் பாயிரம் வழங்கப்பெறும்[3].

நூலுக்கு முகமாய் (முகப்பாய்) இருப்பதால் முகவுரை;

நூலிலுள்ள பல்வகைப் பொருள்களையும் பதித்திருப்பதால் பதிகம்;

நூலுக்கு அழகு சேர்ப்பதால் அணிந்துரை;

நூலின் தொடக்கமாய் இருப்பதால் நூன்முகம்;

நூலுக்குப் புறத்தேயிருந்தும் செய்திகளைச் சொல்வதால் புறவுரை;

நூலில் சொல்லப்படாத பொருளைத் தந்துரைப்பதால் தந்துரை;

---

1. நன்னூல், 54
2. கோ. வில்வபதி, நன்னூல் உரை
3. நன்னூல், 1

நூலின் பெருமையைப் புனைந்து கூறுதலால் புனைந்துரை

என்னும் பொருளில் பாயிரத்திற்கு வேறு பெயர்கள் வழங்கப்படலாயின. நூற்பொருள், நூலாசிரியர் பெயர் முதலாயவற்றை முன்னின்று காட்டுவதால் பாயிரம் அப்பெயர் பெற்றது.

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் வழங்கியுள்ள பாயிரந்தான் இன்று கிடைப்பவற்றுள் மிகவும் தொன்மை வாய்ந்தது. அவர் பாயிரத்தின் பொருள்

"வடவேங்கடம் தென்குமரி இவற்றிற்கிடைப்பட்டது தமிழ் பேசும் மக்கள் வாழும் தமிழகம். இந்நாட்டினகத்தே வழங்கும் பேச்சு வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இருவகை வழக்குகளையும் அடிப்படையாய்க்கொண்டு இந் நூலின்கண் எழுத்திலக்கணமும் செய்யுளிலக்கணமும் பொருளிலக்கணமும் ஆராய்ந்து உரைக்கப்பட்டுள்ளன.

"செந்தமிழ் நாட்டின் இயல்பொடு பொருந்த இந்நூல் செய்யப்பட்டுள்ளது. இந்நாட்டில் பழங்காலந்தொட்டு வழங்கிவரும் முந்தைய நூல்கள் அனைத்தையும் கற்றும் தெளிந்தும் ஆய்ந்தும், அங்ஙனம் ஆய்ந்தறிந்தவற்றை யெல்லாம் தொகுத்தும் இந்நூல் செம்மையாய் எழுதப் பெற்றுள்ளது.

"இது நிலந்தருதிருவிற்பாண்டியன் எனும் வேந்தன் அவையில் அரங்கேற்றப்பட்டது. இவ்வரங்கேற்றம், அறம் உரைக்கும் நாவினையுடையவரும் நான்மறை வல்லுநரு மாகிய அதங்கோட்டாசான் தலைமையில் ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் குழுமியிருந்த அவைமுன் நிகழ்ந்தது.

''தொல்காப்பியர் எனும் தம் இயற்பெயரே நூற்பெயராய் விளங்குமாறு, 'தொல்காப்பியம்' என்னும் இந்நூலை இவர் இயற்றியுள்ளார். தொல்காப்பியர் ஐந்திரம் கற்ற அறிவாற்றலுடையவர்; இவர் பல்துறை சார்ந்த நுண்ணறிவும் மிகுபுகழும் கொண்டு தூய துறவியாய் விளங்கிய பெரியவர்."

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து

வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே!'

தொல்காப்பியத்திற்குத்தான் முதன்முதலில் பாயிரம் எழுதப்பட்டது போலும்! அதனாற்றான் தொல்காப்பியர் பாயிரத்திற்கு இலக்கணம் வகுக்கவில்லை எனக் கருதலாம். பாவலரேறு பாலசுந்தரனார், "பாயிரம் என்பது செய்யுள் வகையோ நூல்வகையோ ஆகாமையின் தொல்காப்பியர் அதுபற்றி விளக்கவில்லை எனக் கருதலாம்" என்கிறார்.[2]

பனம்பாரனார் பாயிரத்தில் தொல்காப்பிய நூல் வழங்கும் எல்லை, முன்னோர் நூலின் வழி, நூல் நுவலும் பொருள், நூல் எழுந்த காலம், நூலைக் கேட்போர், நூலை ஆக்கியோன் பெயர், நூற்பெயர் என்பன அடங்கியுள்ளன. இதனையொடடியே தொல்காப்பியத்திற்குப் பின்னர் எழுந்த இலக்கண நூலாகிய நன்னூலில் அதன் ஆசிரியர் பவணந்தி முனிவர் பாயிரத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளார். பாயிரத்தைப் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இரு பிரிவாய்ப் பிரித்துள்ள அவர், சிறப்புப் பாயிரத்திற்கு வகுத்துள்ள இலக்கணம் தொல்காப்பியப் பாயிரத்தை அடிப்படையாய்க் கொண்டுள்ளது என்பதனை அறிய முடிகிறது.

ஆக்கியோன் பெயரே, வழியே, எல்லை,
நூற்பெயர், யாப்பே, நுதலிய பொருளே,
கேட்போர், பயனோ(டு) ஆயிரண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்(து) இயல்பே.[3]

---

1. பனம்பாரனார், தொல்காப்பியப் பாயிரம்
2. ச. பாலசுந்தரம், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், காண்டிகையுரை
3. நன்னூல், 47

தொல்காப்பியத்திற்குப் பிறகு சங்ககால இலக்கியங்களில் பாயிரமோ, பதிகமோ, இவற்றையொத்த பகுதியோ இல்லை. சங்க இலக்கியங்கள் தனிப்பாடல்களின் தொகுப்பு. ஆதலின், பாயிரம் இடம் பெறவில்லை. ஆயினும், தொகுத்தோர், தொகுப்பித்தோர்பற்றிய விவரங்கள் கிடைத்துள்ளன. அதுவுங்கூட முழுமையாய்க் கிடைக்கவில்லை. பதிற்றுப்பத்தில் மட்டும் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் அமைந்துள்ளது. பாடலைப் பாடியோன், அவன் பெற்ற பரிசில், அப்பரிசிலின் பெருமை ஆகிய செய்திகளும், பாடப்பட்டுள்ள மன்னன் பெருமையும் அவன் ஆட்சியாண்டுகளும் கூறப்பட்டுள்ளன.

தமிழின் முதற்காப்பியமாய சிலப்பதிகாரத்தில்தான் விரிவான பதிகத்தைக் காணமுடிகிறது. அப்பதிகம் சிலப்பதிகாரக் காப்பியம் எழுந்த வரலாற்றையும், நூலின் அமைப்பையும், நூல் எழுதப்பட்டதற்கான நோக்கத்தையும், சிலப்பதிகாரத்தில் அடங்கியுள்ள பொருள்பற்றியும் தெளிவாய்ச் சுட்டுகிறது.

மணிமேகலைக் காப்பியப்பதிகம், காப்பியத்திலுள்ள ஒவ்வொரு காதையின் சுருக்கத்தை ஓரிரு அடிகளில் கூறுகிறது. இளங்கோவடிகள் கேடபச் சாத்தனார் இதனைப் பாடியருளியதாயும் கூறப்பட்டுள்ளது.

சீவகசிந்தாமணிப்பதிகம் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. கடவுள் வாழ்த்தோடு தொடங்கும் பதிகத்தை முதன்முதலில் சீவகசிந்தாமணியில்தான் காணமுடிகிறது. கதைத்தலைவன் வரலாற்றினைப் பதின்மூன்று இலம்பகங்களில் இக்காப்பியம் எடுத்துரைக்கிறது. ஒவ்வொரு கலம்பகத்தின் கதைச்சுருக்கம் ஒவ்வொரு விருத்தப்பாவில் கூறப்பட்டுள்ளது.

கம்பராமாயணத் தற்சிறப்புப்பாயிரம் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நூல் வந்த வழி ஆகியவற்றைக் கூறுவதோடு, நூலின் பெயர், நூற்பயன், நூல் அரங்கேறிய இடம் ஆகிய செய்திகளையும் கூறுகிறது.

இதையடுத்துத் தோன்றிய காப்பியங்களும் இதே போக்கில் பாயிரத்தைக் கொண்டுள்ளன.

ஒரு நூலின் சிறப்புப்பாயிரத்தை அந்நூலாசிரியருக்கு ஆசிரியர், நூலாசிரியருடன் ஒருங்கு கற்ற ஒருசாலை

மாணாக்கர், நூலாசிரியரிடம் பயின்ற மாணவர், அந்நூலுக்கு உரை வகுப்பவர் ஆகிய இந்நால்வருள் ஒருவர் இயற்றுதல் முறைமை.

தன்னா சிரியன்; தன்னொடு கற்றோன்;
தன்மா ணாக்கன்; தகும்உரை காரனென்று
இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே![1]

ஆயின், இக்காலத்தே இந்நால்வர் என்பது மாறி, பெரும்பான்மை நூலாசிரியர் தாம் விரும்பும் தக்கார் ஒருவரிடம் அணிந்துரை பெறுவது நடைமுறையாயுள்ளது. இன்னார் எழுதினால், அவர் பெருமையால் அல்லது செல்வாக்கால், பதவியால் அந்நூலுக்குப் பெருமை கிட்டும் என்ற எண்ணம் கொண்டும் அணிந்துரைகள் பெறப்படு கின்றன.

பாயிரம் பண்டை நாளில் பா வடிவில் அமைந்தது. அதுவும் ஆசிரியப்பாவானும் வெண்பாவானும் இயற்றுதல் மரபாயிருந்தது.

பாயிரத்(து) இலக்கணம் பகருங் காலை,
நூல்நுதல் பொருளைத் தன்னகத் தடக்கி,
ஆசிரிய மானும் வெண்பா வானும்
மருவிய வகையால் நுவறல் வேண்டும்.[2]

அந்நாளில் அனைத்துமே பா வடிவில் எழுதப் பட்டதால் இவ்விதி பொருந்துவதாயிருந்தது. இன்றோ கட்டுரை, சிறுகதை, புதினம், நாடகம் எனப் பல திறத்தன உரைநடை வடிவில் உள்ளன. அதனால் அணிந்துரைகளும் உரைநடையிலேயே உள்ளன.

செய்யுள் நூல்களுக்காவது அணிந்துரை செய்யுளி லேயே இருப்பின் மரபு காக்கப்பட்டதாகும். அணிந்துரை தருவோர் செய்யுளியற்றக்கூடியவராய் இருந்தால்தான் இஃது இயலும்; அத்தகையவரை அணுகி அணிந்துரை பெறுவது பொன்மலர் நாற்றமுடைத்தாம்! எந்நூல் எவ்வகையில் அமைந்திருக்கிறதோ அவ்வகையிலேயே அணிந்துரை அமைய முயற்சி செய்யலாம். அப்படிச் செய்யின் அணிந்துரை வரலாற்றில் அஃது ஒரு புதுமைப் படைப்பாய்த் திகழும். நாடக நூலின் முன்னுரை அல்லது

---

1. நன்னூல், 51
2. நச்சினார்க்கினியர், தொல்காப்பியப் பாயிர உரை.

அணிந்துரை நாடக வடிவில் இருக்கலாமே! இந்நிலையிருந் திருப்பின் நூற்றுக்கணக்கான என் அணிந்துரைகள் எழுந் திருக்கவே வாய்ப்பில்லை! இவ்வணிந்துரை நூற்றொகுதிகள் வெளிவரும் நிலையும் உருவாகியிராது. ஆயினும், அப்படிப் பட்டதொரு முயற்சி தோன்றவேண்டும் என்பது என் அவா.

அணிந்துரை இன்று நுழைவாயில், அழகுரை, மதிப்புரை, ஆய்வுரை, சுவையுரை, சிறப்புரை, பொருளுரை முதலாய பெயர்களாலும் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்போது வெளிவரும் நூல்களுள்ளும் சிலவற்றில் அணிந்துரைகளைப் பா வடிவில் காணமுடிகிறது. அணிந்துரை 'சாற்றுக்கவி'யாயும் உள்ளது. நூலின் பெருமையை அக்கவி சொல்வதால் அது சாற்றுக்கவி என வழங்கப்படுகிறது. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய திருவெங்கைக் கோவை எனும் நூலுக்கு,

கற்றோர்க்(கு) இனியதொரு தமிழமுதாய் அகப்பொருளின்
கருத்தாய்க் காண
முற்றாரும் மணற்கேணி தொட்டென்ன அணிகள்பல
முனைந்து தோன்றி
சொற்றோறும் நயம்பெருகத் திருவெங்கை நாயகன்நற்
துணைய டிக்கே
வற்றாத பேரன்பிற் கோவையாம் ஒருநூலை
வகுத்திட் டானால்

எனப் பெரும்புலவர் கா. நமசிவாய முதலியார் சாற்றுக்கவி அளித்துள்ளார் இக்காலப் பெரும்புலவர்கள் தாம் படைத்துள்ள நூல்களுக்குப் பலரிடம் சாற்றுக்கவிகள் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஓலைச்சுவடிகளைத் தேடிக் கண்டெடுத்துப் பண்டைய நூல்களைப் பதிப்பித்த சி.வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ.வே.சாமிநாதையர் போன்றவர்கள் தாங்கள் பதிப்பித்த நூல்களில் நீண்ட முகவுரைகள் எழுதியுள்ளனர். அவற்றில் அவர்கள் நூல்களைப் பதிப்பிப்பதற்கு ஓலைகளைத் தேடியலைந்த தொல்லைகள், பார்வையிட்ட ஓலைகள் முதலியவற்றை விரிவாய்க் குறிப்பிடுவதோடு, அந்நூல்களிலிருந்து அறியக் கிடக்கும் முக்கியச் செய்திகளையும் குறிப்பிட்டுள்ளனர்.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்துள்ள நூல்களில் மிக நீண்ட முகவுரையைக் காணமுடிகிறது;

முகவுரைபற்றிய அவர் கருத்தும் புலனாகிறது. "அக்காலத்தில் அச்சிடப்பெற்ற தமிழ்ப்புத்தகங்கள் பலவற்றில் முகவுரை முதலியன காணப்படவில்லை. அவை இருந்தால் படிப்பவர்க்கு மிக்க உபயோகமாயிருக்கும் என்பதை உணர்ந்த நான் (சிந்தாமணிக் காப்பியத்தைப் பதிப்பித்த போது) அதற்கு அங்கமாக அவற்றை எழுதிச் சேர்த்துப் பதிப்பிக்கலாமென எண்ணினேன். என்ன என்ன விஷயங்களை முகவுரையில் எழுதவேண்டுமென்பதைப் பற்றி ஆலோசித்தேன். நூலைப் படிப்பதற்குமுன் அதிலுள்ள முக்கியமான செய்திகளையும், நூலின் பெருமையையும், உரையின் தன்மை முதலியவற்றையும் படிப்போர்கள் தெரிந்துகொள்ளுவது நலமென்பது என் கருத்து" என உ.வே.சா. தம் சிந்தாமணிப்பதிப்பின் முகவுரையில் குறிப்பிடுகிறார்.[1]

அவரது இக்கருத்துக்கேற்பவே அவர் பதிப்பித்துள்ள நூல்களின் முகவுரைகள் அமைந்திருப்பதைக் காண்கிறோம். அவரது சிலப்பதிகாரப் பதிப்பின் முகவுரையில் ஒரு பகுதி "இக்காலத்தில் வேறொரு வகையாலும் அறிதற்கியலாத இசையிலக்கண வகை, நாடக இலக்கணம், பரத இலக்கணம், அவிநய வகைகள், நகர் அமைப்பு, கோயிலமைப்பு முதலியன; ஐவகைத் திணைகளின் அமைதிகள், இன்னின்ன சாதியார் இன்னின்ன தொழில்கள் செய்தார் என்பது, பலவகை நீதிகள், சமயக் கோட்பாடுகள், இராசபக்தி, ஆச்சிரம அமைதி, ஆசிரிய பக்தி, மாணாக்கரியல்பு, ஆபரண வகை, தானிய வகை, ஊர்தி வகை, கருவி வகை, மந்திர வகை, பூ வகை, செடி வகை, கொடி வகை, மர வகை ஆகிய இவையும் இவைபோல்வன பிறவும் இந்நூலால் (சிலப்பதிகாரத்தால்) அறியலாகும்" என எழுதியுள்ளார். நூலுள் அடங்கியுள்ள செய்திகளை, பழக்கவழக்கங்களைத் தொகுத்து முகவுரையில் தரவேண்டும் என்பது அவரது எண்ணமாய் இருந்திருக்கிறது.

அவர் எவ்வெந் நூல்களுக்கு முகவுரை எழுதுகிறாரோ, அவற்றுக்கு இலக்கண விளக்கம் அளிக்கவேண்டியிருப்பின் அவற்றையும் தருகிறார் தூது நூல்களுக்கு முகவுரை எழுதும்போது தூது இலக்கணங்களையும், பிற தூதுகளைப் பற்றிய பொதுச் செய்திகளையுங்கூட வெளிப்படுத்தி

---

1. டாக்டர் உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம், பக். 608

யுள்ளார்; சில இடங்களில் நூலாசிரியர் கருத்து இன்னவாயிருக்கும் என்பதையும் புலப்படுத்துகிறார். புகையிலைவிடு தூது பதிப்பின் முகவுரையில், "இந்நூல் 59 கண்ணிகளையுடையது. இத்தூதில் புகையிலையின் பெருமைகள் 53 கண்ணிகளில் சொல்லப்படுகின்றன. தூது விடும் செய்தி ஏனைய ஆறு கண்ணிகளில் சுருக்கமாய் அமைந்துள்ளது. இதனால் இதைப் பாடிய புலவர் புகையிலையைச் சிறப்பிப்பதற்காகவே இதனைப் பாடியிருக்க வேண்டும் என்பது தெரிகிறது" என எழுதுகிறார்.[1]

இவர் காலத்தில் நூல்களைப் பதிப்பித்த பிற ஆசிரியர்கள் இவரைப் போன்று நீண்ட முகவுரைகள் எழுதவில்லையாயினும் சற்றொப்ப இதே போக்கில் எழுதியிருக்கக் காண்கிறோம்; சிலர் மிகுவிரிவான முகவுரை எழுதியுள்ளதையும் காணமுடிகிறது. ரா. இராகவய்யங்கார் தாமியற்றியுள்ள 'பாரிகாதை'யின் முகவுரையில் பாரி, கபிலர் ஆகியோர்பற்றிச் சங்க இலக்கியங்களில் கிடைக்கும் குறிப்புகளை விரிவாய்த் தந்துள்ளதோடு முகவுரையிலேயே காப்பியக்கதை முழுவதையும் சுருக்கமாய்த் தந்துள்ளார்.

மனிதன் ஒருவனுக்கு முகம்போல நூலுக்கு முகவுரை அமைகிறது. முகத்தை நோக்கி ஒருவரது அகநிலைமையைத் தெரிந்துகொள்கிறோம். அவ்வாறே முகவுரையைக்கொண்டு நூலின் உள்ளடக்கத்தைச் செவ்வையாய் அறிந்துகொள் கிறோம்.

மாளிகை, கட்டட வேலைப்பாடமைந்ததாயினும் அதற்குப் பொலிவூட்ட அழகிய ஓவியம் இன்றியமையாதது. ஒரு நகரம் மிகவும் பெரியதாய் அமைந்திருந்தாலும் அதற்கு மேலும் பெருமை சேர்க்கக் கோபுரத்தோடு கூடிய தலைவாயில் இன்றியமையாதது. பெண்கள் இயற்கையிலேயே அழகுடையவர்களாயினும் அவ்வழகுக்கு அழகூட்ட அணிகலன் இன்றியமையாது இருப்பதுபோல் ஒரு நூல் சிறப்புடையதாயினும் அதற்கோர் அணிந்துரை இன்றியமையாததாம்!

---

1. டாக்டர் உ.வே. சாமிநாதையர், புகையிலைவிடு தூது பதிப்பு, பக். 3

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க் கணியும்போல் – நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.[1]

முகவுரைகள் குறித்துப் பிற நாட்டறிஞர்களும் இவற்றையொத்த கருத்துகளையே கூறியிருக்கக் காண்கிறோம்.

"முகவுரைகள் முன்வாயில்களைவிட முக்கியத்துவம் வாய்ந்தவை. அவை நூலின் நோக்கத்தைத் திறந்து காட்டும் சாவிகளாயும், ஆசிரியரின் இலக்கியப் பயணத்தைக் காட்டும் அருங்கருவிகளாயும் அமைந்துள்ளன.[2]

அணிந்துரை என்பது நூலின் நுழைவாயில் என்பதால் அஃது அந்நூலைப் படிப்போரை நூலினுள் நுழையத் தன் கவர்ச்சியால் ஈர்க்கக்கூடியதாய் இருக்கவேண்டும். காண்பதற்கினிய தோரணவாயில் உள்மாளிகையின் நேர்த்தியினை உணர்த்தி நிற்கும்.[3]

ஒரு நாடகத்தின் விறுவிறுப்பூட்டக்கூடிய தொடக்கம் போலவும், ஓர் இசைக்கூத்திற்கு வாய்த்த நேர்த்தியான இசைக்கருவிகள் போலவும் படிப்பவரை மனமகிழச் செய்வதற்கு சிறந்த அணிந்துரை இன்றியமையாத ஒன்றாம்.[4]

இத்தாலியர்கள் முன்னுரையை நூலின் தாளிதக்கூட்டு என வழங்குகிறார்கள்; பக்குவமாய்த் தாளிக்கப்பட்டால் அது படிப்பவர்க்குப் பெரும் பசியை உருவாக்கி, நூல் முழுவதையும் விழுங்கச் செய்துவிடும்.[5]

அணிந்துரைபற்றிய இக்கருத்துகள், என் அணிந்துரைகளின் தன்மையை எண்ணிப் பார்க்கப் படிப்போர்க்குத்

---

1. நன்னூல் 55

2. George Arthur Buttrick (Editor),. Interpreters' Bible, P. XVII

3. A Preface being the entrance of a book should invite by its beauty. An elegant porch announces the splendour of the interior - Disraeli.

4. A good preface is an essential to the reader into good humour, as a good proloque is to a play; or a fine sympony to an opera. Disraeli.

5. The Itallians call the preface 'the sauce of the book' and if well seasoned, it creates an appetite to the reader to devour the book itself. Disraeli

துணைசெய்யும் என்று நம்புகிறேன். பண்டைய இலக்கண நூலார் கூறியுள்ள அணிந்துரை இலக்கணங்களை முற்றிலும் பின்பற்றி அணிந்துரைகளை நான் எழுதியுள்ளேன் எனச் சொல்லுதற்கியலாது; ஆயினும், அணிந்துரையைப் படிப்போர்க்கு அந்நூலை முற்றாய்ப் படிக்க வேண்டும் எனும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அதை எழுதியிருப்பதாகவே கருதுகிறேன்.

தமிழ்த்தாய்க்கு அணி சேர்க்கும் நன்னோக்கில் நூல்கள் எழுதும் அன்பர் பலர் தம் படைப்புகட்கு 'அணிந்துரை' அளிக்குமாறு எனக்கு அன்புக் கட்டளை யிட்டனர். அதனையேற்று நூற்றுக்கணக்கானவர்களின் நூல்களுக்கு அணிந்துரை எழுதும் நல்வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

"நான்கு பக்கங்கள் மட்டுமே அணிந்துரைக்கு ஒதுக்கி யுள்ளோம்; அதற்குள் அடங்குமாறு எழுதித் தரவேண்டும்" என்று கூறியவரும் உண்டு; "எவ்வளவு விரிவாய் வேண்டுமானாலும் எழுதுங்கள்" என்று கூறியவர்களும் உண்டு. ஆதலின், என் அணிந்துரைகள் 4 பக்கங்களிலிருந்து 40 பக்கங்கள் வரையினவாய் அமைந்திருக்கக் காணலாம். நான் எழுதித் தந்ததை முழுமையாய்ச் சேர்க்க முடியாமல் சிலர் அளவைக் குறைத்து, சில பகுதிகளை நீக்கி அச்சிட்டதும் உண்டு. அவ்வாறு விடுபட்டவை இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. எந்த அளவினதாய் இருந்தாலும் அணிந்துரையை அந்நூலுக்கு ஓர் அணியாய் இருக்கும் முறையிலேயே எழுதியுள்ளேன் என நம்புகின்றேன்.

நான் எழுதிய அணிந்துரைகளைத் தொகுத்து நூலாக்க வேண்டுமென என் மகள் திருமதி மணிமேகலை கூறியபோது, அணிந்துரை நூலாக வேண்டுமா எனச் சற்றுத் தயங்கினேனாயினும், பேராசிரியப் பெருமக்கள் பலர், 'உங்கள் அணிந்துரையைப் படித்தால் நூலை முழுமையாய்ப் படித்ததுபோன்ற நிறைவைத் தருகிறது; ஆதலின், அவற்றைத் தொகுத்து வெளியிடுவது பயனுடையதாகவே இருக்கும்' என்றனர்; ஆதலின், இந்நூல் வெளிவருகிறது.

நான் எழுதித்தந்த அணிந்துரைகளின் படிகளை வைத்துக்கொள்ளும் பழக்கம் எனக்கில்லாது போயிற்று. இஃது ஒரு பெருங்குறையே! என் மகளும், மருமகன் திரு. புஷ்பராஜ் அவர்களும் நூலகங்கட்குச் சென்று, நூல்களைத்

தேடியெடுத்து, ஐந்நூறுக்கு மேற்பட்ட அணிந்துரைகளைப் படியெடுத்துச் சேர்த்தனர். இன்னும் தேடுதல் பணி நடந்து கொண்டுள்ளது. கிடைத்தவற்றை முதலில் அச்சிட்டு நூலாக்க முனைந்துள்ளனர்.

அணிந்துரை எழுதுதற்கென நான் ஒரு தனித்த முறையை மேற்கொண்டுள்ளேன். கொடுக்கப்பட்ட நூலை முழுமையாய்ப் படித்து, முதலில் அதன் உட்பொருளை மனத்தில் உள்வாங்கிக்கொள்வேன். இரண்டாம் முறை படித்து, அணிந்துரைக்குத் தேவைப்படும் முக்கியப் பகுதிகளைக் குறித்துக்கொள்வேன். பின்னர், அக்குறிப்பு களை நோக்கி, அவற்றை விரிக்கவோ சுருக்கவோ இடமுண்டா என ஆய்வேன். அடுத்து, எம்முறையில் எழுதுவது எனச் சிந்திப்பேன்; பிற இலக்கியங்களுடன் ஒத்திட்டுப் பார்க்க இடமுளதா என்பதையும் அறிவேன். அதன் பின்னரே எழுதத் தொடங்குவேன்.

ஆசிரியர் கருத்துகள், அவர் படைப்புகளில் வெளிப்படுவது தவிர்க்க இயலாததாகும். படிப்போர் அவற்றோடு உடன்படலாம் அல்லது முரண்படலாம். நான் வழங்கும் அணிந்துரைகளில், நூலில் உள்ள கருத்து முரண்பாடுகளையோ கொள்கை வேறுபாடுகளையோ சுட்டிக்காட்டி முன்நிறுத்துவதில்லை. அவற்றை எண்ணிப் பார்க்கும் பொறுப்பைப் படிப்போர்க்கு விட்டு, நூலின்கண் காணும் சிறப்புக்கூறுகளை மட்டும் சுட்டிச் செல்வேன். என் அணிந்துரைகள் பெரும்பாலும் பாராட்டுரைகளாகவே இருக்கும். 'அணிந்துரை திறனாய்வுரையினின்றும் வேறுபட்டது. திறனாய்வுரை குறைநிறைகளைச் சுட்டிக் காட்டுவது. அணிந்துரை நூற்பொருளின் அழகைக் கூறுவது' என்னும் கருத்துடையேன் நான். இப்பாராட்டு முறையால் ஏற்படும் பெரும் நன்மை ஒன்றுண்டு. படிப்போர், நூலுள் ஆர்வத்துடன் நுழைவதற்கு விருப்பமூட்டும் தூண்டு கோலாய் இஃது அமைவதே அந்நன்மையாம்.

"கன்னல் பொருள்தரும் தமிழே, நீ ஓர் பூக்காடு; நான் அங்கோர் தும்பி" என்பார், பாவேந்தர் பாரதிதாசன். பூக்காட்டில் உள்ள பிறவற்றைப் பொருட்படுத்தாமல், பூக்களில் உள்ள தேன்துளிகளை மட்டுமே வண்டு சுவைத்துண்ணுகிறது; தான் சுவைத்துண்டதோடு மட்டும் அமையாமல் தேனடையாய்ச் சேர்த்தும் வைக்கிறது.

அதுபோன்றே நானும் அன்பர்களின் நூல்கள் என்னும் பூக்காட்டில் நுழைந்து, சிறப்புக் கூறுகளாகிய தேன் துளிகளைச் சுவைத்துண்டு மகிழ்கிறேன்; அவற்றைத் தொகுத்து அணிந்துரை எனும் தேனடையாயும் தருகிறேன். தேனடையின் தேனுண்டு மகிழ்வோர், அத்தேன் எடுக்கப்பட்ட பூக்காடுகளுக்குள் நுழைந்து நிறையவே தேனுண்ண வேண்டும் என்பது என் அவா!

அணிந்துரைகளை எழுதச் சொல்வதன் வாயிலாய், நான் ஏராளமான நூல்களைப் படிப்பதற்கும் இன்பம் துய்ப்பதற்கும் வழியேற்படுத்தித் தருகின்ற நூலாசிரியர்கட்கு என் உளமார்ந்த நன்றி.

அணிந்துரைகளை முயன்று தேடித் தொகுத்துள்ள என் அருமை மகள் மணிமேகலைக்கும், மருகர் புஷ்பராஜுக்கும், இவர்களை இப்பணியில் ஈடுபடத் தூண்டுகோலாயிருந்த இவர்கள் மகனும் என் பெயரனுமாகிய செல்வன் கிருபாவுக்கும் நான் பெரிதும் கடப்பாடுடையேன்.

அணிந்துரை நூற்றொகுதியை வெளியிடத் தமிழகத்தின் புகழ்மிக்க பதிப்பகமாகிய பழனியப்பா பிரதர்ஸ் ஏற்றுக்கொண்டதை நான் எனக்குக் கிடைத்த பெருமையாகவே கருதுகிறேன். இதற்கு ஒரு காரணம் உண்டு. எனக்குச் 'சிலம்பொலி' எனும் பட்டத்தைத் தந்தவர் சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை ஆவார். அவர் எழுதிய அனைத்து நூல்களையும் வெளியிட்டுப் பெருமை சேர்த்துள்ளவர்கள், பழனியப்பா பிரதர்ஸார் ஆவர் என்னைப் பாராட்டிய சொல்லின் செல்வரால் பாராட்டப் பெற்றுள்ள பழனியப்பா பிரதர்ஸ் என் எழுத்துகளை நூலாக்கி வெளியிடுகிறது என்பதைவிடப் பெரிய மகிழ்ச்சி எனக்கு வேறு என்ன இருக்கமுடியும்? இந்நிறுவனத்தைச் சார்ந்த அனைவர்க்கும் என் நெஞ்சுநிறை நன்றி.

இந்நூலைப் படிப்பதன் வாயிலாய் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள அனைத்து நூல்களையும் படித்த நிறைவு, படிப்போர்க்கு ஏற்படும் என்று நம்புகிறேன்.

பதிப்புரை

கொங்குதமிழ் நாடடினிலே
தோன்றியநல் தமிழாறு!
இசையோடு பாய்ந்தோடும்
இன்னிசைத் தேனருவி!
வைகைநதித் தமிழ்ச்சேயை
வளர்க்கின்ற தாய்ச்செவிலி!
மேடை தொறும் நற்றமிழின்
புகழ்பாடும் பூங்காற்று!
சங்கமெனும் கடல்கடைந்து
தமிழமுதம் தரும்நெடியோன்!
புலமையெனும் பூந்தடத்தில்
பூத்தசெந் தாமரை!
பாத்தோறும் தேனெடுத்துக்
கூடுகடடும் கோத்தும்பி!
தமிழோடு தனைக்கரைத்த
செம்புலப் பெயல்நீரான்!
இத்தகைய
சிறப்புகள் அத்தனையும்
சேர்ந்தொன்றாய் உருவானான்
சிலம்பொலியாம் செல்லப்பன்
எனுந்திருப் பெயர்கொண்டான்!

கவிதையொடு கடடுரைகள்
காப்பியம்நல் திரைஇசையும்
தகவுடைய சிறுகதைகள்
தன்வரலா றாய்வுநூல்
என்றுபல துறைநூல்கள்
இவன்தோய்ந்தே ஆராய்ந்து
சொல்லழகும் பொருளழகும்
துள்ளிவரும் கருத்தழகும்
பல்சுவையும் நடமிடவே
அணிந்துரைகள் வனைந்துள்ளான்!
பரந்துள்ள கடல்நீரைப்
பருகிடட குறுமுனிபோல்
விரிந்துள்ள நூற்சிறப்பை
வித்தகமாய்த் தான்தொகுத்துச்
சிறுதுளியாம் பனித்துளியில்
பெரும்பனையும் தோன்றுதல்போல்

அணிந்துரையில் முழுநூலை
அடக்கிஇவன் காட்டிவிடடான்!

இந்நூல்
கல்லூரி மாணவர்க்குக்
கரைகாட்டும் ஒளிவிளக்கு!
கற்பிக்கும் ஆசானுக்(கு)
உற்றதொரு ஊன்றுகோல்!
ஆய்வுநூல் மாணவர்க்கு
அரியதொரு புதையலாகும்!
கல்லாரைக் கற்றாராய்க்
கரைசேர்க்கும் பெருந்தோணி!
கருத்துபல கசிந்தூறும்
கன்மலையின் சுனையாகும்!
அணிந்துரைகள் அணிவகுக்க
அழகியதோர் நூலாக
எம்மொழியாம் தமிழ்மொழியில்
இதுபோல வந்ததில்லை!

எனவே இவன்
தன்திறத்தால் தமிழ்மொழியைத்
தானுயர்த்தி வைத்தானா?
தானுரைத்த தமிழாலே
தானுயர்ந்து நின்றானா?
எம்மாலே பதிலுரைக்க
இயலாது பெரியோரே!
உம்மாலே விடைகூற
ஒல்லுமோ இயம்பிடுக!

நன்னூல்கள் தருவதுவே
நமதுகடன் என்றிருக்கும்
பன்னூலின் தாயகமாம்
பழனியப்பா பிரதர்ஸார்
இந்நூலைத் தமிழன்னைக்(கு)
ஏற்புடைய ஆரமெனச்
சூட்டுதற்கு முன்வந்தோம்
தொடர்ந்தெம்மை ஆதரிப்பீர்!
பாத்திரத்தை எடுத்துவைத்துப்
பருகிடவே முன்வைத்தோம்!
பாத்திறமும் பல்திறமும்
பயன்துய்த்து மகிழ்ந்திடுக!

— **பதிப்பகத்தார்**

அணிந்துரை அடங்கல்

வ.எண்	நூற்பெயர்	பக்கம்
1.	இலக்கியம் ஒரு பூக்காடு *கவிஞர்கோ கோவை இளஞ்சேரன்*	1
2.	தனித்தமிழ் இயக்கம் *புலவர் இரா. இளங்குமரன்*	14
3.	செந்தமிழும் சித்த மருத்துவமும் *புலவர் மு. பசுமலையரசு*	27
4.	நபியே எங்கள் நாயகமே! *கவி கா.மு. ஷெரீப்*	43
5.	ஓ.... ஓ... புரட்சி நெஞ்சங்களே! *பாவலர் தமிழ்ப்பரிதி*	48
6.	இமயம் எங்கள் காலடியில் *கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்*	51
7.	கனவு மலர்கள் *கவிஞர் இளந்தேவன்*	66
8.	நாயகப் பேரொளி *கவிஞர் முகமது ஸைதீன்*	72
9.	நட்சத்திரங்கள் *கவிஞர் இமயபாரதி*	79
10.	நாச்சியப்பன் பாடல்கள் *கவிஞர் நாரா. நாச்சியப்பன்*	85
11.	தாயும் சேயும் *கவிஞர் முரளிதரன்*	93
12.	தேன் ஊற்று *கவிஞர் பாரி*	103
13.	தீ இன்னும் அணையவில்லை *வலசை ப. கண்ணன்*	106
14.	முல்லைமாலை *கவிஞர் காவனூர் வேலன்*	109
15.	வண்ணங்கள் *ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்*	115
16.	முத்தாரம் *முத்துப்பேட்டை ந. தருமலிங்கம்*	132
17.	பாவலர் போற்றும் பாவேந்தர் *புலமைதாசன் (தொகுப்பாசிரியர்)*	135

வ.எண்	நூற்பெயர்	பக்கம்
18.	ஆயிரம் மசலா *திரு. ஹஸன் (பதிப்பாசிரியர்)*	141
19.	காசிம் புலவர் திருப்புகழ் *மணிக்கவி எம். சையது மூஸா (பதிப்பாசிரியர்)*	... 159
20.	எரியத் துடிக்கும் திரிகள் *கவிஞர் கி.சு. கிருஷ்ணமூர்த்தி*	171
21.	கனவுக் குதிரைகள் *கவிஞர் மு. மேத்தா*	177
22.	விடியல் விழுதுகள் *புதுமைதாசன் (தொகுப்பாசிரியர்)*	183
23.	சிறுவர் செந்தேன் *புலவர் வே. பிரபாகரன்*	186
24.	பிஞ்சுத்தமிழ் *கவிஞர் கன்னல்*	191
25.	குறளும் குழந்தையும் *புலவர் காவிரிச்செல்வன்*	195
26.	பிஞ்சு விழிகளில் *கவிஞர் க.வை. பழனிசாமி*	197
27.	மகாகவி பாரதி–சில புதிய உண்மைகள் *சீனி. விசுவநாதன்*	201
28.	உலகப் பெருங்கவிஞர் கம்பர் *இரா.வ. கமலக்கண்ணன்*	215
29.	அஞ்சல்விடு தூது *கவிஞர் புதுமதியன்*	227
30.	மங்கலங்கிழார் பிள்ளைத்தமிழ் *கவிஞர் வா.சி. தனபாலன்*	235
31.	பாளையம் கேசியெம் பிள்ளைத்தமிழ் *கவிஞர் நாஞ்சில் ஆரிது*	251
32.	பழநிமலை முருகன் பிள்ளைத்தமிழ் *புலவர் கபிலவாணன்*	259
33.	கோழிக் குட்டிகளும் பன்றிக் குஞ்சுகளும் *கவிஞர் கொ.மா. கோதண்டம்*	263
34.	குலோத்துங்கனின் காவிய உலகம் *நீல. பத்மனாபன், முருகையன், பிரேமா நந்தகுமார், தணிகைச் செல்வன் (ஆய்வாசிரியர்கள்)*	275

◆

“ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே!”

- நன்னூல்

1

இலக்கியம் ஒரு பூக்காடு

கவிதைத் தும்பியாம் கோவை இளஞ்சேரன் அவர்கள், தமிழ் இலக்கியங்கள் காட்டும் பூக்களிலே படிந்து, தோய்ந்து, திரட்டியுள்ள தீந்தமிழ்த் தேனடையே 'இலக்கியம் ஒரு பூக்காடு' என்னும் இந்நூல், தமிழ்நிலப் பூக்கள் அனைத்தையும் தொகுத்து, அவை இலக்கியங்களில் பெற்றுள்ள இடங்களைச் சுட்டி, அவற்றின் வகை, நிறம், வளரும் நிலம், மலரும் பருவம், செடியியல் இனப் பெயர், பயன் ஆகிய அனைத்தையும் மிகச்சரியாகவும் விரிவாகவும் தந்துள்ளமை தமிழ் நூல் வரலாற்றில் தனித்துக் குறிப்பிடத்தக்க பெருமுயற்சியாகும். திரு. இளஞ்சேரன் அவர்கள் 150 தமிழிலக்கிய நூல்களுள் நுழைந்து, 10 அரிய ஆங்கிலக் கருவி நூல்களுள் புகுந்து துழாவி எடுத்த கருத்துகளோடு தம் புலமையையும் பட்டறிவையும் இணைத்து 'ஆராய்ச்சித் தென்றலாய்' இந்நூலை உலவவிட்டுள்ளார். இந்நூல் ஒரு 'மலர்க் களஞ்சியம்.'

பூ வரலாறு

உலகெங்கும் பூக்கள் நிறைந்துள்ளன. என்றாலும், நாட்டுக்கு நாடு ;வற்றை நோக்கிய முறையிலே உள்ள வேறுபாட்டை ஆசிரியர், "கீழை நாட்டு மக்கள் பூக்களைப் பயன்படுத்திய வகையில் உணர்ச்சிப்போக்கு நிறைவானது; அறிவுப் போக்கு குறைவானது. மேலை நாட்டார் போக்கில் அறிவுப்பாங்கு உலகளவு; உணர்ச்சிப்பாங்கு உழக்களவு எனலாம்" என நன்கு சுட்டுகிறார். பூவைப்பற்றிய அறிவியல் ஆய்வால் தோட்டக்கலை, பூங்காக்கலை, இல்ல ஒப்பனைக் கலை, மலரடுக்குக்கலை போன்றவை மலர்ந்ததை ஆசிரியர் நன்கு விளக்குகிறார்.

அனைத்தும் பூவில் உண்டு

மலர் வணிகம், மலர்ச்செடி-கொடி வணிகம், மலரிலிருந்து உண்டாக்கப்படும் மணப்பூச்சுப் பொருள் வணிகம் என்பவற்றால் பொருளியலுடன் பூ, தொடர்பு கொண்டுள்ளது. கொன்றை

யாண்டி, மலரவன் எனக் கடவுளரைப் பூப்பெயரிட்டு வழங்குவதாலும், வழிபாட்டிற்குப் பூ முதன்மைப் பொருளாய் இருப்பதாலும் அஃது ஆன்மவியலிலும் இடம்பெறுகிறது: மலரில்லாத இலக்கியமே இல்லையாதலின் இலக்கியவியலில் மலர், ஆதிக்கம் செலுத்துகிறது. இவ்வாறாய் உலகவியல் அனைத்தும் பூவில் அடங்குகிறது என்பதை ஆசிரியர் நன்கு சுட்டிக் காட்டுகிறார்.

பூக்களின் சிறப்பு

தமிழ்நாட்டில் பூக்களுக்கிருந்த சிறப்பை ஆசிரியர் பட்டியலிட்டுக் காட்டியிருப்பது எண்ணி மகிழத்தக்கதாயுள்ளது.

1. தமிழர், நிலங்கட்கு அவ்வந்நிலங்களில் விளங்கிய சிறப்பான பூவைக்கொண்டே பெயரிட்டுள்ளனர். (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்).

2. புறத்திணைத் துறைகள் பூக்களின் பெயர்களாலேயே அமைக்கப்பட்டுள்ளன. (வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை.)

3. அரசர்களின் சின்னங்களாய்ப் பூக்கள் சிறக்கின்றன. (சோழர் - ஆத்திப்பூ; பாண்டியர் - வேப்பம் பூ; சேரர் - பனம் பூ)

4. ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு பூவை விருப்பப் பூ ஆக்கினர். (சிவன் - கொன்றை; முருகன் - கடம்பு; திருமகள் - ஆம்பல்; கலைமகள் வெண்டாமரை; அருகன் - அசோகு; புத்தன் - தாமரை.)

5. தமிழ் மன்னர்கள் அளித்த சிறந்த பரிசுப் பொருள்கள் பூக்கள் வடிவில் செய்யப்பெற்றன. (பொற்றாமரை)

6. உயர்ந்த பட்டங்கள் பூக்களின் பெயர்களால் கொடுக்கப்பட்டன. (எட்டி, காவிதிப் பட்டங்கள்.)

7. மக்கள் அணிவதிலிருந்து நாள் முழுவதும் செய்யும் செயல்களிலெல்லாம் பூக்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

பருவம், உறுப்பு, குணம்

பூக்களின் வரலாறும் சிறப்பும் கூறிய ஆசிரியர், அடுத்து அவற்றின் அமைப்பு, குணம் ஆகியவற்றைத் தொகுத்துரைத் துள்ளார்.

1. பூக்களின் பருவங்கள் ஏழு. (நனை, அரும்பு, முகை, போது, மலர், அலர், வீ.)

2. உறுப்புகள் ஏழு. (காம்பு, புல்லி, அல்லி, சூலகம், மகரம், தாது, தேன்.)

3. குணம் பத்து. (மணம், மென்மை, வண்ணம், தூய்மை, தன்மை, சுவை, ஒளி, எழில், கவர்ச்சி, மங்கலத் தன்மை.)

4. குடும்ப வகை நான்கு. (கோட்டுப் பூ, கொடிப் பூ, நிலப்பூ, நீர்ப்பூ.)

5. பூவிதழ் வகை ஏழு. (இதழ், அதழ், கோடு, ஏடு, மடல், தளம், பாளை.)

6. பூங்கொத்து வகை ஏழு. (கொத்து, தொத்து, துணர், இணர், மஞ்சி, தொடர்ச்சி, குலை.)

இவற்றை இலக்கியச் சான்றுகளுடன் விரிவாய் விளக்கும் ஆசிரியர் முடி, கழுத்து, தோள், மார்பு போன்ற இடங்களில் மக்கள் அணியும் மலரணிகளின் அமைப்பையும், பெயர்களையும் வேறுபடுத்திக் காட்டுகின்றார்.

பூக்கள்பற்றிய அரிய செய்திகள்

இவ்வாறு பொதுச்செய்திகளை விளக்கிய ஆசிரியர் அடுத்துத் தனித்தனிப் பூவை எடுத்துக்கொண்டு அப்பூபற்றிய முழு விவரங்களையும், இலக்கியங்களில் அவை ஆளப்பட்டுள்ள இடங்களையும் விரிவாயும், தெளிவாயும் எடுத்துக் கூறியுள்ளார். அவற்றிலிருந்து நாம் பல அரிய செய்திகளை அறிகிறோம்.

1. காளை ஒருவன் தான் அணிந்திருந்த முல்லைப்பூவினை கன்னி ஒருத்தியின் கூந்தலில் சூட்டினால் அவள் அவனுக்கு உரியவளாய்விடுவாள்.

2. பெண் மங்கைப்பருவம் அடையும்போது அவள் தன் வீட்டு முற்றத்தில் ஒரு முல்லைக் கொடியை நடுவாள். அம்முல்லை பூக்குங்கால் அவள் கன்னிமைத் தன்மை அடைவாள். முல்லை பூப்பது அவள் கன்னிமை மலர்ந்ததன் அறிவிப்பாம்.

3. கன்னியாய் இருந்த பெண் முல்லையைச் சூடினாலே கற்பில் அமைந்து மனைவி ஆய்விட்டாள் என முல்லை, கற்பின் அறிகுறியாய்ப் பேசப்படும்.

4. வாழ்த்தும் போது, நெல்லையும் அரும்பவிழ்ந்த முல்லை மலரையும் சேர்த்துத் தூவுதல் மரபு.

5. உழத்தியர் நெய்தல், ஆம்பல், குவளை, காவி ஆகிய நான்கையும் தனித்தனியாகவும் யாவற்றையும் சேர்த்துக் கட்டிய

மாலையாகவும், தழை உடையாகவும் அணிந்தனர். இவற்றின் தண்டுகளை எளிய மக்கள் கைக்காப்பாய் அணிந்தனர்.

6. அல்லிப் பொகுட்டில் ஆயிரக்கணக்கான வெண்சிறு கடுகு போன்ற விதைகள் இருக்கும். இவ்வல்லி அரிசியை மக்கள் உணவாய் உண்பர். இவ்வரிசி உணவு நெய்ப்போ, கொழுப்போ இல்லாதது; புலன் உணர்ச்சிகளைத் தூண்டாதது; இதனால் கைம்பெண்கள் இதனை அன்றாட உணவாய்க் கொள்வர்.

7. பனியால் தாமரை கருகும்.

8. குறிஞ்சித்தேன் சிறப்புடையது.

9. போர் வீரர்கட்கு அவ்வப்போர்க்குரிய பூ சூட்டப் படும். அதனை மன்னன் வழங்குவான். இது 'பூக்கோள் நிலை' எனப்படும்.

10. தினை விதைக்கக் கொல்லையை உழத் தொடங்குவோர் பொன்னேர் பூட்டும் முதல் உழவின்போது நொச்சித்தழை மாலை யைச் சூடிக்கொள்வர்.

11. எவ்வொலியும் இல்லாத நள்ளிரவில் நொச்சிப் பூங்கொத்து விழும்.

12. போரில் வெற்றி பெற்றோர் வாகைப்பூவைச் சூடிக் கொள்வர். வாகைப்பூவில் நள்ளிரவில் பிஞ்சு தோன்றி, சில நாழிகைகளில் வளர்ந்து காயாகிவிடுகின்றது. மாலையில் பூங்கொத்தில் அடையாளம் காட்டாத பிஞ்சு, காலையில் காயாகத் தோன்றும். அதனால், "மடையானில் குஞ்சையும் வாகையில் பிஞ்சையும் பார்க்கமுடியாது" என்னும் பழமொழி எழுந்தது.

13. போர்ப்புண் பெற்ற வீரன் வீட்டிற்குக் கொணரப்பட்டால் அவனை நோய் மூட்டும் நுண்ணுயிரிகள் தாக்காமலும் பேய் உண்ணாமலும் தடையேற்படுத்த வீட்டின் முகப்பில் வேப்பிலையைச் செருகுவர்.

14. வேர் முதல் குருத்துவரை எல்லா உறுப்புகளாலும் மாந்தர்க்குப் பயன்படும் ஒன்று, பனை.

15. கொன்றைக்காயின் உள்ளே உள்ள விதைகளை ஒரு பக்கம் துளையிட்டு எடுத்துவிட்டு ஊதும் குழலாய்ப் பயன்படுத்தினர்.

16. கோங்கு தனிப்பூவாய்த் தொடர்ந்து பூத்திருக்கும் காட்சி கார்த்திகைத் திங்களில் ஏற்றப்படும் விளக்குவரிசை போலத் தோன்றும். காட்டுவழியிற் காற்றடிக்கும்போது கோங்கின் மலர்

காம்பிலிருந்து சுழன்று சிதறி வீழ்வது, ஒருவன் கையில் வைத்திருந்த நெருப்புச் சுடரை விட்டெறிவது போன்றிருக்கும்.

17. சங்க இலக்கியம் கூறும் இலவம் இன்றுள்ள இலவமன்று. அவ்விலவம் அடிமரம் பருத்து நீண்டது; முட்களைக் கொண்டது; இம்முள் கூர்மையுடையதன்று; அடிமரத்தில் முட்டு முட்டு அமைப்பாய்க் கூம்பு வடிவத்தில் அமைந்திருக்கும். களிறு தன் தினவைக் குறைத்துக்கொள்ள இலவின் அடிமரத்தில் உராய்ந்து தேய்த்துக்கொள்ளும்.

18. குரவம் காயை விளையாட்டு மகளிர் பொம்மையாய்க் கொண்டு தொட்டிலிலிட்டுத் தாலாட்டி மகிழ்வர். இக்காய்கள் சாம்பல் நிறத்தில் கிளைகளில் ஆங்காங்குத் தொங்கி அசைவது சிறு குழந்தைப் பொம்மைகள் தொங்கி ஆடுவன போன்றிருக்கும். இதனாலேயே இது 'குரவம் பாவை' எனப் பெயர் பெற்றது.

19. புன்னை கடற்கரையில் வளர்வது. கிழக்கிலிருந்து வீசும் கடற்காற்றால் நாள்தோறும் தாக்கப்படுவதால் இதன் கிளைகள் மேற்கு நோக்கி வளைந்து வளரும்.

20. புன்னை மரம், கருநிறம்; இலை, கரும் பச்சை; அரும்பும் மலரும் வெண்மை; தாது, பொன்னிறம். ஆதலின், இம்மரம் 'நானிறக் கடிகை' ஆகிறது.

21. புன்னை முகை இயற்கையாய் மலர்வதுடன் கடல் அலையின் நீர்த்துளி காற்றால் சிதறுண்டு நனைப்பதாலும் மலரும். புன்னை மலர்மணம் பக்கமெலாம் பரவிக் கமழும். கடற்கரையில் பரதவர் காயவைத்த மீன் புலாலின் கெடு நாற்றத்தை இஃது அகற்றும்.

22. புன்னைக் காய்களிலிருந்து எண்ணெய் எடுக்கப்பட்டது.

23. தாழை மலர்த்தாது மணத்தூளாய்ப் பயன்பட்டது; தாழை விழுதுகளைப் புனைந்து மகளிர் ஊஞ்சலாடினர்; தாழை விழுது வீட்டிற்கு வண்ணமடிக்கும் துகிலிகையாயும் இருந்தது.

24. நீர்வேட்கை கொண்ட யானை, மலைப்பகுதியில் மராமரத்து மலர் உதிர்வதை வெள்ளிய மழைத்துளி விழுவதாய் எண்ணி அங்குமிங்கும் ஓடி அலையும்.

25. பித்திகை முகை ஓரளவு கூரியது. முடங்கல் தீட்டுவோர் இதனை எழுத்தாணியாய்ப் பயன்படுத்தினர். இஃது அந்திக் காலத்தில் மலரும்; கூதிர்ப் பருவத்தில் பகற்போதில் வானம் இருண்டிருக்கும். அக்காலத்தில் பித்திகை அரும்புகளைக் கொய்து

பூந்தட்டில் வைப்பர். அது மலர்ந்து மணம் வீசினால் மாலை வந்தது எனத் தெரிந்து மகளிர் விளக்கேற்றுவர்.

26. இலுப்பைப்பூ இனிப்பானது. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். வெளவால் வேம்பம் பழத்தைத் தின்னும். அதில் வெறுப்புத் தோன்றின் அக்கைப்புச் சுவை மாற இனிப்புள்ள இலுப்பைப் பூக்களைத் தின்னும்.

27. மயிலை மலர் நள்ளிரவில் பூத்து மணம் பரப்புவதால் 'நள்ளிருள் நாறி' எனப்பட்டது.

28. பாதிரிப்பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். ஆதலால், மலர்ந்த மலரைப் புதிய மண்பானையில் பெய்து வைத்துப் பின்னர் எடுத்துவிட்டு அப்பானையில் நீர் ஊற்றி வைப்பர்.

29. பரத்தையர் தமக்கு இசைவாரை அறிய வேழப் பூவைப் பயன்படுத்துவர். நள்ளிரவில் இப்பூவை விற்பது போன்று கையிற் கொண்டு திரிவர். எதிர்ப்படும் ஆடவர் ஏற்றால் தமக்கு இசைந்ததாய்க் கொள்வர்.

30. மூங்கிற்பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒரு வகை அரிசி தோன்றும். இது மூங்கிலரிசி எனப்படும். மலைநாட்டுக் குறவர் இதனை உணவாய்க் கொண்டனர். 'வேரல்' என்னும் சிறு மூங்கிலரிசி மிகுதியும் விரும்பிக் கொள்ளப்பட்டது.

31. வண்டுண்ணா மலர் என்று ஒன்றுமில்லை.

32. முசுண்டை மலர் நடுயாமத்தில் புதர்களில் மலரும். இது கூதிர்ப் பருவத்தில் வானம் மழை பெய்து நின்று தெளிந்திருக்கும் போது விண்மீன்கள் பளிச்சென்று தெரிவது போன்றிருக்கும்.

33. கலங்கல் நீரைத் தேற்றித் தெளிவாக்கத் தேற்றாங் கொட்டை பயன்படும்.

34. நிறுத்தல் அளவைப் பெயர்களுள் ஒன்று, பொன்னை நிறுக்கப் பயன்படும் அளவையான 'மஞ்சாடி' என்பதாம். இது மஞ்சாடி மரத்தின் விதை. இரு குன்றிமணி எடை கொண்டது.

35. வெள்ளிலோத்திர மலர்ச்சருகை அரைத்துச் சாந்தாய் மகளிர் பூசிக் கொள்வர்.

36. கண்ணிப்பூ குன்றிமணியைத் தரும் கொடியின் பூ. குன்றிமணி பொன்னை நிறுக்கப் பயன்படும்.

37. செவ்வந்தி, தமிழ்நாட்டில் வந்திறங்கிய இனத்தில் ஒன்று. சப்பானிய மன்னர்க்கு இஃது அடையாளப் பூ.

காண இயலாப் பூக்கள்

பூ உண்டு. ஆனால், கண்ணிற்குக் காட்சி தராமல் காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் : அத்தி மலர், ஆல மலர், பலா மலர்.

மலர் உண்டு, பெயரும் உண்டு; ஆனால், இதுதான் அது என்று உறுதியாய் அறிய இயலாத நிலையிலுள்ள மலர்கள் : கள்ளி மலர், பாங்கர் மலர்.

மலரின் பெயரைத் தவிர வேறு விளக்கம் அறிய இயலா அரிய மலராய் இருப்பன : காவிதி மலர், அனிச்ச மலர்.

அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்தும் அவை புறத்தே காட்சிப் படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள் அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.

எளிய பூக்கள்

பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை ஆகியவற்றால் மலருள் சில எளியவை ஆகின்றன. அவையாவன நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப் பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை.

இவ்வாறாய் அனைத்துப் பூக்களையும் வகைப்படுத்தி அழகுபடத் தொகுத்துக் கூறுகிறது, இந்நூல்.

பூக்கள்பற்றிய உவமைகள்

பூக்களின் தன்மைகள்பற்றிக் கூறும் ஆசிரியர் அப்பூக்களோடு தொடர்பு கொண்டுள்ள உவமைகளையும் அழகிய முறையில் ஆங்காங்கே தந்து செல்கிறார்.

மகளிரின் பல்லுக்கு முல்லையும், கண்ணுக்குக் குவளையும், முகத்திற்குத் தாமரையும், வாய்க்கு ஆம்பலும், மூக்குக்கு எட்பூவும், காதுக்கு வள்ளைக் கொடியும், செவ்வரி படர்ந்த கண்ணுக்குச் செங்கழுநீர் இதழும், முகிழ்த்த மார்புக்குக் கோங்கமும், தேமல் படர்ந்திருப்பதற்கு வேங்கைப் பூவும், கைக்குக் காந்தளும், செவ்விதழுக்கும் சீரடிக்கும் இலவம் இதழும், பசலைக்குப் பீர்க்கும், உடல் நிறத்திற்கு அசோகின் தளிரும் உவமைகளாகின்றன. மற்றும், பூக்கள் எவ்வெவற்றிற்கு உவமையாகின்றன என்பது இலக்கியச் சான்றுகளுடன் காட்டப்பட்டுள்ளன.

தாமரை மொட்டு	நெஞ்சக்குலை
நொச்சி அரும்பு	நண்டின் கண்
வேப்பம் பூ	வயல் நண்டின் கண்

வாகைப் பூ	மயிற்குடுமி
குரவின் அரும்பு	பாம்பின் பல்
புன்னை அரும்பு	பல்லி முட்டை
தாழை மலர்	நாரை
தாழை விரிவு	அன்னம்
தளவ மலர்	மீன் கொத்தியின் வாய்
தளவம் அரும்பு	கவுதாரியின் கால் நகம்
இலுப்பைப் பூ	அம்புக் குப்பி, முத்து, ஆலங்கட்டி, பூனையின் அடி, யானையின் கடையப்பட்ட மருப்பு, இறால் மீன் தலை.
ஞாழல்	வெண்சிறு கடுகு, ஆரல் மீன் முட்டை
மகிழம் பூ	தேர் உருளை
இடப்பம் பூ	குறும்பூழ்ப் பறவைக் குஞ்சு
பாதிரி	ஓவிய எழுதுகோல்
முள்ளி மலர்	அணிற்பல்
முருக்கு மலர்	புலி நகம்
கவிர் மலர்	சேவலின் நெற்றிக் கொண்டை
ஈங்கை மலர்	சிட்டுக்குருவிக் குஞ்சு
புன்கு	பொரி
அவரைப் பூ	கிளி மூக்கு
அகத்திப் பூ	பன்றிப் பல்
ஊமத்தம் பூ	எக்காளம்
ஊகு	அணில் வால்
கரும்புப் பூ	குத்திட்டு நிற்கும் வேல்
அடும்புப் பூ	குதிரைக் கழுத்தில் கட்டப்படும் சதங்கை
வெண் கடப்பம்	பந்து
செவ்வலரி	குருதி தோய்ந்த குடர்
நொச்சி இலை	மயிலின் காலடி
அடும்பு இலை	மான் குளம்பு
காந்தள் கிழங்கு	கலப்பை

தூய்மைக்குத் தும்பையும், கருநீலத்திற்குக் காயாம் பூவும் என்றுமுள எடுத்துக்காட்டுகளாம்.

மாணிக்கக்கல்லில் 'குருவிந்தம்' என்னும் வகையின் நிறத்திற்குத் திலக மலர்நிறம் கூறப்படும்.

தெறுழ் பூ, களிற்றின் நெற்றியில் தோன்றும் புள்ளி வடிவில் பூக்கும்.

பிடவ மலர் கொத்தாய்ப் பூத்துக் குலுங்குவது பால் கறக்கும் முழவில் பால் நுரை பம்பி நிற்பதுபோன்றிருக்கும்.

கொன்றைக்காய் திரண்டு தொங்கும் தோற்றம் தவம் செய்வோரது திரண்ட சடைக்கற்றை போன்றது.

பகன்றை மலர், புதுத் துணியை முருக்கிக் கஞ்சி தோய்த்து நீரில் அடித்துப் பிழியும்போது நிற்பது போன்ற தோற்றமுடையது.

இவ்வுவமைகளைக் காணும்போது பண்டைத் தமிழ்ப் புலவர்கள் இயற்கையில் தோய்ந்த திறமும், இவற்றைத் தொகுத்தளித்த இளஞ்சேரனாரின் அயரா உழைப்பும் நன்கு புலனாகின்றன.

பூக்களின் பெயரால் இசையும் இசைக்கருவிகளும்

முல்லை	முல்லை யாழ், முல்லைப்பண்.
குறிஞ்சி	குறிஞ்சி யாழ், குறிஞ்சிப்பண்; இரவில் காவல் புரிவோர் தாம் காவலுக்கு இருப்பதை அறிவிக்கவும், தூக்கத்திற்கு ஆட்படாதிருக்கவும் குறிஞ்சிப்பண் பாடுவர்.
மருதம்	மருதயாழ், மருதப்பண்.
பாலை	பாலை யாழ், பாலைப்பண்.
ஆம்பல்	ஆம்பல் இசையும் அல்லிக் கூத்தும் உண்டு.
காஞ்சி	காஞ்சிப்பெயர் கொண்ட இசை, செவ்வழிப் பண் வகையினது. போர்ப்புண் நலம் பெறவும், காற்றாவி அணுகாதிருக்கவும் இதைப் பாடுவர்.

பூப்பெயர் ஊர்கள், நூல்கள்

பூக்களின் சிறப்பான தன்மையால் தமிழ் நிலத்தில் பல ஊர்கள் பூப்பெயர் பெற்றிருப்பதையும், பூக்களின் பெயரால் இலக்கியங்கள் படைக்கப்பட்டிருப்பதையும் மற்றும் பூக்களின் பெயரால் புலவர்கள் பெயர் கொண்டிருப்பதையும் ஆசிரியர் நூல்

முழுவதும் ஆங்காங்கே சுட்டிச் சென்றுள்ளவை இங்கே தொகுக்கப்பட்டுள்ளன.

முல்லை	திருமுல்லைவாயில், முல்லையூர், முல்லைக்காடு, முல்லைப்பாடி.
குறிஞ்சி	குறிஞ்சிப்பாடி
மருதம்	மருதூர், மருதவேலி, மருதம்பாக்கம்.
நொச்சி	நொச்சி நியமம்.
ஆர் (ஆத்தி) -	திருஆரூர், ஆர்க்காடு
பனை	பனையூர், பனங்காடு, திருப்பனந்தாள்.
தாழை	தாழையூற்று, தாழையூர், தாழைக்காடு, தாழந்திருவாயில்.
காயா	காசாங்காடு, காசாங்குளம்.
பிடவம்	பிடவூர்.
இலுப்பை	இலுப்பூர், இருப்பைக்காடு, இலுப்பை.
பாதிரி	திருப்பாதிரிப்புலியூர்.
சண்பகம்	சண்பகாடவி.
தில்லை	திருத்தில்லை.
பருத்தி	பருத்தியூர்.
எருக்கு	எருக்கத்தம்புலியூர்.
பூளை	இரும்பூளையூர்.

முல்லை, குறிஞ்சி, காஞ்சி ஆகியவற்றின் பெயரால் பத்துப்பாட்டில் முறையே முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, மதுரைக் காஞ்சி ஆகியன உள்ளன.

வஞ்சிப் பூவின் பெயரால் வஞ்சிப் பா எனும் ஒரு பாவகையும் பேர் வஞ்சி, வஞ்சி மாலை எனும் புற நூல்களும் உள்ளன.

தும்பையின் பெயரால் தும்பை மாலை எனும் சிற்றிலக்கியம் உள்ளது.

முள்ளியால் முள்ளியார் எனும் புலவரும்,

ஞாழலால் மதுரை அளக்கர் ஞாழலார், குமிழி ஞாழலார் நப்பசலையார் ஆகிய புலவர்களும்,

முசுண்டை மலரால் குறுநில மன்னன் ஒருவனும்,

வள்ளி மலரால் முருகன் மனைவியான வள்ளியும்

பெயர் பெற்றுள்ளதும் அறியத்தக்கதாம்

பூக்களும் மருத்துவமும்

தமிழ்நிலப் பூக்கள் பல மருந்துப் பொருள்களாய் விளங்குகின்றன. அத்தகு மலர்கள் எவை என்பதையும் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

1. முல்லை மலரின் மணம், காதல் உணர்வு தரும்; உடம்பிற்குப் புத்துணர்ச்சியும் மகிழ்ச்சியும் தரும்.

2. இலவம் பூவைக் கொண்டு கறுக்குநீர் செய்து குடிப்பர். இது குருதிப் பெருக்கை அடக்கும்; மலத்தை இளக்கும்; சிறுநீரைப் பெருக்கும். இலவம் பஞ்சு, சீழை வற்றச் செய்யும்.

3. தாழம் பூ மணம், பூச்சிக் கொல்லி. அம்மை நோய் கண்ட இல்லத்தில் இம்மலரைக் கட்டித் தொங்கவிடுவதால் அந்நோய் வளர்க்கும் நுண்ணுயிரிகள் அழியும். தாழை மடலிலிருந்து வடிக்கப்படும் பனிநீர், அம்மை நோய்க்கு மருந்தாகும். பனையோலைச் சுவடிகளைப் பூச்சிகள் அழிக்காமல் பாதுகாக்கத் தாழை மலர் மணம் பயன்படும்.

4. இலுப்பைப் பூவைக்கொண்டு குடிநீர் செய்து பருகச் சிறுநோய்கள் தீரும். இப்பூவை மருந்தாக்கி உண்டால் பித்த சுரம் போகும். இருப்பைப் பூவின் சாற்றை எடுத்து இரும்புத்தூளில் கலந்து பக்குவம் செய்து அத்தூளை மைபோன்று குழைத் தெடுக்கலாம்.

5. கவிர்ப் (வெண்மைப்) பூச் சாற்றைக்கொண்டு ஈயத்தை நீறாக்கலாம்.

6. ஆவிரைப் பூவிதழைத் தேனில் இட்டுக் குல்கந்து செய்து உண்பர். இதனால் குளிர்ச்சியும் உடல் வலிவும் பெருகும்.

7. செவ்வலரி மலரால் பக்குவமாக்கப்படும் மருந்து பல நோய்களைத் தீர்க்கும். இதில் தோன்றும் மஞ்சள் நிறச்சாறு கொடிய நஞ்சாகும்.

8. சண்பகப் பூ, உடல் மறுவையும் பருவையும் நீக்கும்.

9. நந்தி வட்டப் பூ, கண்நோய் பலவற்றையும் போக்கும்.

10. ஓமப்பூவிலிருந்து வடிக்கப்படும் ஓமநீர் ஒரு மருந்துப் பொருளாகும். அது வயிற்று நோய்கள் பலவற்றையும் நீக்கும்.

11. வெள்ளை, குருதி அழல் நோய், புண் முதலியவற்றிற்கு பருத்திப் பூ மருந்தாகும்.

12. செம்பருத்திப் பூவை எண்ணெயிலிட்டு ஊறவைத்து முடி வளர்ச்சிக்குப் பயன்படுத்தலாம்.

13. மாதுளை முகிழைக் காயவைத்துப் பொடி செய்து, இருமலுக்குக் கொடுக்க அது நீங்கும்.

14. தெங்குப்பூ உடலின் நஞ்சு நோய்க்கு மருந்து.

15. எட்டிப்பூ கண் நோய்க்கு நல்ல மருந்து.

16. வாழைப்பூ வயிற்றளைவு, கைகால் எரிச்சல், எருவாய்க் கடுப்பு, இருமல் முதலியவற்றிற்கு அரிய மருந்து; மேக நோயை ஒழிக்கும்.

17. அகத்தி இலைக்கீரை சமையலுக்குப் பயன்பட்டு உடல் வெப்பத்தைத் தணிக்கும்.

18. துளசிஇலைச் சாறு, சுரப்பிணி, அளைவுநோய் இனமெலாம் நீக்கும்.

19. பசும்பிடி இலைச்சாற்றால் தலைப்பேன் போகும்; முகப்பரு வேர் அறும்; தோற்புண் ஆறும்.

20. ஆலின் அனைத்துறுப்புகளும் மேகம், உள் கடுப்பு, நீரிழிவு ஆகியவற்றை நீக்கும்.

21. எருக்கம் பால் மருந்துக்காகும். வெள்ளெருக்கின் நாரினை எடுத்துக் குழந்தைகட்குக் கடிப்பகையாய்க் கட்டும் வழக்கம் உண்டு.

22. ஊமத்தையின் வித்து, வெறியேற்றும் குணம் கொண்டது.

23. முருங்கைக் கீரையுணவால் வயிற்றுக்குற்றம் வராது. இது மேக நோய் நீக்கும் மருந்தாயும் இருக்கிறது. முருக்கம் பூவால் கண் குளிர்ச்சி ஏற்படும்; பித்தம் குறையும்; நாச்சுவையின்மை நீங்கும். இதனை ஆவின் பாலில் அவித்து உண்டுவர ஆண் வீரியம் கெட்டிப்படும்.

24. மயிலை மலர், குருதிப் பித்தத்தைப் போக்கும்.

25. குசும்பைப் பூவிலிருந்து ஆடைக்கேற்றும் காவிநிறச்சாறு எடுக்கப்படுகிறது.

எல்லாப் பூவும் இந்நூலின்பாலுள; இதன்பால் இல்லாத எப்பூவும் இல்லை;

தமிழ் நிலத்திலுள்ள பூக்களைப்பற்றிய முழு விவரங்களையும் ஒரே நூலில் அறிய வேண்டுமானால் இது தவிர வேறு நூல் இல்லையென்று துணிந்து கூறலாம். பூக்களின் அமைப்பை ஆசிரியர் தெளிவாய் விளக்குவது கொண்டு அவர், ஒவ்வொரு பூவையும் தேடி, நாடி, அறிந்து இந்நூலை ஆக்கியுள்ளார் என்பதை அறிய முடிகிறது. ஆசிரியரின் அரிய

உழைப்பு, தெளிந்த அறிவு, நிறைந்த பட்டறிவு ஆகியவற்றின் இணைப்பாய் இந்நூல் விளங்குகிறது.

இப்பூக்காட்டில் நுழையும் தும்பியாய் நாம் விளங்குவோமாக!

நூல் ஆக்கம்	கவிஞர்கோ கோவை இளஞ்சேரன்
வகைமை	ஆய்வுக்கட்டுரை
வெளியீடு	மலைக்கோட்டை வெளியீடு, சென்னை. (1982)

2

தனித்தமிழ் இயக்கம்

தனித்தியங் கும்தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு

என்பது பாவேந்தர் பாடல். உலக முதன்மொழியாய்த் தோன்றி இன்றும் உயர்தனிச் செம்மொழியாய் விளங்கி வருவது, தமிழ். பண்டைய மொழிகளாய்ப் பெருமை பெற்று விளங்குகின்ற இன்றைய மொழிகளுள் தனிச் சிறப்புடையது தமிழே.

உலகம் ஊமையா உள்ளஅக் காலையே
பலக லைப்பயன் பாங்குறத் தாங்கியே
இலகி இன்றுநான் என்னும் மொழிக்கெலாம்
தலமையாம் தமிழ்....

என்பார், புலவர் குழந்தை. உலகில் மாந்தரினம் தோன்றி, மொழி பேச முற்பட்டபோது அவர்கள் நாவை அசைத்த முதல் மொழி தமிழே என்பதை,

பைந்தமிழே ஞாலமிசை நாநவின்ற முதன்மொழியாம்

எனப் பெருமை பொங்கப் பாடியுள்ளார், ந.மு. கோவிந்தராயர்.

பல்வேறு மொழி மக்கள்

தமிழ்நாடு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே கடல் கடந்த வெளிநாடுகள் பலவற்றுடன் தொடர்பு கொண்டிருந்தது. தமிழர்கள் படைகொண்டு சென்று வென்ற பல நாடுகளும் உண்டு.

புகார் நகரத்தின் கடற்கரைப் பகுதியில் பிறநாட்டவர் பலரும் கலந்து ஒரே நாட்டவர்போல வாழ்ந்து வந்தனர் என்பதை,

கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்

எனும் சிலப்பதிகார அடிகள் தெரிவிக்கின்றன. புகாரில் பல விடத்து நின்றும் போந்து ஒருங்கு கூடிய மொழி வேறுபட்ட மக்கள் இருந்தனர் என்பதை,

பரந்தொருங் கீண்டிய பாடை மாக்களும்

என மணிமேகலைக் காப்பியமும் பகர்கிறது. தமிழ் நாட்டில் பல்வேறு மொழியினர் கூடியிருந்தனர் என்பது மட்டுமன்றித் தமிழர்கள் பல்வேறு மொழிகளைக் கற்றவராயும் இருந்தனர் என்பதை அறிகிறோம். சாதுவன் என்போன் நாகர் மொழியை நன்கு கற்றவனாதலின், அம்மொழியிற் பேசி, நாகர்கள் அவனுக்கு இழைக்கவிருந்த துன்பத்தினின்றும் தப்பினான் என்னும் செய்தியை,

மற்(று) அவர் பாடை மயக்கறு மரபிற்
கற்றனன் ஆதலின் கடுந்தொழில் மாக்கள்
சுற்று நீங்கித் தொழுதுரை யாடி.....

எனும் மணிமேகலை அடிகளால் அறிகிறோம். பண்டு பதினெட்டு வகையான மொழி பேசுவோர் தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்தனர் என்பதையும் மணிமேகலை,

மொய்த்த மூவறு பாடை மாக்கள்

எனக் கூறுகிறது. கம்பரும் இச்செய்தியை 'ஆரியம் முதலிய பதினெண் பாடை' என்னும் தொடரால் தெரிவிக்கிறார்.

மொழிக்கலப்பு

தமிழ் நாட்டில் வேற்றுமொழி மக்கள் வாழ்ந்திருந்ததாலும், தமிழர்கள் வேற்று மொழிகளைக் கற்றிருந்ததாலும் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலக்க நேரிட்டது. ஆரிய மொழி வழக்கிலிருந்த வடபுலம் தமிழக நிலப்பரப்போடு ஒட்டியிருந்ததாலும், மற்றும் படையெடுப்புகள், சமயத் தாக்குரவுகள், குடியேற்றம் ஆகியன நிகழ்ந்தமையாலும் வடமொழி தமிழில் மிகுதியும் ஊடாட வாய்ப்பு நேர்ந்தது. பிறமொழிச் சொற்கள் தமிழில் கலக்க நேரும்போது, தமிழ் இயல்புக்கேற்ப அவற்றை மாற்றியமைத்துத் தமிழின் தனித்தன்மையைக் காப்பதற்கு அன்றே இலக்கணமும் செய்யப்பெற்றது.

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே

என்பது தொல்காப்பிய நூற்பா.

ஒலியன் மொழி

தமிழ், ஒலியன் மொழியாகவே தோன்றியிருப்பது அதன் தனிச்சிறப்பு. ஒரெழுத்தே சொல்லுமிடத்துக்கேற்ப வெவ்வேறு ஒலியமைப்பைப் பெற்றுக்கொள்கிறது. சுக்கு, சங்கு, வரகு இச்சொற்களில் உள்ள ககர உகரமான 'கு' என்னும் ஒரே எழுத்து,

வல்லொலி, மெல்லொலி, இடையொலி ஆகியவற்றைப் பெற்றிருப்பதை அறிவோம். ஆங்கிலேயர் ஒருவர் இச்சொற்களைப் படித்தால் நாம் ஒலிப்பதுபோல ஒலிக்க முடிவதில்லையே எனக் கூறுபவரும் உளர். ஆங்கிலத்தை நன்கு கற்ற தமிழர் ஒருவர் ஆங்கிலத்தைப் பேசுங்கால் ஆங்கிலேயர் ஒலிப்பதைப்போல் ஒலிப்பதில்லை என்பதை அவர்கள் உணர மறுப்பது ஏனோ தெரியவில்லை. ஆங்கில மொழியின் ஒலிப்பு முறையினின்று பிற மொழியினர் வேறுபட்டு ஒலிக்குங்கால், ஆங்கிலமே அழிந்து போவதாய் ஆங்கிலேயர் எவரும் குற்றம் சாட்டுவதில்லை. 'Keats' என்பதைத் தமிழ் முறைக்கேற்ப, 'கீட்சு' என்று எழுதும்போது அதை ஏளனம் செய்வோர், ஆங்கிலேயர் 'தஞ்சாவூர்' என்பதை 'Tanjore' என ஒலிப்பதையும் எழுதுவதையும் அறியாரோ? அவரவர் மொழிக்கேற்ப ஒலி மாற்றத்தை உண்டாக்கிக்கொள்வதும், அதற்கேற்ப எழுத்துகள் அமைவதும் இயல்பேயாம்!

பிற மொழிகளைப் போலத் தமிழ் எழுத்துகளில் ஒலித் தடுமாற்றம் எதுவும் இல்லை. அறிஞர் பெருனாட்டுசா 'fish' என்பதை 'Ghoti' என்று எழுதலாமே என்றாராம்! அதற்கு அவர் தந்த விளக்கம் 'fish' என்பதில் எப், ஐ, ஷ் என்னும் ஒலிகள் உள்ளன. 'laugh' என்னும் சொல்லில் gh, 'எப்' ஆக ஒலிக்கிறது. Women என்னும் சொல்லில் 'O', 'ஐ' ஆக ஒலிக்கிறது. Station என்னும் சொல்லில் 'ti', 'ஷ' ஆக ஒலிக்கிறது. ஆகவே, எப், ஐ, ஷ் என்பதை gh, o, ti என்று எழுதலாமன்றோ? இதைச் சுட்டி fish என்பதை ghoti என்றும் எழுத இடமேற்படுகின்றது என்றார், அவ்வறிஞர். தமிழில் இக்குழப்பம் இல்லை. ஒரெழுத்துக்கு அதற்குரிய ஒலி ஒன்று மட்டுமே.

தனித்தமிழ் இயக்கம்

உயர்தனிச் செம்மொழியான தமிழின் தனித்தன்மை, மரபுநிலை முதலியன போற்றப்படவேண்டும் என்பதை மறந்து, அதன் தனித்தன்மையை அழிப்பதும், மரபைச் சிதைப்பதுமான நிலை நேர்ந்தபோது, 'தனித்தமிழ் இயக்கம்' தோன்ற வேண்டியதாயிற்று. வானார்ந்த பொதியமலையிலே தோன்றி, மன்னிய மூவேந்தர்கள் மடியிலே தவழ்ந்து, காலந்தோறும் பழமைக்குப் பழமையதாயும் புதுமைக்குப் புதுமையதாயும் விளங்கிவரும் தமிழ் மொழியை - நம் தாய்மொழியைப் பிற மொழிக் கலப்பின்றி எழுதமுடியும்; எழுத வேண்டும் என்பதே தனித்தமிழ் இயக்கத்தின் குறிக்கோள். சில நேர்வுகளில் பிற மொழிப் பெயர்கள், கலைச்சொற்கள் முதலாயவற்றைத்

தமிழில் சொல்ல நேருங்கால், அவற்றைத் தமிழ்மொழி இயல்புக்கேற்ப அமைத்துக்கொள்ள வேண்டுமேயன்றித் தமிழின் தனித்தன்மையை அழிக்க இடமளித்து விடக்கூடாது.

நூல் நுவல் பொருள்

தனித்தமிழ் இயக்கத் தோற்றம், வளர்ச்சி, அதற்கேற்பட்ட எதிர்ப்புகள், அவ்வெதிர்ப்புகளை வென்று ஓங்கிய நிலை ஆகியவற்றை ஆசிரியர் இந்நூலுள் தொகுத்து வகைப்படுத்தி விளக்கிக் கூறியுள்ளார். வெறும் செய்தித் தொகுப்பாக மட்டும் இல்லாமல், ஆசிரியரின் உள்ள உணர்வுகளைத் தெள்ளிதின் வெளிப்படுத்துவதாயும் நூல் அமைந்திருக்கிறது. நூலை ஆழ்ந்து படிக்கும்முன், ஆசிரியர் தந்துள்ள சில அடிப்படை எண்ணங்களை மனத்தில் இருத்திக்கொள்வதற்காக அவை இங்கே தரப்படுகின்றன.

தமிழின் தூய்மை கெடாது வழங்கி வந்த காலத்தில் 'தனித்தமிழ்' என்று சொல்லவேண்டிய நிலை இல்லை. அப்போது 'தமிழ்' என்றாலே தனித்தமிழ்தான். பிறமொழித் தாக்குரவுகளால் தமிழுக்குக் கேடு விளையும் என்ற அச்சம் நேர்ந்த வேளைகளில்தான் புலவர்கள் தமிழின் சிறப்பை எடுத்துரைக்க அடைகொடுத்துப் பாடலாயினர். தமிழுக்குப் பெருமளவில் அடைகொடுத்துப் பாடியவர்களுள் முதன்மை யானவர்களாய்ச் சம்பந்தர், குமரகுருபரர், பாரதிதாசன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

'வடநூலை விட்டுத் தனியே தமிழ் நடவாதது நியமமே' என்ற தவறான கருத்தை முதலில் வெளியிட்டவர், ஈசான தேசிகர் என்ற தமிழரே! அவரை இந்நூலாசிரியர் இளங்குமரனார் "வயிற்றைத் தமிழ் மண்ணுக்கு வைத்து, நெஞ்சை வடமொழிக்கு வைத்த இரண்டகர்" எனக் கடுமையாய்ச் சாடியிருப்பது முற்றிலும் பொருத்தமே.

தொன்மச் செய்திகளைச் சொல்லும்போது வடமொழிச் சொற்கள் கலக்க நேரிட்ட காலத்தே பண்டைய ஆசிரியர்கள் தொல்காப்பியனார் கட்டளையை ஏற்றுப் போற்றி ஒழுகி யுள்ளனர். 'கிரௌஞ்சமலை' என்பதைக் 'குருகுபெயர்க்குன்றம்' எனத் தமிழாக்கிக் கூறினர். 'யோக நித்திரை' 'அறிதுயில்' என்றாக்கப்பட்டது. திருத்தக்க தேவர், கம்பர் போன்றோர் வடமொழிப் பெயர்களைத் தமிழாக்கம் செய்தோ, ஒலி மரபுக்கு

ஏற்பவோ எழுதிச் சென்றனர். ராமனை இராமன் என்றும், லக்ஷ்மணனை இலக்குவன் என்றும் தமிழ் மரபு கெடாது எழுதினார், கம்பர். வில்லிபுத்தூரார் காலம்வரை இந்த மரபு வழுவாமற் போற்றப்பட்டு வந்துளது.

அருணகிரியார் வடசொற்கலப்பு மிகக் கொண்டவர். தமிழெழுத்தல்லாத வேற்றெழுத்துச் செறிந்து எழுதும் வழக்கம் அருணகிரியார் காலத்திலிருந்துதான் தோன்றியதோ என ஐயுற வேண்டியிருக்கிறது என்கிறார், ஆசிரியர். அருணகிரியார், 'சபாசு' எனும் உருதுச் சொல்லையும் குமரகுருபரர் கபாய், சலாபம் என்னும் உருதுச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளனர். பிரதாப சந்திர விலாசம் என்றொரு நாடகத்தின் பாடலில் 'மை டியர் பிரதர்', 'லேடி' போன்ற ஆங்கிலச் சொற்கள் குடிபுகுந்தன.

தொல்காப்பியர் காலத்திற்குப் பின்வந்த இலக்கண நூலாரும், பிற்கால உரையாசிரியர்களும் வடசொற்பெருக்கத்திற்கு வழிகாட்டியாய்விட்டனர். கலப்பு நடைக்குச் சமயமும், பின்னணியாய் இருந்திருக்கிறது. ஆள்வோர்கள் சமய வேடத்தர் களுக்குத் தலையாட்டிகள் ஆய்விடுவதால் அவ்வேடத்தர் தங்கள் இன மொழிச் செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்ள இடமேற்பட்டுவிடுகிறது என்பதை ஆசிரியர் தெளிவாக்கியுள்ளார். பல சமய வரவுகளால் - அவ்வச் சமயச் சொற்கலப்பால் தமிழ் வளம் குறையலாயிற்று. தேம்பாவணியில் வீரமாமுனிவர் தமிழில் இடம் பெறாத எந்த எழுத்தையும் பயன்படுத்தவில்லை. பெயர்களையும் தக்க தமிழ்ப்பெயர்களாக்கியிருக்கிறார். வெளிநாட்டவர்க்கு இருந்த இந்த உணர்வு இந்நாட்டவர்க்கு இல்லாமல் போய்விட்டதே என ஆசிரியர் ஏங்குகிறார்.

காலம் செல்லச் செல்ல ஊர்ப்பெயர்கள், தெய்வங்கள் ஆகியவற்றின் பெயர்களையும் மாற்றினர். மறைக்காடு, வேதாரண்யமாயிற்று. அங்கயற்கண்ணி, மீனாட்சி ஆயினார். சங்க இலக்கியமாகிய பரிபாடல் பண் வகுத்துப் பாடப் பெற்ற இசைப்பாடலாகும். எனினும் இசையிலும் தமிழ் தன் உரிமையிழந்து பின்னுக்குத் தள்ளப்பட்டது. தமிழ் மன்னர் ஆட்சிக்குப் பின்னர் வெவ்வேறு இனத்தவர் ஆட்சிக்குத் தமிழ்நாடு ஆட்பட்டது. இறுதியாய் ஆங்கிலேயர் காலத்தில் ஆங்கிலம் ஆட்சிமொழியாயிற்று. ஆங்கிலம் கற்று அலுவல் பெற்ற தமிழர்கள் தாய்மொழிக் கல்வியைப் புறக்கணித்தனர்.

தமிழும் ஆரியமும் ஒப்பு நிலையுடையனவே; அன்று - தமிழ் ஆரியத்தினின்றும் வேறுபட்டதே; அன்று, தமிழ் ஆரியத்தினும் உயர்வானதே என்னும் கருத்து மோதல்கள் காலந்தோறும் இடம் பெற்று வந்துள்ளன. "ஆரியம், வேதம் உடைத்து; தமிழ், திருவள்ளுவனார் ஒது குறட்பா உடைத்து" ஆதலின், ஆரியமும் தமிழ்மொழியும் ஒத்து விளங்குவதாய் ஒருவர் பாடினார். வேதம், செய்யாமொழி; திருக்குறள், பொய்யா மொழி; வேதத்தை அந்தணர்கள் மட்டுமே பயிலலாம், ஆனால், திருக்குறளை இன்னார் இனியார் என்றில்லாது மாந்தராய்ப் பிறந்த யாரும் படிக்கலாம்; இந்த வகையில் தமிழ், ஆரியத்தைவிட ஒருபடி உயர்ந்ததே என்றார், மற்றொருவர். வடமொழி வேதம் சொல்லளவிலே, கேள்வியளவிலே நின்று விட்டது. ஏட்டில் எழுதினால் ஆற்றல் குறையுமென்று அதை எழுதாது விட்டனர். ஆனால் தமிழ்க்குறளோ யாவரும் படித்துப் பயன்பெறுமாறு ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது. எனவே, வடமொழியைவிடத் தமிழே சிறப்புடையது என அறுதியிட்டார் புலவர், இன்னொருவர்.

இத்தகைய மோதல்கள் தொடர்ந்து வந்தகாலை, "வடமொழி வழிப்பட்டதன்று தமிழ்மொழி. அது தனி மொழி. அதன் இனமொழிகளாய் இயல்வன தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலியன" என்ற அடிப்படைக் கருத்தை முதன்முதல் சான்றுடனும் துணிவுடனும் உலகுக்குக் காட்டியவர், கால்டுவெலாரே!

தமிழின் தனித்தன்மையை முதற்கண் தெளிவுறுத்தி எழுதியவர் பரிதிமாற்கலைஞர். 19-11-1908இல் விருதை சிவஞான யோகிகள், 'திருவிடர் கழகம்' என்னுமோர் அமைப்பைத் தோற்றுவித்தார். தமிழின் தொன்மை, உயர்வு முதலியன பற்றி ஆய்வது அவ்வமைப்பின் நோக்கங்களுள் தலையாயதாயிருந்தது. தனித்தமிழ் காக்கும் நோக்கில் எழுந்த முதல் அமைப்பு இஃது எனலாம். மாகறல் கார்த்திகேயர், மக்கள் தோற்றம் குமரிக் கண்டத்தில் உண்டாயிற்று என்றும், குமரி நிலத்து மொழி, தமிழ் என்றும், தமிழே ஞால முதல்மொழி என்றும் ஆய்ந்து கூறினார்.

திருமணம் செல்வக்கேசவராயர், தமிழ் வடமொழிச் சார்பின்றியே தனித்தியங்க வல்லது என்று தெளிவுபடுத்தினார். "தனித்தமிழில் பேசவும் எழுதவும் முயன்றால் செய்ய முடியாத செயலன்று; செய்வது தகுதியன்று என்பது நம் கருத்து" என்று

கூறுகிறார். இடையிடையே வடதிசைச் சொற்கள் கலந்து வருவது தமிழுக்கு இனிமைமேல் இனிமையும் பெருமைமேல் பெருமையும் கொடுப்பதாகிறது எனக் கொள்கையில் கவிழ்கிறார். இக்கருத்தினர் ஒரு சாரார். இன்னொரு சாராரோ, ஆங்கிலம் அகற்றப்பட வேண்டும் என்பதில் கொண்ட அழுத்தத்தைத் தனித்தமிழ்க் கொள்கையிற் காட்டவில்லை. ஆங்கில ஆட்சிக்கு அடிமைப்பட்டு உழன்ற மக்கள் விடுதலை பெற உழைத்த பாரதியார், தமிழர்கள் ஆங்கிலத்திலன்றித் தமிழிலேயே அனைத்தையும் பயில வேண்டு மென்றார். அவர் ஆங்கிலத்தைத் தமிழாக்க வேண்டுமென்றாரே தவிர, அது தனித் தமிழாய் இருக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டார் அல்லர். தமிழில் வடமொழி இரண்டறக் கலப்பதை அவர் கலப்பாகவே கருதவில்லை.

இச்சூழலில் தனித்தமிழ் இயக்கத்திற்கு வித்திட்டவர் மறைமலையடிகள் ஆவர். அவரே தொடக்கத்தில் வடசொற்கள் கலந்துவர எழுதியும் பேசியும் இருக்கிறார். பின்னர், அது வேண்டாதது, மொழியின் சிறப்பைச் சிதைப்பது என்பதை உணர்ந்து, தனித்தமிழை வலியுறுத்தத் தொடங்கினார். சுவாமி வேதாசலம் என வடமொழியில் அமைந்திருந்த தம் பெயரை மறைமலையடிகள் எனத் தமிழாக்கிக்கொண்டார். தாம் எழுதிய நூல்களை மறுபதிப்புச் செய்தபோது முன்னுள்ளவற்றில் இருந்த பிற மொழிச் சொற்களை நீக்கித் தூய தமிழாக்கினார். நூல்களில் பிற மொழிச் சொற்களை நீக்கும் கடப்பாட்டை 1916 முதல் கொண்ட அடிகளார், தம் கடிதங்களில் அதனை உறுதியாய் மேற்கொண்டது 1923 ஆம் ஆண்டுத் தொடக்க முதலேயாம். தூய தமிழை வளர்க்க விரும்பாத எந்தத் தமிழ்க் கூட்டத்திலும், அதனை நடத்துபவர் எத்துணைச் செல்வாக்கு மிக்கவராயினும் அல்லது வேண்டியவராயினும் கலந்துகொள்ள அடிகளார் மறுத்திருக்கிறார். தூய தமிழில் இல்லாத நூல்களுக்கு முன்னுரை தர முடியாமைக்கு வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

தனித்தமிழிலேயே பேசவும் எழுதவும் அடிகளார் உறுதி கொண்டதற்கு அவர் மகள் நீலாம்பிகை அம்மையார் தூண்டுகோலாய் இருந்தார் என்பர். "பெற்ற தாய்தனை....." எனும் வள்ளலார் பாட்டை ஒரு நாள் மனமுருகப் பாடிக்கொண்டிருந்த மறைமலையடிகளார், அப்பாட்டின் இரண்டாவது அடியாகிய 'உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்' என்பதனைப் பாடியபோது அருகிலிருந்த தம் மகள் நீலாம்பிகையை நோக்கி, "அம்மா! இந்தப்

பாட்டை இனிய தமிழில் பாடியுள்ள வள்ளலார், 'தேகம்' எனும் சமற்கிருதச் சொல்லை நீக்கி 'யாக்கை' எனும் தமிழ்ச் சொல்லை அமைத்துப் பாடியிருந்தால் இன்னும் சிறப்பாயிருந்திருக்கும்" என்று சொன்னாராம்! மேலும், வடமொழிச் சொற்களைச் சேர்ப்பதால் பல நல்ல தமிழ்ச்சொற்கள் வழக்கிழந்து போகின்றன என்று வருந்தியுமிருக்கிறார். "இது கேட்ட நாள் முதல் என் தந்தையாரும் யானும் தனித்தமிழிலேயே பேசுதற்கும் எழுதுதற்கும் உறுதி கொண்டோம்" என்று வரைகிறார், நீலாம்பிகை அம்மையார். இந்நிகழ்ச்சி 1916ஆம் ஆண்டு நிகழ்ந்தது. ஆயினும், அடிகளார்க்குத் தனித்தமிழில் பேசவும் எழுதவும் வேண்டும் என்ற எண்ணம் அதற்கு முன்னரே தோன்றியிருந்தது என்பதற்கு நூலாசிரியர் பல சான்றுகளைத் தந்துள்ளார். சற்றொப்ப 1897-லேயே தனித்தமிழ்ப் பற்று அடிகளாரிடம் குடிகொண்டது. முன்னரே மனத்தில் நிறைந்திருந்த எண்ணத்தை உறுதியுடன் நடைமுறைப்படுத்த நீலாம்பிகை அம்மையாரோடு நிகழ்ந்த உரையாடல் தூண்டு கோலாயிற்று எனலாம்.

தனித்தமிழ் இயக்கம் போலவே, ஒரு மொழி தன் தூய்மை கெடாது இயங்க வேண்டுமென்பதற்கான இயக்கங்கள் உலகெங்கும் தோன்றியுள்ளன என்பதை ஆசிரியர் விரிவாய்ச் சுட்டிக் காட்டுகிறார். இங்கிலாந்தில் தூய ஆங்கில இயக்கம் (Society for Pure English) 1913 இல் தொடங்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தைப் பேசும் அமெரிக்கர்கள் தம் இயல்புக்கேற்ப ஆங்கிலத்திலுள்ள வேற்று மொழிச்சொற்களை நீக்கிப் பயன்படுத்தி வருகின்றனர். வேற்று மொழிச் சொற்களைத் தேவை இல்லாமல் கையாளுவதை எதிர்த்துப் போராட வேண்டுமென்கிறார், இலெனின். பிரெஞ்சு நாட்டின் தலைவராயிருந்த ஏனாதி டீகால் தம் ஆட்சிக்காலத்தில் தனிப்பிரெஞ்சு இயக்கத்தைத் தொடங்கினார். பிரெஞ்சு மொழியில் பிற மொழியைக் கலப்போர்க்கு 100 பிராங்குகள் தண்டம் விதிக்கப்படும் என 1976இல் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது.

மக்கள் தொகுதி எக்குறை யாலே
மிக்க துன்பம் மேவு கின்றதோ
அக்குறை தீர்க்கும் ஆற்றல் வாய்ந்தோனைச்
சிக்கென என்று சீர்பெறல் இயற்கையாம்

என்பார், பாவேந்தர் பாரதிதாசன். அம்முறையில், பிற மொழிக் கலப்பால் தமிழின் சிறப்பும் பெருமையும் குன்றுகின்றன.

கொடுமை மிகுந்த வேளையில் அக்கொடுமையிருளை நீக்கும் எழுஞாயிறாய் மறைமலையடிகளார் தோன்றியது இயற்கையேயாம்!

அடிகளாரின் தனித்தமிழ் இயக்கத்தால் ஈர்ப்புண்டு தொண்டாற்றியோருள் குறிப்பிடத் தகுந்தவர்களை நூலாசிரியர் பெருமையுடன் சுட்டிக் காட்டியுள்ளார். தனித்தமிழ் இயக்கத்திற்கு முரணாயும் அறிஞர் சிலர் இருந்திருக்கின்றனர். தனித்தமிழை முற்றாய்க் கொள்ளாமலும், கலப்புத் தமிழை முற்றாய் ஏற்காமலும் 'நடுவழிமொழிக் கொள்கை'யைக் கடைப்பிடிப்பவர்களாய்ச் சிலர் இருந்திருக்கின்றனர்.

அரணாகவும் முரணாகவும் நடுவாகவும் நின்றவர்கள் இவர்கள் மட்டுமே என்று கொள்ளக்கூடாது என்றும், எடுத்துக்காட்டாய்ச் சுட்டப் பட்டவர்களே இவர்கள் என்றும் ஆசிரியர் மிகுந்த எச்சரிக்கையோடு கூறியிருக்கிறார்.

இன்று தனித்தமிழ் நிலவ வேண்டும் என்னும் தூய நோக்கோடு பல இதழ்கள் தொண்டாற்றி வருகின்றன. தனித்தமிழ்ப் படைப்புகளைப் பாவகையாலும் கட்டுரை வகையாலும் நூல் வகையாலும் இன்று வெளியிட்டு வரும் புலமைப் பெருமக்கள் எண்ணிறந்துளர். அத்தகு இதழ்கள், அறிஞர்கள் பெயர்களைச் சுட்டி நூலாசிரியர் பாராட்டி யிருக்கிறார்.

தனித்தமிழ் இயக்க வெற்றி

வேறுபட்டு நின்றோர் இருந்தபோதிலும் தனித்தமிழ் இயக்கம் பெரும் வலுவடைந்துள்ளது என்பதை மறுக்க இயலாது. பாவேந்தர் பாரதிதாசன் தொடக்க காலத்தில் வடமொழிச் சொற்கள் கலந்து எழுதியவர். மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கத்தால் கவரப்பட்ட அவர், பின்னர்த் தூய தமிழில் எழுதினார். அது மட்டுமன்று; "இன்றைக்கு முப்பதாண்டின் முன் தொடங்கியே தனித்தமிழில் நூல் எழுதிக் காட்டியும், தனித்தமிழே வேண்டும் என்னும் கருத்தை ஊட்டியும் வரும் நிறைதமிழ் ஆய்ந்தார் மறைமலையடிகளின் திருமுன் இதைப் படைக்கிறேன்" எனத் தம் குடும்ப விளக்கு நூலின் இரண்டாம் பகுதியில், 'திருமுன் படைத்தல்' என்ற தலைப்பிட்டு இவ்வாறு எழுதியுள்ளார். இதுமட்டுமன்று; அவருடைய மணிமேகலை வெண்பாவிலும் மறைமலையடிகளாரைப் பெருமைப்படுத்தியுள்ளார். மணிமேகலை

எடுக்க எடுக்கக் குறையாத உணவு நிறைந்த கலத்தை ஏந்திய வுலாய் 'உலக அறவி' எனும் மன்றத்தை அடைந்தாள். அவ்வுலக அறவியில் அவளிடம் உணவு பெறக் கூடியவர்கள் எழுப்பிய ஓசை எப்படி இருந்ததாம்? இது கடல் ஓசையோ, அண்ணல் மறைமலை யடிகளாரின் சொற்பெருக்குக் கேட்டவரால் ஏற்பட்ட ஒலியோ என்னும்படியாய் இருந்ததாம்.

அறவி அகத்தும் புறத்தும் இளைய
துறவி முகம்பார்த்துச் சூழ்ந்தார் – நிறைகுலி
ஆர்கலியோ அண்ணல் மறைமலைசொல் கேட்டாரால்
நேர்கலியோ என்னும் நிலம்.

மறைமலையடிகளாரின் தனித்தமிழ்ப் பேச்சு, பாவேந்தரை எந்த அளவுக்குக் கவர்ந்திருக்கிறது என்பதற்கு இப்பாடல் ஒரு சான்று.

தம்மால் தனித்தமிழில் எழுத, பேச முடியாவிட்டாலும் தமிழில் பிற மொழி கலப்பது தீமை பயப்பது, அதைத் தடுக்கவேண்டும் என்ற எண்ணத்தைத் தனித்தமிழ் இயக்கம் அறிஞர்கட்கு ஊட்டியுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள் 'தம்பிக்கு' என்று விளித்து, தாளில் எழுதிய மடல்களுள் ஒன்றில் உள்ளது உள்ளவாறே இங்குத் தரப்படுகிறது. அண்ணா எழுதுகிறார் :

"தம்பி! சினிமாக்களில் ஒரு முறையைக் கையாளுகிறார்கள்.

"அங்குக் கதைகட்கு ஏற்ற வகையில் புருவங்கள் தேவைப் படுகின்றன! குனித்த புருவம், கூட்டுப் புருவம், நெரிந்த புருவம், படர்ந்த புருவம், வில்லுப் புருவம் - இப்படிப் பலப்பல.

நல்ல பெண்மணியின் புருவம் வில்போல் வளைந்து இருக்கும்; இருக்கவேண்டும். காதகிக்குப் புருவம் அரவம் போல அச்சமூட்டுவதாய் அமைதல் வேண்டும்; அப்படி அங்கு ஒருமுறை.

எந்த ஏந்திழையிடம் இத்தனை புருவங்கள் கிடைக்க முடியும். எனவே, அங்கு முதலில் ஏந்திழையின் இயற்கைப் புருவத்தை எடுத்துவிடுகிறார்கள் - வழித்தெடுத்துவிடுகிறார்கள். இயற்கை பறிக்கப்பட்டான பிறகு, எழில்காட்டும் கலைஞன் தன் இச்சைக்கு ஏற்பப் புருவங்கள் அமைக்கிறான். 'காதளவு வளர்ந்த கண்ணினை என்னென்பேன், காமன்தன் கருப்புவில் போன்ற புருவத்தைக் கண்டேன், அதன் அழகை எவ்வாறு கூறுவேன்!' என்றெல்லாம் பிறகு திரைக்காதலன் பாடம் படிக்கிறான். வெள்ளைக் கோமான்கள் குதூகலம் அடைகிறார்கள். ஆனால்,

உண்மையில் இயற்கையாய் இருந்த புருவம் பறிபோய்விட்டது, இரவல் புருவம் பிறர் காணும்போது எழில் காட்டும் வகையில் அமைக்கப்படுகிறது.

தமிழ்மொழியிலும், தம்பி, அதற்கென்று இயற்கையாய் அமைந்துள்ள எழில் முறைகளைக் களைந்தெறிந்துவிட்டு, பிற மொழிச் சொற்களையும் முறைகளையும் கலந்து புதிய எழில் காட்டுகிறோம் என்று கூறுவாருளர்.

சினிமாக்களுக்குச் சிதைத்தலும் சேர்த்தலும், கூட்டலும் குறைத்தலும், மறைத்தலும் மிகுத்தளித்தலும் தேவைப் படுகின்றன; அந்த உலகத்து இலக்கணம் அது; குறை கூறுவதற்கில்லை. ஆனால், மொழித்துறையில் இந்த முறையைப் புகுத்தி, உள்ள எழிலை உருக்குலையச் செய்து, பாழ்படுத்துவது அடாத செயலாகும். ஆனால் 'மேதைகள்' பலர், பிறமொழிச் சேர்க்கையும், பிற முறைகளின் சேர்க்கையும் தமிழ்மொழியை வளமாக்கும் என்று காரணம் காட்டி, இந்தத் தீய செயலைச் செய்து வருகின்றனர்.

இதனை அறிந்து தடுத்திடவேண்டும் என்று எண்ணம் கொண்டு பணியாற்றும் நம்மாலேயேகூட (சற்று அதிகமாகவே என்னால்!) பிற மொழிச் சேர்க்கையையும் பிற முறைகளின் சேர்க்கையையும் நீக்கிப் பேசவும் எழுதவும் முடியாமலாக்கிவிட் டிருக்கின்றன. ஏனெனில், நாம், தூய தனித்தமிழ் சித்திரவதை செய்யப்பட்டுப் பிற மொழியும் பிற முறையும் கலந்து, பேச்சும் எழுத்தும் 'மணிப்பிரவாளம்' என்ற வடிவுகொண்டு, தமிழும் வடமொழியும் குழைத்து வழங்கப்பட்ட நாட்களில் பயின்றவர்கள். எனினும், புலவர் பெருமக்களின் அறிவுரை கேட்டதால், இந்தக் 'கலவை' தீது பயப்பது என்று தெரிந்து, தமிழ் மொழிக்கு மீண்டும் தனியானதோர் ஏற்றம் தேவை என்று தூய நோக்குடன் பணி யாற்றி வருகிறோம். நம்மாலே முற்றிலும் 'தனித்தமிழ்' எழிலைக் காட்ட இயலவில்லை.

நானே, பல தடவைகளில் பேசியான பிறகும், எழுதியான பிறகும், இன்னின்ன பிற சொற்களுக்கு இன்னின்ன தமிழ்ச் சொற்களைக் கையாண்டிருக்கலாமே, தவறிவிட்டோமே என்று எண்ணி வருத்தமுறுவது உண்டு. எனினும், தம்பி, எங்கள்மூலம் நீ இவ்வளவுதான் பெறலாம் - அதிகம் எதிர்பார்க்காதே - ஆனால், உன்னாலே முடியும். இந்தக் குறைகளையும் களைய - நீ உன்னிடம் நிச்சயமாய் அதிகம் எதிர்பார்க்கிறது!....

'தமிழ்' இனிமை பெற 'இரவல்' எற்றுக்குப் பெறவேண்டும்? புள்ளிக் கலாபம் படைத்த மயிலுக்கு, வான்கோழிச் சிறகாலான தோகை தர வேண்டுமா? கிளி அழகு பெற அதற்குப் பச்சை வண்ணம் பூச வேண்டுமா?"

அண்ணாவின் இந்தக் கேள்விகளை எண்ணிப்பார்க்கவும், உன்னாலே முடியும் தம்பி என்கிறாரே, அதனைச் செயற்படுத்தவும் நம்மைத் தூண்டுகிற நூலே இவ்வரிய நூல்.

இலக்கியச் செம்மல் இளங்குமரனார்

தமிழனே, தனித்தமிழில் எழுதுவது முடியாத செயல் - வேண்டாத ஒன்று என வீணே பேசித் திரியும் இக்காலத்தில், அவர்கட்குத் தக்க மறுமொழி கூறும் முறையிலும், தமிழன் தனித் தமிழிலேயே எழுத, பேச வேண்டும் என்னும் நிலையை உருவாக்கவும் புலவர் பெருந்தகை இளங்குமரனார், 'தனித்தமிழ் இயக்கம்' என்னும் இந்நூலை ஆக்கித் தந்துள்ளார். இலக்கியச் செம்மல் இளங்குமரனார் நிறை புலமையாளர்; சொல்லாராய்ச்சி வல்லுநர். இளங்குமரனார் அவர்கள் தனித்தமிழ் வளத்தில் மறைமலையடிகளாராயும், சொல்லாராய்ச்சித் திறத்தில் பாவாணராயும் விளங்குவதால் அந்தப் பெரும் சான்றோர் இருவரும் இணைந்த ஓரறிஞராய் இன்று திகழ்ந்து வருகிறார். "இருப்பதை இழப்பது எளிது; இழந்ததை மீட்பதும், அதனை வழக்குக்குக் கொண்டுவருதலும் அருமை." அந்த அரிய செயலைச் செய்ய நம்மைத் தனித்தமிழ் இயக்கத்தின்பால் ஆற்றுபடுத்துகிறார், புலவர் பெருந்தகை அவர்கள். தமிழின் தூய்மையைக் காக்கவும், எதிர்ப்பைச் சாய்க்கவுமான போர்வாளாய் இந்நூலை அவர் நமக்கு ஆக்கித் தந்திருக்கிறார்.

மணிவாசக மெய்யப்பர்

மணிவாசகர் பதிப்பகம் அரிய பல இலக்கிய நூல்களையும் ஆராய்ச்சி நூல்களையும் வெளியிட்டுத் தமிழுக்கு அணி சேர்த்து வருகிறது. தேனீ, நறுமண மலர்களை நாடிச் சென்று, இனிய தேனைக் கொண்டுவந்து சேர்ப்பதுபோல, பதிப்பக உரிமையாளர் முனைவர் மெய்யப்பன் அவர்கள், அறிஞர்களை நாடிச் சென்று, அவர்தம் எழுத்துரைகளைப் பெற்று, மிகச்சிறந்த முறையில் வெளியிட்டு வருகிறார்கள். மணிவாசகருடைய திருவாசகத்தைப் படிக்கும்போது தாம் அடையும் இன்பத்தை வள்ளலார்,

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்(து),என்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

என உளமுருகிப் பாடியுள்ளார். வள்ளலார் சொல்லுகிற 'உவட்டாத இனிமை'யை மணிவாசகர் பதிப்பக நூல்கள் தருகின்றன என்று சொல்வது மெய்யுரை. தமிழில் தோன்றும் ஒவ்வொரு புதிய துறைக்கும் முதல் நூலை வெளியிடுகின்ற பெருமை மணிவாசகர் பதிப்பகத்திற்கு உரியது. இந்நிலையில் 'தனித்தமிழ் இயக்கம்' பற்றிய முழுமையான கருத்துகள் அடங்கிய முதல் நூலாய் இந்நூல் வெளிவந்துள்ளது.

அரிய செய்திகளை முயன்று தேடித்தந்துள்ள நூலாசிரியரையும், மிகச்சிறந்த முறையில் நூலை வெளியிட்டுள்ள பதிப்பகத்தாரையும் தமிழுலகம் போற்றி வணங்கக் கடமைப் பட்டுள்ளது.

நூல் ஆக்கம்	திருக்குறள் செம்மல் புலவர் இரா.இளங்குமரன்
வகைமை	கட்டுரை
வெளியீடு	மணிவாசகர் பதிப்பகம், சென்னை. (1991)

3

செந்தமிழும் சித்த மருத்துவமும்

புலவர் பசுமலையரசு மிகச்சிறந்த கவிஞர்; உயர்ந்த உரைநடையாளர்; அரிய ஆராய்ச்சித் திறன் நிரம்பியவர்; பன்மொழி வல்லுநர்; தமிழிலிருந்து கன்னடத்திற்கும், கன்னடத்திலிருந்து தமிழுக்கும் பற்பல நூல்களை மொழியாக்கம் செய்துள்ளவர். இத்தகு பெருமைகளுக்குரியவர், 'செந்தமிழும் சித்த மருத்துவமும்' எனும் தலைப்பில் செய்திச் செறிவும் அறிவு நலமும் மிக்க இவ்வருமையான நூலை ஆக்கித் தந்துள்ளார்.

இந்நூலைப் படித்ததும் அவரது கொஞ்சு தமிழுக்கு ஒரு பாராட்டு; அஃகி அகன்ற ஆராய்ச்சித் திறனுக்கு ஒரு பாராட்டு; பயனுள்ள மருத்துவக் குறிப்புகளுக்கு ஒரு பாராட்டு; பரந்துபட்ட அவர் நூற்படிப்புக்கு ஒரு பாராட்டு; கற்போர் உளங்கொளச் செய்திகளை எடுத்துச் சொல்லும் திறமைக்கு ஒரு பாராட்டு என எண்ணற்ற பாராட்டுகளை அடுக்கிக்கொண்டே செல்லத் தோன்றுகிறது. இஃது உண்மை; வெறும் புகழ்ச்சியன்று.

சித்தர் எவர்?

சித்தர் மருத்துவம், சித்த மருத்துவம். சித்தர் என்போர் யார்? 'சித்தம்' என்னும் சொல் அறிவையும் உணர்த்தும். இச்சொல்லிலிருந்து பிறந்தது சித்தி. ஆதலின், சித்தத்தை அடக்கும் வல்லமை பெற்றவர் சித்தர் எனப்பட்டனர் என்று சொல்வர். 'சித்து' என்னும் சொல், ஒன்றை அடைதல் என்னும் பொருளைக் குறிப்பது. இறைவன் அருள் கைவரப்பெற்றவர் சித்தர் என்றலும் உண்டு. யோக நெறியில் இறைவனைச் சித்தத்தால் சிந்தித்து, உணர்ந்து, கண்டு, சித்தம் தெளிந்த ஞானிகளைச் சித்தர்கள் எனத் தமிழ்ப் பெருமக்கள் வழங்கினர் என்பார், அறிஞர் ரெ.முத்துக்கணேசன். வியத்தகு செயல்களைச் செய்தல் 'சித்து' எனப்படும். அத்தகு செயல்களைச் செய்பவர்களைச் சித்தர்கள் என்று கூறுதலும் உண்டு. எனவே, சித்தர்கள் என்போர் சித்தத்தை அடக்கியவர்கள்; சித்தி பெற்றவர்கள்; சித்துடையவர்கள் எனக் கொள்கிறோம்.

"சித்தர் சிவத்தை நினைந்து நினைந்து சிவம் ஆனவர். ஆதலால், நரை திரை மூப்பு சாக்காடு முதலியவற்றைப் பெறுவதில்லை. அவர் என்றும் ஒரு பெற்றியராய் சிவந்த மேனியராய் - என்றும் இளைஞராய் - அழகராய் வாழ்பவர்" என்கிறார், திரு.வி.க.

"சித்தர் என்பார் சித்தத்தை அடக்க வல்லவர்; சித்துகளைச் செய்ய வல்லவர்; யான், எனது என்ற அழுக்கறுத்து முற்றும் துறந்தவர்; புலன் இறையுணர்வுடன் ஒன்றிடப் புற உணர்வு செத்துக் கிடப்பவர்; எல்லா உயிரிடத்தும் இரக்கம் பூண்டு அவ்வுயிர்க்கு நன்மையே செய்ய வேண்டும் என்னும் அன்புள்ளம் கொண்டவர்" எனச் சித்தர்களுக்கு ஐந்து தொகுதிகளைக் கொண்ட வரையறையைச் செய்கிறார், இந்நூலாசிரியர் பசுமலையரசு.

சித்தர் பேராற்றல் பெற்றவர். மலையைத் துரும்பாக்குவது; துரும்பை மலையாக்குவது; ஒன்றுமே இல்லாமல் செய்வது; எங்கும் செல்வது; வேண்டுவனவற்றை அடைவது; நினைத்ததைப் படைப்பது; கூடு விட்டுக் கூடு பாய்வது; எவற்றையும் தன்வய மாக்குவது என எட்டு வகையான சித்திகளைப் பெற்றிருந்தனர். இவற்றை அட்டமா சித்தி என்பர்.

சித்து ஆற்றலைப்பற்றித் தாயுமான அடிகள்,

கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்;
கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்;
ஒருசிங்கம் முதுகின்மேற் கொள்ளலாம்;
கட்செவி எடுத்தாட் டலாம்;
வேறொருவர் காணாமல் உலகத்து உலாவலாம்;
விண்ணவரை ஏவல் கொளலாம்;
சந்ததமும் இளமையொடு இருக்கலாம்;
மற்றொரு சரீரத்தினும் புகுதலாம்;
சலம்மேல் நடக்கலாம்;
கனல்மேல் இருக்கலாம்;
தன்னிகரில் சித்தி பெறலாம்.

எனத் திடமாய்ச் சொல்லுகிறார்.

பதினெண் சித்தர்

சித்தர்களுள் சிறந்தவர் பதினெட்டுப்பேர் என்று கூறுவது ஒரு வழக்கு. அப்பதினெட்டுப்பேர் எவரெவர் என்பதில் ஒருமித்த கருத்து இல்லை. ஆராய்ச்சியாளர்கள் வெவ்வேறு பட்டியல்களைத் தந்துள்ளனர்; என்றாலும், அகத்தியர், திருமூலர், போகர் போன்ற சிலர் எல்லாப் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளனர்.

கபிலர், தொல்காப்பியர், திருவள்ளுவர் ஆகியோரையும் சித்தர்களாய்க் கூறுவதுண்டு. தாயுமானவர், பட்டினத்தடிகள், வடலூர் வள்ளலார் ஆகியோர் சிறந்த சித்தர்கள் எனப் போற்றப்பட்டு வருகின்றனர்.

சித்தர்களுள் சிறப்புடையோர் பதினெட்டுப்பேர் எனச் சொன்னாலும் தொன்றுதொட்டு இன்றுவரை எண்ணிறந்தவர் தோன்றி வாழ்ந்திருக்கின்றனர். 'சித்தர்கள் அநேகம் கோடி' என்று குறிப்பிடுவார், சட்டை முனிவர்.

கிரேதா யுகத்தில் இரண்டு இலட்சம், திரேதா யுகத்தில் ஓர் இலட்சம், துவாபர யுகத்தில் ஐம்பதாயிரம், கலி யுகத்தில் இருபத்தையாயிரம், ஆக மொத்தம் 3,75,000 சித்தர்கள் தோன்றினர் என்று தேரையர் கூறுகின்றார்.

இவ்வாறு பல வகையாய்ச் சொல்லப்பட்டாலும் சித்தர்கள் வழிவழியாய்த் தோன்றி இந்நாட்டில் வாழ்ந்து வந்திருக்கின்றனர்; இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

பாரதியார் தம்மை சித்தர் என்று சொல்லிக் கொள்கிறார்.

எனக்குமுன்னே சித்தர்பலர் இருந்தா ரப்பா
யானும்வந்தேன் ஒருசித்தன் இந்த நாட்டில்

என்பது அவர் வாக்கு.

இந்நூலாசிரியர் அவர்களும் சித்தரே.

பாடினேன் சித்தனாய்ப் பகுமலை மருந்தே

எனத் தம்மை சித்தராய் இவர் பாடியிருக்கக் காணலாம்.

திருவாவினன்குடியில் வீற்றிருக்கும் முருகனைக் காணச் சிவன், திருமால், கந்தருவர் என வருகின்ற கூட்டத்தில் 'ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயரும்' இருந்ததாய் நக்கீரர் திரு முருகாற்றுப்படையில் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்பதிற்று இரட்டி - பதினெட்டு; உயர்நிலை பெறீஇயர் - உயர்ந்த நிலை பெற்றவர்கள்; அவர்கள் சித்தர்கள் எனப் பொருள் கொண்டு, சித்தர் பதினெண்மர் எனும் தொகையை முதலில் கூறியவர் நக்கீரரே என, பழனி இளங்கும்பன் கூறுகிறார். உயர்நிலை பெறீஇயர் என்பது சித்தர்கள் அட்டமாசித்தி பெற்று உயர்ந்திருந்த நிலையையே குறிப்பிடுகிறது என்றும் அவர் கூறுகிறார். சித்தர்கள் மிகப் பழங்காலத்தவர்; மிகப் பெருமை பெற்றவர் என்றுணர இவ்விளக்கம் இடந்தருகிறது; என்றாலும், இஃது ஆய்வுக்குரியது. உரையாசிரியர்கள் பதினெட்டு தேவகணங்கள் எனக் கூறி

அதற்கான பட்டியலும் தந்துள்ளனர். இப்பதினெண்மரை இளங்கம்பன் கூறுவதுபோலச் சித்தர்கள் எனவும் எண்ணிப் பார்க்கலாம்.

சித்தர் எங்கும் இருப்பர்

சித்தர் எங்கும் இருப்பவர்; எப்போதும் இருப்பவர். "சித்தர் எல்லாக் காலங்களிலும் எல்லா நாடுகளிலும் வசிக்கலாம். இன்ன காலத்தில், இன்ன நாட்டில் இருக்க வேண்டுமென்ற நியதி இல்லை. மேலை கீழை நாடுகளில் தோன்றிய எந்த ஆன்மிக நெறி நின்றவனும், சமயம், சடங்கு முதலியவற்றுக்குக் கட்டுப் படாதவனாயிருப்பானாயின், அன்பையும் அருளையும் போற்று பவனாய் இருப்பானாயின், அவன் சித்தனாய்க் கருதப்படுவான். இச்சித்துநிலை அல்லது அனுபவம் எந்த நாட்டைச் சார்ந்த சித்தனுக்கும் ஒன்றாகவே இருக்கும்" என்கிறார், ஆய்வாளர் இரா.மாணிக்கவாசகம்.

பதினெண் சித்தர் பட்டியலில் தன்வந்திரி, வான்மீகர் போன்ற இந்திய வட மாநிலத்தவரும், போகர், புலிப்பாணி போன்ற சீனநாட்டவரும் இடம் பெற்றுள்ளனர். போகர் சீன நாட்டிலிருந்து வந்த புத்த மத மெய்த்துறவி என்று சொல்லப்படுகிறது. இவர் பாடலிபுரம் கயா முதலிய இடங்களைக் கண்டு, சோழ நாடு, பாண்டிய நாடு ஆகிய பல்வேறு நாடுகளை அடைந்து, ஆங்காங்கு சித்தர் கூட்டத்துடன் சேர்ந்து, கற்க வேண்டியவற்றைக் கற்று, கற்பிக்க வேண்டியவற்றைக் கற்பித்து, தமிழகச் சீடர் சிலருடன் சீனம் சென்றனர் என்பர். கோரக்கர் எனும் தமிழ்நாட்டுச் சித்தர் சீனம் சென்று போகரைக் கண்டு வந்ததாயும் கூறுவர்.

எல்லா மத, இனத்தவர்களிலும் சித்தர்கள் இருந்துள்ளனர். பௌத்த, சமண சமய சித்தர்கள் 'சாரணர்' என்று வழங்கப் பட்டனர்.

நிலத்தில் குளித்து நெடுவிசும்பு ஏறிச்
சலத்தில் திரியும்ஓர் சாரணன்

'நிலத்தில் புகுந்தும், நீண்ட வானத்தில் ஏறியும், நீரின்மீது திரிந்தும் செல்லுகின்ற சாரணர்' எனப் பௌத்த சாரணர்களை மணிமேகலைக் காப்பியம் குறிப்பிடுகிறது. 'சித்தி' எனும் சொல்லைச் சமணர்கள் 'இருத்தி' எனக் கூறுகின்றனர்.

நீரினில் பூவில் வானில் நின்றுழி ஒதுங்கு கின்ற
சாரணர் எண்மர் ஆவர் சமணரில் இருத்தி பெற்றோர்

எனச் சூடாமணி நிகண்டு கூறுகிறது.

இசுலாமிய மெய்ஞ்ஞானிகளான சூபிகளும் சித்தர்களே! மஸ்தான் சாயிபு, பீர் முகம்மது போன்ற மெய்ஞ்ஞானியர் சித்தர்களாய்க் கருதப்படுகின்றனர்.

சித்தர் சொல்வழக்கு

சித்தர் என்னும் சொல் வழக்கு சங்க இலக்கியங்களில் இல்லை; சைவத் திருமுறைகளில்தாம் முதன்முதலில் இடம் பெற்றுள்ளது. திருஞானசம்பந்தர்,

பத்தரொடு சித்தர் பயில்கின்ற பழுவூர்

என்றும், சுந்தரர்,

பத்தர் சித்தர் பலர்ஏத்தும் பரமன்

என்றும், மாணிக்கவாசகர்,

திண்திறல் சித்தர்கள்

என்றும் குறித்துள்ளனர்.

திருமூலருடைய, 'திருமந்திரமாலை' சித்தர்கள்பற்றி விரிவாய்க் கூறுகிறது. பதினெண் சித்தர்களுள் சிறந்தவரான திருமூலர் வரலாற்றைச் சேக்கிழார் தம் பெரிய புராணத்துள் கூறியுள்ளார். தாயுமான சுவாமிகள் சித்தர் கூட்டத்தாரின் சிறப்பினை விளக்கி, 'சித்தர் கணம்' எனும் தலைப்பில் பத்துப் பாடல்கள் எழுதியுள்ளார். இறைவன், 'எல்லாம் வல்ல சித்தன்' என்று வழங்கப்படுகிறார். பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணத்தில் இறைவன் எல்லாம் வல்ல சித்தராய்த் தோன்றி நிகழ்த்திய சித்தாடல்கள் கூறப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் – அறிவர்

திருமுறைகள் காலத்தில்தான் 'சித்தர்' என்ற சொல் வழக்கிற்கு வந்த போதிலும், தமிழ் வரலாறு தோன்றியநாள் தொட்டுச் சித்தர்கள் இருந்து வந்துள்ளனர் என்பதை ஆராய்ச்சியாளர்கள் விளக்குகின்றனர்.

சங்க இலக்கியங்கள் குறிப்பிடும், 'அறிவர்' எனும் சொல் பிற்காலத்தில் சித்தர் என்ற சொல் குறித்த பொருளையே தாங்கி நிற்கிறது என்பார், அறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை.

"தொல்காப்பியப் புறத்திணையியலில் புறத்திணை ஏழனுள் ஒன்றான வாகைத்திணையின் சிறப்பிலக்கணம் கூறும் பகுதியில் உள்ள ஒரு நூற்பாவில்,

மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்

என்னும் தொடர்கள் இடம் பெற்றுள்ளன. உரையாசிரியர்களின் உரைகளால் 'அறிஞரும் சித்தரும் ஒருவரே' என்பது விளங்குகிறது எனத் தக்க சான்றுடன் கூறுகிறார், பேராசிரியர் இரா. செல்வக்கணபதி.

புறநானூறு – அவிர்சடை முனிவர்

நிலமிசை வாழ்நர் அலமரல் தீர
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
கால்உண வாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவர்

எனும் புறநானூற்றுப்பாடல் அடிகளில் உள்ள 'அவிர்சடை முனிவர்' என்ற தொடர், அட்டமா சித்திகள் பெற்று, காற்றையே உணவாய்க் கொண்டு, வான்வழியே செல்லும் அளப்பரிய ஆற்றல் பெற்றிருந்த சித்தர்களையே குறிக்கிறது எனக் கருத இடமுண்டு' எனவும் செல்வக்கணபதி குறிப்பிட்டுள்ளார்.

குறுந்தொகையில் ஒருபாடல் சித்தர் பற்றிக் குறிப்பதாய் உள்ளது.

நிலந்தொட்டுப் புகாஅர்; வானம் ஏறார்;
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்;
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் உளரோ,நங் காத லோரே (குறுந். 130)

என்பது பாடல். தலைவன் பிரிந்திருக்கும்போது வருந்திய தலைவியை நோக்கி, 'தலைவர் இவ்வுலகில் எங்கேனும் ஓரிடத்தில் இருப்பார்; அவரைத் தேடித்தருவேன்' எனத் தோழி கூறும் பாடல் இது.

"தோழி! நம் தலைவர் (சித்தி பெற்றவர்போல்) பூமியைத் தோண்டி உள்ளே புகாஅர்; ஆகாயத்தின்கண் ஏறார்; கடலின்மேல் காலால் நடந்து சென்றிருக்கமாட்டார். நாடுதோறும், ஊர்தோறும் தேடினால் அகப்படாமல் போகார்" என்பது இப் பாடலின் கருத்து.

சித்த மருத்துவம்

பண்டுதொட்டே தமிழர்கள் மருத்துவக்கலையில் சிறந்து விளங்கினர். மருந்துப்பொருள்கள் பெயரில் நூல்கள் எழுதியிருப்பது தமிழரின் மருத்துவ அறிவினைப் புலப்படுத்தும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சிறுபஞ்சமூலம், திரிகடுகம், ஏலாதி எனும் மூன்றும் மருந்துப்பெயர் கொண்டவை.

கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணை வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், நெருஞ்சி வேர் ஆகியன சிறுபஞ்சமூலம் எனப்படுகின்றன. சுக்கு, மிளகு, திப்பிலி என்பன திரிகடுகம். ஏலம், இலவங்கம், தக்கோலம், மிளகு, திப்பிலி, சுக்கு என்பன ஏலாதி எனப்படுகின்றன.

தலைசிறந்த சித்த மருத்துவத்தைத் தோற்றுவித்தவர்கள் சித்தர்தாம். சித்தர் மருத்துவம் என்பதே சித்த மருத்துவம் என்றாயிற்று. இதனை இப்போது தமிழ் மருத்துவம், நாட்டு வைத்தியம் என்னும் பெயர்களில் குறிப்பிடுகின்றனர். 'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு' என வள்ளுவர் கூறுவதிலிருந்து அவர் இயற்கை மருத்துவத்தைப் பெரிதும் ஆதரித்தார் என அறியலாம். இயற்கையில் கிட்டும் மரம், செடி, கொடி ஆகியவற்றின் வேர், பட்டை, இலை, பூ, காய், கனி, கொட்டை முதலிய அனைத்தையும் பயன்படுத்தி நோய் தீர்க்கும் முறையை அறிந்தவர் சித்தர்! சித்த மருத்துவமே சிறந்த மருத்துவம் எனக் காட்டவே புலவர் பசுமலையரசு இந்நூலை எழுதியளித்திருக்கிறார்.

உலகில் முதன் முதலில் தோன்றிய நிலம், தமிழ் நிலம்; முதலில் தோன்றிய மக்கள், தமிழர்கள்; முதலில் தோன்றிய மொழி, செந்தமிழ்! மக்கள் தோன்றியபோதே மருத்துவமும் தோன்றியிருக்க வேண்டும்! அஃது அவர்கள் பயின்ற மொழியில்தான் இருந்திருக்க வேண்டும். எனவே, உலகில் முதன் முதலில் தோன்றிய மருத்துவம் சித்த மருத்துவமே! அது தோன்றிய இடம் தமிழ் நாடே! அது வளர்ந்து பயன் விளைத்தது தமிழ் மொழியிலேயே என்பதை விளக்கவே, 'செந்தமிழும் சித்த மருத்துவமும்' எனும் இவ்வருமையான நூல் வெளிவந்திருக்கிறது. நூலுள் பத்துத் தலைப்புகளுள் ஆசிரியர் முத்தான கருத்துகளைக் கொத்தான சான்றுகளுடன் தமிழர்க்குச் சொத்தாகத் தந்திருக்கிறார்.

தமிழுக்கு எத்தனையோ அடைமொழிகள் இருப்பினும் 'செந்தமிழ்' எனும் அடைமொழியைத் தொல்காப்பியர் காலம்முதல் இன்றுவரை ஆண்டுவந்துள்ளனர். அச்செந்தமிழின் மருத்துவம் சித்த மருத்துவம். "நாகரிகம் அடைந்த முதல் இனம் தமிழினம் என்றும், மொழி செந்தமிழ் என்றும் நிறுவி, செந்தமிழ் வழக்கு என்று முதல் இருக்கிறது என்பதை ஆராய்ந்து, அச்செந்தமிழ் வழக்கிலுற்ற காலம்முதல் சித்த மருத்துவமும் வழக்கிலுற்றது என நிறுவிட முனைந்துள்ளேன்" என இந்நூல் எழுந்ததற்கான காரணத்தை ஆசிரியரே கூறியுள்ளார். (பக். 23)

தமிழர் இயற்கையோடியைந்த வாழ்க்கையுடையவர். நிலத்தை இயற்கை அமைப்பிற்கேற்பப் பிரித்துக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என அவ்வப்பகுதிகளிலிருந்த சிறந்த மலர்கள் கொண்டே பெயரிட்டிருக்கின்றனர். இலை, தழை, செடி, கொடி, பூ, காய், கனி ஆகியவற்றின் தன்மைகளை நன்குணர்ந்து, அவற்றின் நோய் தீர்க்கும் ஆற்றலை அறிந்து, அவை கொண்டே மருந்துகள் செய்துள்ளனர். இன்று பல இலட்சம் செலவு செய்து மேனாட்டு மருத்துவ முறையினில் நீக்குகின்ற பிணியை, நம் மலைகளிலும் காடுகளிலும் முளைத்துக் கிடக்கும் பச்சிலை களைக் கொண்டே போக்கியிருக்கின்றனர், நம் சித்த மருத்து வர்கள். 'தமிழ் மண்ணில் செடி கொடிகள் என்று தோன்றினவோ அப்போதே தமிழ் (சித்த) மருத்துவமும் தோன்றிவிட்டது' என்பார், முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்.

"சித்தர்கள் அக மருந்து 32, புற மருந்து 32 எனக் கண்டு அவற்றைக்கொண்டு மனித உடல்களில் தோன்றும் 4448 நோய்களுக்கு மட்டுமல்லாமல் விலங்குகளுக்கும்கூட மருத்துவம் கண்டிருக்கிறார்கள்" என்கிறார், பசுமலையரசு (பக். 44).

இந்த 4448 நோய்களுள் தலையில் உண்டாகும் நோய்கள் மட்டும் 1008 என தலைநோய் மருத்துவ நூலில் உள்ள ஒரு பாடலில் நாக முனிவர் கூறுவதாயும் சொல்லுகிறார்.

சித்த மருத்துவ நூல்கள் அருகியதேன்?

தமிழில் சித்த மருத்துவ நூல்கள் பல இருந்திருக்கின்றன. மருத்துவ நூல்கள் எழுதிய சித்தர்களுள் தலையாயவர், அகத்தியர். தமிழ் இலக்கண நூல் எழுதிய அகத்தியரும், மருத்துவ நூல் எழுதிய அகத்தியரும் ஒருவரா, வெவ்வேறானவரா என்பது விளங்கவில்லை.

"சங்க நூல்களிலும் சங்கமருவிய நூல்களிலும் பல மருத்துவக் குறிப்புகள் வருகின்றனவே! அவ்வாறாயின் மருத்துவத்துக்கென்றே எழுதப்பட்ட மருத்துவ நூல்கள் இருந்திருக்க வேண்டுமன்றோ? அவை என்ன ஆயின?" என்ற வினாக்களை எழுப்பி, பசுமலையரசு மறுமொழி காண முயன்றிருக்கிறார்.

தமிழில் சங்ககாலத்தில் எழுதப்பட்ட சித்த மருத்துவம் வடமொழியில் பெயர்க்கப்பட்டு ஆயுர்வேதம் என்ற பெயரையும் பெற்றுக்கொண்டது. வடமொழியாளர் சமயம், மருத்துவம், சோதிடம் முதலாய தமிழ் நூல்களைத் தங்கள் மொழியில்

பெயர்த்துக்கொண்டு மூலத்தை அழித்துவிட்டனர். அதனால் வடமொழி நூல்களின் துணைகொண்டே நம்முடைய பண்டைய அறிவுச் செல்வத்தை அறிய வேண்டிய இழிநிலையில் இன்று நாம் உள்ளோம்.

சித்த மருத்துவச் சுவடிகள் பல மக்களின் அறியாமை யினால் அனலுக்கும் புனலுக்கும் கறையான்களுக்கும் இரையாயின.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலிருந்து ஏராளமான மருத்துவச்சுவடிகளை வெளிநாட்டினர் எடுத்துச் சென்று அவற்றிலிருந்த மருத்துவ முறையைத் தமதாக்கிக்கொண்டனர். மருத்துவ முறை தெரிந்தபோதும் அதற்கான மூலிகைகள் அவர்கட்குக் கிடைக்காமையால்தான் தமிழ் நாட்டு மூலிகைகளைப் பெறுவதில் அயல் நாட்டினர் பெரும் அக்கறை கொண்டுள்ளனர்.

சித்தர்கள் மருந்து முறைகளை எல்லோரும் அறியும்படியாய் எழுதாமல் குறியீட்டு மொழியில் எழுதிவைத்திருப்பதால், கிடைக்கும் சுவடிகளையும் முழுமையாய்ப் பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை. குறியீட்டு மொழி, செய்தியை அறிவதில் எவ்வாறு குறுக்கே நிற்கிறது என்பதை முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. சுவையாய் விளக்குவார். 'இருகுரங்கு கைபிழிந்து சாறெடுத்து' என்பது குறியீட்டு மொழி. இதற்கு இரண்டு குரங்குகளின் கைகளை ஒடித்துச் சாறு பிழிவது என்று பொருள் கொள்வதா? இல்லை. ஒரு வகைக் குரங்கு தமிழில் 'முசு' என்று வழங்கப்பட்டது. 'மைபட்டன்ன மாமுக முசுக்கலை' எனக் குறுந்தொகைப் பாடலடி குரங்கினை முசு எனக் குறிப்பதைக் காண்கிறோம். இரு குரங்கு என்பதை 'குரங்கு குரங்கு' என்றெழுத வேண்டும். குரங்கு உள்ள இடத்தில் 'முசு' என்று போட்டால் 'முசுமுசு' என்றாகிறது. அதனோடு 'கை' சேர்க்க முசுமுசுக்கை கிடைக்கிறது. முசுமுசுக்கை என நேரடியாய் எழுதாது 'இரு குரங்கு கை' என்று எழுதி, பின் வருவோர் அவர்கள் எழுதியிருப்பதைப் படித்துப் பொருள் கொள்ள முடியாதும் செய்துவிட்டனர். இத்தகைய இடர்ப் பாடுகளால் சித்த மருத்துவ நூல்கள் அருகிப்போயின.

சங்க இலக்கியங்களில் சித்த மருத்துவம்

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தமிழ் மருத்துவ மாகிய சித்த மருத்துவத்தைப் பசுமலையரசு விளக்க முற்படுகிறார்.

''சங்க இலக்கியங்களில் சித்த மருத்துவம் இடம் பெற்றுள்ளதைத் தக்க எடுத்துக்காட்டுகளுடன் காட்டுகிறார்.

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்

எனும் தொல்காப்பியச் சூத்திர அடிகளுக்கு உரை கூறுகையில், 'வேம்பும் கடுவும் முதலில் சுசந்தாலும் பிறகு நலம் பயப்பதுபோல முதலில் கடுமையாய்த் தோன்றினாலும் பின்னால் நன்மை பயக்கும் அறிவுரையே வாயுறை வாழ்த்து' எனச் சொல்லப் பட்டுள்ளது. வாயுறை என்பது வாயினால் சொல்லப்படும் மருந்து. 'வாயுறை என்பது மருந்தாகலான் வேம்பும் கடுவும் போல்' என்பது உரையாசிரியர் விளக்கம். இதில் வேம்பு, நஞ்சு என்னும் இரண்டும் மருந்துப்பொருள்கள். முதல் மூலிகையாய் நமக்கு வேம்பு கிடைக்கிறது.

சங்க இலக்கியங்கள்வாயிலாய் உடலுக்கு ஏற்படும் துன்பத்தைப் பிணி என்றும், உள்ளத்திற்கு ஏற்படும் துன்பத்தை நோய் என்றும் அறிய முடிகிறது எனும் தெளிவு நிறைந்த, புதியதொரு கருத்தினைப் பசுமலையரசு செப்பியுள்ள திறம் வியக்கத்தக்கது.

பிணிக்கு மருந்து பிறமன்; அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து

என்னும் திருக்குறள் இக்கருத்தினை நன்கு தெளிவுறுத்து கிறது என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

சங்கமருவிய காலத்தில் திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி எனும் நூல்கள் மருத்துவப் பெயர்களைத் தாங்கியிருப்பதைச் சுட்டிக் காட்டி அவற்றின்வழி சொல்லப்படும் சித்த மருத்துவத்துக் குரிய பொருள்களையும் கூறியுள்ளார்.

சங்க காலத்தில் அறுவை மருத்துவம் செய்யப்பட்டதற்கான சான்றுகள் இருப்பதையும் காட்டுகிறார். ஊசி உடலினுள் சென்று மீண்டு வந்து தைப்பது மீன்கொத்திப் பறவை தண்ணீருள் மூழ்கி, தன் மூக்கு நுனியில் மீனைப் பிடித்துக்கொண்டு தண்ணீரைவிட்டு வெளியே வருவதைப் போன்று இருப்பதாய்ப் பதிற்றுப்பத்து கூறுவதைக் காட்டி, இது போரில் காயமுற்ற வீரருக்குச் செய்யப் பெற்ற அறுவையைக் குறிப்பிடுகிறது என விரிவாய்க் கூறுகிறார்.

சங்க காலத்தில் மூலிகைகள் கொண்டும், செடி கொடி வகைகளின் உறுப்புகளைக்கொண்டும், நஞ்சு வகையான பாடாணங்களைக்கொண்டும் மருத்துவம் செய்துவந்தனர் என்பதை ஆய்வு அடிப்படையில் பசுமலையரசு விளக்கி யிருக்கிறார்.

மலர்களின் மருத்துவப் பயன்களையறிந்த தமிழர்கள் வாழ்வில் எவ்வாறெல்லாம் மலர்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என்பதை நூலாசிரியர் எடுத்துக் கூறும் முறை உள்ளம் கவர்வதாயுள்ளது.

குறிஞ்சிப்பாட்டில் கூறப்பட்டுள்ள 99 வகையான மலர்களுள் 44 மலர்களுக்கான மருத்துவப் பயன்களைக் கூறியிருப்பது அருமையிலும் அருமை.

சிலப்பதிகாரத்தில் பட்டினப்பாக்கத்தில் மறையோர், உழவர், சோதிடர் குடியிருப்புகளோடு, 'ஆயுள் வேதர்' வாழும் குடியிருப்புகளும் இருந்தன என இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். ஆயுள்வேதர் என்பது ஆயுர்வேத மருத்துவரைக் குறிப்பிடுவதாய்க் கொள்ள வேண்டும் என்பதற்குப் பசுமலை தக்க சான்றுகளைத் தருகிறார்.

மருத்துவன் என்று தன்னை அறிவித்துக்கொள்பவன் பிணியைப் போக்க முயற்சி எடுக்காமல் வாளா இருப்பது கொடுஞ்செயல் என்பதைச் சங்க காலத் தமிழர் கருதியிருந்தனர் என்பதை,

> வருந்திய செல்லல் தீர்த்த திறன்அறி
> ஒருவன், மருந்து அறைகோடலின் கொடிதே

எனும் நெய்தற்கலிப்பாடலடிகளைக்கொண்டு கூறுவது நினைந்தும் உணர்ந்தும், தெளிந்தும் நெஞ்சில் கொள்ள வேண்டிய கருத்தாம்.

பசுமலையரசுவின் ஆராய்ச்சியின் வாயிலாய்ச் சங்க இலக்கியங்களில் இவ்வளவு சித்த மருத்துவக் கருத்துகள் உள்ளனவா என்றறிந்து வியந்துபோகிறோம். இவ்வளவு பெரிய மருத்துவத்துக்கு அன்று சொந்தக்காரர்களாய் இருந்த நாம் இன்று அவற்றை இழந்து நிற்கிறோமே என்ற ஏக்கமும் உண்டாகிறது.

திருவள்ளுவர் ஒரு செந்தமிழ்ச் சித்தர்

பசுமலையரசு திருவள்ளுவரை ஒரு செந்தமிழ்ச் சித்தர் என நிறுவிக் காட்டுகிறார். நோயுற்றவன், நோயைத் தீர்க்கும் மருத்துவன், நோய் தீர்க்கும் மருந்து, மருந்தை அருகிருந்து கொடுக்கும் உதவியாளன் என மருத்துவ முறை நான்கு வகைப்பாடுடையது என மருத்துவத் துறைக்குத் திருவள்ளுவர் ஒரு வரையறையே தந்துள்ளார். இந்நால்வகைப் பகுப்பில் கூறிய முதல் மருத்துவச் சித்தர் திருவள்ளுவரே என்பது பசுமலையரசுவின் துணிபு.

இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதம், யுனானி; ஆங்கில மருத்துவ முறையான அலோபதி; செர்மன் மருத்துவ முறையான ஓமியோபதி; சீன மருத்துவமுறையான அக்குபஞ்சர் ஆகிய அனைத்து மருத்துவ முறை அடிப்படைக் கூறுகளும் திருக்குறளில் காணக்கிடக்கின்றன என்பதை நன்கு விளக்கித் திருவள்ளுவர் சித்த மருத்துவர் என்பதில் ஐயமேயில்லை என முடிவுசெய்கிறார். திருக்குறளில் 'மருந்து' என்னும் அதிகாரத்தி லுள்ள ஒவ்வொரு குறளும் சித்த மருத்துவத் தத்துவத்தைச் சிறப்பாய்க் குறிப்பதை விவரித்துள்ளார்.

பழமொழிகளில் சித்த மருத்துவம்

பழமொழி, மக்கள் இலக்கியம். பழமொழிகளில் காணப் பெறும் மருத்துவக் கூறுகளைப் பசுமலையரசு அறிந்து உணர்ந்து கூறியுள்ளார்.

'முருங்கைக்காய் என்றதும் முரிந்ததாம் பத்தியம்' என்னும் பழமொழிக்குப் பசுமலையரசு விளக்கம் சொல்லும்போதுதான் அதில் உள்ள மருத்துவச்சிறப்பு நமக்குத் தெரிகிறது. உடற்சேர்க்கையைத் தவிர்க்க வேண்டும் என நோயாளிக்கு அறிவுரை கூறப்பட்டிருந்தது. கணவனும் மனைவியும் அப்படியே இருந்தார்கள். முருங்கையை உணவுடன் சேர்த்துக்கொண்ட வுடனே அந்தக் 'கூடாது' என்ற பத்தியம் முரிந்துவிட்டதாம். முருங்கை அவ்வளவு ஆண்மை தரும் ஆற்றல் உடையது எனும் பொருளை இப்பழமொழி உள்ளடக்கியிருக்கிறது என்கிறார், பசுமலை.

34 பழமொழிகட்கு விரிவான விளக்கம் தந்துள்ளார். இவை போன்று விளக்கம் பெறவேண்டிச் சிந்தித்துப் பார்ப்பதற்காக மேலும் 21 பழமொழிகளைப் பட்டியலிட்டுத் தந்திருக்கிறார்.

பஞ்சபூதக் கூட்டு

நிலம் (மண்), நீர், வளி (காற்று), நெருப்பு, விண் (ஆகாயம்) என்பன ஐம்பெரும் இயற்கை ஆற்றல்கள் (பஞ்ச பூதங்கள்). பஞ்ச பூதங்களால் மனித உடல் இயங்குகிறது. உயிர்களின் தோற்றமும் இதில் அடங்குவதே. மருத்துவப் பொருள்களும் பஞ்சபூதக் கூட்டாலானவையே எனும் உண்மைகள் கொண்ட ஒரு கட்டுரை நூலுள் எழுதப்பட்டுள்ளது.

ஆயுர்வேதமும் சித்த மருத்துவமும்

சித்த மருத்துவமே உலக மருத்துவத்திற்கு அடிப்படை. இதனுடனோ சற்றுப் பின்னரோ தோன்றியது ஆயுர் வேதம்.

ஆயுர்வேதம் சித்த மருத்துவத்தின் பின்னர்த் தோன்றியது என்பதே பொருத்தமானதும் உண்மையானதும் ஆம். ஆயுர்வேதம் சமஸ்கிருதத்திலிருப்பதாலும், வேதபுராணங்களுடன் தொடர்புடையதாயிருப்பதாலும், அதைச் செய்கின்ற மருத்துவர்களுள் பெரும்பாலானோர் பார்ப்பனர்களாய் இருப்பதாலும் ஆயுர்வேதத்திற்குக் கிடைக்கும் செல்வாக்கு சித்த மருத்துவத்துக்குக் கிடைப்பதில்லையே என்ற கவலையை - ஏக்கத்தைப் பசுமலையரசு ஒரு கட்டுரையில் வெளிப்படுத்துகிறார்.

சோதிடமும் சித்த மருத்துவமும்

சோதிடக்கலை என்னும் வானியல் கலை தமிழன் கண்ட அறிவியல் கலை; நுணுக்கமான கணக்குக் கலை, சோதிடர், கணியர் என்று வழங்கப்படுகின்றனர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று அனைவரும் கூறும் அடியை எழுதியவர் சோதிடர், கணியன் பூங்குன்றனார் என்பவர். பக்குடுக்கை நன்கணியார் என்னும் சங்கப் புலவரான மற்றொருவரும் சோதிடராய் இருந்திருக்கிறார்.

சோதிடத்திற்கு அடிப்படை, கோள்நிலை. கோள்கள் அவற்றினால் உண்டாகும் விளைவுகள், நன்மை, தீமைகள் ஆகியன பற்றிய அறிவு சங்ககாலத் தமிழர்களிடம் இருந்திருக்கிறது. சோதிடமும் சித்த மருத்துவமும் ஒரு காலத்தில் இணைந்திருந்து உயிர்காக்கும் கலைகளாய்த் திகழ்ந்தன என்பதை ஒரு கட்டுரையில் நன்கு விளக்குகிறார், பசுமலையரசு.

யோகமும் சித்த மருத்துவமும்

உடலைப் பயன்படுத்தி அதன்மூலம் உள்ளத்தைப் பயன்படுத்தக்கூடிய செயலை யோகம் எனலாம். நோய், உடலை மட்டுமன்றி உள்ளத்தையும் பாதிப்பது. உடலுக்கும் உள்ளத்திற்குமான பயிற்சி முறையே யோகம். யோகப் பயிற்சியினைச் சித்தர்கள் மருத்துவமாகவே கருதினர். யோகாசனப்பயிற்சி இன்று நோய் தீர்க்கும் மருத்துவ முறையாகவே உலகெங்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது என்ற செய்திக் கருவை உள்ளடக்கியிருக்கிறது இந்நூலுள் உள்ள, 'யோகமும் சித்த மருத்துவமும்' என்னும் கட்டுரை.

காயகற்பம்

'சித்த மருத்துவத்தில் காயகற்பம்' எனும் தலைப்பிலுள்ள கட்டுரை, காய கற்ப மருந்துகளின் மூலவர்களாய்த் தமிழ்ச் சித்தர்களே விளங்கியுள்ளனர் என்னும் உண்மையை வெளிப்படுத்துகிறது.

பல்சுவைச் செய்திகள்

'சித்த மருத்துவத்தில் பல்சுவை' என்னும் தலைப்பில் அமைந்துள்ள கட்டுரை மிகவும் சுவையானது. இதில் பசுமலையரசு 32 வகையான நோய்களுக்கு மருத்துவக் குறிப்புகள் தந்துள்ளார்.

ஆசனங்கள் நோய் நீக்கும் என்பதைச் சொல்லி, இன்னின்ன நோய் நீங்க (20 வகையான நோய்கள் நீங்க) இன்னின்ன ஆசனம் செய்யலாம் என்ற பட்டியலைத் தந்துள்ளார்.

காது குத்தப்படுவதால் மனிதன் உணர்ச்சியுடையவன் ஆக்கப்படுகிறான். மூக்குக் குத்தப்படுவதால் அடக்க உணர்ச்சி ஏற்படுகிறது. பெண்களை அடக்கியாளவே அவர்கட்கு மூக்குக் குத்தும் பழக்கத்தை உண்டாக்கியிருக்கின்றனர்.

பிறந்த குழந்தைகளுக்குக் கழுதைப்பாலைக் கொடுத்துப் போலியோவிலிருந்து தடுத்து அறிவுக்கூர்மையுடையவராய் ஆக்கினார்கள்.

குப்பைமேனியை உண்டால் பேச்சுத்திறன் உண்டாகும்; மனநோய் எனும் இதய நோய்கள் அணுகா; கண்பார்வை சிறப்பாய் இருக்கும்; குப்பைமேனிப்பூவை உண்பவர் நெடுநாள் வாழ்வர் என்பன போன்ற பல சுவையான பயனுள்ள செய்திகளைத் திரட்டித் தந்திருக்கிறார்.

பசுமலை மருந்து

நூலின் கடைசிப் பகுதியாய்ப் பத்து மூலிகைகளைப்பற்றிப் பசுமலையரசு மூலிகைக்குப் பத்துவீதம் நூறு பாடல்களைப் பாடி அளித்துள்ளார். ஒவ்வொரு பாட்டும் பசுமலை மருந்தே என முடிகிறது.

திருக்குறள், எழுத்துகளுக்கு முதல், 'அகரம்' என்கிறது. பசுமலையரசு மூலிகைகளில் 'அ'வை முதலெழுத்தாய்க் கொண்டுள்ள அறுகு முதன்மையாய் விளங்குகிறது' எனக் கூறிப் பாடலைத் தொடங்கியுள்ளார்.

நாம் எளியவை எனக் கருதும் அறுகம்புல், துளசி, வில்வம், வேம்பு, கரிசலாங்கண்ணி, தூதுவளை, குப்பைமேனி, ஆடாதொடை, மா, வாழை முதலியவற்றில் உள்ள மருத்துவப் பயன்களை அறிந்து சொல்கிறார்.

வாழையின் எல்லாப் பகுதிகளும் மருத்துவக்குணம் பெற்றிருப்பதால் வாழையைத் திருவள்ளுவர் கூறும் 'மருந்தாகித் தப்பா மரம்' எனச் சொல்லலாம் என்னும் அரிய கருத்தைத் தருகிறார்.

குட்டநோய் ஏற்பட்டுள்ள அறிகுறி கண்ட தொடக்க நிலையில் ஆடாதொடையின் இலையை அன்றாடம் காய்ச்சிக் குடிநீர் செய்து குடித்து வந்தால் நாளடைவில் குட்ட நோயின் குறிகள் மறைந்து குணமுண்டாகும்" என்று ஒரு பாடலில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு பசுமலையரசுவின் நூறு பாடல்கள் நோய் தீர்க்கும் மருத்துவக் கருத்துகளை உள்ளடக்கியிருக்கின்றன.

சிறந்த பத்துத் தலைப்புகளின்கீழ் இவர் இந்நூலை எழுதியுள்ளதற்காக இவருக்குப் பத்து 'முனைவர்' பட்டங்களை தரவேண்டுமென விரும்புகிறேன்.

தரமான ஆராய்ச்சி நூல்

இந்நூல் மிகவும் தரமான ஓர் ஆராய்ச்சி நூல்; இதனை முனைவர் பட்ட ஆய்வேட்டின் வெளியீடு என்றே சொல்லலாம். பிற எக்கருத்தையும் குறைத்து மதிப்பிடாமல், அவற்றின் நிறைகளையுங்கூட எடுத்து கூறி, தம் கருத்து அதனினும் வலிவுடையது என்பதை நிறுவும் வகையில் இவர் ஆய்வுப் போக்கு அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. பிறருடைய சொத்தின் அளவையும் தரத்தையும் உள்ளது உள்ளவாறே கூறி, தம் சொத்தின் மதிப்பு அதனினும் பெரியது, பெருமைமிக்கது என்று சொல்வதும், எடுத்துக்காட்டுவதும் வரவேற்க வேண்டிய ஒன்று தானே!

சிறந்த சித்த மருத்துவர்

பசுமலை மிகச்சிறந்த சித்த மருத்துவர் என்பதை இந்நூல் நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகிறது. அவரது இம்மருத்துவ அறிவு மக்கள் குலத்திற்குப் பெரிதும் பயன்பட வேண்டும் என்று விழைகிறோம்.

பசுமலை மூலிகை

பசுமலையில் கிடைக்கும் பச்சிலை மூலிகைகள் உடலுக்கு நலம் தருவன. பசுமலையரசுவின் எழுத்து மூலிகைகளோ நம் உள்ளத்தே எழுச்சியூட்டி நலம் சேர்க்கின்றன. இவ்வெழுத்துச் சித்தர் தொடர்ந்து பல எழுத்துச் சித்தாடல்களைச் செய்து கொண்டே இருக்க வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.

யாமறிந்த தமிழ் மலைக்கு வாழ்த்து

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்...
எங்கள்தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்

தலைமுறைகள் பலகழித்தோம் குறைகளைந்தோம் இல்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்!

எனத் தமிழ்வளர்ச்சிக்காய்த் துறைதோறும் எண்ணிறந்த நூல்கள் வெளிவரவேண்டுமென எழுச்சிக்குரல் கொடுக்கிறார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

மருத்துவத்துறையில் அரியதொரு நூலை, ஊரறியும் தமிழில் படைத்துப் புரட்சிக்கவிஞரின் எண்ணத்திற்கேற்ப, 'தகத்தகாயத் தமிழை' உருவாக்க முனைந்திருக்கும் பசுமலை யரசுவின் தமிழ் வளர்ச்சித் தொண்டினை நம் மனமலர் தூவிப் பாராட்டுகிறோம்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில்
பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்...
திறமான புலமைனெில் வெளிநாட்டார் அதைவணக்கம்
செய்தல் வேண்டும்

என்றார், மாக்கவி பாரதி.

கவிஞர் பசுமலையரசு கன்னட நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் பெயர்த்துத் தந்துகொண்டே இருக்கிறார். 'செந்தமிழும் சித்த மருத்துவமும்' எனும் இந்நூல் போன்று 'இறவாத புகழுடைய புதுநூல்கள்' பலவற்றை இயற்றிக்கொண்டுமிருக்கிறார். இவரது பழுத்த புலமையை அறிந்த கருநாடக மாநில அரசு இவருக்கு "கருநாடக ராஜ்யோத்சவ" எனும் விருதினை வழங்கிச் சிறப்பித்திருக் கிறது. திறமான இவர் புலமைக்கு வெளி மாநிலத்தவரும் வெளிநாட்டினரும் தொடர்ந்து வணக்கம் செலுத்திக்கொண்டே இருப்பர் என்பது உறுதி. பாரதியின் முக்கட்டளைகளையும் நிறைவேற்றியுள்ள 'யாமறிந்த தமிழ் மகன்' பசுமலையரசுவைப் பாராட்டி மகிழ்கிறேன். அவருடைய தொண்டு மேன்மேலும் சிறக்குவென வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	புலவர் மு. பசுமலையரசு
வகைமை	சித்த மருத்துவ ஆய்வு
வெளியீடு	கிரிசா பதிப்பகம், பெங்களூர். (1996)

4

நபியே எங்கள் நாயகமே!

கவிஞர் கா.மு. ஷெரீப் அவர்கள், நபிகள் நாயகத்தின் அருமை பெருமைகளை இனிய எண்சீர் விருத்தப் பாக்களில் இந்நூலில் விளக்கியுள்ளார்கள். நூலின் தொடக்கத்தில் அகிலத்தைப் படைத்தளிக்கும் அல்லாஹ் வாழ்த்தப்படுகிறான். அடுத்து, அவன் நாயகமவர்களுக்கு அருளிய திருமறை போற்றப்படுகிறது. பின்னர், நாயகம் பிறந்த நன்னகராம் மக்காவும், அங்குள்ள இறை இல்லமாம் கஃபாவும் முறையே பெருமைப் படுத்தப்படுகின்றன. அடுத்து, நபிகள் நாயகத்தின் முன்னோரைப் போற்றும் வகையில் அவர் பாட்டனார் அப்துல் முத்தலிப், தந்தை அப்துல்லா, தாய் ஆமினா ஆகியோரின் அருங்குணங்கள் உரைக்கப்படுகின்றன. அவர்களையடுத்து, பெருமானாருடன் இணைந்து வாழ்ந்து, அவர் செயல்களுக்கெல்லாம் ஊக்கமூட்டி வந்த அவர் வாழ்க்கைத்துணைவியராம் கதீஜாப் பிராட்டியாரும் ஆயிஷா நாச்சியாரும் வாழ்த்தப்படுகின்றனர். இவ்வாறாய் இறைவனையும் திருமறையையும் வாழ்த்தி, காப்பிய நாயகரின் முன்னோரை மொழிந்து, இணைந்து வாழ்ந்தவர்களைச் சுட்டி நூலைத் தொடங்கியுள்ளார்.

"வல்லவனின் தூதர், வையம் காத்த வள்ளல், வெள்ளை மன வேந்து, ஞானிகளின் ஞானி, அண்டர் புகழ் நாயகம், சாந்திமதம் தந்தவர், ஏழைகளின் தோழர், விண்புகழ வாழ்ந்தவர், நடுநின்ற நெஞ்சினர்" ஆய நபிகள் நாயகத்தின் உள்ளத்தையும் செயல்களையும் ஒருங்கே வெளிப்படுத்துகிறது, இந்நூல்.

"தன்னலம் மறந்து பிறர் நலத்துக்காகப் பாடுபட்டவர்; துயரிடை அகப்பட்டும் தூயவழி நின்றவர்; மக்கள் சுகப்படத் தாம் அடிபட்டவர்; கல்லிலும் செம்பிலும் இறைவன் இல்லையெனக் கழறியவர்; கல்லாமை தொலைய உழைத்தவர்; ஊராண்டதோடு மக்கள் உள்ளமெலாம் ஆண்டவர்; தொண்டரினும் தொண்டராய்த் தொண்டு செய்தவர்; இசுலாம் நிலைபெறத் தண்டெடுத்துத் தளபதியும் ஆனவர்; பேச்செல்லாம் செயலாக்கிப் பெருமை கொண்டவர்" என்பன போன்ற சொல் வரைவுகளால்

பெருமானாராம் நபிகள் நாயகத்தின் பெருமைமிகு ஓவியத்தைப் படிப்போர் மனங்களில் கவிஞர் பதிய வைக்கிறார்.

புவிபோற்றும் முஹம்மதரின்
தொண்டுகளில் துளியைப்
புகன்றுள்ளேன்; அவர்;செய்தது)
அனைத்தையுமே எடுத்து
நவிலுதற்கு நானறிவு
பெற்றிருக்க வில்லை

எனத் தன்னடக்கத்தோடு கவிஞர் கூறியிருந்தாலும், அவர் பெருமானாரின் அரும்பெரும் செயல்களையும் சிந்தனைகளையும் நிரல்பட அழகு தமிழில் எழிலுற எடுத்துரைப்பதை நூலைப் படிப்போர் நன்குணர முடியும்.

பெருமானார் மொழிகளைக் கவிஞர் தம் சொல்லால் சொல்வதை இங்கே காணலாம்; பெருமானாரின் பொன் மொழிகள் :

''பசித்தோர்க்கு உணவும் இன்சொலும் வழங்குவதே இசுலாம். உழைக்காமல் வாழுவதும் உண்ணும்போது தனித்து உண்பதும், பிழைக்க எண்ணிப் பொய்யுரைத்தலும், பித்தலாட்டம் கொலை களவு செய்தலும் இசுலாம் ஆகாது.

பலன் கருதாது தொண்டு செய்வதே தர்மம். செல்வம் சேர்த்து வைப்பதற்காக அன்று; நொந்து கெட்டவர்க்கு உதவுவதற்கேயாம். நல்லதைச் செய்யவும் அல்லதை ஒடுக்கவும் உறுதி கொண்டால் ஆண்டவன் அருள்வான்.

அழகுக்கென ஆடை உடுத்தக் கூடாது. தொழிலுக்காய்த் தொழுகையை மறக்கக் கூடாது. வணிகத்தில் கொள்ளை இலாபம் கூடாது. எளியாரை எள்ளி நகையாடக் கூடாது.

இறைவனின் ஏவல் எது, விலக்கு எது என்று விளங்கி நடப்பவனே மேலோன். தனக்குக் கிடைப்பது பிறர்க்குக் கிடைக்க வேண்டுமென்பதே சிறப்பு. தொழிலாளி மனம் மகிழக் கூலி தர வேண்டியது முதலாளியின் கடமை.

மனைவியை அடிமை என்று எண்ணுதல் கூடாது. சொர்க்கம் தாயார் திருவடியில் உள்ளது. நற்செயல்கள் அனைத்திலும் உயர்ந்தது தாய் தந்தையர்க்கு ஆற்றும் நற்பணியே. ஆணும் பெண்ணும் சமம். அன்பில்லா நெஞ்சமுள்ள மானிடர்பால் இறைவன் அன்பு கொள்ளான்''

என, நூல் முழுதும் கூறியுள்ள பெருமானாரின் மொழிகள் உலகோரை நன்னெறிப்படுத்துவனவாம்.

பெருமானாரின் எளிமையையும் தூய வாழ்வையும்பற்றிக் கவிஞர் கூறியுள்ளவை உள்ளத்தை உருக்குகின்றன. இவை உயர்ந்த பதவியில் இருப்பவர்கள், தம் உள்ளத்தே என்றென்றும் நிறுத்திப் பின்பற்ற வேண்டிய கருத்துகளுமாம். ஆட்சிக்குத் தலைவராய் இருந்தும் அண்ணலார் ஈச்சோலைக் குடிசையிலே வாழ்ந்து வந்தார். அவர் இறந்தபோது விட்டுச்சென்ற சொத்துகள் ஈச்சம்பாய், பிய்ந்த தோல் தலையணை, ஜிப்பா, உடுத்தும் ஆடை, தேய்ந்த பாதக் குறடு. நாட்டின் தலைவர் தமக்கெனச் சேர்த்து வைத்துக் கொண்ட சொத்துகள் இவையே!

இசுலாத்தின் நெறிமுறைகளையும் நம்பிக்கைகளை யும் எளிதில் அறிந்துகொள்ள இந்நூற்பாடல்கள் துணை செய்கின்றன.

இசுலாத்தின் ஐந்து கடமைகளை ஒரு பாடலில் கவிஞர் விளக்குகிறார் (அ) இறைவனை நம்பி முகம்மதுவை அவனுடைய தூதரெனக் கொள்ளல். (ஆ) ஐவேளை தொழுதல் (இ) சக்காத் அளித்தல் (ஈ) நோன்பிருத்தல் (உ) பொருளிருந்தால் புனித ஹஜ்ஜைச் செய்தல் எனும் இவ்வைந்துமே இசுலாத்தின் ஐம்பெரும் கடமைகளாம்.

ஈமான் என்றால் என்ன? அல்லாஹ்வையும், அவன் திருமறையையும், அவன் வானவர்களையும் அவன் தூதர்களாம் நபிமார்களையும், இறுதித் தீர்வு நாளையும், சொர்க்க நரகத்தையும் நம்புவதே ஈமான் என்பதைக் கவிஞர் ஒரு பாடலில் அழகுற விளக்கியுள்ளார்! (பாடல் 17)

இசுலாம் நெறிகள் எவையெவை என்பதை விளக்குவது போலவே ஆகாதவை எவையெவை என்பதையும் நான்கு பாடல்களில் (36, 37, 38, 39) நயமுறச் சுட்டிச் செல்கிறார்.

"உழைக்காமல் வாழ்ந்திடுதல்; உண்ணுவதைத் தனித் துண்ணல்; பிழைக்க எண்ணிப் பொய்யுரைத்தல்; பித்தலாட்டம் கொலை களவு; கழைக்கூத்தாடல்; மானிடரைப் புகழ்ந்திடுதல்; மறைவாய்ப் புறம்பேசல்; வீணில் இடர் செய்திடுதல்; மிகுத்துணவு தானுண்ணல்; தான் அடங்கா மனப்போக்கு; தனைப் பிறர்க்கு அடிமையிடல்; படாடோப வாழ்க்கை; பசித்தோரை விட்டுண்ணல்; அடாவடி செய்தல்; அக்கிரமம் புரிந்திடுதல்; கொடாது பணம் சேர்த்தல்; குடித்தல் நடித்தல்; வட்டி வாங்குதல்; வன்மைமிகு பகைக் குணம் கொள்ளுதல்; வெட்டிப்பேச்சுப் பேசுதல்; வினைத் தூய்மை இல்லாமை; பணத்தைக் கட்டிக் காத்தல்; கடவுளை நம்பாமை ஆகியவை இசுலாம் நெறியாகா!"

எவையெவை தீயவை என்பதை இரு பாடல்களிலும் (40, 41), எவையெவை நல்லவை என்பதை இரு பாடல்களிலும் (42, 43) குறிப்பிட்டுள்ளார்.

நற்குணம் கொள்ளாமையே நரகம் என்பதை ஒரு பாடல் சுட்டுகிறது (23).

இசுலாமிய நெறியில் மிகச்சிறந்த ஒன்று மனிதரிடையே உயர்வு தாழ்வு இல்லை என்பதாம்! விஞ்ஞானம் வெகு முன்னேற்றமடைந்துள்ள இந்த நாளில்கூட செய்ய முடியாத ஒன்றை அறம் பாழ்த்துக் கிடந்த அந்த நாளிலே முகம்மது நபி அவர்களால் செய்ய முடிந்திருக்கிறது என்பதை நினைத்தாலே நெஞ்சம் வியப்பில் ஆழ்கிறது.

எந்திரத்தால் சந்திரனைத்
தொட்டுவிட்ட இன்றும்
இழிவாக நீக்ரோவை
எண்ணுகிறான் மனிதன்;
மந்திரத்தால் மாயவித்தை
செய்குவது போன்று
மனிதரிலே தாழ்வுயர்வே
இல்லையெனச் செய்தீர்!
சிந்தித்தால் இதுநடந்த
காலத்தை வியப்பால்
சிரம்சுற்றச் செய்திடுதே
ஆண்டவனின் தூதே!

எனக் கவிஞர் கூறுவது உண்மைதானே!

கவிஞரவர்கள், நபிகள் நாயகத்தின் முழு வாழ்வையும் ஒரே பாடலில் புலப்படுத்தியுள்ளார்.

பிறக்கும்முன் தந்தையரைத்
தானிழந்து, புவியில்
பிறந்தசில ஆண்டிற்குள்
தாயாரை இழந்து,
சிறப்பான கல்வியின்றி
மா(டு)ஆடு மேய்த்து,
சுற்றத்தார் ஆதரவில்
அனாதையென வளர்ந்து,
முறைப்படிக்குத் தொழில்செய்து
திருமணமும் முடித்து,
மும்மூன்று மகவு பெற்று
ஞானவழி சென்று,
பெறற்கரிய நபிப்பட்டம்
பெற்றிட்ட இறுதிப்
பெருநபியே!....

நபிகள் நாயகம் என்பதை இவ்வொரு பாடலிலேயே திறம்பட உணர்த்திவிடுகிறார்.

இந்நூல் இசுலாத்தின் பிழிவை இனிய தமிழில் தருகிறது. எளிய சொற்கள், தங்குதடையற்ற நடையோட்டம், தெளிந்த சிந்தனை, அரிய செய்தி விளக்கம் ஆகியவற்றின் தொகுப்பாய் இந்நூல் இலங்குகிறது. 'இதுதான் இசுலாம்' எனப் புரிந்துகொள்ள இந்நூல் பெரிதும் பயன்படும். கவிஞரின் கனிந்த பட்டறிவையும், இசுலாமிய நெறிகளில் அவர் ஊறித் திளைத்துள்ளதையும் இந்நூல் நன்கு புலப்படுத்துகின்றது. படித்தற்குரியதும் நெஞ்சில் பதித்தற்குரியதுமான இச்செந்நூலை ஆக்கித் தந்துள்ள கவிஞர் பெருமகனை வாழ்த்துவோம்! போற்றுவோம்!

நூல் ஆக்கம்	கவி கா.மு. ஷெரீப்
வகைமை	கவிதை
வெளியீடு	சீதக்காதி நூல் வெளியீட்டகம்.(1972)

5

ஓ... ஓ... புரட்சி நெஞ்சங்களே!

என் மாணவ நண்பர் திரு. 'தமிழ்ப்பரிதி' 'ஓ... ஓ... புரட்சி நெஞ்சங்களே!' என்னும் துடிப்பு நிறைந்த கவிதை நூலை இயற்றியுள்ளார்.

எம்மொ ழிக்கும் அன்னை யாகி
எழில்கு லுங்கும் தமிழ்மொழியை

அவர் உயிராய்ப் போற்றியுள்ளார்.

'தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்' என்றார், புரட்சிக் கவிஞர். தமிழ்ப்பரிதியோ தமக்கு எல்லாமாய்த் தம்முள் ஒன்றியதாய்த் தமிழைக் காண்கிறார்.

தமிழுக்கு ஊறு செய்வோரை, 'மூடுவேன் வெட்டி மண்ணிலே', 'உடல்சிதைத்தெறிவேன் மண்ணில்', 'தணலதில் இட்டுக் கொல்வேன்' என்று புரட்சிக் குரலெழுப்பி எச்சரிக்கின்றார்.

அமிழ்தமெனும் தமிழுக்காய் வாழா மாந்தர்
அனைவருமே தமிழரிலை! அயலார்!...
தமிழணங்கின் துயர்கண்டும் துடைக்கா ரெல்லாம்
தமிழ்க்குருதி ஓடாத பிணங்கள்....

என்னும் பாடலடிகள் அவரது தமிழ்த்துடிப்பை நன்கு வெளிப்படுத்துகின்றன.

சமுதாயப் புல்லர் நெஞ்சைச்
சல்லடை ஆக்கும் ஈட்டி (யாய்க்)

கவிதைகள் இருக்க வேண்டுமென அவர் எண்ணுகிறார். அதற்கேற்பச் சமுதாயக் கொடுமைகளை அவர் பாடல்கள் சாடிடக் காணுகின்றோம்.

"பொல்லாத பதுக்கல் செய்வாரைப் புலியின்வாய் ஆடாய் ஆக்கவேண்டுமெனப்" பொங்கியெழுகின்றார்.

பொல்லாங்கு நிறைந்தோர் பொலிவுடன் வாழ்வதைக் கண்டு, 'மானுடம் மாண்டதோ!' என ஏங்குகின்றார்.

'கறை மனத்தார் திருந்துவரோ?' என்ற வினாவை எழுப்பி,

கைவலிக்கப் பொதுத்திடலில் அடித்தா லன்றி

அவர் தாமாய்த் திருந்தார் என்று குறிப்பிடுகின்றார்.

கோதகன்ற மாந்தரினைக் காண்ப தற்கே
கோடிமுறை முயல்கின்றேன்; காண வில்லை!

எனக் குமைகிறது கவியுள்ளம்.

உழைக்காமல் நாள்தோறும் வெறும் பேச்சில் வாழ்ந்து வரும் நாகரிகத் திருடர்களை விட்டுவைக்கக் கூடாதென அவர் விளம்புகின்றார்.

பெரும்புயல் மூண்டதேபோல் புரட்சி தோன்றுவதன் முன்னர் அற்பத்தனத்தை விட்டு அறவழியிற் செல்ல 'முந்திக் கொள்க' என அற்பர்களுக்கு அறிவுரை கூறுகின்றார்.

சாதிக் கொடுமைகளை அழிக்க, ஏற்றத் தாழ்வுகளை அகற்ற, மடமையை மடியச்செய்ய, உடைமையைப் பொதுவாக்க உழைப்பதற்காய், "வருக என் தோழனே!" என வாய் குளிர அழைக்கின்றார்.

நாட்டில் நலிவு நீங்கி நலமெலாம் நிறைந்து இன்பம் பூக்கும் நாள் என்றோ என்றோ என எதிர்நோக்கிக் காத்திருக்கின்றார்.

நயம் நிறைந்த அடிகள் பல இந்நூலுள் காணக் கிடக்கின்றன.

வெறுந்திரியை வைத்திருளைத் தீர்ப்போ மென்னும்
வெடிப்பேச்சு மடமைவழி நிற்ப தன்றோ?

வெண்முகிலை மழைபொழியும் என்றே பார்த்து
மேட்டுநிலம் விதைத்திட்ட கதையே யாச்சு.

பேழையிலே அடங்குகிற பாம்பி னைப்போல்
பெருவரையில் போய்மடியும் பரிதி...

புதியதோர் சமுதாயம் கண்டிட அவரது புரட்சியுள்ளம் விழைகிறது.

ஏழைபணக் காரரெனும் பகுப்பை நீக்கி
ஈடில்லாச் சமுதாயம் அமைக்க வேண்டும்

என்றும்,

.....எல்லாம்
எல்லார்க்கும் ஆக்கி உய்நீ – பொதுமை
எங்கணும் பூக்கச் செய்நீ

என்று சொல்லி அதை நடைமுறைப்படுத்த வழிமுறைகளையும் கூறுகிறார்.

பாவேந்தர் பாரதிதாசன்,

ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவர் உணரப் பாநீ?

என்றார். அதே கருத்தை கவிஞர் தமிழ்ப்பரிதி,

பெருமூச்சே விடுகின்றோம்! பின்னால் இந்தப்
பெருமூச்சின் கூட்டிங்கே ளிமூச் சானால்
ஒருமூச்சுக் கிருந்திடுமோ ஏய்த்து வாழும்
உலுத்தரது கூட்டமெலாம்? சிந்தி தோழா!

என்று ஏழையரின் பெருமூச்சின் வலிமையைக் குறிப்பிடுவதைக் காணலாம்.

மனிதப் பண்பு நாள்கள் தோறும்
மாண்டு வருகுதே! – விரைவில்
மனிதன் என்பது) ஏட்டில் வாழும்
வரைபடம் ஆமோ?

என மனிதப்பண்பு மாய்ந்து வருவதைக் கண்டு மனம் வருந்துகின்றார்.

நண்பர் தமிழ்ப்பரிதி போன்ற கவிஞர்களின் கவிதைகள் அவர் அஞ்சுதற்கு மாறாய்ப் பண்பு வளர்ந்தோங்கத் துணை செய்வனவாய் அமைந்து சிறப்பனவாகுக!

கவிதைகளில் சிற்சில கடுமையான சொல்லாட்சிகள் காணப்படுகின்றன. கயமைத்தனத்தைச் சாட இக்கடுமை தேவை என்ற முறையில் அவற்றை அவர் கையாண்டு உள்ளார் என்று கருதுகின்றேன்.

நண்பர் தமிழ்ப்பரிதியின் கவிதைவளம் மேலும் பெருகிப் பயன் விளைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நூல் ஆக்கம்	பாவலர் தமிழ்ப்பரிதி
வகைமை	கவிதை
வெளியீடு	தமிழோசை, ஈரோடு. (1975)

6

இமயம் எங்கள் காலடியில்

ஆலந்தூர் மோகனரங்கன் ஓர் அறிவார்ந்த கவிஞர். 'இமயம் எங்கள் காலடியில்' என்ற அவருடைய இந்நூல், கருத்துச் செறிந்த கவிதைக் கருவூலமாய்த் திகழ்கிறது.

சின்னவன்நான்; செந்தமிழ்மேல் சேர்த்த நினைவல்லால்
என்னிடம் ஆற்றலோ ஏதுமில்லை (184)

என்று கவிஞர் தன்னடக்கமாய்க் கூறியுள்ளாராயினும், இந்நூலில் நூற்றுக்கு மேற்பட்ட ஆற்றல்மிகு கவிதைகளை நாம் காணமுடிகிறது. கவிதை, மனித மேம்பாட்டுக்குத் துணை செய்வனவாய் அமைதல் வேண்டும். ஆதலின், கவிஞர்,

மானிடனின் தோள்களுக்கு மலைதூக்கும் வலிமைவரச் செய்யவும்,
பசியொழிந்த சமுதாயம் படைப்பதற்கும் (17)

பாட விழைகின்றார். "விதியை மாற்ற முனைகின்ற வீரப்படை யின் தலைவராக" அவர் விளங்குகின்றார் (38).

மனிதன் உயர்ந்தவனாய் – இங்கு
மாறும் நிலைபடைப்போம் (58)

என்பதே அவரது கவிதைப் படைப்பின் நோக்கமாய்த் திகழ்கிறது.

தீமைகள் உள்ள திசைநோக்கி – நம்
சிந்தனை என்றும் பறக்காது (86)

என்றும் அவர் உறுதி கூறுகிறார். அழகு, கவிஞர்களை ஆட் கொண்டு கவிதைகளைத் தோற்றுவிக்கிறது. இதனை,

அழகே, எனைநீ பறக்கவைத்தாய் – நெஞ்சில்
ஆயிரம் பாடல் பிறக்கவைத்தாய் (21)

என்ற கவிக்கூற்று மெய்ப்பிக்கிறது. கவிஞர்கள் எதையும் சாதிக்கவல்ல ஆற்றல் பெற்றவர்கள் என்பதால்,

விதிளங்கள் கைகளிலே – வெற்றி
விளைவெங்கள் வாழ்க்கையிலே (18)

எனத் தன்னம்பிக்கையுடன் அவரால் பாட முடிகிறது.

அடைப்புக்குள் உள்ள எண்கள் பாடல் நூலின் பக்க எண்கள்

நன்றி மறவாமை

கவிஞர் தமக்குத் தமிழ் கற்றுத் தந்தவரை, தாம் வளர்ந்துள்ள இந்நிலையில் நினைப்பது அவரது நன்றி மறவாத் தன்மையைக் காட்டுகிறது. பள்ளிப் பருவத்தில் அவருக்குத் தமிழாசிரியராயிருந்த திரு. க.சிவசிதம்பரனாரை நினைவுகூர்ந்து,

அந்தநாள் கவர்ந்த அழகிய தமிழே
இந்தநாள் என்னை எழுத வைத்தது (176)

என நன்றிப் பெருக்குடன் பாடுகின்றார்.

கொள்கை உரைகள்

கவிஞர் மோகனரங்கன் வெளிப்படுத்தும் கொள்கை உரைகள் இந்நூலுள் ஏராளம் உள்ளன :

(அ) சட்டத்தை நாம்மதித்தால் – நல்ல
சமுதாயம் உருவாகும். (28)

(ஆ) மதியை வளர்க்கத் தொடங்கிவிடு;
மண்டிய காரிருள் ஓடிவிடும்! (36)

(இ) ஒன்றாய்த் திரண்டுவிட்டால் – இந்த
உலகம் நமது கையில்! (40)

(ஈ) நம்பிக்கைப் படகை நடுங்காமல் ஓட்டு. (49)

(உ) ஆண்டுகள் நூறு வாழ்வதும் ஒன்றே
அன்புடன் ஒருநாள் வாழ்வதும் ஒன்றே! (62)

(ஊ) ஊர்நலம் ஏற்படச் சீர்வளம் செய்வோம்
ஓர்குலம் ஓர்நிறை ஓர்மனம் என்போம்! (93)

(எ) ஒளியிருக்கும் நெஞ்சமன்றோ நெஞ்சம் – இந்த
உலகமெலாம் அதனருகே தஞ்சம்! (33)

(ஏ) மனக்கணக்குப் பொதுக்கணக்காய் மாறி விட்டால்
மனிதஇனம் ஒருநொடியில் ஒளியைக் காணும். (179)

(ஐ) உள்ளம் உயர்ந்துவிட்டால் – இந்த
உலகம் உயர்ந்துவிடும். (169)

இவைபோன்ற கொள்கை முழக்கங்கள் நூல் முழுவதும் ஒலித்திடக் கேட்கிறோம்.

கற்பனை

கற்பனையில்லாத கவிதை, நீரற்ற குளத்துக்கு ஒப்பாகும். கற்பனை வெள்ளத்தனையதே கருத்துமலர் நீட்டம். மோகன ரங்கன் அவர்களின் உருவகக் கற்பனைகள் சிறப்புடையனவாய்த் திகழ்கின்றன. வாழ்க்கையை நெடுவானமாயும், மானிடரை அதில் பறந்து திரியும் பறவைகளாயும் கற்பனை செய்திருப்பது சிறப்பாய் உள்ளது.

வாழ்க்கையொரு நெடுவானம்
மானிடரே பறவைகளாம். (29)

தாக்குகின்ற துயர்களினால் சிறகொடிந்து தளர்ந்து விழும் பறவைகளும் உண்டு எனவும் குறிப்பிட்டுக் காட்டுகிறார். பொங்கலைப் பாடுகின்ற கவிஞர், இதயத்தைப் பானையாகவும், அவ்விதயத்தே தோன்றும் எண்ணத்தைப் பாலாகவும், எண்ணத்தின் எழுச்சி பொதுநலமாய் இலங்கவேண்டும் என்பதால் பொதுநலத்தைப் பொங்கலாகவும் படைத்துக் காட்டுவது சுவையாயுள்ளது.

இதயமே பானையாம்; எண்ணமே பாலாம்;
பொதுநலம் என்பதே பொங்கல் (170)

என்னும் பாடலடிகள் பொங்கலினும் சுவைகூட்டுவனவாய் உள்ளன.

வானத்தில் பிறைச்சந்திரன் தோன்றுவதையும், பின்னர் அது நாள்தோறும் வளர்வதையும் காணுகின்ற கவிஞர்,

பிறைக்குழந்தை வளர்க்கின்றாள் வானத்தாய் (174)

என வானைத் தாயாயும் சந்திரனைக் குழந்தையாயும் கற்பனை செய்கிறார். கிழக்கும் மேற்கும் ஆய திசைகளைத் தனித்தனியே தாளில் புள்ளிகளிட்டுக் காட்டலாம். அவற்றினிடையே ஒரு நேர்கோடு வரைந்தால் திசைகள் இணைகின்றன. கோடு திசைகளை இணைத்தல்போல, சென்ற சந்ததியினரையும் இச்சந்ததியினரையும் இணைக்கும் கோடாய்க் காலம் விளங்குகிறது என்று கூறுவது வளமான கற்பனை.

..... கனவை மாந்தர்
துறக்காமல் இருப்பதேன் என்றால் வாழ்வின்
துயருக்கோர் பூஞ்சோலை வேண்டு மன்றோ (163)

என்பதும் ஓர் இனிய கற்பனையாம்.

ஒளியை,

“ஒட்டுகின்ற காதலரின் பகையே” என்றும் (179)

தண்ணீரை,

“மேகத்தின் அறுவடையே” என்றும் (156)

மதுவினைச்

“சீரினைக் கொளுத்தும் நெருப்பு” என்றும் (51)

கரும்பை,

“நீயோ கருப்பு; நெஞ்சோ இனிப்பு” (157)

என்றும் கூறுவதில் நயம் மிளிர்கிறது.

கிழவன் தன்னை,

"பொரிந்துவிட்ட அப்பளம் நான்" என்று கூறுவது (171)

சுவைக் கூற்றாய் அமைந்துள்ளது.

இறைவன்

இசைப்பாடல்களில் கவிஞர் இறைவனுக்குப் புகழாரம் சூட்டுகிறார். "புள்ளிமயில் வேலனுக்குப் பூந்தமிழில் மாலையிட்டு மகிழ்கிறார்" (41).

பண்பின் உருவாயும் பாலின் சுவையாயும் விளங்கும் இறைவனைக் கவிஞர் தம் அன்புத் தலைவனாயும் அழகுக் கலைஞனாயும் கொள்கிறார் (42) (43).

"ஏன் பிறந்தோம் என்றறியா ஏழையிடம் வாருமையா" என நெஞ்சுருகி இறைவனை அழைப்பதோடு, தம் வாழ்க்கைப் பயணத்தில்,

நீராய் நிழலாய்த் துணையிருப்பாய் – அந்த
நெடுவழி யெல்லாம் குடைபிடிப்பாய் (45)

என்றும், தாழ்வு என்ற கோடை வெயிலில் புழுவாகித் தவிக்கும் தமக்கு வாழ்வு என்னும் நிழலுக்கு வழிகாட்ட வேண்டும் என்றும் வேண்டுகிறார் (46);

"தத்துவங்களாகிய மலர்களை மலர்விக்கும் கதிரவனாய்" இறைவன் இருக்கின்றான் (47);

பாலில் நெய்போல இறைவன் இயற்கையில் தோய்ந்து நிற்கிறான்; இயற்கையை அறிந்தால் நாம் இறைவனை அறிந்தவராவோம் (61);

என்பன இறைவன் பற்றிக் கவிஞர் கூறும் சிந்தனையுரைகளாம்.

நாடு

"பெற்ற தாயினும் பிறந்த பொன்னாடு நற்றவ வானினும் நனி சிறந்ததுவே" என முழக்கமிட்ட கவிஞர் பரம்பரையில் தோன்றியுள்ள கவிஞர் உள்ளத்தேயும், நாட்டின் சென்ற காலம் இக்காலம்பற்றிய எண்ணக் குமிழிகள் கொப்புளித்து எழுகின்றன. பண்டு இந்தியத் தாயகத்தில் அந்நியர் புகவே இன்னிசை வீணையாய் விளங்கிய இனிய பாரதம் அடிமை பாரதமாயிற்று. (64)

விடுதலை உணர்வு பெற்ற அதன் புதல்வர்கள் வெள்ளையரை எதிர்த்து வீர முழக்கமிட்ட போதினிலே பொங்கியெழும் கடலலையும் ஒடுங்கியது. (65)

அன்னையின் மானம் காப்பதற்கென்றே அவர்கள் ஆவியையும் மறந்தார். (66)

'சுதந்திரமே எம் பிறப்புரிமை' எனச் சத்தியப் போருக்குத் தலைவர்கள் எழுந்தார்கள். (67)

அதன் பயனாய்ப் பாரதம் வெற்றி பெற்றது.

வசைநீங்கிப் புகழ்க்கோயில் வாசல் திறந்தது;
வருங்காலம் ஒளிவீச வழியும் பிறந்தது. (68)

உரிமை தந்த சுதந்தரத்தால் எங்கும் இனிமை தவழ்ந்தது. (63)

அதனால் பள்ளியில்லா ஊரைப் பார்க்க முடியாத நிலை தோன்றியது; பெண்கள் முன்னேற்றம் பெற்றனர்; புதிய தொழில்கள் பூத்துக் குலுங்கின (69).

இவ்வாறாய்,

சுடரொளி எங்கும் சூழ்ந்திடக் கண்டோம்;
சுதந்திர பூமியில் சுவைபல உண்டோம். (70)

இந்த வெற்றித் திருநாட்டின் முன்னேற்றத்திற்குத் தம் உயிரையும் துரும்பாய் எண்ணி, நகைமுகம் மாறாது, நாளும் பாடுபட இன்று அன்னைத் திருநாட்டில் அறுபது கோடியர் உள்ளனர் (81).

வாழ்க இப் பொன்னாடு!

நிலமடந்தையின் வதனமாகிய பாரதத்தைப் பாடிய கவிஞர் அவ்வதனப் பிறைநுதலில் திலகமாய்த் திகழும் தமிழ்நாட்டையும் எக்களிப்புடன் பாடுகின்றனர்.

பூத்துச் சிரிக்கின்ற பொன்னாடு – தமிழ்ப்
பொய்கை மணக்கும் தமிழ்நாடு (97)

எனத் தமிழ் மணக்கப் பாடுகிறார்.

நாட்டு நலம்

சுதந்தர நாட்டில் மக்கட்குக் கிடைத்துள்ள நன்மைகளை யெல்லாம் எண்ணிப் பார்த்துக் கவி மனம் களிப்பில் ஆழ்கிறது. நாட்டில்,

துயர்தந்த கடன்தொல்லை ஒழிகிறது;
சமதர்மச் சங்கொலி கேட்கிறது. (31)

சீர்வரிசை செய்ய முடியாமையால், திருமணம் தடைப்பட்டுக் கலங்கிய கன்னிப் பெண்களின் கண்ணீர் வெள்ளம் இந்நாட்டில் ஆறாய் ஓடிய காலமும் உண்டு. மணநாளன்று மங்கலநாண் அணியும் வேளையிற்கூட சீர்வரிசைச் சிக்கலால் நின்று போன திருமணங்களும் உண்டு.

சீர்பல கேட்டார் மாப்பிள்ளை வீட்டார்;
ஊர்வலம் நடுவே இடியினைப் போட்டார் (30)

என்று பெண்கள் தவித்த நிலை மறைந்து, இன்றோ,

பெண்ணே உனக்கினி வெற்றி – விலை
பேச முடியாது சுற்றி (50)

என்று மகிழ்ந்து பாடும் நிலை மலர்ந்துள்ளது.

பொல்லாங்கிலெல்லாம் பெரிய பொல்லாங்கு பொருள் களைப் பதுக்குவது. இயற்கை எதையும் பதுக்கி மறைப்பதில்லை; தன்னிடம் இருப்பதைப் பிறர்க்குத்தர மறுப்பதும் இல்லை.

தேன்பதுக்கும் மலர்களில்லை;
தேடிவந்தால் வெறுப்பதில்லை; (60)

ஆனால்,

மானிடனே உனக்குமட்டும்
மறைத்துவைக்கும் ஈனப்புத்தி! (60)

என்று ஏங்கிய நிலை இன்று மாறியது. இன்றோ பதுக்கலுக்கு இடமில்லை; கலப்படமும் ஒழிந்தது.

கல்லும் நெல்லும் கலந்த வர்க்குக்
கையில் விலங்கு மாட்டினோம் (95)

என்று கூறும் நிலையும் தோன்றியுள்ளது.

குறிக்கோள்

கவிஞர்கள் தங்கள் வாழ்க்கைக் குறிக்கோள்களை, எதிர்பார்ப்புகளைத் தம் கவிதைகளில் ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்வது இயல்பு. திரு. மோகனரங்கனும் சமுதாயம் முன்னேறத் தம் மனத்தில் தோன்றும் கருத்துகளைப் பல இடங்களில் வலியுறுத்திச் செல்லக் காண்கிறோம்.

தீங்கான வழிக்குத் தடைவேண்டும் – நல்ல
தெளிவான அறிவில் நடைவேண்டும் (19)

என விரும்புகிறார்.

"கங்கையுடன் காவிரி இணைந்து களிநடம் புரியவேண்டும்" எனக் கனவு காண்கிறார் (20).

"தீயவர் நெஞ்சம் திருந்தாதா?" என அவர் நெஞ்சம் ஏங்குகிறது (35).

"எல்லோர்க்கும் வாழ்க்கையெனும் ஏற்றம் வரப் போகிறது; ஆதலின் முன்னேறி வா மகனே" என ஆர்வமுடன் அழைக்கிறார் (27).

பொற்காலம் வரவேண்டும்; அதற்குப் "போராடுவோம், ஒன்றாய்ப் போராடுவோம்" என முழக்கமிடுகிறார் (57).

"எத்தனை புயல்கள் சூழ்ந்தாலும், ஆயிரஞ் சுழல்கள் அழித்திட எழுந்தாலும் அஞ்சாத நெஞ்சம் வேண்டும்" என அறிவுறுத்துகிறார் (72).

"கங்கையும் நானே; காவிரியும் நானே; இன்பமும் நானே; இன்னலும் நானே; அனைத்தும் நானே, நானே" என்ற தன்னம்பிக்கை வளர வேண்டுமென்கிறார் (74).

"வானம் போல மனிதகுலம் வாழ்ந்து காட்டவேண்டும்" என விரிந்த மனப்பான்மையை வெளிப்படுத்துகிறார் (82).

"சொல்லோடு செயல் சேரவேண்டும்" எனச் சொல்லும் செயலும் ஒன்றுபட்டிருக்க வேண்டிய இன்றியமையாமையைச் சுட்டுகிறார் (77).

"மானிடச் சோலையில் சூழ்ச்சியும் கயமையும் வீழ்ச்சியடைந்து மனிதன் வெல்லும் நிலை வர வேண்டும்" என அவாவுகிறார் (79).

நாட்டில் பொற்காலம் தோன்ற வேண்டும் என்ற எண்ணம் பொங்குவதால் புத்தாண்டைப் 'பொற்கால ஆரம்பம்' எனப் போற்றிப் புகழ்கிறார் (25).

அமைதி பூத்து உலகம் குலுங்கவேண்டும் என்பதால் "போரில்லை பூசலில்லை என்றே இந்தப் புத்தாண்டு பேசட்டும்" என்பார் (165).

"உலகமே உன்னைக் காதலித்தேன்" என்ற கூற்று அவரது உலக ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துவதாயுள்ளது (85).

"பொன்னையும் மண்ணையும் சேர்ப்பதால் இன்பம் நிலைப்பதில்லை. தன்னையறிந்து இதயம் தெளிந்தால் துன்பம் தெரிவதில்லை. ஆதலின், நலங்கள் வழங்கும் அறத்தை அறிதலே இன்றியமையாதது" என்கிறார் (91).

கொடுமைகளைக் கண்டு பொங்குவது கவிஞன் உள்ளம். வெண்மணியில் நடந்த கொடுமைகள் மனத்தைச் சுட்டதால் எழுந்த கவிக்கண்ணீர், அக்கொடுமைகளால் கணவனை இழந்த பெண்களின் புலம்பலாய் வெளிப்பட்டுள்ளது (164).

ஆடைகள் நெய்பவர் கைகளைப் போற்றிட
ஆயிரம் வாழ்த்திசைப்போம் (192)

என்பது தொழிலுக்கு அவர் செலுத்தும் வந்தனைக் குரலாகும்.

இயற்கை

இயற்கையிற் றோய்ந்து உள்ளத்தைப் பறிகொடுத்த கவிஞர் இயற்கையை நீதியாளனாய்க் காணுகிறார். "இயற்கை சொல்லும் நீதிகளை மனிதர் அறிந்துவிட்டால்,

துயரம் என்னும் சொல்லேது?
சோர்ந்து கிடக்கும் நிலையேது? (22)

எனக் கவிஞர் கேட்கிறார்.

இதற்காக முல்லையைப் பேசவைத்து, 'வாழ்க்கை குறுகியதேயாயினும் கடமையைச் சரிவர, பிழையறச் செய்ய வேண்டும்' என்ற நீதியை அறிவிக்கிறார் (161).

அந்திமாலை அருவிக் கரையில் விருந்துவைக்கும் அழகைப் பேசுகிறார் (24).

வானக் கன்னி கோலம்யாவும் காட்டக் கொஞ்சிக் கொஞ்சி அழைப்பதை மிஞ்சி மிஞ்சி விவரிக்கிறார் (37).

காலத் தாயின் தலைமகனாய கதிரவன் மனித குலத்தின் பெருந்தொண்டனாய்ப் பேசப்படுகிறான் (39).

காதல்

ஆணும் பெண்ணுமாய் இருவரும் மாறி மாறிப் பாடுகின்ற எட்டுப் பாடல்கள் இந்நூலுள் உள்ளன. அவை காதல் நெஞ்சங்களை அழகுறப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

ஆண் "நான்போகும் திசைநோக்கி நடப்பாயா?"

என்று கேட்கிறான்.

பெண் "தேனாற்றில் சுவைகாண மறுப்பேனோ?" (52)

என வினாவாகவே விடை கூறுவதில்தான் எவ்வளவு இனிமை!

பெண் சிரித்துக்கொண்டே நடந்தாளாம்; ஆணோ அதைக் குறித்துக்கொண்டே நெஞ்சில் பொறித்துக்கொண்டானாம்! (53)

இதயமலர் கொண்டுவந்தேன் பெண்ணே – உன்
இனியமுகம் திரும்பிடுமா கண்ணே?

என ஆண் ஆசையைப் புலப்படுத்த, பெண்ணோ,

தேனொழுகப் பேசுகிறீர் இன்று – நாம்
சேர்ந்திருக்க வழிபார்ப்ப தென்று? (75)

என அவனை மணமாலை சூட்ட விரைவுபடுத்துவது காதலில் நெறிமுறையைப் புலப்படுத்துவதாயுள்ளது.

விழிகளைத் தேடி இதயம் நடப்பதும், (56)

"தரையில் துடிக்கும் மீன்போலத் தனியே கிடந்து துடிப்பதும்" காதலர் செயல்கள் (78).

காதலர்கள் களிப்பது காயும் நிலவில்தான் என்பதை, "காயும் நிலவில் அரசாட்சி" என்ற அடி நன்கு புலப்படுத்துகிறது (80).

ஆண் மனவீணை உனக்காகப் பாடும்
பெண் மயிலாக என்நெஞ்சம் ஆடும் (84)

என ஆடிப் பாடிக் காதலுறவாடி மகிழ்ந்தவர்கள்,

காவியம் ஒன்று படைத்திடுவோம்
கனவை நினைவாய் முடித்திடுவோம் (90)

என, திருமணக் காவியம் படைத்துத் தங்கள் காதல் கனவை நனவாக்கி மகிழ்ந்திடக் காண்கிறோம்.

இளமையிற்றோன்றும் காதல், உடல்பற்றியது; இளமை மறைந்த முதுமையில் நிலவும் காதலோ உள்ளம்பற்றியது. இதனை,

காலம் கடந்தபின்னும் – காதல்
கருத்தில் மணக்குதடி (48)

என்ற அடிகள் நன்கு விளக்குகின்றன.

தன்னைப் பிரிந்து சென்ற காதலனை எண்ணிக் காதலி,

மதிமுகம் என்னை மறந்தவன் சென்றானோ? (167)

'என்று கேட்பதில் அவள் ஏக்கம் நன்கு வெளிப்படுத்தப்படுகிறது.

காதலியின் இனிய பேச்சினை எண்ணிக் காதலன் நெஞ்சம்,

ஆயிரம் வீணைகள் பேசவில்லை – நான்
அன்றொரு மாலையில் கேட்டதெல்லாம் (83)

என அசை போடுகிறது. காதலியின் பேச்சினிமை ஆயிரம் வீணை இசையையும் வென்றுவிடுகிறது!

காதலியைப் பிரிந்துள்ள காதலன்,

என்மனம் அறிவாளோ? – பிரிவால்
இன்னமும் என்னை அரிவாளோ? (71)

எனப் புலம்புகிறான். 'அறிவாளோ அரிவாளோ?' வல்லின இடையின மாற்றத்தால் புலப்படுத்தும் கருத்து இனிக்கிறது.

கவியரங்கம்

நாட்டில் நாள்தோறும் கவியரங்குகள் நடந்தவண்ணம் உள்ளன. கவியரங்கக் கவிதைகளைப் புனையச் சில தனி நுணுக்கங்கள் உண்டு. அந்நுணுக்கங்களை நன்கு கடைப்பிடித்துக் கவிஞர் மோகனரங்கன் தம் கவிதைகளை யாத்துள்ளார்.

கவியரங்கக் கவிதையைப் படிக்கத் தொடங்குங்கால், தலைவர்க்கு வணக்கம் சொல்வர். தலைவரின் பெருமையை உரைப்பதோடு, அதைத் தம் சொல்லாட்சிச் சிறப்பால் அவையினரைக் கவரும்படியான அமைப்பில் வெளிப்படுத்தவும் வேண்டும். இச் சோதனையில் திரு.மோகனரங்கன் வெற்றி பெறுகிறார். உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் தலைமையை,

நல்லகவி தருவதிலே வல்லகவி சுரதாபோல்
இல்லைகவி; இரண்டுசெவி போதாதே என்னும்புவி!
கவியரங்கப் பெருந்தலைவ! கரங்குவித்து வணங்குகின்றேன் (116)

எனப் பாடுகிறார். கவி, செவி, புவி என்னும் சொற்கள் அடுத்தடுத்து விழுந்து ஓசை நயத்தை உண்டாக்கி அவையை ஈர்க்கும் நிலையை உண்டாக்கிவிடுகின்றன.

கவியரங்கை நடத்துவோர், பங்கு பெறுவோர், சுற்றுச்சூழல் ஆகியவற்றை இணைத்துப் பாடி அவையினரின் கவனத்தைக் கவர்வதும் கவியரங்க முறையாகும். வேலூர் ஊரிசுக் கல்லூரிக் கவியரங்கில் கவிஞர் கலந்துகொள்கிறார். அப்போது பாரீசில் உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகிறது. இவ்விரண்டையும் இணைத்து,

பாரீசு நகரங் கூட
பைந்தமிழ் கேட்கும் காலம்!
ஊரீசு மாண வர்க்கும்
ஊக்கந்தான் தோன்றி டாதா? (112)

எனப் பாடும் வேளையில் கரவொலி எழுவது திண்ணமன்றோ?

கவியரங்கில் தாம் எடுத்துக்கொண்டுள்ள தலைப்புகட்கு விளக்கமான வரையறை தருவது வரவேற்கக்கூடியதாய் அமையும். ஆடம்பர மோகம் என்ற தலைப்பில் பாடுகின்ற கவிஞர்,

பாடுபட்டுத் தேடாமல் பகற்கொள்ளை அடிப்பவர்கள்
ஆடுகின்ற பணக்கூத்தே ஆடம்பர மோகம் (98)

என்றும், அமைச்சு என்ற தலைப்பில் பாடுகையில்,

முன்னேற்றம் முயற்சிக்குப் பிறந்த பிள்ளை
முயற்சிக்குக் கணவன்தான் அமைச்சன் (104)

என்றும் வரையறை தருவது சிறப்பாயுள்ளது.

கவிதையின் இடையிடையே சில வினாக்களை எழுப்பி அவையினரைக் கவர்வதுவும் கவியரங்க முறைகளுள் ஒன்றாம். மோகனரங்கத்தின் கவியரங்கக் கவிதைகளில் அத்தகைய வினாக்கள் அருமையாய் அமைந்துள்ளன.

(அ) உப்புநீர்க் கடலுக்குள் ஒருமூட்டை சர்க்கரையை
அப்படியே கவிழ்த்தாலும் அலைகடல்தான் இனித்திடுமா? (109)

(ஆ) மாலைக்கண் உடையோர்க்கு வானநிலா தெரிவதுண்டோ? (120)

(இ) துடுப்பை உடைத்துவிட்டால் தோணிதான் போவதுண்டோ? (122)

(ஈ) பூங்கொடியின் வேருக்கு நெருப்பு வைத்தால்
பூக்கள்தான் சிரிப்ப துண்டா? (123)

(உ) கொட்டுகின்ற மழைநீரை வெறுக்கும் மீன்கள்
கோடைதரும் வெப்பத்தில் மகிழ்வ துண்டா? (129)

(ஊ) முள்ளில் நடந்தால்பின் முல்லையா முறுவலிக்கும்? (136)

எதிர்மறை விடையைத் தருகின்ற இவ்வினாக்கள் கேட்போரின் நெஞ்சத்தே மகிழ்வலைகளைத் தவறாது எழுப்புவனவாம்.

மோகனரங்கனின் கவியரங்கக் கவிதைகளில் பொருள்வளம் நிறைந்த நயமான பாடலடிகள் நிரம்ப உள்ளன.

(அ) நூலகந்தான் சமுதாய நோய்களுக்கு மருந்தாகும். (126)

(ஆ) சிலந்திவலை மான்பிடிக்கப் பயன்படாது! (126)

(இ) மண்ணையும் உண்பதற்கு வகைசெய்தால் இந்த
மண்ணெல்லாம் மறைந்துவிடும்! எங்கோ பறந்துவிடும். (133)

(ஈ) தொண்டுசெய்து வாழ்பவர்கள் தொடர்கதைபோல் இவ்வுலகில்
என்றென்றும் வாழ்வார்கள் : எள்ளளவும் ஐயமில்லை! (142)

(உ) நொண்டிக் குதிரைகளால் கிண்டிப் பந்தயத்தில்
வெற்றிபெற முடியாது; வெறுங்கனவு நடக்காது! (145)

(ஊ) ஊமையையும் பாடவைக்கும் பாட்டாம் எங்கள்
உலகறிந்த பாவேந்தன் பாடு கின்ற (பாட்டு) (148)

அறிஞர்கள்

அறிஞர்களைப் பாடுமிடங்களிலும் மோகனரங்கனின் கவிதை ஆற்றல் வெளிப்படக் காண்கிறோம். பாடப்படும் பெரியவர்களின் இயல்புகளையும் பெருமைகளையும் பைந்தமிழில் அவர் எடுத்துரைப்பது பரவசமூட்டக்கூடியதாய் உள்ளது.

கவிமணியே உன்றன் கவிகேட்ட பிள்ளை
சுவைமிகுந்த தேனைத் தொடுமோ? (149)

என்று கவிமணியின் கவிதை இனிமையையும்,

எளிமையில் இன்பம் கண்டீர்!
எல்லோரும் கற்றுக் கொள்ள

வளமையில் அடக்கம் கொண்டே
வழிகாட்டி ஆனீர் ஐயா! (150)

என மு.வ. அவர்களின் எளிமையையும் இனிய பண்பினையும்,

இன்பத் தமிழ்படிக்க எம்மை மடிஅமர்த்தும்
எங்கள் இலக்கணத் தூத்தாவே! (152)

என மே.வீ. வேணுகோபாலனார் அவர்களின் முதுமையையும் இலக்கணப் புலமையையும்,

நாடகப் பூவின் நறுந்தேனே – சான்றோர்கள்
ஏடெடுத்துப் பாடும் இலக்கியமே! (153)

எனத் தி.க. சண்முகனாரின் நாடகப் புலமையையும் சான்றாண்மை யினையும்,

கடலும் மழைமுகிலும் – அவன்
கருணையில் தோற்கவைத்தான் (89)

எனக் காந்தியடிகளின் கருணையையும் பாடிப் புகழ்கிறார்.

தமிழ்

தமிழ்ப்பெரியார்களிடம் பற்றுக்கொண்டது போலவே தமிழ் மொழியிடத்தும் இலக்கியங்களிடத்தும் எல்லையற்ற பற்றுக் கொண்டுள்ளார். தமிழ் நாட்டில் தமிழ்மொழி வாயிலாகவே கல்வி நடைபெற வேண்டும் என்பதனை

தாய்மொழிக் கல்வி ஒன்றே
தலையினை நிமிர்த்தும் (154)

என வலியுறுத்துகிறார்.

மணமக்கட்கு வாழ்த்துரைக்கும் வேளையில்,

நித்தமுங்கள் வாழ்க்கைக்குச் செலவ ழிக்கும்
நேரத்தில் நூற்றிலொரு பங்கை நல்ல
முத்தமிழின் வளர்ச்சிக்குச் செலவு செய்வீர்! (168)

என அறிவுரை பகர்கிறார். தமிழ் மொழியில் சிறந்து விளங்குவது திருக்குறள்; அதன் வழி ஒழுகி மக்கள் நலம்பெற வேண்டும் என்றும் எடுத்துரைக்கிறார்.

சுவைகள்

கவிஞரின் கவிதை அடிகளைப் படிக்கும்பொழுது பல்வேறு வகையான சுவையுணர்வுகள் நம் உள்ளங்களில் பளிச்சிடுகின்றன.

சூண்டில் அடைத்துவிட்டுப் – பழம்
கொண்டு கொடுக்கவந்தார்!
தீண்ட விரும்பவில்லை – அங்கே
சிறகு துடிக்கிறதே!

எனக் கூண்டுக்கிளியைப் பாடும் அடிகள் இரக்கங் கலந்த வருத்தத்தை உள்ளத்தே தோற்றுவிக்கின்றன.

கன்னிப் பருவமும் மின்னும் உருவமும்
பின்னி வரும்நடை எண்ணி உருகிட – அஞ்சுகம் வந்தாளே (34)

என்பதில் காதலாற்றோன்றிய இன்பச் சுவையையும்,

என்போல், ஓட்டாண்டி மணக்கப்பெண் கொடுக்க வேண்டாம் (177)

என்பதில் எள்ளல் காரணமாய்த் தோன்றிய நகைப்பையும்,

பானைதான் நிறையவில்லை நமது வீட்டில்
பால்வார்த்தை பொழிகின்றீர்! பசியா தீரும்? (158)

என்பதில் ஏழ்மை காரணமாய்த் தோன்றிய இளிவரல் நிலையையும்,

கோடைக் காலமே, கொஞ்சம் இரங்குவாய்
ஓடைத் தாமரை உலர்ந்து போனதே (172)

என்பதில் வெப்பம் காரணமாகத் தோன்றிய வெறுமை உணர்வையும் நன்கு உணர முடிகிறது.

ஒப்பீடு

இந்நூற்றாண்டின் பெருங்கவிஞர்களாய் விளங்கிய பாரதியார், பாரதிதாசன் ஆகிய இருவரின் தாக்கம் பெருமளவிலும் மற்றும் பண்டைத் தமிழ்ப்புலவர்களின் தாக்கமும் இக்கவிஞரிடம் ஏற்பட்டுள்ளதை அவருடைய கவிதைகளைக்கொண்டு அறிகிறோம். பாரதியார்,

ஒன்றுபட் டால்உண்டு வாழ்வே – நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே!
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் – இந்த
ஞானம் வந்தூற்பின் நமக்கெது வேண்டும்?

என்றார். ஒற்றுமைபற்றிய இக்கருத்தை ஏற்கும் மோகனரங்கன்,

ஒற்றுமை கொண்டவர் தோள்களிலே – இந்த
உலகினைத் தூக்கி நிறுத்திடலாம்
சற்றதில் வேற்றுமை நேர்ந்ததெனில் – வெற்றி
தழுவிடும் வாழ்க்கை வருவதில்லை

எனக் குறிப்பிடக் காண்கிறோம்.

கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ?

என்ற பாரதியின் பாடலடிகள்,

விழியை இழந்துவிட்டே – கோடி
விளக்கினை வாங்கி வைத்தேன் (59)

எனும் மோகனரங்கனின் பாடலடிகட்கு முன்னோடியாயுள்ளன.

தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவ தில்லை
தமிழ்த்தொண்டன் பாரதிதாசன் செத்த துண்டா?

என்ற பாரதிதாசனாரின் பாடலடிகள் கவிஞர் மோகனரங்கத்திடம்,

தமிழ்வளர்த்த பெரியார்கள் சாவினிலே மறைவதில்லை (142)

என உருவெடுத்துள்ளது.

இராமலிங்க அடிகளார் தம் விண்ணப்பக் கலிவெண்பாவில்,

பாதகம்என் றாள்எனக்குப் பாற்சோறு –
தீதுகள்எல் லாம்எனது செல்வங்காண் –
சூதென்பது) எல்லாம்என் சுற்றங்காண் –

என்று குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். அப்பாடல்களின் சாயலிலே நின்று கவிஞர் மோகனரங்கன் அவர்களும்,

பொய்கள்என் தோழர்கள் – பொன்
பொருளே உறவினர்கள்.....
கொடுமைகளே என்பாதை – என்றும்
கொலைவெறி என்கொள்கை (55)

என்று கூறுவதைக் காண்கிறோம்.

நளனது ஆட்சிச் சிறப்பைக் கூறவரும் புகழேந்தியார் பைங்கிளியும் பருந்தும் ஒரு கூட்டில் வாழும்படியாய் அவன் சமாதான ஆட்சி நடத்தினான் எனச் சிறப்பிக்கிறார்.

சீத மதிக்குடைக்கீழ் செம்மை அறங்கிடப்பத்
தூதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான் – மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு

என்பது நளவெண்பாப் பாடல். கம்பராமாயணத்தில் குலமுறை கிளத்து படலத்தில் மாந்தாதாபற்றிக் குறிப்பிடுகையில் கம்பர்,

.....புலிப்போத்தும் புல்வாயும்
ஒருதுறையில் நீருண்ண உலகாண்டோன் ஒருவனுளன்

எனக் குறிப்பிடுகின்றார். இந்நூலில் அக்கருத்துகள் ஏற்கப்பட்டு,

கீரியும் பாம்பும் ஒருவீட்டில் – பச்சைக்
கிளியும் பருந்தும் ஒருகூட்டில்.....
மானும் புலியும் ஒருகரையில் – தண்ணீர்
மகிழ்ந்து குடிக்கத் தொடங்கிவிட்டால் (88)

நாட்டில் அமைதி நிலைக்கும் என்று பேசப்பட்டுள்ளது.

கமழும் மலர்கள் இருக்கையிலே
காகிதப் பூக்கள் பறிப்பதென்ன? (54)

என்பதில்,

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

என்ற திருக்குறளின் கருத்துத் தாக்கத்தைக் காண்கிறோம்.

..... பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்

என்னும் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் புறநானூற்றுப் பாடலடியின் கருத்து,

வையகம் எங்கும் மணிமுடி தூங்கும்
மன்னவன் வாழ்க்கை வருவதென் றாலும்
பொய்வளர்க் காதே (76)

என இந்நூலில் இடம் பெறுகிறது.

வாழ்த்து

தம் நண்பரைப்பற்றிக் கூற விழையும் கவிஞர்,

எத்தனை எழுதி னாலும்
என்னரும் நண்பர் தம்மை
மொத்தமாய் மொழிய லாகும்
முழுத்திறன் பெற்றேன் இல்லை (183)

என்று கூறிடக் காண்கிறோம். அவர் பாடிய அதே நிலையிற்றான் நாமும் இருக்கிறோம். அவர் கவிதையின் சிறப்பை எத்தனை எழுதினாலும் மொத்தமாய் மொழிந்ததாய் ஆகாது.

எழுதி வைத்த கவிதையிலே
இதயம் பேச வில்லையா? (87)

என ஒரு பாடலில் உள்ள இக்கேள்வி நம்மை நோக்கி எழுப்பப் பட்டதாய்க் கொண்டோமானால், "ஆம்! நீர் எழுதி வைத்துள்ள கவிதையிலே நும் இதயக் குரலைக் கேட்கிறோம். அஃது எம் காதுகள் வழியே நுழைந்து கருத்தில் ஆழப் பதிந்துவிட்டது" என்ற விடையே சொல்லத் தோன்றும்.

"காலம் எழுதட்டும் தீர்ப்பு" (96)

என்பது அவருடைய ஒரு பாடல் அடி. வருங்காலம், "இவர் வளமான கவிஞர்" என்ற தீர்ப்பை எழுதத்தான் போகிறது. அதற்கு இந்நூலே அடித்தளமாய் அமைகிறது.

வாழ்க கவிஞர் மோகனரங்கன்!
வளர்க அவர்தம் படைப்புகள்!

நூல் ஆக்கம்	கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்
வகைமை	கவிதை
வெளியீடு	வசந்தா பதிப்பகம், சென்னை. (1977)

7

கனவு மலர்கள்

கவிஞர்கள் துணிவு மிக்கவர்கள். தம் மனத்திற்பட்ட உண்மைகளை அஞ்சாது எடுத்துரைக்கும். ஆற்றல் அவர்கட்கு உண்டு. இந்நூலின் ஆசிரியர், நண்பர் இளந்தேவன் அதற்கு விதிவிலக்கானவர் அல்லர்.

கால ஆற்றின் கரையில் நிற்கும்
ஆல மரம்நான்; அழியவே மாட்டேன் (பக். 33)

என்னும் தன்னம்பிக்கையோடு நூலைத் தொடங்கும் மிடுக்கைப் பார்க்கிறோம். கவிஞர்களின் பாடற்பொருள் 'உலகம் ஒன்று' என்ற உயரிய நோக்கத்தை விளக்குவதாய் இருக்க வேண்டும் என்பதை,

கலகம் நீங்கிய உலகம் ஒன்றெனும்
கவிஞர் பாடலின் கருத்தும் இங்குபார் (பக். 36)

என்னும் அடிகளின் வாயிலாய் அவர் விளக்குகிறார்.

புதிய கற்பனை

கற்பனையே கவிதையின் உயிரோட்டமாய் இருப்பதை அறிந்த கவிஞர், அக்கற்பனைகளைப் புதிய கோணத்தில் படைத்துக் காட்டுவதை அறிந்து இன்புறுகிறோம். நிலவையும் உடுக்களையும் காணுகின்ற கவிஞர், நிலவைப் பாற்பந்தாகவும், உடுக்களை அப்பாற்பந்தின் சிதறல் துளிகளாகவும் காணுகின்றார்.

பாலின் நிறத்தை வடிகட்டி – ஒரு
பந்தைச் சமைத்து விட்டபின்னால்
காலம் உதறி விட்டதூளோ – அங்குக்
காணும் சிறுமணி கள்தோழி! (பக். 42)

என்பது அப்புதுமைக் கற்பனை.

கண்ணீர் வெள்ளம்

உணர்ச்சியில் மூழ்கிக் கிடக்கும்போது உருவாகும் கவிதைகள் உள்ளங்களை ஊடறுத்துச் செல்லும் வலிமை பெற்றவை. இன்ப உணர்ச்சியோ, துன்ப உணர்ச்சியோ கவிஞர்களைத் தாக்கும்போது அழகுமிக்க கவிதைகள் பிறந்து

விடுகின்றன. குழந்தையை இழந்து தவிக்கும் கவிஞனின் சோகம் நம் நெஞ்சைத் தொடுகிறது. தம் இறந்த குழந்தையைப் புதைக்கும்போது,

சீரடியில் மண்ஒட்டச்
சினக்கின்ற நான்தானா,
ஈரடியில் குழிவெட்டி
இறக்குதற்குச் சம்மதித்தேன் (பக். 52)

என்று அவர் புலம்புவது நம்மையும் சோகத்திற்குள்ளாக்குகிறது. குழந்தை என்பதால் ஈரடியில் குழி வெட்டி என இயல்பு பொருந்தக் கூறுகிறார்.

இதயத்தின் சதைச்சுவரில்
இடிவிழுந்து தாக்காதா? (பக். 54)

என்று அவர் புலம்புவதுபோலவே நம் உள்ளங்களையும் புலம்பச் செய்துவிடுகிறார். கண்ணீரினிடையே கவிஞர்கட்குப் பிறக்கும் எண்ணங்கள் சங்கமிப்பதை இலக்கியங்களைப் படிக்கும்போது நாம் உணர்கிறோம்.

நாளைக்கு வழியறியா
நம்தகப்பன் தமிழ்படித்த
ஏழைக் கவிஞனெனும்
இரக்கத்தால் போனாயா? (பக்.53)

என்னும் அடிகளைப் படிக்கும்போது, இவ்வடிகள் கவிஞர் ச.து.சு.யோகி, தம் மகள் சிறுமி இராஜத்தை இழந்தபோது ஏங்கிப் பாடிய,

அப்பன், இவன்ஏழை
அரைக்காசுக் கஞ்சியில்லை
இப்பரிசு வேண்டாம்
எனத்துறந்து போயினையோ!

எனும் அடிகளை நினைவுக்குக் கொண்டுவருவதை உணரலாம்.

சமுதாயச் சிந்தனை

இயற்கை கவிஞர்கட்கு ஒரு கொண்டாட்டப் பொருள். தங்கள் முழுமனத்தையும் அதில் செலுத்தி, எத்துணை நேரமானாலும் உலகை மறந்து அதில் திளைப்பவர்கள், கவிஞர்கள். இயற்கையைச் சுவைப்பதோடு மட்டும் அவர்கள் நின்றுவிடுவதில்லை; அதைக்கொண்டு சமுதாயத்திற்குப் பாடம் புகட்டவும் செய்கிறார்கள். கிராமத்து வாழ்வைப் படம் பிடித்துக் காட்டிய இக்கவிஞர்,

கற்றதோ உழைப்பு; வாழ்வில்
கண்டதோ வறுமை மட்டும் (பக். 59)

என்று கூறி அவ்வூர் மக்களின் வறுமை நிலையையும் அவலப் போக்கையும் சமுதாயத்திற்குச் சுட்டிக் காட்டுகிறார். இந்நிலை ஏற்புடையதுதானா என்று படிப்பவர்களைச் சிந்திக்க வைக்கும் ஆற்றல் கொண்டனவாய் இவ்வடிகள் விளங்குகின்றன. அது போலவே,

சேற்றினிலே கறைபடிந்த
சேலையைக் களைந்து, கொஞ்சம்
ஆற்றினில் பிழிந்து, பாதி
ஆடையாய்ச் சுற்றி வீசும்
காற்றினில் பாதிச் சேலை
காயட்டும் ஈரம் என்று
நாற்றினை நட்ட பெண்கள்,
நடுக்கத்தில் வீடு செல்வார் (பக். 59)

என்னும் பாடல், நாற்று நட்டு வீடு திரும்பும் ஒரு பாட்டாளிப் பெண்ணை ஓவியமாக்கிக் காட்டுவதோடு கிராம மக்களின் இல்லாமையையும் உணர்த்தி நிற்கிறது.

உருவகங்கள்

உருவகங்கள் கவிதைக்கு மெருகூட்டுகின்றன. ஆறுகளை நாட்டின் நரம்புகள் என்றும், மேகங்களை வானக் காட்டின் எருமைகள் என்றும் (பக். 64), திரு. சசிகுமார் இரு குழந்தைகளை ஏங்கவிட்டு இறந்த தன்மையை,

குறுந்தொகைகள் இரண்டிங்கு
குமுறியழச் சென்றுவிட்ட
நெடுந்தொகையே நீளங்கள்
நினைவினிலே கமழுகிறாய் (பக். 138)

என்று கூறுவதும் உயரிய உருவகங்கள்.

சாதிக் கொடுமை!

சாதி சமய பேதங்கள் என்றுமே நமக்கு எதிரிகள்.

உறுதி உறுதி உறுதி
ஒன்றே சமுகம் என்றெண் ணார்க்கு
இறுதி இறுதி இறுதி

என்று கவிஞர்கள் இடித்துரைத்தும், சமூகச் சீர்திருத்தவாதிகள் இடையறாது பாடுபட்டும் சாதிச் சனியன் இன்னும் நம்மை விட்டபாடில்லை. 'விழுப்புரங்கள்' அவ்வப்போது நாட்டில் நடைபெறவே செய்கின்றன. இக்கொடுமையைக் காணும் கவியுள்ளம்,

விழுப்புண் பெறுவது வீரர்களுக்கு
விழுமிய செயலாகும் – ஆனால்
விழுப்புரப் புண்களைப் பெறுவது வெட்கம் (பக். 85)

என வேதனையையும் வெட்கத்தையும் வெளிப்படுத்துவதைக் காண்கிறோம்.

மக்கள் கவிஞர்

இக்கவிஞர், மக்கள் கவிஞர் என்பதற்கு, "வங்கப் பெண்ணின் நெஞ்சக் குமுறல்" (பக். 88, 89), 'சாஸ்நாலா நிலக்கரிச் சுரங்கத்தில் மண்ணுக்குள் மூழ்கி இறந்த தோழர்கள்' (பக். 90-91) போன்ற பாடுபொருள்கள் சான்று தருகின்றன.

பட்டினியால் மக்கள் வாடிக் கிடக்க நாட்டில் பட்டி மன்றங்கட்குக் குறைவில்லை என்று கவிஞர் உள்ளம் அங்கலாய்க்கிறது.

கஞ்சிக்கு நாக்கைச் சப்பிக்
கலயத்தை மக்கள் தேட,
நெஞ்சுக்கு நீதி யின்றி
நிலைமையை மறக்க ஆங்கே,
இஞ்சியா சுக்கா காரம்
எதில்நன்கு தெரியு தென்று,
செஞ்சொல்லில் புலவர் வாதம்
செய்யவோர் பட்டி மன்றம் (பக். 94)

என்பது அவரின் வேதனைக்குரல். கருத்தூட்டும் பட்டிமன்றங்கள் வேண்டாம் என்பது கவிஞரின் கருத்தன்று. நாட்டில் நலிந்து கிடப்போரை நினைப்பாரில்லையே என்ற கவலையையே கவிஞர் இதன் வாயிலாய் வெளியிடுகிறார்.

பொதுமைச் சமுதாயம்

நாட்டில் அவல நிலைமை எந்த அளவு ஓங்கியிருக்கிறது என்பதை,

சாக்கடைகள் கூடுமிடத் தோரம் – பகல்
சாய்ந்தே இரவுடர் நேரம் – தினம்
பார்க்கமனம் பதறும் பச்சைக் குழந்தையுடன்
பட்டினியாய்த் தூயிருக்கும் கோரம் – இங்கு
பாவி வறுமைக்(கு) அதிகாரம்! (பக். 104)

என்னும் அடிகளில் கவிஞர் காட்டுகிறார். வறுமைப் பாவியை விரட்டிப் பொதுமை பூக்கும் மலர்ப்பூங்காவாய் நாட்டை ஆக்கிட வேண்டும் என்பது கவிஞரின் ஆசை. அதனால்,

பொதுமைச் சமுதாயம் நிறுவத் துடிக்கின்ற
பொறுப்புடையார் தாமினிமேல் ஏங்கார் – அது
பூக்கும்வரை எந்நாளும் தூங்கார்! (பக். 105)

எனப் பாடுகிறார். இத்தகைய நிலையை உருவாக்க வெறும் வாய்ச்சொல் வீரம் போதாது; கடின உழைப்புத் தேவை என்பதையும் கவிஞர் எடுத்துக் கூறுகிறார்.

சோஷலிசம் பேசுகிறார் வீரமாய் – நான்
துடிதுடிச்சுச் சாகுமுன்னே சோஷலிசம் வந்திடுமா?
சொற்களாலே சோறுபோட முடியுமா? – வெறுங்
கற்குவியல் கோயிலாக முடியுமா? (பக். 119)

என்பன அவரின் ஆத்திரங்கலந்த வினாக்கள்.

குருதிக் கண்ணீர்

சென்னை நகரத் தெருக்களில் உள்ள புதை குழிகளில் மனிதர்கள் மூழ்கி, மலத்தோடு கலந்துவரும் நீரிலே முக்குளித்து வேலை செய்வதைக் காணும்போது மனித உள்ளங்கொண்ட எவரும் கலங்காமல் இருக்க முடியுமா? இந்நிலை இருப்பது மனித குலத்துக்கே மானக்கேடன்றோ என்று இடித்துரைக்கிறார், கவிஞர்.

தூய தமிழில் துப்புர வாளன் நீ!
ஆனால்உன் உடம்போ அசிங்கத் தோணி (பக். 144)

இவ்வடிகள் சமுதாயத்தை ஏளனம் செய்வதோடு சிந்திக்கத் தூண்டுவனவாயும் உள்ளன.

ஏழையின் ஏற்றம்

பாட்டாளிகள் - ஏழைகள் - துயர் துடைக்கப்படவேண்டும்; அதுவே உண்மைத் தொண்டு என்பதை அண்ணாவைப் பாடுமிடத்தில் அழகாய்க் குறிப்பிடுகிறார்.

ஏழைமனை விளக்குகளுக்(கு)
இளஞ்சிரிப்பால் ஒளியேற்றித்
தோளினிலே அவருடைய
துயர்ச்சுமையைத் தூக்கியநீ (பக். 128)

என அண்ணாவின் சிரிப்புக்கும் பெருமைக்கும் காரணம், அவர் ஏழை மக்களின் இல்லங்களில் விளக்கேற்றியதே என்பதைச் சுட்டிச் செல்கிறார்.

பாத்தென்றல்

பாரதிதாசனைப் பாடும்போது,
புரட்சிகளை உருவாக்கும் உனது பாடல்
பூந்தென்றல் குளிர்ச்சிதர மறந்த தில்லை;

நெருப்புமழை பொழிகின்ற நீல வானம்
நிலவுமழை பொழிவதற்கு மறந்த துண்டா? (பக். 135)

என்கிறார். இதே போன்று சமுதாயச் சிந்தனைகளை நெருப்பு மழையாய்க் கொட்டுகின்ற கவிஞர் இளந்தேவன், நிலவுமழை போல இன்பநலம் நிறைந்த பாடல்களைப் பாடியிருப்பதையும் நூலில் காண்கிறோம்.

சிவப்புச் சிந்தனை

இந்நூல் கொண்டு கவிஞரின் சிவப்புச் சிந்தனையை நாம் நன்கு உணர முடிகிறது. இச்சிந்தனையால் விளைய வேண்டிய விளைவு என்ன என்பதையும் கவிஞர் எடுத்துரைக்கிறார்.

நாடுகளின் எல்லைகளைச்
செவ்வெள்ளம் அழிக்கட்டும்!
நமக்கென்று புத்துலகம்
நாளைக்கே மலரட்டும் (பக். 144)

என்பதே அவ்விழைவு. அவர் விழைவு விளைவெய்த நாமும் உழைப்போம்.

தேன் துளிகள்

கவிஞர் மொழியிலேயே அவரை வாழ்த்த வேண்டுமானால் அவருடைய இந்த,

ஏடெலாம் புரட்சிப் பாடம்!
எழுத்தெல்லாம் செந்தேன் சொட்டு!

நூல் ஆக்கம்	கவிஞர் இளந்தேவன்
வகைமை	கவிதை
வெளியீடு	பொன்முத்து பதிப்பகம், சென்னை. (1979)

8

நாயகப் பேரொளி

தங்கக் கவிஞர்

திரு.முகமதுமைதீன் சிறந்த சந்தக் கவிஞர்; அவர் இயற்றியுள்ள 'நாயகப் பேரொளி', மாற்றறியாச் செழும் பொன்னாய்ச் சுடர் வீசிச் சிறப்பதால் இவரை இசுலாமியச் சமுதாயம் பெற்றெடுத்துள்ள தங்கக் கவிஞர் என்றும் குறிப்பிடலாம். நபிகள் நாயகத்தின் பெருமையைக் கூறும் வாயிலாக இந்நூல் மனித சமுதாயம் பின்பற்ற வேண்டிய, கட்டிக்காக்க வேண்டிய ஒழுக்க நெறிகளைச் சுட்டிச் செல்கிறது. இந்நூலின் பாடல்களைப் படிக்கக் கேட்கும்போது, கருத்துத்தேன் காதில் சொட்டுச் சொட்டாய்ப் பாய்ந்து உள்ளத்தை இன்பத்தில் தோய்க்கிறது.

அவையடக்கம்

'நபிகள் கருணையைச் செந்தமிழ்க் கவிதையால் கழறிடத் துணிந்தேன்' (பக். 1) என்று அடக்கமாய் நூலைத் தொடங்குகிறார், கவிஞர். புலவர்கள் அவையடக்கப் பாடலை நூலின் தொடக்கத்தி லேயே பாடிவிடுவது வழக்கம். ஆனால், இக் கவிஞரோ நூலின் இடையிடையே அவையடக்கப் பாடல்களைக் கூறிச் செல்கின்ற புதிய போக்கினைக் கையாண்டுள்ளார். கவிஞர்,

நிறைமதி உடையோர் வாழ்த்த
நீள்கவி நெய்து வைத்தேன் (பக். 8)

என்றும்,

சீரொழுகு மழலைவாய் படிக்குமாப் போல்,எளிமை
செய்துளேன்

என்றும் கூறித் தம் கவிதைகளை ஏற்குமாறு வேண்டுகிறார். ஆற்றலில்லாத தாம் ஆற்றல் வாய்ந்தோரைப் பாடுவதாய்க் குறிப்பிடும் அவரது அவையடக்கம் நயம் நிறைந்ததாய் விளங்குகிறது.

வில்லை அறியாதான்
வேட்டைக்குச் சென்றாற்போல்
சொல்லை அறியாதான்
சோடித்த கவிதையிது (பக். 56)

என்றும்,

நிலமிலான் உழவில் வெற்றி
நிலைத்திட நினைத்தாற் போலப்
பலமிலான் நபிகள் பற்றிப்
பாடமுன் வந்தேன் ஏற்க (பக். 58)

என்றும் பணிவுடன் கூறித் தம் பாடல்களை ஏற்க வேண்டுகிறார்; என்றாலும், அடக்கம் காரணமாய் இவ்வாறு அவர் பாடியிருக்கிறாரே தவிர, உண்மையில் அவர், குறி பார்த்து எய்கின்ற சிறந்த வேட்டைக்காரராயும், சொந்த நிலத்துடன் தேர்ந்த உழைப்புமுள்ள உழவராயும் விளங்குகிறார் என்பதை இந் நூலைப் படிப்போர் உணரலாம்.

தமிழ்ப்பற்று

மணிமொழித் தமிழ், பழந்தமிழ்; மேம்படு தமிழ், எளிய தமிழ், முறைதமிழ், வான்தமிழ் என்ற குறிப்புகளும்; வாய்மை வளர்மொழி; மாங்கனி பொதிந்த மாச்சுவை நிகர்த்த மாத்தமிழ் என்னும் பாராட்டுகளும் ஆசிரியர் தமிழினிடத்துக் கொண்டுள்ள அளவற்ற பற்றினைப் புலப்படுத்துகின்றன.

நபிகள் நாயகம்

நபிகள் நாயகத்தின் தோற்றத்தினையும் தொண்டுள்ளத் தினையும் மக்களைக் காக்கும் கருணையையும் கனித்தமிழில் கவிஞர் அமைத்துக் காட்டுவது அருமையாய் உள்ளது. நபிகள்,

சிவப்பொடு வெண்மை சார்ந்த செவ்வொளி மேனி கொண்டவர்; நடுத்தர உயரமும், எடுப்பான தோற்றமும் வாய்ந்தவர்; தோள்வரை நீண்டு தொங்கும் தூய் முடியினர்; விரிந்த நெற்றியும் மின்னல் போன்று பளிச்சிடும் சிரிப்பும் கொண்டவர்; பால்நுரை போன்ற வெள்ளாடை தரித்தவர் (பக். 86)

– இது நபியின் தோற்றம்.

பனிநீர் போன்ற உள்ளத் தூய்மை (பக். 94)
அனிச்ச மலரின் மென்மை மனம்;
அழகுத் தாழை மடலின் குணம் (பக். 83)

– இது நபியின் உள்ளம்.

ஞானச் சுடராய்த் திகழ்ந்தார்; நலிந்தோர் பக்கம் இருந்தார் (பக். 84)

- இது நபியின் தொண்டு.

பாழடைந்த பாலை – நபியால்
பழம்உதிரும் சோலையாக மாறியது (பக். 70)

- இது நபியின் தொண்டின் விளைவு.

விளியில் விரிவுரை

நபிகளை விளிக்கும் வாயிலாய் அவர்தம் அருமை பெருமைகளை எடுத்துக் கூறுகின்ற அருமையான உத்தியை ஆசிரியர் இந்நூலில் கையாண்டுள்ளார்.

வாடாத பேரீச்ச வளர்கனியின் சுவைபோன்ற
வாழ்வுபெற வைத்த நபியே (பக். 32)

என்பது போன்று நபியே என வரும் 101 விளிகளும்,

சூடாத ஞானச் சுடர்மலரே நாயகமே (பக். 4)
ஞால விளக்காய் நடமாடும் நாயகமே (பக். 51)

என்பன போன்று, 'நாயகமே' என வரும் 40 விளிகளும்,

குறையால் – மனக்
குறையால் – உளம்
உறைவார்க்(கு) அருள் மணியே! (பக். 42)

என்பது போன்று, 'மணியே' என வரும் 7 விளிகளும்,

நாடாண்ட போதும் – மணற்
காடாண்ட போதும்,நா
நடுவுநிலை கொண்டநபிகள் (பக். 31)

என்பது போன்று, 'நபிகள்' என்ற முடிவுகொண்ட 8 இடங்களும்,

மருட்டும் பொய்மை மார்க்க நெறி
மறையச் செய்த தீர்க்க நபி (பக். 50)

சித்தங் குலைகையிலே – புதிய
சிந்தனை தந்தநபி (பக். 52)

என்பன போன்று, 'நபி' என்ற முடிவு கொண்ட 28 இடங்களும் இந்நூலுள் அமைந்து நபிகளின் சிறப்பையும், அவர் மக்களை வாழ்வித்த தன்மையையும், அவரது அருட்பெருக்கத் தினையும் மிகவும் சிறப்பாய் எடுத்தோதுகின்றன.

இசுலாமிய இராமலிங்கர்

வாடாத பூவே, வற்றாத நீரூற்றே, எட்டாத வானே, கோல நிலவே, ஞால விளக்கே, கார்வின் நிழலே, பொருந்தக் கிடைத்த புதுமொழியே, மாயை தவிர்த்த மாமருந்தே, பாலைத் திணையின் பாற்குடமே என நபிகளை உருவகமாக்கியுள்ள அறுபதுக்கு

மேற்பட்ட இடங்கள் இந்நூலில் உள்ளன. இயற்கையோடு இணைத்து உருவகிக்கும் இந்தப் போக்கினைப் பார்க்கும்போது முகமது மைதீனை இசுலாமிய இராமலிங்க அடிகள் என்று வழங்கத் தோன்றுகிறது.

புலமைத்திறம்

நபிகள் நாயகம் தோன்றியபோது குறைஷியர்கள் குறிக்கோளேதுமின்றி வாழ்ந்திருந்த வாழ்க்கையைக் 'கறுப்பு நிலாக் காலம்' என அருமையாய்க் குறிப்பிடுகிறார். ஆசிரியர் குறைஷியர்களை,

குறியிலா(து) உழலும் குலாமர் (பக். 5)

எனச் சாடுகிறார்.

பகலிரவு பாராமல், உறவுமுறை தேறாமல்,
பாலுணர்வு கொண்ட காலம்;

நகைஅணிவில் நாட்டமும், தொகைவரவில் தேட்டமும்;
நங்கையர் கொண்ட காலம் (பக். 11)

என்னும் அடிகள், குறைஷியர்கள் பாலுணர்ச்சி வயப்பட்டவராய்ப் பண்பிழந்து வாழ்ந்தமையைக் காட்டுகின்றன.

மடையோடும் நீராக மதுவோடும் தெருவாகி
மதீனா சிதைந்த காலம்; (பக். 12)

வட்டிக்கும் வட்டிகளை வாங்கியுடல் கொழுக்கின்ற
வஞ்சனையோர் வாழ்ந்த காலம். (பக். 13)

இவ்வடிகள் குறைஷியர்களின் பாழ்பட்ட வாழ்க்கை நிலையின் உரை வரைவாகும்.

குறைஷியர்களின் குறிக்கோளற்ற, கொடுமை நிறைந்த வாழ்வைக் 'கறுப்பு நிலாக் காலம்' என்ற தலைப்பில் பாடியுள்ள பாக்கள் (பக். 11-16) அனைத்தும் தெவிட்டாத தீஞ்சுவையினவாய்த் திகழ்கின்றன; மேலும், கவிஞரின் புலமை நலத்தை வெளிப்படுத்துவனவாயும் அமைந்து சிறக்கின்றன.

சிறந்த சொல்லாட்சி

பொருளாழம், நிறைந்த சொற்கள் கவிதைகளை அணி செய்கின்றன. சிந்தனையைத் தூண்டுகின்ற அரிய சொற்றொடர்கள் கருத்தைக் கவர்கின்றன.

சிரியாத முகம்போன்ற சிறப்பற்ற சட்டம். (பக். 13)

கொல்லாமை இதயத்தின் நல்லாண்மை யாகும். (பக். 65)

வணக்கம் பணிவின் வித்தாகும். (பக். 81)

துள்ளிக் குதிக்கும் கயல்போலத்
தோன்றி மறையும் செல்வங்கள். (பக். 94)

கவிஞர் சில வினாக்களைத் தொடுத்து, அவற்றின்மூலம் நம் சிந்தனையைத் தூண்டுவதும் போற்றத்தக்கதாயுள்ளது.

வான்பரிதி ஒளிவீசி வரும்போது மெழுகுதிரி
வாங்கிஏன் எரித்தல் வேண்டும்? (பக். 74)

ஒடிகின்ற முருங்கையடி மடிகின்ற பூக்கள்போல்
ஒடுங்கவோ பிறந்து வந்தோம்? (பக். 78)

கற்பனை

கற்பனையில்லாத கவிதை, நூலில்லாக் காற்றாடியாகும். புலவர்களின் சிந்தனையாற்றலை வெளிப்படுத்துவன அவர்களின் கற்பனைகளேயாம். இந்நூலில் மாலைக்காலம் பற்றிய கவிஞரின் கற்பனை சிறப்புடையதாய் உள்ளது. மாலையில் தோன்றும் மேற்கு வானத்தைப் பாரதியார், "செழும்பொன் காய்ச்சிவிட்ட ஓடைகள்; வெம்மை தோன்றாமே எரிந்திடும் தங்கத் தீவுகள்" என்று குறிப்பிடுவார். பாரதிதாசனாரோ "செம்பொன்னை உருக்கிவிட்ட வானோடை தன்னிலே ஓர் செங்கதிர் மாணிக்கத்துச் செழும்பழம் முழுகும் மாலை" என்பார். கவிஞர் மைதீனுக்கு மாலை வானத்தைப் பார்த்ததும், சுட்ட பனம்பழம் நினைவுக்கு வருகின்றது. சுட்ட பனம்பழத்தைப் பிழியும்போது அதிலிருந்து மஞ்சள் நிறச் சாறு வழிந்தோடுவதை நாம் அறிவோம். பொன் அந்திப்போதினைப் பார்த்ததும் கவிஞருக்கு இந்தப் பனஞ்சாற்றினை மேற்கு வானத்தில் அள்ளித் தெளித்திருப்பதாய்க் கற்பனை எழுகிறது.

சுட்டதோர் பனம்ப ழத்தில்
சுரந்திடும் மஞ்சள் சாற்றை
விட்டெறிந் தாற்போல் தோன்றும்
வீழ்அந்தி காண்மின் காண்மின். (பக். 16)

என்கிறார்.

வருணனை

அரபு நட்டைப் பாடுகின்ற இக்கவிஞரின் பாலை நில வருணனை புதுமையானதாய் உள்ளது. உமறுப்புலவர் அரபுப் பாலையில் தமிழ்நாட்டு நானில வளங்களையும் தம் சீறாப் புராணத்தில் ஏற்றிப் பாடினார். சீறாப் புராணத்தில் அரபு, வளம் குலுங்கும் நாடாய்க் காட்டப்படுகிறது. நண்பர் மைதீனோ பாலையைப் பாலையாகவே பாடுகிறார். ஆனால், அதில் நானிலங்களையும் நயமாய் இணைத்துவிடுகின்றார். மருதம், குறிஞ்சி, முல்லை, நெய்தல் ஆகியவற்றின் தன்மைகளை விவரித்து,

இவையில்லாத பாலை நிலம் என்று சொல்லும்போது பாலையிலேயே மற்ற நிலங்களையும் பாடிவிடுகின்ற அவரது வருணனைச் சிறப்பு போற்றற்குரிய ஒன்றாய் அமைகின்றது.

அடைத்தேனில் மடைத்தண்ணீர் உடைத்தேகும் வயலற்ற
அனல்பூக்கும் அரபு நாடு. (பக். 17)

மருதநில வயலின் வளத்தை அருமையாய்க் கூறி, அத்தகைய வள வயலற்ற அனல் பூக்கின்ற அரபு நாடு என்று கூறுகையில் மருதநில வளத்தை நுழைத்துவிடுகிறார்.

உடைநனைய மழையற்ற ஓர்நாடு (பக். 47)
கழுகுநிற ஒட்டையடிக் கால்பரவு மணல்அரபு (பக். 37)

இவ்வடிகள் பாலையின் தன்மையை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. பாலைவனத்தைப் போன்றே, பாலைவன விலங்காகிய ஒட்டகத்தை

கார்கால மேகங்கள் கண்டஞ்சும் ஒட்டை; (பக். 22)
ஓடாத மணற்புனல்மேல் ஓடமெனத் திகழ்கின்ற
ஒட்டகம்; (பக். 34)

என வருணிப்பதும் பாராட்டத்தக்க முறையில் அமைந்துள்ளன.

அரபு நாட்டில் மழை பெய்தல் அருமை. கார்மேகங்கட்கு அங்கே வேலை இல்லை. கார்மேகத்தையே காணாத நிலை இருப்பதால், அதைக் கண்டால் ஒட்டகம் அஞ்சும் என்பது மிகவும் பொருத்தமான கூற்று. ஒட்டகத்தை ஓடம் ஆக்குகிறார். ஓடம் ஆற்று நீரிலே அலைந்து திரிவது; ஒட்டகமோ மணலிலே அலைந்து திரிவது. ஒட்டகத்தை ஓடம் எனும்போது அது அலைந்து திரியும் மணற்பாங்கினை ஆறு எனச் சொல்லவேண்டும். ஆறோ ஓடும் இயல்புடையது. மணலோ ஓடாத தன்மையது. ஆதலின், மணற்பாங்கினை 'ஓடாத மணல் புனல்' ஆறாய்க் காட்டுவது கவிஞரின் தேர்ந்த புலமைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது.

உவமைகள்

பொருத்தமான உவமைகளைச் சொல்வதிலும் .கவிஞர் சிறந்து விளங்குகிறார் என்பதை,

ஆமைமே லோடு போன்றே
அடிமனம் உறுதி கொள்ள; (பக். 62)
தேடாத வட்டைபோல் தெருவலையும் அடிமை (பக். 35)

என்னும் உவமைகள் புலப்படுத்துகின்றன.

நூற்பயன்

காணும் பலதீமை கண்மூடிக் கொள்ளாதோ?

நாணம் படிந்தோர்கள் நாடாள மாட்டாரோ?
சாதி ஒழியாதோ? சாத்திரங்கள் மாளாதோ?
நீதி வழுவாத நெறிமுறைகள் ஆளாதோ? (பக். 41)

எனக் கவிஞர் ஏங்குகின்றார். அவரது இந்த ஏக்கம் அகன்று, உலகம் அமைதிப் பூங்காவாய் விளங்க 'நாயகப் பேரொளி' நல்வழி காட்டுவதாகுக!

நூல் ஆக்கம்	கவிஞர் முகமது மைதீன்
வகைமை	கவிதை
வெளியீடு	தீன் வெளியீடு, சென்னை. (1979)

9

நட்சத்திரங்கள்

நட்சத்திரங்கள் என்ற தலைப்பில் உள்ள இக்கவிதை நூல் கவிஞர் இமயபாரதியின் இரண்டாவது வெளியீடு ஆகும். இதைத் தொடர்ந்து இவர் இன்னும் பல கவிதை நூல்களை ஆக்கித் தரத்தக்க ஆற்றலைப் பெற்றிருக்கிறார் என்னும் நம்பிக்கையை அளிப்பனவாய் இந்நூலில் உள்ள கவிதைகள் மிளிர்கின்றன. தெளிந்த கவிதை நடையும் சீரிய சிந்தனையோட்டமும் கொண்ட கவிஞராய் இவர் விளங்குவதைக் கவிதைகள் உணர்த்துகின்றன.

முக்கனிகள்

இந்நூலில் இனிமை, பெருமை, புதுமை என்னும் முப்பிரிவுகளில் தம் கவிதைகளைக் கவிஞர் அடக்கியுள்ளார். இனிமை என்னும் தலைப்பில் தெய்வம், நாடு, மொழி, சமுதாயம், காதல் ஆகியன பற்றிய தம் எண்ணங்களை வெளிப்படுத்தி யுள்ளார். பெருமை என்னும் தலைப்பில் சமுதாய மேம்பாட்டிற்காய் உழைத்தவர்களையும், உழைத்துக்கொண் டிருப்பவர்களையும் நன்றிப்பெருக்கோடு நினைந்து வாழ்த்தி வணங்கிப் பெருமைப்படுத்துகிறார். நாட்டில் இன்று நிலவி வருகின்ற புதுக்கவிதைப் போக்கிலேயும் எழுத வேண்டும் என்னும் ஆர்வத்தில் 'புதுமை' என்னும் தலைப்பில் சில கவிதைகளைத் தந்துள்ளார். மூன்று தலைப்புகளிலுமுள்ள கவிதைகள் நமக்கு முக்கனிகளாய்ச் சுவை கூட்டித் தருகின்றன.

நல்லன நாடுதல்

நீதி, நேர்மை, ஒழுங்கு ஆகியன நிறைந்த வாழ்வே எங்கும் நிலவ வேண்டுமெனக் கவிஞரின் உள்ளம் அவாவுகிறது.

ஒழுக்கமும் நேர்மையும் உதவிடும் பண்பையும்
என்றுமே நிலைக்க வைப்பாய்!
காண்பவை கேட்பவை உரைப்பவை அனைத்திலும்
நல்லன நிகழ வைப்பாய்! (பக். 3)

என அவர் உமையவளை வேண்டுவதிலிருந்து இந்த உள்ளப் பாங்கை நம்மால் உணர முடிகிறது.

ஒருமைப்பாடு

இமயமுதல் குமரிவரை நாடு ஒன்றென்ற உணர்வு கொள்ள வேண்டும் என்பதைக் கவிஞர் தெளிவுபடுத்துகிறார். நாட்டின் ஒருமைப்பாட்டிற்குப் பூமாலையை அவர் எடுத்துக்காட்டியிருப்பது சிறப்பாய் உள்ளது. ஒன்றுபடுதல் என்பது சுண்ணாம்பும் மஞ்சளும்போல் அன்றிப் பூக்கள் இணைந்த மாலையாய் இருக்கவேண்டும். சுண்ணாம்பும் மஞ்சளும் ஒன்றுசேரும்போது இரண்டும் தத்தம் நிறத்தையும் பண்பையும் இழக்கின்றன. சுண்ணாம்பு வெண்மை நிறத்தையும், மஞ்சள் தன் மஞ்சள் நிறத்தையும் இழக்கு, அவற்றின் கலப்பால் சிவப்பு என்னும் புதிய வண்ணம் தோன்றிவிடுகிறது. ஆனால், பூக்கள் ஒன்றாய் இணைந்து மாலையாகும்போது அதிலுள்ள எந்த மலரும் தன் தனித் தன்மையை, நிறத்தை, மணத்தை இழப்பதில்லை. பல்வேறு மொழிகள், சமயங்கள் கொண்ட இனங்கள் ஒன்றுசேரும்போது அவற்றின் இணைப்பு மஞ்சளும் சுண்ணாம்புமாய் இல்லாது, தத்தம் தனித் தன்மையையும் பண்பையும் இழக்காது, அதே வேளை பல மலர்கள் ஒன்றிணைந்ததான பூமாலையைப் போல விளங்க வேண்டும் என்பதைக் கவிஞர் அழகுபட எடுத்துக் காட்டுகிறார்.

வண்ணம் பலவாய் மலரும் பூக்கள்
மாலை யாகும் சேர்ந்து – நறு
மணத்தை வீசும் இணைந்து – பல
எண்ணம் சமயம் மொழிகள் இருந்தும்
இந்தி யர்நாம் ஒன்று – இதை
இனிதே காக்க நன்று (பக். 6)

என்னும் கவிஞரின் பாட்டொலி போற்றி வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

காட்சியும் கருத்தும்

உலகில் நிகழும் காட்சிகளைக்கொண்டு சமுதாயம், அறிய வேண்டியவற்றைக் கவிஞர் சுட்டிக் காட்டுகிறார் :

'சின்னஞ் சிறிய எறும்பு பாரு' எனக் காட்டி, அது போலும் சேர்த்து வைக்கும் பழக்கத்தை மேற்கொள்ளச் சொல்கிறார்;

'கருமை வண்ணக் காக்கை பாரு' எனக் காட்டி, அதனிட மிருந்து விருந்தோம்பற் பண்பைக் கற்றிடச் சொல்கிறார்;

'முற்றிச் செழித்த செந்நெல் பாரு'எனக் காட்டி, அது தலை சாய்ந்து நிற்கும் தன்மைபோல அடக்கத்தைக் கொண்டிட வேண்டுமென்கிறார் (பக். 24 - 25).

கற்பனை

கவிஞர் வளமான கற்பனைக்குச் சொந்தக்காரராய் இருக்கிறார் என்பதை அவருடைய 'நீல வானப் பேரரங்கில்' என்ற கவிதை (பக். 14) புலப்படுத்துகிறது. நீலவானம் ஆடல் அரங்கம்; அங்கே நிலவுப் பெண்ணாள் நாட்டியமாடுகிறாள்; மலைகளில் எழும் அருவியொலி முழவாகிறது; நதியொலியும் கடலிரைச்சலும் வீணையொலியாம்; மெல்ல அசைந்து வரும் தென்றலோ இனிய வாய்ப்பாட்டு; தவளை கத்துவது கடத்தின் முழக்கம். இயற்கையை நாட்டியக்கூடமாக்கிக் காட்டும் நல்ல கற்பனை இது.

காதல்

தன் காதலி இனிமையும் குளிர்ச்சியும் இணைந்தவள் என்பதை,

மான்விளை யாடிடும்
மரகதச் சோலையின்
மாருத இசைப்பண்ணே – மலைய
மாருத இசைப்பண்ணே (பக். 15)

என்று குறிப்பிடுவதும், அவள் கற்பு நலம் வாய்ந்தவள் என்பதை,

சேர இளவல்
சிலம்பில் ஒளிரும்
நாயகி வழியாளே – கற்பு
நாயகி வழியாளே

எனக் கண்ணகியின் வழித்தோன்றலாய்க் கூறுவதும்,

காதுவரை நீண்ட
கயல்விழியால் கள்ளுண்ட
போதை அளிக்கின்ற
பூங்காற்றே! (பக். 22)

எனக் காதலியை விளிப்பதும் சுவையாய் இருப்பதோடு கவிஞர் காதற்கவிதைகளைப் பாடுவதில் கைதேர்ந்தவராய் இருக்கிறார் என்பதைத் தெளிவுபடுத்துவனவாயும் உள்ளன.

உவமைகள்

தக்க உவமைகளைப் பொருத்தமான இடங்களில் கையாளும் திறனும் போற்றுதற்குரியதாய் இருக்கிறது.

அதிரசத்தைத் தேன்தோய்த்தே உண்ணும் இன்பம்
அடைந்தவனாய் எழிலரசன் பேச லானான்
நதியோர நாணல்போல் தலைகு னிந்தே
நாணமிகு நங்கையவள் பேச லானாள் (பக். 37)

என்னும் இவ்வடிகள் மேலுள்ள கூற்றுக்குச் சான்று பகர்வனவாம்.

பொருந்திய சொற்கள்

'அறஆட்சி கண்ட அழுது' எனக் காந்தியடிகளையும்,

'பளிங்கென மிளிர்ந்த இனியன்' என இராஜாஜியையும்,

'இனபேதம் மாய்த்திட்ட ஏந்தல்' எனப் பெரியாரையும்,

'சிந்தையில் தூய்மை கொண்டோன்' என நேருவையும்,

'அள்ளக்குறையா அமுத இலக்கியமே' என அண்ணாவினையும்,

'கல்லாத அறிவரசே! அடிக்கரும்பே' எனக் காமராசரையும்,

'தமிழகத்தின் காரல் மார்க்ஸ்' என ஏ.எஸ்.கேயையும்,

'தாயகம் தன்னைத் தந்தையர் நாடெனச் சாற்றிய புலவனடி' எனப் பாரதியையும்,

'முக்கனியும் சர்க்கரையும்' முத்தமிழில் சேர்த்தளித்தவர் எனப் பாரதிதாசனையும்,

'கோதென்று பட்டவற்றைக் கூறும் கீரர்' என்று கண்ணதாசனையும்,

'காந்தியார் பள்ளிதன்னில் கவனமாய்ப் படித்த பிள்ளை' எனத் தேசாயையும் கவிஞர் குறிப்பிடுவதிலிருந்து, பொருந்திய சொற்களில் செய்தியினை எடுத்துக் கூறும் அவர் திறனை அறிந்து மகிழ்கிறோம் (பக். 47 - 62).

நயமான புதுமை

புதிய கவிதைப்போக்கில் பல நயமான கவிதைகளைத் தந்திருக்கிறார். "அவன் மனைவி அழகில்லை; இவன் மனைவி அழகில்லை என்று சொல்லித் திரிந்த ஒருவனுக்கு அவன் பார்த்ததைவிட அழகான மனைவி அமைந்தாள்; ஆனால், அவள் நெஞ்சிலோ அவன் இல்லை என்றதில் உள்ள நையாண்டித்தனம் சுவைமிக்கதாயுள்ளது (பக். 67).

"நாங்கள் குதிரைகள்! கொழுத்த பணக்காரர்களுக்காக ஓடுகிறோம்! நீங்கள் ஏன் ஓடி வருகிறீர்கள், உங்கள் பணத்தை இழக்க" (பக். 70) என்னும் குதிரைகளின் கேள்வியைக் குதிரைப் பந்தயப் பைத்தியங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஒன்றில் இரண்டு

ஒன்றே, இடத்திற்கேற்ப இருவேறு எதிரிடைப் பலன்களைத் தருவதைக் கவிஞர் சுட்டிக் காட்டுவது சுவையாய் உள்ளது.

கழிவுநீர் தேங்கினால் கொசுக்கள் பெருகிடும்;
அணைநீர் தேங்கினால் செந்நெல் விளைந்திடும்;
செல்வம் தனியாரிடம் தேங்கினால் தீமையைப் பெருக்கிடும்;
செல்வம் வங்கியில் தேங்கினால் வளமை அளித்திடும்;

இவை கவிஞரின் அறிவுத் தேக்கத்தால் விளைந்துள்ள எண்ணப் பயிர்கள் (பக். 43).

சிந்தனைச் சொற்றொடர்கள்

சிந்தனையைத் தூண்டும் கவிதையடிகள் நூல் முழுவதும் பரவிக் கிடக்கின்றன. உயர்வு நம்மை நாடிவர வேண்டுமானால்,

தன்னலங்கள் நாடாமல் பொதுநலங்கள் வளர்த்தே
தாய்போல நிதந்தோறும் நல்லறங்கள் பெருக்கு!
பன்னாட்டின் அறிவியல்நூல் கற்றுணர்ந்து தேறிப்
படர்ஆல்போல் தாயகத்தில் செழிப்புதனைக் கூட்டு! (பக். 8)

என்னும் கவிக்கட்டளையை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும் என்பதில் எவருக்கும் மறுப்பு இருக்க முடியாது.

தரையினிலே புரட்சியினைச் செய்தா லன்றிச்
சமுதாயம் விழிப்படையாது)!
அரிமாப்போல் துணிவுடைய இளைஞர் நாட்டில்
ஆயிரமாய்ப் பெருகினால்தான் மடமை சாயும் (பக். 38)

என்னும் இவ்வடிகளில் உள்ள கருத்துகள் உண்மையானவையும், உடனடியாய் மேற்கொள்ள வேண்டியவையுமாகும்.

கவிஞர் ஆசை

நாட்டில் உடனடியாய் நடைபெற வேண்டிய செயல்கள் எவையெவை என்பதைக் கவிஞர் குறிப்பிடும்போது ஏழை, எளியவர் வாழ்வு உயர வேண்டும் என்பதில் அவர் கொண்டுள்ள அக்கறை நன்கு தென்படுகிறது.

ஏழை எளியவர்கள்
வாழ்க்கையை உயர்த்த வேணுங்க.....

வறுமையினால் வாடுகின்ற
உழவர்கள் மகிழ வேண்டுங்க.....

வீதியோரம் துடிப்பவர்கள்
குடியிருக்க வீடு வேணுங்க....

ஆவலுடன் கற்றவர்கள்
அரும்பட்டம் பெற்றவர்கள்
வேலைபெறச் செய்ய வேண்டுங்க.... (பக். 30–31)

இவற்றிற்காக உழைக்க வேண்டும் என்பதே இமயபாரதியின் இதயத் துடிப்பாய் இருக்கிறது.

வளர்க தொண்டு

நாட்டிடல் நன்னிலை மலர்ந்து நலம் கொழிக்க இமய பாரதியின் கவிதைத் தொண்டு பயன்படும் என்பது திண்ணம். வாழ்க இவ்விளைஞர்! வளர்க இவர்தம் கவிதைத் தொண்டு.

நூல் ஆக்கம்	கவிஞர் இமயபாரதி
வகைமை	கவிதை
வெளியீடு	பைரவி பதிப்பகம், சென்னை.(1979)

10

நாச்சியப்பன் பாடல்கள்

சொல் வளமும், பொருள் வளமும், சுடர்மிக்க கற்பனையும் கலந்து, வெல்லக் கவியெழுதி விந்தைச் சுவை படைக்கின்ற இந்த வீரக்கவிஞர் யார்? இவருடைய எழுதுகோலில் எத்தனை வகை வண்ண ஓவியங்கள் மின்னிப் பளபளக்கின்றன! பாரதியும் பாவேந்தரும் இவர் வடிவில் ஒன்றாகி வந்து, தம் புதுமைத் தமிழை மீண்டும் பொழிகின்றார்களோ? ஆம். கவிஞர் நாச்சியப்பன் புரட்சிக் கவிஞரின் அடிச்சுவட்டில் புதுமைக் கவிஞராய் நடைபோட்டுப் புகழ் என்னும் உச்சி நோக்கிச் செல்லும் பூந்தமிழ்க் கவிஞர். இவர் பாடல் தொகுப்பு பைந்தமிழ்ப் படையல் ஆகும்; இயற்கை அழகும், உவமை நயங்களும், இன்பத்துப் பாலின் இனிய கவர்ச்சியும், உலகியல் நடைமுறைகளும் இப்படைப்பில் பின்னிப் பிணைந்துள்ளன. இவர்தம் பாவியல் வண்ணங்களில் ஈடுபடும் கற்றுணர்ந்தோர் நெஞ்சம் களிப்பால் துள்ளும்; கல்லாரும், இவர் கவியின் சொல்லாற்றல் கேட்டுச் சொக்கி விடுவர் எனில் வேறென்ன விளம்ப வேண்டும்?

இத்தொகுப்பில் உள்ள ஒவ்வொன்றும் தனித்தனிக் காவியமாய்க் கருதத் தக்க சிறப்புடையன. கதைநிகழ்ச்சிகள் - சிறுகதையும் காவியமும் கலந்தவையாய் இடம் பெற்றுள்ளன. பொதுவாக, அனைத்துப் பாடல்களிலும் பெண்ணின் பெருமை, பெண்ணைத் தாழ்வு செய்யும் பேதையரின் கயமை, பெண்ணின் வீரம், பெண்ணுரிமைக்குப் போராடும் உறுதி மிக்க பாங்கு, பெண்ணின் அறிவாற்றல், அறவொழுக்கம் போன்ற செய்திகள் பேசப்படுகின்றன; சூழ்ச்சியில் ஈடுபட்டுச் சூது செய்யும் பெண்ணையும் காண்கிறோம்; சாதி வெறியினால் சான்றாண்மையை அழிக்கத் துடிக்கும் சாகசத்தையும் காண்கிறோம்; சாதிக் கொடுமையை எதிர்த்துச் சால்பை நிலை நாட்டும் சமத்துவ வேட்கையையும் உணர்கிறோம். அறம் வெல்லும் மறம் அழியும் என்ற கவிஞரின் நம்பிக்கை ஒளி எல்லாப் பாடல்களிலுமே சுடர் விடுகிறது.

முதல் பாடலில் இரு இளைய உள்ளங்கள் அன்புக் காதலில் இணைவதும், இதற்குப் பெற்றோரும் மற்றோரும் ஒத்துப்

போவதும், காவல் துறையினர் கட்டியங்கூறி வாழ்த்துப்பாடிக் காதலரைச் சேர்த்து வைப்பதும், முடிவில் -

வாழை மரமின்றி, வளர்க்கும் நெருப்பின்றி,
மேள முழக்கமின்றி, வேத மொழியின்றி,
நெஞ்சில் நிறைந்திருக்கும் நீங்காத காதலொன்றே
எஞ்சி யிருக்க, எழுந்த மலர்க்கொடிக்கே, (பக். 13)

பூமாலை சூட்டி நின்று புகழ் வாழ்வில் அடிவைப்பதும் ஆகிய நிகழ்ச்சிகள் எல்லாம், கவிஞர், காதல் மணத்தின் வெற்றியில் கொண்டுள்ள நம்பிக்கையைக் காட்டுகிறது.

வாழவைத்தான் எனும் பாடல் காமுகன் கண்ணப்பனின் கயமையை எடுத்துக்காட்டுகிறது. "கண்ணிற் பதிந்தாள் கருத்தில் பதிந்து விட்டாள்" (பக். 14) என்று அவன் ஏங்குவதும், அந்த இனியவள் வெறுத்தபோது அவளை வலுவில் கையைப் பற்ற முனைவதும், அவளின் மாமன் மகன் வந்து காப்பதுவும், வேறு ஒருவனுக்கு திருமணம் முடிக்கத் திட்டமிட்டு மணவறையில் -

எங்கும் சிரிப்பொலியும் இன்பமிகு பேச்சொலியும்
பொங்கும் உளமெல்லாம் போற்றுகின்ற வாழ்த்தொலியும் (பக். 23)

சூழ, மணமக்கள் வீற்றிருப்பதுவும், அவளை அடைய முடியாமல் தோல்வியுற்றவன் திருமணத்தைத் தடுக்கக் கருதித் தீய நஞ்சு போன்ற செய்தியை அனுப்புவதும், தெய்வமகன் வந்து அவளைத் திருவாகக் காப்பதுவும் மிக அழகாய் வருணிக்கப்படுகின்றன.

கற்பு பெண்ணுக்கு மட்டும் உரியது என்பதை மாற்றிப் பாடினார், பாரதியார்; ஆண், பெண் ஆகிய இருபாலார்க்கும் கற்பைப் பொதுவில் வைப்போம் என்ற இலக்கணமும் வகுத்தார். அவர் வகுத்த அவ்விலக்கணத்திற்கு இலக்கிய விளக்கமாய்த் திகழ்கிறது 'இனிய பாதி' என்னும் கவிதைப் பகுதி.

பண்பின் பரிசு என்னும் பாடல், சாதி வெறிகொண்ட கயவர் களுக்குச் சாட்டையடி வழங்குகிறது. இப்பாடலில் பெண்ணழகு மிக அருமையாய் வருணிக்கப்படுகிறது. 'தங்க உடல் நிறமும் தாமரைப்பூஞ் செம்முகமும்' கொண்ட பெண்கள் இவர் கவிதையால் மேலும் அழகு பெறுகின்றனர்.

"பெண்கள் செய்த குறும்புச் செயல்களைக் கணக் கெடுத்தால் பெய்த மழையின் பெரிதாகும்" (பக். 40) என்னும் உவமை ஆழமும் நுட்பமும் வாய்ந்தது.

உயர்குலப் பெண் ஒருத்தி ஆற்றில் மூழ்குகிறாள். சேரி-இளைஞன் ஒருவன் அவளைச் சின்ன மான் கன்றுபோலச் சேர்த்தணைத்துத் தூக்கி வந்தான். சநாதனிகள் செய்ந்நன்றி

மறந்து அவன் சாதிச் சிறுமையை எண்ணிப் பழிக்கின்றனர். கையை வெட்ட உத்தரவு பிறக்கிறது; அணங்கு, சாதியின் ஆதிக்கத்தை எண்ணிப் புலம்புகின்றாள்.

ஆற்றில் விழப்போனவளை மீண்டும் தடுக்கிறான் புலையன்; "ஊராருக்கு அஞ்சி உயிர்விட்டுச் சாவதினும் சேரிக்கு வாநீ சிறப்பாய் வாழ்ந்திடலாம்" (பக்: 43) என்று கனிவாய் அழைக்கிறான்.

பூசுரர் கூட்டம் புலையனுக்கு ஒரு நீதியும், உயர்சாதிப் பெண்ணுக்கு ஒரு நீதியும் வழங்குகிறது. அவன் கைகள் வெட்டப்பட வேண்டும் என்றும், அவளையோ வெயில் நேரத்தில் நெய் பூசிக் குளிப்பாட்டினால் 'தோஷம்' நீங்கிவிடுமென்றும் சாதிக்கொரு நீதி வழங்குகின்றார், சேஷகிரி சாத்திரியார். புலையனோ துணிந்து, நீரிலிருந்து காப்பாற்றிய பெண்ணைக் கைப்பிடித்து வாழ்விலும் காப்பாற்ற முனைகிறான்.

பம்பாய்ப் பஞ்சாங்கம் என்னும் பாடலில், பஞ்சாங்கம் பெண் ஒருத்தியின் வாழ்க்கையைப் பாழாக்க முயல்வதையும், மாமியின் கொடுமையையும், அதை எதிர்த்துப் போராடிப் புது வாழ்வு பெறும் பெண்ணின் உறுதியையும், தெள்ளத் தெளிவாய்க் கவிஞர் காட்டியிருக்கின்றார், இப்பாடலில்.

கொண்டுவிற்றே ஆதாயம் கூட்டும் தொழிலில்லை
கண்டுமுதல் கொடுத்து வட்டி கணக்கிட்டே
உள்ள பொருள்வளர்க்கும் ஒங்கு தொழிலில்லை
கள்ள வணிகத்தால் கைக்கூலித் தீவழியால்
சேர்த்த பொருளில்லை; செம்மை நலங்காத்துக்
கூர்த்த மதியாலும் கோடாத நெஞ்சாலும்
நாடி வருவார்க்கு நல்லறிவுப் பேரொளியைப்
பாடிப் பெருக்குகின்ற பைந்தமிழின் ஆசிரியர் (பக். 52)

என ஆசிரியத்தொழிலின் பெருமை அருமையுறப் பேசப் படுகிறது. ஆசிரியர் மகள் வீதியில் விளையாடும்போது பட்ட சிறு துயரத்தையன்றிப் பெருந்துயரம் அறியாப் பேதை. அவளோ, இப்பொழுது,

பத்துநா ளாகப் படுந்துயரம் மோர்கடையும்
மத்தும்அறி யாது,செக்கு மாடும் அறியாதே! (பக். 52)

இந்த அடிகள் பாரதியின், 'தாளம் படுமோ தறிபடுமோ யார் படுவார்' என்ற அடிகளை நினைவுக்குக் கொண்டுவருகின்றன. போர்க்களத்தில்,

சென்றால் உயிர்க்கச்சம், செல்லா விடில்தலைவர்
கொன்றாலும் அச்சமெனக் கோழை நடுங்குதல்போல்;
வந்த புலிக்கஞ்சி ஓடும் வழிப்போக்கன்,
சிந்தை கலங்கமலைப் பாம்பெதிரே சேருதல்போல்;
ஆற்றுக்குத் தப்பிப் பிழைத்தெழுந்தாள், சாதியெனும்
மாற்றானுக் கஞ்சி மனங்கலங்கித் தத்தளித்தாள் (பக். 42, 43)

எனத் தவிப்பின் துடிப்பு பேசப்படுகிறது.

திடீரென ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியால் தீயவன் ஒருவன் நல்லவனாய் மாறிவிடுவதைக் காட்டுவதே 'ஒளிமின்னல்' என்னும் பகுதி. வள்ளி கணவன் குடியன், ஊதாரி. கொள்ளைக்காரனாயும் மாறிவிடுகிறான். வள்ளி தன் தோழியிடம் சொல்லிப் புலம்புவதுபோல் ஆசிரியர் அமைத்திருக்கும் பகுதி அவன் பண்பினைப் புலப்படுத்துகிறது. வள்ளி, தன் கணவன்பற்றிக் கூறுகிறாள் :

பார்த்திபனைப் போல்இவரும் பாராளா விட்டாலும்
நேர்த்தியற்ற பெண்தொடர்பில் நிச்சயமாய் அர்ச்சுனர்தான்;
நீதித் தருமனுக்கு நேரில்லை என்றாலும்
சூதில் அவனேதான், தோற்பதிலும் அப்படியே! (பக். 62)

இக்கொடியவன் சேர்ந்துள்ள கொள்ளைக் கூட்டத்தாருள் ஒருவன் வள்ளியைத் தூக்கிவந்துவிடுகிறான்; "எதைக் கொள்ளையடித்தாலும் ஏழு பேரும் சரியாகப் பகிர்ந்துகொள்ளும் நம் வழக்கத்திற்கு ஏற்பவே இப்பெண்ணையும் நாம் பகிர்ந்து கொள்ளவேண்டும்" என்கிறான். முகத்திரையை நீக்கியதும் அவள் தன் மனைவி என்பதை அறிந்த வள்ளியின் கணவன் சீறுகிறான். அவள் 'அத்தான்' என்று புலம்பி அவன் மார்பில் சாய்கிறாள். அவன், மனம் திருந்திப் புது வாழ்வு தொடங்குகிறான். இதிகாசத் தலைவர்களாய் இருந்தாலும் அவர்களிடம் உள்ள இழிந்த குணங்களை நகைச்சுவையோடு சுட்டிக்காட்டி அக்குணங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறுவது ஆசிரியரின் அறிவு நுட்பத்திற்குச் சான்றாய் நிற்கிறது.

வங்கங் கடந்த மங்கை என்னும் பாடலில் தலைவன் ஒருவன் கட்டிய மனைவியைத் துறந்து கடல் தாண்டிச் சென்று, அங்கு பெண் வேறு ஒருத்தியை மணந்து வாழ்வதும், மனைவி கப்பலேறிச் சென்று அவனைக் கண்டு, புதியவளுடன் உறவு பாராட்டி அவள் மனத்தை மாற்றித் தன் கணவனை வென்றெடுக்கும் திறமும் பேசப்படுகின்றது. சிலப்பதிகாரக் கண்ணகி செய்யத் தவறியதை இக்காலப் புதுமைப்பெண், சாதித்து காட்டுகின்ற பாங்கு பாராட்டத்தக்கது.

'இருள் அகன்றிட ஒளி பெருகிட'

எனும் பாடல் தொழிற்சங்கத் தலைவன் முதலாளியுடன் சேர்ந்து தன் இனத்தவர்களுக்குத் தீங்கு செய்வதையும், அத்தொழிலாளர் புதுத் தலைமை கண்டு போராடி வெல்வதையும், உழைக்கும் குடும்பத்தினர் உவகை அடைவதையும் காட்டுகின்றது.

கோரிக்கை தன்னைக் குறையாமல் ஏற்குமட்டும்
போருக்கு நிற்போம் (பக். 90)

என்னும் புரட்சிப்போக்கு நன்கு காட்டப்படுகிறது.

'பொன்னும் வெள்ளியும்' என்னும் பாடல் ஒரு புதுமையான கோணத்தில் அமைந்துள்ளது. சிலை வணக்கம் செய்வாரின் தலையறுத்த கஜினியையும், அண்ணன் தம்பிக்குள்ளேயே போரிட்டும் காட்டிக் கொடுத்தும் கட்டோடு அழிந்துபோகும் இந்திய மன்னர்களின் இந்திய மக்களின் - பேதமையையும், புலவர் பாடும் புகழுக்கு ஏங்கிய கஜினி, பர்தோசி என்னும் கவிஞனைப் பாடல் இயற்றச் சொல்லிப் பாராட்டி மகிழ்ந்ததை யும் மிகவும் உருக்கமாய் ஆசிரியர் இப்பகுதியில் வடித்துக் காட்டியுள்ளார்.

கல்லடுக்கிக் கட்டிவைத்த கோயி லுள்ள
கடவுளையும் விடவில்லை கஜினி மன்னன் (பக். 96)

என்னும் அடிகள் கஜினியின் பிடிவாதத்தை நன்கு வெளிப் படுத்துகின்றன.

கோயில் கொள்ளையடிக்கப்படுவதைக் கண்டபோதும் மார்க்கண்டேயனைக் காப்பதற்காக எமதர்மனையே உதைத்துத் தோன்றிய சிவபெருமானின் கையாலாகாத்தனத்தை,

வாட்டமுற்ற பக்தர்எல்லாம் அழுதிருந்தும்
வரவில்லை சிவபெருமான் (பக். 96)

என்னும் அடிகள் வாயிலாய் ஆசிரியர் விளக்கிக் காட்டும் பகுதி சிந்தனையைத் தூண்டி நிற்கிறது.

இரு குறுங்காவியங்கள் இத்தொகுப்பின் இறுதியில் இடம் பெற்றுள்ளன. கொய்யாக் காதல் என்னும் காவியத்தில் கதைச் செறிவு இல்லையெனினும் ஆங்காங்கே பளிச்சிடும், கவிதை மின்னலால் ஒளி பெறுகிறது.

'வரலாகும்' எனக் கேட்ட சுந்தரிக்கு
மனமகிழும்; செவிகுளிரும்; உதடு கொஞ்சம்
விரியும்;எழில் பல்மின்னும்! வாயில் நோக்கி
விரையும்கால் (பக். 107)

எனும் அடிகள் பல மெய்ப்பாடுகளின் உறைவிடமாயுள்ளது.

'இளவரசி முல்லை' என்னும் பாடல் இறுதியில் இடம் பெற்றுள்ளது. இதில் கயவன் ஒருவன், நண்பனுக்கும் காதலிக்கும் இரண்டகம் செய்கிறான்; மன்னனையும் மக்களையும் ஏமாற்றுகிறான்; காதலரைப் பிரித்துக் கொடுமை செய்கிறான்; இறுதியில் உண்மை வெளிப்பட்டுத் தண்டனை அடைகிறான். உண்மையான காதலர்கள் அரச நிலைவிட்டு அன்பு நிலை தேடி வாழச் செல்லுகிறார்கள். இந்நிகழ்ச்சி மிக்க நயத்துடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பாடலில் நகைச்சுவையும் காவியச்சுவையும் மலிந்துள்ளன.

காத்திருந்த கண்ணிரண்டும் பூத்துப் போச்சாம்!
காதலர்மேல் நம்பிக்கை தோற்றுப் போச்சாம்!
பூத்திருந்த சோலைகளும் இருண்டு போச்சாம்!
பொழுதடையும் மாலையெலாம் வெறுத்துப் போச்சாம்! (பக். 153)

என்னும் அடிகளில் நடைநயமும் பொருள் நலமும் உணர்ச்சி வேகமும் நிறைந்துள்ளன.

எப்போதும் சில்வண்டின் ஒலி யிருக்கும்;
இடையிடையே காய்சருகு சலச லக்கும்;
கொப்போடு கிளைமுரியும் ஓசை கேட்கும்;
குமுறிவரும் காட்டாற்றின் சீற்றம் கேட்கும்;
எப்போதோ புலியுறுமும் சத்தம் கேட்கும்;
இடையிடையே யானைகளோ பிளிறி யோடும் (பக். 154)

என்னும் அடிகள் இயற்கை வருணனையில் கவிஞர் எத்துணை கைதேர்ந்தவர் என்பதைக் காட்டி நிற்கின்றன.

நாளைக்கு வருவேன்நான் என்று சொல்லி
ஞாயிறுபோய் மலைப்பின்னே ஒளிந்து கொண்டான் (பக். 184)

என்றும்,

மாக்கோல மிடுகின்ற மங்கை யல்லள்
மணக்கோலந் தரவந்த காத லன்பன்
நோக்காலே கலந்துயிரில் பின்னி விட்ட
நூன்முடிச்சு; பிரிக்கொண்ணா அன்புச் சிக்கல்! (பக். 185)

என்றும் உள்ள அடிகள் எண்ணி இன்புறற்குரியன. இக்கவிதைத் தொகுப்பில்,

காதல் உளத்துக் கணவனைத்தாம் கைப்பிடித்த
மாதர்க்குக் கற்பே மதிப்புடைய சொத்தாகும். (பக். 12)

இருதோளும் நல்லறிவும் அன்பு நெஞ்சும்
இருக்குமட்டும் வாழ்வுக்குப் பயமே இல்லை. (பக். 148)

என்பன போன்ற கருத்தாழமிக்க உரைகள் பல மிளிர்கின்றன. காதலன் காதலியை,

கண்ணில் பதிந்தாள்; கருத்தில் பதிந்துவிட்டாள்;
எண்ணக் கருவுறையில் எங்கும் நிறைந்துவிட்டாள் (பக். 14)

என்று நினைவு கொள்வதும், அலைகள் ஒன்றன்மேலொன்றாய் எழுந்து வருவதை,

வந்த அலைமறைய, வாரி நுரையெழுப்பிப்
பிந்தி வரும்அலையும் பின்னும் மறைந்தொழியும்;
ஒன்றொழிய மற்றொன்றோ ஓங்கி யுயர்ந்துவரும்;
ஒன்றெழுமுன னாலே விழுந்து கரைந்துவிடும். (பக். 53)

என்று வருணிப்பதும், பயணத்தின் இன்றியமையாமையை,

உள்ளுருக் குள்ளேயே வாழ்வை ஒட்டி
உட்கார்ந்து கொண்டிருந்தால் உலக ஞானம்
தெள்ளியதாய் வளராதென் றறிஞர் சொல்வார்;
திருநாடு முழுவதுமே சுற்றி வந்தால்
வள்ளுவரைப் போலறிஞர் ஆக லாகும்;
வளஞ்சேர்க்கும் வாணிபத்தின் திறமை சேரும்;
உள்ளந்தான் விரிவாகும்... (பக். 14)

எனப் புலப்படுத்துவதும்,

நடக்கின்ற போதெல்லாம் கால்வ லிக்கும்
நடவாமல் இருக்குங்கால் மனந்து டிக்கும் (பக். 157)

என உள்ளத் துடிப்பை எடுத்துக் கூறுவதும் சுவையூட்டுவனவாம்.

ஆசிரியர் புதிய புதிய உவமைகளைக் கையாண்டு நம்மைக் களிப்பில் ஆழ்த்துகிறார்.

உண்டசோற் றுண்டையது தொண்டைக் குழியளவே
தங்கிவிட்டால் உண்டாம் தடுமாற்றம் போல (பக். 60)

சொன்னவன்தான் நடந்து விட்டான்; கதிர்மறையச்
சூழ்ந்தநிழல் போலமைதி சூழ்ந்த தங்கே. (பக். 119)

பேன்ஒன்று கூந்தலுக்குள் நுழைந்தாற் போலப்
பின்புறமாய்க் கூடாரத் துட்பு குந்தான். (பக். 180)

கவிஞர் தம் கொள்கைகளைக் கதைமாந்தர்களின் வாயிலாய் வெளிப்படுத்தும் உத்தியை நேர்த்தியாய்க் கையாண்டுள்ளார். தாய்மொழியில் பேசாமல் அயல் மொழியில் பேசுவதே பெருமை எண்றெண்ணித் திரியும் போலிகளை வலிமையாய்ச் சாடுகிறார்.

தான்பிறந்த நாட்டுத் தமிழ்மொழியிற் பேசாமல்
வான்வழியே வந்து குதித்திங்கு வந்தாற்போல்
ஆண்டு கழிந்த அயல்நாட் டவன்மொழியில்
வேண்டுமென்றே பேசித்தாம் மேன்மையுள்ளார் போல்நடித்து (பக். 16)

உலவும் இவர்களை என்னென்பது?

நால்வருண நஞ்சு; மக்களைப் பேதப்படுத்திக் கொடுமை பல விளைத்துள்ளதைக் கண்டிடக்கும் முறையில்,

மனுநீதி அறமானது ஒருநாள் – அதை
மாற்றும் நாளே தமிழர் திருநாள்

என்றார், பாவேந்தர். கவிஞர் நாச்சியப்பனோ,

சாத்திரங்கள் பேசிச் சதிசெய்தெம் கூட்டத்தைச்
சூத்திரராய்த் தாழ்த்திவைத்த சூதெல்லாம் தூளாகிப்
போகும் ஒருநாளில்! பொல்லாத தீக்கொடுமை
வேகும்! ளிதழலில் வெந்தொழியும்! (பக். 48)

என நம்பிக்கையூட்டுகிறார். ஆம்! அந்நாள் வரும் மிகு விரைவில்!

இந்நூலுள் பெரும்பாலும் பெண்ணுரிமை, சாதிக் கொடுமை போன்ற கருத்துகளே எல்லாப் பாடல்களிலும் இழைந்தோடுகின்றன. இவை இக்காலத்திற்கு இன்றியமையாது தேவைப்படும் கருத்துகள். இன்றைய உலகம் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளாய் இன்னும் பல உள்ளன. சமூக அரசியல் பொருளாதார முரண்பாடுகள் ஏற்றத் தாழ்வுகள், மக்கள் வாழ்வில் மேன்மேலும் சுமத்தப்படுகின்ற நெருக்கடிகள் இவைபற்றிக் கவிஞர் எழுதியுள்ளனவும், இனி எழுத இருப்பனவுமாய் கவிதைகள் அடுத்தடுத்த தொகுதிகளாக வெளிவந்தவண்ண மிருக்க வேண்டுமென்பது என் ஆவல். உயரத் துடிக்கும் ஒவ்வோர் உள்ளத்தின் தேவைகளையும் நிறைவேற்றும் வகையில் திரு. நாச்சியப்பன் அவர்களின் கவிதைகள் அமைந்து சிறக்கின்றன. தமிழ்த்தாய்க்கு இவ்வரிய அணிகலனைச் சூட்டியுள்ள கவிஞரை உளமாரத் தமிழுலகம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

என்றென்றும் அழியாமல் இருக்கும் செய்யுள்
எழுத்தினிலே என்புகழைப் பதித்து விட்டால்
நன்றென்பேன்

என்பது இந்நூலுள் வருகின்ற பாடலடிகள். கவிஞர் நாச்சியப்பன் அவர்கள் இந்நூலை இயற்றியதன் வழி என்றென்றும் அழியாமல் இருக்கும் செய்யுள் எழுத்தினில் அவர் புகழைப் பதித்துவிட்டார். அப்புகழ் மேன்மேலும் வளர்வதாகுக!

நூல் ஆக்கம்	கவிஞர் நாரா. நாச்சியப்பன்
வகைமை	கவிதை
வெளியீடு	தமிழாலயம், சென்னை. (1980)

11

தாயும் சேயும்

கவிஞர் முரளீதரன் 'தாயும் சேயும்' என்னும் இக்கவிதை நூலைக் கவினுற யாத்துள்ளார். தாயின் அன்பு, பொறுமை, தியாகம் ஆகியனவும், சேயின் மழலை, துள்ளல், சிறுகுறும்பு ஆகியனவும், திறம்பட இந்நூலில் விளக்கம் பெற்றுள்ளன. எளிய சொற்கள், இனிய தங்கு தடையற்ற நடையோட்டம், கருத்துச் செறிவு ஆகியன நூலுக்குத் தனிச்சிறப்பு அளிப்பவையாம். அடிக்கு அடி உயர்ந்த கவியுள்ளத்தை நம்மால் உணரமுடிகிறது!

'தாயே! என்னைப் படைத்த உனக்கு நான் எதைப் படைப்பேன்?' எனக் கேட்டுத் தாயின் பெருமைகளையெல்லாம் அருமையாய்த் தொகுத்துச் சொல்லியிருக்கும் கவிஞரின் ஆற்றல் பாராட்டத்தக்கது! அருள்செல்வம் - பெருள்செல்வம் குழந்தைச் செல்வம் என்பதையும் அழகிய பாக்களால் கவிஞர் திறம்படப் பாடியுள்ளார்.

காக்கும் தாய்

தான் படைத்த உயிர்கள் அனைத்தையும் தனித்தனியே காக்க இயலாது என்பதால் இறைவன் ஒவ்வோருயிர்க்கும் ஒரு தாயைப் படைத்தானோ எனக் கேட்பதன்வழி, தாயின் காக்கும் தன்மையைக் கவிஞர் பெருமைப்படுத்தியுள்ளார் :

தான்படைத்த உயிரெதையும்
தனித்தனியே நேர்நின்று
மாண்புடனே காக்கவொணா
மலைப்பால்தான் தாயவளை
ஆண்டவனே படைத்தனையோ? (பக். 1)

என்பது எவ்வளவு அருமையான கூற்று! சேய்க்கு வரும் நோய்க்குத் தான் மருந்தருந்தும் தகைமையள் தாய்! குழந்தைக்கு முதன்முதலில் மொழியைக் கற்றுத் தருபவள் தாயே! அவள் பாலை அருந்தித்தான் குழந்தை சுவையையே அறியத் தொடங்குகிறது! தன்னையே அழித்துக் குழந்தையை வளர்ப்பவளும் அவளேயாம்!

உதிரமதைப் பாலாக்கி
உடல்வளர்த்தென் உயிர்வளர்த்தாள் (பக். 6)

இது மகனின் மகிழ்வுரை. தன் நெஞ்சணைப்பையே பஞ்சணையாக்கிச் சிறு இடரும் அணுகாது சிந்தையெலாம் அதுவேயாகக் குழந்தையை வளர்ப்பவளும் தாயே!

பஞ்சணையில் நான்படுத்தால்
பக்கமெலாம் நோகுமென
நெஞ்சணைப்பில் தாங்கியவள்.... (பக். 6)
தாயே என்கிறான் தனயன்!

அனைத்தும் தாயே

தாயின் தாலாட்டே குழந்தை அறியத் தொடங்கும் முதல் கலை நுகர்ச்சி! அவள் புன்னகையே அக்குழந்தை காணும் முதற் கண்காட்சி! சிட்டுக் காட்டியும், சிறுகதை சொல்லியும், நிலவை அழைத்தும் குழந்தையை உண்ணச்செய்பவள் தாய்! குழந்தைக்கு ஏற்றது எது என அவள் தேர்ந்து ஊட்டுவாள்; குழந்தைக்கு ஆகாது என்றால் அமுதமேயாயினும் அதை அவள் உண்ணாள்; குழந்தை வாய் திறந்து முதன் முதலில் உதிர்க்கும் அமுதச் சொல்லே 'அம்மா' என்பதுதானே! தாமாகப் பறந்து இரை தேடும்வரை தம் குஞ்சுகளைச் சிறகணைப்பால் காத்துவரும் தாய்ப்பறவை போலே, ஊர் உலகில் உயர் ஒழுக்கம் பெறும்வரை தன் மகவை மறவாமல் காப்பவள் தாயேயாம்! மகவைக் கண்குளிர அலங்கரிப்பாள்! காண்பவர்கள் கண் பட்டுவிடுமோ என உடனே கண்ணேறும் கழித்திடுவாள்! கருவில் குழந்தை தோன்றியதும் நித்தமும் அதிலேயே நினைவை நிறுத்தித் தன்னுயிர் கொண்டு, தாய் வரையும் சித்திரமே குழந்தை!

நிற்கும்தன் நினைவெல்லாம்
நிலைநிறுத்தித் தன்னுயிரால்
சித்திரமாய் வரைகின்றாள்..... (பக். 14)

தாயுள்ளம்

கரு, வயிற்றினில் கனத்த வேளையிலும் சுமையாய்க் கருதாது அதனையே தன் வாழ்வுக்குத் துணையென்றெண் ணுவது தாயுள்ளம்!

மாய்வுக்கும் அஞ்சாமல்
மனத்துணிவால்..... பெற்றெடுக்கும் பேருள்ளம் தாயுள்ளம்!

பள்ளிக்குக் குழந்தையை அனுப்பி வைப்பாள்! திரும்பி வரும் வரை பாதையையே நோக்கியிருப்பாள்; சென்ற குழந்தை தீமையெதுவுமின்றித் திரும்பி வரவேண்டுமேயென்று தெய்வத்தை

வேண்டி நிற்பாள்; குழந்தையைவிட அரிய காவியம் தாய்க்கு வேறெதுவுமே இல்லை! தாயுள்ளத்தைப் பல இடங்களில் கவிஞர் பாங்குறச் சொல்லியிருந்தாலும் இதோ..... இந்த இடம் நம் நெஞ்சை நெகிழ்விக்கிறது.

நானுண்ணும் எழில்பார்த்துத்
தானுண்ண மறந்திருப்பாள்;
ஏனம்மா எனக்கேட்டால்
எனக்கில்லை பசியென்பாள்! (பக். 14)

அனுபவப்பூர்வமான அரிய சொல்லோவியமன்றோ இது? பெற்று வளர்த்த பிள்ளை வெறுத்துத் தூற்றியபோதிலும் "அறியாத பிள்ளை" எனச் சொல்லி அக்குழந்தையைப் பொறுத்து வாழ்த்துவது தாயுள்ளம்! ஒருவர்க்கு அறமாய் ஒன்றைக் கொடுக்கும் போதும் அதைத் தன் குழந்தை கையால் கொடுக்கச் செய்து அதைப் பார்த்துப் பெருமை கொள்ளும் பேருள்ளம் தாயுள்ளம்! எத்துணைச் செல்வமிருந்தாலும், சிறப்பிருந்தாலும், மாடமாளிகையிருந்தாலும் 'மகனே' என்றழைக்க ஒரு குழந்தை வேண்டுமென்பது தாயுள்ளம். மகன் கிழவனே ஆகிவிட்டாலும் தாயைப் பொறுத்தவரை அவன் அவளுக்குக் குழந்தையே! அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்பது பழமொழி! தெய்வங்கூடக் குற்றம் செய்தவரை உடனே தண்டிக்காதெனினும் நின்றாவது தண்டிக்கும் என்பது இதன் பொருள். ஆனால், தாயோ, மகவு எந்தத் தவற்றைச் செய்திருந்தாலும் அதற்காகத் தன்னை வருத்திக்கொள்வாளே தவிர அம்மகவை என்றுமே தண்டிக்கமாட்டாள்; மன்னிப்பாள்; மறப்பாள்! மன்னிக்கும் தகுதியில் தாய் தெய்வத்திலும் உயர்ந்தவளாகிவிடுகிறாள் எனக் கவிஞர் கூறுவது என்றும் நிலைத்து நிற்கும் சொல்லோவியமாம்.

மன்னிக்கும் தகுதிபெறத் தெய்வம் உன்றன்
மடியினிலே பிறக்கத்தான் வேண்டும் என்பேன். (பக். 25)

எச்சிலும் அமுதாம்

தத்தித் தளர் நடை பயிலும் குழந்தை, தனக்குக் கிண்ணத்திலே இட்டு வழங்கிய உணவைத் தன் சிறு விரல்களினாலே குழப்பியும் கலக்கியும் அதன் செவ்வியைச் சிதைக்கிறது; பக்குவம் குலையப் பாழ்படுத்துகிறது! அச்செயலோ பெற்றோருக்கு வெறுப்பை எழச்செய்யாது விருப்பையே மிகுவிக்கிறது! ஈன்றெடுத்த இளமகவின் தளிர்விரல்களால் கலக்கிக் குழப்பப் பட்டது கூழேயாயினும் அதுவே பெற்றோருக்கு இந்திரர் அமிழ்தினும் இனியதாகிவிடுகிறது! கூழையும் அமுதமாய் மாற்றும் ஆற்றல்,

பேசும் பொற்சித்திரத்தின் பிஞ்சு விரல்களிலே அமைந்து கிடப்பதை,

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்

எனத் தித்திக்கும் குறட்பா செப்புகிறது. கண்ணனைச் சேயாய்ப் பெற்று மகிழத் துடிக்கும் நிலையில் உள்ள ஆழ்வார் பாடல் ஒன்றுண்டு! தீராத விளையாட்டுப் பிள்ளையான கண்ணனோ தெருவிலே ஆடிக் களிக்கின்றான். தவழ்ந்து எழுந்து தளர் நடையுடன் செம்மண்ணிலே ஆடியதால், புழுதி படிந்த விரல்கள்! மண்ணிலே ஆடிய கண்ணன் அப்படியே புழுதியோடு ஓடி வந்து தம்மை மார்புறத் தழுவி மகிழ்விக்க வேண்டுமென விரும்புகிறார், தாயாய்த் தம்மை மாற்றிக் கொண்டுள்ள ஆழ்வார்! அது மட்டுமா, செம்மண் புழுதி படிந்த அந்தச் சின்னஞ்சிறு விரல்களாலே அவன் வாரி வாரித் தன் வாயிலிட்டுக்கொண்ட சேற்றின் எச்சிற்பகுதியை - எஞ்சிய பகுதியை தான் உண்டு மகிழ வேண்டுமென வேணவாக் கொள்கிறார். இவ்வின்பப் பேறுகளைப் பெறாத தாயாய் உள்ளேனே எனத் தம்மை தாயாக்கித் தவிக்கிறார், குலசேகர ஆழ்வார்.

தண்ணந் தாமரைக் கண்ணனே கண்ணா
தவழ்ந்தெழுத்து தளர்ந்ததோர் நடையால்
மண்ணில் செம்பொடி ஆடிவந்து என்றன்
மார்பில் மன்றிடப் பெற்றிலேன் அந்தோ!
வண்ணச் செஞ்சிறு கைவிரல் அனைத்தும்
வாரிவாய்க் கொண்ட அடிசிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன் ஓ!கொடு வினையேன்
என்னையென் செய்யப் பெற்றதெம் மோயே!

குழந்தையின் கை அளாவிய மிச்சிலை உண்ணத் தாயுள்ளம் தணியாத ஆர்வம் காட்டும் என்பதைத் திருவள்ளுவர், குலசேக ராழ்வார் ஆகியோர் வழிநின்று கவிஞர் முரளீதரனும்,

வீணாக்கி நான்எச்சில்
விளைவித்த சோற்றையெலாம்
தேனமுதாய்ப் பசிக்கேற்பாள்! (பக். 14)

என இனிமையாய்ப் பாடியிருக்கக் காண்கிறோம்! குழந்தையின் எச்சில் சோறு தாய்க்குத் தேனமுதாகிற விந்தைதான் என்னே!

குழந்தைபற்றிப் பாடும்போதும் இக்கருத்தை மீண்டும் வலியுறுத்துகிறார், கவிஞர் முரளீதரன்.

பாரதிதாசனின் 'குடும்ப விளக்கில்' ஓர் அரிய சொல்லோவியம்! வேடப்பன், நகைமுத்து ஆகிய இருவர்க்கும் வாய்த்த

இல்லறப் பரிசு 'அமிழ்து'. ஒருநாள் அமிழ்து தாழ்வாரத்திலிருந்த தந்தையின் மைக்கூட்டை எடுத்துக் கொல்லை சென்றாள்; மையை முல்லைக்கொடியின் அடியில் சாய்த்தாள்; மை கலந்த மண்ணைத் தன் பிஞ்சு விரலால் அணைத்துச் சிறுவீடு கட்டினாள்; கையில் மண்ணுடனும் மையுடனும் இல்லத்தின் உள்ளே நுழைந்தாள். அங்கே தந்தை தயிர்ச்சோறு உண்டுகொண்டிருந்தான். ஓடி வந்த குழந்தை மைக்கையால் தந்தையின் சோற்றைப் பிசைந்தாள்! அள்ளி அப்பாவுக்கு ஊட்டுவதற்காக 'ஆஆ' என்று வாய் திறக்கச் சொன்னாள்! மை கலந்த உணவை அப்பன் ஆசையோடு உண்டான்! இதைப் பாவேந்தர் கூறுவார் அமிழ்து எனும் குழந்தை,

.....தாழ்வாரத்து
இடையில் இருந்த மைக்கூட்டை எடுத்துக்
கொல்லையில் முல்லைக் கொடியின் அடியில்
சாய்த்து, நீலம் சார்ந்த சேற்றால்
சிற்றில் ஒன்று செய்து முடித்தபின்
தந்தை உண்ணும் தயிரின் சோற்றை
அங்கையால் அள்ளி 'ஆஆ' என்றாள்;
அப்பனும் வாய்திறந்து அதைவாங்கி உண்டான்...
சேறும் சோறும் தந்தைக்குத் தேனே
நீலத் தயிரும் நிலாநிறத் தயிரே....

இந்தச் சொல்லோவியத்தை ஒப்பதொன்றைத் திரு. முரளீதரனும் வரைந்து காட்டியுள்ளார். புரட்சிக்கவிஞரின் அழகிய நடையையும் அரிய கருத்தையும் இங்கேயும் நாம் துய்த்து மகிழ்கிறோம்!

தளிர்க்கரத்தால் மண்ணெடுத்தே எச்சில் சேர்த்துத்
தயங்காமல் பிசைந்ததின்பின் குழந்தை இன்பம்
அளந்தெடுத்துப் பெற்றோர்க்குத் தந்திட்டாலும்
அஃதமிழ்தச் சுவைதேங்கும் உணவாய் மாறும்! (பக். 27)

தாயின் தியாகம்

தாய் தன் குழந்தைக்காக எதையும் தியாகம் செய்வாள்; உயிரே என்றாலும் மகவுக்கென உவந்து கொடுப்பாள்!

இன்னுயிரே என்றாலும்
எனக்கென்றால் தருவதற்கு
முன்னணியில் வந்துநிற்கும்
முழுநீல முதற்கடவுள் (பக். 29)

தாய் என்கிறார், கவிஞர்! அவளிடம், "அம்மா! பிள்ளையாய் உன்னைப் பெற்றெடுத்தாய்! உள்ளதனைத்தும் எனக்கு உவந்தளித்தாய்! உனக்கு நான் என்ன கொடுக்க முடியும்" என்றால்

அவளோ, "நான் இறந்தால் கொள்ளியிடு; அதுவே போதும்" என்பாள்.

உள்ளதெலாம் தந்தவள்நீ
உனக்கெதனை நான்கொடுத்துப்
பிள்ளையெனப் பிறந்ததற்குப்
பேரெடுப்பேன் எனக்கேட்டால்
'கொள்ளியிடு நானிறந்தால்'
கொடையதுவே போதுமெனும்
கள்ளமிலாத் தாயவள்... (பக். 20)

உள்ளம் உருக்கும் உணர்ச்சி எழுத்துகளன்றோ இவை?

அழுதத் துளிகள்

மேலுள்ளவாறு அரிய கருத்துகள் பலவற்றை அள்ளிச் சொரிந்த கவிஞரின் பாடல்களில் அன்னைபற்றிக் கூறியுள்ள அழுத அடிகளுள் சிலவற்றை கீழே காணலாம்!

புதுமைமிகு பெண்மைக்குப்
பொன்மகுடம் தாய்மையதோ! (பக். 19)

வாழ்வதனில் உனதன்பைப் பரிவுப் பண்பை
வாய்எடுத்துப் புகழ்ந்திடவோ வார்த்தை இல்லை;
வையகமே உனதடிகள் முன்னர் துச்சம்! (பக். 24)

சித்திரமாய் எனைவரையத் தன்க வர்ச்சிச்
சீரிளமை அனைத்தையுமுன் பாலாய்த் தந்தே
நித்தமுமென் வளர்ச்சியெழில் தன்னில் கண்ணை
நிலைநிறுத்தி வாழ்ந்தாயே! அதற்கீ டுண்டோ (பக். 24)

அன்னையெனில் தெய்வந்தான்
அவளடிகட் கெதைப்படைப்பேன்? (பக். 10)

தழலெனவே சாவெடுத்துத் தாயே உன்முன்
தயங்காமல் எனைக்கொல்லக் காலன்வந்தால்
இழவுக்குத் தனையீந்து தயக்க மின்றி
எனக்காக நீயன்றோ முதலில் நிற்பாய்! (பக். 25)

குழந்தைச் செல்வம்

அன்னைபற்றிய அழுதச் சொற்களைச் சொன்ன கவிஞர் குழந்தைபற்றிக் கூறியுள்ள கொஞ்சுமொழிகளை இங்கே காணலாம்

தன்னுயிரை அழகுருவாய் நேரில் காணத்
தாய்படைக்கும் நல்லமைப்பே குழந்தைச் செல்வம். (பக். 26)

வெறிபோதை ஏதுமிலாத் தூய்மை முத்தம்
வென்றாடும் குழந்தைக்கே உரிய செல்வம். (பக். 29)

குழந்தையைத்தான் கவிஞர் எத்தனை வகையில் உருவகமாக்கி மகிழ்கிறார்! குழந்தை

கார்காலக் கட்டிலறைக் களந்தந்த அற்புதம்; (பக். 45)
காதற் கலைக்குளத்தில் கட்டவிழ்ந்த பொன்மலர்; (பக். 52)
கன்னிக் கொடியில் கனிந்த கனிச்சுவை; (பக். 53)
சின்ன உருவில் சிரித்தாடும் பொங்குகடல்; (பக். 55)
புன்னகையால் என்துயரைப் போக்குமுயர் நன்மருந்து; (பக். 45)
உள்ளும் புறமும் உயிரூட்டும் நற்பேறு; (பக். 59)
வையத்துக் கவர்ச்சியெலாம் வந்துறங்கும் மஞ்சம். (பக். 70)

மழலையின்பம்

குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்

என்பார், திருவள்ளுவர். கவிஞர் முரளீதரனும், குழந்தை என்ன பேசினாலும் பெற்றோர்க்கு அது பேரின்பத்தை விளைவிக்கும் என்பதைக் குழந்தையின்

வாக்கெல்லாம் மடமையிலே
பிறந்திட் டாலும்
வளர்ந்தளழில் தத்துவமாய்ப் (பக். 30)

பெற்றோர்க்குத் தோன்றுமென்பார்! அது மட்டுமன்று; குழந்தை எட்டி உதைத்தாலும் அதுவும் பெற்றோர்க்கு இன்பமேயாம்!

வந்துதித்த வடிவழகே
வாய்மணக்க அப்பாவென்(று)
அன்பே! அழைப்பதனால்
மட்டும்தான் இன்பமெனக்
கட்டிக் கரும்பே
கருதாதே! நீஎன்னை
எட்டி உதைத்தாலும்
இன்பம்தான் (பக். 57)

குழந்தையை அரசாக்கி, குழந்தைச் செயல்களையெல்லாம் அவ்வரசின் அங்கங்களாக்கிக் கவிஞர் அழகுறப் பாடியுள்ளார். குழந்தை அரசின் ஆட்சிமொழி எது தெரியுமா? மழலைதான்! இந்த ஆட்சி மொழியில் பிறப்பிக்கப்படும் ஆணைகள் வேதங்களாய் மதிக்கப்படும் பெருமை பெறுபவை!

ஆளுகிற மொழியான
அழகியஉன் மழலையினால்
நாளுமிடும் சட்டங்கள்
நாற்றிசையும் மறையாமோ! (பக். 40)

விளையாடும் வீணை

குழந்தையை முத்து என்போமென்றாலோ முத்து சிரிக்காதே! மலர் என்று சொல்வோமெனிலோ மலர் வாடும் தன்மையுடைய

தாயிற்றே! கிளியென்று கூறுவோமென்றாலோ கிளிக்குத் தவழ்ந்து வரத் தெரியாதே!

முத்தைக் கண்டதுண்டு
மோகனமாய்ச் சிரித்ததில்லை;
நித்தமொரு பிறப்பெடுத்தும்
நிச்சயமாய் மலர்வாடும்;
தித்திக்கும் மாங்கனியோ
தெவிட்டிப் போவதுண்டு;
வீணைக்குப் பாடவரும்
விளையாடத் தெரியாது; (பக். 44)

குழந்தை சிரிக்கும் முத்து, வாடா மலர். தவழும் தத்தை, தெவிட்டாத மாங்கனி. விளையாடும் வீணை என்பதைக் கவிஞர் எடுத்துரைக்கும் எழிலை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது! இங்கே நாமக்கல் கவிஞரின் சாயலைக் காண முடிகிறது; 'அவள்' எத்தகையவள் என்பதைக் கூறவரும் நாமக்கல்லார்,

மானென அவளைச் சொன்னால்
மருளுதல் அவளுக் கில்லை...
தேன்மொழிக் குவமை சொன்னால்
தெவிட்டுதல் தேனுக் குண்டு...

எனக் குறிப்பிட்டுள்ளதை இங்கே ஒத்திட்டுப் பார்த்து மகிழலாம்!

பாரதியார் சின்னஞ்சிறுகிளியாம் செல்வக்குழந்தையினை

மார்பில் அணிவதற்கே – உன்னைப்போல்
வைர மணிகளுண்டோ?

எனக் கேட்பார். இதைக் கவிஞர் முரளீதரனின் மொழியில் பின்வருமாறு காணுகின்றோம்!

பொன்னணிகள் அணிந்துள்ளேன்!
பூரிப்பாய் உன்கைகள்
என்கழுத்தில் இணைந்தெழிலாய்
இருத்தீந்த இன்பமில்லை!

குழந்தை தன் தாய்க் கழுத்தில் கையை இணைக்கும்போது அவள் பெரும் இன்பத்தை அக்கழுத்தில் புரளும் பொன் நகைகள் தந்துவிட முடியாது.

வீடும் வீடாமோ?

'வெண்பாவிற்புகழேந்தி!' எனப் பாராட்டப்பெறும் புகழேந்திப்புலவர் மக்கட்பேற்றின் சிறப்பை ஒரு பாடலில் மாண்புறக் கூறுகிறார்; பொன் இருந்தாலும். புகழ் இருந்தாலும், மற்றும் என்னென்ன சிறப்புகள் இருந்தாலும் மக்களைப் பெறாதார் வாழ்வு வாழ்வாகாது என்பது அம்மாப்புலவனின் வாக்கு.

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்று)
என்னுடைய ரேனும் உடையரோ? – இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கை பூநாறும் செய்யவாய்
மக்களைஇங் கில்லா தவர்!

இக்கருத்தையே திரு. முரளீதரன் எளிமையான சொற்களால், நம் உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையிலே சொல்லியிருக்கிறார்!

என்னென்ன செல்வங்கள் இருந்திட் டாலும்
எழில்இன்பக் குழந்தையிலா வீடும் வீடோ?
அன்பெல்லாம் விற்றிருக்கும் குழந்தை வாழா
அவ்வீடோ இடுகாடு! வறுமைக் காடு! (பக். 29)

என்னை எடுத்துக்கொள்

குழந்தை, நோயால் துன்புற்று வருந்தும்போது பெற்றோர் படும் பாட்டை முரளீதரன் பாடியுள்ளது தனிச்சிறப்பு! குழந்தை நோயுற்று முனகுகிறாள்; அதைக் காணும் பெற்றோர்க்கு அழுகை வருகிறது; அவர்கள் அழுவதைக் கண்டால் குழந்தை வருந்துமே! ஆகவே, அழுகையை அடக்கி உள்ளேயே குமுறுகின்றனர். அழுவதற்கும் வழியில்லா அவலம்!

நோயுற்று முனகுகிறாள்
நொந்திடும்என் சேய்அவள்முன்
வாய்விட்டு அழுவதற்கும்
வழியின்றித் தவிக்கின்றேன்! (பக். 61)

ஓடி விளையாடும் குழந்தை ஓய்ந்து கிடப்பதைக் காணச் சகிக்க முடியவில்லையே!

ஓடி விளையாடும்
ஓய்யார மான்குட்டி
நாடி தளர்ந்ததுபோல்
நலிந்து துவளுவதோ? (பக். 63)

சின்னஞ்சிறு வயதிலேயே இந்தக் கொடுமையா?

சிறுபிஞ்சு பழுக்காமல்
சிதைந்து வெம்புவதோ?
முறுவலித்து மலர்ந்திடுமுன்
மொட்டு கருகுவதோ? (பக். 64)

குழந்தைக்காகத் தன்னையே தத்தம் செய்யும் தாயுள்ளத்தை பெற்ற உள்ளத்தைக் காட்டும் முரளீதரனின் சொற்கள் நம்மை உருகச் செய்கின்றன.

என்னை வேண்டுமெனில்
எடுத்துக்கொள் எனதன்பின்
சின்னமிதைச் சிதைக்காதே
என்முன்..... (பக். 67)

'ஆண்டவனே! என்னை எடுத்துக்கொள்; என் குழந்தையை வாழவிடு' எனும் இந்தச் சொற்கள் கல் நெஞ்சையும் கரைக்குமே!

வாழ்க கவிஞர்

இவ்வாறாய் நூல் முழுதும் தாயின் பெருமிதமொத்த தனிச் சிறப்பு நடையையும் சேயின் மழலையொத்த செவ்விய இனிமையையும் ஒருங்கே நுகர்ந்து மகிழ்கிறோம்! 'ஒன்றே போதும்! இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம்' எனக் குடும்ப நலம் பேணும் காலமிது! ஆனால், நாமோ அதற்கு நேர்மாறாய் நண்பர் முரளீதரனைக் கட்டுப்பாடெதுவுமின்றி எண்ணற்ற கவிதைச் சேய்களைப் பெற்றெடுத்து எழிலோங்கும் தாயாய்த் திகழ வேண்டுமென உளமார வாழ்த்துவோமாக!

நூல் ஆக்கம்	கவிஞர் முரளீதரன்
வகைமை	கவிதை
வெளியீடு	வி.சி. ஸ்ரீராம், சென்னை. (1984)

12

தேன் ஊற்று

கவிஞர் பாரி அவர்கள், "தேச மக்கள் உய்யும்வரையில் எழுதிக்கொண்டே இருக்கப்போகின்றேன்" என்னும் உறுதியோடு எழுதத் தொடங்குகிறார். மண், விண் முதலியவற்றின் எழிலனைத்தையும் தம் கவியால் விளக்கத் திறமையளிக்குமாறு தமிழன்னையை வேண்டுகிறார்.

சீராகப் பாப்புனையும் கவிஞர்க் கெல்லாம்
சிறப்பான உவமையினைத் தேடல் ஆசை

எனத் தாம் கூறுவதற்கேற்ப, சீரான உவமைகளைத் தேடிப் பாடியிருக்கிறார்.

..... காலம் வெல்லும்
தகுதியினைப் பெற்றதுவே கவிதையாகும்

ஈன அவர், கவிதைக்கு இலக்கணம் வகுப்பது அழிக்க முடியாத உண்மையேயாம். "பழமையையே பாடிக்கொண்டிருக்கிறீர்களே, சிந்தித்தால் பாடுதற்குப் பொருளா இல்லை" எனக் கேட்டுப் புலவர்களைப் புதுமையைப் பாட அழைக்கிறார். புதுமையைப் பாடி மக்களிடையே துணிவையூட்டப் பாடும் கவிஞனை இவ்வையம் தேடி நாடும்; இதற்குச் சான்று பாரதியும் பாரதிதாசனும் ஆவர் என எக்களிப்போடு சுட்டிக் காட்டி, அவர்களை 'எங்கள் கவிஞர்' என ஏற்றிப் போற்றுகிறார்.

கவியியக்கும் நாடெங்கும் தோன்ற வேண்டும்
கவிவாணர் ஐ.நா.வில் அமர வேண்டும்

என ஆசைப்படுகிறார். 'நந்தமிழின் சிறப்பை நாமறியாதிருந்தால் பிற நாட்டார் நம்மை நகையாரா? தமிழ்ப்பண்பை மறந்தார் தமிழர் என்று பேசிக்கொண்டால் தமிழ்த்தாய் உவப்பாளா' என வினவி, மொழிச்சிறப்பையும், இனப்பண்பையும் இழையோட விடுகிறார்.

பெருந்தலைவர்களைப் பாடுவதில் பெருமை கொள்கிறார். ஆரவுக் குடியரசை அமைத்துச் செயல்பட்ட நாசர் தம் மறைவால் ஞாலத்தையே அழவிட்டாரே என நவில்கிறார். அடிமைத்தளை ஒழித்த ஆப்பிரகாம் லிங்கன், மனிதப் பண்பாளர் மார்ட்டின்

லூதர் கிங், கொள்கை வீரர் கென்னடி முதலியோரைக் குண்டுக்கிரையாக்கிவிட்ட அமெரிக்காவே, நீ நிலவில் குடியேறித் தான் என்ன பயன் என வினவுகிறார்.

மாண்புமிகும் நல்லோரைச் சுட்டு வீழ்த்தி
எக்களிப்பார் இல்லாமல் செய்வீர்; இன்றேல்
எத்துணைதான் வளம்பெற்றும் பயன்தான் என்ன?

என அறிவுரையும் பகர்கிறார்.

குழந்தையை மடியிலாடும் இன்ப ஊற்றெனவும், மணவாழ்வின் எழிலோவியம் எனவும் காண்கிறார்; கருத்துக்கும் காட்சிக்கும் விருந்தாகும் மனையரசியை நினைந்து மகிழ்கிறார்.

மாலை வந்தும் வாராது ஏன்நின்றார்?

எனக் கேட்டு,

மயிலாட மழைமேகம் வேண்டும் – என்
மனமாட அவன்வருகை வேண்டும்

எனக் காதலி காதலன் வருகைக்காக ஏங்கவும்,

உன்மடியில் நான்சாய்வேன் – இதழ்தோய்வேன்

எனக் காதலன் காதலியை நினைக்கவும் வைக்கிறார். காதல் வேளையிலும் மன்பதை நலத்தை எண்ணும் காதலனை உருவாக்கி உலவ விடுகிறார்.

முல்லை, மலை, செல்வம், எழுத்தாணி, மரம் ஆகியவை பேசினால் என்ன பேசும் என்பதை எடுத்துரைத்து, கருத்து விருந்தைக் கனியச்செய்கிறார். புள்ளிபற்றி ஒரு கண்ணோட்டம் செலுத்துகிறார்; காகிதம் மக்கள் வாழ்வில் இரண்டறக் கலந்திருப்பதால், 'காகிதமே உலகம் என்கிறார்; உழைப்பைப் போற்றுவதே உழவர் பொங்கல் என்பதையும் உரிய முறையில் விளக்குகிறார். நன்மைக்கும் தீமைக்கும் நாமே காரணம்; அதற்கு ஆண்டவனைக் காரணமாக்குவது பொருளற்றது என்கிறார். குறள்நெறி குவலயத்தில் தழைத்தோங்க வேண்டும்; அப்போது தான் வளவாழ்வு காணமுடியும் என்பதை வகுத்துரைக்கிறார். எங்கெங்கோ செல்ல நேரம் ஏற்படுத்திக்கொள்ளும் நாம், நூலகம் தான் செல்லாமல் இருக்கலாமா என வினவி, அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்துகிறார்.

கல்வி, மடமை போக்கும், புலமை சேர்க்கும், பயில்வோரின் வாழ்வுக்கு விழியாகும்; ஆதலின், மாணவர்கள்

விளையாட்டாய் வாழ்க்கையினைக் கழித்து விட்டால்
வேதனைதான் மிஞ்சும்

என்பதை உணர்ந்து, கல்வியை உயிராய்ப் போற்றி வாழ்வில்,

மாசற்ற மேதைகளாய் விளங்க வேண்டும்

என ஆசைப்படுகிறார்.

வாழ்கின்ற வரையிங்கே அஞ்சாமலே – நம்
வருங்காலம் செழிப்பாக்கப் போராடுவோம்.

திறமை நமக்கிருந்தால் – இன்பம்
தேடி வருவதுண்மை.

தன்னைப் பிறர்க்காய் இழக்கத் துணிவோன்
இகழப் படுவதில்லை.

குறிக்கோளும் செயல்திறமும் கொண்டோ ராகக்
குவலயத்தில் வாழ்வதற்கே உறுதி கொள்வோம்.

தாழ்வற்ற சமுதாயம் உருவாக்குவோம் – மண்ணில்
தடையாக இருப்போரைச் சருகாக்குவோம்.

நஞ்சே இனிப்பாய் இருக்கிறது – இங்கு
நறுமலர்த் தேனோ கசக்கிறது.

ஏழையாக வாழ்ந்தாலும் உயிர்மாய்க்கும்
கோழையாக வாழ்தல் தீங்காம்.

இவ்வாறாய், தித்திக்கும் தேன் துளிகளை நூல் தேக்கி வைத்திருக்கிறது.

பாரதியார் புதிய ஆத்திசூடி பாடியதுபோல் 'பாரி நல்லுரை' 'எழுபதை நமக்கு நல்குகிறார். அதன்வழி, 'ஊர்நலம் நாடு', 'எறும்பெனப் பணிசெய்', 'கொள்கை வழிநில்', 'பசியினைப் போக்கு' போன்ற அரிய மணிமொழிகள் எழுபதை நமக்குத் தருகிறார்.

பிறந்தவர் ஒருநாள் இறப்பார், பாராள்பவர் ஆயினும் விதிவிலக்கல்லர் என்னும் உண்மையைச் சுட்டி நீ நன்னெறிப் படுத்தலால், நன்காடானாய் எனச் சுடுகாட்டை நன்காடாக்கிக் காட்டுகிறார்.

கவிஞர் பாரியின் புலமை மலையில் தோன்றிப் பெருக்கெடுக்கின்ற இன்தேன் ஊற்று நம் ஊனை, உளத்தை, உயிரை இனிமையில் நனைக்கிறது. தேனைக் குடிப்போம்! தெவிட்டா இன்பம் அடைவோம்!

நூல் ஆக்கம்	கவிஞர் பாரி
வகைமை	கவிதை
வெளியீடு	தமிழ் இலக்கிய மன்றம், சோழலிங்கபுரம், வடஆர்க்காடு மாவட்டம். (1980)

13

தீ இன்னும் அணையவில்லை

வலசை ப. கணேசன் குன்றாத கொள்கைப் பிடிப்பும் தணியாத தமிழ்ப்பற்றும், என்றும் மாறா இனவுணர்வும் கொண்ட எழுச்சிக்கவிஞர். சிந்தனைக் குருடர்களாய், மது மாந்திய மந்திகளாய், கொலைவெறிக் கொடியர்களாய் இலங்கையில் தமிழர்களைக் கொன்று குவிக்கும் சிங்களவர்களைத் தம் சொல் ஈட்டியால் வெட்டிச் சாய்க்க முனையும் கவிஞரின் முயற்சியே 'தீ இன்னும் அணையவில்லை' எனும் தலைப்புக் கொண்ட இச்சிறு நூல்! கையில் படையேந்திச் செல்லக் கவிஞர் அணியமாயிருந்தும் அதற்கான வாய்ப்பு இல்லையாதலின் முதலில் சொல்லைப் படையாக்கிச் செலுத்துகிறார். இச்சொல்லேருழவரின் கூரிய சொற்கலன்கள் வெறிகொண்டுள்ள சிங்களவர்களை வெட்டி மாய்க்கும் சொல்லேருழவர்களைத் தோற்றுவிக்கும் என்பது துணிபு.

அன்று இலங்கையை ஆண்டதோடு அவ்விலங்கையை எழில் கொழிக்கும் மண்ணாக்கத் தம் இன்னுயிரையும் ஈந்து உழைத்து உரமேற்றிய தமிழினத்தின் தலைகள் இன்று பந்துகளெனத் தரையில் உருட்டப்படுகின்ற கொடுமையைக் கண்டு கவிஞர் சிந்தும் கண்ணீராய் மட்டுமன்றிக் கொடியராம் சிங்களவரை வெட்டி வீழ்த்தத் துடித்தெழும் தமிழ் மறவர்களின் போர்க்கருவியாயும் விளங்குகிறது, இந்நூல்!

தந்தை பெரியார் வழி நின்று இனவுணர்வும் தன்மான உணர்வும் பெற்றுக் கிளர்ந்தெழுந்த பாவேந்தர், இனவுணர்வுத் தலைவனாய் இராவணனை நினைந்து அவனாண்ட இலங்கையை நோக்கி,

தென்திசையைப் பார்க்கின்றேன் என்சொல்வேன் என்றன்
சிந்தையெலாம் தோள்களெலாம் பூரிக்கு தடடா!

என மகிழ்ச்சி பொங்கப் பாடினார். ஆனால், இன்றைய நிலையோ கவிஞர் கணேசனை,

தென்திசை திரும்பிப் பார்த்தேன்
தீபத்தின் சுடர்போல் தீவே
பொன்னிறங் காட்டி யந்தோ
புகையினால் சூழக் கண்டேன்!

என வேதனைப் பெருமூச்சுடன் பாடச்செய்கிறது! இலங்கையில் இன்றைய தமிழர்களின் நிலை என்ன? கவிஞரின் சொற்களில் கூறுவதாயின் நித்தமும் கொலைகள்; நிச்சயமற்ற வாழ்க்கை; இல்லங்கள் எங்கும் எரியூட்டு; தேடிச் சேர்த்த யாவும் தீக்கிரை; மனைதோறும் மங்கையர் மானமிழப்பு; சாலையோர மரங்களில் உயிரற்ற உடல்களின் ஊசலாட்டம்.

உள்ளத்தைக் கொதிக்கு வைத்தே
உணர்வினை உறையச் செய்யும்

இந்தக் கொடுமைகள் இனியும் தொடர இடந்தரலாமா?

விடுதலை என்பது யாசித்து வாங்கும்
வெகுமதிப் பொருளல்ல!

ஆதலால், திடமுடன் போரிட்டுப் பெறுவோம் என்னும் எழுச்சிக் குரலின் தேக்கமே இந்நூல்.

இலங்கையில் நடக்கும் கொடுமைகளைப்பற்றிச் சற்றும் கவலையின்றித் தன்னலமே எண்ணித் திரியும்

தமிழரும் தமிழர் தாமோ?

எனக் கவிஞர் சினத்துடன் வினவுவதோடு,

இக்கணம் குரலெ முப்பு
இலங்கையே அதிரும் வண்ணம்

எனக் கட்டளையுமிடுகிறார். ஆம்! தமிழக மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஓங்கிக் குரல் கொடுத்தால் இலங்கையே நடுங்கும்.

என்னடா தமிழா! இன்னும்
ஏனடா தயக்கம்? தீவில்
உன்னுடை இனத்தோர் நாளும்
உகுக்கிறார் செந்நீர் வெள்ளம்;
கன்னலா உன்றன் ஆவி?
காசினி யாவு முள்ள
உன்னினத் தோரின் கைகள்
ஒன்றெனக் காட்ட வேண்டாம்?

கவிஞரின் இக்கட்டளையை அனைவரும் ஏற்கும் நன்னாளாம் பொன்னாள் புலரட்டும்!

கொடுமையைச் சாடும் கவிதையிலும் கவிதை நயம் கொஞ்சி விளையாடிடக் காண்கிறோம். இலங்கைக் கொடுமையில் சிக்கித் தவிக்கும் தமிழர்களை,

மல்லர்தம் கைக்குள் சிக்கும்
மலர்கள்.

குத்தீட்டி முனைப்பட்ட
மலர்கள்.

எனக் கூறும்போதும்,

நடந்திடும் சாலை யோர
நெடுமரக் கிளைகள் தோறும்
புடல் எனத்

தமிழர்களின் பிணங்கள் தொங்குகின்றன என வருந்தும் போதும், உணர்ச்சிவேகத்தோடு கவிதை நயமும் இணைந்து எழுச்சியூட்டும் சக்தியாய் உருவெடுப்பதை அறிகிறோம்!

இங்குள்ள தமிழர் அந்த
இனப்பகை யொடுக்க இன்றே
பொங்குமாக் கடல லைபோல்
புறப்பட்டுப் பாய்வோம் வாரீர்!

என்னும் கவிக்குரல் எங்கும் ஒலித்து வெற்றி விளைப்பதாகுக!

நூல் ஆக்கம்	வலசை ப. கண்ணன்
வகைமை	கவிதை
வெளியீடு	பாரி நிலையம், சென்னை. (1986)

14

முல்லைமாலை

கோவிலில் தேவதாசியர் என்னும் பிரிவினரை உருவாக்கிப் பெண்டிரை இழிவு செய்து வந்த கொடுமையைக் கண்டிக்கும் வகையில் நண்பர் காவனூர் வேலன் இக்குறுங் காவியத்தை உருவாக்கியிருக்கிறார்.

அருளுக்கே கோயிலுக்கு மனிதர் வந்தும்
ஆடுபவள் உடல்பார்த்து மயங்கி நிற்பர். (பக். 15)

இந்தக் கொடுமைக்குப் பெயர் பக்தியா என்னும் கவிஞரின் இதயத் துடிப்பே இக்காவியத் தோற்றத்திற்குக் காரணமாய் அமைகிறது.

திக்கற்ற பெண்களை, அவர்களின் கட்டுடலைச் சுவைப்பதற் கெனவே ஏமாற்றுக் கூட்டம் அவர்களை என்றென்றும் கோவிலிலே நிலையாய் வைத்துக்கொண்டது; தேருக்கு முன்னே அவர்களை ஆடச்செய்து தேவதாசியர் என்ற பட்டம் சூட்டியது.

ஏமாந்து வாழ்விழந்த வனிதை யர்கள்
எப்படியோ யாருக்கோ குழந்தை பெற்றால்,
தாமாக அதுவளரும், தந்தை யின்றி;
தாய்வழியில் தொழில்பயிலும், அந்தோ பாவம்! (பக். 15)

இவ்வாறான கொடுமையைக் களைந்தெறியத் துடித் தெழுந்தான் இதயவேந்தன் எனும் இளைஞன். கணிகையர்களை மணந்து அவர்களைக் கற்பரசிகளாய் வாழச் செய்வதன்வழி அக்குலத்தை இல்லையென்றாக்கிட இளைஞர் கூட்டம் முன்வர வேண்டுமென முழங்கினான். இப்புனிதப் போர்ப்படையின் முன்னணி வீரனாய்த் தானே திகழ்ந்தான். கணிகையின் மகள் முல்லைமாலையைக் காதலித்துத் திருமணம் செய்துகொள்ளவும் உறுதி பூண்டான்.

காதலர்கள் ஒரு நாள் சோலையில் சந்தித்தபோது, முல்லை மாலை இதயவேந்தனிடம், தான் கோவிலில் முதன்முதலில் அரங்கேற்றம் செய்ய இருப்பதாய்ச் சொல்லி, ஆட்டத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் அவன் சில சொற்கள் கூற வேண்டுமென வேண்டினாள். அவனோ, கோவிலில் பெண்கள்

ஆடுவதை வெறுத்தான். ஆனாலும், "பார்க்கின்றேன் உனக்காக; பேசமாட்டேன்" என்றும் கூறினான். மறுநாள் முல்லைமாலையின் ஆட்டத்தைக் கண்டு மனம் வெதும்பினான்.

பெருமைகொள்ளும் வாழ்க்கைக்குத் தமிழப் பெண்கள்
பெரும்புரட்சி செய்திடவே திரள வேண்டும் (பக். 24)

என்பதால், இனி முல்லைமாலை கோவிலில் எக்காரணம் கொண்டும் ஆடக்கூடாதென்றான். அவளோ, கோவில் எங்களை வளர்க்கிறது; நாங்கள் ஆட மறுத்தாலோ,

பட்டயமாய்க் கொடுத்துள்ள வீட்டைச் சொத்தைப்
பறித்தெடுத்துத் துரத்திடுவர்... (பக். 32)

எனத் தன்னிலை விளக்கம் தந்தாள். அவனோ,

நாடாத உள்ளமெல்லாம் இங்கே வந்து
நாடுவது இறையவனை வேண்டி அன்று;
கூடாது கோயிலிலே ஆடும் மாதர்
கூட்டத்தை மாற்றிடவே வேண்டும் கண்ணே. (பக். 33)

"இனியும் இக்கொடுமை கூடாது; நீங்கள் அனைவரும் என் பேச்சையேற்று வெளியேறுங்கள்; குலமகளிராய் நீங்கள் வாழ நான் வழி செய்வேன்" என்றான்.

முல்லைமாலையின் தாய் தாசியேயானாலும் ஒருவனுடனேயே உறவு கொண்டவள். அந்த ஒருவன் யார் என்பதை மட்டும் அவள் இதுவரையில் வெளியில் சொல்லியதில்லை. முல்லைமாலை இதயவேந்தனின் எண்ணத்தைத் தாயிடம் கூறியதும் அவள்,

உனக்கின்று இவ்வுணர்வு தோன்றும் முன்பே
உன்தாயும் வாழ்ந்திட்டாள் ஒருவ னோடு (பக். 40)

என்பதை எடுத்துக் கூறி, அந்தத் தந்தையிடம் முல்லைமாலையை அழைத்துச் சென்று, அவர் உதவியுடன் தாசியர் கூட்டத்தைக் கோவிலிலிருந்து வெளியேற்றித் தாமும் வெளியேறலாம் எனக் கூறினாள்.

இதயவேந்தனின் எண்ணப்படி தேவதாசியர் ஒன்று சேர்ந்து,

"கோயிலினைக் காப்போரே! இனிமேல் நாங்கள்
கோயிலிலே ஆடுதற்கு இசைய மாட்டோம்; (பக். 52)

நாங்கள் இங்கிருந்து வெளியேறி அன்பான கணவரொடும் குழந்தைகளுடனும் ஆண்டாண்டு வாழ முடிவெடுத்தோம்" என்று கூறினர். கோவில் பார்ப்பான் இதை எப்படியாவது தடுக்க வேண்டுமெனத் துடித்தான். தருமகர்த்தாவின் பிள்ளை எழிலரசைக் கண்டு,

"ஆற்றோரம் பூத்திருக்கும் பூவைப் போன்றே
அழகுடனே செழித்திருக்கும் முல்லை மாலை
வேற்றூர்தான் செல்கின்றாள் கோயில் விட்டு
வெற்றுமடம் ஆகிவிடும் அவர்கள் போனால்; (பக். 56)

மேலும், எதிர்காலத்தில் தந்தைக்குப் பிறகு அவன் பதவியேற்று நிருவாகம் நடத்த வரும்போது கோவில், வேல்விழிகளற்ற சூனியமாகவன்றோ இருக்கும்" எனக் கூறித் தாசியர்கள் வெளியேற்றத்தைத் தடுப்பதற்குத் தூண்டினான்.

முல்லைமாலையின் தாய் உறவு கொண்டிருந்தது அவ்வூர்த் தருமகர்த்தாவிடம், (எழிலரசின் தந்தையிடமேயாம்.) தன்மகளை அவள் அழைத்துச் சென்றாள் தந்தையிடம்; கோவிலை விட்டு வெளியேற இருக்கும் மகளின் முடிவையும் சொன்னாள். தந்தையும் அம் முடிவு கேட்டு மகிழ்ந்து வாழ்த்தினார்.

தீயவர்கள் ஒன்றுசேர்ந்து, வெளியேற இருக்கும் தாசியரைத் தீர்த்துக் கட்டவேண்டுமெனத் திட்டமிட்டனர். இதையறிந்த இதயவேந்தன், தருமகர்த்தாவைக் கண்டு, காவலர்களை அழைத்துத் தீயவர்களின் திட்டத்தைச் சிதைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டான். மேலும், அத்தீயவர்கட்கு அவர் மகன் எழிலரசு துணையிருப்பதையும் எடுத்துக் கூறினான். தந்தை தம் மகனைத் தடுத்ததோடு இதயவேந்தனுக்குத் துணையாயும் இருந்தார்.

தாசியராக்கப்பட்ட மகளிர் கூட்டம், கூடு விட்டு வெளியேறும் பறவைபோல, கோயிலை விட்டுக் கூட்டங் கூட்டமாய் வெளிவந்தனர். அவர்களையெல்லாம் இதயவேந்தன் ஒன்றுதிரட்டி ஓரிடத்தில் தங்கச் செய்தான். அங்கு வந்திருந்த சீர்திருத்த எண்ணங்கொண்ட இளைஞர்களைத் தத்தம் மணமகளை அக்கூட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்குமாறு செய்தான். சமூகத் தொண்டர் அன்பானந்தரும் அங்கு வந்து, மணம் பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்தினார். 'தாசியர்' என்ற அவமானச்சொல் அங்கே அழிந்தது.

இதயவேந்தனும் முல்லைமாலையும் ஒன்றிணைந்தனர். பழமையாளர்கள் இதயவேந்தனை வஞ்சம் தீர்க்க எண்ணினர். காதலர் இருவரும் பூஞ்சோலையில் வீற்றிருந்தபோது கொடிய நஞ்சுள்ள பாம்பை அவ்விடத்தில் விட்டனர். காதலனோடு மகிழ்ந்திருந்த முல்லைமாலையைப் பாம்பு தீண்ட இறந்தாள். காதலி இறந்ததைக் கண்ட அவனும், 'பாம்பே! என்னையும் தீண்டு' எனத் தொட்டான்; மடிந்தான்.

அன்றலர்ந்த மலரன்றே அழிதல் போல
அழிந்திட்டார் சாய்ந்திட்டார் மண்ணின் மீது. (பக். 90)

அவர்கள் மடிந்தாலும் வருங்காலம் அவர்களை என்றும் நினைவில் கொள்ளும்; நாட்டில் தழைத்திருந்த கொடிய சமுதாயக் களையைப் பிடுங்கியெறிந்த அப்பண்புள்ள காதலரை உலகம் என்றும் வாழ்த்தும்.

மேலுள்ள இச்சிறிய கதை கொண்டு கவிஞர் பல அரிய செய்திகளை எளிய நடையில் இனிமையாய் உரைத்துச் செல்கிறார். கவிஞர் நடை தங்குதடையற்றுத் தெளிந்த நீரோட்டம்போல அமைந்திருக்கிறது.

மாலையிலே மலர்கின்ற அல்லிப் பூவே!
மலைமீதில் சரிகின்ற அருவி ஊற்றே!
சோலையிலே பூக்கின்ற பூவ னைத்தும்
சேர்ந்தொன்றாய்ப் பூக்கின்ற விந்தைக் காடே! (பக். 76)

காதலியைக் காதலன் வருணிக்கும் இப்பாடல் நடை அக்காதலைப் போலவே விறுவிறுப்புடன் அமைந்திருக்கிறது.

காதற்செய்திகளைப் பாடுவதில் கவிஞர் கைதேர்ந்தவராய் விளங்குகிறார்.

பட்டாடும் உடல்மீது காளை நெஞ்சம்
பட்டதுமே துவண்டிட்டாள் கொடியைப் போலே! (பக். 22)

கூர்விழியாள் அன்னமவள் நீந்து தற்குக்
குளமானார் நலம்காத்தார் குளிர்ந்து போனார். (பக். 41)

கரும்புதின்ன எனக்கென்ன கூலி வேண்டும்?
காந்தவிழிப் பார்வைக்கே இரும்பாய் ஆவேன்! (பக். 57)

என்பன போன்ற அடிகள் சிந்தைக்கினியனவாய்ச் சிறக்கின்றன. காதலி தென்னையிலே சாய்ந்து நிற்கிறாள்; காதலன் கூறுகிறான் :

தென்னையிலே சாய்ந்தபடி நின்றி டாதே
திகைத்திடுவார் நடுமரத்தில் காயா என்று (பக். 69)

காதலியின் உறுப்பு நலனைக் காதலன் உய்த்துணர வைக்கும் முறையில் கூறியிருப்பது கவிஞரின் கற்பனைத் திறத்தை விளக்குகிறது.

பக்தி என்னும் பெயரால் கோவில்களில் நடைபெறும் காமக் களியாட்டங்களைக் கவிஞர் காவியத்தில் பல இடங்களில் வன்மையாய்க் கண்டித்திருக்கிறார்.

பக்தியென்றால் பரமன்மேல் காதல் வேண்டும்
பாவையுடல் மோகம்தான் பக்தி யாமோ? (பக். 34)

சிலைபார்த்து வணங்குதற்குக் கோவில் சென்றால்
சிற்றின்பக் கலைதானே நினைனவைத் தூண்டத்
தலைவாயில் கோபுரங்கள் எங்கும் தீட்டித்
தடுமாற வைக்கின்றார் ஆண்கள் தம்மை. (பக். 39)

இவ்வடிகள் கோவில்களின் நிலையைப் புலப்படுத்துகின்றன.

காவியத்தில் இடையிடையே பொருள் நிறைந்த உறுதிச் சொற்களைக் கவிஞர் விரவிச் செல்கிறார்.

மண்ணுக்குள் மறைந்தாலும் மறைந்து போங்கள்;
மானத்தை விலைபேசத் துணியாதீர்கள்! (பக். 35)

பொதுவாழ்வில் இருப்பவர்கள் நாட்டிற்காகப்
போற்றுகின்ற காரியங்கள் செய்திட்டாலும்,
அதுவொன்றும் பெரிதாகத் தோன்றி டாது;
அந்தரங்க வாழ்வுதனை அறிவர் ஆய்ந்து!
இதுஉலக வழக்கு..... (பக். 49)

தனிமனிதர் நேர்மையிலே உலகோர் வாழ்ந்தால்
தவறிழைக்கும் கூட்டங்கள் ஒழிந்து போகும் (பக். 85)

மானத்தோடு வாழவேண்டுமென்பதையும், பொதுவாழ்வில் இருப்போர் தனி மனித வாழ்க்கையிலும் தூய்மையுடன் விளங்க வேண்டுமென்பதையும், மக்கள் நேர்மையான வாழ்வு வாழவேண்டுமென்பதையும் மேலுள்ள கவிதையடிகள் நம் நெஞ்சில் நன்கு பதியவைக்கின்றன.

இயற்கையைப் பாடுவதில் கவிஞர் சிறந்து விளங்குகிறார். பண்டைப் பெரும் புலவர்களோடு ஒப்பிடத்தக்கவண்ணம் இவரது இயற்கை வருணனை அமைந்து சிறக்கிறது. பூத்திருக்கும் கொன்றை மரத்திலிருந்த குருவிகள் பறந்துபோய்ப் புன்னை மரத்தில் தங்குவதைக் கவிஞர்,

கொன்றைமரம் பூத்தங்கே நெருப்பாய்த் தோன்றக்
குருவிகளும் அதைப்பார்த்துப் பயந்தே ஓடப்
புன்னைமரம் வரவேற்றுத் தங்கச் செய்யும் (பக். 69)

எனப் பாடுகிறார்.

மாலை நேரம்; அந்தி நிலா செவ்வானில் தோன்றுகிறது; பூக்கள் காற்றினால் அசைந்து தேனைச் சொரிகின்றன; வண்டுகள் பாடுகின்றன; தென்றல் தவழ்கிறது. இக்காட்சியைக் கவிஞர் பாடுகிறார். செவ்வானில் நிலா தோன்றுவது, நெருப்பில் நிலா மூழ்குவது போல இருக்கிறதாம். பூக்களிலிருந்து தேன் சிந்துவதோ, நிலா நெருப்பில் மூழ்குவது கண்டு மலர்கள் கண்ணீர் விடுவது போன்றிருக்கிறதாம். வண்டுகள் பாடுவது இச்செய்தியினை வாய்விட்டலறித் தென்றலுக்குத் தெரிவிப்பது போல இருக்கிறதாம்!

அந்திநிலா நெருப்பாற்றில் மூழ்கி வேக
அதைப்பார்த்த மலர்க்கூட்டம் கண்ணீர் சிந்த,
செந்தேனைச் சுவைப்பதற்கே வந்த வண்டு
செய்தியினைத் தென்றலுக்குப் பாடிச்சொல்ல (பக். 55)

முந்தையோர் வழிநின்று, புதுமை எண்ணங்களை,
பொல்லாங்குச் சமுதாயம் மாற வேண்டும்
பகுத்தறிவுச் சமுதாயம் மலர வேண்டும் (பக். 92)

என்னும் நோக்குடன் பாடுபவராய்க் கவிஞர் வேலன் விளங்குகிறார்.

அவர் கவிதையாற்றல் மேலும் வளர்ந்து, வளமை பெற்று, இன்னும் பல நூல்களை அவர் தொடர்ந்து அளித்துச் சமுதாய முன்னேற்றத்திற்கு உழைக்க வேண்டுமென உளமார விரும்பி வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் காவனூர் வேலன்
வகைமை	குறுங்காவியம்
வெளியீடு	பாவலன் பதிப்பகம், சென்னை. (1981)

15

வண்ணங்கள்

மீண்டும் சங்க காலம்

கவிஞர் பன்னிருவரின் கவிதை உறவால் உருவாகியுள்ள இந்நூலில், பல்வேறு எண்ண வண்ணங்கள் எழிலுறத் தீட்டப்பட்டுள்ளன. சங்க காலத்தில் புலவர்கள் மட்டுமேயன்றிப் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தாரும் பாக்களியற்றும் திறம் பெற்று விளங்கினர் என்பதை, ஆசிரியர் பெருங்கண்ணன், இளம்புல்லூர்க் காவிதி, உறையூர் இளம்பொன் வாணிகனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், கச்சிப்பேட்டு இளந் தச்சனார், கணக்காயன் தத்தனார், கணியன் பூங்குன்றனார், காவற் பெண்டு, ஏனாதி நெடுங்கண்ணனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார், மதுரைப் பெருங்கொல்லன் முதலிய பெயர்களால் அறிகிறோம். அதுபோலவே, இந்நூலில் வங்கிகளிலும், காவல் துறையிலும், சுங்கத் துறையிலும், பஞ்சாலையிலும், காட்பரீஸ் நிறுவனத்திலும், ஆசிரியத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளோரின் கவிதைகளைக் காண்கிறோம். அன்று ஆட்சிப் பொறுப்பிலிருந்த சேரமான் கணைக்காலிரும்பொறை, சோழன் நலங்கிள்ளி, பாண்டியன் அறிவுடைநம்பி போன்றோர் பாடியதுபோலவே இன்று வட்டாட்சியர் பொறுப்பிலுள்ள ஒருவர் பாடியுள்ள பாடல்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இவற்றை நோக்கும்போது தமிழகத்தில் கவிதைத் துறையில் மீண்டுமொரு சங்க காலம் மலரத் தொடங்கியுள்ளது என்று சொல்லத் தோன்றுகிறது.

கவிஞர் வேதம்

கவிஞர் வேதம் ரிசர்வ் வங்கியில் பணியாற்றுபவர். வங்கியில் இட்ட பணத்திற்கு வட்டி கிடைப்பதுபோல அவர் நெஞ்சிலிட்ட தமிழுக்கு வட்டியாக இனிய பாடல்கள் விளைந்துள்ளன. 'வேதத்தின் கவிதைகளையும் வேதத்தின் வாக்கு' என்று பெருமையாய்ச் சொல்லலாம் என்கிறார், தீபம் பார்த்தசாரதி. அது முற்றும் உண்மையாதலை அவர் கவிதைகளைப் படிக்கும்போது

உணர்கிறோம். நம் கண்ணையும் கருத்தையும் கவர்கிற 'பூம்பூம்' காளை, திருமணமான

புதிதில் அவளுக் கெதற்கோ 'ஆமாம்'
போட்ட நினைவைக் கொணர்கிறது[1]

என்பது சுவையும் உண்மையுமான செய்தி அன்றோ? பூம்பூம் மாட்டுக்காரன் மாட்டினைப் பல விதத்தில் அழகு செய்து பெருமளவில் முயற்சிசெய்தாலும் அவனுக்கும் அவன் மாட்டிற்கும் போதிய அளவு உணவு கிடைப்பதில்லை என்பதைக் கவிஞர்,

இத்தனை அழகும் போதா தென்றா
எழிலாய் நெற்றியில் நாமங்கள்? – ஓ அவை
அத்தனை முயன்றும் வயிறே நிரம்பா – இரு
அவல ஏழைகளின் ரூபங்கள்[2]

என்று கூறும்போது, ஆழ்ந்த இரக்க உணர்ச்சியை அடைகிறோம். வேதநாயகம் பிள்ளை குளத்தூரில் பிறந்து மாயூரத்தில் சிறப்புப் பெற்றதை,

ஒருவயலில் பிறப்பெடுத்து மறுநிலத்தில்
ஓங்கிவளர் நெற்கதிர்போல்[3]

என்னும் உவமையால் குறிப்பது மிகவும் பொருத்தமாயுள்ளது.

பழகும் கன்னியின் முகம்தனிலே – காமன்
பருவம் தேய்ப்பதால் பளபளப்பும்
பழுத்த கிழவியின் முகந்தனிலே – காலன்
பதிக்கும் முத்திரைச் சுறுசுறுப்பும்.....
எனக்கு மட்டும் தெரிகிறதா? – இல்லை
எல்லோ ருக்குமே புரிகிறதா?[4]

என்பது சிறந்த வாழ்க்கைத் தத்துவத்தை, எல்லோரும் நினைந்து பார்க்கச் செய்யும் அரிய வினாவாய் அமைகிறது. பேசிப் பேசியே காலத்தைக் கழிக்கின்றோம்; வறுமை இன்னும் நீக்கப்படவில்லை என உள்ளம் வருந்துகின்ற கவிஞர்,

குழிதோண்டிப் புதைக்கின்ற வறுமை இன்னும்
கொலைசெய்யப் படவில்லை; என்ன பேச்சு?[5]

என்று குமுறுவது நியாயந்தானே?

---

1. இந்நூல், பக். 2
2. மேலது, பக். 2
3. மேலது, பக். 3
4. மேலது, பக். 4
5. மேலது, பக். 16

கவிஞர் வண்ணை மூர்த்தி

கவிஞர் வண்ணை மூர்த்தியின் கவிதைகள் இனிமையும் புதுமை விழைவும் கொண்டனவாயுள்ளன. காவல் துறையில் பணியாற்றும் இவ்விளங்கவிஞர் கவிதைத்துறையிலும் பழைய மரபு கெடாமல் 'காவல்' செய்து வருவது போற்றற்குரியது. மேகஞ் சூழ்ந்த ஐப்பசி மாதத்தை,

அஞ்சனம் தீட்டப் பட்ட அழகுடை மேனி பெற்றாய்

என்றும்,

அரங்கனின் மேனி பெற்றாய்[1]

என்றும் வருணிப்பது அவரது கற்பனைத் திறனைக் காட்டுகிறது. ஆண்கள் சிலரின் பொய்யான காதலினால் வாழ்விழந்து பெண்கள் சிலர் தவிப்பதனைக் காணப்பெறாதவராய்,

விற்புருவ அழகியர்க்கோ
வேதனைதான் காதலினால்;
நற்குலத்துப் பெண்ணினமே
நடிப்புக்கு மயங்கவேண்டாம்[2]

என எச்சரிக்கிறார்.

புதுமையை விரும்புகின்ற இந்நண்பர் கவிஞனைப் பார்த்து, பெண்ணையும் நிலவையும் மலரையும் பற்றியே பாடிக் காலத்தைக் கழிக்கிறாய்;

என்னநீ புதுமைகண்டாய் – அதனால்
இனிநீ புதுமை செய்வாய்[3]

என்று கருத்துரைக்கிறார். சமுதாயம்[4] என்ற கவிதையில் சமுதாயத்தை நாம் பல பெயரிட்டுப் பழித்துக் கூறினும், உயர்த்திக் கூறினும் அதில் நாமும் ஓர் அங்கம் என்பதை உணர வேண்டும் எனச் சுட்டிக்காட்டுகிறார். வானத்தின் உச்சியிலிருந்து அமுத வொளிவீசும் வெண்ணிலவைப் பார்த்து,

பாற்குடத்தைச் சாய்த்து,
மண்மீதில் பால்வெள்ளம் புரண்டே ஓட
மகிழ்வாக விளையாட்டை நிகழ்த்து கின்றாய்[5]

என்று அவர் கூறுவது, நிலவின் கதிர்கள்

---

1. இந்நூல், பக். 18
2. மேலது, பக். 21
3. மேலது, பக். 23
4. மேலது, பக். 25
5. மேலது, பக். 27

வெள்ளிவெண் குடத்துப் பால்சொரி வதுபோல்
கள்ளவிழ் பூம்பொழில் இடைஇடை.....'

ஒளியைச் சொரிந்தன என்ற மணிமேகலை அடிகளை நினைவுக்குக் கொண்டுவருகின்றன.

கவிஞர் சுப. முத்துவேலன்

கவிஞர் சுப. முத்துவேலன் அவர்களின் கவிதை யாப் பிலக்கண முறையோடு பொருந்தி, அறுசீர் விருத்தமாய் அமைந்து அழகு தருகிறது. இந்த நாட்டின் புலவர்களின் அறிவு நெசவுக்குப் பொருத்தமான வலிமையைத் தந்ததே ஆடை நெசவுதான்.

பஞ்சிதன் சொல்லாப், பனுவல் இழையாகச்,
செஞ்சொற் புலவனே சேயிழையா, – எஞ்சாத
கையே வாயாகக், கதிரே மதியாக,
மையிலா நூன்முடியு மாறு.[2]

சொற்களே பஞ்சு; செய்யுளே இழை; செஞ்சொற்புலவனே நூல் நூற்கும் சேயிழை! அவன் வாய், கை; அறிவே நூற்கும் கதிர்! இது நன்னூல் காட்டுகின்ற உவமை. பஞ்சாலையில் பணியாற்றும் இக்கவிஞர் பஞ்சிலிருந்து நூலும், நூலிலிருந்து ஆடையும் உருவாவதை நாள்தோறும் பார்ப்பதனாற்றான்போலும் சொற்களாகிய பஞ்சு கொண்டு, கவிதையாகிய நூலை நூற்று, இலக்கியமாகிய ஆடையை நெய்து குவிக்கிறார்.

உலகத்தார் எவ்வளவோ முயன்றும் பஞ்சமானது ஒழியவே இல்லை என்பது கவிஞருக்கு வருத்தத்தையளிக்கிறது. பஞ்சம் என்னும் மங்கை,

உலகினில் எனையொ ழிக்க
உபாயங்கள் பலவே செய்தும்
சுலபத்தில் முடிய வில்லை.....[3]

என்று தானே கூறுவதாய் அமைந்துள்ள அடிகள், பஞ்சம் வேரூன்றி நின்று ஏழை எளிய மக்களை எந்த அளவுக்கு வாட்டி வதைக்கிறது என்பதைப் புலப்படுத்துகின்றன. நல்லவர்கள் வாழ்ந்த அன்றைய தமிழகம் வளங்கொழித்தது; இன்றோ கல்மனக் கசடர் மிகுந்து பல கவலைகளைப் பெருகச்செய்கின்றனர். அதனால்,

---

1. மணிமேகலை, 6 7-8
2. நன்னூல், 24
3. இந்நூல், பக். 35

நெல்விளை பூமி எங்கும்
நிலைமையே திரிய, அந்தோ
கல்மிகு அரிசி விற்கும்
காட்சிகள்.....[1]

நிறைந்த அவல நிலை தோன்றியது கண்டு அழுது புலம்புகிறார். மறைமலையடிகளாரையும் திருஞானசம்பந்தரையும் பலபடப் பாராட்டுவது கொண்டு முன்னோரைப் போற்றும் இவரின் நற்பண்பினை உணர்கிறோம். மறைமலையடிகளாரை,

தம்மைநக் கீரன் என்றே
தமிழகம் சொல்ல வாழ்ந்தார்[2]

என்றும், திருஞானசம்பந்தரை,

சித்திரை முழுநி லாவாய்ச்
சிறப்புற ஒளிர்ந்த ஞானி[3]

என்றும் பாராட்டியிருப்பது எண்ணி மகிழ்தற்குரியது.

கவிஞர் எச். கிருஷ்ணமூர்த்தி

கவிஞர் எச். கிருஷ்ணமூர்த்தியின் பாடல்கள் நகைச் சுவையும் உண்மை நிலையும் கொண்டு விளங்குகின்றன. எந்தக் கருத்தினையும் மனத்தில் தைக்கும்படியாய்ச் சுவைபடச் சொல்லுதல் இவருக்குக் கைவந்த கலையாயிருக்கிறது. சென்னை போன்ற பெரிய பட்டணங்களில் வாழுகின்ற மக்களின் அன்றாட வாழ்க்கைச் சிக்கல்களை உள்ளது உள்ளவாறே உணர்த்துகிறார்.

பட்டணத்துச் சனங்களையே பாருங்க – அவங்க
பட்டுவரும் துன்பங்களைக் கேளுங்க[4]

என்று அவர் தொடங்கும்போதே நமக்கு அதைக் கேட்க வேண்டும் என்ற ஆவலைத் தோற்றுவித்துவிடுகிறார். பின்னர்ச் சிக்கல்களை வரிசையாய் அடுக்கிச் செல்கிறார்.

புதியமுறை பாடங்களைப் படிக்கணும் – அது
புரிஞ்சதுபோல் புள்ளெமுன்னே நடிக்கணும்[5]

ஆம்! இன்றைய பெற்றோர்களின் இடுக்கணை நினைந்து நகைக்கிறோம்.

---

1. இந்நூல், பக். 37
2. மேலது, பக். 42
3. மேலது, பக். 48
4. மேலது, பக். 50
5. மேலது, பக். 50

ஓட்டலிலே விலையைக்கேட்டுப் பாருங்கோ – அதைக்
கேட்டதுமே வயிறுரொம்பிப் போகுங்க....
ஆனையுமே குதிரையுமே வாங்கலே – ஆனா
ஆனைவிலை குதிரைவிலை கொடுக்கணும்[1]

என்னும் அடிகள் விலைவாசி ஏற்றத்தை உரைக்கின்றன. ஒருவன் வீடு கட்டுவதற்காகக் 'கடன் உடன்' வாங்கி வேலையைத் தொடங்கினான். மனை, சிமெண்டு, கம்பி, செங்கல், மண் முதலியன வாங்கப்பட்டன. இதற்குள் கையிலிருந்த பணமும், வெள்ளி தங்க நகைகளுங்கூடப் பறந்துவிட்டன. பிறகு, அவனுக்கு வாய்க்கும் வயிற்றுக்கும் வைத்தியனுக்கும் வட்டிக்கும் வரிக்கும் ஈடு கொடுப்பதே போதும் போதுமென்றாயிற்று. வீட்டினை எப்படிக் கட்டுவான்?

பாடு பட்டு முயல்கிறேன்
வீடு முடிய வில்லையே![2]

என்பதே பலரின் பாட்டாய் இருக்கமுடியும் என்பதைக் கவிஞர் தெளிவாக்குகிறார்.

குழந்தையின் குறும்புச் செயல்களை இவர் அழகாய்ச் சித்திரிக்கின்றார்.

கல்லும் மண்ணும் காரைச் சாம்பலும்
கல்கண் டைப்போல் களிப்பாய்ச் சுவைப்பான்[3]

என்பதும்,

அம்மா அப்பா அந்தரங் கங்களை
நிம்மதி யாக நெடுங்கதை போல[4]

ஊராருக்கு அம்பலப்படுத்திவிடுவான் என்பதும் அவன் குறும்புத்தனங்களுள் சிலவாம்.

கவிஞர் மீ. விசுவநாதன்

கவிஞர் மீ. விசுவநாதனின் கவிதைகள் மிகவும் இனிக்கின்றன; இவர் 'காட்பரீஸ்' நிறுவனத்தில் பணியாற்றுவதனால் தானோ?

செங்கதிர் நாயகன் வந்து தவழ்ந்திடச்
சிறந்திடும் பூந்தோட்டம் – வாசம்
சிந்திடும் எழிற்கோட்டம்[5]

---

1. இந்நூல், பக். 51
2. மேலது, பக். 59
3. மேலது, பக். 61
4. மேலது, பக். 63
5. மேலது, பக். 73

என்று அவர் கவிதையைத் தொடங்கும்போதே இயற்கையின் அழகு முற்றிலுமாய்த் தோற்றமளிக்கிறது.

முதல்நாள் தயக்கம் மறுநாள் நெருக்கம்
முறையே துவங்கும் இணைபவர் இயக்கம்'

என்ற அவர் 'காதல் நயம்' உவட்டாமல் இனிக்கிறது.

திண்ணைச் சுவரெலாம் இடிந்து விட்ட
நிலையில் கறையான்கள் அரசாங்கம் துவங்கும்;
முன்வாசல் வரவேற்க மூங்கி லிரண்டில்
குருவிகள் வைக்கோல் கூடுகள் கட்டும்.[2]

குடிசை வாழ்வு ஓவியத்தின் ஒரு பகுதி இது. இக்கவிதை முழுவதையும் படிக்கும்போது நம் கண்கள், நீர் பெருக்குகின்றன.

வானம் தருமழை பெருமை கொண்டு,
வயலில் காண்பாய் பெருவளம்;
தேசம் எங்கும் அமைதி கண்டு,
துயிலச் செய்தோம் சமர்க்களம்.[3]

நாட்டின் அமைதியிலும் வளத்திலும் கவிஞருக்கு உள்ள பிடிப்பை இவ்வடிகள் விளக்குகின்றன.

என்பொன் மணித்தாய் திருநாடு; அது
நன்னெறி நெய்தீப ஒளிவீடு; – குன்றா
வண்மைக் கொழிசீர் பெருநாடு; – அதைக்
கண்போல் காப்போம் மதிப்போடு[4]

என்னும் இவ்வடிகளில் நாட்டுப்பற்றுணர்வுக் குரலைக் கேட்கிறோம்.

கவிஞர் இ. முத்தெழிலன்

கவிஞர் இ. முத்தெழிலன் சுங்கத்துறையில் பணியாற்றிக் கொண்டே தங்கத்தமிழ்க் கவிதைகளைப் படைக்கிறார். இவருக்குத் தமிழின்மேல் தணியாத காதல் உண்டு. அதனால்,

மலருக்குள் கண்டிடும் மஞ்சமும் – அந்த
மங்கையின் நெஞ்சத்துத் தஞ்சமும்
இளமைக்குள் துஞ்சிடும் கொஞ்சலும் – எங்கள்
தமிழ்தரும் சுகத்தினை விஞ்சுமோ?[5]

என்று தமிழின்பமே தலையாய இன்பம் என்பதை நிலைநாட்டுகிறார். இந்த அடிகள்,

1. இந்நூல், பக். 75
2. மேலது, பக். 80
3. மேலது, பக். 68
4. மேலது, பக். 69
5. மேலது, பக். 82

எங்கள் உடல்பொருள் ஆவியெல்லாம் – எங்கள்
இன்பத் தமிழ்மொழிக் கேதருவோம்;
மங்கை ஒருத்தி தரும்சுகமும் – எங்கள்
மாத்தமிழ்க்(கு) ஈடில்லை என்றுரைப்போம்

என்னும் பாரதிதாசனின் பாடலடிகளின் சாரமாய் விளங்கிடக் காண்கிறோம்.

வேகத்தின் ஆற்றலைப் பலவாறு புலப்படுத்துகின்ற இவர்,

முடமான சமுதாயம் முன்னேற வேகம்தேவை
திடமான வேகம்தேவை! திறமை,வி வேகம்தேவை [1]

எனக் கூறுவது சமுதாய முன்னேற்றத்திற்கான சிறந்த வழியாகவும் விதியாகவும் அமைந்திருக்கிறது.

தன் காதலியை நினைத்து ஏங்கும் ஒருவன்,

மெல்ல அடியெடுத்து – மன
மேடை யாடி வந்தாய்!
கள்ள விழிப்பார்வை – உன்றன்
காதலின் சின்ன மோடி [2]

என்பது அவன் உள்ளக் குழைவை உணர்த்துகிறது. காதல் தீயை மூட்டிவிட்டு நாணத்தால் ஒதுங்கி நிற்கும் நங்கையைப் பார்க்கிறான், காதலன். அவளைத் தன்னோடு அணைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவன் படும் பாடு கொஞ்சமா?

படராத கொடிமுல்லை பாரினிலே உண்டோசொல்?
பிணைமுறித்த அன்றிலினைப் பார்த்தவர்கள் உண்டோசொல்?
தொடர்ந்தோடும் மேகத்தைத் தொடமாட்டேன் இனிமேலே
தனித்துநிற்பேன் என்றுசொலும் தண்ணிலவு உண்டோசொல்? [3]

என்று அவன் வினாமேல் வினாவாய் அடுக்குகிறான். இனிமேலுமா அவள் அவனோடு சேர மறுப்பாள்?

கவிஞர் ஆர்ப்பாக்கம் பாப்பித்தன்

கவிஞர் ஆர்ப்பாக்கம் பாப்பித்தனின் கவிதைகள் இனிமையும் எளிமையும் கொண்டன; இலக்கணமும் மரபும், புதுக்கவிப் போக்கும் தழுவியன.

குழாயைத் திறந்துவிட்டு – நீர்தான்
குடத்தில் நிரம்பியதும்
குழாயைத் திருகிவிட்டுச் – சென்றால்
குமுறும் நிலைஎனக்கேன்? [4]

---

1. இந்நூல், பக். 89
2. மேலது, பக். 91
3. மேலது, பக். 95
4. மேலது, பக். 99

எனக் காதலனின் தவிப்பை உணர்த்தும் பாடலில் நாட்டுப் புறப்பாடலின் சாயலை அறிந்து மகிழ்கிறோம். 'மனைவி' என்னும் கவிதையில் மனைவியைத் தமிழ் இலக்கணமாய் உருவகித்திருப்பது வெகுநயமாயுள்ளது. மனைவியை இலக்கண மாகவே ஆக்கிவிடுகிறார்.

வல்லினத்திற் கினமாகும்
மெல்லினமாய் இணைந்திடுவாள்[1]

என்ற தொடக்கமே பாடல் முழுவதையும் படிக்கத் தூண்டுகிறது. கண்களை,

எழுத்துல கறிந்திட ஏற்புடை வாயில்கள்[2]

என்றும், வாயை,

அறுசுவை துறந்திடா அறுசுவைத் துறவி[3]

என்று கூறுவதும் புதுக் கவிதைப் பொருளெனலாம்.

எட்டி மரம் மனிதனைப் பார்த்து, "நானாவது நச்சினைத் தீர்க்கப் பயன்படுவேன்; நீயோ ஏழையர் துயரத்திற்கு,

இயன்ற அளவில் ஏதும் உதவாமல்
நட்டநடுத் தெருவில் நானிலந் தன்னில்
பட்ட மரமாகப் பழுதுதல் ஏனையா?[4]

என்று ஏளனம் செய்வது பிறர்க்குதவ வேண்டும் எனும் சிந்தனை யைத் தூண்டுகிறது.

வளைகளின் சிரிப்பு – கோல
வனிதையின் வரவுக் காட்சி;
மலையுடைச் சிரிப்பே – உச்சி
மேலிருந் திழியும் வீழ்ச்சி[5]

என ஒவ்வொன்றை ஒவ்வொன்றன் சிரிப்பாய்க் கூறுவது,

குழந்தையோ பெற்றோர் எச்சில்,
கூடையோ குறத்தி எச்சில்,
பழங்களோ பறவை எச்சில்
பால்,தயிர் இடைச்சி எச்சில்[6]

என்பது போன்ற சுரதாவின் பாடலில் சொக்கியதால் தோன்றிய நடையாகும்.

---

1. இந்நூல், பக். 102
2. மேலது, பக். 103
3. மேலது, பக். 105
4. மேலது, பக். 105
5. மேலது, பக். 111
6. சுரதா, தேன்மழை, எச்சில்

கவிஞர் கோ. ப. முருகநாதன்

கவிஞர் கோ.ப.முருகநாதனின் கவிதைகள் இசையோடு பாடுதற்கேற்ற அமைப்பில் அமைந்துள்ளன. எளிய நடையும் கருத்தாழமும் கொண்டனவாய் இவர் பாக்கள் விளங்குகின்றன. நாடு, மொழி, மக்கள் ஒற்றுமை முதலியன இவர் பாடல் களில் குறிப்பிடப்படுகின்றன; உயர்வே வாழ்வின் இலட்சியம்; உழைப்பே அதற்கு வழி என்பது எடுத்துக்காட்டப்படுகிறது. பாரதம் ஒன்றே என

எண்ணில் மொழிகள் பகர்ந்தாலும் – அவர்
எண்ணத்தில் ஒன்றெனக் காண்பாரே!
எண்ணிய இனங்கள் பிரிந்தாலும் – அவர்
இந்தியர் என்றே பெயர்சொல்லுவார்[1]

என நாட்டொருமையைப் பாடுகிறார்.

முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள் – இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள், – எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்[2]

என்ற பாரதியின் பாடலையும் இங்கே நினைவுகூரலாம். செல்வம் ஓரிடத்தில் குவிந்து கிடப்பதையும், பலர் வறுமையில் வாடுவதையும் நினைந்து இவர் வருந்துகிறார். அதனால்,

ஏழைபணக் காரனென்ற நிலையும் மாறணும் – இங்கே
எல்லோர்க்கும் வசதியெல்லாம் வந்துசேரணும்[3]

என்று பாடுகின்றார்! அந்நிலை மலர அவரவர் தங்கள் கடமை யுணர்ந்து செயற்பட்டுப் பின்னோர்க்கு வழிகாட்டியாய் விளங்க வேண்டுமென வலியுறுத்துகிறார்.

சித்தமெலாம் கடமையொன்றே நின்றுவிளங்கணும் – நாம்
சிறந்தவாழ்வை உலகினர்க்கு எடுத்துக்காட்டணும்[4]

என்பது அவர் கருத்துரை.

துன்பம் வரும்போது துணிந்து நில்லடா – அது
தொல்லை தரும்போதும் தொடர்ந்து செல்லடா[5]

என்னும் அடிகள், தொல்லை கண்டு துவளாது தொடர்ந்து முன்னேறிச் செல்லவேண்டுமென்ற உறுதியை ஊட்டுகின்றன

1. இந்நூல், பக். 114
2. பாரதியார் கவிதைகள், எங்கள் தாய்
3. இந்நூல், பக். 117
4. மேலது, பக். 117
5. மேலது, பக். 118

உள்ளத்தூய்மையுடன் கடமையாற்றுவதில்தான் முழு இன்பம் இருக்கிறது என்பதை,

> உள்ளத்திலே தூய்மைகொண்டு கடமைசெய்யடா – அதில்
> உரிமையுடன் இன்பந்தனை அள்ளிக்கொள்ளடா[1]

என்று அவர் தெரிவிப்பது நயமாய் இருக்கிறது.

குடும்ப நலக் குறள் பத்து, மது மயக்கம் தேவையா? என்னும் பாடல்கள் இன்றைய முக்கியப் பிரச்சினைகளைத் தீர்க்க வழிகூறுவனவாய் உள்ளன. வட்டிக்கடைகள் ஒழிய வேண்டுமானால் வங்கிகள் உதவ வேண்டும் என்ற அவர் கருத்து உண்மையானதும் உடனடியாய்ச் செயற்படுத்த வேண்டியதும் ஆகும்.

கவிஞர் மதிவண்ணன்

மரபுக் கவிதையையும் புதுக் கவிதையையும் சேர்த்துத் தருகின்ற கவிஞர் மதிவண்ணனின் கவிதைகள் விறுவிறுப்பான நடையும் சொல்லழகும் கற்பனை வளமும் மிக்கு விளங்குகின்றன. இவர் மிகச்சாதாரண நிகழ்ச்சிகளையும் அழகிய சித்திரம்போலக் கவிதையில் வடித்துவிடுகின்ற ஆற்றல் பெற்றுத் திகழ்கின்றார்.

> அகத்தினிலே உலாவரும் அநுபவ நிழல்களின்
> அசைவினை வெளியே அளிப்பது கவிதை[2]

என அவர் கவிதைக்குத் தந்துள்ள வரையறை சிறப்பாய் உள்ளது. அணிலைப் பார்த்து,

> வால்முளைத்த சுறுசுறுப்பே[3]

என்கிறார். அதன் வால் எப்படியிருக்கிறது தெரியுமா?

> தோல்இளைத்துப் பின்காய்ந்த பீர்க்கங்காயின் கூடேபோல[4]

உள்ளதாம். என்ன அழகான உவமை!

> பூக்காத, நோக்காத, வானந் தன்னைப்
> பார்க்காத மலர்பற்றிப் பாடு கின்றேன்[5]

என்று வாழைப்பூவைப்பற்றிப் பாடத் தொடங்கும் கவிஞர் அதனை,

---

1. இந்நூல், பக். 118
2. மேலது, பக். 131
3. மேலது, பக். 130
4. மேலது, பக். 130
5. மேலது, பக். 132

நம்மை வரவேற்கின்ற திருமணத்தில் முதலாம் தோழன்[1]

என அதன் சிறப்பினை நன்குணரும்படி செய்கிறார். அவர் வணக்கம் கூறும் போதுங்கூட,

வாழைப்பூ நிமிர்ந்ததுபோல் வணக்கம் சொன்னேன்[2]

என்று கூறுவது இரு கையையும் நாம் கூப்பும்போது தோன்றும் குவிந்த வடிவத்திற்கு ஏற்ற எடுத்துக்காட்டு. 'காலமும் கோலமும்' என்னும் கவிதையில் காலத்திற்கேற்ற வகையில், எல்லாப் பொருள்களும் மாறுதல் அடைந்துங்கூட எரிக்கும் வெயிலில் வண்டியிழுப்பவன் நிலைமட்டும் மாறாமல் அப்படியே இருப்பது ஏனோ எனக் கவிஞர் எழுப்பும் வினாவில் சமுதாயச் சிந்தனை சுடர்விட்டு ஒளிர்கிறது.

சுமை-சுவை[3] என்னும் கவிதை நினைக்க நினைக்கச் சுவையைப் பெருக்கிக்கொண்டே இருக்கிறது. வண்ணத்துப் பூச்சியை

பார்க்கின்ற பரவசமே[4]

என்றும்,

வான்பிறந்த காற்றுக்கே வியர்க்கும் என்றா
வளர்சிறகால் அடிக்கடிநீ விசிறு கின்றாய்[5]

என்றுரைப்பதும் நயமாய் உள்ளன.

விதைக்குள்ளே இருக்கிறது விசுவ ரூபம்[6]

என்று சொல்லுங்கவிஞரின் கூற்று, அவர் பாடல்களில் ஆழ்ந்து கிடக்கும் பொருள் நயங்களைத்தாம் சுட்டுகிறதோ?

கவிஞர் ஐயாறப்பன்

கவிஞர் ஐயாறப்பன் வட்டாட்சித் தலைவர் மட்டும் அல்லர்; கவியாட்சித் தலைவரும் ஆவார். அவர் கவிதைகள் உணர்ச்சி மயமானவை; இன்பமானவை; சிந்திக்கத் தூண்டுபவை. சொற்கள் இவர் கவிதைகளில் தாமாக முந்திக்கொண்டு விழுகின்றன.

சின்னக் கண்ணா சிரிக்காதே!
சிரித்தால் முத்துத் தெறிக்காதோ?
கன்னக் கதுப்பில் குழிவிழுந்தால் – அது
கண்டவர் கண்ணைப் பறிக்காதோ?[7]

1. இந்நூல், பக். 133
2. மேலது, பக். 134
3. மேலது, பக். 140
4. மேலது, பக். 140
5. மேலது, பக். 140
6. மேலது, பக். 142
7. மேலது, பக். 146

அருமையான குழந்தை ஓவியம் இது.

அம்மா இடுப்பே அரியணையோ?[1]

ஆம்! குழந்தைக்கு அம்மா இடுப்பு அரியணைதானே! ஒருமைப்பாட்டின் இன்றியமையாமையைக் கவிஞர்,

தருமச் சக்கரக் கொடியை உயர்த்தித்
தாழ்ந்தவர் உயர்ந்தவர் பேதம் அகற்றி
ஒருமை காண்பவள் பாரத தேவி![2]

என்னும் அடிகளில் தெளிவுபடுத்துகிறார்.

சிரம்தூக்கி நிமிர்ந்தெங்கே
செல்கின்றாய் பனையே!
பரந்தோங்கி வானத்தைப்
பற்றிவிடும் நினைவோ?[3]

பனைமரத்தின் நெடிய உருவத்தை இவ்வடிகள் நம் கண்முன்னே நிறுத்துகின்றன.

உழைக்கும் கையில் ஒவ்வொரு செயலும்
உலகில் பிரமன் கலையாகும்;
உழைப்பால் விளைந்த பொருளுக் கெல்லாம்
உலகே தகுந்த விலையாகும்![4]

உழைப்பின் மேன்மையை உணர்த்தும் ஒப்பற்ற அடிகளாய் இவை திகழ்கின்றன. கறுப்பை,

நெருப்பின் வாய்விழுந்த நெடுமரந்தான் ஏற்ற,மறு
பிறப்பே! பகல்,காசின் பின்புறமே![5]

அருமையான கற்பனை இது.

காதல் கடிதம் எழுதியவன்,
கன்னியர் பின்னே சுற்றியவன்,
மோதிய போது முறைப்பவர்மேல்
மொட்டைக் கடிதம் எழுதியவன்,
பாதி விரல்கள் புண்ணாகிப்
பாதியும் அழுகித் திரிகின்றான்[6]

என்று தொழுநோயாளியைப் பற்றிக் கவிஞர் கூறும் நிலயினைப் படிப்பவர் எவரும் தீய செயல்களை ஒருபோதும் உள்ளத்திலும் எண்ணார் என்பது திண்ணம்.

---

1. இந்நூல், பக். 145
2. மேலது, பக். 147
3. மேலது, பக். 151
4. மேலது, பக். 152
5. மேலது, பக். 155
6. மேலது, பக். 157

கவிஞர் பகத்சிங்

வங்கியில் பணியாற்றும் கவிஞர் பகத்சிங் பல நல்ல கவிதைகளைப் படைத்துள்ளார். ஏழை எளியோர் முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் இவர் கவிதைகளின் உயிரோட்டமாய் விளங்குகிறது.

அவன் வண்டி இழுக்கவில்லை – மனத்தைச்
சுண்டி இழுக்கின்றான்;
வண்டிப் பாரம் ஒருபுறமும்
வாழ்க்கைப் பாரம் மறுபுறமும்[1]

ஆக, அவன் வண்டியிழுக்கிறான் என வண்டியிழுப்போனைப் படம் பிடித்துக் காட்டுகின்றன, இவ்வடிகள். 'வண்டிப்பாரம் ஒருபுறம்; வாழ்க்கைப் பாரம் மறுபுறம்' அழுத்தும் வேதனை. நம் நெஞ்சையுமன்றோ அழுத்துகிறது.

பாரதியார் ஒரு வெள்ளைப் பூனையின் குட்டிகளைக் காட்டி,

சாம்பல் நிறமொரு குட்டி – கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி – வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி
எந்த நிறமிருந் தாலும் – அவை
யாவும் ஓரேதர மன்றோ?

என வினவி, அது கொண்டு,

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் – அதில்
மானுடர் வேற்றுமை யில்லை;
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் – இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்![2]

என்று வலியுறுத்தினார். இதே கருத்தை இக்கவிஞர்,

உருவங்கள் பலவாய் இருந்தால் என்ன?
உளத்தால் இணைந்தோம் ஒன்றாய்
ஒருமரப் பூக்கள் எக்கிளை இருந்தும்
ஒருமணம் வீசும் அன்றோ?[3]

என இப்பாடலில் உள்ள உவமைகள் மூலம் நன்கு விளக்குகின்றார். பணத்தைப் பறித்தும், உழைப்பைப் பிடுங்கியும், கொள்கையை விட்டும் வாழ்கின்ற மனிதக் கூட்டங்கள்தாம் இன்று நாட்டில் எங்கும் தென்படுகின்றன. ஆதலின்,

1. இந்நூல், பக். 163
2. பாரதியார் கவிதைகள், முரசு
3. இந்நூல், பக். 169

கணக்கிலா மாந்தர் வாழ்ந்தும்
கபடிலா மனிதர் எங்கே?
பணத்திலே செழுமை கொண்டும்
பண்புடை மனிதர் எங்கே?[1]

என்று தேடுகிறார், கவிஞர். கிராமவாசி ஒருவன் பட்டணவாசியைப் பார்த்து,

உங்கள் வீட்டு நாய்களுக்கும்
உயர்ந்த தரத்தில் பிஸ்கட்டு;
எங்கள் குழந்தை குட்டிகளோ
எலும்பாய்த் தோலாய் உருகுவதோ?[2]

என்று கேட்பது நம் நெஞ்சை வாட்டுகிறது; இந்த ஏற்றத் தாழ்வுகளைப் போக்க உழைக்கவேண்டும் என்ற உணர்ச்சியையும் தோற்றுவிக்கின்றது.

கவிஞர் ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்

கவிஞர் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் அறிவியல் பட்டதாரி. அறிவும் உணர்ச்சியும், கவிதை நாணயத்தின் இருபக்கங்கள் ஆகும். இவர், அறிவியலைப் படித்த தமிழுணர்ச்சிக் கவிஞர்; ஆதலின், இவரது கவிதை நாணயம் சிறக்கிறது; செல்லத்தக்க மதிப்பைப் பெறுகிறது. பார்க்கும் பொருளெல்லாம் இவர்க்குக் கவிதையாகவே படுகின்றன. அதனாற்றான்,

காதலர் இருவர் எழுதிடும் கவிதை
கைவழி யாடிடும் குழந்தை;
உழவர் கூட்டம் எழுதிடும் கவிதை
உணவைத் தந்திடும் பயிர்கள்;
பொதிகை மலையோ எழுதிடும் கவிதை
பூவினும் மெல்லிய தென்றல்....[3]

என்று எழுதிக் களிக்கிறார். 'வர்ணனை வேண்டாமடி' என்று தலைப்புக் கொடுத்துவிட்டுக் கவிஞர்,

காவிரியின் நீரினிலே காணுகின்ற கயல்மீன்கள்
பூவிரியும் கண்களிலே புகுந்ததுவோ அம்மானை?[4]

எனப் பெண்களின் அழகு நலன்களை வருணனை செய்வது அருமையாய் உள்ளது! அழகு கெட்டுவிடும் எனப் பயந்து தாய்ப் பாலே கொடுக்காத தாய், பின்பு தன் மகன் தன்னிடம் பாசமின்றிப் போய்விட்டானே என்று அழுவதில் நியாயமில்லை என்பதனை,

1. இந்நூல், பக். 171
2. மேலது, பக். 173
3. மேலது, பக். 178
4. மேலது, பக். 184

அழவேண்டும் தாயேநீ அந்த நாளில்
அழுகுக்காய்த் தாய்ப்பாலை மறுத்தாய் அன்றோ[1]

என நறுக்குத்தெறித்தாற்போலவும் உள்ளத்தில் சுருக்கெனக் குத்துவது போலவும் பாடுகிறார். பிள்ளைகட்கு முன்னால் பொறுப்பற்று நடந்துகொள்ளும் பெற்றோரை அவர்களின் பிள்ளைகளே எதிர்த்துப் போராடவேண்டும் என்ற புதுமைக் கருத்தையும் இக்கவிஞர் தருகிறார்.[2]

'தன்வினை தன்னைச் சுடும்' என்பது பழமொழி. ஆனால்,

செய்வதொரு தொழிலென்றே கூறி நீங்கள்
செய்கின்ற கடத்தல்கள் கருப்புச் சந்தை,
பொய்க்கணக்கு வரிஏய்ப்பு பதுக்கல் யாவும்
பிறிதொருவர் வாழ்வினுக்கும் ஊறு செய்யும்[3]

என்பதால், 'தன்வினை பிறரைச் சுடும்' என்ற புதுமொழியை இவர் படைத்துக் காட்டுகிறார்.

கண்ணென்றும் மணியென்றும்
கற்கண்டுச் சுவையென்றும்
பொன்னென்றும் பூவென்றும்
பொலிவான நிலவென்றும்
என்னையள்ளி முத்தமிடும்
என்னருமைப் பெற்றோர்கள்
இன்னும்ஏன் தூங்கவில்லை
இச்சனியன்?[4]

என இரவில் கேட்பது ஏன் எனக் குழந்தை மயங்குவது நகைச்சுவையை அளிக்கிறது. குழந்தைக்குக் காரணம் தெரிய நியாயமில்லை அன்றோ?

இப்படித்தான் வாழ்கவெனப் பெரியோர் காட்டும்
அவ்வழியே சிறந்ததென ஏற்பீர்! இங்கே
எப்படியும் வாழ்ந்திடலாம் என்றே நீங்கள்
எண்ணிவிட்டால் வாழ்வுதன்னில் இழுக்கே நேரும்[5]

என்பதை உணர்ந்து, இவரது இந்த அறிவுரையின்படி நடந்து உலகம் நலமுற்றுத் திகழ்வதாகுக!

வண்ணங்களைத் தக்கவாறு கூட்டி ஓவியம் தீட்டுவது போலவும், மலர்களை இணைத்து மாலையாக்குவது போலவும்

---

1. இந்நூல், பக். 186
2. மேலது, பக். 187
3. மேலது, பக். 189
4. மேலது, பக். 182
5. மேலது, பக். 188

இந்நூலாகிய உயிரோவியத்தை வரைந்த ஓவியராய், இன்ப மாலையைக் கட்டிப் பூத்தொடுப்போராய் விளங்குபவர், கவிஞர் இராதாகிருஷ்ணனே ஆவார். அவர் முயற்சிக்கு நம் உளம் நிறைந்த பாராட்டுதல்கள்.

வளர்க கவிதை உறவு

இத்தகைய கவிதை நூல்கள் இன்னும் பெருமளவில் வெளிவந்து தமிழுக்கு வளம் சேர்க்கவேண்டும் என விழைகிறோம்.

இத்தொகுப்பில் பெண்பாற்புலவர் எவரும் இடம் பெறவில்லை. இனி வரும் தொகுப்புகளில் ஔவையார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், பொன்முடியார் போன்றவர்களை நினைவுபடுத்தும் வகையில், இன்றுள்ள பெண்பாற்புலவர்களின் பாடல்கள் பெருமளவில் இடம் பெறும் என்று நம்புவோம்.

ஏழ்மையையும், சமூக அவலங்களையும் எடுத்துக் காட்டுவதோடு அமையாது அவற்றை அகற்றத்தக்க உயரிய பொருளாதாரக் கொள்கைகள், வளர்ந்துவரும் அறிவியற் கருத்துகள், சீரிய அரசியல் கோட்பாடுகள் ஆகிய அனைத்தையும் கவிதைகளில் வடித்துக் காட்டும் நிலையை இன்றைய கவிஞர்கள் தோற்றுவிக்க வேண்டும் என்ற விழைவைத் தெரிவித்து, வளர்க கவிதை உறவு; சிறக்க அதன் தொண்டு என வாழ்த்துவோம்.

நூல் ஆக்கம்	ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் (தொகுப்பாசிரியர்)
வகைமை	கவிதை
வெளியீடு	சுதா பதிப்பகம், சென்னை. (1978)

16

முத்தாரம்

நெஞ்சையள்ளும் செந்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதி காரத்தின் முதற்காண்டத்தில், பொதியத்திற்கும் இமயத்திற்கும் புகாருக்கும் என்றுமே அழிவில்லை என மங்கலம் பாடுகின்றார், இளங்கோவடிகள்! பொதியமும் இமயமும் அன்றுபோல் இன்றும் நிமிர்ந்து நிற்க, புகாரோ கடலுள் மூழ்கி மறைவுற்றது. அலைகடல் ஆர்த்தெழுந்து அன்றைய புகாரை அழித்த போதிலும் இன்று புதிய புகாரைப் படைத்து, பொதியத்தையும் இமயத்தையும் போலப் புகாரையும் நிலைக்கச்செய்து, புலவர் உரையை என்றும் பொய்யாத உரையாய் ஆக்கியுள்ள புலவர் கலைஞர்க்கு, கவிதை நூலில் நூறு முத்துகளைக் கோத்து ஆரமாய்ச் சூட்டியுள்ளனர், புலவர் பெருமக்கள்!

முத்து, கடலிலே விளைகிறது. அதனால் கடலுக்குப் பயனுண்டா? இல்லை, இல்லை! எடுத்துக் கோவையாக்கி அணிபவர்க்கே அழகையும் பெருமையையும் சேர்க்கிறது.

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்(கு) அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதான் என்செய்யும்!

என்கிறது, கலித்தொகை. கலைஞர், குவளையிலே அஞ்சுகச் சிப்பியில் தோன்றிய முத்தின் முத்து! தன்னுடையது என்பதை மறந்து, தான் நாட்டுக்கு என்றாகித் தொண்டொளி வீசுகின்ற இம்முத்தைத் தமிழகம் அணிந்து பெருமை கொள்ளுகிறது; பூரிப்படைகின்றது; நல்ல உள்ளங்கள் பாராட்டி மகிழ்கின்றன. இம்முத்தாரத்தில் நூறு முத்துகளைத் தொடுத்திருப்பதன்வழி பொன்விழாக் கண்டுள்ள தம் தலைவர், நூற்றாண்டு விழாவையும் காணவேண்டுமென்பதைக் குறிப்பாற் புலப்படுத்தியுள்ளது, புலவருலகு.

பாட்டுடைத்தலைவனைப்பற்றிப் பாவலர்கள் பாடியுள்ள கருத்து முத்துகளுள் சில இங்கு கோவையாக்கப்பட்டுள்ளன. அணிந்து மகிழுங்கள்.

கலைஞர் "மன்னர்களின் திறனெலாம் ஒருருக்கொண்ட ஆட்சியாளர்;

வள்ளல்களின் வள்ளண்மையெலாம் ஒன்றுசேர்ந்த அருளாளர்;

புலவர்களின் அறிவெலாம் திரண்ட பொருளுரையாளர்;

பதினெட்டாம் பெருக்கைப்போல் பேச்சுக் கொண்டோர்;

சொல்லெலாம் செயலாய் ஆக்கிச் சுடர்விடும் அறிவின் வேந்தர்;

அஞ்சுகம் (அம் + சுகம்) தந்தாள்கின்ற ஆரருட்செல்வர்;

நைந்தவர் வாழ்வதற்கே நாளெலாம் உழைப்பவர்;

உரனில்லாக் காலோர்க்கு ஊன்றுகோலாய் நிற்பவர்;

ஏட்டுக்கே எழுச்சிதந்த எழுத்தாளர்;

கன்னித்தமிழ் அர்ச்சனையில் கவனம் வைத்தோர்;

பழி சுமத்துகின்றோர்க்கும் பணிந்த வார்த்தையில் பதிலளிப்பதில் வல்லவர்;

பூத்திடும் கயமையைப் பொசுக்கிட முனையும் சித்தர்;

வேரோடு சாதிமதம் வீழ்த்துதற்கு வெஞ்சமரை ஏற்கின்ற வெற்றி வீரர்;

புன்னகை உதிர்த்தே வெல்லும் போர்முறை கற்றவர்;

பொல்லாங்கு புரிகின்ற இந்திப்பேயைப் புறங்காட்டச் செய்திட்ட பொன்னிச் சோழர்;

கூன்மிகுந்த தமிழ்க்குடியை நிமிர்த்தி எங்கும் கோலோச்சச் செய்தவர்;

விழியிழந்தோர்க்கு ஒளியானவர்;

தலைகொடுக்கத் தயங்காது தமிழைக் காத்தவர்."

உள்ளம் நிறைந்த காவலனைக் கவிஞர்கள் பல்வேறு வகையாய் உருவகித்து மகிழ்கிறார்கள் :

"தமிழ்க் குழந்தை படுப்பதற்கு அவர் நெஞ்சே தொட்டில்;

மானமறவர்க்கு அவரே மறைநூல்;

உழைப்பில் அவர் ஓடிவரும் பேரருவி-ஊர்க்குருவி-ஓயாத்தேனீ;

மனைப்பட்டா ஈந்த மாவலி;

குணத்தினிலே கொள்ளேகால் பிணையும் பட்டு;

காலவங்கியிலே புகழ் சேர்க்கும் நிதி;

எதிர்ப்புத்தீயைத் தின்று வரும் நெருப்புக்கோழி;

பிறைநெற்றிச் சுருக்கங்கள் ஒவ்வொன்றும் நாட்டின் பின்தங்கும் சமுதாய நோய் தீர்க்கும் திட்டம்;

கூவத்தில் படகோட்டும் குலோத்துங்கன்;

படை கண்டு அஞ்சாத கட்டபொம்மன் பரம்பரையைக் காத்து வரும் பாண்டியன்."

இவ்வாறு எண்ணியெண்ணி மகிழ்தற்கு நூலில் எண்ணற்ற சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன.

ஒரு பக்கத்திற்கு ஒரு கவிதையாய், அதுவும் 24 அடிகள் கொண்டதாய், ஒரே இட அளவில் அமைத்து அச்சிட்டுள்ள பாங்கு எடுப்பாய் உள்ளது. ஒவ்வொரு பக்கத்திலும் கலைஞரின் பொன்மொழி ஒன்றைச் சேர்த்திருப்பது நூலுக்கு மேலும் அழகு சேர்க்கிறது.

கலைஞரின் செயலொழுங்கு போன்று அச்சு ஒழுங்கும், அவர் ஆட்சித்திறன் போலக் கருத்து வளமும், அவரது பொலிவான தோற்றம் போலப் புற அமைப்பும் பெற்று எழிலார்ந்த வடிவுடன் இந்நூல் அமைந்து சிறக்கிறது.

வல்லவரை-நல்லவரை, "வாழ்த்த நாம் வாய்ப்புப் பெற்றுள்ளோம்". எனவே "வாழ்க கலைஞர்; வளர்க அவர் புகழ்" என வாயார உளமார ஒன்றுபட்டு வாழ்த்தி மகிழ்வோம்.

நூல் ஆக்கம்	முத்துப்பேட்டை ந. தருமலிங்கம் (தொகுப்பாசிரியர்)
வகைமை	கவிதை
வெளியீடு	இளந்தமிழ் பதிப்பகம், நெய்வேலி. (1974)

17

பாவலர் போற்றும் பாவேந்தர்

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுக்கு இமயமாய், கவிதை யாத்திடுவோருக்குத் துருவமீனாய் விளங்குபவர், பாவேந்தர் பாரதிதாசனார். அவரைப்பற்றி 86 பாவலர்கள் பாடியுள்ள பாடல்களின் தொகுப்பே இந்நூல். பாவலர் புலமைதாசன் இந்நூலைப் புலமை மணம் கமழத் தொகுத்தளிக்கிறார். அவர் பணி வெல்க, சிறக்க!

பாவேந்தரின் தோற்றம், பண்பு, பெருமை, புகழ், பாடற்றன்மை, பாடற்பயன் ஆகியவற்றை இங்குப் பாடியுள்ள பாவலர் சொற்களாலேயே காண்பது சுவை பயக்கும் என்பதால் அம்முறையிலேயே அவற்றை ஈங்குத் தொகுத்தளிக்க முயல்கிறேன்.

தோற்றமும் பண்பும்

பாரதிதாசன்,

சிங்கத்தைப் பார்வையிலே சித்திரிக்கும் செந்தமிழன் (37);

பாண்டியனை நினைப்பூட்டும் பார்வையும் (67)

நறுக்கி வைத்த நெற்கட்டு மீசையும் கொண்டவர் (70);

ஆண்மைக்கே அவர் உருவம் அமைப்புச் சொல்லும் (5);

தோற்றமோ கோலோச்சும் மன்னன் போல (38);

மூவேந்தர் ஒருருவே நம் பாவேந்தர் (63);

சிங்கம் நடையில் தோற்றுவிடும், அவர் செருக்கு நடை பார்த்து (85);

கள்ளம் ஏதும் இல்லா மனம் கொண்ட சேய் அவன் (93);

தமிழைத் தடுப்பவர் தாயேயானாலும் தலையை நறுக்கென்னும் மலைநிகர்த் தோளான் (39);

ஏழை எளியவர் உளம் உறை சீமான் (82);

உண்மையின் உருவால், அன்பின் மூச்சால் உலகை ஆண்டவன் (26);

அடைப்புக்குள் உள்ள எண்கள் நூலின் பக்க எண்கள்

வீரமாத் தமிழன் நெஞ்சில் விடுதலைக் கொள்கை யாளன் (29);

பழி கண்டு நாணுகின்ற பண்பும், தமிழ்க்கு இழிவென்றால் எதிர்த்தழிக்கும் மறமும் கொண்டவன் (77);

'கொடு தலை' எனினும் கொடுக்கத் துணிந்த விடுதலை யாளன் (99).

புலமை

அவன், புதுவை அன்னையவள் ஈன்றெடுத்த தங்கம் (92);

பைந்தமிழைப் பாட வந்த பாவின் வேந்தன் (61);

நாட்டுப்பாவலர் போற்றும் வேந்தன் (41);

தீந்தேன் பாகோடு முப்பழமும் பிசைந்தமைத்த பாவின் வேந்தன் (32);

காவியங்கள் பல கண்ட புலவன், பல்கலைகளிலே உயர்ந்திட்ட கலைஞன் (91);

பெரும் புரட்சியைக் கலையுலகில் விளைவித்தவன் (39);

பழமையில் விளைந்த பதரெலாம் தூற்றிப் புதுமைகள் பொலிவுறப் பாடிய புலவன் (91);

மடமையை மாய்த்து மணிக்கவி நெய்தவன் (95);

வலிமையானவர் திமிராவதை வசைபாடிய கவிஞன் (74).

தொண்டு

அவன், சிமிழ்கின்ற இமை, கண்ணைக் காத்தல்போலச் செந்தமிழை வாழ்க்கையிலே காத்தே வந்தோன் (47);

பொதுவுடைமைப் பாட்டெழுதிப் புகழைப் பெற்றோன் (77);

மடமைதனை மாய்மாலச் சாதிப்பேயின் மதக்கொடுமை நச்சு வேரைக் களைந்தெறிந்தோன் (41);

தரணியெலாம் திராவிடத்தின் உணர்வைப் பெய்தோன் (54);

அதிர்வேட்டுப் பாடல்களால் அறியாமைத்தீ அலைகடலில் மாண்டவியக் கணை தொடுத்தோன் (55);

நறுக்கென்று தைக்கின்ற நெருஞ்சிப் பாவால் நலிவடைந்த ஆத்திகத்தை உமிழ்ந்தோன் (57);

தொழிலாளர்பால் ஆதரவு காட்டி முதலாளிகள்தம் ஆணவத்தை நீக்கியோன் (65);

வாடைதனில் நடுநடுங்கிக் கடுவெயிலில் துடிதுடித்து வாழ்வோர் கண்டு பாடியோன் (102);

ஒவ்வாப் பழமை உதறி வீழ்த்தி உதவாப் புராணம் ஓடத் தாழ்த்தியோன் (90);

பக்திப் போர்வையை எத்தித்தள்ளி அறிவு கொளுத்தி யோன் (76).

அவர்,

கற்கண்டுத் தமிழுக்குப் பொற்காலம் கண்டவர் (98);

கன்னித்தமிழைக் கத்தியாய்த் தீட்டிப் பண் இசைத்தவர் (45);

துயில்வாரை விழிப்புறவே செய்வித்துத் தமிழுணர்வால் தூண்டி, இன்பக் குயிலாய் ஒலித்தவர் (52);

பெரியாரின் கொள்கைகளைச் சிரமேற்கொண்டு பெரும்புரட்சி செய்தவர் (59);

பாட்டாலே மடமைக்கு வேட்டு வைத்த பகுத்தறிவுப் பாவலர் (64);

பெண்ணுக்குச் சமத்துவத்தை வழங்க வேண்டிப் பாக்களாலே பெருந்தொண்டு செய்தவர் (71);

அவர், விதியை வெல்லப் பகுத்தறிவை வேக நடையிற் செலுத்தினார் (49);

அலகில் பலகலை தமிழின் சுவை நலம் அனைத்தும் தமிழிற் சாற்றினார் (73);

சாத்திரச் சாதிக் குட்டையில் அறிவுச் சங்கமம் ஆவதைச் சாடினார் (88);

குட்டக் குனிந்திடும் கூர்மதி அற்றோரைக் கொல் புலி ஆக்கி மேலேற்றினார் (81);

இந்தி மிரண்டிடப் பாடினார், சாதி என்னும் திமிர்தனைச் சாடினார் (27);

உழையாமை உய்வாகாதென்று சொல்லி உழைப்பதனின் மேன்மைதனைப் பாடினார்.

பாடல் இனிமை

தேன்! தேன்! தேன்! பாவேந்தன் படைத்த சுவைப் தொட்டு (25);

சிந்தும் சந்தமும் பொழிந்த அவர் கவிதையில் செம்மை குவிந்திருக்கும் (43);

பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டோ? இல்லை, பாரதிதாசனது பாட்டும் அதில் சேரும் (68);

சொல்லாட்சி, சுயவிளக்கம், புதுமை, காதற்சுவை ஆகியவற்றோடு இவரளிக்கும் உவமையாவும் எல்லார்க்கும் வந்திடுமா? வாரா, வாரா (22);

இரு சீர்கள் இணைந்து இவரிடம் அற்புதக் கவர்ச்சி எப்படி எழுகின்றது! (34) என்று பாரோர் வியக்கும்வண்ணம் பாவேந்தர் பாடல்கள் மிளிர்கின்றன.

ஊன் பாய்ந்து, உயிர் பாய்ந்து உன்றன் உயர் கவிதை கண்டதனால் கவிஞனாகி (23);

உயர்ந்தோம் என்று நாவூறக் கூறி, மகிழ்வோர் எண்ணற்றோர். நாம் கவிஞராக முடியுமா என்று தயங்குவோரைப் பாவேந்தர், "யானே உன் துணையாவேன். தயக்கமின்றி வாரும், யாவையுமே உன்றனுக்கே விளக்கிடுவேன்" (18) என்று கூறி ஊக்குவித்து உற்சாகப்படுத்துவார்.

அவர் அங்கமெலாம் தங்கமெனத் துள்ளும் தமிழே!

பாடற் பயன்

பாவேந்தர் இல்லையெனில் தமிழகத்தில் நல்ல பகுத்தறிவுப் பாடலேது? (86);

போதிக்கும் பொதுவுடைமைச் செவ்வெழுத்தில் புறப்பட்ட கனல் வரிகள் இவரின் பாட்டு (72);

தமிழர்தம் மேன்மைக் கிழுக்கென்றுரைப்பவர் தலைக்கே இவர்பா மோதிரக் குட்டு (33);

இவர் பாட்டின் பயனால் விதவைகள் மீண்டும் விதைநிலமாயினர், மூடப் பழக்கங்கள் முரிந்து போயின (46).

காலும் கையும் மனமும் சோர்ந்திருந்த கனித்தமிழர் எழுச்சியுற்றார், இவர் எழுத்தால் (36);

இவர், அழுதான செஞ்சொல்லால் மக்கள் தம்மை ஆழமாய்ச் சிந்தனையே செய்ய வைத்தார் (24);

ஊர்க்கோவில் சாமி கதை பாடிடாமல் உணர்வு கொள்ள வைத்திட்டார், தமிழர் தம்மை (56);

மேலும், நாடு, மொழி, இனமதனை நாடும் தன்மானத் தினை நாம் காக்கச் சங்கெடுத்து ஊதினார் (84).

பாவேந்தர் தோன்றினார், இனி அஞ்சார் தமிழ் மக்கள், தமிழுக்கோர் இடுக்கண் இனி வருதலில்லை என்ற நம்பிக்கை யில் (20),

சாய்கின்ற போதும் உயிர்த்தமிழை நாவிற் சாற்றிக் கொண்டே இருத்தல் வேண்டும் (6) என்ற தமிழுணர்வை அவர் பாடல்கள் நம் நெஞ்சில் ஊட்டியிருக்கின்றன.

உருவகங்கள்

பாரதிதாசனைப் பாவலர்கள் பல்வேறு வகையாய் உருவகம் செய்துள்ளார்கள்.

சிந்திடும் கவிமதச் சந்தக் கடாக்களிறு. (பக். 30)

நத்தாத தமிழ்ப்பகையாம் நரிக்கூட் டத்தை
நசுக்கிடவே நடந்திட்ட களிற்றுக் கால்கள். (பக். 42)

கயமைஎன்னும் கறுத்தவானைக் கிழித்த மின்னல்கீற்று. (பக். 83)

தன்மா னத்துக் கருத்தே தழைக்கச்
சொன்மா ரிப்பா தூவிய மேகம். (பக். 101)

ஆரிய வித்தைக்கு அடித்திடும் ஆப்பு. (பக். 50)

குறும்புசெயும் புராணக் குப்பைக்கோ அதிர்வேட்டு. (பக். 100)

சீர்திருத்தக் கவிதைகளின் முதற்பதிப்பு. (பக். 104)

மறைவு

அவர் மறைவு கேட்டுத் தமிழகமே கதறியது. தென்னவர் கண்களிலே நீர் பெருக்கிக் கொட்டினர் (79).

'பாவேந்தர், எனுமச் செந்தமிழ் மாமரம் பட்டதுவே' என்று பாவலர் புலம்பினர் (21).

'குடிகாக்கும் மலை மனத்துக் கவிஞனைப் போய்க் குள்ளமனச் சாவே நீ அழிக்கலாமா?' என்று சாவைத் தூற்றினர் (31).

'தென்னரசே! பாட்டிசைக்க வர மாட்டீரா?' என்று ஏங்கி அழைத்தனர் (35).

'அவர் மறைந்தாலும், உயிரில் உணர்வில் கலந்த கவிஞர் எம்உயிரில் உயிர் கொண்டு உலவுகின்றார்' என ஆறுதல் கொள்ள முயன்றனர் (28).

'தண்டமிழின் வளமை போலத் தலைவ! நின் புகழே வாழும்' என்றும் (31),

'பாருள்ள வரைக்கும் உன்றன் பாடல்கள் நிலைத்து வாழும்' என்றும் (103) நம்பிப் போற்றினர்.

'தமிழ்க்காவின் தேனெடுத்து, இனிமைப்பாவில் தந்திட்ட கருத்துக்கள் என்றும் வாழ்க' எனவும் (62),

'திறத்தில் தனக்கு நிகரில்லாத் தீந்தமிழ்க் காவலன் புகழ் வெல்க' எனவும் (53),

'சாகாத இலக்கியங்கள் படைப்போரெல்லாம் சாவதில்லை, நின் பெருமை நீடுவாழி' (75) எனவும் உளமார வாழ்த்தினர்.

நிலைபேறு

காலத்தால் அழியாத கவிச்சிங்கம் பாவேந்தர் (96);

அவர் பாறைமீதில் எழுத்தெனவே வாழ்பவராவர் (89);

அவர் பெயர் என்றும் நின்று நிலவும்; அகிலத்தில் அவன் கவிதை என்றும் அழிவதில்லை (40).

தமிழ்க்கன்றுகள்

மடிவழியாய்ப் பசுமாடு பால் கொடுக்கும், அதுபோலப் பாரதிதாசன் தன் மணிவாயால் பாப்பாலைச் சுரந்து சென்றார் (94).

அந்தப் பாப்பால் அருந்தும் தமிழ்க்கன்றுகளாய் நாம் என்றும் திகழ்வோம்!

உவகை ஊற்று

இந்நூலிலுள்ள பாக்கள் பாரதிதாசனை எல்லாக் கோணங்களிலிருந்தும் நன்கு படம் பிடித்துக் காட்டுகின்றன.

இந்நூலைப் படிக்குங்கால்,

எனக்குள்ளே நிறைகின்ற உவகை தன்னை எடுத்தியம்ப நான் என்ன பாவின் வேந்தா? இல்லையே! பாவலர்கள் வரைந்துள்ள பாவேந்தர் கோலம் காண்க! களி கொள்க!

நூல் ஆக்கம்	புலமைதாசன் (தொகுப்பாசிரியர்)
வகைமை	கவிதை
வெளியீடு	புலமைப் பதிப்பகம், சென்னை. (1978)

18

ஆயிரம் மசலா

மஸ் அலா

இதன் பொருள், 'தேவை, தேடப்படும் பொருள்' என்பதாகும். மார்க்க விற்பன்னர் ஒருவரிடம் சென்று மார்க்கம் பற்றித் தேவைப்படும் பிரச்சினைகளுக்குப் பெறும் விளக்கம் மஸ்அலா என்று குறிப்பிடப்படுகிறது. கேள்வி பதில்களைச் செய்யுளுருவில் கொண்டுள்ள இசுலாமியத் தமிழ் நூல்களுக்கு தமிழில் 'மசலா' என்று பெயர் கூறப்படுகிறது.[1] இசுலாமிய சமய விளக்கம் கூறும் ஆயிரம் மசலா, நூறு மசலா, வெள்ளாட்டி மசலா என்னும் நூல்கள் இருக்கின்றன.

அப்துல்லாஹ் இப்னு[2] ஸலாம்

இவர் யூசுப் (அலை) அவர்களின் வழிவந்தவர்; யூத அறிஞர் சபூர்[3], தவுறாத்[4], இன்ஜீல்[5] என்னும் மூன்று வேதங்களையும் கற்றுணர்ந்த மூதறிஞராய் விளங்கி வந்தார். இவர் நபிகள் நாயகத்தைக் கண்டு ஆயிரம் கேள்விகளைக் கேட்டார் என்றும் அவற்றிற்கெல்லாம் பெருமானார்[6] தக்க மறுமொழி பகர்ந்தமையால் இவரும் இவரைச் சேர்ந்தவர்களும் இசுலாத்தில் இணைந்தனர் என்றும் கூறப்படுகிறது.

இந்நிகழ்ச்சியை மதுரை வண்ணப் பரிமளப் புலவர் ஒரு காவியமாய்ப் படைத்துள்ளார். இது ஆயிரம் மசலா என்றும்,

---

1. அப்துற்றஹீம்-இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்; பக்கம் 652-53.
2. இப்னு எனும் சொல் ஆங்கிலத்தில் Son of என்பதற்கு ஒப்பாம். இப்னு ஸலாம் என்றால் ஸலாதின் மகன் என்பது பொருள். அப்துல்லாஹ் இப்னு ஸலாம் என்பது ஸலாமின் மகன் அப்துல்லாஹ் எனப் பொருள் தரும். (Salam Son of Abdullah).
   தாவூது நபிக்கு அருளப்பட்ட வேதம்
   மூசா நபிக்கு அருளப்பட்ட வேதம்
   ஈசா நபிக்கு அருளப்பட்ட வேதம்.
   இசுலாத்தில் பெருமானார் என்பது முகம்மது நபி அவர்களை மட்டுமே குறிப்பதாகும்.

ஆயிரம் மசலா என்னும் அதிசயப் புராணம் என்றும் வழங்கப் படுகிறது. இந்நூல் ஹிஜ்ரி 980இல் (கி.பி. 1572) மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றப்பட்டுள்ளது.

இயலிறகூல்[1] திருவடி சாய்ந்த தொள்ளா
யிரத்தினுடன் எண்பதாண்டின்
முயலும்ப்ர மாதூதா' வருடத்தில்....
அந்தமுறு மதுரைதனிற் செந்தமிழோர் சங்கத்தில்

அரங்கேற்றப்பட்டதை நூலாசிரியரே குறிப்பிட்டுள்ளார். 39 வயதினரான புளியங்குளத்து முல்லா மிய்யா சயிது மகுதூம் இந்நூற் செய்தியை உரைத்திட வண்ணப் பரிமளம் தமது 35ஆம் வயதில் இந்நூலை இயற்றியுள்ளார்.

காப்பியங்களின் பிரிவு ஒவ்வொன்றும் காதை, படலம், ச்ருக்கம் என்னும் பெயர்களால் வழங்கப்படுவதுண்டு. இப் புராணத்தின் ஒவ்வொரு பிரிவும் 'வரலாறு' என்று வழங்கப் படுகிறது. கடவுள் வாழ்த்தின் பின்னர்ப் பதிக வரலாறு உள்ளது. பதிக வரலாற்றில் தூதுவிடு வரலாறு தொடங்கி அப்துல்லா இபுனு சலாம் முதலானோர் இசுலாமான வரலாறுவரையுள்ள பிரிவுகள் வரிசையாய்க் கூறப்பட்டுள்ளன. நூலில், 'நரகத்தின் வரலாறு'க்கு அடுத்ததாய்ப் 'பிழை மாதர் வரலாறு' குறிக்கப்பட்டுள்ளது. ஆனால், பதிகத்தில் 'பிழை மாதர் வரலாறு' எனும் பெயர் காணப் படவில்லை. பிழை மாதர் வரலாறு என்பது நரகத்தின் வரலாறு என்னும் தலைப்பிலேயே சேர்க்கப்பட வேண்டுமா என்பது கருதத்தக்கது.

காப்பியம்

தமிழில் சிவனடியார்கள் வரலாறு கூறும் காப்பியம் பெரியபுராணம் எனப்படுகிறது. சிவன் திருவிளையாடல்களைக் கூறும் காப்பியம் திருவிளையாடற்புராணம் எனப் பெயர் பெற்றுள்ளது. நாயகமவர்களின் வரலாறு கூறும் சீறாக் காப்பியம் சீறாப் புராணம் எனப்படுகிறது. இவை கொண்டு காப்பியங்கள் புராணமென வழங்கப்படுவதுண்டு என அறிகிறோம்! இந்நூல் ஆயிரம் மசலா எனும் அதிசயப் புராணம் என வழங்கப்பட்டாலும் மற்றைய புராணக் காப்பியங்களைப் போலவே இதுவும் ஒரு சிறந்த காப்பியமாய்த் திகழ்கிறது. ஆசிரியரும் இதனை 'ஆலநபி புகழ் கூறும் காவியம்' (க.வா.35) என்றே குறிப்பிடுகிறார். கிடைத்துள்ள இசுலாமியக் காப்பியங்களுள் இதுவே காலத்தால் முந்தியதாய் விளங்குகிறது.

1. இறகூல் - இறை தூதர்

தனிச்சிறப்பு

வினா விடையாய்க் (மசலாவாய்க்) காப்பியத்தை அமைக்கும் முறை இசுலாமியப் புலவர்கள் படைத்துள்ள புதுவகை இலக்கியம் எனலாம். சைவ சமய மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றான இருபா இருபது, வினா விடை வகையில் அமைந்துள்ளது. இந்நூல் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் எழுந்தது. அருள் நந்தி சிவாசாரியார் தம் ஆசிரியர் மெய்கண்ட தேவரை நோக்கி வினவ, அதற்கு ஆசிரியர் கூறிய விடை இந்நூலில் உள்ளது. இந்நூல் வினா விடை முறையில் அமைந்திருப்பினும், ஆசிரியரே வினாவை எழுப்பி அதற்கான விடையைத் தம் ஆசிரியர் கூறியதாய் உரைத்திருக்கிறார். மசலாவைப் போல் முற்றிலும் வினாக்களை ஒருவர் தொடர்ந்து கேட்க மற்றவர் அதற்குத் தொடர்ந்து விடை தரும் முறையில் இந்நூல் அமையவில்லை. மசலா, இசுலாமியப் புலவர்கள் தமிழுக்கு அளித்துள்ள புது வகை இலக்கியமாம். தமிழில் பிற்காலத்தில் தோன்றிய இலாவணிப் பாடல் முறையை இந்நூலின் போக்குக்கு ஒப்பிடலாம்.

காப்பிய அமைப்பு

ஆயிரம் மசலா என்னும் இந்நூல் பல்வேறு வகையான சந்தங்களைக் கொண்ட விருத்தப் பாக்களால் ஆக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலிலுமே பல அரபுச் சொற்களும், இசுலாமிய சமயத் தொடர்புடைய சொற்களும் பயின்று வருகின்றன. பல இடங்களில் அரபுத் தொடர்கள் அரபு மொழியில் உள்ளவாறே எடுத்தாளப்பட்டுள்ளன.

தூவும் சக்கஃபுல் மர்ஃபூஃ என்னும் தலமென்றார் (பா. 227)

இங்கு சக்கஃபுல் மர்ஃபூஃ என்னும் அரபு இடப்பெயரை நுழைத்து எழுதியுள்ளார்.

அன்றக நோய் கொண்ட அபுஜகிலுடனே
அருஞ்சுரத் தேகையில் ஷாம் (பா. 257)

இவ்வடியில் அபுஜகில் என்பவன் பெயரும், ஷாம் (இன்றைய சிரியா) எனும் நகரின் பெயரும் இடம் பெற்றுள்ளன. அபுஜகில் என்போன் பெருமானாரின் எதிரியாய் விளங்கியவன்.

ஷரகிற்[1] பொருளே கத்தீபே[2]
தக்கோர் போற்றும் தமனியமே

---

1. ஷரகு-மார்க்க நெறிமுறைகள்
2. கத்தீப்-கற்றுக்கொடுப்பவர்

உரையில் சலவாத் துல்லாவே[1]
உண்மை இனிவேறு உரையும் என்றார் (பா. 318)

இவ்வடிகளில் ஷரகு, கத்தீபு, சலவாத்துல்லா என்னும் சொற்கள் இடம் பெற்றிடக் காண்கிறோம்.

விஷமன் 'இபுலீசை'ப்பொரு மெய்யே, 'குறை ஷி'வங்
கிஷமன்னவரே உண்மை கிரீடிங்கினி வேறே (பா. 766)

இங்கு இபுலீசு[2], குறைஷி[3] என்னும் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இபுலீசு என்பவன், சைத்தான். முகம்மது நபி பிறந்த குடி, வணிகர் குடி. அக்குடியினர் குறைஷியர் என வழங்கப்பட்டனர்.

'சூறி'னில் 'இசுறா பீல்'தான்
சொல்லி ஊதிடுவ தேதென்று) (பர. 948)

சூறு, இசுறாபீல்[4] எனும் அரபுச் சொற்கள் இங்கே வந்துள்ளன. சூறு என்பது ஊதுகுழல். இசுறாபீல் என்னும் வானவர், காற்றுக்கு அதிபதி; உலக முடிவு நாளில் சூறு ஊதுபவர்.

இயல் 'பிசுமில்லா கிற்ற குமானிற்றகீம்' என்றே முன்னே
எழுதும்.... (பா. 17)

இங்கு பிஸ்மில்லா ஹிற்றகுமானிற் றகீம்[5] எனும் முழுத் தொடரே எடுத்தாளப்பட்டுள்ளது. அதுபோன்றே மற்றொரு பாடலில்,

குல்லாதி வரிசை'வலா கவுலவலா குவ்வத்த
இல்லாபில் லாஹில் அலிய்யில் அலீம்' என்னும்[6] (பா. 18)

என வருவதைக் காண்கிறோம்.

கோதிலாத, 'தவுறாத்து', 'இன்ஜீல்', 'சபூர்'
கூறும் வல்லஅறி வாளனான் (பா. 49)

---

1. சலவாத்துல்லாவே-இறைவனால் வாழ்த்தப் பெறுவோரே.
2. இபுலீசு-இதன் பொருள் (இறைவன்மீது) வெறுப்புற்றவன், நம்பிக்கையற்றவன் என்பதாம். இவன் சைத்தான் எனப்படுவான்.
3. குறைஷியர் மக்காவில் வாழ்ந்த அரபியர்.
4. இசுறாபீல் - வானவர்களுள் ஒருவர்; உலக முடிவு நாளில் சூறு என்னும் குழலை ஊதுபவர்.
5. பிஸ்மில்லாஹிற் றஹ்மானிற் றஹீம்-அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்.....
6. வலா கவுல வலாகுவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அலீம் - மிக உயர்ந்தவனும் மிகப்பெரியவனும் ஆகிய அல்லாஹ்வ அன்றி ஆற்றலோ சக்தியோ இல்லை.

எனும் இவ்வடியில் தவுறாத், இன்ஜீல், சபூர் என்னும் வேதங்கள் மூன்றின் பெயர்கள் பெய்யப்பட்டுள்ளன.

வண்ணமையுள 'ஜிபுறயீல்', 'மிக்காயீல்', 'இசுறாபீல்'
வந்தெதிர் இறங்கினர்களே (பா. 55)

என்னும் அடியில் ஜிபுறயீல்[1], மிக்காயீல்[2], இசுறாபீல்[3] என்னும் வானவர்கள் பெயர்கள் வந்துள்ளன.

இவ்வாறு பலவேறு அரபுச் சொற்களும் சொற்றொடர்களும் இடைப்பட்டாலும் தமிழ் யாப்பு மரபு கெடாது-அஃதாவது, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியன சிதையாது - ஓசை ஒழுங்குபடக் கவிதைகளை யாத்துள்ள புலவரின் திறம் போற்றுதற்குரியது. வண்ணப் பரிமளத்தின் கவிதைகள் வளமானவை எனத் துணிந்து கூறலாம்.

உவமைகள்

கவிஞரின் புலமை நலத்தைக் காட்டுவன அவர் உவமைகளேயாம்! வண்ணப்பரிமளப்புலவர் இந்நூலில் பல இடங்களில் எளிய, ஆனால், இனிய உவமைகளைப் பயன்படுத்தி யிருப்பதைக் காணலாம். நபிகள் நாயகம் கடிதம் எழுதுவதற்காகத் தம் தோழர் உக்காசை அழைத்தார். உக்காசு விரைந்து வந்தார். அவ்விரைவுக்கு வில்லிலிருந்து புறப்பட்ட அம்பை உவமையாக்கு கிறார், கவிஞர்.

பூட்டுசிலை நாண்எறியும் பூங்கணையது என்றே
ஓட்டமொடு சாதிபுனு உக்காசு வந்தார்! (பா. 14)

(சிலை - வில்; கணை - அம்பு)

நபிகளின் ஓலையை எடுத்துக்கொண்டு தூதுவர் வேகமாய்ச் சென்றனர். எவ்வாறு?

வேட்டை மான் ஓட்டம்போல..... (பா. 20)

வேட்டையாடுபவர்களிடம் தப்பிக்க விரைந்தோடும் மான்போலே விரைந்து சென்றனராம்!

---

1. ஜிபுறயீல் வானவர்களுள் இறைவனுக்கு நெருக்கமானவர் நால்வர். அவர்கள் ஜிபுறயீல், மீக்காயில், இசுறாபீல், இசுராயீல் என்பவராம். ஜிபுறயீல் வானவர் தலைவர் எனப்படுவார். ஆண்டவன் தரும் வேத உரைகளை நபிமார்களிடம் தெரிவிப்பவர் இவரே.
2. மீக்காயில் - கடல், மேகம் ஆகியவற்றின் தலைவர்.
3. இசுறாபீல் காற்றுக்குத் தலைவர்; இசுராயீல் - உயிர் களைக் கவர்ந்து செல்பவர்.

நாரங்கொள் சொர்க்கம் தன்னை
நரகுக்கு விற்பார் உண்டோ? (பா. 33)

(நாரம் - ஆன்மா)

என்னும் உவமையில் வரும் வினா, உணர்ந்து அறியத் தக்கதாம்!

ஒன்றை மிகவும் விரும்பிச் சென்றடைவதற்கு,

முதுதேன் அதிலே பிரசப்பாண்
முரலாய் விழுமாறு என... (பா. 45)

(பிரசம் - தேன்; பாண் - பாட்டு; முரலல் - ஒலித்தல்)

தேனில் விழும் வண்டுகள் உவமையாக்கப்படுகின்றன. அஞ்சி நிலை குலைந்து வாடுவதற்கு

புண்டரீ கத்தைக் கண்டு
புழுங்குமான் இனங்கள் போலச்
சண்டமா ருதத்தில் பட்ட
சருகுமாய்... (பா. 863)

(புண்டரீகம் - புலி; சண்டமாருதம் - புயற்காற்று)

புலியைக் கண்ட மானையும், புயற்காற்றில் அகப்பட்ட சருகையும் உவமையாக்குகிறார்.

பல்வேறு வாத்தியங்கள் ஒன்றுசேர்ந்து முழங்குவது கடலலை மீது காற்று மோத எழும் ஒலியைப் போன்றதாம் என்பார்.

காற்றுநேருங் கடற்போல்
கறங்கிடக்கை யால்முழங்கும் (பா. 866)

(கறங்கு இடக்கை - ஒலிக்கும் பெருமுரசு)

நாயை உவமைப் பொருளாக்கிச் சில உவமைகளைக் கூறுவது நயமாய் இருக்கிறது.

மலையைப் பார்த்து நாய் குரைப்பது போன்று (பா. 911)

சேனை நீழலைத் தொடர்ந்து
சீறிஎய்த்த நாயென (பா. 912)

குரைத்தநாயை என்புகொண்டு
எறிந்தவாறு... (பா. 913)

நடைமுறைப் பழமொழிகள் பலவற்றையும் பாக்களில் இடையிடையே வைத்துக் காட்டிச் செல்கிறார், வண்ணப் பரிமளம்.

மாதிலா மனைபாழ் என்னும்
வழமை (பா. 371)

அழுதழு தும்பிள்ளை
அவளே பெறுவதுபோல் (பா. 945)

சிறுபிள்ளை செய்யும் வேளாண்மை
விளையினும் வீடு புகாதென்று
உறுமொழி முன்னோர்கள் சொன்ன
உண்மை இதுவாம் (பா. 1020)

என நடைமுறைப் பழமொழிகளை இந்நூலில் காண்கிறோம்!

நடைச்சிறப்பு

சொல்லும் செய்திகளை ஓர் ஓவியமாய் மனக்கண்முன் தருவதுபோல வண்ணப்பரிமளத்தின் கவிதை நடை அமைந் திருக்கிறது. ஜிபுறியீலின் தோற்றத்தைக் கவிஞர் பாடுகிறார்

நகைமுகம் இலங்கும் வெள்ளை
நன்னிலா வீசும் மேனி;
சுகமக ரந்த நாசி
துலங்குகற் பூரத் தாலே;
அகமிக மகிழ்ந்து வானோர்
அனைவரின் அழகு தானோர்;
திகழொளி பரந்த வெள்ளைச்
சிறகொரு வகை,எட்டு உண்டே.[1] (பா. 107)

இதைப் படிக்கும் போதே வெண்ணிறம் பொலியச் சிறகுகள் எட்டுடன் ஜிபுறயீல் நம் கண்முன் நிற்கின்ற உணர்வு தோன்றுகிறதன்றோ?

சொர்க்க மாதர் நடைச்சிறப்பைக் கவிஞரின் கவிதை நடையில் காணும்போது நாமும் சொக்கிவிடுகிறோம்!

கச்(சு)அணி கொங்கைகள் பேரணியாக,
காதள வாய்விழி தர(அ)டி ஓட,
செச்சை நறுங்கள பத்தொடை மேவும்
சீரிய வார்குழல் சாமரை வீச,
அச்சொ டெழுந்த மதிக்குலம் என்ன,
அன்ன மெனப்பிடி யென்ன அசைந்தங்(கு)
எய்ச்சி மெலிந்த மருங்கு தள்ளாடி
ஏந்திழை யார்எதிர் கொண்டு, நடப்பார் (பா. 387)

(செச்சை சந்தனக் குழம்பு; களபம் சாந்து; தொடை பூங்கொத்து; எய்த்தல் இளைத்தல்; மருங்கு - இடை)

---

1. ஜிபுறயீல் புன்முறுவல் தவழும் முகமும், மின்னொளி வீசும் வெண்ணிற மேனியும், கற்பூர மணம் கமழும் நாசியும் கொண்டவர். வானோர் அனைவரினும் மேம்பட்ட அழகுள்ளவர். இவருக்கு பெரிய எட்டு வெள்ளைச் சிறகுகள் உண்டு.

கைபாறு நகரிலிருந்து அப்துல்லா இபுனு சலாமும் அவருடன் சென்ற மற்றவர்களும் மதினமா நகர் நோக்கி நடந்ததை,

நடந்தனர் நடந்தனர் நலம்பெறு குலம்பெறு
நறுங்குவளை செங்கமல நீள்
தடந்தொறும் உடைந்து நறவம்குதி கொளும்படி
தருங்'கைப று'எனும் பதியுளோர் (பா. 42)

உவந்து சென்றதாய்க் குறிப்பிடுவார். பாடலின் நடை அவர்களின் அடிநடையோடு இணைந்து செல்லும் அழகை இங்கே காணமுடிகிறது. ஒவ்வொரு சீரைப் படிக்கும்போதும் ஓர் அடி எடுத்து வைப்பது போன்று உணர்கிறோம்!

தீனுக்கு நேர்கொண்டு வந்தோர்கள் எல்லோரும்
தேனுக்குள் ஈயாகினார் (பா. 211)

தீனுக்கு வந்தவர்கள் தேனுக்குள் ஈயாயினர். (தீன் இசுலாமிய நெறி.) தீன் - தேன்; அடடா! இதைப் படிக்கும்போது வண்ணப் பரிமளத்தின் பாடல் தேனில் நாமும் ஈயாய்ப் படிந்து விடுகிறோம்!

தங்கு தடையின்றித் தெளிந்த நீரோட்டம் போலச் செல்கிறது, இவரது செய்யுள் நடை!

தீதாறு கண்டவர்க்கும்
திருவசனம் கேட்டவர்க்கும்
வேதாந்தம் மிகவுண்டாய்
வெற்றிகளும் பெற்றிடுவார் (பா. 659)

இவ்வாறு நூற்றுக்கணக்கான இடங்களைச் சுட்டிக் காட்ட முடியும்!

இறை அறிவிப்புகள்

இந்நூலில் கூறப்படும் சமயச் செய்திகள் யாவும் இறைவன் சொன்னவை. பெருமானாரிடம் அப்துல்லா இபுனு சலாம், "இவற்றையெல்லாம் நீங்கள் எவ்வாறு கூறுகிறீர்கள்?" என்று கேட்டபோது அவர்கள், "இறைவன் வானவர் ஜிபுறயீல்மூலம் எனக்கறிவிக்க நான் உமக்கறிவிக்கிறேன்" என்றார்கள். இதை ஆசிரியர் நூலில் பல இடங்களில் சுட்டிக் காட்டுகிறார்.

அப்படிக் கலம்[1]இறையால், அணிபல கையில்எழுத,
மெய்ப்பொருள் இசுறாபீல், மீக்காயீல் தமக்கருள,

---

1. கலம் இதன் பொருள் எழுதுகோல் என்பதாம். இறைவன் இதனைப் படைத்து, உலக முடிவுநாள்வரை 'மகுபூல்' என்னும் பலகையில் எழுதிவரப் பணித்தான்.

செப்பிய மீக்காயீல் ஜிபுறயீ லுக்கருள,
இப்படி ஜிபுறயீல்வந் தேகி,எ மக்கருள்வார் (பா. 101)

"இறைவன் ஆணையால் 'கலம்' எனும் எழுதுகோல் மகுபூல்[1]' என்னும் பலகையில் எழுதும். அதனை இசுறாபீல் மீக்காயீலுக்குக் கூறுவார்; மிக்காயீல் ஜிபுறயீலுக்குக் கூற ஜிபுறயீல் எனக்குக் கூறுவார். அதை நான் உமக்குக் கூறுகிறேன்" என நபிகள் நாயகம், அப்துல்லா இபுனு சலாமிடம் கூறுகிறார்கள்.

இபுனு சலாம், "நாயகமே! நீங்கள் எண், எழுத்து அறியாதவர். ஆயினும் எவ்விதத் தயக்கமுமின்றி என் வினாக்களுக்கு விடையளிக்கிறீர்களே! எவ்வாறு?" என்றார்.

இன்ப மான,கலை ஞானம், கல்வியினொ(டு)
எண்எழுத்து அறிவ(து) இல்லை,நீர்;
வன்பி லாமல்,இவை ஒது றீர்,என்அது
மாயம்! இங்குஅருளும் அஹமதே! (பா. 1026)

இவ்வாறு கேட்ட இபுனு சலாமுக்கு நபிகள் நாயகம் கூறுகிறார்கள் :

கைபறின் அரசே! ஜிபுரயீல்
மிக்கா யீல்,இசு றாபீலும்
முவ்வரும் என்பால் இருந்துஉரைக்க
முதல்வன் விடுத்தான்; அதுகொண்டே
தவ்வல் அற,நீர் கேட்டவெல்லாம்
தப்பா துரைத்தேன் எனப்பகர்ந்தார். (1027)

மேலும், பெருமானார் சொன்னதைப் புலவர் மற்றொரு பாடலிலும் குறிப்பிடுகிறார்.

ஈனமற நீர்கேட்ட மசலா எல்லாம்
இபுனுசலா மே!ஏகன் எமக்கிங் கோத
வானஎழுத் தைக்,கலம்வந்து அஜலிற்[2] காட்ட,
அவ்வெழுத்தின் தபுசீர்[3]கண்(டு), இசுறா பீல்தான்;

---

1. மகுபூல் (லௌஹரஜல் மஹ்பூல்) இறைவனால் படைக்கப்பட்ட பலகை. இதில் எழுதப்படுவதை இறைவ னன்றி வேறு எவரும் அறியார். இதில் எழுதும் கோல் 'கலம்' எனப்படும். இதிலுள்ள எழுத்துகள் ஒளிமய மானவை.
2. அஜல் - இறைவன் ஒவ்வொருவரையும் படைக்கும் போது அவரவர்க்கு நிர்ணயித்த நேரம். அஜல் வந்துவிடின் அதிலிருந்து ஒரு விநாடி முந்தவும் முடியாது, ஒரு விநாடி பிந்தவும் முடியாது.
தப்சீர் - விரிவுரை

சோனைமழைத் தலைவருடன்[1] சொல்ல, அந்தச்
சொற்ஜிபுர யீலூடன் தோன்றல் கூறப்,
பானுலகில் ஜிபுரீல்,வந்து எனக்கு விள்ளப்
பாங்குடன்நான் இங்(கு)உமக்குப் பகர்ந்தேன் என்றார். (பா. 1041)

மசலாவிற்கான விடைகளை இறைவன் அறிவித்தவாறு அவன் தூதராகிய நபிகள் நாயகம் தெரிவித்தார்கள் என்பதை இப் பாடல்கள்வழித் தெளிவாக்குகிறார், கவிஞர்!

கடவுள் வாழ்த்து

நூலின் தொடக்கத்தில் காப்புப் பாடல்கள் உள்ளன. அடுத்துக் கடவுள் வாழ்த்தாய் 35 பாடல்கள் உள்ளன. முதலில் இறைவன் வாழ்த்தப்படுகிறான் (5 பாடல்கள்). அடுத்து மலக்குகள் நால்வர்[2] ஒரு பாடலில் வாழ்த்தப்பட்டுள்ளனர். பின்னர் 1,24,000 நபிமார்களை ஒரு பாடலும் முறுசலீன்களான[3] 313 நபிமார்களை ஒரு பாடலும் வாழ்த்துகின்றன. அடுத்து இறையருள் பெற்ற 'உலுல்அசும்'[4]களை ஒரு பாடல் புகழ்கிறது. பின்னர், நான்கு பாடல்கள் நபிகள் நாயகத்தை வாழ்த்துகின்றன. இதையடுத்துக் கலீபாக்களாகிய[5] அபூபக்கர், உமறு, உதுமான், அலியார் ஆகிய நால்வரும் ஒவ்வொரு பாடலில் வாழ்த்தப்பட்டுள்ளனர். அடுத்த பாட்டு அலியாரின் மக்களாகிய ஹஸனையும், ஹுசைனையும் வாழ்த்துகிறது. அடுத்த பாடலில் அன்பியாக்களும்[6] அவுலியா[7]க்களும் வாழ்த்தப்படுகின்றனர். அடுத்து மதினா மாநகர் நபித்தோழர்களான அஸ்ஹாபிகள் புகழப்படுகின்றனர். அடுத்து, விசாரணையின்றியே சுவர்க்கம் பெற்ற பத்துப் பேர் நினைக்கப் படுகின்றனர். இவர்களை அடுத்து நூல் எழுதத் துணை நின்றோரை

---

1. மீக்காயில் - வானவர்; மீக்காயில் மழைக்குத் தலைவர்
2. மலக்குகள் - வானவர் தலைவர் நால்வர்.
3. முறுசலீன்-இறைவனால் உலகிற்கு அனுப்பப்பட்டு வேதம் அருளப்பெற்ற நபிமார்கள்.
   உலுல் அஸ்ம் - இதன் பொருள், துணிந்தவர் என்பதாம். இறைவனால் உலகுக்கனுப்பப்பட்ட 1,24,00 நபிமார் களுள் நூஹு, இபுறாகீம், மூஸா, ஈஸா, முகம்மது நபி ஆகிய ஐவரும் உலுல் அஸ்ம் என வழங்கப்படுகின்றனர்.
   கலீபாக்கள் நபிகள் நாயகத்தை அடுத்து ஆட்சிக்கு வந்தவர்கள்.
6. அன்பியா - நபி (இறை தூதர்) என்பதன் பன்மை
7. அவுலியா - இறைவன் எண்ணத்தால் மனநிறைவு பெற்ற அறவோர்.

வாழ்த்தி அவையடக்கத்துடனும் நூல் அரங்கேற்ற விவரத்துடனும் கடவுள் வாழ்த்து நிறைவு பெறுகிறது. இறைவன், வானவர்நால்வர், 1,24,000 நபிமார்கள், 313 முறுசலீன்கள், உலுல் அசும்கள், முகம்மது நபி, நான்கு கலிபாக்கள், நாயகத்தின் திருப்பெயரர்கள், அன்பியாக்கள், அவுலியாக்கள், அஸ்ஹாபிகள், சுவனவாசிகள் பதின்மர் என்ற வரிசையில் வண்ணப் பரிமளம் வாழ்த்தினை அமைத்துள்ளார். கிடைத்துள்ள இந்த முதல் இசுலாமியக் காப்பியத்தில் உள்ள இதே முறையில்தான் பின்னர் வந்த இசுலாமியக் காப்பியங்களிலும் வாழ்த்து அமைந்திருக்கக் காண்கிறோம். இறைவன், மலக்குகள், நபிமார், முறுசலீன்கள் ஆகியவர்கட்குப் பின்னர் காலவரிசையில் நபிகள் நாயகத்தை வண்ணப்பரிமளம் பாடியுள்ளார். பின்னர் வந்தவர்கள், முக்கியத்துவம் கருதி இறைவனை அடுத்து முகம்மது நபியை வாழ்த்திடக் காண்கிறோம். ஆயிரம் மசலாவில் கடவுள் வாழ்த்தில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களே - சற்றேறத்தாழ இதே வரிசையில் - பிற இசுலாமிய இலக்கியங்களிலும் வாழ்த்தப்பட்டுள்ளனர். நூல் எழுதத் துணை நின்றவர்களை வாழ்த்துதலையும் அவையடக்கத் தையும் அரங்கேற்றச் செய்திகளையும் கடவுள் வாழ்த்தில் வண்ணப்பரிமளம் சேர்த்துள்ள தன்மையினையே பின்னர் வந்துள்ள இசுலாமியப் புலவர்களும் பின்பற்றியுள்ளனர். அதனால் இசுலாமிய இலக்கியங்கள் எந்த ஆண்டில், யாரால், எவ்வெவர் உதவியுடன் எழுதப்பட்டு எவ்வாறு அரங்கேற்றப்பட்டது என்னும் விவரம் மிகவும் துல்லியமாய்க் கிடைக்க வழியேற்பட்டுள்ளது. வண்ணப்பரிமளப்புலவரின் வரலாற்றுணர்வு வாழ்த்துதற்குரியது! நம் பண்டைய புலவர்கட்கு இவ்வெண்ணமில்லாமல் போயிற்றே, என் செய்ய?

சிந்தனைக்கு

நிறைவன்றிக் குறையொன் றில்லா
நிகுமத்ஒன்று உண்டு அதுஏது இங்கு? (பா. 230)

எனும் வினாவை அபுதுல்லா இபுனு சலாம் கேட்கிறார். அதற்குப் பெருமானார் தந்த விடை நூலில் இடம் பெறவில்லை. இவ்விடத்தில் பாடல் ஏதாவது விடுபட்டுள்ளதா எனப் பார்க்க வேண்டும். அது போன்று, ஏழு உலகங்கள் ஒவ்வொன்றிலும் எவ்வெவற்றை இறைவன் படைத்தான் எனக் கூறிவரும் வரிசையில், முதல் உலகைப்பற்றிய 725ஆவது பாடலையடுத்துள்ள 726ஆவது பாடலில் மூன்றாம் உலகம்பற்றிக் கூறப்படுகிறது. இரண்டாம் உலகம்பற்றிச் சொன்ன பாடல் விடுபட்டிருக்குமா

என்பதும் அறியப்படவேண்டும். மூலப் படியுடன் ஒப்பிட்டு இவைபற்றி அறியலாம்!

உண்மை உண்மை

பெருமானார் ஒவ்வொரு வினாவுக்கும் தக்கவாறு விடையளிக்க, அதைக் கேட்கும் அப்துல்லா இபுனு சலாம் அவை உண்மை என்பதைச் சொல்லிச் சொல்லி மகிழ்கிறார்.

மெய் இறசூலே உண்மை உரைத்தீர் (பா. 63)
ஈங்குநீர் உண்மை சொன்னீர் (பா. 87)
உண்மை உரைத்தீர் நன்னெறி கற்றீர் (பா. 161)
மெய்யல்லோ சொன்னீர் (பா. 189)
ஆரியன் மொழியீது உண்மை (பா. 193)
நன்றுநீர் மொழிந்தது உண்மை (பா. 197)
மெய்இது பகர்ந்த உரை (பா. 246)
நன்றிது நபியே உண்மை (பா. 286)
செம்மல் நன்னபியே உண்மை செப்பினீர் (பா. 308)
செங்கோல் அரசே! உண்மை தெளிந்தே உரைசெய்தீர் (பா. 339)
நிச்சயம் உரைத்தீர் (பா. 395)
சொன்னஇப் பொருளிதுண்மை (பா. 523)
முஸ்தபாவே! உள்ளதே சொன்னீர் (பா. 582)
கோதற்ற மொழி ஈதுண்மை (பா. 660)
நாயன் நபியே உண்மை நவின்றீர் (பா. 710)
உற்றமொழி உண்மை (பா. 730)
நேரணியச் சொன்னதெல்லாம் நிச்சயம் (பா. 822)

என அப்துல்லா இபுனு சலாம் சொல்லிச் சொல்லிக் களிக்கிறார். ஒவ்வொரு வினாவுக்கும் தக்க விடை கிடைக்கக் கிடைக்க 'உண்மை, உண்மை' என அவர் துள்ளிக் குதித்திருப்பார் என்று தோன்றுகிறது. 'உண்மை சொன்னீர்' என்னும் முறையில் அமைந்த தொடர், நூலுள் சற்றேறத்தாழ தொண்ணூறு இடங்களில் வருகின்றது; சில மட்டுமே இங்குக் காட்டப்பட்டுள்ளன.

பெருமானார் புகழ்மொழி

பெருமானாரிடம் இபுனு சலாம் இன்ன வினாக்களைக் கேட்டார் எனச் சொல்வதும், பெருமானார் இன்ன விடை சொன்னார் என்று சொல்வதுமாகிய நேர்வுகள், நூலுள் பல இருப்பதால் பெருமானாரின் பெருமையையும் புகழையும் பல்வேறு வகைகளில் எடுத்துச் சொல்ல ஆசிரியர்க்கு வாய்ப்புக்

இட்டுகிறது. பெருமானாரின் ஒவ்வொரு பெயரையும் பல்வித அடைமொழிகளையிட்டுப் பாடுவது அருமையாய் உள்ளது.

நபி என்றும், நபிமணி என்றும், நபிகளுக்கரசு என்றும் பெருமானார் போற்றப்படுகிறார். 'நபி'யுடன் சேர்ந்து பெருமை பெறும் அடைமொழிகள் ஏராளம். அதே போல 'இறசூல்' என்னும் சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

'இறசூல்' என்னும் சொல்லுக்குத் தூதுவர் என்பது பொருள். மக்களுக்கு நல்வழி காட்ட இறைவனால் அனுப்பிவைக்கப்பட்ட தூதர்கள் 'இறசூல்' எனப்படுகின்றனர். இவ்வுலகிற்கு இறைவன் 1,24,000 நபிமார்களை அனுப்பி வைத்ததாகவும், அவர்களுள் முர்ஸலான 313 நபிமார்கள் இறசூல் எனப்படுகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது. இச்சொல் குர்ஆனில் வேதம் அருளப்பட்ட நபிமார்களுக்கே கூறப்பட்டுள்ளது. இறைவன் தன் திருமறையில் நபிகள் நாயகத்தை 'முஹம்மதுர் ரசூலுல்லாஹ்' என்று குறிப்பிடுகிறான். இத்தகு சிறப்பு வாய்ந்த இறசூலை இக்காவியக் கவிஞர் பலவாறு கூறிப் புகழ்கிறார்.

நபிகள் நாயகத்திற்கு முன்னர்த் தோன்றிய இறசூல்களுக்கு ஐந்துவேளைத் தொழுகை இல்லை. நபிகள் நாயகம் நாள்தோறும் ஐந்து வேளை தொழுதார். ஆதலின் 'ஹம்து' எனும் மந்திரம் ஓதிகொண்டு ஆண்டவனை அவர் புகழ்ந்த அளவுக்கு மற்றவர்கள் புகழ்ந்திருக்க முடியாது. நாயகத் திருமேனி அதிகமாய் ஆண்டவனைப் புகழ்ந்தமையால் அவர்கள் 'அஹ்மது' என்று பெயர் பெற்றனர். 'அஹ்மது' என்றால் அதிகமாய்ப் புகழ்ந்தவர் என்பது பொருள். அல்லாஹ்த் ஆலாவும் நபிகள் நாயகத்தை மற்றவர்களினும் அதிகமாய்ப் புகழ்ந்துள்ளான். ஆதலால், பெருமானார்க்கு அதிகமாய்ப் புகழப்பட்டவர் எனும் பொருள் கொண்ட 'முஹம்மது' எனும் பெயர் அமைந்தது. இறுதித் தீர்ப்பு நாளின்போது நாயகம் எல்லாப் படைப்புகளுக்காகவும் இறைவனிடம் மன்றாடுவதால், படைப்புகள் அனைத்தும் அவரைப் புகழ்கின்ற காரணத்தால் அவருக்கு 'மஹ்மூது' - (படைப்புகளால்) புகழப்பட்டவர் எனும் பெயர் சூட்டப்பட்டது. இவ்வாறு பெருமானார்க்கே உரிய முஹம்மது, அஹ்மது, மஹ்மூது எனும் சிறப்புப் பெயர்களைக்கொண்டும் பெருமானார் மிகப்பல இடங்களில் பாராட்டப்படுகிறார்.

இன்னும், நபிகள் நாயகம் இறைதூதர் என்பதைக் குறிப்பிடும் வகையில் 'தூதர்' என்னும் அடைமொழி கொண்டும், வேதம் அருளப்பட்டவர் என்னும் முறையில் வேதாம்பர் எனவும் போற்றப்படுகிறார்.

மேலும், பெருமானாரின் பண்புகளையும் பெருமைகளையும் ஆசிரியர் பல்வேறு வகைகளில் வாயாரப் போற்றி மகிழ்கிறார்.

சுருங்கக்கூறின், "ஆல நபி புகழ்கூறும் காவியம்" என அவரே வருணித்திருப்பதற்கொப்ப இந்நூல் பெருமானாரின் பெரும்புகழை ஓயாது பாடுவதை அறிந்து மகிழலாம்.

சில வினா–விடைகள்

அப்துல்லாஹ் கேட்ட வினாக்களுக்கு நபிகள் நாயகம் அளித்த மறுமொழிகளிலிருந்து அறியப்படும் சில செய்திகள் இங்கே தரப்படுகின்றன. நாயகத்தின் மறுமொழிகளாய் இரமலான் மாதத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பல சொல்லப்பட்டுள்ளன.

இரமலான் மாதம்

15ஆம் நாள்	திருக்குர்ஆனை நபிகள் நாயகத்திடம் இறைவன் இறக்கினான்.
20ஆம் நாள்	இறைவன், தாவூது நபிக்கு சபூர் வேதத்தை அருளினான்.
21ஆம் நாள்	சுலையுமான் நபிக்கு இறைவன் முத்திரை வந்தது.
22ஆம் நாள்	மூசா நபி பிறந்தார்.
23ஆம் நாள்	ஈசா நபிக்கு இன்ஜீல் வேதம் அருளப்பட்டது.
25ஆம் நாள்	மூசா நபி பிருவூனின்[1] கொடுமையிலிருந்து இசுரவேலர்களைக் காக்க அவர்களை அழைத்துக் கொண்டு செங்கடலில் இறங்கினார்.[2]
26ஆம் நாள்	மூசா நபியிடம் தவுறாத் வேதம் இறக்கப்பட்டது.
27ஆம் நாள்	யூனுசு நபியைக் கடல்மீன் விழுங்கியது.[3]

1. பிர்அவூன் என்பவன், எகிப்து நாட்டு மன்னன். தன்னையே இறைவன் என வணங்கப் பணித்தான். இசுரவேலர்களைச் சொல்லொணாக் கொடுமைகட்கு ஆளாக்கினான்.

2. மூசா நபி, 'அசா' என்னும் தடியால் கடலில் அடிக்க, கடல் 12 பாதைகளாய்ப் பிரிந்து வழி தந்தது. அவர்கள் சென்றதும் கடல் அடைத்துக்கொண்டது. ஆதலின், பிருவூனால் இசுரவேலர்களைப் பிடிக்க முடியவில்லை.

3. யூனுசு நபி, கடல்படைப்பு அனைத்தையும் காண அருள் செய்யுமாறு ஆண்டவனை வேண்டினார். இறை ஆணைப்படி, 'நூன்' என்னும் மீன், கொல்லாமல் அவரை விழுங்க, கண்ணாடி போன்ற உடலமைப்புடைய அம்மீனின் வயிற்றிலிருந்த வண்ணமே அவர் கடலின் அற்புதங்களைக் கண்ணுற்றார். 40 நாள்கள் அம்மீன் நபியை உள்ளடக்கிய வண்ணம் கடலெங்கும் உலவி வந்தது.

28ஆம் நாள் யஃகூப் நபியின் குருட்டு விழி குணமாயினது.
29ஆம் நாள் இதுரீசு நபி உடலுடன் வானகம் புகுந்தார்.
30ஆம் நாள் நித்தன் மூசா நபிக்கு அறுதி செப்பினான்.

என்னும் செய்திகள் பேசப்பட்டுள்ளன. இறைவன் உலகைப் படைக்கத் தொடங்கிய நாள், ஞாயிறு; படைத்து முடித்த நாள் வெள்ளி என ஒரு வினாவுக்கு விடை கூறப்பட்டுள்ளது.

தந்தையினும் பிள்ளை மூர்கம் (வலிமை); தந்தையையே சாய்க்கும் அது எது? என்பது வினா.

கல்லிடத்திலே இரும்பு பிறக்கிறது; அதுவே கல்லை உடைக்கிறது.
இரும்பு உருக்கைப் பெறுகிறது; உருக்கோ இரும்பை அறுக்கிறது.
உருக்கு நெருப்பை ஈனுகிறது; நெருப்போ உருக்கை வாட்டுகிறது.

பெற்றவனைவிடப் பிள்ளை வலிமையானவன்; பெற்ற வனையே அழிப்பவன் எவன் என்பதற்கு இதுவே மறுமொழி.

இரும்பு பிறக்கும் கல்லிடத்தில்
ஈடு படுத்தும் இரும்பு,சுல்லை;
பொருந்த உருக்கை இரும்புபெறும்
பூண்ட இரும்பை உருக்(கு)அறுக்கும்;
திருந்த நெருப்பை உருக்(கு)ஈனும்
செய்ய உருக்கைத் தீ,வாட்டும்;
வருந்தும் பிதாவின் பிள்ளைமிடுக்(கு)
ஆகும் மசலா இதுஎன்றார். (பா. 311)

நெருப்பினும் வலிமையானதும் அதை அழிக்கக்கூடியதும் உண்டோ என்னும் வினாவுக்கு நீர் என மறுமொழி தரப்பட்டது. நீரை அழிக்கும் மிடக்குடையதுண்டோ? - இது வினா. ஊதை (காற்று) என்பது மறுமொழி.

விண்ணிலிருந்து விழாததும் மண்ணில் ஓடாததுமான ஆறு எது என்பது ஒரு வினா. நபிகள் நாயகம், மறுமொழியாய் வியர்வை என்றார்.

மண்தனக்குள் ஏறாது; வானிருந்(து) ஓடா(து),அங்கு
அந்தரத்தில் ஓர்ஆறுஉண்(டு); அதுஎமக்குக் கூறும்என,
சுந்தரத்தோள் இபுனுசலாம் சுருதிவழி யே,கேட்கு
விந்தமலர்ப் புயத்(து)இறசூல், 'மெய்யினில் வெப்(பு)'என்றாரே.
(பா. 331)

உழைப்பவனின் உடலில் பெருக்கெடுத்தோடும் வியர்வை பெருமானாரின் நெஞ்சைத் தொட்டிருக்கிறது. இதனை மலையிலே நீதான்றாததும் கடலிலே கலக்காததுமான ஆறு எது என்றும் கேட்கலாம். ஆம்! உடல் தசைகளிலிருந்து கொப்புளித்துப் பெருக்கெடுத்தோடி இடுப்புப் பள்ளத்தில் கலந்துவிடுகிறது.

தமிழ்நாட்டுப்புலவர் எழுதியதால், தமிழ் மக்களை நினைவில் கொண்டு, அவர்களறிந்த கதைகள் சிலவற்றை இடையிலே புனைந்துவிடுகின்றார். 'இசுலாம் ஏற்காத கருத்தை அக்கதைகள் கூறியுள்ளன; ஆயினும், 'நம் கதைபோல்தான் அங்கும் கதைகள் இருந்திருக்கின்றன' என இசுலாம் நெறியறியா மக்களை நம்ப வைத்துவிடுகின்றன. தமிழர்க்கு எழுதுவதாய் எண்ணி, இசுலாம் ஏற்காத சில, இத்தகைய புராணங்களில் நுழைந்து விடுகின்றன. இந்நூலுள், 'இடபத்தின் வரலாறு' எனும் பகுதியில் ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது.

உண்மைத் தன்மையை உணர்த்தல்

ஏழு உலகங்களையும் ஒரு காளை தன் கொம்புகளினிடையில் தாங்கிக்கொண்டிருக்கிறது. அதற்கு 40 ஆயிரம் கொம்புகள் உண்டு. ஒரு கொம்பின் உயரம் ஐந்நூறு ஆண்டு வழிநடையாம். இது தன் தலையை ஏழு வானிலும், வாலைப் படுவானிலும் வைத்திருக்குமாம். ஒவ்வொரு கொம்பிலும் 70 கிளைக்கொம்புகள் இருக்கும். ஒரு கொம்புக்கும் மற்றொரு கொம்புக்கும் இடைவெளி ஐயாயிரம் ஆண்டு வழிநடையாம். அக்காளையின் முன்னே ஒரு மாட்டு ஈ சிறகை ஆட்டிக்கொண்டு நிற்கும். அஃது ஏனெனில் உலகங்களைத் தாங்கும் அக்காளையின் முன்பு இபுலீசு (சாத்தான்) சென்று, "இறைவன் உன்னை உன் இனத்திலிருந்து பிரித்துத் தனித்து இங்கு நிற்கச் செய்துவிட்டான். பூமிப்பாரம் முழுவதையும் நீ சுமந்துகொண்டு தனித்து நிற்பதுபற்றி யாரும் கவலைப்படவில்லை. நீ தாங்கியுள்ள கொம்பைச் சற்றே அசைத்தால் உலகமெல்லாம் தளர்ந்துவிடும்; நீ உன் இனத்தோடு சேர்ந்து உனக்கிசைந்த ஆவுடன் கலந்து இனிதாய் வாழலாம்" என்றான். அதுகேட்ட காளை கொம்பை அசைக்க நினைக்கவே, இறைவன் உலகங்களை அங்கங்கே நிற்க நிறுத்தினான். அவ்வாறு நிறுத்திய ஆண்டவன் ஓர் ஈயை மாட்டின் மூக்கினுள் ஏவினான். உள்ளே புகுந்த ஈ, பசி மிகுந்த பொழுதெல்லாம், மூளையுண்டு எயிறு அழுந்த முகுமுகென்று குடைந்தது. காளை எல்லையில்லாத் துன்பமுற்றது. "ஆண்டவனே! நான் இபுலீசால் கெட்டேன். இனி இப்படிச் செய்யமாட்டேன்" என்று முறையிடவே, ஆண்டவன் ஈயை வெளியில் வரச்செய்தான்; அந்த மாடு பயம் கொள்வதற்காக எப்போதும் அதன் சிறகை ஆட்டிக்கொண்டு நிற்குமாறு ஈயுக்குக் கட்டளையுமிட்டான். ஈயும் பறந்துகொண்டே, "ஏந்திய பூமியை விட்டால் பழையபடி உள்ளே புகுந்து குடைவேன்" என்று

சொல்லிக்கொண்டே பறந்து நிற்கிறது; காளையும் அஞ்சிப் பழையபடி பூமியைச் சுமந்துகொண்டே நிற்கிறது.

இசுலாம் இத்தகைய கட்டுக்கதைகளை நம்பாத அறிவியல் சார்ந்த நெறி. ஆயினும், தமிழ்நாட்டில் ஆயிரம் தலையுள்ள பாம்பு (ஆதிசேடன்) பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கிறது என்ற கதையை நம்பிக்கொண்டிருப்பதால் அதுபோன்றதொரு கதையை காப்பிய ஆசிரியர் நுழைத்திருக்கிறார்.

இக்காலத்தே இசுலாமியக் காப்பியங்களும் சிற்றிலக்கிய நூல்களும் பெருமளவில் பதிப்பில் வந்தவண்ணமுள்ளன. பதிப்பில் இசுலாம் ஏற்காத பகுதிகள், பாடற்சுவைக்காகவோ, தாம் வாழுமிடத்தில் நிலவிவரும் நம்பிக்கைகளுக்கேற்பவோ இருக்குமாயின் அவற்றைச் சுட்டிக்காட்டி, 'இசுலாம் இவற்றை ஏற்பதில்லை' என்னும் கருத்தை வெளிப்படுத்த வேண்டும். இசுலாமிய நூற்பதிப்புகளில் இத்தகையதொரு முறையைக் கையாள வேண்டுமெனக் கூற விழைகிறேன். இல்லையேல், நெறிக்குப் புறம்பானவற்றை, அந்நெறியறியா மக்கள் உண்மை யென நம்பவேண்டி நேர்ந்திடும். காப்பியத்தைப் படிப்போர்க்குச் சமயத்தின் உண்மைத் தன்மையை உணர்த்தவேண்டியது முக்கியக் கடமையாம்.

ஆயிரம் மசலா

இந்நூலில் அப்துல்லா இபுனு சலாம், பெருமானாரிடம் கேட்டதாய் சுமார் 300 வினாக்கள் மட்டுமே உள்ளன. ஆதலின், ஆயிரம் என்பது வினாக்களைக் குறிக்கும் எண்ணிக்கை அன்று என்பது தெரிகிறது. சில வினாக்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்திகள் விடைகளாய்த் தரப்பட்டுள்ளன. ஆதலின், பெருமானாரால் விளக்கப்பட்ட மார்க்க உண்மைகள் ஆயிரம் என்பதுதான் இதன் பொருளாய் இருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. மார்க்க மேதைகள் இவற்றை ஆய்ந்து, ஆயிரம் உண்மைகளையும் எண்ணிட்டுக் காட்டின் பெரும் பயனாய் இருக்கும்.

நூல் நவில் பொருளும் நோக்கமும்

உலகம், வானம், பாதாளம் ஆகியவற்றை இறைவன் படைத்ததும், அவற்றின் அமைப்புகளும், அங்கங்கே நடைபெறும் செயல்களும் இந்நூலில் நன்கு விளக்கம் பெற்றுள்ளன. உலகத்தைத் தாங்கும் இடபம், இறைவன் இருந்து ஆட்சி செய்யும் அறுஷ், சூரிய சந்திரர்கள் தோன்றிய வகை ஆகியவையும்

கூறப்பட்டுள்ளன. வானவர் தலைவர் நால்வர், அவர்களின் பணிகள் சொல்லப்பட்டுள்ளன. உலக முடிவு நாளை அறிவிக்க ஏற்படும் தோற்றங்கள், உலக முடிவு நாளில் நடக்கும் நிகழ்ச்சிகள் ஆகியன சிறப்புற விளக்கப்பட்டுள்ளன. சொர்க்க வரலாறு, நரக வரலாறு ஆகிய இரண்டும் பெருமளவில் பேசப்பட்டுள்ளன. சொர்க்க இன்பத்தைப் பற்றிப் படிக்கப்படிக்க அதை நாம் அடைந்தே ஆக வேண்டுமெனும் ஆர்வம் தூண்டப்படுகிறது. நரக தண்டனையை இந்நூலில் படிக்கும் எவரும் அதற்குக் காரணமாகும் தவற்றினைக் கனவிலும் செய்யக் கருத மாட்டார் என்பது உறுதி. ஆதம் (அலை) படைக்கப்பட்டதும், ஆண்டவன் கட்டளையை மீறியதால் அவர் ஹவ்வாவுடன் இவ்வுலகில் தள்ளப்பட்டதும், ஆதத்தின் மக்களை இபுலீசு தன் பக்கம் இழுத்து ஆண்டவனுக்கு எதிராய்ச் செலுத்துவதும், அவ்வாறு அவனைப் பின்பற்றியோர் நரகம் சேர்வர் என்பதும் விளக்கப்பட்டுள்ளன. இபுலீசினை விட்டு விலக வழிகாட்டியாய் விளங்கும் இறசூல் முகம்மதுவைப் பின்பற்றி, தீன் வழி நின்று, சொர்க்க இன்பம் அடைவதே பிறவிப்பயன் என்பதை எடுத்துரைப்பதே இம் மசலாக்களின் முக்கியக் குறிக்கோள் ஆகும்.

இத்தனை அருமை பெருமைகள் நிறைந்த இவ்வரிய காவியம் மீண்டும் வெளிவர வேண்டும் என்னும் ஆர்வத்தி கொண்டு, அவ்வெண்ணத்தைச் செயல்படுத்தி இந்தப் புதிய பதிப்பை வெளியிட்டுள்ள திரு. எம். இத்ரீஸ் மரைக்காயர் அவர்களும், இதனைப் பதிப்பித்து அச்சிட்ட திரு. 'ஹஸன்' அவர்களும் நமது மனமுவந்த பாராட்டுக்குரியோர் ஆவர். இவ்வாறே, இன்னும் மறைந்து கிடக்கும் பல இசுலாமியத் தமிழ் இலக்கியங்களையும் தேடிக் கண்டுபிடித்து, பதிப்பித்து, அச்சிட்டுத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்க முன்வரவேண்டும் என்று இவ்விருபெருமக்களையும் மற்றும் இசுலாமியப் பெருந்தகை களையும் விரும்பி வேண்டுகிறேன்.

நூல் ஆக்கம்	திரு. ஹஸன் (பதிப்பாசிரியர்)
வகைமை	காவியம்
வெளியீடு	திரு. ஹஸன், சென்னை. (1982)

19

காசிம் புலவர் திருப்புகழ்

திருப்புகழ்

இறைவனையோ அவனருள் பெற்றுச் சிறந்தாரையோ புகழ்ந்து பாடுவது 'புகழ்' என்னும் நூல் வகையதாகும். இது 'திரு' என்னும் அடைமொழி பெற்றுத் 'திருப்புகழ்' எனும் சந்தத் தமிழ் மாலையாகிய அரிய நூலை 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரியார் இயற்றினார். அந்நூலின் சந்தமும் அமைப்பும் அனைவரையும் கவர்ந்ததால் அதனை அனைவரும் விரும்பிப் பயில்வாராயினர். தமிழ்நாட்டில் வாழ்ந்த இசுலாமியப் புலவர்கள் தமிழில் உள்ள பேரிலக்கிய வகைகள் அனைத்திலும் இலக்கியங்கள் படைத்துள்ளனர். அஃதேயன்றிப் *படைப்போர், கிஸ்ஸா, நாமா, மஸ்அலா* முதலிய புதிய இலக்கிய வகைகளையும் தமிழில் தந்துள்ளனர். 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசுலாமியப் புலவரான காசிம் புலவர் அருணகிரியார் யாத்தது போன்றதொரு திருப்புகழை நபிகள் நாயகத்தின் புகழைக் குறித்துப் பாடியுள்ளார். காசிம் புலவர் ஆசிரியரான திருவடிக் கவிராயர், அவருக்கு அருணகிரியாரின் திருப்புகழைப் பாடஞ் சொல்லும்போது "இறைவனருள் புகலும் இவ்விதச் சந்தத் திருப்புகழை வேறு எவராலும் பாடமுடியாது" எனக் கூற, காசிம் புலவர் தாம் அவ்விதம் பாடுவதாய்க் கூறி இந்நூலை யாத்தனர் என்பர். காசிம் புலவரேயன்றி வேறு இசுலாமியப் புலவர் சிலரும் திருப்புகழ் பாடியுள்ளனர். அவையாவன

சந்தத் திருப்புகழ் - அப்துல் காதிறுப் புலவர்.

முகிய்யித்தீன் ஆண்டவர் திருப்புகழ்-சையிது முஹய்யத்தீன் கவிராஜன்.

நவரத்தினத் திருப்புகழ் - அசனா லெப்பை.

ஆதமலைத் திருப்புகழ் - பிச்சை இபுராகீம் புலவர்.

காசிம் புலவரின் திருப்புகழ், கற்போர் இதயத்தைக் களிப்பிலாழ்த்தித் தன்வயப்படுத்தும் தனிச் சிறப்புடையதாய்த்

திகழ்கிறது. அதனாற்றான் காசிம் புலவரின் ஆசிரியராகிய திருவடிக் கவிராயர்,

"வடிகட்டிச் சங்கத்தமிழ்ப் புலவர்எழு வான்கடந்த
முடிகட் டழகர் திருப்புகழ் வாரி முகந்துகொண்டு
படிகட் டுலகப் பரப்பை யெல்லாம்சுற்றிப் பார்த்துவிண்மேல்
கொடிகட்டித் தூவுநல் காசிம் புலவர் கொழுங்கவியே"

என இத்திருப்புகழைப் பாராட்டிப் போற்றியுள்ளார்.

சந்தங்கள்

அருணகிரியார் பாடிய திருப்புகழ் பாடல்களுள் 1300 பாடல்கள் கிடைத்துள்ளன. அவற்றில் 1008 சந்தங்கள் உள்ளன என்பர். காசிம் புலவர் பாடியுள்ள திருப்புகழ் பாடல்கள், 141. அவற்றில், 1, 2, 7 ஆகிய மூன்று பாடல்களும்,

"தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான"

என்னும் ஒரே சந்தத்தில் அமைந்துள்ளன. 88, 129 ஆகிய இரு பாடல்களும் ஒரே வகையான சந்தத்தில் உள்ளன. மீதிப்பாடல்கள் ஒவ்வொன்றும் தனித்தனிச் சந்தத்தில் அமைந்து இனிக்கின்றன. ஆதலின், இந்நூலில் 138 சந்தங்கள் பயின்று வந்துள்ளன.

திருப்புகழ் அமைப்பு

கவிஞர், தம் பாட்டுடைத்தலைவரைப் புகழ்ந்து, தம் பாவச் செயல்களைக் கூறி, அவற்றை மன்னித்துத் தம்மை ஆட்கொள்ளு மாறு வேண்டும் முறையில் ஒவ்வொரு திருப்புகழ்ப்பாடலும் அமைந்திருக்கும். காசிம் புலவர், நபிகள் நாயகத்தின் திருப்புகழை இந்நூலில் பாடியுள்ளார். ஆதலின், இந்நூல் (அ) நபிகள் நாயகத்தின் பெருமை (ஆ) கவிஞரின் பாவச் செயல்கள் (இ) அப்பாவச்செயல்களை மன்னித்துத் தம்மை ஆட்கொண் டருளுமாறு வேண்டுதல் என்னும் மூன்று கூறுகளைக் கொண்டதாய் உள்ளது.

கவிஞர்கள் தம் சிறுமைச் செயல்களாய்க் கூறுவன வெல்லாம் உலகினர் சிறுமைகளேயன்றி அவர் சிறுமைகளாகா. சீரியார் புகழ் பாடும் இக்கவிஞர்களும் சீரியரே! உலகினர் பாவச் செயல்களைச் செய்யக்கூடாது என்பதை வலியுறுத்த அப்பாவங்களையெல்லாம் தாமே செய்ததாய்த் தம்மேலேற்றிக் கூறுவர். இஃது அப்பெரியார்களின் பணிவையும், பிறர் குற்றங்களை நயத்தகு முறையில் சுட்டிக்காட்டும் நாகரிகப்

போக்கினையும் எடுத்துக்காட்டுவதாயுள்ளது. "பணியுமாம் என்றும் பெருமை" என்பது திருவள்ளுவர் வாக்கன்றோ?

நபிகள் நாயகம்

உருவம் பெருமானார் புகழ் பாடும் நூலாதலால் பெருமானாரின் பல்வேறு சிறப்பியல்புகளை இந்நூலுள் நன்கு காண முடிகிறது. பெருமானாரின் திருமேனியழகைக் கவிஞர் பெருமை பொங்கக் கூறிக் களிக்கிறார். கவிஞர் வாக்கிலேயே பெருமானாரைக் கீழே ஓவியப்படுத்தி வரைகிறேன். பெருமானார்,

"சூரியனும் ஒளி மழுங்கும்படியான உருவிலக்கணம் அமைந்தவர்" (திருப்புகழ், பா. 75)

குளிர்ந்த நிலவு போன்ற முகமும், புன்முறுவல் கொண்டுள்ள சிவந்த கனிவாயும்; மென்மையிலும் அழகிலும் தாமரையை வென்றதான சிவந்த கைகளும், சூரியன் போன்று ஒளி வீசும் நெற்றியும், கிளிமழலை, குயிற்பாடல், யாழிசை ஆகியவற்றைச் சிறப்பிழக்கச் செய்யும் இனிய பேச்சும், அரம்பையரும் மயக்கம் கொள்ளும் அழகும் அமைந்தவர் (103, 79).

அவர் மார்பில் குங்கும மாலை கிடந்து சிறக்கும்; குளிர்ந்த, மணமுடைய சந்தன மணம் வீசும் (11).

அவர் தோள்கள் ஒப்புமை கூற முடியாதவை; அத்தோள்களில் கத்தூரி மணங்கமழும் (49).

இறைவனின் முத்திரை பதிக்கப்பெற்று, சுற்றிலும் ஒரு காத தூரம் கத்தூரி மணங்கமழும்படியாய் அவர் தோள்கள் விளங்கின (26).

அவர் திருமேனியின் நிழலும் பாதச் சுவடுகளும் பாரில் படியாத சிறப்பு வாய்க்கப்பெற்றவர் (6).

நீர்த்துளிகளைக்கொண்ட மேகம் அவருக்குக் குடையாய்த் தொடர்ந்து வரும் (11).

பெயர்

பெருமானார் பல்வேறு பெயர்களாலே சிறப்பித்து வழங்கப்படுபவர். அவற்றுள் சிலவற்றைக் கவிஞர் இந்நூலில் எடுத்துரைக்கிறார்.

பெருமானார், அஹ்மது (புகழ்பவர்), முஹம்மது (புகழுக்குரியவர்) எனும் பெயர் பெற்றவர்.

குறைசி குலதிலகம் மதின நகர்தனில்
அரசு புரியும் மஹ்மது முகம்மது நபி இறசூலே (பா. 1)

வெற்றியைக் கொண்ட 'தாசீமோ', அறுஷாளவில் சென்று நடந்த 'யாசீனே', குறுஷிலும் எழுந்தருளிய 'காசீமே' எனத் தாசீம், யாசீன், காசீம் எனும் பெயர்களால் பெருமானாரைக் கவிஞர் விளக்குகிறார் (24).

மஹ்மூது என்னும் யானையின்மீது இவர்ந்து செல்லும் 'மஹ்மூதே' என்றும், இறைவனோடு நேர் முகமாய்ப் பேசி 'ஹபீபு' எனும் பெயர் பெற்றவரே என்றும் பெருமானாரைப் பாராட்டுகிறார்.

சேணாடு சுற்றிவரும் மஹ்மூதே!
கோனோடு உரைத்தருள் கபீபே! (பா. 50)

பெருமை

பெருமானார் பெருமைகளாய் இப்பாடல்களில் உள்ள வற்றைத் தொகுத்தெழுதின் அதுவே ஒரு தனி நூலாகும். 'புகழ் நூல்' என்பதால் அவர்பற்றிய 'புகழ்' மொழிகள் சில மட்டும் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன. நூலுள் ஆழ்வோர் பெருமானாரின் பிற புகழ்மாலைகளையும் துய்த்து மகிழலாம். பெருமானார்,

அறியாமை அகல நேர்வழியில் முன்மாதிரியாய் நடந்து காட்டி வெற்றி கொண்டவர்; வானவரும் உலகினரும் அளவிட்டு நிருணயிக்க அரிதானவர்; அழியும் வகையில் உள்ள சமயங்கள் எனும் இருளுக்குச் சூரியன் போன்றவர் (1).

இறுதித் தீர்ப்பு நாளன்று இறைவன் முன்னிலையில் தம் அடியார்கள் துன்பம் நீக்கி மோட்ச கதி பெறத் துணை செய்பவர் (2).

கடல் வற்றினாலும், மலைகள் இடம் பெயர்ந்தாலும், உலகங்கள் நிலைகுலைந்தாலும், அறிவாளிகள் மார்க்கப் பாதையை விட்டு விலகினாலும், 'லௌகுல் மகுபூல்' பலகையில் எழுத்துத் தவறினாலும் உலகில் உண்மையே பேசுபவர் (7).

உலக முழுவதையும் ஒரு குடையின்கீழ் ஏற்றத் தாழ்வின்றிப் பொதுவாய் ஆட்சிசெய்து காக்கின்ற கருணையின் தலைவர் (9).

நம்பிக்கை வைத்தவர்க்கு அன்பு கொண்டு, அருள் நிறைந்து, இனிய சொற்களைக் கூறிச் சொர்க்க வீட்டைக் கொடுத்துக் காக்கின்றவர் (34).

யூதர்கள் கேட்ட ஆயிரம் கேள்விகட்கும் (மசலாக்கள்) உரிய மறுமொழி தந்தவர் (49).

பலகோடி எதிரிகளும் அடிபணிந்து திரை கட்ட ஏழு லோகங்களையும் கொண்டுவந்து ஆட்சி செய்தவர் (55).

பகைவர்கள் பணிந்து நிற்க அவர்கள் முடிமீது திருவடி களை வைத்து முத்திரை பதிக்கின்ற புகழுக்குரியவர் (58).

அறிவின் எல்லா அறிவையும் அறிந்துகொண்டவர்களும் அறிந்துகொள்ளுதற்கு மிகவும் அரியதான ஒப்பிலாப் பேரொளி யாகிய இறைவனின் அன்பைப் பெற்ற தூதர்; பூமி குளிரும்படியாய் அறிவொளி வீசும் முழு நிலவாயும், அடியவர்களின் மனத்தாமரை மலரப் பேசுகின்ற பகலவனாயும், பல அண்டங்கட்கும் ஒளிவீசிச் சிறக்கும் தீபமாயும் இலங்குபவர் (100).

மக்களின் ஆணவம், கன்மம், மாயை ஆகிய முக்குற்றங்களை யும் அகற்றி அருட்கடலிலே புகச்செய்து, பல்லுயிர்க்கும் முத்தி தரக்கூடிய ஒப்பற்ற வித்தாய்த் தோன்றியவர் (101).

வாள் வீரமும், வளர்ந்துள்ள ஞானமும், எல்லை கடந்து அறிகின்ற தொலைநோக்கும், ஏழைகட்கு வழங்கும் வள்ளன்மை யும், பெரும்புகழும், ஐம்புலன்களை அடக்கி வெல்லும் ஆண்மையும் உடையவர் (18).

பகைவர்களிடத்தே சென்று, மிக்க அன்புடன், கெட்ட குணமுள்ள அம்மக்கட்குச் சிறப்பைப் போக்குகின்ற அழுக்காற்றைச் சுட்டிக்காட்டி, அவர்களின் வெறி கொண்ட பேயாட்டத்தை ஒழித்து, பெருமைமிகு அறவழியையும் மற்றுமுள்ள நன்னெறிகளையும் ஆற்றல் தோன்றும்படியாய்ப் பிரித்தறிவித்துப் பெருமை பொருந்தும்படி நடந்து காட்டியவர்; பெற்ற தாயினும் மிக்க அரிதான அன்புகொண்டு பாதுகாப்புடன் வாழக் குஞ்சுகளை அரவணைக்கும் தாய்ப்பறவைபோல உலக முழுமையையும் காப்பதற்கென வந்த இறைவனின் திருத்தூதர் (137).

இறைவனின் அறிவிப்பை வெளிப்படையாய்ப் பெற்ற முந்நூற்றுப் பதின்மூன்று முறுசலீன்கள் என்னும் தீர்க்கதரிசிகளும், அறிவிப்பை அந்தரங்கமாய்ப் பெற்ற அனைத்து நபிமார்களும் மிகுந்த ஆவல் கொண்டு, தங்கள் ஞானமார்க்கத்தைத் தேர்ந்துகொள்ள விரும்பும் தன்மை கொண்டவர் (141).

மனிதர்கட்கு மனிதத் தோற்றத்தில் வந்துதித்த இறுதி நபி (1).

வேதத்தைக் கொணர்ந்த இறைவனின் திருத்தூதர் (3).

ஓர் எழுத்துக்கூட அறியாமல் இருந்தும் இறைவன் திருவருளினாலே ஜிபுறயீல் வந்து கூறிட, குர்ஆன் என்னும் திருமறை வாசகத்தைத் தெளிந்து, பிரியமாய் உணர்ந்து கொண்டவர் (19).

எழுத்திலே எழுதிக் காட்ட முடியாத சிறந்த வரங்கள் பெற்றவர் (75).

இவ்வாறு பெருமானாரின் புகழ், பண்புநலம் ஆகியன மட்டுமேயன்றி அப்பெருமானாரின் போர்த்திறன், அவர் செய்துகாட்டிய செயற்கரிய செயல்கள், அவருக்கு நபித்துவம் அருளப்பெற்றமை, இளமைப் பருவத்தே நபிக்குரிய இலாஞ்சனை பதிக்கப்பெற்றமை, நபிகள் நாயகத்தின் சொர்க்க உலா, மிஃராஜ் (விண்ணேற்றம்) முதலியவைபற்றியும் பாடல்கள் விரிவாய் எடுத்துரைக்கின்றன. அனைத்துப் பாடல்களிலுமுள்ள பெருமானார்பற்றிய செய்திகளைத் தொகுத்தால் அவை அவரது முழு வாழ்க்கை வரலாற்றை அறியக்கூடிய வரலாற்றுக் களஞ்சியமாயும் இந்நூல் திகழும்.

மார்க்கச் செய்திகள்

கவிதைகளில் மார்க்கச் செய்திகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. மஹ்மூது யானை, துல்துல் குதிரை, பூமியைத் தாங்கும் காளை, சிராத்துல் முஸ்தகீம் பாலம், லௌகுல் மகுபூல் பலகை, வானவர் தலைவர் ஜிபுறயீலின் எழில் தோற்றம், சுவன மாதர் அழகு, சொர்க்க நரக வருணனை, யுகமுடிவு நாள் - இறுதித் தீர்ப்பு நாள்பற்றிய கலிமா விளக்கம், அறுஷ் அமைப்பு போன்ற பல இஸ்லாமிய நெறிச் செய்திகளுக்கு மிகவும் சிறப்பான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

உவமை உருவகம்

கவிதைகளில் இடம் பெறும் உவமை, உருவகங்கள் கவிதைக்கு அணி சேர்ப்பன. காசிம் புலவரின் திருப்புகழும் உவமை, உருவகங்களைக்கொண்டு சிறக்கின்றது.

புலி முழக்கத்திற்குத் தயிர் கடையும்போது உண்டாகும் ஒலியை உவமையாக்கியிருக்கிறார் (101).

வாழைக்கனிக்குப் புலியின் கால் நகத்தை உவமை காட்டுகிறார் (103).

உயிர் பிரியும் வேளையில்,
வேடன் வலைக்குள்பட்ட காகம் போலவும்,
தோண்டப்பட்ட குழிக்குள் வீழ்ந்துவிட்ட யானை போலவும்,
நீர்வளம் அற்றுப்போன பூங்கா போலவும்,
மழைத்துளி காணாத பசிய பயிர்முகம் போலவும்,
இடியோசை கேட்ட பாம்புக் கூட்டம் போலவும்,
இளமையில் வறுமையால் பீடிக்கப்பட்ட மக்கள் போலவும்,

சூறைக் காற்றில் அகப்பட்ட மரக்கலம் போலவும்,
மதுவுண்ட வெறியில் அறிவு மயங்கிய பித்தனைப் போலவும்

மனம் தத்தளிக்குமென உவமைகளையடுக்கிக் கூறியிருப்பது உள்ளத்தைக் கவர்வதாயுள்ளது. அவ்வாறு தத்தளிக்கும்போது பெருமானாரின் பாதக் காட்சி கிட்டுமாயின் அஃது, இனிமையான கவிதைகளைச் சொந்தமாய்ப் பாடுபவருக்கு அருமையான சொற்கள் கைவரப்பெற்றது போன்ற பெருமகிழ்ச்சி ஏற் படுத்துமாம்! கவிதை புனைதற்குரிய சிறந்த சொற்கள் கிடைக்கும் போது கவிஞனடையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் நம்மையும் ஆழ்த்துகிறார் (22).

முன்னையோர் நெறி நின்று உவமைகளைப் படைத்திருப்பது போலவே காசிம் புலவர் உருவகங்களையும் தந்திருக்கிறார்.

நிலத்தைப் பெண்ணாக்கி, பாய்கின்ற அலைகளை அவளுடைய வெண்மையான ஆடையாகவும், பெரிய மலைகளைக் கச்சணிந்த தனங்களாகவும், நிறைந்தோடும் ஆற்றினைப் பருத்த மணி பதித்த மாலையாகவும், வானிலே அலைகின்ற மேகத்தைக் கருமுகிலாகவும் கவிஞர் உருவகம் செய்திருக்கிறார் (102).

சொல்லோவியங்கள்

செய்திகளைப் பாடலில் படிக்கும்போது அவை ஓவியமாய் நம் கண் முன்னே தோன்றுமாறு கவிஞர் புனைந்துள்ள திறம் போற்றுதற்குரியது. சான்றுக்கு ஒன்று : பெருமானார் சொர்க்கத்தில் உலாவியபோது அவரை இவர்ந்து சென்ற யானை பின்வருமாறு வருணிக்கப்படுகிறது

துடிப்பான நடை; சிறிய கண்; பிளந்த பெரிய வாய்; உமிழ்நீர் சிந்துவதும், தூணைப் போன்றதும், துளை கொண்ட பனையை ஒத்ததுமான துதிக்கை; உரல் போன்ற கால்கள்; தழைத்த காதுகள்; மதநீர் சொரிகின்ற கன்னங்கள்; மலை போன்று வளைந்த உடல்; தொங்கும் உதடு; இளம்பிறை போன்ற தந்தங்கள்; அழகுமணிகள் பதிக்கப்பட்ட முகபடாம். இவ்வருணனையைப் படிக்கும்போது அவ்வியானை நம் கண்முன் அசைந்தாடி நடந்து செல்லும் தோற்றம் நிற்கிறதன்றோ? (18). இத்தகு சொல்லோவியங்கள் பல இந்நூலை அணி செய்கின்றன :

இளமையும் உடைமையும் மஞ்சள் வெயிலைப்போல நிலையில்லாதன;
தோற்றத்தின் பெருமை பிறைச்சந்திரனைப் போன்று மாறி வரக்கூடியது;
இயல்பாயுள்ள குணங்கள் தீயில் விழுந்து சாகும் விட்டிலைப் போன்றன;
அழகு, வானவில்லைப் போலத் தோன்றித் துலங்கி மறையக் கூடியது.
உயிரின் நிலைமை, முட்டையிடும் பறவை பறந்து செல்வதைப் போன்றது;
இனிமையான மனம் வெண்மையான கண்ணாடியைப் போன்றது.

வளரும் உடல், நீரில் தோன்றும் குமிழி போன்றது.
செல்வம் பெருவெள்ளத்தில் அடித்து வந்ததைப் போன்றது.

நிலையாமைத் தன்மையைத் தக்க உவமைகள்மூலம் நம் உள்ளத்தே அழுத்தமாய்ப் பதியும்வண்ணம் சொல்லுகின்ற தனித்த பாங்கினை இங்கே நாம் காண்கிறோம் (64).

உருவத் தோற்றமும், முதிராத இளமை அழகும், முதன்மையான நற்குணமும், அறிவு நிறைந்த பொறுமையும் அன்பும் நன்மையும், திருக்குர்ஆனைத் தேர்ந்து பார்க்கின்ற அறிவும் பெருமையும் உண்மையும், அழகாய்ப் பேசுகின்ற நெறிமுறையும், நிறைந்த நாணுடைமையும், நன்னெஞ்சும் நல்வழியிற் சேர்த்த பொருளும், அன்பு செய்யும் இரக்கமும், ஐம்புலன்களின் அடக்கமும், மிக உயர்ந்த குடிமைத்தனமும், மனைவி மக்கள்மீதுள்ள ஆசாபாசங்களும், தாய் தந்தையர் பெருமைகளும் புகழுக்குரியவை எனக் கவிஞர் கூறுவது (86), இத்தகு புகழ் வாழ்வை நாம் பெற வேண்டுமெனும் ஆர்வத்தைத் தூண்டுவதாய் உள்ளதன்றோ?

ஐவகைக் கடமைகளை ஒரு பாடலில் காசிம் புலவர் தொகுத்துத் தருகிறார் (54).

வாக்கிற் கலிமாவை வழங்கிட,
ஏத்திப் பெரியோனை வணங்கிட,
வாழ்க்கைப் பொருளான கடன்கொடை அதுவீச,
வாய்க்கப் பறுலாம் விரதங்களை
ஆட்டைக்கு ஒரு மாதம் முயன்றிட,
வாழ்த்திக் கஃபா வலம் வந்திட....

வாயினால் கலிமாவை ஓதுதல், தினமும் ஐந்து வேளை இறைவனைப் போற்றி வணங்குதல், வாழ்க்கையில் சேமித்த பொருளிலிருந்து ஏழைகட்குக் கொடை (ஜகாத்) கொடுத்தல், கட்டாயக் கடமை என வாய்க்கப்பட்ட நோன்புகளை ஆண்டுக்கொரு முறை ரமலான் திங்களில் நிறைவேற்றுதல், இறைவனை வாழ்த்தியவாறு கஃபாவை வலம் வருதல் (ஹஜ் பயணம்) ஆகிய கடமைகள் இப்பாடலில் வலியுறுத்தப் பட்டுள்ளதை அறிகிறோம்.

கவிஞர் காசிம்

காயல் பட்டினத்தில் வாழ்ந்த ஜலாலுத்தீன் என்பார் மகன் இப்ராஹிம்; இப்ராஹிம் மகன் ஜையினுல் ஆலிதீன்; அவர் மகன் 'காழி நூருத்தீன்'; இந்நூருத்தீன் புதல்வரே காசிம் புலவர். இவ்வரலாற்றைக் காசிம் புலவரே குறிப்பிட்டிருக்கிறார் (141). இவர்

பால், தேன், பாகு போன்றவற்றிற்கு ஒப்பான சொற்களாலான பாடல்களைக்கொண்ட தமிழ் மாலைகளைப் பாட்டிலக்கணம் தவறாமல் பாடக்கூடியவர் என்பதை,

பாலைத் தேனைப் பாகைப் போலொப்
பார்சொற் பாடற் றமிழ்மாலை
பாவிற் சீரிற் போதித் தாசிற்
பாடிப் பாடி.... (பா. 48)

எனும் இவர் பாடலடிகளால் அறிகிறோம். மேலும், அகப்பொருள் கூறும் நூல்களையும், இலக்கணம் கூறும் நன்னூலையும், முதல் நூலான அகத்தியத்தையும் அறிந்து இனிமை நிறைந்த தமிழ் மாலைகளையும் சந்தக் கவிதைகளையும் பாடுகின்ற ஆற்றலாளர் என்றும் (72), அத்துடன் இவ்வுலக எல்லையைக் கடந்து வானளாவும்படியான புகழ் பெறும் பிரபந்தங்களைச் சொல்லுகின்ற இசைவல்லார் என்றும் காசிம் புலவர் தம்மைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் (96).

திருக்குர்ஆன்

திருப்புகழ்ப்பாடல் சந்தத்தில் திருக்குர்ஆனின் பெருமை நம் சிந்தையில் தேனென இனிக்கிறது.

பார்படர் ஞானக் கொழுந்தோ,வல
தூரமு தாகப் பிறந்த தோ,வடி
பாகுறு தேனிற் கனிந்த தோ,நவ ரசமேயோர்
பாரச மூறிச் சமைந்த தோ,நல
சீனியின் வாரிப் பிசைந்த தோ,வடு

பாலொடு கூடிக் கலந்த தோவென மிகையார்கொல் (42) திருக்குர்ஆன் 'இசையார் சொல்' என இனிமையாய் வழங்கப் படுகிறது. இம்மறைநூலை 'உலகிற் படரும் நல்லறிவின் குருத்தோ, அமுதாய்ப் பிறந்து வந்ததோ, பாகிலும் தேனினும் கனிந்ததோ, ஒன்பான் சுவைகளும் ஒரே பாலின் சுவையில் ஊறிச் சமைந்ததோ, சர்க்கரையில் கலந்து பிசைந்ததோ, காய்ச்சிய பாலுடன் ஒன்றாய்க் கலந்ததோ' என இனிமைப் பொருள்களின் கூட்டாய்ச் சேர்த்து நமக்குக் காட்டுகிறார்.

நபிமார்கள்

காசிம் புலவர் நபிமார்கள் பெயரை அவரவர் சிறப்புகளுடன் ஒரு பாடலில் தொகுத்துத் தந்திருக்கிறார் (44).

அ. ஆதி நாளில் இலங்கையிலுள்ள மலைமீது தவம் செய்தவர், ஆதம் நபி.

ஆ. இரந்து வந்தவனிடம் தம்மை விலை கூறி விற்றவர், கிலுறு நபி.

இ. பஞ்ச காலத்தின்போது உணவு நிறைந்த மரவையைத் தந்தவர், ஈசா நபி.

வெள்ளிமீன்கள் வரிசையைக் கண்டு உலகில் நட்சத்திரக் கணக்கை உருவாக்கியவர், இத்ரீஸ் நபி.

உ. வலிய இரும்பை மெழுகாய் இளக்க வல்லவர், தாவூது நபி.

ஊ. கடல் மீனால் விழுங்கப்பட்டவர், யூனுஸ் நபி.

எ. முழு உயர உடலைக் கொண்ட நூறு பேரைக் கொண்ட 'ஆதுக்' கூட்டத்தினரொடு போர் செய்தவர், ஹூது நபி.

ஏ. நூறு ஆண்டுகளாய் உறங்கிக் கொண்டிருந்தவர், உஜைர் நபி.

ஐ. தம் மேனி கொண்ட பிணியினால் உயிர் வருந்தியவர், 'ஐயூப்' நபி.

ஒ. நமுறூதன் என்னும் கொடியவனால் நெருப்புக் குண்டத்தில் வீசி எறியப்பட்டவர், இப்ராஹீம் நபி.

ஓ. ஒன்பது 'தமூதிகள்' தொடர்ந்துவரச் சென்றவர், சாலிஹா நபி.

ஔ. தம் மனைவியால் தம் ஆட்சியை இழந்தவர், சுலைமான் நபி.

க. ஒளி நிறைந்த மண்டலத்தில் இனிதாய்க் குடியிருந்தவர், இல்யாஸ் நபி.

தம் தந்தைக்கு முன்பு, தலை வெட்டப்படுமுன் மறைந்து விட்டவர், கிலுறு நபி.

கி. உலக முடிவுப் பெருவெள்ளத்தில் கப்பலில் மிதந்தவர், நூகு நபி.

கீ. கொடிய எண்ணம் கொண்ட உடன்பிறந்தவர்களால் பாழுங்கிணற்றில் தள்ளி எறியப்பட்டவர், யூசுப் நபி.

கு. தாம் மறைந்து நின்ற மரத்தோடு சேர்த்து அறுக்கப்பட்டவர், ஜக்கரிய்யா நபி.

கூ. நாட்டை ஆண்டுவந்த 'பிர்அவ்ன்' என்னும் கொடுங் கோல்னை எதிர்த்தவர், மூசா நபி.

கலிமா

கலிமா என்னும் மூலமந்திரத்தை ஓதி, அதனை உணர்ந்து நடக்கவில்லையென்றால் ஒவ்வொரு நாளும் ஊஞ்சலின் கயிறு போலவும், தறியிலே பாவினிடையே அங்குமிங்கும் ஓடுகின்ற மரக்கட்டை போலவும், பெருஞ்சூறைக் காற்றிலே அகப்பட்ட ஊர்க்குருவியைப் போலவும், அலை கடலில் சிக்குண்ட துரும்பு போலவும் எல்லை கடந்து எப்போதும் தடுமாறிக் கடைத்தேறும் வழியற்று நரகத்திலே சென்றடைய வேண்டும் என்பது திருமறையின் கட்டளையாகும் எனக் கலிமா ஓத வேண்டியதன் இன்றியமையாமையை அனைவர் மனத்திலும் பதியும்வண்ணம் காசிம் புலவர் எடுத்துரைக்கிறார் (130).

அருள்க

பெருமானாரின் புகழ் பாடுகின்ற கவிஞர், உலகில் தீய செயல்கள் அழிந்து நன்மை தழைக்க வேண்டுமெனப் பெரிதும் விழைகிறார். மக்கள் விலைமாதர் ஆசை மயக்கில் இடறி வீழ்ந்து அழியக்கூடாது; பொய், களவு, காமம், கொலை முதலிய பாவச் செயல்களைக் கனவிலும் கருதக்கூடாது; இளமை, செல்வம், யாக்கை ஆகியவற்றின் நிலை பேறின்மையை உணர்தல் வேண்டும்; பிறர் மனை விரும்புதல், புறங்கூறுதல், கோள் சொல்லுதல், வஞ்சனை வழிகளில் மனத்தைச் செலுத்துதல், நீதி நெறி தவறி நடத்தல், பிறரை மதிக்காத ஆணவப் போக்கு, தீமை நிறைந்த கலைகளைப் பயிலும் வேட்கை, வீண் பெருமை பேசித் திரியும் ஆரவாரப் போக்கு முதலியவற்றிலிருந்து முற்றிலும் விடுபட வேண்டும் எனக் கவிஞர் மனம் விரும்புவதை அவர் பாடல்கள் வழி அறிகிறோம்!

தீமைகளை அகற்றி, நபிகள் நாயகத்திடம் நேசம் கொண்டு நிலையான இறையருளைப் பெறுதலே பிறவிப்பயன் என்பதைக் கவிஞர் நன்கு உணர்த்துகிறார். அவர் பெருமானாரிடம், "நான் எந்நாளும் உங்கள் திருப்பெயரையே போற்றவும், உங்கள் புகழையே பேசவும், திருமறையான திருக்குர்ஆனை ஓதவும், உங்களைப் பற்றியே ஜெபித்திருக்கவும், உங்கள் அடிமையென நிற்கவும், உங்கள் பாதத்தையே போற்றி செய்யவும், இவற்றினாலே என் பாவச் செயல்கள் நீங்கவும், என் பகை இல்லாது அழியவும், குறையாத என் துன்பங்கள் குறைந்து மறையவும், என் வேதனை முழுவடையவும் கடைக்கண் அருள்வீராக" என மனமுருக வேண்டுகிறார்.

நினதுவழி யேநடக்க நினதுபெய ரேவழுத்த
நினதுபுக ழேபடிக்க மறையோதி
நினதுஜெப மேஜெபிக்க நினதடிமை யாகிநிற்க
நினதுபத மேதுதிக்க வதனாலே
யெனதுபவ மேதுடைக்க வெனதுமல மேகெடுக்க
யெனதுபகை யேதுடைக்க வொழியாத
யெனதுகலி யேதடுப்ப வெனதுதுய ரேதணிப்ப
யெனதுவச மேகடைக்க ணருள்வாயே! (பா. 66)

எனப் பெருமானாரை வேண்டி நன்னெறியொழுகும் அருளைப் பெறுதலே இந்நூல் இயற்றப்பட்டதன் நோக்கமாகும்.

சீருரை

காசிம் புலவர் திருப்புகழுக்கு, மணிக்கவி எம். சையது மூஸா அவர்கள் சீரியதோர் உரை எழுதியுள்ளார்கள். ஒவ்வொரு பாடலுக்கும் பொருள் விளக்கப் பதவுரையும், தெளிவான பொழிப்புரையும் தரப்பட்டுள்ளன. எளிய, இனிய, தங்கு தடையற்ற நடையுடன் இவ்வுரைகள் சிறக்கின்றன. காசிம் புலவர் திருப்புகழை உணர்ந்து தெளிய இவ்வுரை பெரிதும் பயன்படும். பாடல்களில் இடம் பெற்றுள்ள மார்க்கச் செய்திகட்கு விளக்கமும், அரபுச் சொற்களுக்குப் பொருளும் அவ்வப்பாடலின்கீழ் தரப்பட்டிருப்பின் இன்னும் சிறப்பாயிருந்திருக்கும். இசுலாமியத் தமிழிலக்கியங்களை அனைவரும் துய்த்துப் பயனுற வேண்டு மெனும் நன்னோக்குடன் பணியாற்றி வரும் 'மீரா ஃபவுண்டேஷன்' இந்நூலை வெளியிட்டுப் பெருமை கொள்கிறது. இத்தகு ஒப்பிலாப் பணியாற்றி வரும் இந்நிறுவனத் தோற்றுநர், 'நச்சினார்க்கினியர்' என நல்லோரால் பாராட்டப்பெறும் திரு.மணவை முஸ்தபா அவர்களைத் தமிழ் இலக்கியவுலகு பாராட்டக்கடமைப் பட்டுள்ளது.

நூல் ஆக்கம்	மணிக்கவி எம். சையத் மூஸா (பதிப்பாசிரியர்)
வகைமை	கவிதைச் சிற்றிலக்கியம்
வெளியீடு	மீரா ஃபவுண்டேஷன், சென்னை. (1989)

20

எரியத் துடிக்கும் திரிகள்

புதுக்கவிதை தமிழிலக்கியத்திற்கு இருபதாம் நூற்றாண்டின் புதுவரவு. மேனாடுகளில் தோன்றி வளர்ந்த புதுக்கவிதை- அறிவியல் வளர்ச்சி, அச்சுக் கருவிகளின் பெருக்கம், தகவல் தொடர்புமுறை முதலியவற்றால் கீழை நாடுகளிலும் பரவலாயிற்று. மரபுகள் கைவிடப்பட்ட மனத்தில் தோன்றியதை மறைபொருளின்றி வெளிப்படுத்த இக்கவிதைகள் கருவிகளாயின. வால்ட் விட்மனையே சுட்டுப்பாடற்ற கவிதைக்கு முன்னோடி என்பர். ஆங்கில இலக்கியத்தில் வால்ட் விட்மன் எழுதிய, 'புல்லின் இதழ்கள்' என்னும் புதுக்கவிதை மிகுபுகழ் பெற்றது. "மேலை நாட்டில் எஸ்ராபவுண்ட் சுட்டற்ற கவிதை இயக்கத்தைத் தொடங்கினார். அவரைத் தொடர்ந்து, டி.எஸ். எலியட்டின், 'பாழ் நிலம்' எனும் கவிதை, நோபல் பரிசு பெற்றதும் புதுக்கவிதைக்கு உலகச் செல்வாக்கு ஏற்பட்டுவிட்டது".[1]

தமிழைப் பொறுத்தவரை பத்தொன்பதாம் நூற்றாண்டில் கவிதை நடையிலும், உரைநடையிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் கருக்கொண்டிருந்த புதுமைகட்கு இருபதாம் நூற்றாண்டில் ஒரு வடிவம் கொடுத்தவர், பாரதியார் ஆவார்.[2] "மேற்கே வால்ட் விட்மனையும், கிழக்கே 'ஹைகூ' கவிதைகளையும் இனங்காண முடிந்த முழுப்பார்வை பாரதிக்கு இருந்தது. நொண்டிச்சிந்து, காவடிச்சிந்து, கிளிக்கண்ணி என்ற எளிய வடிவங்களிலும் இசைகளிலும் கவிதைகளை உருவாக்கிய அவர்தாம், மரபுத் தடத்தில் நின்றவாறே புதுக்கவிதைகட்குப் பாதை அமைத்துத் தந்தார். வசன கவிதை என்று வழங்கப்பட்ட அவரது காட்சிக் கவிதைகளே புதுக்கவிதைகளின் மூல விதைகள் எனலாம்".[3] பாரதியாருக்குப்பின், தமிழில் புதுக்கவிதைப் பயிரை

---

1. தமிழவன், இருபதில் கவிதை, பக். 123-124
2. சாலை இளந்திரையன், பாரதியாரின் மறுமலர்ச்சி எண்ணங்கள் (கட்டுரை), ஆய்வுக்கோவை 13, பக். 54
3. சிற்பி பாலசுப்பிரமணியம், புதுக்கவிதை (கட்டுரை), என்பதில் தமிழ், பக். 41

வளர்த்தவர்களுள் ந. பிச்சமூர்த்திக்குப் பெரும் பங்குண்டு. அவரைத் தொடர்ந்து பலர் புதுக்கவிதைகள் படைக்கலாயினர். 'மணிக்கொடிக் காலம்', 'எழுத்துக் காலம்', 'வானம்பாடி இயக்கம்' எனப் பல்வேறு நிலைகளில் வளர்ந்து புதுக்கவிதைகள் பெருகின. இன்றோ நூற்றுக்கணக்கானோர் தமிழில் புதுக்கவிதைகள் படைத்து வருகின்றனர்.

"தான் எழுதிய புதுக்கவிதைகட்குப் பாரதி 'வசன கவிதை' என்றே பெயரிட்டான். இன்றோ புதுக்கவிதை உரைவீச்சு, உரைநடைக் கவிதை என்று பல்வேறு வகைகளில் இதனை வழங்கி வருகின்றனர். ஆனால், 'புதுக்கவிதை' என்பதே அனைவரும் அறிந்த வழக்காய் இன்று இலக்கிய உலகம் ஏற்றுப் பயன்படுத்தி வருகின்றது" [1] "மரபுக் கவிதையிலிருந்து மாறுபட்ட தொனியும், நடையும் பூண்டிருந்தமையால் புதுக்கவிதை என்று பெயர் சூட்டிக்கொண்டபோதிலும், கவிதைத்துறையில் ஒரு வளர்ச்சிக் கட்டத்தைக் குறிக்கவே இப்பெயர் வழங்கப்பட்டு வருகிறது." [2]

"அடிப்படையில் புதுக்கவிதை என்பது வசனமாய் அல்லது யாப்பை மீறி எழுதவேண்டும் என்பதற்காக மட்டும் தோன்றிய தன்று. உள்ளடக்கப் பொருளுக்கும் அதன் வெளிவடிவத்திற்கும் இருக்கும் தொடர்புபற்றிய கருத்துநிலை வளர்ச்சியே புதுக்கவிதையின் தோற்றத்திற்குக் காரணமாகிறது எனலாம். உள்ளடக்க உணர்வு நிலைகளே கவிதைகளின் வெளிவடிவை நிருணயம் செய்கின்றன என்பது அழுத்தம் பெறும்போது, கவிதையின் வெளிவடிவாய் மரபு கற்றுத் தந்திருக்கிற யாப்பு, வார்த்தைச் சந்தம், எதுகை மோனை முதலிய வடிவ அலங்காரங்கள் சிதைந்து போகின்றன." [3]

தமிழில் புதுக் கவிதைகள் தோன்றியபோதே, "இலக்கணம், யாப்பு இல்லையே! எதற்கும் கவலைப்படாமல், எதையும் எப்படி வேண்டுமானாலும் சொல்லும் இவை கவிதையாமா?" என்பன போன்ற வினாக்கணைகள் தொடுக்கப்பட்டன. அவற்றிற்கான விடைகளைப் புதுக்கவிஞர்களும், திறனாய்வாளர்களும் அவ்வப்போது கூறி வந்துள்ளனர். கவிதை, சமுதாயத்தைப்

1. இரா. இரகுபதி, புதுக்கவிதை(கட்டுரை), எண்பத்திரண்டில் தமிழ், பக். 89
2. சிற்பி, மேலது, பக். 43
3. இந்திரா நிர்மலகுமாரி, தமிழ்ப் புதுக்கவிதையில் குரல்வழி வடிவம் ஓர் அறிமுகம் (கட்டுரை), எட்டாவது கருத்தரங்க ஆய்வுக் கோவை (தொகுதி 1), பக். 38

பிரதிபலிக்கக்கூடியதாய் இருப்பதால், அதன் உள்ளீடு காலத்திற்குக் காலம் மாறுபடும் ஒன்றாகும். கடவுள், மதம், விதி, இயற்கை வருணனை, நீதி கூறுதல் முதலிய பழமைச் செய்திகளையே திரும்பத் திரும்பக் கூறாமல், சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளை, வாழ்க்கை அவலங்களைப் பல்வேறு கோணங்களில் எடுத்துக்காட்டுவதைப் புதுக்கவிதைகள் உள்ளீடாய்க் கொண்டு விளங்குகின்றன.

கவிதை எப்படியிருக்கிறது என்பதைவிடக் கவிதை என்ன சொல்லுகிறது என்பதே முக்கியம். உள்ளத்தே தோன்றும் உயரிய உணர்வுகளை எழுத்துகளில் உலவ விடுபவரும் உண்டு; கண்டதை எழுதிக் காகிதத்தை நிரப்புபவர்களும் உண்டு. மரபுக் கவிஞராயினும் புதுக் கவிஞராயினும் முதல் வகையினரையே நாம் கவிஞர் என ஏற்க முடியும். எனவே, "புதுக்கவிதையை எதனுடைய எதிர்ப்பாகவோ அல்லது மீறலாகவோ கருதவேண்டியதில்லை. காலத்தோடு ஒட்டிய இயல்பான மொழி வளர்ச்சிக்குத் தேவையான பரிணாம வளர்ச்சியே" [1] எனக் கொள்வதே பொருத்தமாம்!

இன்றுள்ள புதுக்கவிஞர்களுள் முன்வரிசையிலுள்ளவர் களுள் நண்பர் 'கி.சு. கிருஷ்ணசாமி' ஒருவராய்த் திகழ்கிறார். அவரது 'எரியத் துடிக்கும் திரிகள்' என்னும் இந்நூலிலுள்ள அனைத்துக் கவிதைகளும் பொருட்செறிவுடன் அமைந்து சிறக்கின்றன. தீமைகள் அகலவேண்டும், மனித குலம் முன்னேற வேண்டும், பகுத்தறிவு பரவ வேண்டும், இலட்சிய வாழ்வு மலர வேண்டும் என்பனவே அவர் நோக்கங்களாய் விளங்குகின்றன. "பழமையை மீறியவர்கள் பகுத்தறிவுப் பிரதேசத்தின் ஆட்சியாளர்கள்; சிந்தனையைத் தூண்டும் செஞ்சொல்லாளர்கள்; பொதுநலச் சூரியனின் கதிர்கள் ஆனவர்கள்; முற்போக்கு வாதிகள்" [2] எனப் புதுக்கவிஞர்களைச் சிறப்பிக்கும் இவர் கூற்றுக்கு, இவருடைய இந்நூல் சிறந்த எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது.

இன்றைய சமுதாயத்திற்குத் தேவையான கருத்துகளை உறுதியுடனும் தெளிவுடனும் இந்நூலில் கவிஞர் எடுத்தியம்பு கிறார். தீண்டாமையாம் நச்சுணர்வை அடியோடு விலக்கி, மனித நேயத்திற்கு மாலை சூட்ட மக்களை அழைக்கிறார்.[3] பாமரர் களைப் பகுத்தறிவுத் தேரிலேற்றிப் பாருக்கழைத்து வந்து,

---

1. வல்லிக்கண்ணன், விதி (புதுக்கவிதைத் தொகுப்பு), முன்னுரை
2. இந்நூல், பக். 19-20
3. மேலது, பக். 35

அவர்களும் சீருற்ற மனிதர்களாய்ச் செருக்கோடு வாழ்ந்திட வழியமைத்துத் தருமாறு வற்புறுத்துகிறார்.[1] சோம்பலை உதறிடும் நாள்தான் மனிதன் உயரத் துவங்கும் உயிர்நாள்[2] எனும் உண்மையை உணர்த்துகிறார். சரித்திரம் தேடுவது, நமது சோதனை களையல்ல, சாதனைகளைத்தான்[3] என்பதை விளக்கிச் சரித்திரத் தேடலில் நாம் இடம்பெற வேண்டுமென்பதை எடுத்துரைக்கிறார். தோல்வியைத் தூக்கிலிட்டு வெற்றிக்கு மாலையிடும் தத்துவமாய்;[4] இளைஞர்கள் விளங்க வேண்டுமென ஊக்கப்படுத்துகிறார். சாதிப்புதர்களை இரும்புச் செருப்பணிந்து சமாதியாக்க வேண்டுமெனப் போர்க்குரல் எழுப்புகிறார்;[5] 'மீண்டும் அந்தச் செடியைப் பூக்கவிட வேண்டும்"[6] எனக் கைம்மையைக் களைந்து மறுமணத்திற்குப் பரிந்துரை செய்கிறார். கணவன் குற்றமற்றவன் என்பதைக் காவலன் முன் பொங்கியெழுந்து மெய்ப்பித்த கண்ணகி பிறந்த நாட்டில், இன்று பெண்கள் வரதட்சணைக் கொடுமையால் நெருப்பிட்டுக் கொளுத்தப்படுவதறிந்தும் பெற்றோர்கள் வாய்மூடி மௌனிகளாய் இருப்பதேன்[7] எனப் பொங்கியெழுகிறார். ஏழை, விடியலின் விலாசத்தை என்றுமே தேடிக்கொண்டேயிருக்க வேண்டுமா, அவனுக்கு மட்டும் விடியலே இல்லையா?[8] என ஏங்குகிறார். இவ்வாறாய் நூலின் ஒவ்வொரு பக்கமும் இன்றைய சமுதாய நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

நயத்துடனும் கருத்து வளத்துடனும் கி.சு. கிருஷ்ணசாமியின் கவிதைகள் சிறக்கின்றன. சாக்ரடீசு ஓயாது படிப்பவர் என்பதை -

ஒய்வுதர மறுக்கிறார்
என்று
நூலகங்கள்கூட அவரை
நொந்து கொண்டன.[8]

என நயம்படக் கூறுகிறார். சிந்தனைச் சிற்பி ஜீவா, சிறைக்கு அஞ்சாதவர் என்பதை விளக்க ஜீவாவை,

---

1. இந்நூல் பக். 37
2. மேலது, பக். 53
3. மேலது, பக். 69
4. மேலது, பக். 85
5. மேலது, பக். 77
6. மேலது, பக். 74-75
7. மேலது, பக். 18
8. மேலது, பக். 41

சிறைச் சாலைகளையே
'சின்ன வீடு'களாக்கிக் கொண்ட
சிற்பியே !'

என விளித்துச் 'சின்ன வீட்டிலே' ஒரு சிங்காரத்தைக் கூட்டி விடுகிறார்.

கவிஞனுக்கு ஓர் இலட்சியம் இருந்தாக வேண்டும்.

என் இதய நிலத்தில்
ஜீவனுள்ள சிந்தனை விதைகளை வளர்த்து
அந்த நிழலில்தான் நான்
இந்தச் சமூகத்தை
இளைப்பாற வைத்து
ஏற்றம் கற்பிக்கப் போகிறேன் [2]

– இதுவே கவிஞர் கி.சு. கிருஷ்ணசாமியின் இலட்சியக் குரலாம்.

எவன்
தனது இதய நிலத்தில்
இலட்சிய விதைகளைப்
பயிர் செய்கிறானோ
அவனே
வெற்றிக் கதிர்களின்
விளைச்சலைக் காண்பான்! [3]

என்பது கவிஞரின் அசைக்க முடியாத நம்பிக்கை. ஆதலால், இவரும் தம் இலட்சியத்தில் வெற்றி காண்பார் என்பதிலும்,

நிச்சயம்
எங்கள் நாட்களுக்கு
நரை விழுமுன்
சமூகத்தின்
மயக்கக் காண்டத்தை முடித்து
மறுமலர்ச்சிக் காண்டத்தைப்
பாடி மகிழ்வோம்!
வெற்றியைச்
சூடி மகிழ்வோம்! [4]

எனப் பாடும் இக்கவிஞர், மறுமலர்ச்சி கண்டு மகிழ்ச்சிக் கூத்தாடுவார் என்பதிலும் நமக்கு ஐயமில்லை! மறுமலர்ச்சியைத் தோற்றுவித்து, மகிழ்ச்சிக் கூத்தாடவிருக்கும் கவிஞருக்கு மனமார்ந்த பாராட்டுகள்!

---

1. இந்நூல் பக். 44
2. மேலது, பக். 27
3. மேலது, பக்.
4. மேலது, பக்.

வளர்ந்து வரும் விஞ்ஞான முறைக்கேற்பத் தமிழ் எழுத்துகளில் முதற்கட்டத் திருத்தம் செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அத்தகு திருந்திய எழுத்துகளில் இந்நூல் அமைந்திருப்பின் மகிழ்ந்திருப்பேன். இனி வெளியிடப்படும் நூல்களில் திருந்திய எழுத்துகளை இவர் மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் கி.சு. கிருஷ்ணசாமியின் கவிதைத்திறம் வளர்க! வாழ்க!

நூல் ஆக்கம்	கவிஞர் கி.சு. கிருஷ்ணமூர்த்தி
வகைமை	புதுக்கவிதை
வெளியீடு	சூரியா பதிப்பகம், சென்னை.' (1986)

21

கனவுக் குதிரைகள்

மேத்தாவின் கவிதைகள், முன்னுரை வேண்டா நுண்ணுரைக் கவிதைகள்!

முழு அழகும் மொய்த்துள்ள அவர் கவிதைகட்கு அணிந்துரை என்னும் புனைந்துரையும் தேவையில்லை.

ஆவேசம் நிறைந்த அவர் கவிதைகள் ஆய்வு எல்லைக்கு அப்பாற்பட்டவையாதலின் ஆய்வுரையும் வேண்டியதில்லை.

இயற்கை அழகின் முடிப்பான தலைவிக்குப் புது அழகு சேர்த்துவிட முடியாதென்றாலும், தோழியர், தம் மனநிறைவுக்காக அவளுக்கு அணிமணிகள் பூட்டிப் பார்ப்பதுபோல, கவிஞரிடம் நான் கொண்டுள்ள நட்புரிமை காரணமாய்ச் சில சொற்கள் கூறுகின்றேன். அவ்வளவே!

ஆகவே, இஃது அணிந்துரையுமன்று, ஆய்வுரையுமன்று; அன்புரை, தோழமையுரை எனலாம்.

✡ ✡ ✡

மேத்தாவின் எழுதுகோலில் இருப்பது மனமயக்கம் செய்யும் மது அன்று; மக்கள் அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர்! அந்தக் கண்ணீரால்தான் அவர் எழுத்துப் பூக்களை மக்களின் மனத்தாள்களில் பதிவு செய்கிறார்.

நூலின் தலைப்போ, 'கனவுக் குதிரைகள்;' அவர் எழுத்தோ நனவுக் குதிரைகள்.

அவர் எழுத்து, கால வெள்ளத்தால் கரைந்து போகின்ற மண் குதிரை அன்று; களம்பல சுழன்று வெற்றி மேல் வெற்றி தேடித் தந்த அலெக்சாண்டரின் குதிரையான 'பியூசிபேலஸ்' போன்று வரலாற்றில் நிலைத்து நிற்கும் புகழ் கொண்டது.

என்றோ எங்கோ நடந்த பயனற்ற செய்திகளில் சிந்தனை செலுத்தி, அவற்றைப் பாடத் தம் அறிவையும் காலத்தையும் செலவிடுகின்ற கவிஞர் அல்லர், மேத்தா! நாட்டை அழுத்தியுள்ள நிகழ்காலப் பிரச்சினைகளை அலசி, ஆராய்ந்து, தம் மனத்தில்

பட்டதை 'வெட்டொன்று துண்டிரண்டென' உரைக்கின்ற எழுச்சிக் கவிஞர்!

அயோத்திக் கோயில்கள், காவிரி நதிநீர்ப் பங்கீடு, வளைகுடாப் போர், சோவியத் ஒன்றிய உடைப்பு, அரசுத் தொட்டில் ஆகிய நிகழ்காலப் பிரச்சினைகள்பற்றிய மேத்தாவின் எண்ண வெளிப்பாடே இந்நூல்.

மதம், தாயாய் இருந்து அன்பு செலுத்தினால் போற்றலாம்; பேயாய் மாறி வெறித்தனம் கொண்டால் நொறுக்கத்தானே வேண்டும்! பாலாய் இருந்து உயிர் வளர்ப்பதானால் அதை ஏற்கலாம்; நஞ்சாய்த் திரிந்து உயிர் மாய்ப்பதாயின் உதைத் தெறியத்தானே வேண்டும்! அடங்கிப் பணி செய்யும் யானை யானால் அணுகலாம்; மதம் கொண்டு அழிவு செய்யுமாயின் அங்குசத்தால் குத்தி அடக்கத்தானே வேண்டும்!

மதாபிமானம்
இருக்கட்டும்....
கூடவே கொஞ்சம்
மனிதாபிமானமும்
இருக்கட்டும்...

மேத்தாவின் இம் 'மேன்மை அடிகள்' மக்கள் மனத்தில் இடம் பெற்றிருக்குமாயின், அயோத்திப் பிரச்சினையால் நாட்டின் மானம் காயப்பட்டிருக்காதன்றோ?

தீமையைத் தூண்டிவிடுபவர்கள், சாமர்த்தியமாய்த் தாங்கள் ஒதுங்கிக்கொண்டு, அத்தூண்டுதலுக்காளாகிச் செயற்படு பவர்களை அழிவுக்குள்ளாக்கிவிடுகிறார்கள். இவ்வுண்மையை அரிய ஓர் உவமையால் மேத்தா விளக்குகிறார்.

திரிகள் மட்டுமே
கருகிக் கொண்டிருக்கின்றன;
தூண்டு கோல்கள்
சுகமாகத்
தூங்குகின்றன.

'சுடர் விளக்காயினும் நன்றாய் எரிந்திடத் தூண்டுகோல் ஒன்று வேண்டும்' என்று கேட்டுப் பழக்கப்பட்ட நமக்கு, மேத்தாவின் 'தூண்டுகோல்' புதிய சிந்தனையைத் தூண்டிவிடுகிறது.

காவிரி நதிநீர்ப் பங்கீடுபற்றிய தீர்ப்பின்போது பங்காரப்பா ஆடிய ஆட்டம் கொஞ்சநஞ்சமா? "அசோகச் சக்கரத்தின் கடையாணி கன்னடியர்களால் கழற்றப்பட்டது. நரசிம்மம் இருந்தது; ஆனால், அவதாரமெடுத்து அக்கிரமக்காரர்களை அழிக்கத் தவறிவிட்டது" எனக் குற்றம் சாட்டுவதோடு,

கர்நாடகத்தில்
எரிக்கப்பட்டது
தமிழர்களல்ல...
இந்திய ஒருமைப்பாடு!
சாம்பலானது
மனிதப் பண்பாடு!

எனப் பொங்கல் நாளன்று பாடிய இப்பாடலில் மேத்தா பொங்கியெழுகிறார்! சரியான அளவில் நீர் தெளித்தால்தான் பொங்கல் அடங்கும்.

ஒரு பொருளின் வெவ்வேறு நிலைகளைச் சுட்டிக் கருத்து விளக்கம் தரத் தனித் திறமை வேண்டும். புலமை நலம் நிறைந்தவர்களே கவிதையில் இதைச் செய்ய முடியும்.

நீர்மேல் குமிழி, அலை, எழுத்து ஆகியவை கொண்டு 'நிலையாமை'யை விளக்குகிறார், குமரகுருபரர். இரு பசுக்களைக் கொண்டு 'இசங்களை'யெல்லாம் எடுத்துக்காட்டுகிறார், பாவேந்தர் பாரதிதாசன்.

இப்பெருங்கவிஞர்கள் வரிசையில் வைத்து எண்ணப் படுகின்ற கவிஞர் மேத்தாவோ, பதிவு செய்யப்பெற்ற அஞ்சல், உள்நாட்டு அஞ்சல் உறை, அஞ்சல் அட்டை ஆகியன கொண்டு ஸ்டாலின், குருச்சேவ், கோர்ப்பசேவ் காலத்திய சோவியத் பூமியின் நிலையை உள்ளங் கொள்ளைகொள்ளும் முறையில் விளக்கியிருக்கிறார். இதே முறையில் கடிகாரம், காலண்டர் ஆகியன கொண்டு இந்திய நாட்டுத் தலைவர்களையும் தொண்டர்களையும் சுட்டியிருப்பதும் நம் சிந்தனையை அள்ளுகின்றது.

''அவர் சொன்னார்; இவர் சொன்னார்'' என்று அரண் அமைத்துப் பதுங்காமல், ''எவர் எப்படிச் சொல்லியிருந்தால் எனக்கென்ன, என் கருத்து இது'' என்று எடுத்தியம்பும் துணிச்சல் மிக்க கவிஞராய் மேத்தா விளங்குகிறார்.

''அரசுத் தொட்டிலில் குழந்தைகளைப் போடுவதும், அவற்றை எடுத்து அரசு வளர்ப்பதும் நாட்டின் ஆரோக்கியத்திற்கு நல்லதன்று'' என்று மேத்தா கடுமையாய் விமரிசிப்பதோடு, ''கொலைகாரர்களைப் பிடித்துக் கூண்டில் ஏற்றுவதை விட்டு, பொறுப்பைத் தட்டிக் கழிப்பவரைத் தட்டிக் கொடுப்பதா?'' எனக் குமுறுகிறார்.

அரசாங்கத் தொட்டிலில்
குழந்தை கிடப்பது

திட்டத்திற்குக் கிடைத்த
வெற்றியாய் இருக்கலாம்..
தேசத்திற்குக் கிடைத்த
வெற்றியாகுமா?

என்றும் கேட்கிறார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், "கொள்கை என்பது நாம் இடையில் உடுத்தும் ஆடை. பதவி என்பதோ மேலே போட்டுக் கொள்ளும் துண்டு" என்பார். துண்டினை எந்த நேரத்திலும் உதறியெறியலாம்! ஆனால், உடுக்கையை இழக்க முடியுமா?

அண்ணாவின் ஆழமான இக்கருத்துப்போக்கில் இன்னும் புதுமையான முறையில் மேத்தாவிடமிருந்து ஒரு கவிதை வெளிப்படுகிறது. சோவியத் ஒன்றியம் உடைந்தபோது உள்ளம் உடைந்த கவிஞர் மேத்தா,

சட்டையில் அழுக்கிருந்தால்
வெளுத்துப் பார்க்கலாம்!
கொளுத்திப் பார்க்கலாமா?

எனக் கேட்பது மிக ஆழமான சிந்தனை வெளிப்பாடாகும்.

எதுகை, மோனை, இயைபுத் தொடைகள் போன்ற 'இலக்கணக் கிறுக்கல்களே' கவிதையாகிவிட முடியாது என்பதைப் 'பழைய பல்லவி' என்ற பாட்டு மிக அருமையாய் விளக்குகிறது.

பழையது என்பதாலேயே எல்லாவற்றையும் தூரத் தூக்கி எறிந்துவிட வேண்டுமென்பதுமில்லை. மரபுவழிச் சிந்தனைகள், கற்பனைகள் முதலியவற்றை இன்றைய நிலைக்கேற்ப எடுத்தாண்டு அழகு சேர்க்க முடியும் என்பதையும் மேத்தா நிறுவிக் காட்டுகிறார்.

விண்ணில் கொடி ஆடுவதை, ஞாயிற்றின் வெப்பம் உதயணனைச் சுடாது ஆற்றுவிப்பதுபோல இருக்கிறது என்பார், பெருங்கதை ஆசிரியர் கொங்குவேள். மேலும், அசையும் கொடிகள் விசும்பினைத் துடைப்பன போன்றிருப்பதாகவும் அவர் கூறுவார்.

எடுத்த பூங்கொடி இருங்கண் விசும்பகம்
துடைப்ப போல நடுக்கமொடு நடுங்க

என்பது கொங்குவேள் கூற்று. அதே சிந்தனையை மேத்தா புதிய முறையில்,

பறவைகள்
பறக்கின்ற தென்றா
சொல்கிறீர்கள்?
இல்லை;
காற்றில் படிந்துள்ள

தூசியைச் சிறகால்
துடைத்து விடுகின்றன

எனப் பாடி நயம் சேர்க்கிறார்.

அங்கத உத்தி கவிஞரிடம் அநாயாசமாய் வந்து விழுகிறது. 'மனதில் உறுதி வேண்டும்' என்பார், பாரதியார். தமிழினத்தின் மன உறுதியைப்போல் உலகில் வேறெந்த இனத்திலும் காண முடியாது என்கிறார், மேத்தா! ஆம்!

தமிழினமே... தமிழினமே
உனக்கு மட்டும்தான்
உள்ளத்தில் உறுதிஉண்டு
ஊர் ஊராக
உதைபடுவதற்கு!

இந்த அங்கதச் சாட்டையடியாவது தமிழினத்தின் மானத்தைக் காக்க அவர்கள் மனத்தை உறுதியாக்காதா?

'ஒரு வாரப் போர் நிறுத்தம்' என்னும் கவிதையிலும் அங்கதச் சுவையைக் கவிஞர் திறம்பட ஆண்டிருக்கிறார்.

'என்றும் என் கவிதையில் வாழ்ந்துகொண்டே இருப்பேன்' என்ற தன்னம்பிக்கை மிக்க கவிஞராய் மேத்தா விளங்குகிறார்.

ஆமாம்!
இறந்து போனால் கூட
எனக்கு
விடுமுறை நாள் எது?
என் கவிதைகளில்
நான்
இருக்கும் போது?

இந்த 'நான்' என்ற புகழ்ப்பெயரைப் பெற அவர் உழைத்த உழைப்பு கொஞ்சமா? அயராமல் உழைத்ததால் அடைந்த பெயர்!

கடைசி வரை நான்
காப்பாற்ற வேண்டுமே
என்றுதான்
கவலைப்படுகிறேன்.
இதை...
எதை...?
என்
பெயரை.

கவிஞரின் கையில் பேனா இருக்கிறது. அதில் 'உண்மை' ஊற்று ஓடிக்கொண்டே இருக்கிறது. எனவே, காயப்படாமலும், சேதப்படாமலும் என்றும் இந்த 'நான்' நிலைத்து நிற்கும் என்பதற்கு இந்த நூலே சாட்சி.

'கனவுக் குதிரைகள்' மனித நேயப் பண்புகளை வெளிப்படுத்துகின்ற அரிய படைப்பு. மிகச்சரியான வேளையில் இந்நூல் வெளி வந்துள்ளது.

'இன்னொரு நவகாளியை இந்தியா தாங்குமா?' என்பது போன்று மேத்தா இந்நூலில் எழுப்பியுள்ள கேள்விகள் இந்தியன் ஒவ்வொருவரின் உள்ளத்தேயும் இடம் பெற்றால், அவற்றிற்கு உரிய விடைகள் காணப்பட்டால் அன்புப் பிணைப்பை அசைக்கும் அயோத்திகள் தோன்றா! தண்ணீர் கேட்டதால் கேட்போரின் குருதியையே கொட்டி, 'குடி' என்று சொல்லும் 'பங்காரப்பாத்தனங்களும்' தோன்றா!

குடியிருப்போரே, காரணமின்றி வீட்டை இடிக்கும் கொடுமையும் தோன்றாது! புல்லும் கொள்ளும் கொடுப்பவர் களையே எட்டி உதைக்கும் குதிரைக் கொழுப்புத்தனமும் தோன்றாது! 'சித்ரா'க்களைக் கைவிட்டு ஓடும் குணசேகரன்கள் தோன்றமாட்டார்கள்! முகவரியில்லாத கடிதங்களுக்கெனத் தனித் தபால் பெட்டிகள் வைக்கப்படமாட்டா!

என்பெயர் தமிழன்
என்இனம் தமிழினம்
என்மொழி தமிழ்மொழி
என்வழி தமிழ்வழி

என்னும் முழக்கம் எங்கும் ஒலிக்கும்.

கவிஞர் மேத்தாவின் உரத்த சிந்தனைகளே நூலின் உள்ளடக்கமாய் இருக்கிறது. கவிஞர் தூங்காது எழுதியுள்ள அவர் எழுத்துகள், தூங்கிக் கிடக்கும் தமிழினத்தைத் தட்டியெழுப்பிப் புதியதோர் உலகு காணப் புறப்படச் செய்யும்.

சொற்கள் கவிஞரை ஆட்சி செய்யவில்லை; சொற்களை அவர் ஆளுகையோடு ஆட்சி செய்துள்ளார். அதனால் அச்சொற்கள் நம் நெஞ்சங்களையெல்லாம் ஆட்சிசெய்கின்றன. இனியும் ஆட்சி செய்யும்!

நூல் ஆக்கம்	கவிஞர் மு. மேத்தா
வகைமை	புதுக்கவிதை
வெளியீடு	திருமகள் நிலையம், சென்னை–17. (1992)

22

விடியல் விழுதுகள்

கவிஞர் எழுவரின் பாடல்தொகுப்பாய் 'விடியல் விழுதுகள்' வெளிப்படுகிறது. ஏழு வண்ணங்கள்கொண்ட வானவில்போல கவிஞர் எழுவரின் பாடல்கள் கொண்ட இந்நூல் அறிவுக்கு ஒளி சேர்க்கிறது. வளர்ந்துவரும் இளங்கவிஞர்கள் ஒன்றுசேர்ந்து நூல் வெளியிடுகின்ற இம்முயற்சி பெரிதும் பாராட்டுக்குரியது.

கவிஞர் மீனாசுந்தர் : "நம்பிக்கையோடு நடைபோடு, பாதை தானே தெரியும்" என நம்பிக்கை ஒளியூட்டுகிறார்.

பறக்க முடியாத போது
பறவைகளுக்குச்
சிறகுகளும் சுமைதான்.

"மாப்பிள்ளை வீட்டார் வயிறு புடைக்கத் தின்பார்கள்; பிறகு, பொன் கேட்பார்கள்; பொருள் கேட்பார்கள்; ஆனால், பெண்ணைத்தான் கேட்க மாட்டார்கள்" என்று சொல்வதில்தான் எவ்வளவு உண்மை!

கவிஞர் வே. கணேசன் : "இருட்டிலே உழலும் இந்தியத் தோழர்க்கு விடியலைக் காண்பிக்கும் விழுதுகள் நீங்கள் அல்லவா?" என ஊக்கமூட்டிச் செயலாற்றத் தூண்டுகிறார். "சிவப்பு விளக்குச் சீதைகள்" என்னும் தலைப்பில் விலைமாதை,

பொய்யை மூலதனமாக்கிப்
பிழைப்பை நடத்துவோர்களிடையே
மெய்யை மூலதனமாக்கி வாழும்
எங்கள் வாழ்க்கை எவ்வளவோ மேல்!

...எனப் பேசவைக்கிறார். பொய், மெய் ஆகிய சொற்களை கவிஞர் ஆண்டுள்ள திறம் போற்றும்படியாய் உள்ளது.

காதலிக்காகக் காதலன் நீண்டநேரம் காத்திருக்கிறான். அவள் வந்ததும், "உங்களைக் காக்கவைத்துச் சிரமப்படுத்திவிட்டேன்," என அவள் கூற, அவனோ,

உன்னை ஒன்று கேட்கிறேன்!
இமைப்பதினாலா
விழிகள்
இளைத்துப் போய்விடும்?

என்று கேட்கும் *ஆ.க. ரமேஷின்* கவிநலம் நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. "விழுதுகள் இறங்கி மண்ணில் ஊன்றினால் மரங்கள் தழைக்கின்றன! ஆனால், வியர்வை விழுதுகள் தரையை நனைத்தும் இந்த மனித இனங்கள் புதைந்துகொண்டல்லவா இருக்கின்றன" என அவர் மனம் புகைகிறது.

கவிஞர் கருங்குழி பன்னீர்மணி இவர் உருவகங்கள் உள்ளம் கவர்வனவாய் அமைந்துள்ளன. இவர், கவிஞன்,

காகித வயல்களில்
கருத்துச் சாகுபடி செய்யும்
விவசாயி

என்றும், "பேனாக் கத்தியால் பிரச்சினைப் புண்ணை அறுவை செய்யும் மருத்துவன்" என்றும் குறிப்பிடுவது நயமாய் உள்ளது. மீசையை "ஆடவர் வாலிபப் பந்தலை அலங்கரிக்கவந்த வரவேற்புத் தோரணம்" என்று கூறுவது சிறப்பாய் உள்ளது.

சமாதானம் தேவைதான். ஆனால், சமாதானத்தையே அழிக்கச் சமாதானம் இடம் தந்துவிடக் கூடாது.

சமாதானமே....
நீ பசுதான்!
உனக்குக் கொம்புகளிருப்பதை
மறந்து விடாதே!

என்கிறார், கவிஞர் *இமையோர் தலைவன்*. வரதட்சணைக் கொடுமையை பெண் ஒருத்தியின் வாயிலாய் "கணவனுக்கு மனைவியானேன். மாமிக்கோ புதையலானேன்" எனக் கூறுவதும், மழை பெய்தாலும், புயலடித்தாலும் இயற்கையின் சீற்றத்துக்குப் பலியாகி அல்லலுறுபவர்கள் ஏழையர்கள்தாம் என்பதை "ஏழையைக் கண்டால் இயற்கைக்குக்கூட இளக்காரம் போலும்" எனக் கூறுவதும் இவரது ஆழ்ந்த சிந்தனையைப் புலப் படுத்துகின்றன.

"இளைய இரத்த நரம்புகளே! புதிய பாதையைக் கண்டெடுப்போம்! நம் விழிகள் தீபமாய்த் திசையெங்கும் சுடரட்டும்" என இளைஞருலகை உற்சாகப்படுத்துகிறார், கவிஞர் *புதுமை தாசன்*. ஏழ்மை அவர் நெஞ்சைப் பிழிகிறது.

ஏழைகள் வயிறு
உணவின் முகவரியை
என்று மறந்ததோ?

என ஏங்குகிறார். விடியலை யார் இருளிடம் ஒப்படைத்தது என்னும் வினா மூலம் விடியலையே இருளாக்கும் விந்தை நிகழ்ச்சி நடந்துகொண்டிருப்பதனைச் சாடுகிறார். "இளம்பிறையே! உன் ஏழ்மையைக் கண்டு நீ வருந்தாதே! உன்னுள்ளேதான் பூரணச் சந்திரன் புதைந்து கிடக்கிறான்" என்கிறார், கவிஞர் இக்பால். இதே முறையில் கவிஞர் புதுமைதாசனோ, "வெளியில் வா! உனது சுடர் முகத்தைக் காட்டு! விடியல் உனக்காக வைகறையைத் தக்க வைத்துக்கொண்டிருக்கிறது" என்கிறார்.

கவிஞர் சூரம் துரை,

துயரே உனக்கு வந்திடும் போதும்
துணிவோடு செயற்பட வேணும்

என்று துணிச்சல் ஊட்டுகிறார்.

"எதையும் நினைத்து மயங்காதே; எதிர்நீச்சல் போடவே பயப்படாதே" என உள்ள உறுதியூட்டுகிறார். "தீக்குச்சியால் சோறு வேகாது" எனும் இவர் கவிதையடி சிந்தனைக்கு விருந்தாகிறது.

இளங்கதிர் கிழக்கில் எழுகிறது. இருளெல்லாம் எங்கோ மறைகிறது! இதோ! இங்கு விடியல் விழுதுகள் வறுமை இருளை ஓட்டி வளம் நிறைந்த வாழ்க்கைத் தரையில் ஊன்றுகின்றன. ஆலின் விழுதுகள் பல்லுக்குறுதி என்பர், சான்றோர். இவ்விடியல் விழுதுகளோ மனதுக்குறுதி என நாம் மகிழ்ந்து போற்றுவோமாக!

நூல் ஆக்கம்	புதுமைதாசன் (தொகுப்பாசிரியர்)
வகைமை	கவிதை
வெளியீடு	பானு பதிப்பகம், சென்னை. (1989)

23

சிறுவர் செந்தேன்

புலவர் பிரபாகரன் சிறுவர்களுக்கென இவ்வினிய கவிதை நூலை இயற்றியிருக்கிறார். இன்றைய குழந்தைகள் நாளைய பொறுப்பு மிக்க குடிமக்களாய் வளர இருப்பவர்கள். அந்த உயர்ந்த நிலைக்கு அவர்களை உருவாக்கும் வகையில் சிறுவர் நூல்கள் அமைதல் வேண்டும். இந்த அளவுகோலைக்கொண்டு நோக்குகையில் புலவர் பிரபாகரனின் இந்நூல் ஒரு வெற்றிப் படைப்பு என்று கூறலாம். சிறுவர்கள் அறிய வேண்டிய செய்திகளைத் தகுந்த முறையில், உயிர்த்துடிப்புடனும் ஓசை நயத்துடனும் தந்திருக்கிறார்.

நான் தலைமை ஆசிரியனாய்ப் பணியாற்றிய வேளை. தவறு செய்த மாணவன் ஒருவனைப்பற்றி அவன் தந்தையிடம் சொல்லி அவனைத் திருத்துவதற்காக அவன் தந்தையைப் பள்ளிக்கு வருமாறு சொல்லி அனுப்பியிருந்தேன். அவர் ஒரு நாள் பகல் 11 மணியளவில் பள்ளிக்கு வந்தார். அவரிடம் மாணவன் செய்த தவற்றினைக் கூறினேன். பேச்சுப்போக்கில், "காலை 9 மணிக்கு உங்களை வரச்சொல்லியிருந்தேனே, நேரம் கடந்து இப்போது வந்திருக்கிறீர்களே" என்றேன்.

அவரோ, "தோட்டத்தில் சர்க்கரைவள்ளிக்கிழங்குக்கு நீர் பாய்ச்சிவிட்டு வந்ததாலே நேரமாகிவிட்டது" என்றார். நான், "நீங்கள் முதலில் என்னை வந்து பார்த்துவிட்டுச் சென்று, பிறகு நீர் பாய்ச்சியிருக்கலாமே" என்றேன். அவரோ என்னைச் சினத்துடன் பார்த்தவராய், "நீங்களும் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்தாமே, பத்து மணிக்கு மேலே கிழங்குக் காட்டுக்கு நீர் பாய்ச்ச முடியுமா?" என்று கேட்டார்.

நானும் வேடிக்கையாய் "ஏன் முடியாது? பத்து மணிக்கு (கபிலை) ஏற்றம் இறைத்தால் மாடுகள் முன்னே பின்னே செல்லாவா? சால், நீர் மொள்ளாதா? வாய்க்காலில் தண்ணீர் ஓடாதா?" என்று கேட்டேன்.

உடனே அவர் பெரிய விளக்கமே சொல்லத் தொடங்கி விட்டார். "சர்க்கரைவள்ளிக்கிழங்கின் தோல் மிக மென்மை யானது. சூரிய வெப்பத்தில் சூடேறியுள்ள நிலத்தினூடே தண்ணீர் சென்று கிழங்கில் படும்போது அந்தச் சிறு சூடும் தாங்காது, கிழங்கு சொத்தையாகிவிடும். ஆகவே, கிழங்குக்கு இளங்காலையில் நீர் பாய்ச்சவேண்டும். இதுகூட உங்கட்குத் தெரியவில்லையே" என்றார்.

அந்தச் செய்தியை நான் அவருக்கே மறுமொழியாக்க உறுதியாகப் பற்றிக்கொண்டேன். "இந்தப் பட்டத்தில் கிழங்கு, சொத்தையானால் இன்னும் ஆறு நிங்களில் மாற்றி வேறு நல்ல கிழங்குகளை உண்டாக்கிக்கொள்ளலாம். நீங்கள் பள்ளிக்கு அனுப்புகின்ற மகன் உங்கள் குலக்கிழங்கு அன்றோ? மண் கிழங்கில் சொத்தை விழுந்தால் மாற்றிக்கொள்ளலாம். குலக்கிழங்காகிய உங்கள் மகன் சொத்தையாகிவிட்டால் மரபேயன்றோ பாழ்பட்டு விடும். ஆதலின், இவனை நன்கு கவனித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லியனுப்பினேன்.

மணற்கிழங்கு சொத்தையின்றி இருக்க இளங்காலையில் நீர் பாய்ச்சுவதுபோலக் குலக்கிழங்குகளாம் குழந்தைகள் சொத்தையின்றி வளர நல்ல நடைமுறைகள் உரிய வேளையில் ஊட்டப்படவேண்டும். இளங்காலையில் நீர்பாய்ச்சும் உழவனைப் போலக் கவிஞர் பிரபாகரன் இளஞ்சிறார்க்கு எண்ணக் கருத்துகளை ஏற்ற வகையில் பாடியிருக்கிறார்.

அம்மாவின் அறிவுரைகளை மறக்காதே; காலை மாலை கருத்தோடு படி; நற்செயல் செய்து நாட்டின் தூணாய் விளங்கு; தன்மானத்தோடு நல்லொழுக்க நடைபழகு; நல்லோர் சொல்லை நாளும் கற்று நன்மை விளைத்திடு; உன்னால் இயலும் உதவியை நாளும் பிறருக்குச் செய்; துன்பம் அடையும் உயிர்கட்குத் துணையாய் நில் என அறிவுரைகள் நல்குகிறார்.

> நெஞ்சில் உரம்வேண்டும்; நல்ல நேர்மைத் திறம்வேண்டும்,
> ஒழுக்கத்தாலே உயர்வுண்டு; உணர்ந்தால் உண்மைப் புகழுண்டு.

உள்ளப் பண்பாட்டை வளர்ப்பதே உண்மையான வளர்ச்சி என்று எடுத்துரைத்து குழந்தைகளை உற்சாகப்படுத்தி உணர்வூட்டுகிறார்.

குழந்தைகள் உயர்ந்தோரை வாழ்க்கை வழிகாட்டிகளாய்க் கொள்ள வேண்டும்; அவர்கள் நெறியைப் பின்பற்றி உயர வேண்டும் என அறிவுறுத்தும் கவிஞர், சான்றோர் பலரைச் சிறார்களுக்கு அறிமுகப்படுத்துகிறார். அருளே பெருமை என

நாட்டிய அருட்பிரகாச வள்ளலார், பாட்டுக்கொருபுலவர் எனப் பாராட்டப்பெறும் பாரதி, கருணைக்கடல் இயேசு, முப்பால் தந்த திருவள்ளுவர், கொஞ்சுதமிழ்க் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., அண்ணல் காந்தியடிகள், வெண்தாடி வேந்தர் பெரியார், சிலையாய் நின்று சிந்தனையைத் தூண்டும் பேரறிஞர் அண்ணா, வள்ளுவர் கோட்டம் அமைத்துத் தமிழுக்கு வான்புகழ் சேர்த்துவரும் கலைஞர் கருணாநிதி, கடமையை உயிரென மதித்த காமராசர், அரசியல் சட்டம் வரைந்த அம்பேத்கர், வங்கம் தந்த சிங்கம் சுபாஷ் சந்திரபோஸ் ஆகிய இத்துணைப் பெருமக்களையும் அவரவர்தம் இயல்பு தோன்றச் சிறுவர்கள் மனத்தில் பதியவைத்து, அவர்வழி நின்று உயர வேண்டுமெனும் ஆர்வத்தை ஊட்டுகிறார்.

ஓசை நயம் சிறுவர் பாடல்களுக்கு இன்றியமையாதது. ஓசையாலேயே சிறுவர்கள் ஈர்க்கப்படுகின்றனர். கவிஞர் பெரும்பாலான பாடல்களை இயைபுத் தொடையில் எழுதி யிருப்பதால் ஓசை நயம் சிறந்து விளங்குகிறது.

நீரைத் தேக்கி அணைகட்டு
நிமிர்ந்து நின்று கைநீட்டு;
கூரை எரியும் தீப்பட்டு
கூட்டுற வாய்,தண் ணீர்கொட்டு (பக். 29)

என்பன போன்ற அடிகள் நூல் முழுதும் பரக்கக் கிடக்கின்றன. பாட்டு (பக். 38) நாடு (பக். 39) போன்ற பாடல்கள் அடுக்குச் சொற்களால் அழகூட்டுகின்றன.

சிறுவர்கள் அறிய வேண்டிய பாடப்பகுதிகளைப் பாடல் வாயிலாய்க் கற்பிப்பது ஒரு முறை. அம்முறையில் அறுசுவை, நாட்டின் எல்லைகள், கிழமையின் நாள்கள், உயிரெழுத்து வரிசை ஆகிய பாடல்களைச் சுட்டலாம். விலங்குக் காட்சிச் சாலை, பல்வேறு காய்கறிகள், கீரை வகைகள் ஆகியவற்றையும் பாடல்களாக்கி யிருக்கிறார், பாவலர் பிரபாகரன். கீரைபற்றிய பாடலை,

உண்டோர், சுவைத்தோர் யாவருமே
உளம்உடல் உறுதியும் பெறுவாரே (பக். 83)

என முடிக்கிறார். இதைப் படிக்கும்போது உள்ளச்சுவையோடு, அவற்றை உண்ட சுவையும் நாவில் ஊறிடப் பெறுகிறோம்.

இந்நூலில் உள்ள பாடல்கள் இயல்பாய் அமைந்து உள்ளத்தை மகிழ்விக்கின்றன.

பஞ்சு வண்ணத் தலையாட்டி
பற்கள் இழந்த நகைகூட்டி
நெஞ்சம் இனிக்க வழிகாட்டி
நேர்மை தவறாள் என்பாட்டி (பக். 16)

இதனைப் படிக்கும் போதே பாட்டியின் பொக்கை வாய், தலையாட்டம், கதை சொல்லும் நேர்த்தி ஆகியவை நம் மனக்கண்முன் தோன்றுகின்றன.

மும்மூன்று என்னும் தலைப்பில்,

புனிதர் மூவர் - புத்தர், இயேசு, காந்தி
தமிழ் மூன்று - இயல், இசை, நாடகம்
வேந்தர் மூவர் - சேரர், சோழர், பாண்டியர்
இலக்கியம் மூன்று - திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம்
இறைவர் மூவர் - அம்மா, அப்பா, ஆசிரியர்

மூன்றுக்குக் காட்டுகள் பலதந்து "அம்மா, அப்பா, ஆசிரியரே தெய்வம்" என்று முடித்துக் காட்டுவது சிறப்பாய் இருக்கிறது.

சிறுவர்கட்கு ஏற்ற வகையில் உவமையையும் அறிமுகப் படுத்துகிறார். சிறுவர்கள் அறிந்துள்ள செக்கர் வானத்தைச் சேவலின் கொண்டைக்கு உவமையாக்குகிறார்.

செக்கர் வானம் போலச்
சிவந்த கொண்டைச் சேவலே; (பக். 53)

புதிய செய்திகளைச் சொல்லுவதில் ஆசிரியர் ஆர்வம் காட்டுகிறார். "கைவீசம்மா கை வீசு, கடைக்குப் போகலாம் கைவீசு, லட்டு வாங்கலாம் கைவீசு, பிட்டுத் தின்னலாம் கைவீசு" என்ற முறையிலேயே பெரும்பாலும் பாடல்கள் அமைந்திருக்கக் காண்போம். கவிஞர் பிரபாகரனோ,

நிலவுக்குப் போகலாம் கைவீசு....
இமயத்தில் ஏறலாம் கைவீசு...
காற்றாலை செய்யலாம் கைவீசு....
ஊற்றுவளம் அறியலாம் கைவீசு...
சட்டம் பயிலலாம் கைவீசு

என்றெல்லாம் சிறுவர்களை உலகியலுக்கும் அறிவியலுக்கும் அணியப்படுத்துவதைப் பாராட்டாமலிருக்க முடியாது.

நன்றே செய்வாய் இன்றைக்கு
நலமே விளையும் நாளைக்கு. (பக். 20)

கணமும் சோம்பித் திரியாதே
கற்றோர் வழியைத் தவறாதே. (பக். 35)

ஒழுக்கத் தாலே உயர்வுண்டு
உணர்ந்தால் உண்மைப் புகழுண்டே. (பக். 43)

உலகம் உன்னைப் போற்றும் அதனால்
உழைக்கத் தொடங்கு தம்பி. (பக். 73)

என்னும் கவிஞரின் இத்தொடர்கள் வழி நிற்கும் சிறுவன்,

இன்றைய சிறுவன் நான்தானே
இமயம் போன்றே வளர்வேனே (பக். 19)

என்று உறுதியாய்ப் பாடமுடியும்.

நல்லதொரு நூலைப் படைத்தளித்துள்ள கவிஞர்க்குப் பாராட்டுகள்! இன்னும் பல நூல்கள் வெளிவரவேண்டுமென வாழ்த்துகள்.

சிறுவர் செந்தேன் படித்தேன்,
சிந்தை நிறைந்தேன் களித்தேன்.

நூல் ஆக்கம்	புலவர் வே. பிரபாகரன்
வகைமை	குழந்தைக்கவிதை
வெளியீடு	அழகம்மை பதிப்பகம், சென்னை. (1989)

24

பிஞ்சுத்தமிழ்

குழந்தைகள் நாட்டின் செல்வங்கள். இச்செல்வங்களைப் பேணிப் பாதுகாப்பது அனைவரது கடமையாகும். எதிர்காலப் புதிய சமுதாயம் மலர, வளரும் குழந்தைகளின் உள்ளங்களில் வளமான கருத்துகள் புகட்டப்பட வேண்டியது இன்றியமையாதது. தலைவர்கள், சான்றோர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவருக்கும் இதில் பெரும் பங்கு உண்டு. இலக்கியங்களும் பெருமளவில் குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் அரிய கருத்துகளைப் பதியவைத்து ஆக்கப் பணிகள் புரிகின்றன.

தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரை இருபதாம் நூற்றாண்டினைக் குழந்தை இலக்கிய நூற்றாண்டு என்றே குறிப்பிடலாம். பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை போன்றோர் தம் படைப்புகளில் குழந்தைகளுக்கான பகுதிகளைக் குறிப்பிடத்தக்க அளவு பாடியுள்ளனர். ஆயினும், "ஓடி விளையாடு பாப்பா", "தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு" போன்ற குறிப்பிட்ட சில பாடல்களே குழந்தைகளின் மனத்தில் நின்று நிலைத்தன. இந்நிலையில் குழந்தைக்கவிஞர் அழ வள்ளியப்பா அவர்கள் குழந்தைகளுக்காக, அவர்களே பாடி ஆடி விளையாடத் தக்க நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடித் தள்ளினார். இவர்தம் பாடல்கள் சொல்லெளிமையும் இனிமையும் ஓசைநயமும் பொருள் விளக்கமும் கொண்டனவாய் அமைந்து குழந்தைகள் நெஞ்சில் பெரிதும் இடம் பிடித்தன. இவரைத் தொடர்ந்து குழந்தைக்கவிஞர்கள் பலர் பல நூல்களை வெளியிட லாயினர். இருபதாம் நூற்றாண்டு இந்த வகையில் குழந்தைகளுக்கு நிறைந்த பரிசுகளை வாரி வழங்கியுள்ளது எனலாம். கவிஞர் கன்னல் வழங்கியுள்ள, 'பிஞ்சுத்தமிழும்' அவற்றுள் ஒன்று. குழந்தைகளின் உளப்பாங்கு அறிந்து, ஓசை நயத்துடன் எளிய இனிய பாடல்களைக் கவிஞர் இதில் தந்துள்ளார்.

தமிழ் உணர்வும் தன்மான உணர்வுமாகிய பொன்னிழை களைக்கொண்டு இந்நூல் நெய்யப்பட்டுள்ளது.

தங்கைகளே தம்பிகளே வாருங்கள் – தமிழ்த்
தாயின் உயர்வுகளைக் கூறுங்கள் (பக். 9)

என்று தம்பிகளையும் தங்கைகளையும் அழைத்துத் தமிழ் உணர்வோடு தொடங்குகிறது, இந்நூல். இத்தமிழுணர்வு நூல் முழுவதும் பொங்கித் ததும்புகிறது.

கவிஞர் எதைப்பற்றிப் பாடினாலும் ஒவ்வொரு பாட்டிலும் தமிழ்மொழி மற்றும் தமிழினச் சிறப்புகளை அதில் புகுத்தியே பாடிச் செல்கிறார். வெள்ளை நிலாவை "மயக்கும் தமிழைத் திணிக்கும்" (பக். 11) என்றும், கதிரோன் மறைவதை, "தமிழின் மாண்பில் மயங்கியே ஆழ்வான்" (பக். 12) என்றும் பாடிச் செல்கிறார்.

குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்கள் இயற்கை அழகில் பெரிதும் ஈடுபடும் என்பதை உணர்ந்து கவிஞர், இயற்கை எழிலோவியங்களை இந்நூலுள் நிறையவே தீட்டிவைத்துள்ளார்.

செடியைக் கொடிகள் தழுவும் – எங்கும்
சிரிக்கும் ஆறுகள் நழுவும் (பக். 17)

இது மலைக்காட்சி.

எருமை நீந்திக் குளிக்கும்; – அதை
எதிர்த்துக் கோட்டான் விளிக்கும்;
கரும்பு வயல்கள் ஆடும்; – அதைக்
கண்டே குயில்கள் பாடும். (பக். 19)

இஃது ஆறு சொல்லும் அழகிய காட்சி. மற்றும் கடல்,

அள்ளிக் குடிக்கக் கரிக்கும் சுரண்டல்
அழும்பன் போலவே சிரிக்கும். (பக். 20)

அலைகள்,

அண்ணாவின் பேச்சைப் போல
அளவிலா இன்பம் சேர்க்கும். (பக். 21)

பூக்கள்,

நெருப்புப் போலவே எரியும் – ஆம்பல்
நெருங்கிப் பாருங்கள் தெரியும்;
அரும்பும் சிவப்பாய்த் தோன்றும் – தாமரை
அழகை நெஞ்சில் ஊன்றும் (பக். 24)

என இப்படி ஒவ்வொரு கவிதையும் இயற்கையின் எழிலைச் சித்திரமாய்த் தீட்டி நிற்கின்றன.

குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் நச்சுக் கருத்துகள் ஊன்றப்பட்டு, அவைகளால் குழந்தைகள் கோணைகளாகி விடக்கூடாது என்பதில் கவிஞர் கண்ணுங்கருத்துமாயிருக்கிறார்.

பாதகம் செய்பவரைக் கண்டால் – நீ
பயங்கொள்ள லாகாது பாப்பா;
மோதி மிதித்துவிடு பாப்பா – அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!

என்றும், 'அச்சந் தவிர்' என்றும் பாடிக் குழந்தைகள் நெஞ்சில் வீரமூட்டிய பாரதியின் வழியில்,

சிந்தனையில் நல்லதையே தேக்குங்கள் – வளரும்
சிறுமையினை ஒன்றுகூடித் தாக்குங்கள் (பக். 9)

என்றும்,

ஆகா தம்மா ஆகாது
அஞ்சி நடுங்குதல் ஆகாது;
உகிரில் ஊசி தொடுத்தாலும்,
ஒளிரும் விழியைக் கெடுத்தாலும்,
நஞ்சை நாடியில் விட்டாலும்,
நாக்கை யறுத்துச் சுட்டாலும்,
ஆகா தம்மா ஆகாது,
அஞ்சி நடுங்குதல் ஆகாது! (பக். 40)

என்றும் பாடிக் கவிஞர் கன்னலும் குழந்தைகளுக்கு நெஞ்சுரம் ஊட்டுகிறார். உழைத்து வாழ வேண்டும், பொய் சொல்லக் கூடாது, வீர உணர்வு வேண்டும், தமிழைப் போற்ற வேண்டும், தன்மான உணர்வு வேண்டும் என்பன போன்ற நற்கருத்துகளைக் குழந்தைகளின் நெஞ்சில் பதிய வைப்பதில் கவிஞர் வெற்றி பெற்றுள்ளார். நூலின் பிற்பகுதியில் உள்ள கதைபொதி பாடல்கள் இவற்றை நன்குணர்த்துகின்றன. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர்தம் ஒப்பற்ற தொண்டுகள் பற்றியும் குழந்தைகளுக்குத் தெரிவித்திருக்கிறார், ஆசிரியர். சிங்களர் தமிழ் மக்கட்குச் செய்யும் கொடுமைகளையும் ஆசிரியர் விட்டுவைக்க வில்லை. குழந்தைகட்கு மட்டும் என்றில்லாமல் இப்பிஞ்சுத் தமிழைப் பெரியவர்கட்கும் சேர்த்தே ஆசிரியர் தந்துள்ளார் என்பதை இந்நூலைப் படிப்போர் நன்குணர முடியும்.

எவர்வைத்த தீஇந்த அந்தி வானம்?
எதற்கிங்கே வண்ணங்கள் சிரித்து நெஞ்சைக்
கவர்ந்திழுக்கத் துடிக்கிறது? கருப்புக் காட்சி
கண்களையேன் வளைக்கிறது? சிவப்பு வண்ணச்
சுவர்மறைவில் ஒளிந்துகொண்டு மஞ்சள் தேய்க்கும்
செந்தமிழேன் நாணிப்போய் மறைந்து கொண்டாள்?
எவரெழுதி வைத்ததிந்த ஓவி யங்கள்?
இயற்கையெழில் புன்னகையா அந்த வானம்!

என்பதுபோல் நூலிலுள்ள பாடல்கள் அனைத்தும் இலக்கிய உணர்வைத் தூண்டுவனவாகவே அமைந்துள்ளன.

இனிய சந்தம், எளிய அழகிய சொல்லாட்சி, கதை, கற்பனை, உண்மை நிகழ்ச்சிகள், பொருள் விளக்கம் முதலியவற்றோடு கூடிய கவித்துவத்தால் இந்நூல் பிஞ்சுத்தமிழ் உள்ளங்களோடு பெரியவர்களின் உள்ளங்களையும் சேர்த்துக்கொள்கிறது. தமிழுக்கு அணி சேர்க்கும் வரிசையில் இச்சீரிய நூல் தந்த கவிஞர் கன்னல் அவர்களைப் பாராட்டுவதில் பெருமையடைகிறேன். அவரை வாழ்த்தி மகிழ்கிறேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் கன்னல்
வகைமை	குழந்தைக்கவிதை
வெளியீடு	தமிழ்ப்பாசறை, கருவூர். (1986)

25

குறளும் குழந்தையும்

குழந்தைகள் நாட்டின் செல்வங்கள்; இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள் என்பார்கள். நாட்டை உருவாக்கும் சிற்பிகளாகிய குழந்தைகள் இளமைமுதலே நன்கு வளர்க்கப்பட வேண்டும். நற்குண நற்செய்கைகளில் ஈடுபாட்டை உண்டாக்கிக் குழந்தைகளை வளர்ப்பது பெரியோர் ஒவ்வொரு வரின் கடமையாகும். அந்நற்குண நற்செயல்களை இலக்கியங்களும் பிற நூல்களும் விரிவாய்க் கூறுகின்றன. திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களின் நெறிமுறைகளைப் பெரியோர்கள் நன்கு உணர இயலும். ஆனால், சின்னஞ்சிறார்கள் அவ்விலக்கியங் களையும் நெறிமுறைகளையும் நேரடியாய் அறிந்துகொள்வது கடினம். ஆயினும், அவ்விலக்கியங்கள் காட்டும் நேரிய நெறிமுறைகளை அவர்கட்கும் உணர்த்தியாக வேண்டும். அங்ஙனம் உணர்த்துவதற்குக் கதை சொல்லிக் கருத்துக் கூறும் முறை பெரிதும் பயன்படும். சிறுவர்கள் கதைகளைப் பெரிதும் விரும்புவர்; கதைப் பாத்திரங்களோடும் பண்பு நலன்களோடும் மிக ஒன்றுவர்; கதைக் கருத்தாலும் முடிவாலும் உள்ளத்தாக்கம் அடைவர். அக்கதைக் கருத்தும் தாக்கமும் அவர்கள் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியும். அங்ஙனம் பதிந்து உள்ளத்தில் தங்கிய நற்கருத்துகளும் நீதிநெறிமுறைகளும் அவர்களின் வளர்ச்சிக்குத் துணை புரியும். எனவே, சிறுவர்களுக்குக் கதை கூறிக் கருத்துகளைப் பதிய வைக்கும் முறையில் இலக்கியங்கள் காட்டும் நன்னெறிகளைப் புகட்டுதல் மிகுந்த பலனைக் கொடுக்கும். அவ்வகையில் நண்பர் காவிரிச்செல்வன் திருக்குறளுக்கு விளக்கம் எழுதியிருக்கிறார். ஒவ்வொரு குறளுக்கும் பொருத்தமான கதையொன்றைச் சுருக்கமாய் முன்னே சொல்லி, இறுதியில் அக்கதை தொடர்பான குறளையும் விளக்கத்தையும் கொடுத் திருக்கிறார். இதனால் சிறுவர்கள் கதை படிக்கும் ஆர்வத்தில் திருக்குறளையும் நன்கு அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. மருந்தை வெல்லத்தின் உள்ளே வைத்துக் குழந்தைக்குக் கொடுக்கும் தாயின் கடமையை நண்பர் காவிரிச்செல்வன்

நன்கு செய்திருக்கிறார். குழந்தைகளின் மனத்தில் குறள் நெறி பரவ எளிய வழி வகுத்திருக்கும் இவர்தம் முயற்சி மிகவுஞ் போற்றப்பட வேண்டியதாகும். தமிழுலகம் இவ்வினிய முயற்சினை நன்கு வரவேற்கக் கடமைப்பட் டிருக்கின்றது; வெல்க குறள் நெறி!

நூல் ஆக்கம் புலவர் காவிரிச்செல்வன்
வகைமை குழந்தை இலக்கியம்
வெளியீடு காவிரி வெளியீடு,
சென்னை. (1981)

26

பிஞ்சு விழிகளில்

என் மாணவர் இனிய நண்பர் க.வை. பழனிசாமி எழுதியுள்ள இந்நூலைப் படித்துச் சுவைத்தேன். வளரும் கவிஞருக்கு என் உளம் கனிந்த வாழ்த்துகள்.

'பிஞ்சு விழிகளில்' கவிஞர் பல்வேறு கவிதைகளை எழுதியுள்ளார். இவை குழந்தைக் கவிதைகள் அல்ல; குழந்தைகளைப்பற்றிய கவிதைகள். சின்னக் குழந்தைகளின் பார்வையில் இந்தப் பெரிய உலகத்தைக் கவிஞர் நமக்குப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். தெரியாததைத் தெரிந்துகொள்ளத் துடிப்பது குழந்தையின் இயல்பு. இக்கவிதைகளில் குழந்தை நமக்குப் புரியாத பல செய்திகளைக் கேட்கிறது. இவை குழந்தைக்கு மட்டும் புரியாத செய்திகள் அன்று; நம்முள் பலருக்கும் புரியாத அல்லது புரிந்தும் புரியாததுபோல் இருக்கும் செய்திகளேயாம். குழந்தை, உலக நடப்புக் கண்டு எதுவும் புரியாமல் குழம்புகிறது; நாம் புரிந்துகொண்டு குழம்புகிறோம். குழப்பம் தீர்ந்து விடிவு காணக் கவிதை வாயிலாய் ஒவ்வொரு வரின் சிந்தனையையும் தூண்டுகிறார், கவிஞர்.

குழந்தை கண்டிக்கப்பட்டால் அது குழந்தையை மட்டும் பாதிப்பதில்லை. கண்டித்த அல்லது அடித்த அப்பாவையும் அம்மாவையுங்கூட அது பாதிக்கிறது. அடிபட்டது குழந்தை; ஆனாலும், அடித்த தந்தை அழுகிறார்; அடிபடாத அம்மாவும் அழுகிறார். பலரின் வீட்டிலும் அன்றாடம் நடக்கும் இச்செயல்,

அம்மாவின்
அறுசுவை உணவு
ஆறிக்கிடந்தது
அடித்துவிட்ட
அப்பாவின் இதயத்தில்
கத்திகள் கீறி உழுத வேதனை

என்று கவிஞரால் ஓவியமாக்கப்படும்போது நம் உள்ளம் நெகிழ்ந்து விடுகிறது.

குழந்தை, மலரினும் மெல்லிது. அன்பும் அரவணைப்புமே அதற்கு மகிழ்ச்சியைத் தரும். கண்டிப்பு சில நேரங்களில் தேவைப்படலாம். ஆனால், அது கண்மூடித்தனமாய்ப் போய்விடக் கூடாது என்பதைக் கவிஞர் இதில் அழகாய்ப் படம் பிடித்துக் காட்டியுள்ளமை பலரும் அறிந்துகொள்ள வேண்டிய ஒன்றாம்.

சிறுவர்கள் சிற்றில் கட்டிச் சேர்ந்து சிரித்து விளையாடு கிறார்கள். அச்சிறுவர்களின் பெற்றோராகிய உடன்பிறந்தாரோ சொத்துடைமைச் சண்டையில் உறவுக்கு முடிவுரை எழுது கிறார்கள்.

இதுநாள் வரை
இருவர் குழந்தைகளையும்
பொதுவில் சுமந்த
ஆடு குதிரை
எவர் வீட்டுச் சொத்து

என வினவுகிறது, 'இரு வேறு சண்டைகள்' என்னும் கவிதை. ஆடு குதிரையை எப்படிப் பாகம் பிரிப்பது? இது பெரியவர்கள் சண்டை. இந்த நேரத்தில் "நீயே வைத்துக்கொள்! இல்லையில்லை, நீயே வைத்துக்கொள்!" என்று,

சிறுவர்களும் சண்டையிடுகிறார்கள்
விட்டுக் கொடுப்பதில்

என்று கூறும்போது பிஞ்சுக் குழந்தையின் பஞ்சு மனம் பின்னாளில் ஏன்தான் நஞ்சு மனமாய் மாறுகிறதோ என்று நாம் ஏங்குகிறோம்.

பரந்த மைதானம்! ஒரு கட்சியின் கொடியை ஏற்ற, இன்னொரு கட்சியின் கொடிமரம் வெட்டி எறியப்படுகிறது. 'கொடியோர்'களிடையே குத்துவெட்டு. இதைப் பார்த்துக் குலை நடுங்கிய குழந்தை தன் ஐயத்தைத் தந்தையிடம் கேட்கிறது

விரிந்த மைதானம்
ஏற்காதோ
இரண்டு கொடிமரங்கள்?

குழந்தையின் சந்தேகத்தில் நியாயம் இருக்கிறது. கொடிமரங்களை வெட்டுவதில் என்ன நியாயம் இருக்கிறது? இங்கே இடத்திற்குப் பஞ்சமில்லை; இதயத்திற்குத்தான் பஞ்சம். மாற்றுக்கட்சிக் கொடிக்கம்பத்திற்கே இடமளிக்காதவர்கள் ம(ா)ற்றோர் வாழ்வுக்கு எங்கே இடமளிக்கப்போகிறார்கள் என்னும் சிந்தனையைத் தூண்டும் படிமமாய் இடம் பெற்றுள்ளது, 'வினாவில் விடை' என்னும் கவிதை.

மனிதனால் தள்ளி வைக்கப்பட்ட மனிதசாதிக் குழந்தை யொன்று குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் தவிக்கிறது. ஊருணியில் உள்ள சிறிது நீரை எடுப்பதில் பெரியவர்களிடையே சாதிச்சண்டை. எப்போது சண்டை ஓய்வது? குழந்தைக்கு எப்போது குடிநீர் கிடைப்பது? குழந்தைக்கோ நா வறண்டு உள்ளிழுக்கிறது. இதைக்கண்ட இன்னொரு (உயர்ந்த) சாதியரும்பு விருட்டென்று வீட்டினுள் சென்று, தண்ணீர் கொண்டுவந்து, குடி என்று கொடுக்கிறது. குழந்தைக்குக் குலம் ஏது, சாதி ஏது?

குலம் பார்த்தா
குயில்கள் கூவுகின்றன?
மனித நிறம் பார்த்தா
ஊற்று
கண் திறக்கிறது?
சின்ன விழிகள்
அன்று எழுதிய வரிகளே
மனித வேதம்

என்னும் அடிகள் 'கண் திறந்த ஊற்று' என்னும் கவிதையில் முத்தாய்ப்பாய் அமைந்து உலகத்தின் கண்களைத் திறக்கின்றன.

அரிசி மூட்டைகளை அடுக்கடுக்காய் ஏற்றிக்கொண்டு வண்டியிழுக்கிறார், தந்தை. அம்மூட்டைகளில் எடுப்போடு அமர்ந்திருக்கிறது, அவரின் இளம் குழந்தை. வீடுவீடாய் அரிசி மூட்டைகள் இறக்கப்படுகின்றன. மாலையில் வெறும் வண்டியோடு வீட்டிற்குத் திரும்புகிறார்கள், இருவரும். குழந்தை அப்பாவைப் பார்த்துக் கேட்கிறது :

சோறு பொங்க
அரிசி
அம்மாவிற்கு இல்லையா?

இங்கே கேள்வி மட்டும் இடம் பெறவில்லை.

கேள்வியின்
ஜனன நிலையில்
இந்தியப் பொருளாதாரம்
இறந்து கிடந்தது

என்ற விடையும் இடம் பெற்றுள்ளது. இப்படிச் சின்னக் குழந்தையின் பார்வையில் பெரிய உலகம் பல்வேறு கோணங் களில் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

குழந்தைகளை முன்வைத்துச் சமுதாயத்தின் பிரச்சினைகளை உலகிற்கு எடுத்துக் காட்டும் உத்தியைக் கவிஞர் இதில் கையாண்டிருப்பது ஒரு புதிய அணுகுமுறையாய் அமைந்து அழகு தருகிறது. கவிஞர்தம் கவிதைகள் புதிய சமுதாயம் பூத்திட உலகிற்கு வழிகாட்டும் என நம்புகிறேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் க.வை. பழனிசாமி
வகைமை	கவிதை
வெளியீடு	அன்னம், சிவகங்கை. (1988)

27

மகாகவி பாரதி – சில புதிய உண்மைகள்

பாரதி நூல்களையும் அவர் பற்றிய குறிப்புகளையும் தேடிக் கண்டுபிடித்துத் தொகுத்து வருபவர்களில் திரு. சீனி. விசுவநாதன் தலையாயவர் எனில் அது மிகையாகாது. கால் நூற்றாண்டுக்கு மேலாக அவர் தம்மை இப்பணியில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். பாரதி பற்றிய ஒரு சிறு குறிப்பு கிடைக்கிற தென்றால் எவ்வளவு தொலைவு என்றாலும் நேரிடும் பொருட் செலவையும், உடல் அலுப்பையும் பொருட்படுத்தாது சென்று அறிந்து வருபவர். அமைதியாக, ஆயினும் அரிய பணியினைச் செய்து வரும் திரு. சீனி. விசுவநாதன் அனைவருடைய பாராட் டுக்கும் உரியவராவார்.

பாரதி பற்றி இதுவரை வெளியாகாத பல உண்மைகளைத் தக்க ஆதாரங்களோடு மகாகவி பாரதி-சில புதிய உண்மைகள் என்னும் இந்நூலுள் திரு. சீனி. விசுவநாதன் தந்துள்ளார். இவற்றைச் சேகரிக்க அவர் தொல்லைகள் பல பட்டிருக்க வேண்டும். எனினும், பயனுள்ள செய்திகள் பலவற்றைக் கண்டறிந்த மகிழ்ச்சி அத்தொல்லைகளை இல்லையாக்கி அவரை இன்பப் பெருக்கில் ஆழ்த்தியிருக்கும் என்பது உறுதி. இந்நாள்வரை பாரதி ஆய்வாளர்கள் கூறிவந்த செய்திகளில் உண்மைக்கு மாறானவற்றைச் சுட்டி உண்மை நிலையை அவர் இந்நூலில் உணர்த்துகிறார். மொத்தத்தில் அவரது இந்நூல் செய்திச் சுரங்கமாகவே திகழ்கிறது.

பாரதியின் பதிப்புப் பணிகள், செய்தித்தாள் எழுத்து, மேடைத் தொண்டு போன்ற பல பகுதிகளாகச் செய்திகள் நூலுள் தரப்பட்டுள்ளன.

பதிப்பு

பாரதி எழுதியவற்றுள் 'தனிமை யிரக்கம்' எனும் கவிதை முதன் முதலாக 1904 சூலை மாத விவேக பாநு இதழில் வெளியாறிற்று. 1907இல் ஸ்வதேச கீதங்கள் எனும் பெயரில் சிறு நூல் ஒன்று அவருடைய மூன்று பாடல்களைக் கொண்டு

வெளிவந்தது. பாரதி உயிரோடு இருந்த காலத்தில் (1907 முதல் 1917 வரையிலான கால எல்லையில்) அவருடைய 11 கவிதை நூல்கள் வெளிவந்தன இவற்றிற்கான பட்டியல் இந்நூலுள் தரப்பட்டுள்ளது (பக். 14).

பாரதி செய்தித்தாள்களிலும் நூல்களிலும் எழுதியவற்றுள் 33 பாடல்கள் அவர் மறைவுக்குப் பிறகு வெளிவந்த நூல்களில் இடம் பெற்றுள்ளன (பக். 15-18).

1921 செப்டம்பர் 11இல் பாரதி மறைந்தார். 1922இல் பாரதி ஆச்ரமம் எனும் நிறுவனம் பாரதியின் நூல்களை வெளியிட்டது. 1923இல் இதன் பதிப்புப் பணி நின்றுவிட்டது. பாரதி நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கென்றே 1924இல் பாரதி பிரசுராலயம் தோன்றியது. இந்நிறுவனம் 1949 வரை பாரதி நூல்களை வெளியிட்டு வந்தது. 1949இல் தமிழக அரசு பாரதி நூற்பதிப்பு உரிமையைப் பாரதி பிரசுராலயத்திடமிருந்து பெற்றது.

1953இல் தமிழக அரசு பாரதி நூல்கள் - கவிதைகளைத் தேசீய கீதங்கள், தெய்வப் பாடல்கள், பல்வகைப் பாடல்கள், முப்பெரும் பாடல்கள் என நான்கு தொகுதிகளாக வெளியிட்டது. பின்னர் 1954இல் நான்கு தொகுதிகளையும் உள்ளடக்கிய பதிப்பாகப் பாரதி நூல்கள் - கவிதைகள் என வெளியிடப்பட்டது.

1959 முதல் 1963 வரையிலான கால எல்லையில் பாரதியின் வசனங்களைக் கதைகள், தத்துவம், சமூகம், சமயம், அரசியல் என நான்கு பகுதிகளாக அரசு வெளியிட்டது. பிறகு பல்வேறு பதிப்பாளர்கள் பாரதியார் கவிதைகளையும், படைப்புகளையும் இன்றளவில் வெளியிட்டு வருகின்றனர்.

பத்திரிகை எழுத்து

பாரதியாரின் படைப்புகள் சுதேசமித்திரன், விஜயா எனும் நாளிதழ்களிலும், சூர்யோதயம், இந்தியா எனும் கிழமை இதழ்களிலும், சக்ரவர்த்தினி, ஞானபாநு, கர்மயோகி, Bala Bharata, தர்மம், சுதாரத்னாகரம், Arya எனும் திங்களிதழ்களிலும் இடம் பெற்றுள்ளன.

இவையன்றி 'இந்து' இதழில் 'ஆசிரியர்க்குக் கடிதங்கள்' பகுதியில் பலவும் எழுதியுள்ளார் எனும் இவ்விவரங்களை இந்நூலிலிருந்து நாம் அறிகிறோம். மேலும் செய்தியிதழ்கள் பற்றிய பல அரிய விவரங்களும் நமக்கு இந்நூல் வழி கிடைத்துள்ளன.

பாரதியார் சக்ரவர்த்தினி, இந்தியா, விஜயா என்னும் பத்திரிகைகளின் ஆசிரியர் பொறுப்பிலும், சுதேசமித்திரனில் துணையாசிரியராயும் இருந்து வந்திருக்கிறார்.

சக்ரவர்த்தினி எனும் திங்களிதழில் 1905 ஆகஸ்ட் முதல் 1906 ஆகஸ்ட் வரையுள்ள 13 இதழ்களில் பாரதியார் ஆசிரியராய் இருந்து, பின் அப் பணியினின்று விலகினார்; தொடர்ந்து பலகாலம் அப்பத்திரிகை வெளிவந்தது.

சுதேசமித்திரன் இதழில் பாரதியார் 1905-1906, 1920-1921 ஆகிய இரு கால கட்டங்களில் உதவியாசிரியராய்ப் பணியாற்றி யுள்ளார்.

'இந்தியா' இதழ் 1906 மே திங்கள் 4ஆம் நாள் சென்னையில் வெளியாயிற்று; அதன் பதிவுபெற்ற ஆசிரியர் சீனிவாசன் கைது செய்யப்படவே, 1908 செப்டம்பர் 5இல் நின்று போனது. பின்னர் இவ்விதழ் பாரதியாரைப் பொறுப்பாசிரியராய்க் கொண்டு 1908 அக்டோபர் 10 முதல் புதுச்சேரியில் வெளிவரலாயிற்று. 1910 மார்ச் வரை இவ்விதழ் வெளிவந்தது.

1910 சனவரியில் பாண்டிச்சேரியில் வெளிவரத் தொடங்கிய கர்மயோகி இதழுக்கும் பாரதியார் ஆசிரியராய் இருந்துள்ளார்.

1909 செப்டம்பர் 7இலிருந்து பாரதியாரை ஆசிரியராய்க் கொண்டு விஜயா என்னும் நாளிதழ் புதுச்சேரியில் வெளி வரலாயிற்று. இதுவும் 1910இல் நின்றுபோனது.

பால பாரதா எனும் ஆங்கிலத் திங்களிதழ் பாரதியாரை ஆசிரியராய்க் கொண்டு புதுச்சேரியிலிருந்து சில காலம் வெளி வந்துள்ளது.

பொதுமேடைகளில் பாரதி

பாரதி சென்னையில் பொதுக்கூட்டங்களில் பேசியவை பற்றிய செய்தியை இந்நூல் வழி அறிய முடிகிறது.

சென்னையில் பால பாரத சங்கத்தார் 'பஞ்சாபி' பத்திரிகை வழக்குத் தொடர்பாக 1907 பிப்ரவரி 27இல் நடத்திய கண்டனக் கூட்டத்தில் பாரதியார் பேசியுள்ள செய்தி 1907 மார்ச் 2 இந்தியா இதழில் வெளிவந்துள்ளது.

17-3-1907 ஞாயிற்றுக்கிழமை சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற சுதேசியக் கூட்டத்தில் வ.உ.சி. கலந்துகொண்டு உரையாற்றியிருக்கிறார். இக்கூட்டத்தில் பாரதி பங்குகொண்டு மாணவர்களிடையே தம் பாடல்களைப் பாட,

மாணவர்களும் பாரதியின் பாடல்களை அவருடன் சேர்ந்து பாடியும் உள்ளனர்.

வங்கப் பெரியார் பிபின சந்திரபாலர் விடுதலையடைந்ததைக் கொண்டாட, சென்னையில் 1908 மார்ச் 9இல் நடத்திய விழாவிலும் பாரதியார் கலந்துகொண்டு உரையாற்றி இருக்கிறார். இக் கூட்டத்தில் அவர் "என்று தணியுமிந்த சுதந்திர தாகம்" எனும் தம் பாடலைப் பாடியும் உள்ளார். போலீசாரால் தடைசெய்யப்பெற்ற அவருடைய இப்பேச்சின் ஆங்கில மொழியாக்கம் கிடைத்துள்ளது.

10-5-1908இல் ஜனசங்கத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பாரதியார் ஆங்கிலத்திலேயே உரையாற்றியிருக்கிறார். இப்பேச்சின்மீது வழக்குத் தொடர போலீசார் அரசிடம் அனுமதி கோரினர். காலங்கடந்து (1908 சூன் 4இல்) அனுமதி கோரியதால் அரசு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை.

திரு. வி. சர்க்கரைச் செட்டியார் பாரதியின் பேச்சைச் சென்னையில் தாம் பலமுறை கேட்டிருப்பதாய்த் தமது கட்டுரை யொன்றில் கூறியிருப்பதால் இன்னும் பாரதியார் எங்கெங்கு எவ்வெப்போது பேசியுள்ளார் என்னும் விவரம் தேடிக் கண்டுபிடித்தற்குரியது.

இவையன்றிப் பாரதியார் பொட்டல் புதூர், கடலூர், ஈரோட்டைச் சேர்ந்த கருங்கல்பாளையம் ஆகிய இடங்களிலும் சொற்பொழிவாற்றியுள்ளார்.

பாரதியார் மேடையில் பேசிய பேச்சுகள்பற்றி இன்றுவரை கிடைத்துள்ள செய்திகள் இவ்வளவே!

பாரதியின் புனைபெயர்கள்

பாரதியார் ஷெல்லிதாஸ், சாவித்திரி, நித்ய தீரர், ஓர் உத்தம தேசாபிமானி, ஓர் வேதாந்தி என்னும் புனைபெயர்களில் எழுதி வந்துள்ளார்.

புதிய செய்திகள்

இதுவரை பிறரால் சொல்லப்படாத பல புதிய தகவல்களை இந்நூலின் வாயிலாக நாம் அறியமுடிகிறது.

1. பாரதி வங்க, ஆங்கில மொழிகளிலிருந்து 9 பாடல்களைத் தமிழில் பெயர்த்துள்ளார். அப்பாடல்களின் பட்டியல் இந்நூலின் 53ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

2. பாரதியார் தம் பாடல்களை எந்த இராகத்தில், எந்தத் தாள கதியில் பாடவேண்டுமெனத் தெளிவுபடுத்தி, மாதிரிக்காகச்

சில பாடல்களுக்கு சுர வரிசை அமைத்துத் தந்துள்ளார். அப்பாடல்களின் பட்டியல் நூலின் 60-61ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

3. பாரதி கவிதைத் தொகுதிகளில் உள்ள பாடல்களுள் பெரும்பாலானவற்றை மூலப் படிகளோடு ஒப்பிட்டு அவை வெளிவந்த காலத்தை அறுதியிட்டுக் கூறியுள்ளார் இந்நூலாசிரியர்.

4. பாரதியார் சில பாடல்களைச் செய்தித்தாளில் வெளியிட்டபின்பு நூல்வடிவில் ஆக்கும்போது ஓரளவு மாற்றி யுள்ளார். சில பாடல்கள் கையெழுத்துப் படியிலிருந்து சற்று மாற்றப்பட்டு, அவராலேயே நூல்களிலும் செய்தி இதழ்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. இவை பற்றிய செய்திகள் இந்நூலுள் உள்ளன.

5. பாரதியின் பாடல்களில் எவ்வெவற்றிற்குக் கையெழுத்துப் படிகள் உள்ளன என முயன்று தேடி 76 பாடல்களுக்கு இருப்பதையும், அவற்றுள் 12 பாடல்களுக்கு இரண்டிரண்டு கையெழுத்துப் படிகளைக் காண முடிவதாயும், மற்றும் ஆங்கில எழுத்துகளுக்கும், ஒருசில கதை கட்டுரைகளுக்கும் கைப்பிரதி இருப்பதாயும் ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது (பக். 58-59) அவருடைய பேருழைப்பை நமக்கு நன்கு புலப்படுத்துகிறது.

6. 1905இல் சென்னையில் தாதாபாய் நௌரோஜியின் 80ஆவது பிறந்த நாள் விழாக் கொண்டாடப்பட்டபோது, பாரதியார் சக்ரவர்த்தினி இதழில் அவருடைய வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக எழுதினார். அக்கட்டுரையின் இறுதியில் அவரைப் பற்றிப் பாடியிருப்பதே பாரதியின் "தாதாபாய் நௌரோஜி" என்னும் பாடலாகும்.

7. 'இந்தியா' பத்திரிகையில் அபேதாநந்தர் பற்றிய பாமாலை ஒன்றை 'அபேதாநந்த ஸ்வாமிகளின் மீது ஸ்தோத்திரக் கவிகள்' எனும் தலைப்பில் 1906 ஆகஸ்ட் 4ஆம் தேதிய இதழில் பாரதியார் வெளியிட்டார். அவர் அப்பாடலை 'ஓர் வேதாந்தி' என்னும் புனைபெயரில் எழுதியுள்ளார். வேதாந்தியாகப் புனைபெயர் கொண்டு எழுதிய முதலும் முடிவுமான பாடல் இதுவேயாம்!

8. 'வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்' எனும் பாடல் "புது வருஷம்" எனும் தலைப்பில் 1907 ஏப்ரல் 20ஆம் தேதிய இந்தியா இதழில் வெளியாயிற்று. 1909இல் இந்தியா இதழின் இரண்டாம் ஆண்டுத் தொடக்கத்தின்போதும் மீண்டும் 1909 அக்டோபர் 16ஆம் நாளன்றும் இதே பாடல் வெளியாயிற்று.

9. 'வாராய் கவிதையாம் மணிப் பெயர்க் காதலி' என்ற பாடலின் ஒரு பகுதியே தற்போதைய பதிப்புகளில் காணப் படுகின்றது. ஆனால் இப்பாடல் 'இந்தியா'வில் 16-1-1909, 23-1-1909 ஆக இரு இதழ்களிலுமாகக் 'கவிதா தேவி-அருள் வேண்டல்' என்னும் தலைப்பில் வெளியாகியுள்ளது.

10. 'யோகசித்தி-வரங் கேட்டல்' எனும் கவிதையின் கையெழுத்துப் படியில் 9 செய்யுள்களே காணப்படுகின்றன. ஆனால் ஞானபாநு இதழில் இதனை வெளியிட்டபோது 'தேடிச் சோறு நிதம் தின்று' எனத் தொடங்கும் செய்யுளையும் சேர்த்துப் பத்துச் செய்யுள்களாகப் பாரதி வெளியிட்டுள்ளார்.

11. 'காணி நிலம் வேண்டும்' எனத் தொடங்கும் பாடலை எழுதியபோது கையெழுத்துப்படியில் 'பராசக்திக்கு ஒரு புலவன் வேண்டுகோள்' என்றே பாரதி தலைப்பிட்டுள்ளார். பின்னர் அதனை அடித்துக் "காணி நிலம்" எனத் திருத்தியுள்ளார்.

12. 'போற்றி அகவல்' என்னும் பாடலில் 'துன்பம் வேண்டேன் துடைப்பாய் போற்றி' என்னும் அடி பாரதியின் கையெழுத்துப் படியில் காணப்படவில்லை.

13. பாரதியார் தம் மகள் சகுந்தலாவைப் 'பாப்பா' என்று செல்லமாக அழைப்பார். சகுந்தலா பாப்பாவும் சி.சுப்பிரமணிய பாரதியும் கூடி இயற்றியது எனக் 'காலைப் பொழுது' என்னும் பாடலுக்கு அவராலேயே எழுதப்பட்ட குறிப்பொன்று காணப்படுகிறது. அச் சகுந்தலா பாப்பாவுக்கு எழுதப்பட்டதே பாரதியின் 'பாப்பாப் பாட்டு.'

14. "என்று தணியுமிந்த சுதந்திர தாகம்" என்று தொடங்கும் பாடலுக்கு பாரதி தந்த தலைப்பு "ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்" என்பதாம். அது பின்னாளில் 'சுதந்திர தாகம்' என மாற்றப் பட்டுள்ளது.

15. 'நின்னையே ரதியென்று நினைக்கிறேனடி', 'பீடத்தில் ஏறி' என்னும் இரு பாடல்களையும் பாரதியார் 'செல்லம்மா பாட்டு' என்னும் தலைப்பில் இயற்றினார். பின்னாளில் அப்பாடல்களில் வரும் 'செல்லம்மா' என்ற சொல் 'கண்ணம்மா'வாக மாற்றப்பட்டு, பாடல்களின் தலைப்புகள் 'கண்ணம்மாவின் நினைப்பு', 'மனப்பீடம்' என்றாக்கப்பட்டுள்ளன.

16. 'தண்ணீர் விட்டோ வளர்த்தோம்' என்னும் தம் பாடலுக்குப் பாரதி தந்த தலைப்பு 'ஸ்வதந்திர தாகம்' என்பதாம். அஃது அரசாங்கப் பதிப்பில் 'சுதந்திரப் பயிர்' என்றாயிற்று.

17. ஞானரதம் பாரதியின் முதற் கதை நூல். முதல் அத்தியாயமான 'உபசாந்திலோகம்' சென்னை 'இந்தியா'வில் வந்தது. புதுவையிலிருந்து வெளிவந்த 'இந்தியா'வில் இரண்டாம் அத்தியாயமான 'கந்தர்வ லோகம்' வெளிவந்தது. இவற்றுடன் சத்தியலோகம், தர்மலோகம், இந்திரலோகம், உபசாந்திலோகம் (மறுபடி) என்னும் அத்தியாயங்களுடன் நூலாக வெளிவரும் என விளம்பரப்படுத்தப்பட்டது. ஆனால் அது நூலாக 1910இல் உருப்பெற்றபோது பத்திரிகையில் வெளிவந்த இரண்டு அத்தியாயங்களுடன் சத்யலோகம், மண்ணுலகம், தர்மலோகம் என்னும் மூன்று அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டு ஐந்து அத்தியாயங்களைக் கொண்டு வெளிவந்தது. இந்திரலோகம், உபசாந்திலோகம் (மறுபடி) ஆகிய பகுதிகள் சேர்க்கப்படவில்லை.

18. ஆஷ் கொலை வழக்கில் தொடர்பு கொண்டிருந்தவர் களிடம் பாரதியின் 'கனவு' எனும் காதற் பாடல் நூலும், 'ஆறிலொரு பங்கு' எனும் சமூக சீர்திருத்தக் கதை நூலும் இருந்ததைக் கண்ட ஆங்கில அரசு அந்நூல்களுக்கு 1911 அக்டோபர் 11ஆம் நாளன்று தடை விதித்தது.

19. பாரதியின் முப்பெரும் பாடல்களுள் ஒன்று குயில் பற்றியது. அப்பாடலின் தலைப்பு குயில், குயில் பாட்டு, குயிலி, குயிலின் கதை, குயிற் பாட்டு எனப் பலவாறாய்க் குறிக்கப் பெறுகின்றன. இவற்றுள் பாரதி தந்த தலைப்பு எது என அறிய வேண்டுமென்றார் டாக்டர் கைலாசபதி. சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் பாரதி பற்றிய தம் பேருரையில் இப்பாடலின் கையெழுத்துப்படி கிடைக்குமாயின் பாரதி இட்ட தலைப்பை ஐயத்திற்கிடமின்றிக் கூற முடியும் என்கிறார். இந்நூலாசிரியர் பாரதியின் அப்பாடலின் கையெழுத்துப் படி தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்தில் இருப்பதைக் கண்டறிந்து, அதில் பாரதியார் 'குயில்' என்னும் தலைப்பைத் தந்துள்ளார் எனத் தெளிவு படுத்துகிறார்.

20. இலண்டனில் பாரிஸ்டருக்குப் படித்து வந்த வ.வெ.சு. அய்யர் இலண்டனில் நடைபெற்ற குரு கோவிந்த சிங்கினுடைய பிறந்த நாள் விழா பற்றி 'இந்தியா' இதழுக்குச் செய்திக் கடிதம் எழுதியனுப்பினார். இக் கடிதத்தை இதழில் வெளியிட்ட பாரதியார் தம் பங்காகக் 'குருகோவிந்த ஸிம்ஹ விஜயம்' எனும் பாடலை எழுதி 'இந்தியா' இதழில் வெளியிட்டார்.

21. வ.வெ.சு. அய்யரும், பாரதியாரும் ஒருவருக்கொருவர் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள். வ.வெ.சு. அய்யரின்

எழுத்துகளைப் பாரதியார் மனங்குளிரப் பாராட்டியுள்ளார். பாரதியின் மறைவுக்குப் பின்னர் வ.வெ.சு. அய்யர் 1924இல் தாம் தொடங்கிய பத்திரிகைக்குப் 'பால பாரதி' என்று பெயரிட்டார். காலஞ்சென்ற பாரதியின் நினைவு அப்பத்திரிகையைப் படிப்போர் மனத்தில் பசுமையாக இருந்துவர வேண்டும் என்பதற்காகவே அப்பெயர் இட்டதாக அய்யர் எழுதி உள்ளார்.

22. வ.உ.சி.யும் பாரதியும் கொண்டிருந்த நட்பு சொல்லுக்குட் பட்டதன்று. பாரதியைச் சந்தித்த முதற் சந்திப்பே தன்னைச் சோழனாகவும் பாரதியைக் கம்பராகவும் நினைக்கும்படிச் செய்துவிட்டதாக வ.உ.சி. எழுதியுள்ளார். தொடர்ந்து உள மொன்றிப் பழகியதால் வ.உ.சி. பாரதியாரைத் தம் மாமனாகவே ஏற்றுக் கொண்டுவிட்டார். "சுப்பிரமணிய பாரதியும் நானும் சோழனும் கம்பனுமாயிருந்தது மாறி, கடைசியில் மாமனும் மருமகனும் ஆயினோம்" என வ.உ.சி. குறிப்பிட்டிருக்கக் காண்கிறோம்.

வ.உ.சி. தண்டனையடைந்தபோது அவர் குற்றவாளியல்லர் என்பதை நிலைநாட்ட அவர் மனைவி 'பிரிவிகவுன்சிலு'க்கு முறையிட்டுக் கொள்ள நிதியுதவி கோரி விடுத்த அறிக்கையைப் பாரதி 'இந்தியா' இதழில் தொடர்ந்து வெளியிட்டுள்ளார். வ.உ.சி. ஆரம்பித்த சுதேசிக் கப்பல் கம்பெனி தொடர்ந்து செயற்பட்டுவர வேண்டுமென்ற வேணவாக் கொண்ட பாரதி, பொதுமக்கள் அக்கம்பெனிக்கு உதவி செய்ய வேண்டும் எனவும் எழுதியுள்ளார். கோயம்புத்தூர் சிறையில் வ.உ.சி.யை அவருடைய நண்பர்கள் சந்தித்து உரையாடியதைக் 'கர்மயோகி' இதழில் கட்டுரையாக வெளியிட்டுள்ளார். மேலும் பாரதியார், வ.உ.சி.யின் 'மனம்போல் வாழ்வு' என்னும் நூலுக்கு மதிப்புரையும் வழங்கியுள்ளார்.

23. பிரான்சு, இங்கிலாந்து நாட்டுக் கவியரசர்கள் பாரதியாருடைய கவிதைகளைத் தத்தம் மொழிகளில் பெயர்த்துப் போற்றினர். தெலுங்கில் பாரதியின் பாடல்கள் சில மொழி பெயர்க்கப்பட்டன. ஐர்லாந்துக் கவிஞர் ஜேம்ஸ் எச்.கஸின்ஸ் என்பார் மொழிபெயர்ப்புச் செய்த பாரதியின் பாடல்கள் சில கிடைத்துள்ளன. இவ்வாறாகப் பாரதி வாழ்ந்த காலத்திலேயே அவருடைய கவிதைகளும், இலக்கியத் தொண்டும் பாராட்டப் பெற்றுள்ளன.

24. பாரதியின் 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்ற பாடல் மும்முறை ஆங்கில அரசுச் சார்பில் மொழிபெயர்த்துத்

தரப்பட்டது. அந்த மூன்றுவித மொழிபெயர்ப்புகளையும் இந்நூலாசிரியர் உரிய இடத்தில் தந்துள்ளார் (பக். 165, 166, 168).

முதன் முறையாக இப் பாடல் சென்னை 'இந்தியா' இதழில் 7-3-1908இல் வெளியானது. இப் பாடல் வெளியான கால எல்லையில் அரசின் பார்வைக்காகவும், 1912இல் ஆஷ் கொலை வழக்கின்போது, நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகவும் மொழி பெயர்க்கப்பட்டது.

25. சின்னச் சங்கரன் கதை முற்றுப்பெற்ற கதையா? பாரதியின் நோக்கம், நீலகண்டம் கருத்துரை, போலீசார் பார்வையில் பாரதி, பாரதிக்கு விதித்த நிபந்தனைகள் ஆகிய இன்ன பிற பகுதிகளில் பயனுள்ள பல செய்திகள் விரவிக் கிடக்கக் காண்கிறோம்.

தேடிக் காணவேண்டியவை

பாரதி எழுதி, ஆனால் இன்றுவரை நம் கைக்குக் கிட்டாத படைப்புகள் பல உள்ளன. அவற்றைத் தேடிக் கண்டுபிடித்துப் பாரதி பற்றிய முழுமையான ஆய்வு செய்ய வழியேற்பட வேண்டு மென இந்நூலாசிரியர் பெரிதும் விழைகிறார்.

பாரதியார் இளமைக் காலத்தில் பல பாடல்களை எழுதியுள்ளதாய்த் தெரிகிறது. மேலும் அவர் சேற்றூர் உலா என்னும் ஓர் உலா நூலையும், ஒரு காவடிச் சிந்து நூலையும் இயற்றியிருப்பதாகவும் தெரிகிறது. இவை தேடிக் கண்டு பிடிக்கப்படவேண்டும்.

பாரதி ஆசிரியராயிருந்த 'சக்ரவர்த்தினி'யின் 13 இதழ்களில் 11 மட்டுமே கிடைத்துள்ளன. 1905ஆம் ஆண்டின் அக்டோபர், நவம்பர் இதழ்கள் இன்னும் கிடைக்கவில்லை.

'கர்மயோகி'யின் 2, 3 எண்ணிட்ட இரு இதழ்களைத் தவிர ஏனைய இதழ்கள் கிடைக்கப்பெறவில்லை.

'இந்தியா'வின் சென்னைப் பதிப்பின் 1 முதல் 7, 19, 44, 53 ஆகிய இதழ்களும் மற்றும் 1907 ஜூன் 29 முதல் 1908 ஆகஸ்ட் 5 வரையுள்ள இதழ்களும், புதுவைப் பதிப்பின் 1909 அக்டோபர் 16 முதல் அது நின்று போன வரையுள்ள இதழ்களும் கிடைக்க வில்லை.

விஜயா (ஓரிதழ் தவிர), பால பாரதா, சூர்யோதயம், தர்மம் ஆகிய இதழ்களில் எதுவும் பார்வைக்குக் கிட்டவில்லை.

இவற்றைத் தேடிக் காண பாரதி அன்பர்கள் முயல வேண்டும். இதுவரை அரிய பல செய்திகளைத் திரட்டியுள்ள இந்நூலாசிரியர் திரு. சீனி. விசுவநாதன் இவற்றையும் தேடிக் காணப் பெருமுயற்சி செய்து வருகிறார். அவர் முயற்சி பயனளிப்பதாகுக என நாமும் விழைவோம்!

மாறுபாடு

பாரதி பற்றி முன்னர் வெளிவந்துள்ள நூல்களிலுள்ள செய்திகள், இப்போது கிடைத்துள்ள ஆதாரங்களைக் கொண்டு நோக்கும்போது மாறுபடுகின்றன. அவ்வாறான பல நேர்வுகளை இந்நூலாசிரியர் விளக்கமுற நூலில் கூறிச் செல்கிறார். திரு. பெரியசாமித் தூரன், திரு. ரா.அ. பத்மநாபன், திரு. சிதம்பர ரகுநாதன் ஆகியோர் பாரதி ஆய்வில் தனிச் சிறப்பிடம் வகிப்பவர்கள் என்பது அனைவராலும் ஒப்பப்பட்ட செய்தி. திரு. சீனி. விசுவநாதன் தமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களைக் காட்டி அவர்களுடைய கூற்றுகள் சிலவற்றிலிருந்து மாறுபட்டு நிற்கிறார்.

எடுத்துக்காட்டுகள்

1. திரு. தூரன் அவர்களின் 'பாரதி தமிழ்' என்னும் நூலில் சில பாடல்களின் தலைப்புகள் பாரதி தந்தவாறு இல்லை; சில பாடல்களில் செய்யுள் வரிசை எண்கள் மாற்றப்பட்டுள்ளன. சில பாடல்கள் விடுபட்டுள்ளன என ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். (பக். 51)

'சுய சரிதை' எனும் கவிதை 'மாதா வாசகம்' எனும் நூலில் வெளியானதாகத் திரு. தூரன் குறிப்பிட்டுள்ளார். இந்நூலாசிரியரோ 'மாதா வாசகம்' என ஒரு நூலே வெளியிடப்படவில்லை என்கிறார். மேலும் திரு. தூரன் அவர்கள் 'சுய சரிதை' எனக் குறிப்பிடும் கவிதை 1910இல் 'கனவு' என்னும் தலைப்பில் நூலாக வந்துள்ளதாகவும் குறிப்பிடுகிறார்.

திரு. ரா.அ. பத்மநாபன் தந்துள்ள செய்திகள் பலவற்றில் திரு. சீனி. விசுவநாதன் மாறுபட்டு, அதற்கான தம் ஆதாரங்களையும் தந்துள்ளார்.

2. திரு. பத்மநாபன் 1908இல் வெளியான பாரதியின் 'ஸ்வதேச கீதங்கள்' என்னும் நூலில் 14 பாடல்கள் இருப்பதாய்க் கூறி அவற்றின் முதலடி-களைத் தந்துள்ளார். ஆனால் அந்நூலில் 16 பாடல்கள் இருப்பதைக் கூறி, அவற்றின் பட்டியலை ஆசிரியர் இந்நூலின் பக். 45இல் தந்துள்ளார்.

3. பங்கிம் சந்திரருடைய 'வந்தே மாதரம்' எனும் வங்க மொழிப் பாடலின் தமிழ் மொழிபெயர்ப்பு 1905 டிசம்பர் 'சக்ரவர்த்தினி'யில் வெளிவந்ததாய்த் திரு. பத்மநாபன் கூறுவது மூலச் சான்றிலிருந்து மாறுபட்டிருப்பதாகவும், இப்பாடல் நவம்பர் இதழில் வந்துள்ளதாயும் ஆசிரியர் தெரிவிக்கிறார்.

4. 'வருண சிந்தாமணி' என்னும் நூலுக்குப் பாரதி 1908இல் சாற்றுக்கவி அளித்ததாய்த் திரு. பத்மநாபன், திரு. மு. சண்முகம் பிள்ளை ஆகியோர் கூறுவதை இந்நூலாசிரியர் நன்காய்ந்து பாரதியார் 1904-05இல் அச் சாற்றுக்கவியை இயற்றியிருக்க வேண்டுமெனும் முடிவுக்கு வருகிறார். இதுபற்றி ஆய்வு மேலும் வளரலாம்.

5. திரு. பத்மநாபன் குயிற்பாட்டு 1912இல் உருப்பெற்றதாய்க் கூறுகிறார். ஆசிரியரோ பாரதியார் தம் கைப்பட எழுதியுள்ள குறிப்புகளைக் கொண்டு இதை 1914-15 கால எல்லையில் எழுதியிருக்கவேண்டுமெனும் முடிவுக்கு வருகிறார்.

திரு. பத்மநாபன் 'சித்திரபாரதி' எனும் நூலில் தந்துள்ள செய்திகள் பலவற்றில் ஆசிரியர் மாறுபடுகிறார்.

அ. பாரதியின் தந்தையார் சின்னச்சாமி ஐயர் பஞ்சு அரைவை ஆலையொன்றை எட்டயபுரத்தில் 1880லேயே நிறுவினார் எனச் 'சித்திரபாரதி' கூறுகிறது. அந்நூலிலேயே மற்றோரிடத்தில் 1890 எனவும் உள்ளது. ஆனால் 1892ஆம் ஆண்டு பிப்ரவரி 6ஆம் நாளன்று நிறுவினார் என்பதே ஆதாரபூர்வமான செய்தியாகுமென்கிறார் ஆசிரியர். (ஆசிரியர் ஆதாரமாக எதையும் சுட்டிக்காட்டவில்லை.)

ஆ. எட்டயபுர மன்னர் 'பாரதியை அரண்மனை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்' எனச் சித்திரபாரதி கூறுவதிலிருந்து மாறுபட்டு, மன்னரிடம் கொண்ட கருத்து வேறுபாடு காரணமாய்ப் பாரதியே நீங்கினார் எனக் கொள்வதே பொருத்தமுடையதாய் இருக்கும் என்பதற்குத் திரு.வ.ரா., திரு. சுத்தானந்த பாரதியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், பாரதியாரின் துணைவியார் செல்லம்மா, பாரதியாரின் உடன்பிறந்தார் விசுவநாதய்யர் ஆகியோர் எழுதியதைச் சான்றாக்குகிறார்.

இ. மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் அரசஞ் சண்முகனார் விடுப்பெடுத்ததால் ஏற்பட்ட இடத்தில் பாரதி ஆசிரியராய்ச் சேர்ந்தார் எனச் சித்திரபாரதி கூறுவது மீளாய்வு

செய்வதற்குரியது என்கிறார், ஆசிரியர். பாரதியார் பணியில் சேர்ந்தபோது அரசஞ் சண்முகனார் அப் பள்ளியிலிருந்து நீங்கிவிட்டார் என்பது ஆசிரியர் துணிபு.

ஈ. 'மித்திரன்' அலுவலகத்தாரே 'சக்ரவர்த்தினி' என்னும் இதழைத் தொடங்கினர் என்றும், அக்காலத்திய புகழ்வாய்ந்த மேலைநாட்டுக் 'க்வீன்' என்னும் இதழின் பெயரையொட்டியே சக்ரவர்த்தினி என்னும் பெயர் தரப்பட்டது என்றும், 'சித்திரபாரதி' கூறியிருப்பது சரியன்று என ஆசிரியர் காட்டுகிறார். சக்ரவர்த்தினியின் உரிமையாளர் வைத்தியநாதய்யர் என்பவர்.

இவ்வாறு இன்னும் பலவற்றையும் ஆசிரியர் சுட்டியிருக்கிறார்.

6. வேல்ஸ் இளவரசருக்கு வரவேற்பு என்னும் பாடலைப் பாரதியார் முழுமனதோடு பாடியிருக்க முடியாதெனத் திரு. தூரனும், அதை அவர் எழுதினார் எனச் சொல்ல மனம் ஒப்பவில்லையெனத் திரு. திரவியமும் கூறியுள்ளனர். திரு. ரகுநாதனோ பாரதியார் அப்பாட்டைத் தான் பணியாற்றிவந்த சுதேசமித்திரன் இதழாசிரியர் திரு. ஜி. சுப்பிரமணிய அய்யர் கட்டளையிட அதனால் பாட நேர்ந்தது என்றும் குறிப்பிட் டுள்ளார். பாரதியார் இளவரசரின் வருகையையொட்டிச் சென்னையிலிருந்த 'ப்ளாக் டவுன்' என்பது 'ஜார்ஜ் டவுன்' என மாற்றப்பட்டதைச் சக்ரவர்த்தினியில் வரவேற்று எழுதியுள்ளார். அதேபோல் வேல்ஸ் இளவரசியாரின் எளிமையை இந்தியப் பெண்கள் பின்பற்றி நடக்க வேண்டுமெனும் கருத்தைச் ''சென்னையில் ராஜ தம்பதிகள் வரவு'' எனும் கட்டுரையில் வலியுறுத்தியுள்ளார். ஆதலின் வேல்ஸ் இளவரசருக்கு வரவேற்பு என்னும் கவிதையைக் கட்டாயத்தின்மீது எழுதினார் எனக் கொள்ளத் தேவையில்லை என ஆசிரியர் கருதுகிறார். இப்பாடல் கொண்டுமட்டுமே முடிவுக்கு வராமல், இளவரசர் வருகையின் போது பாரதி எழுதிய அனைத்தையும் தொகுத்துப் பார்த்து இதுபற்றி ஒரு முடிவுக்கு வருவதே சரியாகும்.

7. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, 'என்று தணியுமிந்த சுதந்திர தாகம்' எனும் பாரதியின் பாடல் பல இடைச் செருகல்களோடு கூடியது என்கிறார். பாரதி தன் நேர் பார்வையில் பதிப்பித்த 'ஜன்மபூமி' என்னும் நூலில் இப்பாடலில் இப்போது தென்படும் 16 அடிகளே உள்ளன என்பதைச் சுட்டி, நாமக்கல் கவிஞர் சொல்லும் இடைச் செருகல் என்பதற்கு ஆதாரம் எதுவுமில்லையென ஆசிரியர் மறுத்துள்ளார்.

8. பாரதியின் பாடல்களை அச்சிடவும், ஒலி பரப்பவும் திரு. ஏ.வி. மெய்யப்பச் செட்டியார் பாரதியின் தம்பி விசுவ நாதய்யருக்கும், திருவல்லிக்கேணி பாரதி பிரசுராலயத்தாருக்கும், சுராஜ்மல்ஸ் கம்பெனியாருக்கும் ரூ.25 ஆயிரம் பணம் கொடுத்து உரிமையைப் பெற்றார் எனத் திரு. சோமலெ, ஒமந்தூர் இராமசாமி ரெட்டியார் பற்றி எழுதியுள்ள நூலில் குறிப்பிட்டுள்ளார். பாரதி நூல்களை அச்சிடும் உரிமையை அரசு பெறும்வரை அது பாரதியின் தம்பி விசுவநாத அய்யரிடமே இருந்தது. ஒலிபரப்பும் உரிமையை மட்டும் சுராஜ்மல்ஸ் நிறுவனத்தாரிடமிருந்து ரூ.10 ஆயிரம் தந்து பெற்றதாகத் திரு.மெய்யப்பச் செட்டியார் அவர்களே 'எனது வாழ்க்கை அனுபவங்கள்' என்னும் நூலில் எழுதியுள்ளார். திரு. ஓ.பி.இராமசாமி ரெட்டியார் அழைத்துக் கேட்டபோது அவ்வுரிமையைத் திரு. செட்டியார் எவ்விதப் பயனும் கருதாது அரசுக்குக் கொடுத்துவிட்டார். பதிப்புரிமையை விசுவநாதய்யரிட மிருந்து அரசு பெற்றது. இதுவே சரியான செய்தியாகுமென்பதை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

9. திரு. சிதம்பர ரகுநாதன் அவர்கள் பாரதி தம் நூலான 'ஸ்வசரிதை'யைத் தம் ஞான குருவான நிவேதிதா தேவிக்குக் காணிக்கையாக்கியுள்ளார் எனச் சொல்லியுள்ள கருத்திலிருந்தும், குருகோவிந்த ஸிம்ஹ விஜயம் எனும் பாடல் எழுந்த காலம்பற்றி அவர் கூறியுள்ள கருத்திலிருந்தும் இந்நூலாசிரியர் மாறுபடுகிறார்.

10. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடான தமிழியலில் பாரதியார் வாழ்க்கை வரலாறு பற்றி வெளிவந்துள்ள ஆங்கிலக் கட்டுரையில் கால, கருத்துப் பிழைகள் இருப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆய்வு வளர்க

ஆய்வாளர்கள் தாம் தாம் எழுதும் காலத்தில் தமக்கு அதுவரை கிடைத்த சான்றுகளைக் கொண்டு தெளிவுபெற்றே செய்திகளைத் தருகின்றனர். உண்மையை மறைக்க வேண்டு மென்பதோ, தவறான செய்திகளைத் தரவேண்டுமென்பதோ அவர்கள் கருத்தாக இருக்க முடியாது. புதிய தகவல்கள் கிடைக்கும் போது முன்னர்த் தந்த கருத்துகளுக்கு வேறுபாடு நேரிடுவது இயல்பே! ஆதலின் முன்னர்ச் செய்தோர் உண்மைக்கு மாறான வற்றைத் தந்துவிட்டனர் எனக் கொள்ளத் தேவையில்லை. ஆசிரியருடைய கூற்றில் அத்தகைய வருத்தம் வெளிப்படுவது போலத் தோன்றுகிறது. அவரே முன்னர்த் தமக்குக் கிடைத்த செய்திகளைக் கொண்டு தாம் எழுதியதில் சில தவறுகள்

நேரிட்டுள்ளன என்பதை 'நான் செய்த தவறுகள்' என இறுதியில் தந்துள்ளார். பாரதி எழுதிய, பேசிய அனைத்தையும் காணும் நிலை இன்று இல்லை. எதிர்காலத்தில் வேறு சில தகவல்கள் கிடைக்கக் கூடும். அதுவேளை இப்போது கொண்டுள்ள கருத்தில் சில மாறுபாடுகள் நேரிடவும் கூடும். ஆய்வின் இயல்பே இதுதான். இதுவரை கிடைத்துள்ள தகவல்களைக் கொண்டு சில செய்திகள் துலக்கம் பெற்றுள்ளன. அத் தகவல்களைத் தேடி ஆய்வு செய்துள்ள திரு. சீனி. விசுவநாதனின் தொண்டு பாராட்டுக்குரியது. இன்னும் கிடைக்க வேண்டியவையும் கிடைத்து பாரதி பற்றிய நிறைவான ஆய்வு கிடைக்கக் காலம் நமக்குக் கைகொடுக்கட்டும்.

பாரதி ஆய்வுக்கெனவே தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள திரு. சீனி. விசுவநாதனின் பணிகள் மேலும் மேலும் வளர்ந்து சிறக்க உளமார வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	சீனி. விசுவநாதன்
வகைமை	ஆய்வுக் கட்டுரை
வெளியீடு	ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம், சென்னை. (1984)

28

உலகப் பெருங்கவிஞர் கம்பர்

'உலகப் பெருங்கவிஞர் கம்பர்' என்னும் இப்பெரு நூலை ஆசிரியர் இரா.வ. கமலக்கண்ணன் மிகவும் சிறப்புறப் படைத்துள்ளார். தாம் எடுத்துள்ள தலைப்பைப் பல்வேறு பகுதிகளாகப் பகுத்துக் கொண்டு, ஒவ்வொரு பகுதியையும் விளக்கமாகவும் ஆராய்ச்சித் திறனுடனும் ஆசிரியர் எழுதி யுள்ளமை பெரிதும் பாராட்டுக்குரியது.

காப்பிய இலக்கணம்

காப்பியம் இலக்கிய வகைகளுள் ஒன்று என்பதையும், அதற்கெனத் தனி இலக்கணம் வகுக்கப்பட்டிருப்பதையும், காப்பிய வகைகள் பற்றியும் விரிவாக ஆராய்ந்து அதன் தொகுப்பாய்ப் ''பொருட் செறிவுள்ள கதையிலிருந்து, தெரிந்தெடுத்த நிகழ்ச்சிகளைக் கொண்டு, ஒருமை நலம் ஓங்குவதாகப் புலவன் அமைத்துக் கொண்ட கட்டுக்கோப்பில், சமுதாயத்துக்கு முக்கியமான அருஞ்செயல்களை இயற்றும் நாயகனை உடை யதாய, அகன்ற வீச்சும், கருத்தாழமும், உள்ளத்தைக் கிளர்ந் தெழச் செய்யும் பண்புமுடைய நெடுங்கவிதையில் உயிர்த் தெழுவது காவியம் எனலாம்''[1] என ஆசிரியர் புலப்படுத்துகிறார்.

தமிழ்க் காப்பியங்கள் தண்டி கூறும் இலக்கணத்திற் கேற்பவே அமைந்திருக்கின்றன. தொல்காப்பியத்தில் காப்பியத் திற்கான இலக்கணம் கூறப்படவில்லை. ''இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்ப வேண்டுமாதலின் தொல்காப்பியருக்கு முன்னர்த் தமிழில் காப்பியங்கள் இல்லை. எனவே அவர் காப்பியம் பற்றி இலக்கணம் வகுக்கவில்லை''[2] என்பது ஆசிரியரின் துணிவு.

காப்பியத் தோற்றம்

வீறார்ந்த காலத்தில்தான் காப்பியங்கள் தோன்றும். சங்க கால வாழ்வு வீர வாழ்வாகவே விளங்கியிருந்தது. எனினும்

---

1. இந்நூலின் பக். 25
2. மேலது, பக். 31

அக்காலத்தில் காப்பியங்கள் தோன்றாதிருப்பது வியப்பே என ஆசிரியர் கூறுவதை[1] எண்ணி ஆய்தல் வேண்டும். கி.பி. 2ஆம் நூற்றாண்டிற்குப் பின் இடைக்காலம் வரை தமிழ்ச் சமுதாயத்தில் வீர வழிபாட்டுணர்ச்சி மிக்கிருந்ததால் காப்பியங்கள் மிகுதியாகத் தோன்றின எனலாம்.[2]

முதற் காப்பியங்கள்

காப்பியம் என்னும் இலக்கிய வகையை மேனாட்டிற்குத் தந்தவர், ஹோமர். இவர் இயற்றிய ஒதீசி, இலியத் ஆகிய இரட்டை காப்பியங்கள்தாம் கிரேக்க இலக்கியத்தின் ஆதி காவியங்கள். தமிழின் முதற் காப்பியங்கள் சிலம்பும் மேகலையும் ஆகும். ஹோமரின் காப்பியங்கள் வெறும் வீரத்தையும் காதலையுமே பாடுகின்றன; ஆனால் நம் நாட்டுப் பெருங் காப்பியங்களோ ஒழுக்கத்திற்கு முதன்மையளிக்கின்றன[3] என மேனாட்டு, தமிழ்நாட்டு முதற்காப்பியங்களுக்குள்ள வேறுபாட்டை நூலாசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

தமிழ்க் காப்பியங்கள்

சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முதற் காப்பியம். அதனையடுத்து மணிமேகலை தோன்றியது. பின்னர் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் பெருங்கதையும், 9ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் சீவக சிந்தாமணியும் பிற்பகுதியில் இராமாயணமும் தோன்றின. அடுத்து 10 ஆம் நூற்றாண்டில் சூளாமணியும், கி.பி. 12ஆம் நூற்றாண்டில் பெரிய புராணமும் தோன்றின.

தமிழில் ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் என்ற பாகுபாடு உள்ளது. இது பொருத்தமாக இல்லை என்பதற்கான காரணங்களை எடுத்தியம்பிச் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணியைப் பெருங்காப்பியமெனலாம். வளையாபதி குண்டலகேசி பெருங்காப்பிய இலக்கணத்திற்குப் பொருந்தியதாய் இல்லை என்கிறார்.[4]

காப்பிய மரபு வளர்ச்சி

சங்க காலத்தில் அரசர்களையே தலைவர்களாய்க் கொண்டு பாடிய நிலை மாறி, சிலம்பு குடிமக்களைத் தலைவர்களாய்க்

---

1. இந்நூலின் பக். 31
2. மேலது, பக். 32
3. மேலது, பக். 48
4. மேலது, பக். 59

கொண்டு எழுந்தது.[1] மணிமேகலை ஆசிரியரோ இளம் பெண் துறவியான மணிமேகலையைத் துணிந்து காப்பியத் தலைவியாக்கி, மன்னர்கள் செய்ய முடியாத செயலை - பசியும் பிணியும் நீக்கும் செயலை - தன்னலமற்ற ஒரு துறவியின் தொண்டு செய்ய முடியும் எனக் காட்டினார்.[2] தமிழ்மொழியில்தான் பெண்ணுக்கு ஏற்றம் கற்பிப்பதற்கென்றே முதற் காப்பியங்கள் எழுந்தன.[3] மணிமேகலை தோற்றுவித்த மரபைப் பின்பற்றிக் குண்டலகேசி, நீலகேசி, வளையாபதி ஆகியவை குடிமக்களுள் ஒருவரைத் தலைவராகக் கொண்டு தோன்றின; எனினும், அவை சமய வாதங்களைப் பெருகப் பேசிச் சமுதாயத்தை மறந்தன.[4] மக்களுள், அவருள்ளும் பெண்களைத் தலைமாந்தராகக் கொண்டு நிலை பெற்றிருந்த காப்பிய மரபு மாறி, அரசருள் ஒருவரைத் தலைவராகக் கொள்ளும் மரபைப் பெருங்கதை தோற்றுவித்தது. கம்பரும் இம்மரபையே பின்பற்றினாலும் அவதாரமாகிய இராமனைக் காப்பியத் தலைவனாக்கினார். ஆயினும், மானுடம் வென்றது என்னும் மானிடப் பொதுமைப் பண்பைப் கூறுவதே அவர் நோக்க மாயிற்று.[5] அடுத்து வந்த சேக்கிழாரோ ஆள் முக்கியத்துவம், உயர்ந்தோர் தலைமை, தன்னிகரற்றோர் தலைமை ஆகியவை இன்றியும் காப்பியம் நடக்கும் என்பதை நிலைநாட்டினார்.[6]

இவ்வாறாகக் காப்பிய வளர்ச்சி நிலையையும், மரபு மாற்றங்களையும் ஆசிரியர் நன்கு தெளிவாக்குகிறார்; அடுத்து முதற் காப்பியங்களான சிலம்பு மேகலையின் ஒற்றுமை பற்றியும் சமண, சைவக் காப்பியங்களின் பொது இயல்புகள், தனி இயல்புகள் பற்றியும் விரிவாகப் பேசுகிறார்.

காப்பிய அமைப்பு

காப்பியம் என்பது பேரிலக்கிய மாளிகை. அதன் சிறப்பு உரிய இடத்து உரிய பொருளை உரிய அளவில் அமைக்கும் முறையில் உள்ளது.[7] காப்பியத்தின் உயிர்நாடி கதை. கதை எதுவாயினும் இருக்கலாம். அதைச் சொல்லும் முறையிலேதான் அது சிறப்படைகிறது. கதைகளைச் சொல்லும்போது நிகழ்ச்சிகளை

1. இந்நூலின் பக். 50
2. மேலது, பக். 51
3. மேலது, பக். 52
4. மேலது, பக். 52
5. மேலது, பக். 53
6. மேலது, பக். 56
7. மேலது, பக். 72

முன் பின்னாக அமைத்து, காரண காரிய இயைபிருக்குமாறு செய்யவேண்டும். இதுவே, கதைப் பின்னல் (Plot)[1] எனப்படும். காப்பியத்தின் உட்பிரிவு சருக்கம், இலம்பகம், பரிசேதம் என்பன. காண்டம் என்பது பேருறுப்பு; பல சிற்றுறுப்புகளின் தொகுதி. சிற்றுறுப்புகள் காதை, அத்தியாயம், படலம் என்றும் இருப்பதுண்டு. இத்தகைய காப்பிய உறுப்புகள் சிலம்பு, மேகலை, கம்பன், பெரியபுராணம் ஆகியவற்றில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை ஆசிரியர் ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

மேற்சொன்ன காப்பியங்கள் தண்டியலங்காரம் பெருங் காப்பியத்திற்கு வகுத்துள்ள இலக்கணத்திற்கு எந்த அளவு பொருந்தி வருகின்றன என்பதை விளக்கமாய்ப் பார்த்து, ஆசிரியர், "காப்பியச் சுவை எனும் நோக்கில் பார்க்குங்கால் சிலம்பும் கம்பனும் முன்னணியில் நிற்பனவாம்" என்ற முடிவுக்கு வருகிறார்.[2]

காப்பிய உத்தி

ஒரு கலைஞன் தன் துறையின் செவ்விய வெளியீட்டிற்குக் கைக்கொள்ளும் கலைநுணுக்கக் கூறு - தொழில்துறை நுட்பமே உத்தி எனப்படும். ஒவ்வொரு கவிஞனின் தனித்தன்மையும் இவ்வுத்திகளை மேற்கொள்ளும் முறையில் வெளிப்படுகிறது.[3] இலக்கியக் கோட்பாட்டின் அடிப்படையாய் அமையும் பொருள் (Content), வடிவம் (External structure), வெளியீடு (Expression) ஆகிய மூவிடத்தும் உத்திகள் இடம் பெற வாய்ப்பு அதிகமாகின்றது.[4] தொல்காப்பியம், நன்னூல், மாறனலங்காரம் ஆகிய மூன்றும் இவ்வுத்திகட்குப் பட்டியல் தருகின்றன. பொதுவாக உத்திகள் 32 என்பர். இளங்கோ, சாத்தனார், கம்பர், சேக்கிழார் ஆகிய கவிஞர் பெருமக்கள் மேற்கொண்ட சிறப்பான காப்பிய உத்திகளை, ஆசிரியர் பலபட எடுத்துச் சொல்லிச் செல்கிறார்.

கம்பராமாயணத் தோற்றம்

தமிழிலக்கிய வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப்படும் காலங்கள் இரண்டுண்டு; ஒன்று சங்க காலம்; மற்றொன்று பிற்காலச் சோழர் காலம்; சங்க காலத்தில் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை நூல்கள் தோன்றின. சங்க காலத்தையடுத்துக் களப்பிரர் காலத்தில் தமிழிலக்கிய வளர்ச்சி தடைப்பட்டது. பிற்காலச் சோழர்

1. இந்நூலின் பக். 73
2. மேலது, பக். 111
3. மேலது, பக். 113
4. மேலது, பக். 114

காலத்திலோ இலக்கியம் சீரிய வளர்ச்சியைப் பெற்றது. சிந்தாமணி, கம்பராமாயணம், சூளாமணி, பெரியபுராணம், கச்சியப்பரின் கந்தபுராணம் ஆகிய காப்பியங்கள் இக்காலத்தே தோன்றின.[1]

கம்பர் காலம்

இவ்வாறு இதுவரை காப்பியங்கள் பற்றிப் பொதுவாகப் பேசிவந்த ஆசிரியர், இனி, தாம் எடுத்துக்கொண்ட கவிஞர் கம்பர் பற்றியும் அவருடைய காப்பியம் பற்றியும் ஆராய முற்படுகிறார். கம்பர் தஞ்சை மாவட்டம் தேரழுந்தூரில் பிறந்தவர் என்பது பொதுக் கருத்து. இதுவரை ஆய்ந்த அறிஞர்கள் கம்பர் காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு, கி.பி. 10ஆம் நூற்றாண்டு, கி.பி. 12ஆம் நூற்றாண்டு என மூவகையாகக் குறிப்பிட்டுள்ளனர்.[2] இந் நூலாசிரியர் கம்பர் காலம்பற்றி மிக விரிவாகக் கம்பர் தனியன் களின் அடிப்படையிலும் பிற அக, புறச் சான்றுகளைக் கொண்டும் ஆராய்கிறார்.[3] அதன் விளைவாய்க் கம்பராமாயணம் கி.பி. 880க்குச் சற்று முன்னர் எழுந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார்.[4] 12, 10ஆம் நூற்றாண்டு எனச் சொல்வார் கருத்துகள் எவ்வாறு பொருந்தா என்பதையும் விளக்கமுறச் சொல்கிறார்.

கம்பரும் வான்மீகியும்

கம்பர் தம் காப்பியத்திற்கு முதனூலாக வான்மீகியைக் கொண்டாலும், அந்நூலுள் காண்பவற்றைச் சுருக்கியும், நீக்கியும், வேண்டுவனவற்றை மாற்றியும் தம் காப்பியத்தை இயற்றியுள்ளார் என ஆசிரியர் குறிப்பிட்டு, அவ்வாறு அவர் செய்துள்ள இடங்கள் எவையெவை என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார்.[5]

கம்பருக்கு முன்னே இராமாயணக் கதை

சங்க காலத்தில் அகநானூறு, புறநானூறு, சிறுபாணாற்றுப் படை, மதுரைக் காஞ்சி ஆகியவற்றில் இராமாயணக் கதைப் பகுதிகள் சுட்டப்பட்டுள்ளன. சிலம்பு, மணிமேகலையிலும் சில செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன. ஆழ்வார் பாடல்களிலும் இராமாயணக் கதைக் குறிப்புகள் உள்ளன. எனினும் தமிழில்

---

1. இந்நூலின் பக். 145
2. மேலது, பக். 148
3. மேலது, பக். 147-73
4. மேலது, பக். 173
5. மேலது, பக். 174-81

கம்பர் காலத்திற்கு முன்னர் முழுமையாக இராமாயண நூல்கள் இருந்தன எனக் கொள்ள முடியாது என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.[1]

ஒப்பீடு

ஆசிரியர், காளிதாசனின் இரகுவம்சத்தோடு கம்ப ராமாயணத்தை ஒப்பிடுகிறார். இருவருக்கும் முதனூல் வான்மீகமே. இரகு வம்சம் இராமன் பிறந்த சூரிய குலத்தில் தோன்றிய பல மன்னரைப் பற்றிக் கூறுவதாகும். இரகு வம்சத்தில் காப்பியத் தலைவர் பலர்; இராமாயணத்தில் இராமன் ஒருவன் மட்டுமே. இரகுவம்சத்தில் பல கதைகளுள் இராமன் கதை ஒன்று; ஆனால் இராமாயணத்திலோ இராமன் கதை மட்டுமே உள்ளது.[2]

மலையாளத்தில் எழுத்தச்சன் எழுதியுள்ள இராமசரிதம்[3], தெலுங்கில் அரங்கநாதன் என்பவர் இயற்றியுள்ள இராமாயணம்[4] ஆகியவற்றோடும் கம்பராமாயணத்தை ஆசிரியர் ஒப்பிட்டுள்ளார்.

இராமாயணக் கதை

அடுத்து, கம்பராயணத்தின் காண்டங்களில் அமைந்துள்ள கதைச் சுருக்கத்தையும், அக்காண்டங்கட்கு அப்பெயர் ஏற்பட்டதற்குக் காரணத்தையும் ஆசிரியர் விளக்குகிறார்.[5] இதில் சுந்தர காண்டம் காவியத்துள் காவியம் எனும்படிக் காவிய இலக்கணங்கள் கொண்டிருப்பதையும் காட்டுகிறார்.[6]

தலைமை மாந்தர்கள்

காப்பியத்தில் பாத்திரப் படைப்பை ஆராயும்போது (அ) பாத்திர அறிமுகம் (ஆ) அப்பாத்திரம் பெற்றுள்ள பங்கு (இ) அதனால் வெளிப்படும் பண்பு நலன் (ஈ) அப்பாத்திரத்தின் ஆளுமை என நான்கு நிலைகளைக் காணவேண்டுமெனக் கூறி ஆசிரியர் முதலில் இராமாயணத் தலைமைப் பாத்திரங்களை ஆய்கிறார்.[7]

---

1. இந்நூலின் பக். 179
2. மேலது, பக். 189-190
3. மேலது, பக். 190-191
4. மேலது, பக். 191
5. மேலது, பக். 192-207
6. மேலது, பக். 198
7. மேலது, பக். 209

"காவியத் தலைவன் நலம்பல செய்கின்றவனாக அமைய வேண்டும்; நல்லன செய்யும்போது அல்லன குறுக்கிடும்; அவைகளைக் கடந்து, கொண்ட கொள்கைவிடாது, குறிப்பன செய்து முடித்து, நன்மைக்கும் உண்மைக்கும் என்றும் அழிவில்லை என்று காட்டக் கூடியவனே காவியத் தலைவன்" [1] என்னும் பொது இலக்கணத்திற்கு இராமன் எவ்வாறு இலக்கியமாய்த் திகழ்கிறான் என்பது விளக்கப்பட்டுள்ளது. சீதை இளமையில் பேதையாகவும், பின் வீரம் செறிந்த பெண்ணாகவும், பின் நற்பெருந் தவத்தளாகவும், கற்பின் கனலியாகவும், பெண்ணினம் போற்றும் தெய்வமாகவும் வளர்ந்து பொலிவதும் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது.[2]

நன்மை, பல சோதனைக்கு உள்ளாகி முழு இன்பம் அடையும்; தீமை ஆரவாரம், படாடோபம் கொண்டு தோன்றி ஆர்ப்பரித்து வீழும். காவியத்தில் முரண்பட்ட தலைவர்களைக் கொண்டு இதனை விளக்குவர். அந்த முறையில்தான் இராமாயணத்தில் எதிர்வினைத் தலைவன் இராவணன் படைக்கப்பட்டுள்ளான்.[3]

துணைப் பாத்திரங்கள்

காப்பிய மாந்தர்கள் தலைமைப் பாத்திரங்கள், துணைப் பாத்திரங்கள் என இருவகைப்படுவர். துணைப்பாத்திரங்கள் மூவகைப்படுவர். காப்பியத் தலைவன் தலைவியரோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்களை ஒன்றிய பாத்திரங்கள் எனலாம்; கதை மாந்தரைப் புரிந்து கொள்ள உதவும் வகையில் அவர்களோடு ஒட்டியும் ஒட்டாமலும் நிற்பவர்களை ஒட்டிய பாத்திரங்கள் எனலாம்; காப்பியக் கதைப் போக்கில் சிறிதளவே இடம் பெற்றுக் கதைமாந்தரின் பண்பு நலன்களை அறிய உதவுபவர்களை 'ஊன்றிய பாத்திரங்கள்' எனலாம். இவ்வகையில் முதற்பிரிவில் இலக்குவன், பரதன், அனுமன், கைகேயி, இந்திரசித்தன், கும்பகருணன் ஆகியோரும் இரண்டாம் பிரிவில் வீடணனும் இந்நூலுள் காட்டப்பட்டுள்ளனர்.[4]

---

1. இந்நூலின் பக். 207
2. மேலது, பக். 227
3. மேலது, பக். 227
4. மேலது, பக். 235-254

சிறுபாத்திரங்கள்

அடுத்து ஆசிரியர் இராமாயணச் சிறுபாத்திரங்களைப் பற்றிக் கூறப் புகுகிறார். மிகப் பெரிய பாத்திரத்தில் நீர் இருந்தால் அதை அப்படியே எடுத்துக் குடிக்க முடியாது. எடுத்துக் குடிக்க ஒரு சிறு பாத்திரம் தேவைப்படும். அதுபோன்றே தலைமைப் பாத்திரங்களின் பண்பு நலன்களைத் துய்த்தறியச் சிறு பாத்திரங்கள் துணை செய்கின்றன என்பர். அவ்வகையில் கம்பனில் 52 சிறு பாத்திரங்கள் உள்ளன எனக் கூறி, அவர்களுள் தசரதன், சுமித்திரை, கோசலை, சத்துருக்கனன், வசிட்டன், விசுவாமித்திரன், குகன், சடாயு, மாரீசன், அதிகாயன், விராதன், நீலமாலை, மந்தரை, மண்டோதரி, தாடகை, திரிசடை, சவரி, தாரை எனப் பதினெட்டு பேரைப் பற்றிய செய்திகள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.[1]

இயற்கையிறந்த தெய்வப் பாத்திரங்கள் காப்பியத்தில் இடம் பெறுவதையும், காப்பியத்தில் அவற்றின் தேவை பற்றியும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.[2]

பாவிகப் பண்புகள்

பாவிகம் என்பது காப்பியத்தில் கவிஞனால் சொல்லப்படும் குணம். கவிஞன் தான் மேற்கொண்டுள்ள காப்பியத்தில் பல படியாக வற்புறுத்தி, அமைக்கும் அறிவுரைகளே காப்பியக் குணம் எனப்படும். கவிஞன் தன் உள்ளக் குறிப்பில் எந்தச் சிறப்புக் கருத்தைக் கதை வாயிலாக உருப்படுத்திக் காட்டுகிறானோ அக்கருத்தையே பாவிகம் என்று சொல்லலாம். கம்பனில், அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்பதும், பிறன் மனை விழையாமையும், உடன்பிறப்பின் சிறப்பும், பெண்மையின் சீர்மையும், அடைக்கலப் பெருமையும், தொண்டின் உயர்வும் பாவிகப் பண்புகளாக அமைந்துள்ளன என்பது இந்நூலுள் விளக்கம் பெற்றுள்ளன.[3]

அரசியல் பொருளாதாரச் சிந்தனைகள்

அடுத்து, ஆசிரியர் கம்பரின் அரசியல், பொருளாதாரச் சிந்தனைகளைத் தொகுத்துத் தருகிறார். மக்கள் உடல்; மன்னன் உயிர் என்னும் கருத்தை மாற்றி மக்கள் உயிர்; மன்னன் அவ்வுயிர்

---

1. இந்நூலின் பக். 255-280
2. மேலது, பக். 280-281
3. மேலது, பக். 283-84

தங்கும் உடலென மாற்றிக் கம்பர் புரட்சி செய்கிறார்;[1] அமைச்சர்களை அரசியல் வண்டியை நன்னெறியில் இழுத்துச் செல்லும் காளைகள் என்கிறார்.[2] எல்லாரும் எல்லாச் செல்வமும் எய்தியிருத்தல் வேண்டுமென்பதே கம்பரின் பொருளாதாரக் கருத்தாம். கம்பன் கண்ட சமுதாயத்தில் அறமும், ஒழுக்கமும் அடிப்படைப் பண்புகளாக விளங்கின;[3] ஒழுக்கம் கடவுளினும் உயர்ந்தது; கற்பு ஆண்டவன் அருளினும் மிக்கது; ஆடவரோடு பெண்டிரும் கல்வி கற்றனர்; மக்கள் மருந்தினும் இனிய கேள்வியைச் செவியுற மாந்தினர்; நுண் கலைகளில் சிறந்து இன்பமாகப் பொழுதுபோக்கினர். கல்வி மரத்தில், கேள்வியாகிய கிளைகள் தோன்றி, தவமெனும் தளிர்கள் விட்டு, அன்பாகிய மொட்டுத் தோன்றி, அறமாக மலர்ந்து, போகமாகிய கனி பழுத்துப் பயன் விளைப்பதே கம்பன் கண்ட இராமராச்சியம் ஆகும்.[4]

பண்பாட்டுக் கருவூலம்

கம்பராமாயணம் ஒரு பண்பாட்டுக் கருவூலம். செய்நன்றி போற்றுதல், விருந்தோம்பல், அனைவரையும் அன்பால் பிணைத்தல், கற்பெனும் திண்மையோடு வாழ்தல், பிறனில் விழையாமை, மானம் போற்றுதல், புகழ்பட வாழ்தல், தீவினை செய்ய அஞ்சுதல், கள்ளுண்ணாமை போன்ற சிறந்த தமிழ்ப் பண்புகள் அமையத் தம் காவியத்தைக் கம்பர் யாத்துள்ளார்.[5] அறம், ஒழுக்கம் எனும் இரு பெரும் கருத்துகளின் விளக்கமே இராமாயணம்.

மெய்ப்பாடுகள்

தொல்காப்பியம் கூறும் எண்வகை மெய்ப்பாடுகளையும் கம்பர் தம் காப்பியத்தில் சிறப்புற அமைத்துக் காட்டியுள்ள இடங்களை ஆசிரியர் சுட்டியுள்ளார். தொல்காப்பியர் 'கற்பு' என்பதைக் காட்டலாகாப் பொருள் என்றார்! ஆனால் அனுமனைக் "கற்பு களி நடம் புரியக் கண்டேன்" எனக் கூறச் செய்ததன் வழி மெய்ப்பாடுகளால் கற்பினை அறியலாகும் என மெய்ப்பாட்டியலுக்கு ஒரு திருத்தத்தைக் கம்பர் தருகிறார்.[6]

---

1. இந்நூலின் பக். 284
2. மேலது, பக். 287
3. மேலது, பக். 289
4. மேலது, பக். 289-91
5. மேலது, பக். 295
6. மேலது, பக். 307-08

உவமை, உருவகம், சொல்லாட்சி

ஒரு கதையின் வெற்றிக்கு அடிப்படை கவிஞர் பயன்படுத்தும் உவமைகளும் உருவகங்களுமேயாம். கம்பன் காவியத்தில் உள்ள உவமைகள் எண்ண எண்ணத் தித்திப்பனவாம். ஒரு சூழ்நிலையின் தன்மையையும், உணர்ச்சி ஆழ்மையையும் உருவாக்கக் கவிஞன் சொற்களைக் கூர்மையாகவும் தெளிவாகவும் பயன்படுத்துவான். சொல்லை ஆய்ந்து பயன்படுத்துவதே சொல்லாட்சி என்பதாம்! கம்பனது காவியம் முழுவதிலும் அரிய சொல்லாட்சி நிரம்பியுள்ளதைப் பல காட்டுகளால் ஆசிரியர் நமக்குப் புலப்படுத்துகிறார்.[1]

யாப்பு வகைகள்

கம்பர் தம் நூலுக்குப் பெரிதும் தகவுடைய பாவாகக் கொண்டது கலி விருத்தம். அதற்கடுத்த நிலையில் அறு சீர் விருத்தம் அமைகிறது. இந்திரன் துதியாக 6 பாடல்கள் எண்சீர் விருத்தத்தில் உள்ளன. எழுசீர் விருத்தங்களைக் கம்பர் துன்ப நிலையின் பெருக்கிற்கோ, துன்ப முடிவுக்கோ பயன்படுத்துகின்றார். பாடல்களில் ஏறக்குறைய 22 பாடல்களுக்கு ஒருமுறை சந்தங்களை மாற்றும் போக்கைக் காண்கிறோம் என யாப்பு வகை பற்றிச் சொல்வதோடு கம்பனில் காணும் பாவகைகள் பற்றிய ஒரு பட்டியலையும் ஆசிரியர் தந்துள்ளார்.[2]

மேலும் இயற்கை வருணனை, கற்பனை ஆகியவற்றை நம் உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் தந்துள்ளதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

கிளைக் கதைகள்

இராமாயணத்தில் பல கிளைக் கதைகள் மூலக்கதையோடு பின்னிப் பிணைந்து பிரிக்க முடியாதவையாய் அமைந்துள்ளன. அகலிகை சாப நீக்கம், துந்துபியின் எலும்பை எற்றியது, கலைக்கோட்டு முனிவன் வரலாறு, இரணியன் வதை போன்ற பல கிளைக் கதைகள் இராமாயணத்தில் உள்ளன. இராமகாதை பல கிளைக் கதைகள் கொண்ட ஒரு பேரால மரமாய்க் காட்சியளிக்கிறது. அடிமரமான மூலக்கதையைத் தாங்கும் பெரு விழுதுகளாய் இக்கிளைக் கதைகள் அமைந்து, காப்பியக் களனில் ஊன்றி வளர்ச்சி விரிய வாய்ப்பளிக்கின்றன என ஆசிரியர் கூறியிருப்பது[3] முற்றிலும் உண்மையாகும்.

1. இந்நூலின் பக். 313-15
2. மேலது, பக். 315-320
3. மேலது, பக். 322-339

வீரப்பெருமை

ஹோமருடைய பெருமையெல்லாம் அவன் வீரத்தை வெகுவாகப் பாடியுள்ளான் என்பதே. அவனுக்கு இணையாக வீரத்தைச் சிறப்பித்துப் பாடிய புலவர்கள் அவனுக்கு முன்னுமில்லை பின்னுமில்லை எனக் கூறுவர். கம்பரின் யுத்தகாண்டம் ஹோமரின் இலியதுக்குப் பரப்பிலும் நீட்சியிலும் இணையானது என்பதை விளக்கும் முறையில் கம்பர் பாடியுள்ள யானைப் போர், தேர்ப் போர், மாயப் போர், இராமன்-தாடகைப் போர், இராமன்-கரன், தூடணன், திரிசிரா போர், வாலி-சுக்கிரீவன் போர் ஆகியவற்றைச் சிறப்பாக விவரித்துள்ளார்.[1]

கல்வியிற் பெரியர் கம்பர்

'கல்வியிற் பெரியர் கம்பர்' என்பதை மெய்ப்பிக்கக் கம்பர் கொண்டிருந்த பல்துறைப்புலமையை ஆசிரியர் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். கம்பர் தமது காவியத்தில் ஏறத்தாழ 46 பறவை வகைகளையும், 32 விலங்கு வகைகளையும், 29 மீன் பூச்சிகள் முதலிய பிற உயிர் வகைகளையும் பாடியுள்ளார்.[2] கம்பருடைய தாவர நூற் புலமையும் அவர் உயிரினங்கள் பற்றித் தந்துள்ள செய்திகளும் அவருடைய பரந்துபட்ட அறிவைக் காட்டுகின்றன.

வளர்க கமலக்கண்ணன்!

மேலே சொன்ன அனைத்தும் இந்நூலுள் ஆசிரியர் கூறியுள்ளவற்றின் பிழிவாகும். திரு. கமலக்கண்ணன் இந்நூலை அரிதின் முயன்று ஆக்கியுள்ளார். திறனாய்வுக் கருத்துகளைத் தேடி எடுத்து, பொருத்தமுறச் சேர்த்துத் தம் எழுத்துக்குப் பொலிவு சேர்த்துள்ளார். எளிய, இனிய, ஆற்றொழுக்கு நடை ஆசிரியருக்குக் கைவந்த கலையாய் இருக்கிறது. காப்பியங்களைப் பற்றிப் பொதுவாகவும், கம்பராமாயணத்தைப் பற்றிச் சிறப்பாகவும் அறிய இந்நூல் பெருந்துணையாய் இருக்கும். இத்தகைய ஆய்வு நூல்கள் பலவற்றைத் தொடர்ந்து திரு.கமலக்கண்ணன் அவர்கள் நமக்குத் தரவேண்டுமெனப் பெரிதும் விழைகிறேன். வளர்க திரு.கமலக்கண்ணனின் இலக்கியப் பணி என வாழ்த்துகின்றேன்.

ஓங்குக மணிவாசகர் பதிப்பகம்!

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்பதில் மணிவாசகர் பதிப்பகம் முன்னணியில் இருக்கிறது என்பது மிகைச் சொல்லன்று.

---

1. இந்நூல் பக். 340-349
2. மேலது, பக். 352

அன்றைய மணிவாசகரின் வாய்மொழி திருவாசகம். மணியான் நூல்களை மணியான முறையில் மணியான மக்கட்குத் தருவதே எம் மணியான தொண்டு என்பதே இன்றைய 'மணிவாசகரின்' திருவாசகமாம். இத்திருத் தொண்டினை இடையறாது இயற்றிவரும் திரு.மெய்யப்பனுக்கு உளமார்ந்த பாராட்டுகள். ஆலெனத் தழைத்து அருகுபோல் வேரூன்றி, 'மணிவாசகர்' என்றென்றும் இனிய நூல்களைத் தந்து வருவாராக!

நூல் ஆக்கம் இரா.வ. கமலக்கண்ணன்
வகைமை கட்டுரை
வெளியீடு மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை. (1984)

29

அஞ்சல்விடு தூது

பதினைந்தாண்டுகட்குமுன்பு சென்னை ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தில், 'சிற்றிலக்கியங்கள்'பற்றித் தொடர் சொற்பொழிவாற்றினேன். 'தூது இலக்கியங்கள்'பற்றிப் பேசக் குறிப்புகள் எடுத்தபோது ஓர் இதழில், 'புதுமதியன்' என்ற பெயரில், 'அஞ்சல்விடு தூது' அச்சாயிருக்கக் கண்டேன். அந்தப் பாட்டு என்னை மிகவும் கவர்ந்தது. கூட்டத்திலும் அதனைப் புகழ்ந்து சொன்னேன். ஆயினும், அதனை எழுதிய பாவலர் புதுமதியன் யார் என்பதை அப்போது அறியேன். பின்னர், இதழாசிரியரோடு தொடர்பு கொண்டதில் கவிஞர் பு.சி. கந்தசாமியே அப் 'புதுமதியன்' என்பதை அறிந்தேன். அப்போது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. நண்பர் கந்தசாமியை அதன் முன்னர்ப் பல்லாண்டுகளாகவே அறிவேன். அவருடைய கவியாற்றலைப் பல முறை நேரில் பாராட்டியுமிருக்கிறேன்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் அவரைப் பார்க்கும் போதெல்லாம், 'அஞ்சல்விடு தூது' அச்சாக வேண்டும்; அதே போல உங்களுடைய பிற கவிதைகளும் நூல்களாய் வெளிவரவேண்டும். நூல்கள்தாம் நின்று நிலைக்கும்" என்று சொல்லி வந்தேன். அவரும், "ஆகட்டும், ஐயா!" என்பதையே மறுமொழியாய்க் கூறி வந்தார். இப்போது, 'அஞ்சல்விடு தூது' அச்சாகி நூலாய் வெளிவருவதில் எனக்கு எல்லையிலா மகிழ்ச்சி. இந்நூலுக்கு அணிந்துரை எழுதுவதை ஒரு பேறாகவே கருதுகிறேன்.

தமிழின் இடைக்கால இலக்கியங்களில் பிரபந்தங்கள் அல்லது சிற்றிலக்கியங்கள் ஒரு கூறாம். பிரபந்த இலக்கியம் தொண்ணூற்றாறு வகையது என்பர். அவற்றுள் 'தூது' ஒரு வகை. ஒருவர் தம்முடைய கருத்தை மற்றொருவருக்கு, ஒருவர் மூலமாய்க் கூறியனுப்புவது தூது ஏனப்படும். சங்க இலக்கியங்களில் தலைவி தலைவன்பாலும், தலைவன் மணம் பேசத் தலைவியைச் சார்ந்தோரிடத்தும், மன்னர்கள் பிற மன்னர்களுக்கும், புலவர்கள்

வள்ளல்களிடத்தும் தூது விடுத்திருப்பதைக் காண்கிறோம். இராமாயணத்தில் அங்கதன் தூது, மகாபாரதத்தில் கிருட்டிணன் தூது, பெரியபுராணத்தில் பரவை நாச்சியாரிடம் பரமன் சென்ற தூது போன்றவை காப்பியத் தூதுகளாம். தூது செல்வாருடைய இலக்கணங்களைத் திருக்குறள் விளக்குகிறது.

சிற்றிலக்கியத் தூது இவற்றினின்று சற்றே வேறுபட்டுப் பாடப்படுவது. காமநோயால் துன்புறும் தலைவி தன் வருத்தத்தைத் தலைவனிடம் தெரிவிக்குமாறு பெரும்பாலும் அஃறிணைப் பொருள்களைத் தூது விடுப்பதாய்ப் பாடப்படுவது தூதின் பொது இலக்கணமாகும்.

அஃறிணைப் பொருள்கள், ஒருவர் சொல்வனவற்றைக் கேட்டறிந்து, தூது சென்று, ஒருவரிடம் தெரிவித்து, அவர் கூறும் விடையறிந்து வரும் அறிவுடையன அல்ல. எனினும், அவற்றை விளித்துத் தூது போகச் செய்தற்குத் தலைவன் தலைவியர் களுடைய மனமயக்கமே காரணம் என்பர்.

தூது இலக்கியத்திற்கான இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் தெரிவிக்கின்றன. என்றாலும், தூதாய்ச் செல்லுவதற்குரிய பொருள்கள் இன்னவை எனப் பிரபந்தப் பாட்டியலும், இரத்தினச் சுருக்கத்திலுள்ள ஒரு செய்யுளும் மட்டுமே கூறியுள்ளன. எகினம், மயில், கிளி, மேகம், பூவை, தோழி, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு ஆகிய இப்பத்துமே தூதாய் அனுப்பப்பெறுபவை என அந்நூல்கள் தெரிவித்துள்ளன; என்றாலும், காலப்போக்கில் மான், தமிழ், பணம், காக்கை முதலிய பல்வேறு பொருள்களைத் தூது விட்டதாய்ப் புலவர்கள் பாடியுள்ளனர்.

தலைவிபால் தூது விடுத்ததாய்ப் பாடுவதும் உண்டு. காளிதாசனின், 'மேக சந்தேசம்' அவ்வகையது.

புகழ்வதற்காக மட்டுமன்றிப் பகைவர் மேல் வசை மாரி பொழிவதற்கும் புலவர்கள் தூது இலக்கியத்தைப் பயன்படுத்தியுள்ளனர். தமக்கு இடையூறு விளைத்த சட்டநாதன் மீது அழகிய சிற்றம்பலக்கவிராயர், 'கழுதைவிடு தூது', 'குக்கல்விடு தூது' என்ற இரு நூல்களை இயற்றியுள்ளார். 'செருப்புவிடு தூது' என்றொரு நூலும் உண்டு.

நண்பர் புதுமதியன் அவர்களோ பழைய தூது இலக்கிய மரபுப்படி இக்காலப் புதுப்பொருளான அஞ்சலைத் (தபாலைத்) தூது விடுவதாய்ப் பழைய இலக்கணச் சரட்டில் புதுவகைப் பூவைத் தொடுத்துள்ளார்.

தலைவி தலைவனைக் கண்டு காதல் கொள்வாள்; அவன் பிரிந்த நிலையில் பிரிவாற்றாது காமம்மீதூர்தலின் தன் ஆற்றாமையை அவனிடம் சொல்ல ஒரு பொருளைத் தூதாய் அனுப்புவாள்.

(1) தூதாய் அனுப்பப்பெறும் பொருளிடம் முதலில் தான் தலைவனிடம் 'காதல்' கொண்ட விதத்தைத் தலைவி கூறுவாள். (2) பிறகு, தூதாய் அனுப்பப்பெறும் அப்பொருளைச் சிறப்பித்துக் கூறுவாள். பிற பொருள்களைத் தூதாய் அனுப்பினால் நேரிடும் குறைகளைச் சொல்லி, தான் அனுப்பும் அப்பொருளே தூது செல்லச் சிறந்ததெனப் பெருமைப்பட அப்பொருளைப் போற்றுவாள். (3) தக்க பொழுதறிந்து, தலைவனிடம் தன் ஆற்றாமையை எடுத்துரைப்பதோடு அவனுடைய அன்பின் அடையாளமாய் அவன் மாலையைப் பெற்று வருமாறு தூது செல்லும் பொருளை வேண்டிக்கொள்வாள். இம்முப்பெரும் பகுதிகளைக் கொண்டனவாய்த் தூது இலக்கியங்கள் இருக்கும்.

நண்பர் புதுமதியன் இம்முப்பகுதிகளையும் முதிர்தமிழில் பாடியிருப்பதை நூலைப் படிப்பார் நன்குணர்வர். இனி, நூலுள் நுழைந்து புதுமதியனின் பாடற்சிறப்பை அறிவோம்.

மதியைப் பழிக்கும் முகமுடைய மங்கை ஒருத்தி. சோலையில், மாலை நேரத்தில் நீராடும்போது, காளை ஒருவனைக் கண்டாள். அவனும் கண்டான். இருவர் மனமும் ஒன்றானது; காதல் பிறந்தது. மறுநாள் அவ்விடத்தேயே சந்திப்போம் என்று பிரிந்தனர். பிரிந்த தலைவனைக் காணப்பெறாது வாடி வதங்கியவள் தூது விட்ட செய்தியினை இங்கே கூறுவேன் என்ற அருமையான தொடக்கத்துடன் நூல் தொடங்குகிறது.

தூதுவிட முனைந்த தலைவி வண்டு, குயில், மயில், அன்னம், மேகம், கிள்ளை முதலியவற்றுள் எதனைத் தூது விடலாம் என எண்ணுகிறாள்; ஆனால், அவையெல்லாம் தூது செல்ல ஏற்றவை அல்ல என விலக்குகிறாள். ஒவ்வொன்றுக்கும் அவள் கூறும் காரணம் அருமையாய் உள்ளது. அன்னம் பாலையும் நீரையும் பிரிக்கும் தன்மை கொண்டது. கிளியோ கொச்சை மொழி பேசும். இவற்றைத் தூது விட்டால் என்னவாகும்?

அன்னம் தனைவிட்டால் அன்னவர்க்கு நானுரைக்கச்
சொன்ன மொழிபிரித்துச் சோர்வாக்கும்!..

பச்சைக் கிளியையவர் பக்கம்நான் விட்டக்கால்
கொச்சைமொழி பேசுவதால் கூறியவை எச்சமுறும்.

மற்றவர்களால் முடியாததை உன்னால்தான் செய்யமுடியும் என்று சொன்னால், கேட்பவர் அப்புகழ்ச்சியில் மயங்கிவிடுவது இயற்கைதானே!

மற்றவற்றை இகழ்ந்த தலைவி, அஞ்சலை நோக்கி, "நீதான் தூது செல்லத் தகுந்த ஆள்" எனப் போற்றுகிறாள்! அஞ்சலைத் தலைவி புகழ்கின்றாள் என்பதைக்கொண்டு அஞ்சலின் சிறப்புகளைப் புதுமதியன் பட்டியலிட்டுவிடுகிறார்!

அஞ்சல்நீ அன்றி, அகலுலகில் யாரெனக்குத்
தஞ்சம் அளிப்பார்?

எனத் தயவுடன் 'அஞ்சலை'த் தூது செல்ல வேண்டுகிறாள். வெயிலோ குளிரோ, பனியோ மழையோ எக்காலமாயினும் அஞ்சல் தவறாமல் உரியவரிடம் சேர்கிறதல்லவா?

காற்று மழைக்கும் கால்சற்றும் – ஆற்றாமல்
உள்ளம் பறிகொடுத்தார் உன்னைத்தூ தாகவிட்டால்,
மெல்லநீ காதலர்பால் மேவிடுவாய் – கள்ளமெதும்
காணாய்நீ; ஆதலினால் கண்டபொருள் தூதுவிடல்
வீணாம் எனக்கருதி விட்டேன்நான்–

இப்படிக் கூறினால் 'அஞ்சல்' மயங்காதிருக்குமா? உன் போல யாருண்டு என்று கூறுவதாய்ப் புலவர்கள் தூது செல்லும் பொருளுக்குரிய சிறப்புகளை அருமையாய்க் கூறிவிடுவர். ஒரு பொருள்பற்றி எவ்வெவ்வாறெல்லாம் பாடலாம் எனப் புலவர்களின் திறமைக்கு இடமளிப்பதாய் இப்பகுதி தூது இலக்கியங்களில் திகழ்கின்றது.

சீனிச் சர்க்கரைப்புலவர், 'புகையிலைவிடு தூதி'ல் புகை யிலையின் சிறப்பைக் கூறுகிறார் :

தாம்பூல நாவுக்குச் சாரமது தானும்உன்றன்
காம்பில் அடக்கமன்றோ கட்டழகா!

வாடைப் பொடி,கதம்பம் ஆனவெல்லாம் உன்னுடைய
சாடிப் பொடிக்குச் சரியுண்டோ!

சொற்காட்டு நல்ல துடிகார ரையும்போய்ப்
பற்காட்ட விட்ட பழிகாரா!

புகையிலை தரும் மயக்கத்தைவிட மிகு மயக்கத்தைத் தருகின்றன, கவிச்சொற்கள்!

நண்பர் புதுமதியன் அவர்களும் அஞ்சலின் சிறப்பை யெல்லாம் நம் மனங்களாகிய அஞ்சற்பெட்டிகளில் அற்புதமாய் நுழைத்துவிடுகிறார்.

மஞ்சள் முகந்துடவல் மங்கையர்க்கு நல்லதென்பார்;
அஞ்சலுறை மேலும் அதுதுடவல் – அஞ்சாமல்
நல்லதோர் செய்தியென நாலுபேர் சூழ்ந்தபடி
சொல்லும் அதையென்று சுற்றவைக்கும் – வல்லமையை
உன்பாலில் அன்றி உலகிலெங்கும் கண்டதில்லை!

என்ன தீங்கு நேர்ந்தாலும், 'அஞ்சல்', தான் ஏற்ற கடமையைத் தவறாது ஆற்றுமாம்! அதன் முகத்தில் அடிக்கிறார்கள்! ஆம், முத்திரை குத்துகிறார்கள்! அதற்காக வேதனைப்பட்டு மேற்கொண்ட வேலையை விட்டுவிடுகிறதா என்ன? உரியவரிடம் தவறாமல் சென்று சேர்ந்துவிடுகிறதே!

முத்திரையால் உன்றன் முகத்தில் அடித்தாலும்
எத்துணையும் மாறாத்தொண்(டு) ஏற்றோன்நீ!

தலைவன் புகழ் கூறல் பகுதியில், தலைவனுடைய ஊர்ச் சிறப்பு, அவ்விடத்தின் இயற்கை வளச்சிறப்பு, தலைவனின் குணச்சிறப்பு ஆகியவற்றைப் பலபடப் பேசுவர். அஞ்சல்விடு தூதுத் தலைவர், தமிழ் இருக்க இந்தி ஏன் எனக் கேட்பவர்! தமிழ்ப் பாவியச் சுவையை எடுத்தியம்பும் ஏந்தல்! பாவியங்கள் செய்பவர்! ஓவியங்கள் தீட்டுபவர்; தேனிசையைக் கேட்பவர்! அண்ணா வழியில் நடப்பவர்! வேற்றாரும் விரும்புகின்ற வெல்லப் பேச்சாளர்! புதுமதியன் தம்மையே இத்தலைவனாய்க் கூறியிருக்கிறாரோ? இத்தணைப் பண்புகளும் ஒருங்கிணைந்த வர்தாமே நம் புதுமதியன்!

தூது இலக்கியங்கள் பெரும்பான்மை தூது செல்லும் பொருளிடம், "நீ தலைவனுடைய மார்பில் இலங்கும் மாலையைப் பெற்று வா" எனச் சொல்வதாய் முடிவடைவது மரபு. தலைவன் மஞ்சமீதில்,

மிதசனங் கடற்சூழ வீற்றிருக்கும் வேளை
மதுமலர்த்தார் வாங்கிநீ வா

என மிதிலைப்பட்டிக் குழந்தைக்கவிராயரின், 'மான்விடு தூது' முடிகிறது; பலபட்டடைச் சொக்கநாதரின் 'தென்றல்விடு தூது'

தூங்கு புயத்தான் றனக்கென் துயர்சொல்லி
வாங்குகொன்றை மாலைகொண்டு வா

என்று முடிகிறது. 'சொல்லி வா', 'அழைத்து வா' என்ற முடிவுகளுமுண்டு. 'தமிழ்விடு தூது'

துறவாதே சேர்ந்து சுகானந்தம் நல்க
மறவாதே தூதுசொல்லி வா

எனவும்; 'துகில்விடு தூது'

தேனாள்பால் தூதுவிட்டேன் சேர்ந்துனைப்போல் நான்சேர
மானாளை நீஅழைத்து வா!

எனவும் முடிவடைவதைக் காண்கிறோம். நண்பர் புதுமதியனோ அஞ்சலிடம், தலைவி, அன்பரிடம் தன் நெஞ்சிலுள்ளதைக் கூறி,

வழிதிரும்பு முன்அவரின்
எண்ணமதைச் சொல்வந்து எனக்கு

என வேண்டுவதாய் முடிக்கிறார்.

இந்நூலுள் சிறந்த கற்பனையும், உவமை, உருவகம், சிலேடை, மடக்கு, திரிபு போன்ற அணிகளும் அங்கங்கே அமைந்து அழகு சேர்க்கின்றன. தலைவன் ஊரில் கரும்புக் கழனிகள் உள்ளன. கரும்புகளில் வெண்ணிறப்பூக்கள் பூத்துள்ளன. கரும்பின் உச்சியில் பூக்கள் இருப்பது, முகில் வேகமுடன் அங்கு வந்து மேயப் புகுந்தது போன்றிருந்ததென்று கூறுவது உயரிய கற்பனைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

ஓங்கி யுளகரும்பின் உச்சியிலே – பாங்காக
வேகமுடன் வந்துமுகில் மேயப் புகுந்ததுபோல்
போகங் குறிக்கும் புதுப்பூக்கள்

மாடிகளின்மீது ஆண் புறா பெண் புறாவை அணையச் சிறகடிக்கிறது; பெண்புறாவோ ஒதுங்கி நழுவுகிறது. எவ்வாறு?

ஆடை நழுவும் அணங்குபோல் – பேடையோ
நாணி ஒதுங்கி....

நழுவுகிறதாம்!

எப்பாலும் எக்காலும் வென்றுவரும் ஒப்பாலே
பாலுள் உயருந்'த பாலே'! உலகப்பெண்
பாலுள் வருந்துமோர் பெண்பாலுன் – பாலிங்கே
தூதுக்குச் செல்லத் துதிக்கின்றேன்.

(தபாலே! உலகப் பெண்பாலுள் வருந்தும் ஒரு பெண்பால் உன்பால் இங்கே தூதுக்குச் செல்லத் துதிக்கின்றேன்.)

'பால்' என்ற சொல் சுரந்து சுரந்து இனிப்பூட்டுகின்றது. அணிகள் சுரக்கும் அருமையான இடம் இது!

திருமுகத்தைக் காணத் தினம்வாடித் தூனோர்
திருமுகத்தை விட்டேன்!

(திருமுகம் - அழகிய முகம்; திருமுகம் - அஞ்சல்)

மடக்கணியின் மாண்பை, ஆட்சியை இங்கே காண்கிறோம்.

தூது எழுதிய ஆசிரியர், 'சிந்துப் பாடல்கள்' எழுதுவதிலும் வல்லவராய் இருக்கிறார் என்பதை இந்நூலுள் உள்ள சிந்துப் பாடல்கள் நிறுவுகின்றன. சிந்து, இசைப்பாடல் வகைகளுள் ஒன்று. 'காவடிச்சிந்து' அண்ணாமலை ரெட்டியாரால் முதன் முதலில் பாடப்பெற்றது. பின்னர், காவடிச்சிந்துப் பாடல்களின் இசையில் பலர் எழுதினர். பாரதியும் பாரதிதாசனும் காவடிச்சிந்து இசையில் பாடிப் புகழ் பெற்றிருக்கின்றனர். நொண்டிச்சிந்து, ஆனந்தக் களிப்பு என அரிய இசைகளில் பாரதியும் பாரதிதாசனும் எழுதியுள்ள பாடல்கள் புகழ் பெற்றவை.

பாரதியின்,

தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் – இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம்எங்கள் தாய்

எனும் பாட்டு காவடிச்சிந்தில், 'ஆறு முகவடி வேலவனே' என்ற வர்ணமெட்டில் பாடப்பட்டது. பாவேந்தரின், 'காடு' எனும் பாட்டு காவடிச்சிந்து மெட்டில் பாடப்பட்டது.

முட்புதர்கள் மொய்த்ததரை எங்கும் – எதிர்
முட்டுகருங் கற்களும் நெருங்கும் – மக்கள்
இட்டடி எடுத்தெடுத்து வைக்கையிலே
கால்களில் தடுங்கும் – உள்
நடுங்கும்.

இப்புலவர்கள்வழி நிற்க விழையும் புதுமதியன் அருமையான சிந்துப்பாடல்களைத் தந்திருக்கிறார். தமிழ்ச்சிந்து, அண்ணா வண்ணச்சிந்து, பாவேந்தர் சிந்து, இந்தி எதிர்ப்புச்சிந்து, கொங்குச் சிந்து, அந்திச் சிந்து, முருகவேள் சிந்து என இன்றைய நிலைக்கேற்ற சிந்துகள் நம் சிந்தையில் என்றும் நிற்கும்வண்ணம் செய்திருக்கிறார்.

சிந்து குயிலினங்கள் பாடும் – அதில்
சிந்தை மகிழ்ந்து முழுக்காடும் – வண்டு
சிரித்த மலர்கள் தோறும்
விரித்த சிறகுடனே நாடும் – மதுத்தேடும்!

புதுமதியனின் சிந்து மலர்தோறும் நுழைந்து, இன்ப மதுவுண்டு, மயங்கிப் பாடும் வண்டுகளாய் நாம் மகிழ்வோமாக!

இலக்கணப்புலமை, சொல்வளம், கருத்தோட்டம், கூர்த்த அறிவு இருந்தாலொழிய சிற்றிலக்கிய வகைகளையும், சிந்துப் பாடல்களையும் பாட முடியாது! இவற்றைப் பாடுவதில் புதுமதியன் முழு வெற்றி கண்டிருக்கிறார்.

நூலின் இறுதியில் ஒரு குறுங்காவியத்தையும் தந்திருக்கிறார். மரபுவழி நின்று, புதுமைக் கருத்துகளைப் பாடுபவர், புதுமதியன்! கவிதை இலக்கியப் பரப்பின் எல்லாத் துறைகளிலும் வல்ல அவர், துறைதோறும் துறைதோறும், நூல் பல தந்து புகழோங்கிச் சிறக்க வேண்டுமென உளமார விழைந்து வாழ்த்துகிறேன்.

அவருடைய இந்நூல் நம் நெஞ்சத்தே பதிவஞ்சலாகி விட்டது.

நூல்ஆக்கம்	கவிஞர் புதுமதியன்
வகைமை	சிற்றிலக்கியம் (தூது)
வெளியீடு	உத்தமி பதிப்பகம், சின்னதாராபுரம், கரூர் மாவட்டம். (1992)

30

மங்கலங்கிழார் பிள்ளைத் தமிழ்

பிள்ளைத்தமிழ் என்னும் இலக்கியம் சிற்றிலக்கிய வகையுள் அடங்குவதாகும். சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும் என்பது பொதுவான கருத்து. ஆனால், தொண்ணூற்றாறுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கிய வகைகள் காணக்கிடக்கின்றன.

பிரபந்த எண்ணிக்கை

"பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்ற கொள்கை ஒரு காலத்தில் நிலவி வந்தது. இப்பொழுது அவற்றின் தொகை அந்த எண்ணைக் கடந்து நிற்கிறது. ஆயினும், பிள்ளைத் தமிழ் இலக்கியம் தொண்ணூற்றாறு என்று கூறப்பட்ட சிற்றிலக்கிய வகையுள் ஒன்றாகவே அடங்குகிறது. "குழவி மருங்கினும் கிழவதாகும்" என்ற தொல்காப்பியப் பாடாண்திணை நூற்பாவாலும் அதற்கு நச்சினார்க்கினியார் எழுதியுள்ள உரையாலும் பிள்ளைத்தமிழ் போன்ற இலக்கிய அமைப்பு பழங் காலத்தில் இருந்திருக்கக்கூடும் என்று ஊகிக்க இடமுண்டு.

பிள்ளைத்தமிழ்க் கூறுகள்

சங்கப் புலவர்களாகிய பொய்கையார், பரணர் இந்திரகாளியர் முதலியோர் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ள செய்தியைப் பாட்டியல் நூல்கள் தெரிவிக்கின்றன. எனினும் சங்க இலக்கிய நூல்களுள் பிள்ளைத்தமிழ் நூல் எதுவும் இல்லை. தொல்காப்பியப் பாடாண் திணையைப் பின்பற்றி சங்ககாலப் புலவர்கள் அரசர்களைப் பல்வேறு நிலையிலும் புறநானூறு, பதிற்றுப்பத்து முதலியவற்றில் நேரிடையாகவே பாடியுள்ளதால் தனியாகப் பிள்ளைத்தமிழ் தேவையில்லை என்று இருந்துவிட்டார்கள் போலும். சங்க இலக்கியத்தில், 'பிள்ளைத்தமிழ்' அமைப்பில் அமைந்த நூல் ஒன்றுமில்லாவிட்டாலும், குழந்தைகளைப் பற்றிய தனிச் செய்திகளும் பிள்ளைத்தமிழில் பாடப்படும் சில பருவ விளையாட்டு நிகழ்ச்சிகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. 'குழந்தைகள் குறுகுறு நடப்பர்; சிறுகை நீட்டுவர்; இட்டும்

தொட்டும் கவ்வியும் துழந்தும் இன்பம் செய்வர்; நெய்யுண்டி அடிசிலை மெய்பட விதிர்ப்பர்; மனத்திற்கும் உடலுக்கும் மகிழ்ச்சி மயக்கத்தைத் தருவர்' என்பது யாவரும் நன்கு அறிந்த புறநானூற்றுச் செய்தி. இதுபோன்ற எண்ணற்ற தனிச் செய்திகள் தவிர, பிற்காலப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் பாடப்பெறும் சில பருவங்களுக்குரிய செய்திகளும் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன. தலைவி ஒருத்தி திங்களை அழைத்து, 'அம்புலியே! நீ என் மகனொடு விளையாட வருவாயானால் நினக்கும் பால் தருவேன்; எனவே, என் மகனொடு விளையாட வா! வா!' என்று கைவிரல் நீட்டிக் கூப்பிட்டுத் தன் புதல்வனுக்குப் பாலூட்டினாள் என்பதை,

> முகிழ்நிலாத் திகழ்தரு மூவாத் திங்கள்
> பொன்னுடைத் தாலி யென்மகன் ஒற்றி
> வருகுவை யாயின் தருகுவென் பாலென
> விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றி[1]

என்ற அகநானூற்றுப் பாடலடிகளால் இதனையறியலாம். இது பிள்ளைத் தமிழில் தம் பாட்டுடைத் தலைவராகிய குழந்தை யோடு 'அம்புலி ஆடவாவே' என்று புலவர்கள் அழைக்கும் அம்புலிப் பருவ நிகழ்ச்சியாகும்.

> சுடர்த்தொடீஇ கேளாய்: தெருவில்நா மாடும்
> மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
> கோதை புரிந்து வரிப்பந்து கொண்டோடி
> நோதக்க செய்யும் சிறுபட்டி...[2]

என்ற கலித்தொகைப் பாடலடிகள், "எமது சிற்றிலைச் சிதையேலே" என்று பிள்ளைத்தமிழில் பாடப்படும் சிற்றிற் பருவ நிகழ்ச்சி யாகும்.

> அகன்பெருஞ் சிறப்பிற் றந்தை பெயரன்
> முறுவலின் இன்னகை பயிற்றிச்
> சிறுதே ருருட்டும் தளர்நடை கண்டே[3]

என்ற ஐங்குறுநூற்றுப் பாடற் செய்தி, 'சிறுதேர் உருட்டி யருளே' என்று பிள்ளைத் தமிழில் பாடப்படும் சிறுதேர்ப் பருவ நிகழ்ச்சியாக விரிவான முறையில் இடம் பெறுவதைக் காண முடிகிறது. இதுபோல் பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் பருவங் களுக்குரிய செய்திகளாக இடம்பெறும் பல செய்திகள் சங்க இலக்கியத்தில் தனிச் செய்திகளாய்க் காணப்படுகின்றன.

---

1. அகநா. 54
2. கலித். 51
3. ஐங்குறு. 403

பிள்ளைத்தமிழ் வித்து

இதனையடுத்து, நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் முதலாயிரத்தில் உள்ள பெரியாழ்வாரின் திருமொழிகளில் பிள்ளைத்தமிழ் இலக்கியக் கூறுகள் மிகுதியும் இடம் பெறுவதைக் காணமுடிகிறது. கண்ணனைக் குழந்தையாய்ப் பாவித்துப் பெரியாழ்வார் முதற்பத்து, இரண்டாம் பத்து என்ற பாடல்களைப் பாடியுள்ளார். இரண்டு பத்திலும் நூற்றியெண்பது பாடல்கள் அடங்கியுள்ளன. முதற்பத்தில் ஒன்பது செயல்களைப் பாடுகின்றார். ஒவ்வொரு செயலுக்கும் பத்துப் பாடல்கள் வீதம் தொண்ணூறு பாடல்கள் உள்ளன. அங்ஙனமே, இரண்டாம் பத்தில் ஒன்பது செயல்களும், ஒவ்வொன்றிற்கும் பத்துப் பாடல்கள் வீதம் தொண்ணூறு பாடல்களும் உள்ளன. முதற்பத்தில், கண்ணனின் பிறப்புக்காக மகிழ்ந்து கொண்டாடுதல் (திருஅவதாரச் சிறப்பு). கண்ணனின் திருமேனி அழகை அடிதொட்டு முடிவரை அனுபவித்துச் சுற்றுப்புறத்தாரையும் காணுமாறு அழைத்தல், தொட்டிலிலிட்டுத் தாலாட்டுதல், குழந்தையோடு விளையாட நிலாவையழைத்தல், செங்கீரை ஆடுதல், சப்பாணி கொட்டுதல், தளர்நடை நடத்தல், ஓடிவந்து தன்னையணைத்துக் கொள்ளுமாறு தாய் அழைத்தல், முதுகைக் கட்டிக்கொள்ள அழைத்தல் ஆகிய ஒன்பது செய்திகள் இடம் பெறுகின்றன.

இரண்டாம் பத்தில் அப்பூச்சி காட்டுதல், மார்பில் பாலுண்ண அழைத்தல், காதுகுத்தி அணிகலன் பூட்டுதல், எண்ணெய் நீராட அழைத்தல், குழல் வாரும்போது பராக்குக் காட்டக் காக்கையை அழைத்தல், மாடுமேய்க்கக் கோல் கொண்டுவரச் சொல்லுதல், பூச்சூட அழைத்தல், திருவந்திக் காப்பிட அழைத்தல், குழந்தையின் குறும்புச் செயல்கள் பற்றிச் சுற்றுப்புறத்தார் முறையிடல் கேட்டுத் தாய் வருந்துதல் ஆகிய ஒன்பது செய்திகள் இடம் பெறுகின்றன. தான் தாய் நிலையில் நின்று கண்ணனைக் குழந்தையாய்ப் பாவித்துக் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளையெல்லாம் தேன்தமிழில் குழைத்துப் பாடியுள்ள பெரியாழ்வாரின் இவ்வருளிச் செயல்களே பிற்காலப் பிள்ளைத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வித்தூன்றின என்பது மிகையாகாது.

பிள்ளைத்தமிழ் வளர்ச்சி

பெரியாழ்வார் காலத்துக்குப் பின் கி.பி. 11ஆம் நூற்றாண்டு வரை தனிப்பட்ட பிள்ளைத்தமிழ் நூல்கள் தோன்றவில்லை. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தர் பாடிய 'குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்' என்பதே பிள்ளைத்தமிழ் இலக்கிய மரபோடு

எழுந்த முதல் பிள்ளைத்தமிழ் நூலாகும். 12ஆம் நூற்றாண்டிற்குப் பின் 16ஆம் நூற்றாண்டுவரை நிலவிய அரசியல் சூழ்நிலைகளினால் பிற சிற்றிலக்கிய வகை நூல்கள் மிகுதியும் தோன்றாதது போலவே பிள்ளைத்தமிழ் இலக்கியமும் தோன்றவில்லை. 17ஆம் நூற்றாண்டினைப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் திருப்புமுனை நூற்றாண்டு எனலாம். 17ஆம் நூற்றாண்டிலிருந்து எண்ணற்ற பிள்ளைத்தமிழ் நூல்கள் வெளிவந்துள்ளன.

பிள்ளைத்தமிழ் இலக்கணம்

புலவர்கள் தாம் விரும்பும் தலைவரையோ கடவுளரையோ குழந்தையாய்ப் பாவித்து அவர்தம் பெருமைகளைப் பத்துப் பருவங்களில் சிறப்பித்துப் பாடுவர். ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப் பாடல்கள் என்ற முறையில் நூறு பாடல்கள் பாடப்படும். பொதுவாக, ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என்று இவ்விலக்கியம் இரு வகைப்படும்.

முதல் ஏழு பருவங்கள் இருபால் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவானவை. காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம். வருகைப் பருவம், அம்புலிப் பருவம் என்பன அவை. சிற்றில் பருவம், சிறுபறைப் பருவம். சிறுதேர்ப் பருவம் ஆகியன மூன்றும் ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய கடைசி மூன்று பருவங்கள். அம்மானை, நீராடல், ஊசல் பருவங்கள் என்பவை பெண்பால் பிள்ளைத்தமிழுக்குரிய கடைசி மூன்று பருவங்கள். பெண்பால் பிள்ளைத்தமிழுக்குரிய கடைசி மூன்று பருவங்களில் சிறிது வேறுபாடும் காணப்படுகிறது.

பருவ விளக்கம்

காப்புப் பருவம் : மூன்று திங்கள் வாய்ந்த இச் சிறு குழந்தையைக் காக்க என கடவுளரையோ, அடியார்களையோ நோக்கிக் கூறுவதாகும்.

செங்கீரைப் பருவம் குழந்தையின் ஐந்தாம் திங்களில் கூறப்படுவது, ஒரு காலை மடக்கி ஒருகாலை நிமிர்த்தி, இரண்டு கைகளையும் நிலத்திலூன்றி, முகத்தை மட்டுமே மேல் நிமிர்த்திக் கொண்டுள்ள குழந்தையை 'ஆடுக' என வேண்டுவதே செங்கீரை.

ஒருதாள் உந்தி எழுந்(து),இரு கையும்
ஒருங்கு பதித்து, நிமிர்ந்து,
அருள்மொழி திருமுகம் அசைய அசைந்தினி(து)
ஆடுக செங்கீரை...

என முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் இதனைக் குறிப்பிடுகிறது.

தாலப் பருவம் இது குழந்தையின் ஏழாம் திங்களில் கூறப்படுவது. தாலாட்டுப் பருவம் என்பதே தாலப் பருவம் எனப் படுகிறது; இது குழந்தையைத் தாலாட்டிப் பாடுவது. இப்பருவப் பாடல்கள், 'தாலோ தாலேலோ' என முடியும்.

சப்பாணிப் பருவம் குழந்தையை இரு கைகளையும் சேர்த்துக் கொட்டுமாறு வேண்டுவது. (சப்பாணி - கைசேர்த்துக் கொட்டுதல்). இஃது ஒன்பதாம் திங்களில் கூறப்படுவது. பெரும்பாலும் பாடல்கள் 'கொட்டுக சப்பாணி', 'சப்பாணி கொட்டியருளே' என்று முடியும்.

முத்தப் பருவம் குழந்தையின் பதினோராம் திங்களில் கூறப்படுவது. குழந்தையிடத்தில், 'முத்தம் தருக' எனத் தாயாரோ பிறரோ வேண்டுவது. பாடல்கள், 'முத்தம் தருகவே', 'கனிவாயின் முத்தமருளே' என்பன போன்று முடியும்.

வருகைப் பருவம் குழந்தையின் பதின்மூன்றாம் திங்களில் கூறப்படுவது. தளர்நடையிட்டு வரும் குழந்தையை, 'வா' என்று அழைப்பதாகும். 'வருகவே', 'வருக வருகவே' என இப்பருவப் பாடல்கள் முடிவனடையும்.

அம்புலிப் பருவம் : இது பதினைந்தாம் திங்களுக்குரியது. அம்புலி – நிலா. குழந்தையுடன் நிலாவை, 'விளையாட வருக' என அழைத்தலைக் கூறுவது. சந்திரனை அழைக்கும்போது முதலில் இன்சொல் கூறி அழைப்பர்; வரவில்லையாயின் பிள்ளைத்தமிழ்க் குழந்தைக்கும் நிலவுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறி நிலவின் சிறுமையையும், குழந்தையின் பெருமையையும் உணரச்செய்து, 'வருக' என அழைப்பர். அதற்கும் வரவில்லையாயின் நிலவுக்கு அது வேண்டும் பொருள்களைத் தருவதாய் அழைப்பர். அதற்கும் வாராதாயின் பாட்டுடைத் தலைவனாகிய இக்குழந்தையால் நீ 'ஒறுக்கப்படுவாய்' (தண்டிக்கப்படுவாய்) என அச்சுறுத்தி அழைப்பர். இதனை வடநூலார், 'சாம, பேத, தான, தண்டம்' என்னும் நால்வகை உபாயம் என்பர். (சாமம் - ஓர் உபாயம்; சமாதானம்; பேதம் - வேறுபாடு; தானம் - கொடை; தண்டம் – தண்டனை.)

இந்நால்வகை நெறியை வைத்துப் பாடவேண்டியிருப்பதால் பிள்ளைத்தமிழில் இப்பருவத்தைப் பாடுதல் கடினம் என்பர். ஆதலால், 'பிள்ளைக் கவிக்கு அம்புலி புலியாம்' என்றனர். இப் பருவப் பாடல்கள் பெரும்பாலும், 'அம்புலி வருக, வருகவே', 'அம்புலீ ஆடவாவே' என முடிவனடைவது வழக்கம்.

சிற்றிற்பருவம் இது பதினேழாம் திங்களில் பாடப்படுவது.[1] சிறுமியர் தாம் சிறுவீடு கட்டி விளையாடும்பொழுது பாட்டுடைத் தலைவராகிய குழந்தை அதனைச் சிதைப்பதாயும், அவரை அதைச் சிதையாதிருக்கச் சிறுமியர் வேண்டுவதாயும் கூறப்படுவது. 'சிறியேம் சிற்றில் சிதையேலே', 'செல்வா சிற்றில் சிதையேலே' என இப்பருவப் பாடல்கள் முடிவதுண்டு.

சிறுபறைப் பருவம் : பாட்டுடைத் தலைவராம் குழந்தையைச் சிறுபறையை முழக்குமாறு கேட்டுக்கொள்வது. குழந்தையின் பத்தொன்பதாம் திங்களில் கூறப்படுவது. 'சிறுபறை முழக்கி யருளே', 'முழக்குக சிறுபறையே' எனப் பாடல்கள் முடிவதுண்டு.

சிறுதேர்ப் பருவம் தலைவராம் குழந்தையைச் சிறுதேரை உருட்டிக்கொண்டு வருமாறு கேட்டுக்கொள்வது, குழந்தையின் இருபத்து ஒன்றாம் திங்களில் கூறப்படுவது. பெரும்பாலும், 'சிறுதேர் உருட்டி யருளே' என்ற முடிவுடன் பாடல்கள் அமைந்திருக்கும்.

பெண்பாற்பிள்ளைத்தமிழில்,

அம்மனைப் பருவம் பாட்டுடைத்தலைவி பலநிற அம்மனைகளை எடுத்து மாறி மாறி எதிர்த்து ஆடுதலைக் குறிக்கும் (அம்மனை - மகளிரின் ஒருவகை விளையாட்டு; காய் உருட்டி விளையாடுவது). 'அம்மானை ஆடியருளே', 'ஆடுக அம்மனையே' எனப் பாடல்கள் முடிவடையும்.

நீராடற்பருவம் தலைவியாகிய குழந்தை புதிய வெள்ள நீர் ஆடுதலைக் குறிக்கும். 'வெள்ளநீர் ஆடியருளே', 'புதுநீர் ஆடி அருளுகவே' எனப் பாடல்கள் முடிவதுண்டு.

ஊசல் பருவம் குழந்தையை வெண்மணிகளால் செய்யப் பட்ட ஊசலில் அமர்ந்து மகிழ்ந்து விளையாடுமாறு கேட்டுக்கொள்வது. 'பொன் ஊசல் ஆடியருளே' எனப் பாடல் முடிவுறும்.

மூன்று, ஐந்து, ஏழு ஆண்டுகள்வரை பிள்ளைப்பருவம் எனப் பகுத்துக்கொள்வாரும் உண்டு; ஆண்பாற்குப் பதினாறும், பெண்பாற்குப் பூப்பு நிகழும் அளவும் பிள்ளைப்பருவம் கொள்ளலும் உண்டு என்றும் சொல்லப்படுகிறது.

கால அளவு மாறுபட்டாலும், பருவங்கள் பத்தாகவே கொள்ளப்பட்டுள்ளன. இதிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இப்பிள்ளைத்தமிழ் இலக்கியம் சில வகையான பாக்களால் பாடப்படலாம் என்று பாட்டியல் நூல்கள் விதிவகுத்திருந்தாலும் ஆசிரிய விருத்தத்தால் பாடப்பட்ட நூல்களே மிகுதியும் உள்ளன.

பிள்ளைத்தமிழ் இலக்கிய வரலாற்றில் சில மரபு மாற்றங்களையும் காண முடிகிறது.

பாட்டுடைத் தலைவரில் மரபு மாற்றம்;

பெயரமைத்தலில் மரபு மாற்றம்;

பருவங்களின் எண்ணிக்கையில் மரபு மாற்றம்;

ஆண்டாள் பிள்ளைத் தமிழ் 11 பருவம், தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத் தமிழ் 12 பருவம்;

பாடல்களின் எண்ணிக்கையில் மரபு மாற்றம் சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத்தமிழ் ஒவ்வொரு பருவத்திற்கும் 7 பாடல்கள்; கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் - ஒவ்வொரு பருவத்திற்கும் மூன்று பாடல்கள். அநுமார் பிள்ளைத்தமிழ் - ஒவ்வொரு பருவத்திற்கும் இரண்டு பாடல்கள்; சங்கரர் பிள்ளைக்கவி - ஒவ்வொரு பருவத்திற்கும் ஒரு பாடல்,

காப்புப் பருவக் கடவுளரில் மரபு மாற்றம், காப்புப் பருவப் பொருளில் மரபு மாற்றம் போன்ற சில மரபு மாற்றங்களும் காணக்கிடக்கின்றன.

மங்கலங்கிழார் பிள்ளைத்தமிழ்

இத்தகு பின்னணியைக் கொண்ட இலக்கிய வகையின் இனியவொரு நூலாகவே, 'தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழார் புதுமைப் புரட்சிப் பிள்ளைத்தமிழ்' என்னும் இந்நூல் வெளிவந்திருக்கிறது. இந்நூலினை கவிஞர் வா.சி. தனபாலன் இலக்கண அமைதி பொருந்த ஆக்கியுள்ளார் என்பதை நூல் முழுமையையும் படித்துப் பார்க்கும்போது அறிந்து கொள்ள முடிகிறது. இந்நூல் பிள்ளைத்தமிழ் இலக்கிய மரபிலிருந்து சிறிதும் வழுவாது படைக்கப்பட்டுள்ளது.

தமிழ்க் கொண்டலாம் மங்கலங்கிழாராகிய குழந்தையைக் காக்குமாறு தமிழையே அழைத்துக் காப்புப் பருவம் பாடியிருப்பது மிகப் பொருத்தமான ஒன்றாம். அனைத்துப் பருவங்களும் மரபு, மணம் கமழ்ந்து மங்கலங்கிழார் மாண்புகளை மன்பதைக்குப் படம் பிடித்துக் காட்டி நிற்கின்றன.

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்

என்று சொன்ன திருவள்ளுவர் முதல், 'ஓடி விளையாடு பாப்பா' என்று பாடி மகிழ்ந்த இருபதாம் நூற்றாண்டுப் பாரதி வரை குழந்தை இன்பத்தில் திளைக்காத கவிஞரே இல்லை. பெரியோரை - கடவுளரைப் பற்றியதாய் இருந்தாலும், அவர்களைக் குழந்தையாய்ப் பாவித்துப் பாடப்படுவதால் பிள்ளைத் தமிழிலக்கியம் கொள்ளையின்பம் தரும் தனிச் சிறப்பை உடையதாய் அமைகிறது. கருப் பொருளறிவோடு உயர்ந்த கற்பனை வளமும், உணர்ச்சிப் பெருக்கும், ஓசைநயமும், ஆழ்ந்தகன்ற அறிவும் உடையோராலேயே பிள்ளைத் தமிழ் இலக்கியம் படைக்க முடியும். கவிஞர் வா.சி.த. இத்திறன்களோடு பாடியிருப்பதால் இந்நூல் சிறப்பாக அமைந்துள்ளது என்று கூறமுடிகிறது.

பாட்டுடைத் தலைவர் வரலாறு

இப்பிள்ளைத் தமிழின் பாட்டுடைத் தலைவராகிய மங்கலங்கிழார் அன்றைய வடஆர்க்காடு (இன்றைய திருவள்ளூர்) மாவட்டத்தில் அரக்கோணத்தை அடுத்துள்ள, 'புளிய மங்கலம்' என்னும் ஊரில் பிறந்தவர்; பெற்றோர் இட்ட பெயர் குப்புசாமி. தொடக்கப்பள்ளிக் கல்வியைத் தன் ஊரில் கற்று முடித்ததும், உயர்நிலைப் படிப்பைச் சென்னையிலிருந்த தன் தமக்கை, வீட்டிலிருந்து கற்றுவந்தார். தமக்கை கணவர் இறந்துவிடவே, படிப்பை நிறுத்திவிட்டு, தச்சுத் தொழில் செய்து குடும்பத்திற்கு உதவி வந்தார். தொழிலில் இருந்து கொண்டே ஓய்வு வேளைகளில் ஆசிரியர்களை அணுகிப் பாடம் கேட்டு வந்தார்.

தமிழறிஞர் டி.என். சேஷாசலம், தம் இல்லத்தில் நடத்தி வந்த இரவுப் பள்ளியில் சேர்ந்து முறையாகத் தமிழ் பயின்றார். தமிழை முறையாகவும், திறமாகவும் தமிழறிஞர் கா.ரா. கோவிந்தசாமி முதலியாரிடம் கற்றறிந்தார். திருக்குறளை வ.உ.சிதம்பரனாரிடமும், தத்துவத்தை அறிஞர் கோ.வடிவேல் செட்டியாரிடமும் பயின்றார். அவருடைய தமிழார்வத்தைக் கண்ட அறிஞர்கள் அவரை, 'வித்தியானந்தர்' என வழங்கி வந்தனர். சங்க இலக்கியங்களை ஊன்றிக் கற்றதால், அவற்றிலுள்ள, 'அரிசில் கிழார்', 'கோவூர் கிழார்' எனும் பெயர்களைக் கண்டு, தன் பெயரை தன் ஊரோடு சேர்த்து, 'மங்கலங் கிழார்' என அமைத்துக் கொண்டார். சிலகாலம் சென்னையில் தமிழாசிரியர் பணியாற்றி வந்த அவர், தன் ஊர் திரும்பி, தன் தந்தையார் செய்துவந்த, 'மணியம்' வேலையை ஏற்றுக்கொண்டார்.

அரசாங்க உதவி எதுவும் பெறாமலேயே, தொடக்கப்பள்ளி ஒன்றைத் தொடங்கித் தாளாளராய் இருந்து வந்தார். தன் சொத்துகளை விற்று ஆசிரியர்கட்கு ஊதியம் வழங்கினார்.

நெசவுத் தொழிலை முதன்மைத் தொழிலாய்க் கொண்டிருந்த அப்பகுதியில் தெலுங்கு பேசுவோர் மிகுந்திருந்தனர். அங்கு எண்ணற்றவர்களுக்கு அவர் தமிழ் கற்பித்தார். ஊர்தோறும், 'அறநெறித் தமிழ்ச் சங்கம்' அமைத்து ஓய்வும் தளர்வுமின்றித் தமிழ்ப்பணி ஆற்றிவந்தார். இன்றும் தணிகைப் பகுதி மக்கள் மங்கலங்கிழாரை, 'எம் ஆசிரியர்; எம் ஆசிரியர்' என மனமகிழ்வோடும் மிகுந்த மதிப்போடும் கூறி வருகின்றனர்.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்' எனச் சங்க இலக்கியங்கள் தமிழ்நாட்டிற்கு வேங்கடத்தை வட எல்லையாகக் கூறின. மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது வேங்கடம் பறிபோனது; திருத்தணிகையையும் ஆந்திராவுக்கு வழங்க இருந்தனர். மங்கலங்கிழாரின் ஆர்வத்தால் திருத்தணிகை தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட வேண்டும் என மக்கள் ஆர்த்தெழுந்து போராடத் தொடங்கினர். பின்னர் அது சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் தமிழரசுக் கழக எல்லை மீட்புப் போராட்டமாய் உருவெடுத்தது; பல்லாயிரவர் சிறையை நிரப்பினர்; மங்கலங்கிழாரும் சிறை புக நேர்ந்தது. இறுதியில் போராட்டம் வெற்றி பெற்றுத் திருத்தணிகை தமிழகத்துடன் இணைக்கப்பட்டது. இந்த எல்லை மீட்புப் பணிக்கு வித்திட்டவர், 'மங்கலங்கிழாரே' எனலாம்.

ஐம்பத்தெட்டு ஆண்டுகள் வாழ்ந்த அவர் 1953இல் மாரடைப்பினால் மரணமுற்றார். திருத்தணிகைப் பகுதியில் தமிழார்வம் இன்றும் தழைத்து நிற்பதற்குக் காரணமாய் அமைந்திருப்பது மங்கலங்கிழார் ஊட்டிய தமிழ் அறிவும் உணர்ச்சியுமே ஆம்.

மங்கலங்கிழாரின் பெருமைகள்

பாட்டுடைத் தலைவராகிய தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழார் இந்நூலாசிரியர் தனபாலனின் ஆசிரியர் ஆவார். அவரை ஆசிரியராக மட்டும் கொள்ளாமல் தனக்கு வழிகாட்டியாகவும், தந்தையாகவும் கடவுளாகவும் தனபாலன் ஏற்றுக்கொண்டிருந்தார். அவரிடம் நெருங்கிப் பழகிய காரணத்தாலேயே அவர்தம் இயல்புகள் குணநலன்கள், பணிகள், தொண்டுகள் முதலியவற்றை அப்படியே எடுத்துச் சொல்ல இவரால் முடிந்திருக்கிறது.

பிள்ளைத்தமிழ் இலக்கிய மரபைப் பின்பற்றிப் பாட்டுடைத் தலைவராகிய மங்கலங்கிழார் அவர்கள் பற்றிய செய்திகள் நூல் முழுவதும் பரந்து கிடக்கின்றன. அவற்றைக் கவிஞர் மொழிகளா லேயே தொகுத்தறிவது பொருத்தமாகும்.

மங்கலப் பதிதன்னில்
தேன்மேய் மலரெனத்
திரள்சுவைப் பழமெனத்
தோர்ந்தமெய்ஞ் ஞானமெனத்
தேர்ந்தவர்; தேரிடு
திறம்பெறும் மங்கலத்
தே(சு)உயர் மகன். (பக். 2)

தீந்தமிழ்ச் சாறெலாம்
திரண்டது போல்வரும் தேன்மகன் (பக். 8)

வளர்கலைக் குன்றம்; தெளிமனத் தென்றல் (பக். 18)

ஆலயம் புரியா அரும்பணி புரிந்தவர்
போகுயிர் களுக்கோர் ஆருயிர் ஆனவர் (பக். 20)

அருளொன்றே கருத்தாகி,
அறவழியே தம்வழியாய், ஆக்குவோரை
ஆக்குதற்கே வந்தவன் (பக். 22)

புன்மையிருள் போக்கிடவே
போந்திட்ட தண்ணிலவு,
புத்தொளியால் சித்தொளிசெய்
போதாந்த சூரியன் (பக். 25)

வேங்கடத்தைக் கொள்ளப்பலசான்றைக்
கொடுத்தளித்த கொற்றவன்! (பக். 26)

கன்னல் தமிழ்க் கடற்குள்
கவிந்தெழுந்த காவியமாம்
கப்பல் தம்மைக்
கற்போர்த் துறைமுகத்தின்கண்
நிறுத்தித், தேமதுரக்
கட்டி தம்மைத்
தென்றல் தவழவரும்
செந்நாவாம் இயந்திரத்தால்
இறக்கு வோன். (பக். 27)

தக(வு)இல் கல்விக்
கோரைகளாம் களையெடுத்துக்
குளிர்பயிரைக் கண்டவன் (பக். 47)

வருந்திய மக்களின்
வருத்தம் களையநூம்

வருத்தும் பாராமே,
வற்றிடாத் தமிழினால்
வளஉளம் நாட்டலின்
வருந்தி மகிழ்வோன். (பக். 58)

உளம்விளக்கும் தொண்டதிலே
உயர்ந்தவன். (பக். 63)

மேலோர் வாழ்வும்
தளிர்த்திடவே, தமிழளிக்கும்
தன்மையினான். (பக். 68)

உள்ளத்துள் உறுபொருளை
கேட்போர்க் கெல்லாம்
விருந்தாக, மருந்தாக,
விரைந்தளித்தே, வாழ்வுதமை
விரும்பச் செய்யும் திண்ணவன். (பக். 98)

உழைத்து உழைத்து,
ஊர்கள்பல செழித்தோங்க,
உண்மையுணர் கல்வி தந்தோன். (பக். 98)

இவ்வாறாகப் பாட்டுடைத் தலைவரைப் பல கோணங் களிலும் கவிஞர் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

தமிழ் மணம்

நூல் முழுவதும் தமிழ் மணம் கமழுவதைக் காணமுடிகிறது. மங்கலங்கிழாராகிய குழந்தையைக் காக்குமாறு தமிழை வேண்டிக் கொண்டு பாடப்பட்டுள்ள காப்புப் பருவத்தில் தமிழின் தொன்மை, சிறப்பு, வளம், ஆற்றல் முதலியன விரிவாக விளக்கப்பட்டுள்ளன. பிற இடங்களிலும் ஆங்காங்கே தமிழ்மொழிச் சிறப்பு பேசப்படுகிறது. இப்பகுதிகள் ஆசிரியரின் தமிழ்ப் பற்றுக்குச் சான்று பகருகின்றன.

ஏன்? எதற்கு? என்பவர்க்கு
ஏற்படும் ஐயங்கள்
ஏகிடத் தெளிவு அளிக்கும்
என்தமிழ் அன்னை. (பக். 2)

ஆதிமனிதரின் ஆதிமனத்துதி
அருந்தமிழ்! (பக். 5)

நாவலர் நாவை
நடத்திடு நற்றமிழ். (பக். 6)

கூடிய தத்துவக் குவிமணி
இலக்கியக் கொழுஅணி பூண்டவளாம்,

கோமகர் நாமகர்
கும்பிடு தமிழ்மகள். (பக். 9)

எண்ணின் இனித்திடும்;
எழுதின் இனித்திடும்;
எடுத்தே சொல்லிடிலோ,
இவ்வுல(கு) உள்ளவர்
அன்னவர் உள்ளமும்,
ஏற்றே, இனித்திடுமாம்
தெண்டமிழ் ஓடை. (பக். 54)

மங்கலப் பதி

பாட்டுடைத் தலைவர் பிறந்த ஊராகிய மங்கலப் பதி பலவாறாய்ச் சிறப்பித்துப் பேசப்படுகிறது.

"அழகான ஏரி, அதிலே மீன்கள் மேய்ந்து கொண்டிருக்கும், நீரோ பால்போன்ற தன்மையது. அவ்வூரில் உள்ள பயிர்களாகிய குழந்தைகளுக்கெல்லாம், நீராகிய பாலினை ஊட்டிப் பயன் விளைவிக்கும் ஏரியாகிய தாய் கருணை உள்ளத்தோடு காட்சி யளிக்கும்படியானது மங்கலப்பதி (பக். 2).

"காளைகள் களித்திடும்; கறவைகள் வளம்பெறும்; வயல்களி லெல்லாம் நெல்மணிகள் ஒளிரும்; அவற்றை அறுவடை செய்து களத்தின்கண் கண்போலவும் மனம்போலவும் மக்கள் பொதி கண்டு மகிழ்வார்கள்; சிறப்புடைய மங்கையர்கள் வேளை தவறாமல் விருந்தினரை ஓம்பிப் பெருமை சேர்க்கும்படியானது மங்கலப்பதி" (பக். 6).

என்பன போன்ற வருணனைகள் நம்மை மங்கலப் பதிக்கே அழைத்துச் செல்கின்றன.

உருவகங்கள்

வருணனை மட்டுமல்ல, நூலில் ஆங்காங்கே இடம்பெறும் உருவகங்களும் நம் உள்ளத்தைத் தொட்டு நிற்கின்றன.

மருந்ததன் முளை; மங்கலத்தளிர்;
மாபெருந் தத்துவம்; மாண்பதன் சுவடு;
கருவினுள் திரு; கண்ணினுள் மணி;
கனிகளின் தனிச்சுவை; உயர்புகழ் மலர்;
உண்மையின் திண்பொருள், உளம்பெறு
மானுடர் உளந்துதி பொருள் (பக். 11)

என மங்கலத்தாரை உருவகிக்கும் பகுதியில் இதனை நன்கறியலாம். பொருள் விளக்கம் பெறப் பொருத்தமான உவமைகளையும் ஆசிரியர் கையாளுகிறார்.

"மேகமானது தான் எவ்வளவு கருத்தாலும் தன்னைப்பற்றிக் கவலைப்படாமல் கன மழையைப் பொழிகிறது. அறுகம்புல்லானது தன்னை எவ்வளவுதான் களைந்தெறிந்தாலும் மீண்டும் வளர்ந்து மக்களுக்கு மருந்தாய்ப் பயன்படுகிறது. அதுபோலத் தமக்கு எவ்வளவு வருத்தம் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் மீண்டும் மீண்டும் தமிழினால் பிறர்க்குத் தொண்டு செய்து மகிழ்பவர் மங்கலத்தார்" (பக். 58) என வரும் உவமைகள் எண்ணி இன்புறற்குரியன.

ஓசை நயம்

நூலின் ஓசை நயத்திற்கும் குறைவில்லை. தாலப் பருவத்திலும், சப்பாணிப் பருவத்திலும், சிறுபறைப் பருவத்திலும் ஏற்ற ஓசைகள் பொருத்தமுற அமைந்து மெருகூட்டுகின்றன.

தகிடதோம் தாமெனத்
தத்தரி கிடவெனத்
தாளடி நடம்பயின்றே;
தண்டமிழ் அன்னையள்
அண்டம் மகிழ்ந்திடத்
தகுதியின் வந்திடுக. (பக். 4)

செஞ்சொற் றிறம்பெறு தீந்தமி ழாய்ந்தே,
சேரும் உட்பொருள் தத்துவம் தேற,
ஜெஞ்ஜெ ணுக்குஜெ ணுக்கு ஜெணுக்கெனச்
சேரத் தாளங்கள் தீந்தமிழ் பாடியே,
பஞ்ச மலர்முகப் பாலக அறைக!
பறைகள் அறைகநம் பைந்தமிழ் பாடியே! (பக். 85)

என்பன போன்ற இடங்கள் ஓசை நயத்திற்குச் சிறந்த சான்றுகளாம்.

பொருள் நயம்

நிலவுக்கு மதி என்றும் பெயர். அந்த மதி, மதி நிறைந்த மங்கலத்தாரோடு விளையாட வரவில்லை. மதியென்று பெயர் கொண்டிருந்தும் அதற்கு மற்றவரை மதிக்கத் தெரியவில்லை.

மதியெனப் பெயர்கொண்டே,
மதியாமை காட்டினாய்,
மதியோமே யாங்கள் உன்னை (பக். 71)

என்றும்,

முகம லர்தனுள் மூழ்கிய நான்மலர் (பக். 83)

(முகமாகிய ஒரு மலரில் கண், செவி, வாய், மூக்கு எனும் நான்கு மலர்கள் முகிழ்க்கும் மங்கலன்)

என்பன போன்றும் வரும் பற்பல இடங்களில் பொருள் நயம்சிறந்து நிற்பதறிந்து சுவைத்தின்புற முடிகிறது.

ஆசிரியர் உணர்ச்சியைக் கையாளுந் திறம் போற்றற்குரியது. குழந்தைகள் சிற்றில் கட்டி விளையாடுகின்றனர். மங்கலத்தாராகிய சுட்டிக் குழந்தை அவர்களின் மணல்வீட்டைத் தன் சிறிய கால்களால் சிதைத்துக் குறும்பு செய்ய வருகின்றான். அது கண்ட குழந்தைகள்,

> "மங்கலனே! நாங்கள் பண்பு என்ற பெருமணலில் பாசம் எனும் சுவர் எழுப்பி வீடு கட்டியுள்ளோம். எங்கள் உணர்ச்சிக்குச் செங்கற்பொடியே பாயசம்! பச்சிலைகளே கூட்டுக்கறி! பரலைக் கற்கள் எல்லாம் உண்ணுகின்ற சோறு! ஆம். உணரார்க்கோ இவைகள் வெறும் மணலாகவும் கல்லாகவும் இலைகளாகவும் பரல் களாகவும் தெரியும். நாங்கள் படைத்துள்ள இனிய விருந்திற்கு உன்னையும் அன்புடன் அழைக்கின்றோம். கண்ணான மாமணியே! காண்போர்க்கெல்லாம் கவிமலராகவும், கனிநயமாகவும் காட்சி தருபவனே! கயவர்கள் கூடிச் செய்யும் அட்டூழியங்களை விரைந்து சென்று சிதைக்கும் உனது சீர்மிக்க கால்களால் எங்களின் இந்தச் சிறிய வீட்டை அருள்கூர்ந்து சிதைத்து விடாதே" (பக். 72).

என்று கெஞ்சுகின்றனர். இப்பொருளமைந்த பாடலை நாம் படிக்கும்போது குழந்தைகளுக்காக நாமும் மங்கலத்தாரிடம் மன்றாட வேண்டியவர்களாகிறோம்.

அம்புலிப்பருவ அழகு

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் வெற்றி அம்புலிப்பருவம் பாடுவதில்தான் அடங்கியிருக்கிறது எனலாம். இவ்வாசிரியர் இச்சூத்திரத்தை நன்கு புரிந்துகொண்டவராய் அம்புலிப் பருவத்தை ஆற்றலுற அமைத்துள்ளார். சாம, பேத, தான, தண்டம் எனும் நான்கு முறைகளையும் கையாண்டு கவிஞர் பாட்டுடைத் தலைவரது பெரும் பண்புகளை நன்கு விளக்கியிருக்கிறார்.

> "அம்புலியே! நீயும் குழந்தைகள் மகிழ்ச்சியடையும் படி காட்சி தருகிறாய். கதிரினிலும் குளிர் பரப்புகிறாய். கவலை போக்குகிறாய்; அதேபோல மங்கலத்தாரும் காட்சிக்கு இனியவர்; அறிவுக்கதிர் பரப்புபவர்; தொண்டினால் பிறர் கவலை போக்குபவர்" (பக். 62).

என்று சமப்படுத்திக் கூறுவதையும்,

"அம்புலியே! நீ வானத்தில் வருவதும் போவதுமாகி அலைந்து கொண்டிருக்கிறாய். அலையாமல் பேரமைதி (நிலைத்த புகழ்) வேண்டுமெனில் ஆளனிவனுடன் ஆடவா!" (பக். 76)

என்று தானமீந்து பாடுவதையும்,

"அம்புலியே! ஒளியற்ற உனக்கு ஒளியினை யார் தந்தது? அதனை நீ தெரிவிக்க மறுப்பதால் ஆசானுக்கு வஞ்சம் செய்தவளாகிறாய்; அதுமட்டுமன்றி அந்த ஆசானுக்கு (சுதிரவனுக்கு) எதிராக அவன்தந்த ஒளியை இரவில் மட்டும் காட்டிச் செல்கிறாய், ஆனால் மங்கலத் தாரோ நேசமுடனும் பாசமுடனும் தன் நெஞ்சத்தே ஆசானை நினைப்பவர். அவர் புகழ் விளங்க இரவும் பகலும் அனைவருக்கும் ஒளி காட்டி நிற்பவர்" (பக். 70)

என்று பேதப்படுத்திக் காட்டுவதையும்,

"அம்புலியே! நீ மங்கலத்தாரை மதித்து அவரோடு விளையாட வராததால்தான் சிறையைக் காட்டிலும் இருள் மிக்க சிறையாகிய அமாவாசைச் சிறையினில் உன்னைத் தள்ளிவிட்டோம், அச்சிறையிலிருந்து நீ விடுபட வேண்டுமெனில் மங்கலத்தாரோடு ஆடவா!" (பக். 71)

என்று தண்டனையளித்து அச்சுறுத்துவதையும் பார்க்கும்போது அம்புலிப் பருவம் சிறப்பாக அமைந்திருப்பதைக் காண முடிகிறது. எனவே, பிள்ளைத்தமிழ் இலக்கியம் படைப்பதில் சுவிஞர் வெற்றி பெற்றுள்ளார் என்று துணிந்து கூறலாம்.

கருத்து மணிகள்

ஒருவர் உழைத்திட ஒன்பதுபேர் உண்ணுதல் உலகின் வளமைக்கு ஒத்ததுவா? ஒன்பது பேரும் உழைத்து உழைத்து உண்டிடல் உலகத்தின் வளமைக்கு ஒத்ததுவா?

படிப்பும் பணமுமே பாங்கான வாழ்வென்று பண்பாட்டைச் சிறிது மெண்ணார், பட்டங்கள், பலபெற்றும், பணங்கோடி சேர்த்திட்டும் பற்றுறவு காணமாட்டார் (பக். 97).

"வடைகொண்டு நரியிடம் ஏமாந்த காக்கையாய் வாழ்வதும் ஆகலாமோ, வழியது தெரிந்தபின் வழிவிட்டு மாறுவழி வலியவே செல்லலாமோ? நடைசென்ற இடமெல்லாம் நல்லவை தேக்காது நவைகளைத் தேக்கலாமோ? நாடகமாம் வாழ்வில் நாமேற்ற பாத்திரம் நலிந்திட்டுப் போகலாமோ" (பக். 101).

என்பன போன்ற கருத்து மணிகள் இந்நூல் மாலையில், ஆங்காங்கே தொடுக்கப்பட்டு ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன.

முத்தாரம்

தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழாரை முழுதும் உணரும் வண்ணம் ஆசிரியர் இந்நூலில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். எளிமையும், இனிமையும், கற்பனையும், உணர்ச்சியும் ஓசை நயமும், கருத்துச் செறிவும் மிடைந்த தமிழ் மாலையாய் இந்நூல் அமைந்துள்ளது. இதனை உள்ளத்துச் சூட்டிக் கொள்வார் உயரின்பம் காண்பர் என்பது உறுதி. தமிழ்த் தாய்க்கு முத்தாரம் சூட்டியுள்ள கவிஞர் அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன். அவர்தம் தமிழ்த் தொண்டு சிறக்க வாழ்த்தி மகிழ்கிறேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் வா.சி. தனபாலன்
வகைமை	சிற்றிலக்கியம் (பிள்ளைத் தமிழ்)
வெளியீடு	மங்கலங்கிழார் இலக்கிய மன்றம் குருவராயப்பேட்டை. (1989)

31

பாளையம் கேசியெம் பிள்ளைத் தமிழ்

பண்டைத் தமிழிலுள்ள சிற்றிலக்கியங்களை நம் முன்னோர் தொண்ணூற்று ஆறு வகை என்றனர். அவற்றுள் பிள்ளைத் தமிழ் என்பதும் ஒரு வகை. சிற்றிலக்கிய வகையுள் பிள்ளைத் தமிழே தெள்ளுதமிழ்ச் சுவையாலே கொள்ளையின்பம் மிகுதியும் தரும் என்று துணிந்து கூறலாம். பிள்ளை என்றாலும் தமிழ் என்றாலும் இனிமை என்றுதான் பொருள். எனவே, பெயருக்கேற்பப் பிள்ளைத் தமிழ் நூல்கள் இரட்டிப்பின்பம் தருவதில் ஒன்றும் வியப்பில்லை. தன்னால் விரும்பப்படும் கடவுளையோ, தலைவரையோ பிள்ளைப் பருவத்தினராய்க் கருதி பத்துப் பருவங்களில் அவர்தம் பெருமையைப் பாடுவதே பிள்ளைத் தமிழ் நூலாகும்.

பிள்ளைத் தமிழ் இலக்கணம்

புலவர்கள் தாம் விரும்பும் தலைவரையோ கடவுளையோ குழந்தையாகப் பாவித்து அவர்தம் பெருமைகளைப் பத்துப் பருவங்களில் சிறப்பித்துப் பாடுவர். ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப் பாடல்கள் என்ற முறையில் நூறு பாடல்கள் பாடப்படும். பொதுவாக, ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என்று இவ்விலக்கியம் இரு வகைப்படும்.

முதல் ஏழு பருவங்கள் இருபால் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவானவை. காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம். வருகைப் பருவம், அம்புலிப் பருவம் என்பன அவை. சிற்றில் பருவம், சிறுபறைப் பருவம். சிறுதேர்ப் பருவம் ஆகியன மூன்றும் ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய கடைசி மூன்று பருவங்கள். அம்மானை, நீராடல், ஊசல் பருவங்கள் என்பவை பெண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய கடைசி மூன்று பருவங்கள். பெண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய கடைசி மூன்று பருவங்களில் சிறிது வேறுபாடும் காணப்படுகிறது.

இலக்கணங்கள் எப்படி இருப்பினும் இதுகாறும் எண்ணற்ற பிள்ளைத் தமிழ் நூல்கள் எழுந்துவிட்டன என்பதும், அவைகள்

அத்தனையும் தீந்தமிழின் தெள்ளமுதச் சுவையை அள்ளித் தருகின்றன என்பதும் இனிப்பான உண்மை. அத்தகைய மரபில் வந்ததுதான் இந்தப், "பாளையம் கேசியெம் பிள்ளைத் தமிழ்". நாஞ்சில் பெருங்கவிஞர் ஆரிது அவர்கள் தன் புலமைத் திறத்தை யெல்லாம் இந்நூலிலே கொட்டி வைத்திருக்கிறார் என்று சுருக்கமாய்ச் சொல்லலாம். ஆசிரியர் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் திறம் கொண்டவர் என்பதை நூலின் தலைப்பிலிருந்தே அறிய முடிகிறது.

இந்நூற் பெயரில் உள்ள பாளையம் என்பது மதுரை மாவட்டத்தில் உள்ள உத்தமபாளையத்தைக் குறிக்கிறது. கேசியெம் என்பது கே.சி.முகமது இசுமாயில் என்னும் பெரியாரைக் குறிக்கிறது. எனவே, மதுரை மாவட்டம் உத்தமபாளையத்தைச் சேர்ந்த கே.சி.முகமது இசுமாயில் என்னும் சான்றோரைக் குழந்தையாய் வைத்துப் பாடப்பட்ட பிள்ளைத் தமிழ் என்பது நூற்பெயரில் விளக்கமாக அமையக் காண்கிறோம்.

"பாட்டுடைத் தலைவரான கே.சி. முகமது இசுமாயில் அவர்கள் 66 வயது நிரம்பிய பெரியவர்; பெருஞ்செல்வந்தர்; விடுதலைப் போராட்டத்தில் பலமுறை சிறைசென்றவர்; பழுத்த தேசியவாதி; மறந்தும் புறந்தொழா இசுலாமியர்; எல்லாவற்றுக்கும் மேலாக அவர் ஒரு நல்ல பண்பாளர்; ஒரு காவியத் தலைமகனுக்குரிய நற்குணங்கள் பலவும் வாய்க்கப்பெற்றவர். இத்தகைய சான்றோரின் தேசியத் திருவாழ்வும் நற்பண்பு நலன்களும் என்னை மிகவும் கவர்ந்துவிட்டன. அவைகள் நிச்சயமாகச் சொல்லப்பட வேண்டும் என்று ஏதோ ஒன்று என்னை உந்திக்கொண்டே இருந்தது. எனவே, இந்நூலை எழுதினேன்" என்று ஆசிரியர் கூறுகிறார். ஆரிதின் அவ்வுந்துதலுக்குத் தமிழுலகம் நன்றி செலுத்த வேண்டும். அவ்வுந்துதல் இல்லா விட்டால் தமிழன்னைக்கு இவ்வணிகலன் கிடைத்திருக்கா தல்லவா?

நாஞ்சில் ஆரிது அவர்கள் பெருங்கவிஞர். பழந்தமிழ்ப் பண்பில் ஊறியவர். எடுத்ததை இனிமையாகவும் எளிமையாகவும் பாடக்கூடியவர். அப்படிப்பட்டவரின் படைப்பைப் பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. எனவே, ஒன்றிரண்டைத் தொட்டுக்காட்டி எஞ்சியவற்றை உங்களிடமே விட்டு விடுகின்றேன்.

இவ்வாசிரியரும் முன்னோர் முறையைப் பின்பற்றிப் பாட்டுடைத் தலைவரின் பாங்கினைப் பத்துப் பருவங்களில்

அழகுற விளக்குகிறார். பிள்ளைத் தமிழ் நூலைப் பொறுத்தவரை அம்புலிப் பருவமே மிகச் சிறப்பு வாய்ந்தது என்று பொதுவாய்க் கூறுவர். எல்லாப் பருவமுமே இனிமையானதுதான் என்பதை ஆசிரியர் இந்நூல் வாயிலாய்க் காட்டியிருக்கிறார் எனலாம். படிக்கும்போது ஒவ்வொரு பருவமும் ஒவ்வொன்றை விஞ்சி நிற்பதை உணர முடிகிறது. காப்புப் பருவத்திலேயே ஆசிரியரின் கவித்திறத்தையும், கருத்து வலிவையும் நாம் கண்டுகொள்ள முடிகிறது. காப்புப் பருவத்தில் கடவுளர் பலரையோ, தலைவர்கள் பலரையோ, வான், மழை, தமிழ் போன்ற உயர் பொருள்கள் பலவற்றையோ வாழ்த்திக் குழந்தையைக் காக்குமாறு வேண்டுவதே பெரும்பாலான பிள்ளைத் தமிழ் நூல்களில் உள்ளன. ஆனால், இந்நூலின் ஆசிரியர் தம் சமயக் கொள்கைக்கேற்றவாறு அல்லாஹ் ஒருவனையே எல்லாப் பாடல்களிலும் வணங்கித் துதித்துக் குழந்தையைக் காக்குமாறு வேண்டியுள்ளார். அல்லாஹ்வைத் துதிக்கும் ஒன்பது பாடல்களும் உள்ளபடியே நெஞ்சை அள்ளுகின்றன.

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், சேக்கிழார் பிள்ளைத் தமிழ், முதலியவற்றில் செங்கீரைப் பருவத்தில் 'செங்கீரை ஆடியருளே' என்றும், 'ஆடுக செங்கீரை' என்றும், 'செங்கோ செங்கீரை' என்றும் முடியும் பாடல்களே முறையாக அமைந்துள்ளன. ஆனால், இந்நூலில் ஆசிரியர், 'ஆடுக செங்கீரை' என்றும், 'செங்கீரை ஆடியருளே' என்றும், 'செங்கோ செங்கீரை' என்றும் முடியும் பாடல்களை முறையே அமைத்துள்ளார்.

குழந்தை உடனே ஆடித் தன் ஆவலைத் தீர்க்க வேண்டும் என்ற துடிப்பில், 'ஆடுக செங்கீரை' என்று முதலில் வேண்டிக் கொண்டாரோ? அவ்வாட்டத்தில் நெஞ்சைப் பறிகொடுத்த அவர் மேலும்மேலும் ஆவல் தூண்டுவதால், 'செங்கீரை ஆடியருளே' என்று அடுத்துப் பணிவாகக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாரோ? ஆடிக் கொண்டிருக்கும் குழந்தைக்குச் சொல் புரியாவிட்டாலும் பொருள் புரியும் என்ற கருத்தில், 'செங்கோ செங்கீரை' என வைப்பு முறையை வைத்துக் கொண்டாரோ?

தாலப் பருவம், சப்பாணிப் பருவம், அம்புலிப் பருவம் முதலியவற்றிலும் ஆசிரியர் புதிய இனிய ஓசைகள், கருத்துகளை அள்ளி வழங்கி இருக்கிறார். அவற்றையும் எல்லாரும் நுகர வேண்டும்.

கூறவந்த பாட்டுடைத் தலைவரின் பண்பு நலன்களை ஆசிரியர் ஆங்காங்கு அழகுறக் காட்டியுள்ளார். கே.சி.எம். பெரியவர், இல்லையென்று வந்தோர்க்கு இல்லையென்னாது பெருமளவில் உதவி புரிபவராம். தவறு செய்தோர்க்குக்கூட தண்டனையைக் குறைவாகவும், தானத்தை அதிகமாகவும் கொடுக்கக்கூடிய உத்தமராம். அவர் பெய் என்று கேட்கும் நேரத்தில் பெய்து வளஞ்சேர்க்கும் மழையை ஒத்தவராம்!

இதனை ஆசிரியர்,

பெரிதாக தானமும், சிறிதாக தண்டமும்,
பெய்துமற் றோரை ஆளும்
பெய்யெனப் பெய்மழைப் பாளையம் கேசியெம் (காப்பு)

என்ற அடிகளில் எடுத்துக் காட்டுகின்றார்.

நம்மை அடிமையாக்கி ஆண்ட வெள்ளையர்களை மட்டும் அவருக்கு பிடிக்காது. மற்ற எல்லோருடனும் அவர் அன்புடன் பழகுவார்.

நாற்றமெய் வெள்ளையர் நீங்கலாய் இந்திய
நஞ்சு நாகங்களையும்
தேளையும் நட்பாக்கும் பாளையத் தரசு நீ (செங்கீரை)

என்கிறார் ஆசிரியர். இந்தியாவில் பிறந்த நஞ்சு நாகங்களையும் தேளையும்கூட அவர் நட்பாக்கிக் கொள்ளுவார் என்றால் அவர் பழக்கத்திற்கு எவ்வளவு இனியவர் என்பதையும் எத்தகைய நாட்டுப்பற்றாளர் என்பதையும் இதைவிட எப்படிச் சிறப்பாய்ச் சொல்ல முடியும்?

இங்ஙனம் இனியவரும் ஒழுக்க சீலருமான இவர் எதைச் சுவாசிக்கிறார் தெரியுமா?

தேசியம் சுவாசிக்கும் கேசியெம் செல்வ நீ
செங்கீரை யாடியருளே

என்ற ஆசிரியர் கூற்று இதற்கு விடை தரக் காண்கிறோம்.

வெள்ளையரின் ஆட்சியை எதிர்த்து வீறு கொண்டெழுந்த மறச் சிங்கங்களுள் கே.சி.எம். தலைசிறந்தவர். இந்தியாவின் விடுதலையே குறிக்கோளாய்க் கொண்டவர். செய்தித் தாள்களில் வெள்ளையரின் படம் வந்தால்கூட வெகுண்டெழுவார் என்றால் அவரின் விடுதலை வேட்கையை இதனினும் விவரிக்க முடியுமோ?

தேதி மாறும் செய்திகளோ
தினமும் மாறா ஏடுகளில்,
சிறையை ஆளும் வெள்ளையரின்
சித்தி ரம்,தென் பட்டாலும்,

மோதிக் குமுறும் கேசியெம்
முதலே தாலோ தாலேலோ. (தால்)

என்பது அவரின் நாட்டுப் பற்றை விளக்குதற்கு ஆசிரியர் தீட்டும் ஓவியம்.

இங்ஙனம் பாட்டுடைத் தலைவரின் உயர் குணங்களை மனத்தில் படும்படிக் கூறிக் காவிய நோக்கத்தை ஆசிரியர் இனிதே நிறைவேற்றியுள்ளார்.

பிள்ளைத்தமிழ் நூல்களில் பாட்டுடைத் தலைவர் போலவே அவர்கள் பிறந்த நாடும் நகரும் பல்வகை வளத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்குவதை நாம் அந்நூல் வாயிலாக அறிய முடியும். இந்நூலிலும் பாட்டுடைத் தலைவர் பிறந்த உத்தமபாளையத்தின் சிறப்பு நன்கு புலப்படுத்தப்படுகிறது. அதுவும் முதலாவதான காப்புப்பருவமே அவ்வளங்கொழிக்கும் பகுதியாய் உள்ளது. நாகரிகத்தின் பிறப்பிடமே ஆற்றங்கரை ஓரம் என்பர். கே.சி.எம். பிறந்த உத்தமபாளையத்தில் பொங்கிப் பாய்ந்தோடும் புத்தாறுகள் இருக்காதா என்ன?

பெரியாறு, சுருளியாறு, முல்லையாறு, என இவ்வாறுகள் எங்கும் பாய்ந்து வளம் பரப்புகின்றன. இவற்றை நோக்கும்போது பெண்ணை நதியும், பொருனை நதியும் சிறு வாய்க்கால்களாய்த் தான் தோன்றுமாம்.

பெண்ணையும் பொருனையும் வாய்க்கால் எனும்படிப்
பெரியாறு, சுருளி, முல்லை
பெருகிடும் பாளையம் (காப்பு)

என்று ஆசிரியர் மருத வளத்தை மாண்புறக் காட்டுகிறார்.

பாளைய நகர் வணிக வளத்திலும் சிறந்தது என்பதை,

தானியக் குப்பையே சாலையாய் வாகனச்
சாரிகள் வந்து சென்றும்
தரகிலா வாணிகப் பாளையம்.

என்ற அடிகள் காட்டுகின்றன.

கல்வியிற் பெரியது பாளைய நகர் என்பதை,

பாநடம் புரிகின்ற பாலகர் மொழி,பிறர்
பாடநூ லாய்ச்சி றக்கும்
பைந்தமிழ்ப் பாளையம்

என்ற அழகான அடிகள் உணர்த்துகின்றன.

தேசியத் தலைவன் கே.சி.எம். பிறந்த ஊரில், 'எல்லோரும் ஓரினம்' என்னும் தேசிய இழைதானே ஓடமுடியும்!

பறையனும் பள்ளனும் பார்ப்பனச் சைவனும்
பந்தியில் ஒன்றி வாழும்,
பண்புடைப் பாளையம்

ஆக, ஆவ்வூர் இருப்பதில் வியப்பில்லையே!

இங்ஙனம் வற்றாத வளங்கொழிக்கும் வருணனைகள் ஆங்காங்கே அமைந்து உள்ளம் கவர்கின்றன.

நதிக்கு தண்ணீர் முகவரியாம்;
நாற்றுக் கிளமை முகவரியாம்;
நாலுந் தெளிந்த அறிஞர்க்கோ
நாவுஞ் செயலும் முகவரியாம்;
நிதிக்குக் கெர்டையே முகவரியாம்;
நீதிக் கதுவே முகவரியாம்

என்றும், அதுபோல விடுதலைக் கொள்கைக் குழுவிற்குக் கதராடையே முகவரியாம் என்றும் வரும் உண்மையோடு கூடிய உயர்ந்த கற்பனை நயங்கள் பற்பல இடங்களில் அமைந்து நெஞ்சைத் தடவுகின்றன.

ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தை நாம் அம்புலிப் பருவத்தில் மிகுதியும் காணமுடிகிறது. பாட்டுடைத் தலைவரையும் நிலவையும் ஒப்புமைப்படுத்தியும், வேற்றுமை காட்டியும் கூறும் கருத்துகள் சிறப்பாக உள்ளன.

கற்றவர் கவிதையில் வைப்பதால், எளிய,நற்
காட்சியால், உள்ளிருத்துங்
கைராட்டை யால்,ஒளி தரவளர்ந் தும்புகழ்
கனத்திடக் குறுகும் இயல்பால்... (அம்புலி)

இருவரும் ஒத்தவர்கள் என்று ஆசிரியர் காட்டுகிறார்.

வெள்ளையர் மலர்ந்திடச் செய்பவன் நீ,இவன்
வெம்பிடச் செய்யு மறவன்;
மேலையாட் சிச்சுகங் காண்பவன், நீ,இவன்
விடியப் புரட்சி செய்வோன்...

என்றெல்லாம் இருவரையும் வேற்றுமைப்படுத்திக் காட்டுகிறார்.

கற்பனையும் கருத்தும் இருந்தால் போதுமா? அதை உணர்ச்சியோடு உரைக்க வேண்டுமல்லவா? இந்நூற் பாடல்கள் யாவும், 'உணர்ச்சியின் வார்ப்படங்கள்' எனலாம். நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட வெள்ளைக் கும்பலை, 'நல்ல அரசு' என்று சொல்ல யாருக்குத்தான் மனம் வரும்? நுங்கின் தலையில் முக்கண் இருப்பதால் அது சிவனாகி விடுமா? சிலந்திப் பூச்சி நூல் வலை பின்னுவதைப் பார்த்து அது கைத்தறி நுட்பமெல்லாம் கற்றிருக்கிறது என்று கூறிவிட முடியுமா? சங்கிலே நஞ்சைவைத்துக்

குழந்தைக்கு ஊட்டுபவளை உண்மையான தாய் என்று தந்தை சொல்லுவரா? இப்படிச் சொல்வது சரியென்றால் நாமும் வெள்ளைக் கும்பலை நல்லரசு என்று சொல்வோம் என்கின்றனர் விடுதலைப் போராட்டப் பெரியோர்கள்.

நுங்கின் தலையிலும் முக்கண் வெளிவர
நூலோர் சிவனென்றால்,
நூல் சிலந்தியும் அறியும் கைத்தறி
நுட்பம் எனச்சொல்னால்,
சங்கில் விஷந்தரும் அவள்தாய் என்றொரு
தந்தை நிஜஞ்சொன்னால்,
சட்டம் செய்கிற வெள்ளைக் கும்பலும்
தகுந்த அரசென்போம். (தால்)

என்று ஆசிரியர் காட்டும் பகுதிகள் தளர்ந்து கிடக்கும் நரம்பையும் தட்டியெழுப்பி விடுதலை வெறியை ஊட்டும் உணர்ச்சிக் கோலங்களாக இருப்பதை உணர்கிறோம்.

மேலும், இவ்விலக்கியத் தோட்டத்தில் உவமைகள், உருவகங்கள், இனிய சொல்லாட்சிகள் முதலிய வண்ணப்பூக்கள் ஆங்காங்கே பூத்துக் கிடந்து மணம் பரப்புகின்றன.

சுந்தரத் தமிழினில் பாட்டிசைத்துத் தோணி ஓட்டி மகிழ்ந்திருந்தனர் சிலர். எதிர்பாராது சுழற்காற்று வீசியது. தோணியின் சுழற்சியால் துடுப்பையும் அவர்கள் கைவிட்டு விட்டனர். காற்று நின்றதும் அலைகள் செலுத்திய திசையில் தோணி எங்கெங்கோ சென்று கொண்டிருந்தது. உள்ளிருந்தோர் திரும்பும் வழி தெரியாது திகைத்துக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் அவர்களுக்கு ஒரு துடுப்புக் கிடைத்தால் - அதுவும் தானே இயங்கும் மின்துடுப்புக் கிடைத்தால் - எப்படி இருக்கும்? ஆம்! அப்படித்தான் தோணியில் தவித்த மக்களாக இருந்த சமுதாயத்திற்கு நல்ல நேரத்தில் வந்து காப்பாற்றிக் கரை சேர்க்கும் தானியங்கித் துடுப்பாக நபிகள் நாயகத்தை அல்லாஹ் தந்தான் என்கிறார் ஆசிரியர்.

தோணியில் சிக்கிய பேர்க்குமின் துடுப்பெனச்
சுடர்நபி தந்த அல்லாஹ்!
அருமையான உவமை ஆட்சி!

மற்றும் வெள்ளையர் கூட்டத்தினரால் நம்மை எதுவும் செய்ய முடியாது என்பதை அவர்களைக் கூடுகள் என்றும் முட்டை ஏடுகள் என்றும் உருவகப்படுத்திக் காட்டுவதன் வாயிலாய்க் கருத்தினை நன்கு பதிய வைக்கிறார் ஆசிரியர்.

வெள்ளையர் கூட்டம் ஆயுத மேந்தி
விறைப்புடன் காக்கின்ற
கூடுகள் மட்டை ஓடுகள் என்றே

என்பது அவ்வுருவகத்தின் வரி வடிவம்.

மகத்துவம், மகுடம், பாலகர், சுகந்தம், பூரணம் போன்ற பிறமொழிச் சொற்கள் கவிதையின் ஓட்டத்தில் ஆசிரியரையும் மீறி வந்து விழுந்திருக்கின்றன.

கே.சி.எம். அவர்கள், "முற்றிய புலமையும் முற்றாத இளநீரும்" கொடுத்து வந்தோரை மகிழ்விப்பவர் என்றும்; விடுதலை வேட்கைப் புரட்சியாளரை, 'கோடுகள் இல்லா உயர்திணைப் புலிகள்' என்றும் கூறும் அழகான சொற் பொருளாட்சிகள் நூல் முழுதும் கிடந்து நம்மை இன்பத்தில் ஆழ்த்துகின்றன.

இங்ஙனம் பல்வேறு நயங்களுடன் இப் பிள்ளைத் தமிழ் நூல் நமக்குக் கொள்ளையின்பம் தருகிறது. இந்நூலைப் படிக்குங்கால் பிள்ளைத் தமிழ் நூல் படைக்கும் பெருந் தமிழ் ஆற்றல் பெரியாழ்வாரோடு போய்விடவில்லை; குமரகுருபரரோடு குன்றிவிடவில்லை; மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களோடு மங்கிவிடவில்லை; புலமைப்பித்தனுக்கு மட்டுமே உரிமையாகிவிடவில்லை என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

கன்னித் தமிழுக்கு இப்பொன்னணி சூட்டிய பெருங்கவிஞர் நாஞ்சில் ஆரிது அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுதலையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்ளுகின் றேன். இந்நூலுள் திளைத்துத் தெவிட்டாத இன்பம் பெறுமாறு தமிழுலகத்தை அன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் நாஞ்சில் ஆரிது
வகைமை	சிற்றிலக்கியம் (பிள்ளைத் தமிழ்)
வெளியீடு	பாபு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில் (1980)

32

பழநிமலை முருகன் பிள்ளைத் தமிழ்

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் பிள்ளைத் தமிழ் ஒன்று. இது பிள்ளைக் கவி எனவும் வழங்கப்படும். கடவுளரை அல்லது சிறப்புமிகு பெரியவர்களைக் குழந்தையாய்க் கொண்டு, அக்குழந்தைக்குப்பத்துப் பருவங்களை அமைத்துக் கொண்டு பருவத்துக்குப் பத்துப் பாடல் வீதம் மொத்தம் நூறு பாடல்கள் பாடப்படுவது பிள்ளைத் தமிழின் பொது இலக்கணம்.

பிள்ளைத்தமிழ் இலக்கணம்

புலவர்கள் தாம் விரும்பும் தலைவரையோ கடவுளையோ குழந்தையாய்ப் பாவித்து அவர்தம் பெருமைகளைப் பத்துப் பருவங்களில் சிறப்பித்துப் பாடுவர். ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப் பாடல்கள் என்ற முறையில் நூறு பாடல்கள் பாடப்படும். பொதுவாக, ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என்று இவ்விலக்கியம் இரு வகைப்படும்.

முதல் ஏழு பருவங்கள் இருபால் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவானவை. காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம். வருகைப் பருவம், அம்புலிப் பருவம் என்பன அவை. சிற்றில் பருவம், சிறுபறைப் பருவம். சிறுதேர்ப் பருவம் ஆகியன மூன்றும் ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய கடைசி மூன்று பருவங்கள். அம்மானை, நீராடல், ஊசல் பருவங்கள் என்பவை பெண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய கடைசி மூன்று பருவங்கள். பெண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய கடைசி மூன்று பருவங்களில் சிறிது வேறுபாடும் காணப்படுகிறது.

அந்த மரபிற்கேற்ப, புலவர் கபிலவாணன் அவர்கள் "பழநிமலை முருகன் பிள்ளைத் தமிழ்" என்னும் இவ்வழகிய நூலை இயற்றியுள்ளார். திருமால், சிவபெருமான், சக்திதேவி போன்ற தெய்வங்களைக் குழந்தை முருகனைக் காக்குமாறு கவிஞர் வேண்டுகிறார். "இணையடியின் சிலம்பொலிக்க, கனக தண்டை இசைத் தமிழ் பிறப்பிக்க, மெய்ப்பாடு காட்டிச் செங்கீரை

ஆடுமாறு" குமரனைக் கேட்கிறார். 'பொன்னார மார்பனே! பழநிமலை நாதனே! முருகா! தாலே தாலேலோ" எனக் குழந்தையைத் தாலாட்டி மகிழ்கிறார். "நினதிரு கரமலர் இணைந்தொரு லயமுடன் கொட்டுக சப்பாணி" எனக் குழந்தையைச் சப்பாணி கொட்டக் கேட்கிறார்! "கன்னற் சாறே கந்தா! மகிழ்ந்தொரு முத்தம் தந்திடுக" என முத்தந்தருமாறு முருகனைக் கெஞ்சுகிறார். "பைந்தமிழ்க் குமரியைத் தந்த எம் பழநியோய்! பாமாலை சூட நீ வருகவே" எனப் பாராட்டித் தன்னிடம் வருமாறு அழைக்கிறார். "வெண்திங்கள் நீயிவண் வெகுளிக்குள் வீழாமல் விரைவாக விளையாட வா வா" என நிலவை முருகனோடு விளையாட அழைக்கிறார். "மலைவளம் மிகுந்த பழநியில் வளர்வாய் சிறுபறை முழக்கியருள்வாயே" எனச் சிறுபறை முழக்க முருகனைத் தூண்டுகின்றார். "துகளறு பழநிக்கிறை நீ எம் சிற்றில் சிதையேல் சிதையேலே" எனச் சிற்றில் கட்டி விளையாடும் சிறுமியர், முருகனைக் கெஞ்சி வேண்டச் செய்கிறார். "தொழுவார் விழிநீர் துடைத்தருள் செய்முருக சிறுதேர் உருட்டியருள்வாய்" என முருகனைச் சிறுதேர் உருட்டச் செய்கிறார். இவ்வாறாய்ப் பிள்ளைத் தமிழ் இலக்கணத்திற் சிறிதும் வழுவாது புலவர் கபிலவாணன் இவ்வினிய நூலை இயற்றி யுள்ளார்.

பிள்ளைத் தமிழ் என்றவுடனேயே நம் நினைவுக்கு வருபவர் குமரகுருபரரே! அவர் தமிழையே தெய்வமாகவும், தெய்வத்தையே தமிழாகவும் பாடிச் சிறப்பித்தவர். "தொடுக்கும் கடவுட் பழம்பாடல் தொடையின் பயனே! நறைபழுத்த துறைத்தீந் தமிழில் ஒழுகும் நறுஞ்சுவையே" எனும் அவருடைய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்ப் பாடலடியை அறிந்து மகிழாதார் இல்லை. குமரகுருபரர் ஒப்பவே நண்பர் கபிலவாணனும் முருகனைத் தமிழாக்கி, தமிழை முருகனாக்கி நயம்படப் பாடியிருக்கிறார். அவர் பாடியுள்ள அடிகள் நம் உள்ளங் கொள்ளை கொள்வனவாய் உள்ளன.

முத்தமிழ்க் குமரேசா!
தண்டமிழ்க் கொண்டலே!
நற்றமிழ் விற்பன்ன!
தமிழ்தந்த குமரன் நீ!
செந்தமிழ் கேட்டுச் சிந்தை மகிழ்ந்திடு செவ்வேள்!
பைந்தமிழ் மொழிக்கருள் செய்திடு வள்ளல்!
தெளிதமிழ்ப் புலவனாம் பழநிமலை முருகன்!

தமிழ்ப்பா அணியும் செவ்வேட் சுடரே!
செஞ்சொற் புலவ! திருமுருக!
முழுதும் பழுதில் தமிழ்தந்தாய் முத்துக்குமரா!
பழரசத் தமிழ்தந்து பரமகுரு வானவன் நீ!
இயலிசை கூத்துக்கு வித்திட்ட மூலவா!
தென்தமிழ்ப் பாடற்கு உவந்திடும் குமரன் நீ!
தென்றமிழ்க் கேங்கி நீ
மன்றினிற் புலவரொடு
அமர்ந்தாய்.

எனத் தமிழோடிணைத்து உளம்குளிரப் பாடி மகிழ்கிறார்.

புலவர் கபிலவாணனின் சொல்லாட்சித் திறன் போற்றுதற்குரியது.

சக்தி தேவியை,

புரிகுழலி அன்னமென
நடைபயிலும் பாகுமொழி
பேகுமிளம் பூங்கொடிச்சி

எனவும், முருகனை,

உச்சிமுதல் பாதம்வரை
எழில் ஒழுகும் அருள்ஞானத்
திருவடிவு.....
தண்ணிலவு போற்குளிர்ந்து
தாய்போல அழுதூட்டும்
நிகரிலாக் குறிஞ்சிக்கோ

எனவும் பாடியுள்ளவை தங்கு தடையற்ற கவிதை நடையோட்டத்துக்குக் காட்டுகளாம்!

கவிதைக்குச் சிறப்பளிப்பது கற்பனை! புலவர் பகலவன் மேற்கில் சென்று மறைவதை வழுக்கி வீழும் சக்கரமாய்க் கபிலவாணன் கற்பனை செய்கிறார்.

வழுக்கி விழுமொரு
சக்கரம் போலவே,
கடலிற் குளித்தெழு,
மேற்கிற் செல்பவன்

என்று பாடுகிறார்.

குறிஞ்சியை அவர் வருணிக்கும் திறம் சிறந்து நிற்கிறது. குறிஞ்சி மங்கையின் தாவணி அருவி. அருவியின் நுரையோ அத்தாவணியின் சரிகை. பள்ளத்தாக்குகளில் உள்ள தாவரங்கள் அம்மங்கையுடுத்தும் பச்சைப் பட்டாடை. மலைகளிற் சூழ்ந்துள்ள

கருமேகமோ அவளுடைய கூந்தல்; மலையின் அடிவாரம் அவளுடைய திருப்பாதம். பூத்துள்ள மலர்த்தொகுதி அவள் அணிந்துள்ள அணிகலன்கள்!

நுரைச்சரிகை அருவியொரு
புதுத்தூவணி இடைப்பள்ளத்
தூவரங்கள் பட்டாடையாம்;

புகைமேகம் கருங்கூந்தல்
அடிவாரம் திருப்பாதம்
மலர்நகைகள் அணிகுறிஞ்சி

என்பது கபிலவாணனின் கற்பனை ஓவியம்!

சுவையொழுகு நறுந்தேன்
தமிழ்மாலை தனைச் சூடும்
ஐந்துகை, நால்வாய், முக்கண்ணன்,
சுளகுநிகர் இருசெவியன்,
பிறைபோலும் ஓர்மருப்புப்,
பெம்மானாம் பிள்ளையார்...

எனும் இப்பாடலடிகளில் ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என எண்களை இறங்குவரிசையில் முறைப்படுத்திப் பாடித் தம் பாட்டுத் திறத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு பல்வேறு சுவைகளும் நிறைந்ததாக இப்பனுவல் விளங்குகிறது. பகழிக்கூத்தர் இயற்றிய திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழை, "இது பிள்ளைத்தமிழாயினும் பெரிய தமிழ்" என்பர். அக்கூற்று, நண்பர் கபிலவாணனின் இந்நூலுக்கும் பொருந்தும். பாடுபொருளில் வேறுபடுவோர் இருக்கலாம். எனினும் பாடியுள்ள தமிழ் அனைவர்க்கும் இனிக்கின்றதாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நூல் ஆக்கம்	புலவர் கபிலவாணன்
வகைமை	சிற்றிலக்கியம் (பிள்ளைத்தமிழ்)
வெளியீடு	புலவர் கபிலவாணன், சென்னை. (1985)

33

கோழிக் குட்டிகளும் பன்றிக் குஞ்சுகளும்

நண்பர் கோதண்டம் சிறந்த சிந்தனையாளர்; தூய்மைமிகு பொதுநலத் தொண்டர்; ஆற்றல்நிறை எழுத்தாளர்; 'ஓடப்பர், உயரப்பர்' என்ற வேறுபாடின்றி மக்கள் அனைவரும் 'ஒப்பப்பராய்' வாழ வேண்டுமென்ற உயர்ந்த குறிக்கோள் உடையவர்; இக் குறிக்கோளை அடையும் வழிகளாய் அவர் எழுத்தும் பேச்சும் திகழ்ந்து வருகின்றன. அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்த 'புதுக் கவிதைகள்' இங்குத் தொகுக்கப்பெற்றுள்ளன.

புதுக்கவிதை

உணர்ச்சிகளை ஒளிவு மறைவோ, புனைவுகளோ இன்றி மனத்தில் பட்டதைப் பட்டவாறே 'பட்டென'ச் சொல்லிவிடுவது இன்றைய புதுக்கவிதைப் போக்காய் இருந்து வருகிறது. அசை பிரித்து, சீர் பிரித்து, பொருள் விரிக்க இடர்ப்படாமல், கண் ஓடும் அளவிலேயே செய்யுளின் கருத்து மனத்தில் பதிந்திட வேண்டு மென்பது புதுக்கவிதையாளர்களின் நோக்கமாய் இருக்கிறது. பாலுணர்வை மையமாய் வைத்து எழுதுபவர்கள், எதையும் உருவகமாகவே உரைப்பவர்கள், நேரடியாகப் பொருளை உணர வைக்காமல் சுற்றி வளைத்துப் பொருள் கொள்ளும் முறையில் எழுதுபவர்கள், எளிய நடையில் 'வெட்டொன்று துண்டிரண்டு' என நறுக்குத் தெறித்தாற்போல் எழுதுபவர்கள் எனப் புதுக்கவிதை எழுதுவோரிடையேயும் பல வகையினரைக் காண்கிறோம். நண்பர் கோதண்டம் மேலே கூறப்பட்டவர்களுள் இறுதியில் கூறப் பட்டுள்ள பிரிவைச் சார்ந்தவராயிருக்கிறார். எளிய நடையில் ஆழமான கருத்துகளைத் தெளிவாய்ச் சொல்லுகின்ற அவரது போக்கு வரவேற்கத்தக்க ஒன்று.

தலைப்பு

'கோழிக்குஞ்சு, பன்றிக்குட்டி' என்பது மரபு. ஆனால், இன்றைய உலகில் குஞ்சுகளாய் இருக்க வேண்டியவர்கள் குட்டிகளாயும், குட்டிகளாய் இருக்க வேண்டியவர்கள்

குஞ்சுகளாயும் மாறிக் கிடக்கின்றனர் என்பதைக் கவிஞர் நூலின் தலைப்பிலேயே அழகாக வெளிப்படுத்திவிடுகிறார். இக்கருத்தைத் 'தலைகீழ்' என்ற கவிதையிலும் அவர் குறிப்பிடக் காணலாம்.

சமுதாயப் பார்வை

மக்கள் மாண்புற மக்களுக்காகப் பாடுகிற மக்கள்கவிஞராய்க் கோதண்டத்தை இங்குக் காண்கிறோம். நூல் முழுவதிலும் அவருடைய சமுதாயச் சிந்தனைகளை நன்கு உணரமுடிகிறது. மக்களுள் பெரும்பாலோர் ஒரே உடையினையே உடுத்தும் நிலையினராய், அதுவும் ஒட்டுப் போட்ட உடையை உடுக்கும் நிலையினராய் இருப்பது கண்டு அவர் துடிக்கிறார்.

அவனிடம் இருப்பது ஒரே ஒரு நாலு முழ வேட்டி. அதை உடுத்தியதால் ஒரு பக்கம் அழுக்காயிற்று. அதை உட்புறமாய் வைத்து உட்புறத்தை வெளிப்புறமாய் மாற்றிக் கட்டினான். அதுவும் அழுக்காயிற்று, 'வேட்டி அழுக்காயிருக்கிறது, மாற்றிக் கட்டு' என்று மேலும் சொன்னால்?..... பாடுகிறார், கவிஞர்.

என்ன
வேட்டியெல்லாம்
அழுக்காய் இருக்கிறது
மாற்றிக் கட்டினால் என்ன?
நண்பன்
அனுதாபத்தோடு கேட்டான்.
என் வேட்டிக்கு என்ன
மூன்று பக்கமா இருக்கிறது?

வேட்டிக்கு உட்பக்கம், வெளிப்பக்கம் என இரண்டு மட்டுமே. இரண்டுமே அழுக்கு. மாற்று என்றால் என்ன செய்வது? மூன்றாவது பக்கமா இருக்கிறது? உழைப்பவன் உடுப்பதற்கு உடையில்லாதபடி அவனை உறிஞ்சி அவன் வாழ்வை அம்மணமாக்குவோர் பகட்டோடு உலா வருகின்றனர். இந்நூலுக்கு மதிப்புரை தந்துள்ள கவிஞர் மீரா, இப்பாட்டைக் குறிப்பிட்டு, "வேட்டி காயும்வரை தண்ணீரில் மானத்தை மறைத்துக்கொண்டு நின்ற புத்திரர் ஒருவரைத் தாம் பார்த்ததாக முன்பு நாடாளு மன்றத்தில் ஓர் உறுப்பினர் கூறியது நினைவில் நிற்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்மை உழைப்பாளர் மறைக்கப்படுகின்றனர்; மறக்கப் படுகின்றனர்; ஆனால், உழைக்காமல் உழைப்பின் பயனை மட்டும் அனுபவிப்பவர்களோ பாராட்டப்படுகின்றனர்; மினுக்கப்படு கின்றனர் என்பதை எண்ணி வேதனைப்படுகிறார். தஞ்சைக் கோபுரம் தரையில் நிழல்படாத் தனிப்பெருமை கொண்டது.

அதைப் படைத்தவன் யார் என்றால் இராசராசன் என்றே பதிவாகிறது. கவிஞர் கேட்கிறார்,

உளி பிடித்து
வியர்வை சிந்தி
உழைத்துழைத்தே
கால வெள்ளத்தில்
கரைந்துவிட்ட
உண்மை சிருஷ்டிகர்த்தாக்கள்
யாரோ?

இராசராசன் நினைக்கப்படுகிறான்; போற்றப்படுகிறான். கோபுரத்தை உருவாக்கிய கொத்தனார் பெயர் எங்கே?

போலிகள் பெருமைப்படுத்தப்படுவதையும், திக்கற்றவர்கள் தண்டிக்கப்படுவதையும், அதே குற்றத்தை வசதி படைத்தோர் செய்யும்போது சட்டம் தூங்கிக் கிடப்பதையும், பணக்காரர்களின் கௌரவம் காக்கப்பட வேண்டும் என்பதற்காக ஏழைகள் தண்டிக்கப்படுவதையும் கண்டு பதைக்கிறார்.

உழைப்பைச் சுரண்டி
உண்டு கொழுப்போர்
அன்றும் உண்டு; இன்றும் உண்டு.

நமக்குத் தெரிந்த ஈராயிரம் ஆண்டுச் சரித்திரத்தில் எந்த மாற்றமும் இல்லை.

மூவேந்தர்கள் ஆயினும் சரி;
இன்றைய
அமைச்சர்களாயினும் சரி....
புத்தன் வள்ளுவன்
போதித்த அறிவுரைகளும் சரி;
மாற்றம் எதையும்
சாதித்து விடவில்லை.

இதற்கொரு முடிவே இல்லையா என்று பொருமுகிறார்.

உரிமையற்றவனாய், அநாதையாய் மனிதன் ஆக்கப்படுகிறானே என்று அங்கலாய்க்கிறார்; கல்லை, மண்ணை, சாணத்தை, பாம்பை வணங்குவோர் மனிதனை மட்டும் மதிக்கத் தவறுகின்றனரே எனக் கலங்குகிறார்.

பிச்சைக்காரனைப் 'போ போ' என வெறுத்து மாளிகையினுள் வேகமாய் நுழைபவன், அங்கிருப்பவன்முன் பிச்சைக்காரனாய் நிற்க வேண்டியிருக்கிறதே; இந்தப் 'படிப்படியான பிச்சைக்காரத்தனம்' என்று மறைவதோ என ஏங்குகிறார். சாராயம் குடித்துச் சாகின்ற மக்களின் அவலநிலை கண்டு புழுங்குகிறார். உண்மையறியாது ஏமாந்து, தீமைக்கு ஆளாகி மாயும் மக்களை

எண்ணிக் கலங்குகிறார். நாட்டைக் காக்க உயிர் விடும் வீரர்களைப் போற்றிப் புகழ்கிறார்.

''கொடிது கொடிது வறுமை கொடிது'' என்றார், ஔவையார். திருவள்ளுவரோ, வறுமை என்ற துன்பத்தினால் மற்றெல்லாத் துன்பங்களும் வந்து சேரும். தீயின் நடுவில் இருந்துகூடத் தூங்கிவிடலாம்; ஆனால், வறுமையில் இருந்து கொண்டு ஒருவன் தூங்க முடியாது என்பார்.

இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலும் நிரப்பு.

நேற்று வந்து என்னைக் கொன்றுவிடுவதுபோலத் துன்பப் படுத்திய வறுமை இன்றைக்கும் வந்துவிடுமோ என வறுமை யாளன் ஒருவன் நடுங்குகிறான்.

கோதண்டம் ஓர் இரவைக் காட்டுகிறார். இந்த இரவு விடியாமலேயே இருக்கக்கூடாதா எனக் காதலர் இருவர் கருதுகின்றனர். தான் செய்யும் தீயவையான கலப்படம் செய்து முடியுமுன் விடிந்துவிடக்கூடாதே எனக் கடவுளை வேண்டுகிறான், கலப்படக்காரன் ஒருவன்.

அதே இரவில், 'நேற்று என் மனைவி மக்களை வருத்திக் கொன்ற பசி, விடிந்தால் வருமே' என்று எண்ணி நடுங்குகிறான் ஏழை ஒருவன், 'வறுமையை ஒழிக்க வழி தெரியலையே' என்பதில் கவிஞரின் கலக்கத்தைக் காண்கிறோம். செருப்பும் வாங்க முடியாத ஏழ்மைச்சூழல் மக்களை அழுத்துவதைக் கண்டு பெருமூச்சு விடுகிறோம். சுரங்கங்களில் பணியாற்றுவோர் விபத்துகளால் குடும்பத்துடன் அழியும் நிலை நம் வேதனையை மிகுவிக்கிறது.

''குறிஞ்சியின் அருவியைப் பாடும் கலைஞர்களே! அக் குறிஞ்சித் தோட்டங்களில் ஓயாது உழைத்து, உணவுக்கும் வழியின்றி உருக்குலைந்தவர்களைப் பாடாதது ஏன்?'' என்று கேட்பதில், ஏழை மக்களுக்காகப் பாடுவதே உண்மையான கவிதை என்ற உணர்வைப் பெறுகிறோம். குறிஞ்சி தன் எழிலைப் பாடும் கவிஞனைப் பார்த்து,

உச்சிமலைத் தோட்டங்களில்
உழைத்து வளம்பெருக்கி
உணவின்றி வயிறுசுருங்கி
வாழ இயலாமல்
நாங்கள் விடும் கண்ணீரே
அருவிகள் ஆனதென
அறிவாயா நீ

எனக் கேட்கிறது.

ஜாதிக் கொடுமை

திரு உலா வரத் தேரில் வள்ளி, முருகன் ஆகியோர் சிலைகள்; வெளிச்சம் காட்டக் குறவன் ஒருவன் ஆவி விளக்கை (Gas light) தூக்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறான். நீர் முழுக்காட்ட வந்த பட்டர் குறவன்மீது மோதிவிட்டார். "டேய்! குறவா! உன்னைத் தொட்டுத் தீட்டாயிடுத்தே! நான் குளிச்சிட்டுல்ல சாமிகிட்டப் போகனும்" என்றார். குறவன் தேரைப் பார்த்தான். அங்கே,

வள்ளியின் உருவம்
சிரித்துக் கொண்டிருந்தது

என ஒரு பாடலை முடிக்கிறார். வள்ளி நாயகி, 'களுக்'கென்று சிரித்திருப்பாள். ஏன்? "அட பட்டரே! உனக்கு அறிவு இருக்கிறதா? குறவன் பட்டதால் தீட்டு என்கிறாயே! நீ பூசை செய்ய இருக்கும் கடவுள் முருகன், குறத்தியாகிய என்னைத் தொட்டுக் கொண்டிருப்பது தெரியவில்லையா?" என்பதுதான் வள்ளி உருவத்தின் சிரிப்பின் பொருள்.

தீண்டாமையைக் கண்டிக்கும்போது கவிஞரின் சினம் உச்ச நிலையை அடைகிறது; சொற்கள் வேகத்துடன் தாக்குகின்றன. பண்ணையாள் அரிசனன், தன் முதலாளியிடம் கேட்கிறான்: "அன்று ஒரு நாள் உங்கள் துண்டு என்மேல் காற்றடித்து மோதியபோது, தீட்டு என்று துண்டையே தூர எறிந்தீர்கள்! தெரியாமல் என் மனைவியின் கைபட்டுவிட்டதால் பூசைக்குரிய மாலையையே பிய்த்து எறிந்துவிட்டீர்கள்! இன்று உங்கள் அருமை மகன், கல்லூரிப் படிப்பை முடித்தவன்,

வயதுவந்த என் மகளை
ஏமாற்றிக்
கெடுத்து விட்டான்;
அந்தத் தீட்டுக் கழிய
எதை
அறுத்தெறியப் போகிறீர்கள்?

சொற்களில் எவ்வளவு வேகம்? சூத்திரன் மேல்குலப் பெண்ணைப் புணர்ந்தால் எதை அறுத்தெறிய வேண்டும் என்று மனுநீதி சொல்கிறதோ அதுதான் பாட்டிலுள்ள 'எதை?' என்பதற்குப் பொருளா? ஏழை குமுறிக் கேட்கும் இந்த வினா தீண்டாமைப் பேயை நசுக்கத் தூண்டுகிறது.

அரியின் புத்திரர்கள் என்று கூறப்படுகிறவர்கள் அரியை வழிபட ஆலயத்திற்குள் நுழையமுடியவில்லையே. பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்கின்ற இந்த மடமை மறைவது எந்நாளோ?

பொதுவுடைமை

பொதுவுடைமைக் கொள்கை உலகெங்கும் பரவ வேண்டுமென்ற கவிஞரின் ஆர்வம், நூல் முழுதும் இழையோடி யிருக்கிறது. மணிமேகலை ஆபுத்திரனின் அட்சய பாத்திரத்தை ஏந்தியதுபோலப் பசிப்பிணியை அகற்ற நாம் காரல்மார்க்சின் தத்துவப் பாத்திரத்தை ஏந்தவேண்டுமென்கிறார்.

காய சண்டிகையின்
யானைத் தீயை,
ஆபுத்திரனின்
அட்சய பாத்திரம்
தீர்த்தது போல,
இந்தச் சமுதாயம்
தன்னுடைய
பசிக்காக,
ஜெர்மன் தூத்தாவின்
தத்துவப் பாத்திரத்தை
எப்போது எடுத்துக் கொள்ளும்?

இந்நாட்டில் விரைந்து செஞ்சுடர் ஒளி வீசிப் பரவ வேண்டுமென விழைகிறார். மார்க்சும் லெனினும் அளித்திட்ட மாபெரும் தரிசனங்கள்தாம் உலகை வளமாக்க முடியும் என உறுதிப்படுத்துகிறார்.

குருகேஷத்திரத்தில் அன்று கண்ணனின் சக்கரம் பகையை வெட்டிச் சாய்த்ததுபோல் இன்றும் பொதுமைச் சக்கரம் கரண்டல் கொடுமையைச் சாய்க்கும் புதிய குருகேஷத்திரத்தைப் படைக்கத்தான் போகிறது என எடுத்துரைக்கிறார். நாடு, 'சிவப்புச் சிந்தனையை' அடையும் எனும் உறுதியான முடிவில் இருக்கிறார்.

குன்றி மணிகள்
குன்று கின்றன;
கருமை நீங்கிச்
செம்மை யாகவா?

எனும் வினாவை எழுப்புகிறார். குன்றிமணியில் உள்ள கருமை நீங்கினால் முழுச்செம்மை (சிவப்பு) தானே?

புரட்சி

கொடுமை மிகும்போது புரட்சி தானே தோன்றி மலர்ச்சிக்கு வழி ஏற்படுத்தியே தீரும் என்ற நம்பிக்கையைக் கவிஞர் ஊட்டுகிறார். வேலையில்லாது வேதனைப்படுபவாகள், புரட்சி என்னும் வேலையை மேற்கொள்ளத்தானே செய்வார்கள்.

கோடிக் கால்கள் எங்களுக் குண்டு
கொதித்தே எழுந்தால் தடுப்பா ருண்டோ?

எனும் வினா அவர்களிடமிருந்து எழும்புகிறது.

பிறர் வாழத் தாம் தினந்தினம் செத்துக்கொண்டிருக்கும் விவசாயிகள் ஒரு நாளைக்குப் போர்க்கொடியை உயர்த்தத்தான் போகிறார்கள். ஏழைகளின் உழைப்பாகிய தேனை, மாளிகையாம் கூட்டில் சேர்த்து வைத்திருக்கின்றன முதலாளித்துவத் தேனீக்கள். சமுதாயக் குழந்தையின் ஏழ்மை நோயைப் போக்கப் பொருள் – தேன் – தேவைப்படும்போது கூடுகளை அழித்து அந்தத் தேனை எடுக்காமலா விட்டுவிடுவார்கள்?

உலகளாவிய கொள்கை

கொடுமை எங்கு நடந்தாலும் கண்டிக்கப்பட வேண்டும்; உலகின் எந்தப் பகுதியாயினும் அங்கு மனித குலத்தின் வாட்டம் தவிர்க்கப்பட வேண்டும்; இந்த உலகளாவிய கொள்கையின் முகிழ்ப்பால் சிலி நாட்டில் ஆதிக்கக்காரரை எதிர்த்துப் போராடுவோரைக் கவிஞர் போற்றுகிறார்.

மாந்தநேயம்

புயல், வெள்ளம் ஆகியவற்றால் அழிந்த மக்களை நினைப்பதிலும், வெண்மணியில் வெந்தொழிந்த கண்மணி களுக்கு அஞ்சலி செலுத்துவதிலும் கவிஞரின் மாந்தநேயத்தினை நாம் நன்கு உணரமுடிகிறது.

வாழையடி வாழை

கொடுமைகளைச் சாடும்போதும், நீதிக்குப் புறம்பான வற்றைக் கண்டிக்கும்போதும் கவிஞரின் சொற்கள் எரிமலை யெனச் சுழன்று வீசுகிறது. ஆனால், அழகைத் துய்ப்பதிலும் அன்பு காட்டுவதிலும் சொற்கள் இமயமலையின் உச்சியெனக் குளிர்ந்திருக்கிறது. அவ்வளவு வேகமாய்ப் பாடியவரா இப் பொழுது இவ்வளவு மென்மையாய்ப் பாடுகின்றார் என்னும் ஐயப்பாடு தோன்றுகிறது. கவிஞர் கோதண்டம் அழகுபற்றிப் பாடும்போது, இந்த மாற்றத்தைக் காணமுடிகிறது. கடலலைகள், மேகச் சிதறல்கள், வண்ணத்துப்பூச்சியின் மென்சிறகுகள் எனக் காணும் பொருளிலெல்லாம் அழகு அவர் கண்ணில் படுகிறது. அழகைத் துய்க்கும் நேரத்திலும் தொழிலாளர் உணர்வுகள் கவிஞருள் இழையோடவே செய்கின்றன.

கதிரறுக்கும் கைகளின் அசைவினிலே
தறிநெய்யும் கைத்தாண்ட வத்திலே

கொல்லர் உலைத்தீ செவ்வரும் பினிலே
குயவர் சுற்றும் புதுமண் பொலிவிலே
வண்டிக்காரன் பாட்டொலி யினிலே
வண்ணார் பணியில், 'சோசோ' எனும் ஓசையிலே

எங்கும் எதிலும் அழகைக் காண்கிறார்.

காதலைப் பாடும்போதும் இதே தண்மை, மென்மையைக் காணுகிறோம். காதலியிடம் இரந்து கேட்கிறார். அவளை 'யாசகீ' என்று விளிக்கிறார்.

தொட்டதும் நடுங்கும்
முயலின் மென்மையும்,
பார்த்ததும் நடுங்கும்
மானின் மருட்சியும், கலந்த
அந்தப் பெண்மையின் எழிலை
எவ்வாறு காண்பேன்;

அன்றொரு நாள்,

கிணற்றில் தண்ணீர் எடுத்துக்கொண் டிருந்தாய்;
நான் தாகத்திற்கு நீர் கேட்க
இது உப்பு நீராக்கும் என்றாய் நீ;
உன் கைபட்டதும்
தேனாகி விட்டது எனக்கு;
இன்று உன்பிரிவால் நான் சிந்தும்
கண்ணீரின் உப்புத் தன்மையை
மாற்றுவதற்கு என்று வருவாய் நீ!

எனும் இக்கவிதை, உள்ளத்தை நெகிழச்செய்கிறது; உண்மைக் காதலின் வெளிப்பாடாகவும் தோன்றுகிறது.

எங்கும் எதிலும் தென்படுகின்ற அழகைப் பாடுவதிலும், காதலியின் பிரிவால் வாடும் ஒருவன் காதல் யாசகம் கேட்ப திலும் தமிழ்க்கவிதையுலகில் வாழையடி வாழையாய் வருகின்ற கருத்து வளத்தைக் காணமுடிகிறது.

புரசை மரங்களின் செக்கச் செவேலென்ற பூவை நெருப்பென நினைத்துக் கொக்குகள் நெருங்குவதில்லை எனும் கோதண்டத்தின் கூற்றில், "ஆம்பல் மலர, வெள்ளம் தீப்பட்டதாய் வெருவிப் பறவைகள் தம் பார்ப்புகளைத் தம் கைச்சிறகுகளால் ஒடுக்கும்" என்னும் முத்தொள்ளாயிரக் கருத்தின் சாயலைக் காண்கிறோம்.

உருவகங்கள்

லாரிகளை நாலு கால் இராட்சசர்களாயும், கொக்குகளை வெள்ளைப் பேய்களாயும், கோடைக்காலப் பனிக்கட்டிகளாயும்,

வெண்ணெய் உருண்டைகளாயும் உருவகம் செய்திருப்பது நயமாயுள்ளது.

வினாக்கள்

கவிஞர் எழுப்பும் வினாக்கள் சமுதாயத்தைத் தட்டியெழுப்பும் வல்லமை பெற்றனவாய் விளங்குகின்றன. மலத்தை எடுப்பவர்களெல்லாம் தாழ்ந்த குலத்தவர்கள் என்றால் குழந்தையின் மலத்தை எடுக்கிறாளே தாய், அவள் எந்தக் குலத்தவள்? தொழிலில் உயர்வு தாழ்வு காண்போருக்கு இவ்வினா சாட்டையடியாகிறது.

நெஞ்சில் துன்பச்சுமை கனத்தாலும் வழியில் பார்ப்பவனிடம் பொய்யாகப் புன்னகை புரிய வேண்டியிருக்கிறது. இது ஏன் என்பது நயமான வினாவாகிறது.

கூரையில் புகுந்துள்ள பாம்பைக் கொல்லக் கூரையையே எரிக்க நினைக்கும் நண்பனே! மச்சு வீடுகளில் புகுந்துள்ள நச்சுப்பாம்புகளை எப்போது வீழ்த்தப்போகிறாய்? – இது முதலாளித்துவத்தை எதிர்ப்பதற்கான சிந்தனையைத் தூண்டுகின்ற வினா.

இந்த உலகம் யாரால் உருவானது? – இது தன்னம்பிக்கையினை ஊட்டுகின்ற வினா.

விரிசல் அதிகமாகிறது; பாலம் கட்டிடப் பயனென்ன? வர்க்கப் போராட்ட உணர்வை ஊக்குவிக்கும் வினாவாக இஃது அமைகிறது.

கலப்புத்திருமணம் என்கிறார்களே, மனிதன் மனிதப் பெண்ணை மணப்பதில் கலப்பு என்ன இருக்கிறது? சாதி ஒழிப்பைத் தீவிரப்படுத்தும் வினா இது.

சந்திரன் வரவேயில்லை; அல்லிமலர்கள் அழுவது ஏனோ? – இது அவரவர் மனநிலைக்கேற்ப விடை காண வேண்டிய வினா.

உள்ளங்கவர் உரைகள்

படிக்குங்கால் உள்ளத்தைக் கவரத்தக்க கவ்வத்தக்க இடங்கள் பல இந்நூலுள் உள்ளன. "உச்சிவேளை; வெயில் கொளுத்துகிறது; அப்போது, நேரத்தை அறிய நிழலைப் பார்த்தேன். உச்சி வெயிலின் உக்கிரத்துக்கு அஞ்சி, அதுகூட என் காலடியில் பதுங்கிக்கொண்டது" என்பது அருமையான கற்பனை.

அத்திப்பழத்தைப் பார்த்தால் அதன் மேற்பகுதி மினுமினுப்பாய் இருக்கும்; அதனைப் பிட்டுப் பார்த்தாலோ உள்ளே ஏராளமான கொசுக்கள்; இது, எங்கள் நாட்டை

ஆள்வோர்களின் திட்டங்கள்போல இருக்கிறது எனச் சொல்வதன் வழி திட்டங்கள் பெயரளவில் பெருமையாய்த் தோன்றினாலும் நடைமுறையில் பயனற்றனவாய்விடுகின்றன என்பதைத் தெளிவாய்க் குறிப்பிடுகிறார்.

இங்கு ஒரு செய்தி நினைவுக்கு வருகிறது. நேரு காலத்தில், பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவர், "நம் நாட்டுத் திட்டச் செயற்பாடுகள் திருமண வீடுகளில் போடும் மங்கல அரிசி (அட்சதை)யைப் போன்று இருக்கின்றன" என்றார். திருமணத்தில் மங்கல நாண் அணிவிக்கும்முன், வந்திருப்பவர்களிடம் மஞ்சள் கலந்த அரிசியைக் கொடுப்பார்கள். அதை மணமக்கள்மீது தூவி வாழ்த்த வேண்டும். அவ்வாறு நடப்பதில்லை. ஓரிடத்தில் அமர்ந்திருப்பவர் இருந்த இடத்திலிருந்தே அரிசியை வீச, அது முன் வரிசையில் அமர்ந்திருப்பவர் தலைகளில் விழுமே தவிர மணமக்களைச் சென்றடையாது. திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் பணம், யார் யார் கைகளிலோ போய்ச் சேருகிறதே தவிரத் திட்டத்தின் நோக்கத்தைச் சென்றடைவதில்லை" என்பதைச் சொல்லவே உறுப்பினர் 'அட்சதை' தூவுவதைச் சுட்டிக் காட்டினார். இன்றளவும் நாட்டுத் திட்டங்களின் செயற்பாடு இந்நிலையிலிருந்து மாறவில்லையே!

மின்சார வெட்டு; 'பம்ப்செட்' ஓடாததால் விவசாயக் கூலிக்கு வேலை இல்லை; பல நாள் பட்டினி. செத்துத் தொலையலாம் என்று நினைத்தான்; மின்சாரக் கம்பியில் கையை வைத்தான். இதிலும் தோல்வியா? மின்சாரம் இருந்தால்தானே சாவதற்கு? - சாவவும் முடியாது, வாழவும் முடியாத ஏழ்மையின் படப்படிப்பு இக்கூற்று.

காதலன் ஒருவன் தன் உள்ளம் கவர்ந்தவளை, முத்தொள்ளாயிரத் தலைவிகளின் மொத்த உருவே என நினைத்துப் பார்ப்பது இன்ப ஊற்றாய்த் திகழ்கிறது.

DOG என்ற ஆங்கிலச்சொல்லைத் தலைகீழாக்கினால் GOD கிடைக்கிறது. இதைக்கொண்டு நாயும் கடவுளும் ஒரே பிரம்மந்தான் என்பதை அறிவாயா என்ற தத்துவ விளக்கம் தரப்படுகிறது.

கற்ற கலைகள் பயன் தரும் காலத்தில் - கட்டைவிரலைக் காணிக்கையாகப் பெற்றுத் துரோகம் செய்த துரோணரைப்போல - இந்தச் சமுதாயம், எங்கள் உழைப்பு, பலன் தரும் காலத்தில் பறித்துக்கொள்கிறது இது விவசாயிகளின் உணர்வைப் பிரதிபலிக்கும் குற்றச்சாட்டு.

நாங்கள் ஏன் வெறுங்குடங்களாய் இருக்கிறோம் தெரியுமா? அவையும் நிரப்பப்படுவதற்கே! தன்னம்பிக்கையை ஊட்டும் சிறந்த அடிகளாய் இவை திகழ்கின்றன. மொத்தத்தில், ஒவ்வொரு கவிதையும் ஒரு கட்டுரை எழுதுகின்ற அளவுக்குச் சிறப்புப் பொருந்தியதாய் இருக்கிறது.

மொழிபெயர்ப்பு

பிற மொழிக் கவிதைகளில் ஊறித் திளைத்த நண்பர் அவற்றுள் சிலவற்றைத் தமிழில் பெயர்த்திருக்கிறார். 'தலையின் இழிந்த மயிரனையர், மாந்தர் நிலையின் இழிந்தக் கடை' என்ற திருக்குறளுக்கு விளக்கமாய் அமைந்துள்ள குமரனாசானின் 'மலர்' எனும் கவிதையை மொழிபெயர்த்துள்ளார்.

''மலரே! கவிஞன் உன்னைப் பாடவில்லையானால் அவனுக்கு உயர்வு ஏது?

உலகில் உன்னைப் பாடாத
உன் அழகில் மயங்காத
கவிஞனே இல்லை.

தும்பியாகிய காதலன் உன்னைச் சுற்றிச் சுற்றி வருகிறான்; ஆயிரம் ஆயிரம் முத்தங்களைத் தருகிறான்; நீயோ இன்பத்தை அள்ளித் தருகிறாய். உன் இதழென்னும் பஞ்சணையில் படுத்துத் தூங்கியவன் பின் எங்கோ பறந்துவிடுகிறான். நீயோ, பிரிவினால் மெலிந்து, வதங்கிக் கீழே விழுகின்றாய்!

நீ கீழே விழுந்ததும் உன்னைப்
போற்றிப் புகழ்ந்து பாடிய
அதே மனிதர்கள்,
உன்னைக் காலால் மிதித்து
நசுக்கி, உருத் தெரியாமல்
சிதைத்து விடுகின்றார்கள்
உன் நிலையின் இழிந்தக் கடை...''

தங்களின் நிலைமை தாழ்ந்தாரை இப்படிச் செய்யத் தயங்க மாட்டார்கள்' எனக் குமரனாசான் கூறியிருப்பதை நயம்பட மொழிபெயர்த்திருக்கிறார்.

உலகம் ஒன்றாக வேண்டுமென்ற விட்மனின் எண்ணத் தினையும்; மக்களைக் கொன்று குவிக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் கொடுமை குறித்து நிகிலேஸ்வரரின் பதைப்பையும்; நாய்க்குட்டி, தீப்பெட்டி, சோப்புக் கட்டி,

எதையும் கருதேல் இழிவாக
கவிதை மயமாம் எழிலாக....
ஆற்றலார் கவிதைக்கு எது பொருளில்லை?

கவிதையாளர் எதையுமே அரிய படைப்பாக்கலாம்; எனினும், ஆவேசங்கொண்டதாய்க் கவிதை இருக்கவேண்டும்; வறியவனைப் பாடாத பாட்டு பாட்டாகாது; புதிய உலகு காண முன்னேற வேண்டும்; பூமித்தாயின் பிரசவ வேதனையால் புரட்சி உலகம் பிறந்தே தீரும் என்ற மகாகவி 'ஸ்ரீஸ்ரீ'யின் கருத்துகளையும்; அமெரிக்க டாலர் நிழலை நம் நாட்டின்மீது படரவிடாமல் அகற்ற வேண்டுமென்ற 'தாராசந்தின்' எச்சரிக்கையையும்; கிழக்கு மலைச் சிகரங்களில் சிவப்பொளி சிந்துகின்ற கவிஞனாயும், மக்களின் இதய ஒலியை எடுத்துக் காட்டுபவனாயும் இருக்க வேண்டுமெனும் 'சேசேந்திர சர்மா'வின் எழுச்சியையும்; தனியுடைமைப்பேயினைத் தகர்த்துப் பொதுவுடைமைப்பூ மலரச் செய்யவேண்டுமெனும் 'ராஜ்பவானி தேவி'யின் இதய ஒலியையும் தமிழில் நாம் இந்நூலுள் காண முடிகிறது.

வளர்க தொண்டு

இந்நூல் சிந்தனை வளத்தைச் சேர்க்கிறது; முற்போக்கு எண்ணங்களை உணரவைக்கிறது; உழைப்பைச் சுரண்டுவோரின் ஆதிக்கக் கோட்டைகள் தவிடுபொடியாக வேண்டுமென எக்காள மிடுகிறது; சாதிக் கொடுமைகளைச் சாடுகிறது; பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் பரவ வேண்டுமெனப் போதிக்கிறது; மக்களிடம் இல்லாமை இல்லாமையாகவேண்டுமென இயம்பு கின்றது; மனிதனை மனிதனாய் மதிக்கும் நிலை மலர வேண்டு மென முழங்குகிறது; மொத்தத்தில் இன்றைய காலக்குரல் முழுவதையும் உள்ளடக்கியதாய்த் திகழ்கிறது.

நண்பர் கோதண்டத்தின் கவிதைகள் மரபாகிய புலியும், புதுமையாகிய சிங்கமும் கலந்து பிறந்த 'டெகான்' கவிதைகளாய் விளங்குகின்றன. பண்பில் மரபின் சாயலையும், எண்ண ஓட்டத்தில் புதுமையின் போக்கையும் கொண்டுள்ள இந்த 'டெகானை'க் கண்டு தீமைகள் அஞ்சி நடுநடுங்கி அழியும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க இந்த டெகான்; ஓங்குக அதன் முழக்கம்!

நூல் ஆக்கம்	கவிஞர் கொ.மா. கோதண்டம்
வகைமை	புதுக்கவிதை
வெளியீடு	கொ. மா. கோதண்டம் வெளியீடு, இராஜபாளையம். (1978)

34

குலோத்துங்கனின் காவிய உலகம்

டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் குலோத்துங்கன் என்னும் பெயரில் எழுதியுள்ள 'குலோத்துங்கன் கவிதைகள்', 'வளர்க தமிழ்', 'வாயில் திறக்கட்டும்', 'விண் சமைப்போர் வருக' என்னும் நான்கு கவிதை நூல்களை நல்லாய்வாளர்கள் நால்வர் ஆய்ந்தெழுதியுள்ள கருத்துகளின் தொகுப்பாய் இந்நூல் வெளிவருகிறது. எனவே, இதனைக் கவிஞர் குலோத்துங்கன் கவிப்பெருமை கூறும், 'நான்மணி மாலை' எனலாம். திறனாய்வுத் துறையில் சிறந்து விளங்குகின்ற திரு. நீல. பத்மனாபன், திரு. முருகையன், திருமதி பிரேமா நந்தகுமார், திரு. தணிகைச் செல்வன் ஆகிய நால்வரும் குலோத்துங்கனின் கவிதைகளை நுணுகி ஆய்ந்து, 'காமம் செப்பாது கண்டது மொழிந்துள்ள'தாய் இந்நூல் சிறப்புற அமைந்துள்ளது.

குலோத்துங்கன் அவர்கள் அணி நலம் காட்டவோ, யாப்பு வல்லமையை நிலைநாட்டவோ கவிதை படைக்க விருபியவர் அல்லர். தன் எண்ண வெளிப்பாட்டிற்கு அவர் கவிதையை ஓர் ஊடகமாய்க் கொள்ளுகிறார்; நெஞ்சில் பட்டதை, நேர்மையெனத் துணிந்ததைப் பாடுகிறார். இதை அவரே

நாடெனைப் போற்றும் என்றும்,
நல்லிசைப் புலவர் செய்யும்
ஏடெனைப் புகழும் என்றும்,
இலக்கண இலக்கி யத்தின்
பீடெனக் குள்ளது) என்றும்,
பிழைசெயேன்; பெருகும் நெஞ்சம்
பாடெனப் பணித்த போது
பணிந்தவன் பாடு கின்றேன்[1]

எனச் சொல்கிறார்.

இனிய எளிய தமிழில், உள்ளத்தை ஈர்க்கும் ஒரு தனித்த பாங்கில் கவிபுனையும் ஆற்றல் இவருக்குக் கைவந்த ஒன்றாய்

---

1. வளர்க தமிழ், பக். 6

உள்ளது. சங்கப் புலவர்களின் எளிமையும், செறிவும், ஆற்றலும் கொண்ட தன்மையனவாய் இவருடைய பாடல்கள் உள்ளன. "இவரது கவிதைகளிலோ, கட்டுரைகளிலோ அனாவசியமான சொற்கள் இருப்பதில்லை. அடுக்குமொழி, சொற்சிலம்பம் போன்ற 'வளவள' உத்திகள் கிடையா. இவர் அறிவியலில் தேர்ந்த பயிற்சி பெற்றிருப்பதால் இச்சாதனை முடிகிறது போலும்" [1] என்கிறார் பிரேமா நந்தகுமார்.

தான் சொல்ல விழையும் கருத்துகளுக்கு எந்த அளவு சொற்கள் வேண்டுமோ அவற்றை மட்டும் எந்த அளவில் அழுத்தமும் உணர்ச்சியும் இணைத்துத் தரவேண்டுமோ அந்தவகையில் தந்து கவிதைகளை அமைத்துச் செல்கிறார். அவருடைய பாட்டுணர்ச்சியில் பாரதியார், பாரதிதாசன் சாயலைச் சில இடங்களில் நாம் காணமுடிகிறது. ஆனால் சொல்லல் முறையில் -கவிதை நடையில் இவர் வேறு எவரையும் பின்பற்றாது தமக்கென ஒரு தனி முறையை அமைத்துக் கொண்டுள்ளார். ஒரு தொடருக்கு இன்றியமையாது வேண்டப்பட்டும் எழுவாய், பயனிலை மட்டும் கொண்டு அமைக்கப்படும் உரைநடைத் தொடர்களைப் போன்று, சொல்லப்புகும் பொருள் விளக்கத்திற்கு இன்றியமையாது வேண்டப்படும் சொற்களை மட்டும் கவிதை நடையில் இணைத்துச் செல்லுகின்ற தன்மையை இவர் கவிதைகளில் காணமுடிகிறது. நீர்வளத் துறையில் இவரது கண்டுபிடிப்பு 'குழந்தைசாமி மாடல்' என இடம் பெற்றிருப்பது போல, கவிதைப் படைப்புத் துறையில் இவருடைய புனைமுறை 'குழந்தைசாமிப் பாங்கு' எனும் தனித்த முத்திரையைப் பெறுகின்றது எனலாம்.

கவிதைகள் - புனைதிறன், பொருளமைதி என்ற இரண்டாற் சிறப்புப் பெறுவன பொருளமைதி கருதாது புனைதிறனையே குறியாய்க் கொண்டு பாடுவோரும் உண்டு. குலோத்துங்கன் பாடல்களோ இரண்டையும் சமன்செய்யும் கோல்நிலையில் உள்ளன. "இவருடைய கவிதைகளைப் படிக்கும்போது கருத்துக் குழப்பம் இல்லை. அதேவேளையில் கவிதை நயமும் குறைய வில்லை" [2] என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார் திரு. நீல. பத்மனாபன்.

தான் கண்ட ஒன்றிற்கு - அறிந்த ஒன்றிற்கு உணர்த்த விரும்பும் ஒன்றிற்குக் கவிஞர் குலோத்துங்கன் வடிவு தருகிறார்.

1. இந்நூல், பக். 85
2. இந்நூல், பக். 22

இம் முயற்சியில் நேர்மையும் உண்மையும் பிணைந்து நிற்பதால் கவிதையழகு தானே வந்து கூடிக் கொள்கிறது சிறப்புப் பெறுகிறது.

உதயம் பெறும்சில உணர்வின் திண்மை
உருக்கின் வலியதடா....
சொல்லின் வலிமையின் சூட்சுமம் நெஞ்சத்
தூய்மையில் உள்ளதடா...[1]

என அவரே நெஞ்சத் தூய்மையும் உணர்வின் திண்மையும் சொல்லிற்கு வலிமை சேர்ப்பன என்பதைச் சுட்டுகிறார்.

குலோத்துங்கன் கவிதைகளில் பாடுபொருளாய்ப் பெரும்பாலும் அமைவன தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ்ச் சமுதாயம், இவை செழித்தோங்குவதற்கான அறிவியல் அணுகு முறை என்பனவாம். இவை தவிர பெண்மை, குழந்தை, தாய் பற்றிய பாடல்களும் உள்ளன. மேலும் தமிழ்ச் சமுதாய மலர்ச்சிக்கு வழிகாட்டிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மக்கள்கவி பாரதி, பாவேந்தர் பாரதிதாசன், இந்திய நாட்டின் பெருமைக்குரிய நேரு குறித்த சில பாடல்களும் உள்ளன. இலங்கையில் நடக்கும் இனப் படுகொலையைக் கண்டித்தெழுந்த கவிதைகளும் இருக்கின்றன. "சுருக்கமாய்ச் சொல்வதானால் தமிழ், மனிதம், காதல் எனும் மூன்று சொற்களிலும் குலோத்துங்கனின் கவிதைக்கலை அக்கறைப் பரப்பினை அடக்கிவிடலாம்" [2] எனும் திரு.முருகையனின் கூற்று முற்றிலும் பொருத்தமானதே!

கிரேக்கத் தத்துவஞானி பிளேட்டோ, தன் சமுதாய உயர்விற்கு அன்றைய நிலையில் அறிவியல் எண்ணங்களை எடுத்துரைத்தார். செருமானியக் கவிஞர் கெதே இலக்கியத்தையும் அறிவியலையும் கவிதை மூலம் எடுத்தியம்பித் தன் நாட்டிற்குப் பெருமை சேர்த்தார். இன்று தமிழினத்திற்கு வேண்டிய அறிவியற் கருத்துகளைக் கூறி வருகின்ற பொறியியலாளர் குழந்தைசாமி அவர்கள் ஆளுமைமிக்க கவிஞர் குலோத்துங்கனாயும் பீடுநடை போடுகிறார். "அவருடைய கவிதைகளைப் படிக்கும்போது நமது நாளங்களில் குருதிக்குப் பதிலாய்த் தேன் ஓடுகிறதோ என்ற பிரமிப்பு ஏற்படுகிறது. அத்துணை இனிய கருத்தாட்சியும், சொல்லாட்சியும் கலந்து அவருடைய கவிதைகள் நம்மை மயங்க வைக்கின்றன" [3] என்கிறார் திரு. தணிகைச் செல்வன்.

---

1. விண்சமைப்போர் வருக, பக். 23
2. இந்நூல், பக். 61
3. இந்நூல், பக். 111

இன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் உண்மை நிலையை அறிந்த கவிஞர் இவர். இவருடைய கவிதைகள் தூங்கும் தமிழினத்தைத் தட்டி எழுப்பும் வீறு கொண்டவை. பொய்மைத் திரையைக் கிழித்துத் தமிழினத்தின் உண்மை நிலையை எடுத்துரைத்து அது உய்யும் வழிவகையை எடுத்துரைப்பன. பழம் பெருமை பேசுவதால் தமிழ் மொழியோ, இனமோ, சமுதாயமோ ஏற்றம் பெற்றுவிடாது.

ஆயிரம் ஆயிரம்
விந்தைக் கலைகள் மேலை நாட்டவர்
சிந்தைத் தெளிவிடை செழிக்கும் நாளில்
பழங்கதை பேசுவர் பாவியர்...[1]

எனக் கொதிக்கிறார். காலம் யாருக்காகவும் காத்திருக்காது. வரும்நாளை நினைத்து வாழாது வீணே பழமை மட்டுமே பேசிக் காலத்தைக் கழிப்பது கொடுமையிலும் கொடுமையன்றோ?

முன்செல்ல வழிகாணும் முனைப்பில் லாது
மூவேந்தர் பழம்பெருமை முழங்கு வோரை
என்சொல்ல; அவர்திருந்த என்ன செய்ய?[2]

எலும் வினாவுக்கு விடைகண்டாக வேண்டிய பொறுப்பை நமக்காக்குகிறார், கவிஞர். உளுத்துப்போன உதவாக்கரை எண்ணங்களை உதறி எறிந்துவிட்டு உலகத்தில் முன்னேற்ற விரைவு நடைக்கு ஈடுகொடுத்து அதனுடன் சரிநிகர் சமானமாய்த் தமிழினம் நடைபோட வேண்டும் என்ற எண்ணத்தைத் துண்டுவனவாய்க் குலோத்துங்கன் கவிதைகள் அமைகின்றன.

கோவணம் ஒன்றே
குடும்பச் சொத்தாயினும்
யானை இருந்ததென்று
கொட்டாவி விட்டு[3]

பழம் புகழ்பாடிக் காலத்தைக் கழித்துவிட்டால் நாளைய உலகம் எது என்பது தெரியாமல் நாம் பின்தங்கிவிடுவோம். நம் வருங்காலச் சந்ததியினர் ஏனைய நாடுகளின் விரைவு நடைக்கு ஈடுகொடுக்க முடியாது இளைத்தவராய் அறியாமையில் மூழ்கிவிடுவர். எனவே, புதிய உலகத்தோடு பொருந்தி வாழப் பண்டைப் பாரம்பரியங்களைக் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றாது அறிவியல் உலகத்தைச் சமைக்க வேண்டுமென்கிறார், கவிஞர் குலோத்துங்கனார். 'குளமுறையும் தவளையென நமக்குள் நாமே

---

1. குலோத்துங்கன் கவிதைகள், பக். 75
2. வாயில் திறக்கட்டும், பக். 29
3. சிற்பி, சர்ப்பயாகம், பக். 86

குலப்பெருமை பேசியிருப்பதை விடுத்து அணுயுகத்தைச் செந்தமிழிற் காண அவாவுகிறார்.

குலோத்துங்கனாரது மொழி, கூரிய வாளை ஒத்தது. அலங்காரச் சொல்போட்டு அழகூட்டும் முறைமாற்றித் தன் கூர்த்த மதியினால், கையாளும் சொல்லுக்குக் கரைகட்டித் தன் எண்ணத்தை அதனுள் பொதித்துப் பயன்படுத்துகிறார். (He shreds away the looseness of usage in words and gives them the cutting edge of a sharply defined meaning.)

சொல்லும் பொருள் எதுவாயினும் அப்பொருள் பற்றிக் கூர்ந்து நோக்கி அவை கசப்பான உண்மைகளாயிருப்பினும் அவற்றைத் தன் சொற்றிறத்தால் தமிழ்ச் சமுதாயத்துள் ஊடுருவச் செய்ய முயல்கிறார்.

ஒரு சமுதாயம் வளர அச் சமுதாயம் உள்ளடக்கியுள்ள இனம் வளர வேண்டும். இனம் வளர அந்த இனத்தின் மொழி வளர வேண்டும். மொழி வளர்ச்சி தமிழினத்தாரிடம் இன்றைய நிலையில் போதிய அளவு இல்லை என்பதை நன்குணரும் குலோத்துங்கனார் அதை இன்றைய அறிவியலுக்கு ஈடுகொடுக்கும் மொழியாக்க வேண்டுமெனத் துடிதுடித்துப் பாடுகிறார். உலகெங்கும் கோடி கோடியாய் மலர்ந்துள்ள கலைகளின் தெளிவையெல்லாம், தமிழில் கொண்டுவர வேண்டாவா எனக் கேட்கிறார்.

> காசினியில் இன்றுவரை அறிவின் மன்னர்
> கண்டுள்ள கலைகளெலாம் தமிழில் எண்ணிப்
> பேசி மகிழ்நிலை வேண்டும்.[1]

இதுவே உண்மையான தமிழ் வளர்ச்சியாகும் என்றும் சுட்டுகிறார். தமிழ் வளர்ச்சி என்று வெறுமனே பேசிப் பயனில்லை. "தமிழை உலகப் பொதுமொழியாய் உயரச் செய்துள்ளோமா? வையத்தின் துறையனைத்தும் தமிழுள் வந்து நுழைய வழி செய்துள்ளோமா? பல்கலைகளைத் தமிழில் பயிற்றுகிறோமா? செம்மொழி வரிசையில் தமிழைச் சேர்த்துள்ளோமோ? கதை சொல்லி என்ன பயன்? உலகம் ஏற்க நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை நாட வேண்டாவா?"[2] என்றெல்லாம் படபடத்துக் கேட்கிறார்.

இதுவரை செழித்து வளர்ந்து வந்த தமிழ்மொழி அறிவியல் யுகத்தில் அயரத் தொடங்கிவிட்டது. விழிப்புணர்வு வேண்டிய

1. குலோத்துங்கன் கவிதைகள், பக். 72
2. விண்சமைப்போர் வருக, பக். 27

இந்த நேரத்தில் அதை உணராது வீண்கதை பேசிக் காலத்தைக் கழிப்பது நியாயமா? அறிவியல் வளர்ச்சி ஏற்பட வேண்டுமெனில் அன்னை மொழியில் கல்வி புகட்டப்பட வேண்டுமென்பதைக் கவிஞர் வற்புறுத்துகிறார். அன்னைமொழி வளம்பெறவில்லை யெனில் அஃது அறிவியல் வளர்ச்சிக்குரிய துணையாய் அமையாது என்பதை,

நாளும் நம்மொழி பிந்துதடா? – புவி
நம்மைப் பிரிந்து முந்துதடா?
ஆளுமை தருவது கல்வியடா – நமக்(கு)
அன்னை மொழித்துணை இல்லையடா[1]

என்ற அடிகளில் வெளிப்படுத்துகிறார். பிந்தும் நாம் முந்திச் செல்பவரோடு சென்றிணைய வேண்டுமெனில் அன்னை மொழி ஆளுமை மொழியாக வேண்டும்.

அறிவியல் வளர்ச்சிக்கேற்ற ஆற்றலுள்ள நடை, தமிழுக்கு வரவேண்டும். வேண்டிய ஆற்றலை உளதாக்க மொழிக்கு மாற்றமும் வளர்ச்சியும் வேண்டும். அதை ஏற்றுக்கொண்டு தமிழுக்கு ஏற்றமளிக்கும் முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

வாழ்வும் மொழியும் வளரும் பொருளாம்;
ஆழ்திரை விரையும் ஆற்றின் நீரென
ஒட்டம், புதுமை, உயிர்த்துடிப் பிவையதன்
ஈட்டமாம்; தேக்கம் இறப்பின் வாயிலாம்.[2]

புதுமையும் ஓட்டமுமே மொழியின் உயிர்த்துடிப்பு. இருந்த இடத்திலேயே இருப்பது இறப்பிற்குச் சமம் என்பதை நன்கு உணரவைக்கிறார்.

உலகவர் கலைகளின் ஊற்றெலாம் நிறைந்த
களஞ்சியம்....[3]

எனத் தமிழ் திகழ வேண்டுமென்பது குலோத்துங்கனாரின் நெஞ்ச விழைவு.

அறிவியற் கலைகளில்
வல்லமை எய்தவும் வளர்தமிழ் வழியதைச்
சொல்லவும் விழைந்த தொண்டன்[4]

என அறிவியல் தமிழ் வளர்க்கும் தொண்டனாகவே தன்னை அறிமுகம் செய்து கொள்கிறார். உலகம் இதுவரை பெற்றுள்ள

1. விண்சமைப்போர் வருக, பக். 30
2. வளர்க தமிழ், பக். 23
3. குலோத்துங்கன் கவிதைகள், பக். 1
4. குலோத்துங்கன் கவிதைகள், அறிமுகம்

வெற்றியெல்லாம் அறிவியல் தந்த கொடை என்பது கவிஞர் துணிபு.

மனித குலம் சிந்தனையின் விளைநிலமாய் - வளநிலமாய்ச் செழிக்க வேண்டும். சிந்தனைக்கு என்றும் சிறையிடக் கூடாது. மனிதர் நாளும் வளர்பவர்; எல்லை என எதையும் ஏற்காதோர்; அறியாத யாவென்று தெரிந்து தெளிவதே தம் திறம் எனக் கொண்டவர்; ஊடுருவி - உண்மையைக் காண்பதைவிட உயர்ந்த இன்பம் இல்லை. சிந்திப்பது இன்பம் என ஓய்வின்றிச் சற்றும் ஒழிவின்றி உண்மைகளை ஆய வேண்டும். அதுவே வளர்வதற்கு வழி என எடுத்துரைக்கிறார்.

மாறுவதும் எங்களினம்; நிமிடந் தோறும்
வளர்வதுவும் எங்களினம்; படிஓவ் வொன்றாய்
ஏறுவதும் எங்களினம்....[1]

மானிடர் ஏற்றம் பற்றிக் கவிதைபாடுவதில் கவிஞர் குலோத்துங்கன் சலிப்படைவதேயில்லை என்கிறார் நீல. பத்மனாபன்.[2] மனம் பெற்றவனே மனிதன். மானுடம் வளர்ந்து கொண்டேயிருப்பது. வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போட்டுச் செல்வதே மானுடத்தின் பெருமை.

செல்வாய்! மேலும் செல்வாய்! எதிர்ந்தன
வெல்வாய்! ஓய்தல் வேண்டா! மனமே!
நின்னடி வளர்ந்தால் நீள்நிலம் வளரும்;
உன்னடி தளர்ந்தால் உலகம் தேங்கும்;[3]

என விடாமல் மானுடம் முன்னேறிச் செல்லவேண்டுமெனத் தூண்டுகிறார்.

இருப்பதை ஏற்று அமைதி கொண்டதாய் மானுடம் இருந்துவிடக் கூடாது! விண்வீடு (வானுலகம்) வாய்க்கும் என்பதை உண்மையெனக் கொள்வோரிருப்பின் அவர்கட்குக் கவிஞர் சொல்கிறார். அவ் விண்வீட்டையும் மாற்றி அங்கும் வளர்ச்சி காணும் அறிவு வேட்கையுடையதாய் மானுடம் விளங்கவேண்டும். இந்தக் கருத்தைக் கவிஞர் வலிமையாய்த் தன் கவிதையில் வாய்ப்பு நேரும்போதெல்லாம் சுட்டிச் செல்கிறார்.

இருப்பவை காக்க வேண்டும்;
என்னினும் தேவை எண்ணித்
திருப்பமும் ஏற்க வேண்டும்!
சென்றவை சிறந்த வேனும்

---

1. விண் சமைப்போர் வருக, பக். 9
2. இந்நூல், பக். 15
3. குலோத்துங்கன் கவிதைகள், பக்.

திரும்பியே பார்த்து நிற்றல்
சிறப்பல....[1]

என்கிறார்.

சென்றவை சிறந்தவையாய் இருக்கலாம். அதற்காக அவற்றையே திரும்பப் பார்த்து நிற்பது சிறப்பாகாது. கவிஞர் ச.து.சு. யோகி,

சிப்பி உடையச் சிரித்திடும் முத்தெனப்
பழமைப் பேயின் படல்களை உடைத்துப்
புதுமை உதயம்

பூத்திடும்போது, காலம் காலமாய் அருமையாய் வளர்ந்த வளர்ச்சியை மாய்த்திடல் நன்றா எனப் புலம்புவோரைப் பார்த்து, "பழமை என்பதற்காய் எதையும் காப்பதா? தாஜ்மஹால் பழையதேயாயினும் இன்றும் பாங்குடன் போற்றிக் காக்கப்படவேண்டியதே! அதற்காக உளுத்துப்போன ஓட்டைக் குடிசையைப் 'பழமை பேணுகிறேன்' என்று சொல்லி வைத்திருப்பதில் என்ன பயன்?" எனக் கேட்கிறார்.

சென்றதோர் காலச் சிறப்பெலாம் பொங்கும்
தாஜ்மஹால் இன்பத்து) அழகினைக் காப்போம்;
ஆயினும், அதற்காய் ஆயிரம் காலமாய்
ஓட்டையாய் உளுத்து ஒடிந்திடும் குடிசையும்
காப்போம் என்றிடல் பேதமை கண்டாய்[2]

என, எதைக் காக்கவேண்டும், எதை நீக்கவேண்டும் என்பதைத் தக்கதோர் எடுத்துக்காட்டு மூலம் விளக்குகிறார், யோகி.

'மனிதம்' என்ற சொல்லுக்கு ஆழமான ஒரு பொருளை அழகான முறையில் தந்திருக்கிறார் கவிஞர்.

சிந்தையும் தோளும் சேர்ந்தது மனிதம்.

"நான்கே சொற்கள் அடங்கிய இந்தக் கவிதைஅடி, உலகின் உன்னதமான இலக்கிய அடிகளின் தரத்துக்கு உயர்ந்து நிற்பதை நாம் அண்ணாந்து பார்க்கிறோம்"[3] என்கிறார் தணிகைச் செல்வன்.

மனித இனம் தன் பயணத்தில் எத்தனையோ இடர்களைச் சந்தித்திருக்கலாம்; சோர்ந்துமிருக்கலாம். தடைகள் மானிட வளர்ச்சியைத் தடுத்திருக்கலாம்; என்றாலும் அனைத்தையும் மீறி வளரும் ஆற்றல் கொண்டது மானுடம்.

---

1. வாயில் திறக்கட்டும், பக். 72
2. ச.து.சு. யோகி, தமிழ்க்குமரி, பக். 69
3. இந்நூல், பக். 117

நாழி அங்குலம் நகர்த்தும் ஒய்விறந்(து)
ஊழி யுள்ளநாள் ஊர்ந்தும், பேரிருள்
காடு பாலை கடந்தும், உண்மைகள்
தேடும் மாபெரும் செலவு கைவிடோம்;
ஆர்ந்தனம் இல்லை; அங்கும் இங்கும்
சோர்ந்தனம், ஆனால் தோற்றனம் இல்லை.[1]

மானுடம் என்றுமே தோற்றதில்லை என்பதுதான் அதனுடைய வலிமை.

தமிழினத்திற்கு - தமிழ்ச் சமுதாயத்திற்கு ஏற்றம் வேண்டின் அச் சமுதாயம் வேண்டாத மரபுகளை உதறவேண்டும் என்பதைக் குலோத்துங்கனார் தெளிவுபடுத்துகிறார். ஓர் இனத்தை வழிநடத்த உண்மையான வழிகாட்டியாய் விளங்கும் தலைவன் வேண்டும். போலிகளால் இனம் ஏற்றம் பெற முடியாது.

உள்ளமும் உதடும் வேறாய்
உலவிடும் கயமை முற்றும்
தள்ளவும் வேண்டும்; உண்மைத்
தலைமையும் நமக்கு வேண்டும்.[2]

தலைமையோடு இனமும் தன் வளர்ச்சியில் ஊக்கம் காட்ட வேண்டும்.

சாதிக் கொடுமையில் நாடு தேய்கிறது. "பண்டைய தமிழகத்தில் சாதிகள் இருந்ததில்லை; ஏற்றத் தாழ்வற்ற இனிய சமுதாயமாய் அது விளங்கியது; நாற்குலம் கண்டவர் நம்மவர் அல்லர்; அது வேற்றவர் பண்பு என மேடைகளில் முழங்குவதிற் பயனில்லை. மற்றவர் சாதியை இங்கு நுழைத்துவிட்டனர் என்று சொல்பவர்களில் சாதியை ஒழித்தவர் எத்துணைப்பேர்? சாதிகள் இன்று தமிழகத்தில் ஒழிந்துள்ளனவா? இல்லையே! ஆதியில் மதத்தை அண்டிநின்ற அப்பேய் இப்போது அரசியலில் நுழைந்து ஏற்றம் பெற்று, முரசம் முழங்க, முடியும் சூடிக் கொண்டதே!

கல்லாதவர்கள்தாம் ஏதோ பழக்கத்தால் சாதிவழி நிற்கின்றனர் என்றால் கற்றவரும் இப்பழிநிலைக்கு ஆளாவதேன்?" எனப் பொருமிக் கேட்கிறார் கவிஞர் குலோத்துங்கனார்.[3]

சாதியெனும் நாகத்தைத் தூக்கித் தூக்கிச்
சாகடித்த பெருமை அவர் தடிக்கே உண்டு

எனக் கவிஞர் கண்ணதாசன், பெரியாரவர்களின் சாதி ஒழிப்புக் கொள்கை வன்மையைப் பாடிக் காட்டுவார்.

1. வாயில் திறக்கட்டும், பக். 52
2. விண்சமைப்போர் வருக, பக். 36
3. வாயில் திறக்கட்டும், பக். 108, 109

கல்லாத பெருமக்கள் பழக்கம் என்ற
காரணத்தால் சாதி வழிநிற்பவர்; கல்வி
வல்லாரும், அரசினரும், மேடை யேறி
வகுப்பற்ற சமுதாய மாண்பு பேசும்
சொல்லாரும் திரைமறைவில் சாதி கூட்டித்
தொடர்பேற்றுச் செயலாற்றும் கொடுமைசூழ்ந்த
பொல்லாத நிலைகண்டு சீர்தி ருத்தப்
போர்ப்பெரியார் நெஞ்சொடிந்து சிலையா னாரோ?[1]

என்று பாடுவதன் வாயிலாய்ப் பெரியாரின் ஓயாத தொண்டுக்குப் பிறகும் சாதிச் சனியன் இன்னும் ஒழியாமல் இருக்கிறதே எனும் அறச்சீற்றத்தைக் கவிஞர் குலோத்துங்கன் வெளிப்படுத்துகிறார். இனியும் இக்கொடுமையை வளரவிட்டால் சாதித் தீயில் தமிழினம் வெந்தே போகும்!

புற்று நோயிதைப் போர்த்து வைப்பதோ?
குற்றம் வேறிதிற் கொடியது உண்டுகொல்?[2]

எனும் இவ்வினாக்கள் கவிஞர், சாதிக் கொடுமை வளர்க்கும் சழக்கர்களுக்குக் கொடுக்கும் கசையடிகளாம்! கவிஞருடைய நெஞ்ச ஆவேசத்தை அவருடைய இத்தொடர்கள் நமக்கு அறிவிக்கின்றன. இத்தகைய ஆவேசத்தை ஊட்டுகின்ற கவிதைகளே உயிர்க் கவிதைகள்; மற்றவை வெறுஞ் சொல்லடுக்கேயாம்.

எரிமலைகள், இடிமின்னல், பூகம் பம்என்(று)
எழுதுவது புரட்சியல; எழுந்து பொங்கி
விரிகின்ற ஆவேசம் நெஞ்சி னின்று
வெடிக்கின்ற சொல்வேறு; வெறுஞ்சொல் வேறு.[3]

குலோத்துங்கனாருடைய கவிதைகள் அனைத்தும் அவருடைய நெஞ்ச ஆவேசத்தை, அடிமனச் சீற்றத்தைத் தாங்கிச் சிறப்பதால் அவை புரட்சிக் கவிதைகளாய் விளங்குகின்றன; புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர் இவர் என்பதை மெய்ப்பிக்கும் சான்றுகளாயும் திகழ்கின்றன.

சிறுபயன் நாடிச் சாதிச்
சிற்றினம் சேர்த்து நெஞ்சில்
வறுமையை வளர்ப்போர் காட்டும்
வழியெலாம்[4] தவிர்ப்போம்

எனும் தெளிவைக் குலோத்துங்கனார் கவிதைகள் நமக்கு வழங்குகின்றன.

1. குலோத்துங்கன் கவிதைகள், பக். 66
2. குலோத்துங்கன் கவிதைகள், பக். 91
3. விண்சமைப்போர் வருக, பக். 34
4. குலோத்துங்கன் கவிதைகள், பக். 96

சாதித் தீயினால் தமிழினம் வெந்து கருகும் கொடுமை ஒருபுறம்; இல்லாரை உள்ளார் ஏமாற்றி வருத்தும் புன்மை இன்னொரு புறம். "வீடு கட்டித் தருகிறோம்; நாங்கள் வாழக் குடிசையில்லை. வளமான விளைச்சலை உண்டாக்குகிறோம்; எங்கள் வயிற்றுக்குக் கூழில்லை. பருத்தியைப் பயிர் செய்து தருகிறோம்; உடுத்த எங்கட்குக் கந்தையும் இல்லை. பள்ளிக் கூடங்கள் கட்டும் வேலை செய்கிறோம்; எங்கள் மக்கள் அதிற் சென்று பயில முடியவில்லை" என ஏழை மக்களின் இதயக் குரலாய்க் கவிஞர் மனங்குமுறி எழுதியுள்ள 'வாழ்ந்தறியோம்' என்னும் கவிதை[1] மனித இனத்தில் அக்கறையுள்ள ஈரமுள்ள எந்த நெஞ்சையும் பனிக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

.....எல்லாம் செய்தோம்
ஏதுமற்றோம், வாழ்ந்தறியோம், ஏழை நாங்கள்;

0

மண்துயின்று மெய்யுழைப்பால் வையத் துக்கே
வாழ்வளித்தோம், வாழ்ந்தறியோம், ஏழை நாங்கள்!

0

தேய்ந்தவுடல், இருள்வரட்சி, இறக்க வில்லை
இருக்கின்றோம், வாழவில்லை, ஏழை நாங்கள்!

என்ற ஏக்கக் குரல் இன்னும் நம் நாட்டின் பல்லாயிரக் கணக்கான மக்களின் புலம்பலாய் ஒலித்துக் கொண்டுதானே இருக்கிறது.

"நாயும் அணுகாத, பன்றியும் நண்ணிடாத குடிசையில் மானுடன் வாழ்வதா? இஃது என்ன சாபமா? நடைமுறைப் பிழையன்றோ? எச்சில் இலை பொறுக்கிப் பசியாறும் பச்சைக் குழந்தைகளைப் பார்க்கின்ற இழிவு உமக்குச் சம்மதமா?" என்ற வினாக்களைச் சமூகத்திற்கு விடுக்கிறார். இக் கொடுமைகளைக் களையாது இனியும் வீணே காலம் கழித்தல் முறையாகாது. புற்றுநோய் வேர்விடுமுன் அதைக் களைவதற்கு விரைய வேண்டும். தானாய் எதுவும் மாறாது. கொள்கைப் பிடிப்போடு நெஞ்சுரம் கொண்டு முயல்வோம்; இத் தீமைகளை மாய்த்து முடிப்போம்" எனச் சமூகச் சமன்மை காண அனைவரையும் கவிஞர் அழைக்கிறார்.[2]

ஏற்றத் தாழ்வுகளை அகற்ற என்ன வழி?
பச்சை போர்த்த பழனம் தருவதைப்
பிச்சையென் றொருசிலர் பெறுவதும் தருவதும்

---

1. வளர்க தமிழ், பக். 58
2. வாயில் திறக்கட்டும், பக். 114-120

தன்னலம் படைத்த சதியடா! சமத்துவ
நன்னலம் நமக்கு நடைமுறை யாக்குவம்[1]

என ஏற்றத் தாழ்வகலச் சமத்துவமே சரியான வழியெனத் தீர்வு காண்கிறார், கவிஞர்.

சமத்துவம் காணுவதற்கு முயல்கையில் சமுதாயம் எதிர் நோக்கும் இடர்ப்பாடுகள், பின்தள்ளும் பான்மைகள் பலவற் றையும் 'ஊனர் ஆண்டு' என்ற பாடலில் கவிஞர் குலோத்துங்கனார் படம்பிடித்துக் காட்டுகிறார்.

சாதியின் பிரிவுள சமுதா யத்தில்
ஆதியில் தாழ்ந்தவ ரானமை 'ஊனம்';

அறமும், நீதியும் அரற்றினும், மேனி
நிறம்இன் றொருசில நிலத்திடை 'ஊனம்';
வாடும் நிலையொடு வளர்ச்சி குன்றிய
நாடும் வளர்ந்த நாட்டிடை 'ஊனம்'...

'சிலவர்' என்பதும் 'சிறுதொகை' யாவதும்
நிலமிசைக் கொடுமையின் நிலையெனும் 'ஊனம்';

என மண்ணின் பரப்பில், மானிடர் வாழ்வில்தான் எத்துணை ஊனங்கள்? உடல் ஊனத்தைவிட அவலமானது உள்ள ஊனமே! இந்த ஊனங்கள் ஒழிந்த தாரணியைக் காணச் செயலாற்றத் தூண்டும் ஆண்டாய்ப் ஊனர் ஆண்டு அமைய வேண்டுமென விழைந்து அதற்கு வாழ்த்துக் கூறுகிறார்,[2] கவிஞர்.

தமிழ்ச்சமுதாயம் இந்த ஊனங்களினின்றும் தன்னைத் தனியாக்கிச் செழுமையுடன் வாழ்வதற்கு மாறாய் மேலும் புதுப்புது வேறுபாடுகளை உருவாக்கிக் கொள்வதைக் கண்டு கவிஞர்,

வளர்தமிழ் நிலமொரு வழுக்கு மரமோ?
—வழுக்கலை நீர்பெய்து வளர்க்கின்றனர்
—வளர்வாரை ஏறாது தடுக்கின்றனர்
வளர்தமிழ் நிலமொரு வழுக்கு மரமோ?[3]

என வெதும்புகிறார்.

சமுதாயத்தில் ஆணின் வளர்ச்சி மட்டுமன்று; பெண்களும் முன்னேற வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உரிமைகள் தரப்பட வேண்டும்.

ஒருபாதி மக்கள்தொகை மகளிர்; அன்னார்
ஒத்தநிலை பெற்றதில்லை; மானி டத்தின்

1. வாயில் திறக்கட்டும், பக். 68-70
2. வளர்க தமிழ், பக். 68, 69
3. விண் சமைப்போர் வருக, பக். 42

இருபாதி மேல்கீழ்என் றியங்கும் மண்ணில்
ஏற்றத்தாழ் வற்றநிலை எங்கு காண்பீர்?[1]

எனும் பாடல் பெண் சமத்துவத்தை வலியுறுத்துகிறது. ஆண் பெண் சமத்துவமே ஏற்றத் தாழ்வில்லாச் சமுதாயத்திற்கு அடிப்படையாகும்.

பெண் சமத்துவம் என்பது நடைமுறையில் பிறழ உணரப்பட்டிருப்பதைக் கவிஞர் சுட்டிக் காட்டுகிறார். பெண் சமத்துவத்திற்குச் சரியானதொரு விளக்கமும் தருகிறார். சமத்துவம் என்பது அறிவு வளர்ச்சியில், ஆட்சிப் பொறுப்பில், சுதந்திர நினைவில் இருக்க வேண்டுமேயன்றி ஆண்களைப் போல் புகைபிடிப்பதிலும் சிகை வெட்டிக் கொள்ளுவதிலும் அன்று.

ஆடவர்க்குத் தாம்சமமாய் ஆகுநிலை, ஆடவர்தம்
கேடனைத்தும் கற்றால்தான் கிட்டுமெனும் தத்துவத்தை
ஆரிவர்க்குக் கூறினரோ, அறியோம்நாம்[2]

எனக் கூறுவதன்வழி சமத்துவம் என்ற பெயரால் பண்பாட்டுச் சிதைவுக்கு இடமளிக்கக் கூடாது என எச்சரிக்கிறார். "குலோத்துங்கன் மகளிர் விடுதலைக்கும் உரிமை வாழ்வுக்கும் எதிரி அல்லர். மகளிர் விடுதலை என்பது அவர் கடைப்பிடிக்கும் மானுடக் கோட்பாட்டில் ஓர் இன்றியமையாத அங்கமாகும். ஆனால் ஆண்களோடு போட்டியிடுவதனையே உள்ளுந்தலாய்க் கொண்டுவிட்ட தன்மையைத்தான் கவிஞர் இங்குக் கண்டிக்கிறார்" எனத் திரு. முருகையன் கூறியிருப்பது சரியான மதிப்பீடாகும்.

தமிழினம், தமிழ்ச் சமுதாயம் இந்தியாவில் மட்டுமன்றி அண்டை நாடுகளிலும் செழிப்பாய் வாழவேண்டும். அவ் வாழ்விற்கு இடையூறு வந்தபோது, குறிப்பாய் ஈழத் தமிழர் வாழ்விற்கு வந்த இடர்ப்பாடுகளை எண்ணி மனம் நொந்து பாடுகிற பகுதி ஆசிரியரின் மனிதநேயத்தை நன்கு உணர்த்துகிறது.[3]

துன்பங்கள் தீர்ந்த ஒரு சமுதாயத்தைப் படைக்கக் கங்கணம் கட்டும் ஆசிரியர்,

வாழ்வினை வளர்ப்போம்; இங்கு
மனிதரை, இழிவு செய்யும்
தாழ்வுகள் ஒழிப்போம்; உண்மைச்
சமத்துவம் தழைப்ப தற்குச்

1. விண் சமைப்போர் வருக, பக். 18
2. வாயில் திறக்கட்டும், பக். 129
3. விண் சமைப்போர் வருக, பக். 45-52

சூழ்நிலை படைப்போம்; துன்பும்
துயரமும் கடந்த தான
ஆழ்கடல் வையந் தன்னை
அமைத்திட நெறிகள் செய்வோம்[1]

எனப் பாடுகிறார். குறிக்கோளுள்ள உலகைப் படைக்கும் திண்மையை மனத்திற் கொண்டுதான் குலோத்துங்கன் தன் பாடல்களைப் படைத்திருக்கின்றார்.

என்னவரம் வேண்டும் என்றென்னை முன்னழைத்துச்
சொன்னமொழி கேட்டேன்; தொழுதிட்டேன்; எந்நாளும்
சின்ன வரங்கேட்கத் தெரியாத என்நெஞ்சின்
பன்னெடு நாளாசை பகர்கின்றேன், பார்வணங்கும்
இறைவனே நின்படைப்பில் இருக்கின்ற எண்ணிறந்த
குறையெல்லாம் நீக்கிக் குவலயத்தை யான்விழையும்
வடிவி லமைக்கின்ற வாய்ப்பெனக்குத் தாராய்.[2]

இறைவன் குறையுடன் படைத்த உலகத்தை நிறைவுடையதாய் மாற்றத் துணிகிறார், கவிஞர். அம்முயற்சியில் தடைக்கற்கள் உண்டென்றாலும் தகர்க்கும் வலிவு உண்டு என்னும் தன்னம்பிக்கை யோடு தம் பாடல்களைப் படைத்துள்ளார்.

ஆய்வு செய்துள்ள நால்வருமே இக்கருத்துகளை நன்கு விளக்கியுள்ளனர். தமிழர்கள் தலைநிமிர்ந்து நடக்கத் தக்க வழிகாட்டும் ஓர் அறிவியற் கவிஞரை நால்வரும் நன்கு அடையாளம் காட்டியுள்ளனர்.

குலோத்துங்கனாரின் கவிதை நூல்களை அழகுற வெளியிட்டுள்ள பாரதி பதிப்பகத்தினர் இத் திறனாய்வு நூலையும் செப்பமுற வெளிக்கொணர்ந்துள்ளனர். கவிஞரின் எண்ணப் பொலிவுக்குப் பதிப்பகத்தார் அச்சுப் பொலிவு தந்துள்ளனர். கவிஞர் குலோத்துங்கனாரிடம் இவை போன்ற இன்னும் எண்ணற்ற கவிதைகளை நாடு எதிர்பார்க்கிறது.

நூல் ஆக்கம்	நீல. பத்மனாபன், முருகையன், பிரேமா நந்தகுமார், தணிகைச்செல்வன்
வகைமை	கவிதைத் திறனாய்வு
வெளியீடு	பாரதி பதிப்பகம், சென்னை–17. (1990)

1. வாயில் திறக்கட்டும், பக். 59
2. வாயில் திறக்கட்டும், பக். 32